ஏப்ரல் ௨ இதழ்கள்
மே ௨ இதழ்கள் } 1981

# தமிழரசு

JL
V211m N81
N814
85324

# தமிழரசு

1-4-1981 50 கா

திருவள்ளுவர் ஆண்டு 20

ரௌத்திரி பங்குனி



# 8வது அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி '81

நிறைவு விழா 15-3-1981



அகில இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி (1981) இல் இடம்பெற்ற அரங்குகளில் மிகச் சிறந்ததாக தமிழ்நாடு அரசு கல்வித்துறை அரங்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. கல்வித்துறைச் செயலாளர் திரு சி. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் பரிசினைப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு அரசுத்துறை அரங்குகளில், தொழில் துறை முதல் பரிசு பெற்றது. தொழில் வணிகத்துறை இயக்குநர் திரு சி. ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

மூன்றாவது பரிசு, காவல்துறை பெற்றது. சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு ஸ்ரீ பால் அவர்கள் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.



# தமிழ்நாடு அரசின் 1981-82ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை

**மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1981-82ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்து 1981ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2012 ரௌத்திரி பங்குனித் திங்கள் 8ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> *" பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்*
> *அணி என்ப நாட்டிற்(கு) இவ்வைந்து "*

என்பது பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப் பெருந்தகையாரின் பொன்மொழி. நோயில்லா திருத்தல், செல்வச் செழிப்பு, விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு என்று கூறுவார்கள் என்பதுதான், வள்ளுவப் பெருமான் உணர்த்தும் கருத்தாகும். அப்படிப்பட்ட அழகு, தமிழ் நாட்டிற்கு என்றும் தொடர்ந்து நின்று நிலவ வேண்டும் என்ற நோக்கத் தோடு, ஆட்சி புரிந்து வரும் தமிழக அரசின் சார்பாக, 1980–81ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1981–82ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

2. தமிழக அரசின் நிதிநிலையைத் தெளிவு படுத்துவதற்கு முன், நாட்டின் நிலையைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அகில இந்திய அளவில் ஏற்பட்டுள்ள இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி உயர்வும், பண வீக்கமும், பயன்படுத்தப்பட வேண்டிய பொருள்களின் பற்றாக் குறையும் தமிழ் நாட்டைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளன. அதோடு கூட, போதுமான மழையின்மையின் காரணமாகத் தமிழகத்தின் பல குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள கொடிய வறட்சிநிலை, மக்களுக்குப் பல்வேறு வகைகளில் பெரும் அவதிகளைத் தந்திருக்கிறது. மாநில அரசு தனக்குக் கிடைத்துள்ள—கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட—உரிமைகளையும், அதிகாரங்களையும், வாய்ப்புக் களையும், வசதிகளையும், நிதி ஆதாரங்களையும் மட்டுமே வைத்துக் கொண்டு, ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை இயன்ற வரையில் சமாளிக்க வேண்டி யிருக்கிறது. பாதிப்பு நிலைமைகளைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படும் போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்க நேரிடும் போதும் மாநில அரசிற்குக் கணிசமான அளவிற்குக் கூடுதலான நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. இன்றைய இந்தியக் கூட்டாட்சி அமைப்பு முறையில், மாநிலங்களின் அதிகாரங்களும் நிதி ஆதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மாநில அரசுகள் மத்திய அரசின் உதவியைப் பெருமளவிற்கு, அவ்வப் போது எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தின் அரசுகள் அவையில் ஒருமுறை பேசும்போது,

> " கடந்த பல ஆண்டுகளாக இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் நடைமுறைப் போக்கானது, மாநிலங்களின் மனப்பான்மையில் ஒருவித மான விரக்தி நிலையை உருவாக்கி யிருக்கிறது. மாநிலங்கள் வெறும் சுங்கம் பெறும் மாநகராட்சி மன்றங்களைப்போல் மிக விரைவாக மாறிவருகின்றனவோ என்று கருதும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழரசு மலர். 11 இதழ். 19 1.4.1981
திருவள்ளுவர் ஆண்டு 2012 பங்குனி 19உ ரௌத்திரி

மாநிலங்கள் நாளுக்குநாள், மேலும் மேலும் விரக்தி அடைந்து கொண்டே போகின்றன. மத்திய அரசானது அரசமைப்புச் சட்டத்தை மறுபார்வையிடவும், மறு ஆய்வுசெய்யவும் வேண்டும் என்பதைத் தான், மாநிலங்கள் இப்பொழுது கோரிக்கை யாகக் கொண்டிருக்கின்றன ''.

என்று தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப் பிட்டார்கள். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மாநில அரசுக்கு நேரிடையாக ஏற்படுவதால், அதற்குத் தேவையான அதிகாரங் களையும் அளிக்க, மத்திய அரசு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை, இந்த வாய்ப்பில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சில நாட்களுக்குமுன் கோதுமையின் கொள்முதல் விலையை மத்திய அரசு குவின்டாலுக்கு 117 ரூபாயிலிருந்து 130 ரூபாயாக உயர்த்தியுள்ளது. நெல் கொள்முதல் விலையையும் தக்கவாறு உயர்த்த வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுவந்துள்ளோம். மத்திய அரசு இந்த அரசின் வேண்டுகோள்படி, நெல் கொள்முதல் விலையை உயர்த்தும் என்று நம்புகிறோம்.

### வறட்சி நிலைமை

3. கடுமையான வறட்சியை இம் மாநிலம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிற இக்கட்டான நிலையை இம் மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர முதற்கண் விரும்புகிறேன். இது குறித்து ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இம் மன்ற உறுப்பினர்கள் விரிவாக விவாதித்தனர். அதன்பின், இம் மாநிலத்தின் பல மாவட்டங்களிலும் வறட்சி நிலையை நேரில் கண்டு நிலைமையைத் தெளிவாக அறிய, முதலமைச்சர் அவர்களும் அமைச்சரவையின் ஏனைய அமைச்சர் களும் நானும் இம் மாநிலம் முழுவதிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டோம். இவ்வாறு சுற்றுப் பயணம் செய்ததன் விளைவாகவும் அதனைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவும், வறட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள நிர்வாக இயந்திரம் முழு மூச்சுடன் செயல்படும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. மக்களின் துயரைப் போக்குவதில் எல்லா முயற்சி களும் மேற்கொள்ளப்படும் ; நிதி நிலையை முட்டுக் கட்டையாகக் கருதாமல், துயர் தணிப்பு நடவடிக்கை களை மேற்கொள்வோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கிறேன். தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறை, நில நீர் இயக்ககம் ஆகிய மூன்று அமைப்புகளும் கிணறுகளைத் தோண்டுதல், ஆழப்படுத்தல் ஆகிய பணிகளை மாபெரும் அளவில் மேற்கொண்டு வருகின்றன. சிலவருடங்களுக்கு முன்பு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலைமை நிலவியதை இந்தத் தருணத்தில் நான் நினைவுகூர விரும்புகிறேன். ஏழை கிராம மக்கள் தங்களது கால்நடைகளையும், உடைமை களையும் விற்றுவிட்டு, மற்ற மாவட்டங்களுக்குக் குடிநீர், உணவு மற்றும் வேலை தேடிக் குடியேற வேண்டிய நிலை அப்போது ஏற்பட்டது. ஆனால், இப்போது அரசு தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்த காரணத்தால் இந்தப் பெருங்கேடு தவிர்க்கப்பட்டுள்ளது. குடிநீர், உணவு மற்றும் வேலை வாய்ப்பு வசதிகள் போன்றவை மக்களுக்குக் கிடைப்பதற்காக நன்கு முறைப்படுத்தப் பட்ட வறட்சி நிவாரணப் பணி தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படுவதால் இந்த மாதிரியான நிலை வரும் மாதங்களிலும் உருவாகாது என்பதில் அரசுக்கு நம்பிக்கை உண்டு. வறட்சி நிலையின் கடுமையைப் பற்றியும் வறட்சி நிலைமைகளை நேரில் கண்டறிய அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பி வைப்பதன்




அவசியம் பற்றியும் மத்திய அரசுக்கு ஏற்கெனவே எழுதியுள்ளோம். மத்திய அரசு தன்னால் இயன்ற அளவு நிதி உதவியை இம் மாநில அரசுக்கு வழங்குமென்று நான் நம்புகிறேன். மக்களை வாட்டி வதைக்கும் வறட்சித் துயரினைக் களையும் பொதுப் பணியில் இவ்வரசின் கைகளை வலுப்படுத்தும் வகையில் இம் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க முன் வருவரென்று உறுதிகொள்கிறேன். வறட்சி நிலை கடுமையாக இருந்த போதிலும், அது நமது கட்டுக்குள்தான் இருந்து வருகிறது. குடி தண்ணீர், உணவு, வாழ்க்கைக்கு வேண்டிய ஏனைய தேவைகள் ஆகியவை மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படிப் பார்த்துக்கொள்வதில் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என உறுதி கூறுகிறேன்.

### உணவு நிலைமை

4. பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, உணவு தானிய உற்பத்தி இம் மாநிலத்தில் இறங்கு முகமாக இருக்கக்கூடும். எனினும், பருவ மழை தவறாது பெய்யுமானால், 65 இலட்சம் டன் அரிசி கிடைக்கும் வகையில் நெல் உற்பத்தியும், 22·80 இலட்சம் டன் சிறு தானியங்கள் உற்பத்தியும், 4·34 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தியும் ஆக, மொத்த உணவு தானிய உற்பத்தி இலட்சம் 92·14 டன்களாக அடுத்த ஆண்டு அமையும் வகையில் ஏற்றதொரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

5. பருவ மழை பொய்த்துப் போனதன் விளை வாக, நெல் விளைச்சல் இயல்பான அளவுக்கும் குறைந்துவிட்டது. இதனால், பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் ஏராளமான மக்கள் அரிசி வாங்கத் தலைப்பட்டுள்ளனர். இதனைச் சமாளிக்க, வணிகர்கள் லெவி அளக்கும் முறையை அரசு செயலுக்குக் கொண்டுவந்தது. இதன்படி, மொத்த விற்பனை வியாபாரிகள் இம் மாநிலம் முழுவதிலும் நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்யும் முதல் முனையில் குறிப்பிட்ட அளவுள்ள தானியங்களை அரசு குறிப் பிடும் விலையில் அரசுக்கு விற்கவேண்டும். வெளிச் சந்தையில் கிடைக்கின்ற அரிசிக்கு உறு துணையாக விளங்கும் வகையில் போதிய அளவு முடைப்பிருப்பு (Buffer Stock) இருக்குமாறு பார்த்துக்கொள்வோம். இம் மாநிலத்துக்கு வெளியிலிருந்தும் அரிசி கொள்முதல் செய்வதற்குத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம் போன்ற உபரி மாநிலங்களிலிருந்து அரிசி அல்லது நெல் கொள்முதல் செய்து எடுத்துவர, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டிலிருந்து அதிக அளவு அரிசியை இம் மாநிலத் திற்கு ஒதுக்கீடு செய்யுமாறும், ஒதுக்கீடு செய்த அளவினை இம் மாநிலத்திற்கு விரைந்து கொண்டுவர ஏற்பாடு செய்யுமாறும், மத்திய அரசை வேண்டி யுள்ளோம். திங்கள் ஒன்றுக்கு இம் மாநிலத்திற்கென 3,000 டன் கோதுமை ஒதுக்குவதற்குப் பதிலாக, 10,000 டன் கோதுமை ஒதுக்குமாறும் கருத்து தெரிவித்துள்ளோம்.

### மாநிலத் திட்டம்

6. இம் மாநிலத்தின் திட்டப் பணிகள் பற்றி ஆராயும்போது, இம் மாநிலத்தின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 3,150 கோடி அளவுக்கு இருக்கவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். நடப்பாண்டுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 411 கோடி என்ற அளவிற்கே இருக்க, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 514 கோடி மதிப்பீட்டுச் செல விலான திட்டத்துக்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும் ; அப்போதுதான், மேலும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ள முடியும் என்பதே இவ்வரசின் கருத்து. எனவே, அடுத்த ஆண்டில் நிறை வேற்றுவதற்கென ரூ. 563·26 கோடி அளவிலான திட்டத்தைத் தீட்டியுள்ளோம். இந்த அளவுள்ள திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு இம் மாநில அரசு மேலும் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ளத்தான் வேண்டும். இது பற்றி விரிவாகப் பின்னர் கூறுவேன்.




### வேளாண்மை

7. கிராமப் பகுதியில் வேளாண்மை விரிவாக்கப் பணியை மேற்கொள்வதில் சிறப்பு நாட்டம் செலுத்த வேண்டுமென இவ்வரசு கருதுகிறது. இதனை எய்தும் பொருட்டு, வேளாண்மை விரிவாக்கப் பணியைச் சீரமைத்து வலுப்படுத்தப் புதிய திட்ட மொன்றை வகுத்துள்ளோம். விரைவில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். இம் மாநில நிலைமைகளுக்கு ஏற்ற, சிறந்த, நவீனப் பண்ணை முறைகளை இத் திட்டத்தின் மூலம் உழவர்கள் பெறலாம். இரண்டாண்டுக் கால அளவில் இத் திட்டம் இம் மாநிலத்தில் செயலுக்கு வருமென எதிர் பார்க்கிறோம்.

8. இப்போது இம் மாநிலத்தில் ஆண்டுதோறும் 103 கோடி தேங்காய் உற்பத்தியாகிறது. இதனை 5 ஆண்டுக் கால அளவில் ஆண்டுதோறும் 153 கோடி காய்களாக உயர்த்துவதற்கு இவ்வரசு திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகிறது. இந் நோக்கத்தை எய்து வதற்காக, இம் மாநிலத்திலுள்ள தென்னம்பிள்ளை வளர்ப்புப் பண்ணைகளில் சிறந்த வகை தென்னங்கன்று களை உற்பத்தி செய்ய அவற்றின் நடவடிக்கைகள் கணிசமான அளவுக்குப் பெருகியுள்ளன. உள்நாட்டி லேயே பாமாலின் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கு வதற்காக ஒருவகை பனை வளர்ப்பை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றையும் அரசு தீட்டி வருகிறது. இச் சிறப்பு வகை பனை வளர்வதற்கேற்ற தட்பவெப்ப நிலை யுள்ளதெனத் தெரிந்தெடுத்த சில மாவட்டங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்படும். இத் திட்டமும் சமையல் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏனைய திட்டங்களும் சமையல் எண்ணெய் கிடைப்பதில் இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள ஓரளவு தட்டுப்பாட்டினை ஒரு சில ஆண்டுகளில் போக்கிவிடும். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் வேர்க்கடலை உற்பத்தியைப் பத்தாண்டுகளில் பெரிதும் பெருக்க இவ்வரசு கருதியுள்ளது. இக் குறிக்கோளைக் கருத்திற்கொண்டு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் நிறுவப் பட்டுள்ளது. இந்த இணையம் தனது உறுப்பினர் களாயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் துணைகொண்டு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உழவர்கள் உயர்த்தவும், உற்பத்தியான பொருள்களுக்கு நல்ல விலை பெறவும் உழவர்களுக்கு உதவி செய்யும்.

9. சிறு உழவர் மேம்பாட்டு நிறுவன அமைப்புத் திட்டம் ஒருங்கிணைந்த கிராமவளர்ச்சித் திட்டத்துடன் 1980 அக்டோபர் முதல் இணைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் 20·64 கோடி ரூபாய் செலவில் இத் திட்டம் நிறைவேற்றப் படும். இதற்காகும் செலவை, மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

### கூட்டுறவு

10. கூட்டுறவு இயக்கம் தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றியுள்ளது. இத் துறைக்கு அரசு அளித்து வரும் உதவி அனைவரும் அறிந்த ஒன்றாகும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அடுத்த ஆண்டில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் வேளாண்மைக் குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வரப்படும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்க உறுப் பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார். இத்தகைய சங்கங்கள் அளிக்கும் கடன் உதவியையும் பிற களையும் பயன்படுத்திக் கொண்டு, இச் சமூகத் தங்கள் வருமானத்தைப் பெருக்க இந்தத் திட்டம் செய்யும். 1981—82ஆம் ஆண்டில் 40,000 பேர் உ பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். உறுப்பி களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவருக் 100 ரூபாய் உதவித் தொகை அளிக்கக் கருதியுள்ள பயிர்க் கடன் பெறவும், பாற்பண்ணை நடத்து கோழி வளர்த்தல், செம்மறியாடு வளர்த்தல் முதலி வற்றுக்கு நடுத்தர காலக் கடன் பெறவும் அச் சங்கத் துக்கு அவர் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்தை முன்னிட்டே இந்த உதவித்தொகை அவருக்கு அளிக்கப் படும்.

11. 1981—82ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கி மற்றொரு திட்டம், இம் மாநிலத்தின் முக்கிய நகரங் களில் மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் சங்கங்களை அமைப்பதாகும். மோட்டார் பொருத்தப்பட்ட 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்குவதற்கு 1,000 உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும். மாநில அரசு அளிக்கும் நிதி உதவி, மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா விலையில் கால் பங்குக்கு 1,125 ரூபாய் உதவித்தொகை வடிவில் இருக்கும். விலையில் எஞ்சிய பகுதியை உறுப்பினர்கள் கடன் வாங்குவது மூலம் பெற வேண்டும்.





### கால்நடை வளர்ப்பு

12. 1981–82-ல், 29.60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கால்நடை தீவிர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்படும். கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் ஒவ்வொரு திட்டத்தின்கீழும், ஒரு இலட்சம் கால்நடைகள் கொண்டுவரப்படும். தக்க நிலங்கள் மிகப் பரந்த பரப்பளவில் அமைந்துள்ள, அரசு நடத்தி வரும் 9 கால்நடைப் பண்ணைகளை இலாபகரமாக்கப் பாசன வசதி மேம்படுத்தப்படும். அடுத்த ஆண்டில், கூடுதல் நீர் ஆதாரங்களை ஏற்படுத்தியும், உழவுக் கருவிகள் முதலியவற்றை வாங்கியும் கால்நடைப் பண்ணைகள் நான்கினை 19.08 இலட்சம் ரூபாய் செலவில் அரசு வலுப்படுத்தக் கருதியுள்ளது. கால்நடை மருந்தகங்கள் 20 தொடங்குதல், 4 மருந்தகங்களை மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தல், மூன்று மருத்துவமனைகளை மேம்பட்ட நிலையங்களாகத் தரமுயர்த்தல் போன்ற திட்டங்கள் அடுத்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். கோழி வளர்ப்பில் மிகுந்த அக்கறை காட்டப்படும் பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் கோழி நோய்க் குறியியல் ஆய்வுக்கூடம் தொடங்கப்படும். இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிறுவனத்தைச் சேர்ந்த கோமாரி திசு வளர்ப்பு—அம்மைப் பால் உற்பத்திப் பிரிவானது, கோமாரி நோயை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கென்று கோமாரி திசு வளர்ப்பு அம்மைப் பாலைப் போதிய அளவுக்கு உற்பத்தி செய்யும் வகையில் வலுப்படுத்தப்படும். தமிழ்நாட்டில் கோழி வளர்ப்புக்காக ரூ. 31.53 கோடி செலவில் ஒரு திட்டத்தை அரசு தயாரித்துள்ளது. உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்றுத்தர இத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### பாசனம்

13. ஆறாவது திட்டக் காலத்தில், பெரும் பாசனத் திட்டங்களுக்கும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் என 150 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது, சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பாசனத்துக்கென அடுத்த ஆண்டில் 26·62 கோடி ரூபாய் செலவிடக் கருதியுள்ளோம். 20,500 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம், பாசனப் புன்செய் பயிர்கள் 20,500 டன் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

14. பாசனத்துக்குப் பயன்படுத்தப்படாத ஆற்று நீர்வளம் மிகக் குறைவேயாகும். எனவே, தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு ஆறாவது திட்டத்தில் முன்னுரிமை அளித்துள்ளோம். பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் அதன் மூலம் சேமித்த நீரைக் கொண்டு பாசன வசதியைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். பாசனத்துக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 55 சதவீதத் தொகை, பாசன ஏற்பாட்டினை நவீனப்படுத்துவதற்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பெரியாறு, வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டம் இவ்வாறு மேற்கொள்ளப்படுகிற பெருந்திட்டங்களில் ஒன்றாகும். தற்போதைய கால்வாய் ஏற்பாட்டில் இத்திட்டத்தின் காரணமாக, இழக்காமல் மீதமாகிற நன்னீர், புதிதாக 25,455 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்க உறுதுணையாக இருக்கும்.

### மீனளமும் மீனவர் நலனும்

15. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணியாக, ஆண்டுதோறும் 10 கோடி மீன் குஞ்சுகள் நீர் நிலைகளில் வளர்க்கப்படும்; முதல் கட்டப் பணி 1983–84ஆம் ஆண்டுக்குள் நிறைவெய்தும். அதன்பின், மேலும் இரு கட்டங்களில் இப்பணி தொடர்ந்து நடைபெறும். இதன் விளைவாக, மீன் குஞ்சு உற்பத்தி ஆண்டுக்கு 30 கோடியாக உயரும். மேலும், நீர்த்தேக்கங்களிலும் பாசன ஏரி குளங்களிலும் சிறந்த வகை மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கப்படும். இறால் வளர்ப்பில் கிராம இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயிற்சி நிலையங்களில், ஓராண்டில் சுமார் 1,000 இளைஞர்கள் பயிற்சி பெறுவர். அதே நேரத்தில், ஆழ்கடல் மீன் பிடிப்பு நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெறும். 1981–82ஆம் ஆண்டில் சிறந்த வகை ஆழ்கடல் மீன்பிடி கலங்கள் நான்கு வாங்கப்படும். வெட்ஜ் பார், பெட்ரோ பார், மன்னார் வளைகுடா, பாக் விரிகுடாப் பகுதிகளில் கிடைக்கிற மீன்களைப் பிடிக்க இக்கலங்கள் பயன்படுத்தப்படும். மேலும், தமிழ் நாட்டின் தென் மேற்கு, தென் கிழக்குக் கடற்பகுதிகளில் கிடைக்கும் மீன்வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள, தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனம் பர்ஸ் ஸீனர் (Purse Seiner) 45 அடி நீளமுள்ள கலங்கள் ஐந்தினை வாங்கும். சென்னை நகரிலும் ஏனைய முக்கிய நகரங்களாகிய கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகியவற்றிலும் மேலும் பல சில்லறை விற்பனைக் கடைகளைத் தொடங்கி, இந்த நிறுவனம் மீன் விற்பனை நடவடிக்கைகளைப் பரவலாகவும் முனைப்பாகவும் மேற்கொள்ளும்.

16. பிடித்த மீனைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் வசதிகளும் மீன்பிடி துறைமுக வசதிகளும் அடுத்த நிதி ஆண்டில் மேம்படுத்தப்படும். சென்னை மாநகரில் மீன்பிடி பெருந்துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டில் சின்ன முட்டத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டப்படும்; வாலிநோக்கத்தில் சிறிய அளவில் தோணித் துறை ஒன்றும் அமைக்கப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறையில் அத்தகைய வசதிகளை உருவாக்கப் புலனாய்வு நடந்து முடிந்துள்ளது. இத்தகைய வசதிகளை தொண்டி கிராமத்தில்



ஏற்படுத்தவும் புலனாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனவர் வருவாயைப் பெருக்கவும் இவ்வரசு, உணவு-வேளாண்மை நிறுவனத்தின் (F.A.O.) ஒத்துழைப்புடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிறு மீனவர்கள் கடல் மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கு மிக வாய்ப்பான சிறு கலத்தை நிர்ணயித்தறியும் பொருட்டு, சிறு மீன்படகுகள், சிறந்த வகை நாட்டுப் படகுகள், கட்டுமரம் போன்ற படகுகள் ஆகியவற்றைக் கொண்டு முன்னோடி மீன் பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரு மீன்பிடி கலங்கள் இணைந்து பணியாற்றுவதன் வெற்றி வாய்ப்புகளை மதிப்பிடுவதற்காக, மண்டபத்திலும் தூத்துக்குடியிலும் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

### காடு வளர்ப்பு

17. காடுகளைப் பரவலாக அழிப்பதால், பொதுவாகப் பருவ மழை பொய்த்துப் போகிறது என்பது அனைவருக்கும் தெரியும். வீட்டுப் பயனுக்காகவும் ஏனைய தொழிற் பயனுக்காகவும் மரங்களை வெட்டுவது அவசியமென்றாலும், முனைப்பாகக் காடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதும் அவசியமாகும். சமூகக் காடு வளர்ப்புக்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் 45 கோடி ரூபாய் செலவு ஏற்படும் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக, ஸ்வீடன் நாட்டு சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம்.

### மின் உற்பத்தி

18. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாநில அரசு தலையாய முன்னுரிமை அளித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான 3,150 கோடி ரூபாயில், மின் உற்பத்திக்கு மட்டும் ஏறக்குறைய 1,023 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டு மின் இணைப்பு ஏற்பாட்டின் உற்பத்தித் திறனளவு இத்திட்ட கால அளவின் தொடக்கத்தில் 2,719 மெகாவாட்டாக இருந்தது. இது இத்திட்ட கால இறுதிக்குள், 4,769 மெகாவாட்டாக உயர்த்தப்படும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இரண்டாவது இயந்திரம் இந்த ஆண்டு சனவரித் திங்களில் செயல்படத் தொடங்கியது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது இயந்திரமும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் 235 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமும் செயல்படத் தொடங்கி, தமிழ்நாட்டு மின் உற்பத்தித் திறனளவு 1981–82ஆம் ஆண்டில் 3,374 மெகாவாட்டாக உயரும். மேட்டூர் அனல் மின் நிலையத்தையும் கீழ் மேட்டூர் புனல் மின் நிலையத்தையும் நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவற்றின் பயன்கள் ஆறாவது திட்டக் கால அளவின் கடைசி இரு ஆண்டுகளில் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கும். பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் இப்போதுள்ள இயந்திரங்களுக்குப் பதிலாக, 110 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய இயந்திரம் வாங்குவதற்கான திட்ட அறிக்கை ஒப்புதல் பெற வேண்டி இப்போது மத்திய அரசிடம் உள்ளது. 630 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள அனல் மின்





நிலையத்தை வட சென்னையில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 30,000 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதென இலக்கிட்டிருக்க, 1981 பிப்ரவரி வரை 29,742 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 916,969 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதால், இத்துறையில் தமிழ்நாடுதான் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் சிறப்பு பெற்றுள்ளது. இம்முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, 1981–82ஆம் ஆண்டில் மேலும் 30,000 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படும். குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும் திட்டத்தைத் தொடங்கியதிலிருந்து ஒன்றரை ஆண்டுகளுக்குள் 2.7 இலட்சம் குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது.

19. பருவ மழை பொய்த்து, நீர்த் தேக்கங்களில் குறைந்த அளவில் நீர் இருப்பதால், மின் வெட்டு விதிக்க வேண்டிய அவசியத்துக்குத் தமிழ்நாடு அரசு ஆளாக நேரிட்டுவிட்டது. ஆனால், தூத்துக்குடியிலும் எண்ணூரிலும் மின் உற்பத்தி உயர்ந்து வருவதாலும் கேரளத்திலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் மின்சாரம் கிடைத்து வருவதாலும், நிலைமை சீராகுமென நம்புகிறோம்.

20. கடந்த மூன்றாண்டுகளில், நிலக்கரியின் விலை டன்னுக்கு 82 ரூபாயாக இருந்தது 114 ரூபாயாக உயர்ந்து விட்டது. அவ்வாறே, நிலக்கரியைக் கப்பலில் எடுத்து வரும் செலவும் இரயில் மூலம் எடுத்து வரும் செலவும் கணிசமான அளவு உயர்ந்து விட்டன. கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான செலவு உயர்வும் இத்துடன் சேர்ந்து உள்ளது. மேலும், நெய்வேலி நிறுவனத்திடமிருந்து வாங்கும் மின்சாரத்துக்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது மின்சார வாரியத்திற்கு கிடைத்து வரும் வருவாய் நடைமுறைச் செலவுக்குக் கூட போதுமானதாக இல்லை. பராமரிப்புச் செலவு, வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ள கடன்களின் உரிய தவணைத் தொகை, வட்டி ஆகிய செலவுக்கு அரசு நிதி உதவி அளிக்க வேண்டிய நிலையில் வாரியம் இருக்கிறது. அரசிடம் இருந்து கிடைக்கும் உதவியாக 100 கோடி ரூபாயைக் கணக்கில் கொண்ட பிறகும் மின்சார வாரியத்தின் ஆண்டுத் திட்ட செலவான ரூபாய் 169·59 கோடிக்கு, ரூபாய் 89·31 கோடி அளவில் பற்றாக்குறை இருக்கும். மின் கட்டண அமைப்பைத் திருத்த வேண்டியதன் அவசியத்தைத் திட்டக்குழு வலியுறுத்தியுள்ளது. மின் வாரியம் சீராகச் செயல்பட வேண்டுமானால், இவ்வாறு திருத்துவது இன்றியமையாததாகுமெனத் திட்டக்குழு கருத்து தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம் விதித்து வாங்கும் மின் கட்டணம் இந்தியாவில் பல மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவாக உள்ளதென்றும், இவ்வாறு கட்டண விகிதத்தைக் குறைவாக வைத்திருப்பது சரியல்லவென்றும், திட்டக்குழு கூறியுள்ளது.

### தொழில் வளர்ச்சி

21. தொழில் [illegible]



சிறப்பாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டில் புதிய தொழிற்சாலை தொடங்க முன்வருபவர்களுக்கு மேலும் பல வசதிகளும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டுமெனப் பலரும் கூறுகிறார்கள். இதனை ஆராய்ந்துவரும் அரசு, விரைவிலேயே ஏற்றதொரு முடிவு எடுக்கும். இதற்கிடையில், அரசுத் துறை தொழில் நிறுவனங்கள் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மதுரை மாவட்டத்தில் அரசுத் துறையில் மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் அனுப்புமாறு கேட்டுள்ளோம். 32 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் இத்திட்டம் ஏறக்குறைய 1,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். சுமார் 20 கோடி ரூபாய் செலவில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வெடி மருந்துகள் தயாரிக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது. கூட்டுறவுத் துறையிலுள்ள நூற்பாலைகள் இந்த ஆண்டில் நல்ல ஆதாயத்துடன் செயல்பட்டுள்ளன. சில ஆலைகள் தங்களது உற்பத்தித் திறனை உயர்த்து மளவுக்குச் சொந்த உபரி நிதி ஆதாரங்களைத் திரட்ட முடிந்துள்ளது. வட ஆர்க்காட்டிலும் சேலத்திலுமுள்ள ஆலைகள் தங்களிடமுள்ள கதிர்களின் எண்ணிக்கையை 12,000-லிருந்து 25,000ஆக உயர்த்தும். பேட்டையி லுள்ள நூற்பாலை 12,000 கதிர்கள் கொண்ட கிளை ஆலை ஒன்றை எட்டையபுரத்தில் தொடங்கக் கருதியுள்ளது. மேலும், நெசவாளர்களின் பெருகிவரும் நூல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கூட்டுறவுத் துறையில் மேற்கொண்டு 3 நூற் பாலைகளை அரசு தொடங்கும். நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறனுடன் கூடிய சர்க்கரை ஆலை ஒன்றை 1981-82இல் தொடங்குவதற்காக, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**22.** அரசுத் துறை நிறுவனமான தமிழ்நாடு கனிப் பொருள் நிறுவனம் உயர்ந்த அளவு கனிப்பொருள் விற்று நல்ல முறையில் செயல்பட்டுள்ளது. கனிப் பொருள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதில் இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. இதன் வருமானத்தில் 90 சத வீதம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது. இதுவரை சேர்ந்து வந்துள்ள இழப்பினை இந்த நிறுவனம் இப்போது பெற்று வரும் ஆதாயம் ஈடு செய்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**23.** மற்றொரு அரசுத் துறை நிறுவனமாகிய தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனம், தான் செயல்படத் தொடங்கிய முதலாண்டிலேயே ஆதாயம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனத்தின் சாதனையை மேலும் மேம்படுத்து வதற்காக, 3 கோடி ரூபாய் செலவில் கனிப் பொருள் செறிவுபடுத்தும்—வெப்பந்தாங்கிக் கல் தயாரிப்புச் சாலை நிறுவப்படும்.

**சிறுதொழில் வளர்ச்சி**

**24.** சிறுதொழில்கள் வளர்ச்சிக்கும் அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக, சிறுதொழிற் பிரிவுகள் சிறந்த நிதி வசதிகளைப் பெற்று வருகின்றன. நடப்பாண்டில் இக் கழகம் 32 கோடி ரூபாய் வரை கடன் உதவி அளித்து தனது பணியை இரு மடங்காக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் இதன் கடன் நடவடிக்கைகள் 45 கோடி ரூபாய்வரை விரிவாக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது, அரசின் மற்றொரு நிறுவனமாகிய தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (SIDCO) மூலமாக, சிறு தொழில்கள் வளர்ச்சியை அரசு பெருக்கி வருகிறது. இக் கழகம் பிறவகை உதவிகளுடன் கூட, பணிக் கொட்டகைகள், சிறு கொட்டகைகள் கட்டுதல் போன்றவற்றிற்கும் உதவி அளிக்கிறது. இரும்பு, எஃகு, பாரபின் மெழுகு, நிலக்கரி, கல்கரி ஆகியவற்றைச் சிறுதொழிற்கூடங்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக இக்கழகம் கொள்முதல் செய்கிறது. நடப்பாண்டில் இக்கழகத்தின் இந்த நடவடிக்கைகளில் வியாபாரத் தொகை 12 கோடி ரூபாயிலிருந்து 17 கோடி ரூபாயாக உயரும். அடுத்த ஆண்டில் இது 25 கோடி ரூபாய் வரையில் உயர்த்தப்படும். நலிந்த சிறுதொழில் பிரிவு களுக்கு வேண்டிய நிதி உதவி அளித்து அவற்றைத் திறம்பட இயங்கச் செய்வதிலும் இக்கழகம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

**கைத்தறி**

**25.** கைத்தறி நெசவாளர்கள் நலனில் இவ்வரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருவது யாவரும் அறிந்ததாகும். அண்மையில் நூலின் விலை உயர்ந்த போது, 20ஆம் நம்பர் நூலிலிருந்து 40ஆம் நம்பர் நூல் வரை நியாயமான விலையில் வழங்க அரசு ஏற்பாடு செய்தது. அரசு கேட்டுக்கொண்டதன்பேரில், தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம், கைத்தறி நெசவாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்க 40ஆம் நம்பர் மோட்டா ரக நூலில் 5,000 பொதி கொண்ட சிட்ட நூல், குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது. நெச வாளர்களின் வேலை நிலைமைகளை முறைப்படுத்து வதற்கென தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் வேலை நிலைமை-பல்வகை விதித் துறைச் சட்ட வரைவு ஒன்றை விரைவில் கொண்டு வரவும் அரசு கருதி யுள்ளது.

**26.** கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிறுவனத்தின் வணிகத் தொகை (Turnover) இந்த ஆண்டு ரூபாய் 45 கோடிக்கு இருக்கும்; 1981–82இல் 50 கோடி ரூபாய் அளவிற்கு இது உயர்த்தப்படும். மத்திய அரசின் உதவியுடன் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத் தில் ரூபாய் 100 இலட்சம் கூடுதலாக அரசு வரும் ஆண்டு முதலீடு செய்யும்.

**கிராமத் தொழில்கள்**

**27.** கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூல மாகக் கிராமப் பகுதியில் வேலை வாய்ப்பு அளிப்



பதற்கு அரசு ஊக்கமளித்துவருகிறது. அடுத்த நிதி ஆண்டில் 33,000 பேர்களுக்கு இவ்வாரியம் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாரியம் 21.12 இலட்சம் ரூபாய் செலவில் பெரியார் மாவட்டத்தில் குரோம் (செருப்பு) தோல் தொழில் பிரிவை விரிவுபடுத்தவும் கருதியுள்ளது. வாரியத்தின் நடவடிக்கைகளுக்குப் போதிய நிதி உதவியை அரசு தொடர்ந்து அளித்துவரும். தொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலம் 27 கோடி ரூபாய் கடன் வழங்குவது, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள மூலப் பொருள்களை வழங்குவது, கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கிராமத்தொழில்கள் பிரிவு செய்யும் விற்பனையை 45 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்துவது, 13.19 கோடி ரூபாய் அளவுக்குத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்வது ஆகியவை வாயிலாக, அடுத்த நிதி ஆண்டில் சிறு தொழில்களையும் கிராமத் தொழில்களையும் அரசு மேலும் வளர்க்கக் கருதி யுள்ளது.

**சாலை வசதி**

**28.** 1,500 மக்கள் கொண்ட கிராமங்கள் பயனடையும் வகையில் சாலைகள் அமைத்துச் சீரமைக்கும் பணியை அரசு படிப்படியாகச் செய்து வருகிறது. ஐந்து நிலைகளைக் கொண்ட இத் திட்டத்தின்கீழ் 28·25 கோடி ரூபாய் மூலதனச் செலவில் மொத்தம் 4,819 கிலோமீட்டர் கொண்ட சாலைகள் 2,789 கிராமங்களில் அமைக்கப்படும். நடப்பாண்டில் தன்னிறைவு வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிற்கு இத் தொகை 7 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இதற் கென மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் செல்கின்ற ஊராட்சிச் சாலைகளின் பராமரிப்பை அரசு ஏற்கின்ற திட்டம் இவ்வாண்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல் படுகிறது. 1981–82ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சேதுசமுத்திரத் திட்டம்**

**29.** சேதுசமுத்திரம் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதிக்குமாறு மத்திய அரசை இவ்வரசு வலி யுறுத்தி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இத் திட்டத்தை மீண்டும் புதிதாக ஆராய உயர் அதிகாரக் குழு ஒன்றை மத்திய அரசு இப்போது அமைத்துள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**சாலைப் போக்குவரத்து**

**30.** போக்குவரத்து நிறுவனங்களில் இந்த நிதி ஆண்டில் 1981 பிப்ரவரி வரையில் ஏறத்தாழ 1,376 பேருந்துகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 10 இலட்சம் பேர் பயனடைகிற வகையில் 310 கிராமங்களை இணைக்கின்றவாறு பேருந்து





வழித்தடங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து நிறுவனங்களின் நிதி நிலைமைகளை, பெட்ரோலியப்பொருள்கள், உருக்கு (Steel) ஆகியவற்றின் விலையில் ஏற்பட்ட கடுமையான உயர்வு வெகுவாகப் பாதித்துள்ளது. 1979–80இல் வரிக்கு முந்தைய ஆதாயமாக 6.67 கோடி ரூபாயை ஈட்டிய இந் நிறுவனங்கள் இப்போது 1980–81இல் ஏறத்தாழ ரூ. 16 கோடி வரை பெருத்த இழப்பை அடையலாம். இது இந் நிறுவனங்களின் திட்டங்களைக் குறைத்து விடவே செய்யும். எரிபொருள்களின் விலை உயர்வால் ஆண்டுத் திட்ட அளவான ரூபாய் 17·50 கோடிக்கு சுமார் 14·46 கோடி பற்றாக்குறை இருக்கும். இதனைக் குறைக்கவும் பொதுமக்களுக்குச் சிறந்த, கட்டுபடியாகக் கூடிய பேருந்து வசதி அளிக்கவும் வேண்டுமானால், பேருந்து கட்டணத்தைத் திருத்தி அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இது பற்றி ஆளுநரது உரையிலும் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. பேருந்து கட்டணங்களைத் திருத்தியமைக்க அவசியமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது. அண்டை மாநிலங்களும், தமிழ் நாட்டில் நிலவும் கட்டண வீதங்களை விட அதிகமாக இருக்கும் வகையில் கட்டண வீதங்களைத் திருத்தி யமைத்துள்ளன. பெட்ரோலியப் பொருள்களின் விலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரு உயர்வாலும், போக்குவரத்து சம்பந்தப்பட்ட அனைத்துப் பொருள்களின் பெரும் விலை உயர்வாலும் போக்கு வரத்துக் கட்டணத்தைத் திருத்தியமைப்பது அவசிய மாகியுள்ளது.

**சுற்றுலா வளர்ச்சி**

**31.** சுற்றுலா நாளுக்கு நாள் மக்களிடையே பரவலாகிச் சிறப்பு பெற்று வருகிறது. அந்நியச் செலாவணியை நாட்டுக்கு ஈட்டித்தரும் மிக முக்கிய மான தொழில்களில் இதுவும் ஒன்றாகும். சுற்றுலாப் பயணிகளை இம்மாநிலம் கவர்ந்து ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அயராது பாடு பட்டு வருகிறது. மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடங்களை மேம்படுத்து வதுடன் பிச்சாவரம், ஒகேனக்கல் முதலிய இடங்களை மேம்பாடடையச் செய்வதற்கு அரசு கவனம் செலுத்தி வருகிறது. இவ்விடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வளம் பெற்ற இடங்களாகும். இராமேஸ் வரம் மேம்பாட்டுக்கென 28 கோடி ரூபாய் மொத்தச் செலவீட்டில் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு, அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்க நிதி கோர இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிற்பக் கலை வளர்ச்சியையும், கோயில் கட்டிடக் கலை வளர்ச்சியையும் படிப்படியாகக் காண்பிக்கின்ற வகையில், மாமல்லபுரத்தில் திறந்த வெளி அரும்பொருட் காட்சியகம் அமைக்கும் திட்டம் ஒன்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இளைஞரிடையே சுற்றுலாவை வளர்ப்பதற்கான இளைஞர் இல்லங்கள், [illegible] முக்கியத்துவம் பெற்ற எட்டு இடங்களில் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. [illegible]



மேலும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முக்கியமான இடங்களில் சுற்றுலாப் பயணிகள் விடுதிகளைத் தொடர்ந்து அமைத்து வருகிறது. மதுரையில் மூன்று நட்சத்திர விடுதி ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. மற்றொரு பெரிய திட்டம் கோயம்புத்தூரில் முடிவுறும் நிலையில் உள்ளது. சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர, மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஏஜெண்டுகளைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. அனைத்திந்தியாவிலும் இவ்வாறு ஏஜெண்டுகளை நியமிக்கும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குவதில் பெருமை கொள்ளலாம்.

### கல்வி

**32.** 1980–81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூபாய் 238·88 கோடி 1981–82ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 255·35 கோடி ஆக உயர்ந்துள்ளது. பொதுக் கல்வி குறித்த திட்டச் செலவு 1980–81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 18·71 கோடி ஆக இருந்தது. 1981–82ஆம் ஆண்டு ரூபாய் 23·58 கோடி ஆக அதிகரித்து உள்ளது. வரும் ஆண்டில், கூடுதலாகப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 1,650 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். அவர்களில், தொடக்கநிலைப் பள்ளி நிலையில் 1,000 ஆசிரியர்களும் உயர்நிலைப் பள்ளி நிலையில் 200 பி.டி. தர ஆசிரியர்களும் புதிதாக நியமிக்கப்படுவர். இடைநிலைப் பள்ளிகளுக்கு 200 தலைமை ஆசிரியர்கள் பி.டி. தரத்தில் நியமிக்கப்படுவார்கள். 250 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவிகள் புதிதாக உருவாக்கப்படும். 250 கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவி பகுதி நேர நிலையிலிருந்து முழு நேரப் பதவிகளாக மாற்றி அமைக்கப்படும். வரும் ஆண்டில் இடைநிலைப் பள்ளிகளுக்கு புதிதாக 500 தமிழாசிரியர்கள் பதவிகள் உருவாக்கப்படும். பெரிய கோவில்களில் தமிழாசிரியர்களை வேலைக்கு அமர்த்தும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் மைய சமையல் கூடத் திட்டம் ரூபாய் 49·7 இலட்சம் செலவில் தொடங்கப்படும். 50 உயர் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான அறிவியல் கூடத்திற்கான சாதனங்கள் வாங்குவதற்காகவும் 5 கல்வி மாவட்டங்களில் 5 நடமாடும் அறிவியல் கூடங்களைத் தொடங்குவதற்காகவும் ரூபாய் 50·17 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 50 இலட்சம் செலவில் அரசுப் பள்ளிகள், மானியம் பெறும் தனியார் பள்ளிகள், உள்ளாட்சி நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகள் ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும். 86 மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் ரூபாய் 2 கோடி செலவில் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. அரக்கோணத்திலும் [illegible]ஊரிலும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1—6—1981ல் இருந்து அரசுப் பணியாளர்கள் ஆக்கப்படுவார்கள் என்று அரசு முடிவு எடுத்திருப்பதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர்.

**33.** ஆறு முதல் 14 வயது வரை உள்ளவர்களுக்கு முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் கல்வி அளிக்க தன்னிறைவுத் திட்ட வளர்ச்சி வட்டாரங்கள் 240 மையங்கள் வரும் ஆண்டில் புதிதாகத் தொடங்கப்படும். புதிதாக எழுத்தறிவு பெற்றுள்ளவர்களுக்கு எழுத்தறிவுக்கு அடுத்த நிலையில் கல்வி அறிவு வழங்க 100 மையங்களும் அமைக்கப்படும். முறை சாராக் கல்விக்காகவும் முதியோர் கல்விக்காகவும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 160 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**34.** வரும் ஆண்டில் புதிய பட்டப்படிப்புகளைத் தொடங்குவதற்கு ரூபாய் 10 இலட்சமும் புதிய பட்ட மேற்படிப்புகளைத் தொடங்குவதற்காக ரூபாய் 5 இலட்சமும் மாலை நேரக் கல்லூரிகளில் விஞ்ஞானப் பிரிவில் பட்ட மேற்படிப்புகளைத் தொடங்குவதற்காக ரூபாய் 5 இலட்சமும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. கூடுதல் வகுப்பு அறைகள், மாணவர் தங்கும் விடுதிகள் கட்டும் பணி 18·5 இலட்சம் ரூபாய் செலவில் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றும் காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றும் நடப்பு நிதி ஆண்டில் ஏற்படுத்தப்படுமென ஆளுநர் உரையில் கூறப்பட்டிருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் தொடங்குவதென அரசு முடிவு செய்துள்ளது; இதனை அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15இல் இவ்வாண்டு தொடங்க அரசு முயற்சி செய்து வருகிறது. காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது குறித்துப் பல்கலைக் கழக மானியக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளோம். மதுரையில் ஒரு கோடி ரூபாய் செலவில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும்.

**35.** தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி குறித்து அரசு பெரும் கவனம் செலுத்தி வருகிறது. 1980–81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 152·36 இலட்சம் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கையில், 1981–82ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளில் ரூபாய் 213·71 இலட்சமாகக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், கோவையில் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் ரூபாய் 50 இலட்சம் செலவில் கணக்கீட்டுப் பொறிப் பிரிவு ஒன்று அமைக்கப்படும். காரைக்குடியில் அழகப்பச் செட்டியார் பொறியியல்—தொழில் நுட்பக் கல்லூரியில் பட்டப் படிப்பு அமைப்புடன் கூடிய ஆய்வுக் கூடம் (Systems Laboratory) ஒன்றை ஏற்படுத்த ரூபாய் 22·38 இலட்சம் செலவில் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு தொழில்



# 1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூறுபாடுகள்

* உணவு தானிய உற்பத்தி இலக்கு 92.14 இலட்சம் டன்கள்.
* உலக வங்கி உதவியுடன் வேளாண்மை விரிவாக்கப்பணியைச் சீரமைத்து வலுப்படுத்தப் புதிய திட்டம்.
* பாமாலின் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஒரு வகை பனை வளர்ப்பை ஊக்குவிக்கும் திட்டம்.
* செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கால்நடை தீவிர வளர்ச்சித் திட்டம்
* உலக வங்கி உதவியுடன், கோழிவளர்ப்புக்கு ரூ. 31.53 கோடி செலவில் ஒரு திட்டம்.
* ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் வேளாண்மைக் குடும்பங்கள் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வரப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.
* மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் சங்க உறுப்பினர் 1,000 பேருக்கு நிதி உதவி
* பாசனத் திட்டங்களுக்காக 150 கோடி ரூபாயில் ஐந்தாண்டுத் திட்டம்.
* சிறு பாசனங்களுக்கு 18 கோடி ரூபாய் செலவில் ஐந்தாண்டுத் திட்டம்
* 20,500 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி
* இறால் வளர்ப்பில் ஆயிரம் கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி
* சிறந்த வகை ஆழ்கடல் மீன்பிடி கலங்கள் நான்கு வாங்கப்படும்.
* சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம்; வாலிநோக்கத்தில் தோணித் துறை
* காடு வளர்ப்புக்கு, ஸ்வீடன் நாட்டு சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் 45 கோடி ரூபாய் செலவில் சிறப்புத்திட்டம்.
* ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் தமிழக மின் இணைப்பின் உற்பத்தித் திறனளவு 2719 மெகாவாட்டிலிருந்து 4769 மெகாவாட்டாக உயர்த்தப்படும்.
* 1981-82-ல் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது இயந்திரம் செயல்படத் தொடங்கும்.
* 1981-82-ல் மேலும் 30 ஆயிரம் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.
* 2.7 இலட்சம் குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது.
* மதுரை மாவட்டத்தில் 32 கோடி ரூபாய் செலவில் ஒரு சிமெண்ட் ஆலை,
* ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன், 20 கோடி ரூபாய் செலவில் வடஆர்க்காடு மாவட்டத்தில் வெடிமருந்துகள் தயாரிக்கும் ஆலை.
* கூட்டுறவுத் துறையில் மேலும் நான்கு கூட்டுறவு நூற்பாலைகள்.
* புதிய சர்க்கரை ஆலை ஒன்று தொடங்க 1.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

* மூன்று கோடி ரூபாய் செலவில் கனிப்பொருள் செறிவுபடுத்தும்-வெப்பந்தாங்கிக் கல் தயாரிப்புச் சாலை.

* சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் வியாபாரத் தொகை 25 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

* கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் வணிகத் தொகை ரூபாய் 50 கோடி அளவிற்கு 1981-82-ல் உயர்த்தப்படுகிறது.

* 33,000 பேர்களுக்கு கதர்-கிராமத்தொழில் வாரியம் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும்.

* ஏழு கோடி ரூபாயில் கிராமங்கள் பயனடையும் வகையில் சாலைகள் அமைக்கும் பணி.

* பேருந்துகள் செல்கின்ற ஊராட்சிச் சாலைகளின் பராமரிப்புக்கு 13 கோடி ரூபாய்.

* சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய-வளம் பெற்ற இடமாகிய இராமேஸ்வரம் மேம்பாட்டுக்கென 28 கோடி ரூபாயில் ஒரு பெருந்திட்டம்.

* தொடக்கநிலை-உயர்நிலை-இடைநிலைப் பள்ளிகளில் மொத்தம் 1650 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

* இடைநிலைப் பள்ளிகளில் 500 தமிழாசிரியர்கள் பதவிகள் உருவாக்கப்படும்.

* ரூபாய் 2 கோடி செலவில் 86 மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள்,

* அரக்கோணத்திலும் கடலூரிலும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்.

* தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக் கழகம்.

* மதுரையில் ஒரு கோடி ரூபாய் செலவில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும்.

* சென்னை நகரில் கட்டடத்திற்குள் விளையாட்டுகள் நடத்துவதற்கான விளையாட்டு அரங்கம்.

* 20 தொடக்க சுகாதார நிலையங்கள் உருவாக்கப்படும். 14 நிலையங்கள்புதிதாகத் தரமுயர்த்தப்படும்




# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

**தமிழ்ப் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல்!**

முதல் பரிசு ரூ. 10 லட்சம்

3 சிறப்பு 2 வது பரிசுகள் ரூ. 1 லட்சம் வீதம்

மற்றும் ஆயிரக்கணக்கான பரிசுகள்

6 வரிசைகள் (GE, GF GG, GH, GI, GJ)

டிக்கெட்டு விலை ரூபாய் 2

குலுக்கல் தேதி : 22.4.81

இடம் : உதகமண்டலம்

தமிழ்நாடு பரிசுச்சீட்டு இயக்குநர்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


* சென்னை பெரம்பூரில் 170.91 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக புறநகர் மருத்துவமனை.

* முத்தடுப்பு ஊசி போட்டு, சிறார்களுக்கு நோய்வராமல் பாதுகாக்கும் திட்டம் மேலும் 50 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு விரிவாக்கப்படும்.

* விபத்து அவசர உதவித் திட்டம் 181.38 இலட்சம் ரூபாய் செலவில் 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

* இந்திய முறை மருத்துவ முறைக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு.

* 200 தொடக்கச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடக்கம்.

* 1981-82-ல் மேற்கொண்டு 150 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் செயற்படுத்தப்படும்.

* கிராமக் குடிநீர் வசதிக்கு ரூபாய் 24.5 கோடி ஒதுக்கீடு.

* அடுக்குத் தொடர்வீடுகள் கட்ட குடிசைப் பகுதி மாற்றுவாரியத்துக்கு 2.5 கோடி ரூபாய் நிதி உதவி.

* உடல் ஊனமுற்றோர் நலனுக்கான திட்டங்களுக்காக ரூ. 59 இலட்சம்.

* ஏழைக் கைம்பெண்களின் மகளிர் திருமணத்துக்குக் குறைந்த விலையில் 'தாலிக்குத் தங்கம்' வழங்கப்படும்.

* உலக வங்கி சத்துணவுத் திட்டம் மதுரை மாவட்டத்தில் 8.54 கோடி ரூபாய் செலவில் 33 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்படும்.

* ஆண்டுத் திட்டத்தில் மின் உற்பத்திக்கு முன்னுரிமை.

* மாநிலத்தின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான 3,150 கோடி ரூபாயில் மின் உற்பத்திக்கு மட்டும் சுமார் 1023 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

* 630 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள அனல் மின் நிலையத்தை வட சென்னையில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

* ஆதித் திராவிட மாணவர்களுக்கு உயர்நிலைப்பள்ளி மாணவரில்ல உணவுச் செலவை முன்னிட்டு தற்போது கொடுக்கப்படும் தொகையில் ரூபாய் 15 உயர்த்தப்படும்.

* உயர் நிலைப்பள்ளி அளவில், ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டம்.

* மலைவாசிகளுக்கு உதவி செய்வதற்காக சிறு தொழில்கள் தொடங்கும் தனித் திட்டம்.

* 12,000 காவலர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ், 1980-81-ல் 4,000 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

* அரசு அலுவலர் நலன்: ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(அ) சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படும்.

(ஆ) வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஒப்புவிப்பு ஊதியத்தில் சேர்த்து அளிக்கப்படும்.

(இ) தேர்வு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் உள்ளவர்களுக்கு தேக்க நிலை ஊதிய உயர்வு

(ஈ) தேக்க நிலை ஊதிய உயர்வுக்கான ஊதிய உச்ச வரம்பு ரூ. 2,000 ஆக உயர்த்தப்படும்.

(உ) தேர்வு நிலை அலுவலரின் ஊதியத்தை நிர்ணயம் செய்யும்பொழுது ஊதியத் தரங்கள் ரூ. 10ம், ரூ. 15-ம் குறைந்தபட்ச நன்மையாக அளிக்கப்படும்.

(ஊ) பதவி உயர்வு பெறும் பொழுது குறைந்த பட்சம் உயர்வு 5 சதவிகிதமாக இருக்கும்.

(எ) அரசு ஊழியர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை

(ஏ) திருமணக் கடன் மகளின் திருமணத்திற்கு ரூ.3,000; மகனின் திருமணத்திற்கு ரூ. 1,500என உயர்வு

(ஐ) ஓய்வூதியத் தொகையில் ஒரு தொகையை மொத்தமாகப் பெற்றவர்களுக்கு ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் ஓய்வூதியத் தொகை முழுமையாக அளிக்கப்படும்.

(ஒ) 1-12-80 முதல் அமலுக்கு வரும் வகையில் ஓர் அகவிலைப்படி அளிக்கப்படுகிறது.

* 1981-82-ப் ஆண்டுத் திட்ட அளவு ரூ. 563.26 கோடி.

* மின்சார உற்பத்திக்கு மட்டும் ரூ 169.59 கோடி.

* (அ) மத்திய அரசு, இரயில்வே, மாநில அரசு ஆகியவை வாங்கும் பொருள்கள் மீது 4 சதவீதத்திற்குமேல் விதிக்கப்பட்டுவரும் பொது விற்பனை வரிவீதங்கள் அனைத்தும் மத்திய விற்பனை வரி வீதமான 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

* (ஆ) ரூ. 26.62 கோடி பாசனத்துக்கும், ரூ. 104.69 கோடி வேளாண்மைக்கும் அதைச்சார்ந்த துறைகளுக்கும் ரூ. 51.30 கோடி குடிநீர் வழங்கல் வடிகால் திட்டங்களுக்கும் செலவிட ஆண்டுத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

* பாலிதீன், பால்புரோபிலின் போன்ற பொருள்களின் மீதான ஒரு முனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

* ரப்பருடன் சேர்க்கப்பட்ட தென்னை நார் மீதான விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

* அப்பளம், சேமியா, ரொட்டி வகைகள் ஆகிய வணிகக் குறி பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து அறவே விலக்கு அளிக்கப்படுகிறது.

* 10 ஆயிரத்துக் குறைந்த விற்பனையுள்ள பத்திரிகைகளுக்குத் தேவையான பத்திரிகைக் காகிதம் மீது விதிக்கப்படும் 8 சதவிகித வரி 4 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

* ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தைப் பயிர் செய்யும் சிறு விவசாயிகள் பெற்ற குறுகிய காலப் பயிர்க்கடன்களை 30-6-81க்குள் திருப்பிச் செலுத்திவிட்டால் திருப்பிச் செலுத்துகின்ற தேதிவரையில் கூடுகின்ற சாதாரண வட்டியும் தண்ட வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

* இதர விவசாயிகள் குறுகியகாலப் பயிர்க் கடன்களை 30-6-1981க்குள் அதுவரையில் உள்ள சாதாரண வட்டியுடன் திருப்பிச் செலுத்திவிட்டால், தண்ட வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

* குறுகிய காலக் கடன் தவணைகளையும் நடுத்தரக் காலக் கடன் தவணைகளையும் உரிய நாளுக்குள் சிறு உழவர்கள் செலுத்தினால், அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டியில் 2 சதவீதம் கழித்துவிடப்படும்....

* தமிழக அரசு மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை. சட்டவிரோதமான செயலில் ஈடுபடும் சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்கு கிடைக்க வழிவகை செய்ய மது விலக்குச் சட்டத்தில் சிலதிருத்தங்கள் செய்யப்படுகின்றன.

* 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மது அருந்த அனுமதி .அவர்கள் முறைப்படி பர்மிட் பெற வேண்டும். பாட்டில்களில் சாராயம் அடைக்கப்பட்டு உரிய கடைகளில் விற்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

* அனுமதி, உரிமம் இன்றி சாராயம் காய்ச்சுவது, விற்பது, அருந்துவது போன்றவை தொடர்ந்து சட்டப்படி தடுக்கப்பட்டு, மீறுபவர்கள் சட்டப்படி தண்டனைக்குள்ளாக்கப்படுவர்.

* குடிப்பதனால் விளையும் தீமைகளை மக்களிடையே எடுத்துக்கூறி பிரச்சாரம் செய்ய அதற்காக முதல் தவணையாக ரூ. 1 கோடி ஒதுக்கப்படும்.





# வறட்சிப் பகுதிகளில் முதல்வர்

நீர் நிலைகள் காய்ந்து, நில புலன்கள் வறண்டு, அனற்காற்று அலைக்கழிக்கிறது. விபரீதமான இந்த வெப்பச் சூழ்நிலையில்—ஆண் யானை ஒன்றும், பெண் யானை ஒன்றும் நா வறண்டு திரிகின்றன. எங்காவது-சிறிதளவாவது நீர் கிடைக்காதா என்று!

தொலை தூரம் நடந்த களைப்பினாலே அந்த யானைகள் தள்ளாடும்போது, சிறிது தூரத்தில், ஒரு பள்ளத்தில் கொஞ்சம் தண்ணீர் கிடப்பது தெரிகிறது. மிகச் சிரமத்தோடு மேலும் நடந்து அங்கே வந்து சேருகின்றன யானைகள். ஆண் யானையும், பெண் யானையும் ஆசை ஆசையாய்த் துதிக்கையை அந்தச் சிறிய நீர்ப்பள்ளத்தில் விடுகின்றன. சிறிது நேரமாயிற்று-குட்டை நீர் குறைந்த பாடில்லை!

வறட்சியோடு வந்த யானைகள் நீரைத் தொட்ட மாத்திரத்திலேயே நிம்மதிப்பட்டுவிட்டதாக நினைக்காதீர்கள். விஷயம் வேறு!

இரண்டு துதிக்கைகளும் அந்தக் குறைந்த நீர்க் குட்டையிலே விடப்பட்டாலும், நீர் குறையாமல் இருந்ததற்குக் காரணம்-ஆண் யானை குடிக்கட்டும் என்ற நினைப்பில் பெண் யானை தண்ணீர் குடிப்பதுபோலப் பாசாங்கு செய்ததாம். பெண் யானை குடிக்கட்டுமே என்கிற எண்ணத்தில் ஆண் யானை குடிப்பதுபோல் நடித்ததாம்!

இப்படியொரு காட்சி இலக்கியத்தில்!

தமிழிலக்கியம் காட்டிடும் அத்தகைய வறட்சிநிலை, இன்றைக்குத் தமிழகத்தில் படித்துப் படித்து மகிழும் காட்சியாக அல்ல; பார்த்துக் கலங்கும் காட்சியாகவே நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்னாலே திரும்பியிருக்கிறது. புதுக்கோட்டை -இராமநாதபுரம் போன்ற சில மாவட்டங்கள், பதினோரு மாவட்டங்களின் பெரும்பகுதிகள் கோடை தொடங்கும் முன்னாலேயே பாலைநிலம் போல் ஆகிவிட்டன.

அந்த மாவட்டங்களின் அவல நிலை காணவும், 'நீரின்றி அமையாது உலகு' என்ற வாசகம் மெய்யே என உணர்த்துவதாகக் காட்சி தரும் அம் மாவட்டத்தாரின் மனத்துயர் களையவும் மார்க்கம் காணவும், தக்கதைச் செய்யவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையில் சுற்றுப் பயணம் (17.3.81 - 18.3.81) மேற்கொண்டார்கள்.

## தஞ்சை மாவட்டம்

16.3.81 அன்று தஞ்சை மாவட்டம் நாகூரில், 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மருத்துவமனையைத் திறந்து வைத்து 'நாகூர் ஆண்டவர் அரசினர்' மருத்துவமனை, என்று பெயர் சூட்டிவிட்டு-கும்பகோணம் அருகிலுள்ள தாராசுரத்தில் ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல் நிலை குடிநீர்த் தொட்டியைத் திறந்து வைத்துவிட்டு-பாபநாசத்தில் பல இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்துவிட்டு-தஞ்சை அரண்மனையைப் பார்வையிட்ட பின், புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

## புதுக்கோட்டை மாவட்டம்

மறுநாள் கா[illegible] சரியாக [illegible] மணிக்கு அவர் [illegible] புதுக்கோட்டை மா[illegible]



நிலைமைகளை-அந்தக் கொடுமை தணிக்க மேற்கொள்ளப்பட்டு அரசு மூலம் விரைந்து நிறைவேற்றப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை — பார்வையிடும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்.

மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு, குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு சு.ஆர். கிருஷ்ணன், வறட்சி நிவாரணப் பணி தொடர்பான அதிகாரிகள் ஆகியோர் உடன் சென்றனர்.

ஆழப் படுத்தப்பட்டு வரும் கவிநாடு கண்மாய், பெருஞ்சினைக் கண்மாய் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். அன்னவாசலில் கிணறு தோண்டும் பணியைத் தொடங்கும் முகத்தான் வேட்டு வைத்தார்.

கோமந்திக் குளம், திருக்கஊரணி, பள்ளூர் கண்மாய், அன்னவாசல் சத்திரக்குளம் ஆகியவற்றை ஆழப்படுத்த நடந்து வரும் பணிகளையும், இலுப்பூரில் நடக்கின்ற கிணறு வெட்டும் பணியினையும் நேரில் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலையில் வேகம் வேண்டுமெனத் தன்னோடு வந்த அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

10.15 மணியளவில் விராலிமலை வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங்கே மக்கள் அளித்த மனமுவந்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு கீரனூர்சாலை வழியே மேலும் பயணம் தொடர்ந்தார்.

நீர் பழனி கண்மாய் - கீரனூர் குளம் தூர் வாரல், அவ்வையார் பட்டியில் நடக்கும் தன்னிறைவுத் திட்டப் பணிகள் ஆகியவற்றையும் முதல்வர் கண்டறிந்தார்.

அம்மா சத்திரம், சத்திய மங்கலம், திருவரங்குளம் ஆகிய இடங்களுக்கும் சென்று ஆங்காங்கே நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

அந்த ஒருநாளில் மட்டும் நான்கு சட்டமன்றத் தொகுதிகளும், ஆறு ஊராட்சி ஒன்றியக் கிராமங்களும் மேற்கொண்டுள்ள வறட்சி நிவாரணப் பணிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் பார்வையிடப்பட்டன.

## இராமநாதபுரம் மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அன்று மாலை 5.10க்குப் புறப்பட்டு காரைக்குடிக்குப் பயணமானார் மாண்புமிகு முதல்வர். இராமநாதபுரம் வறட்சி நிலையை - வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட காரைக்குடியில் இரவு முடிகிறது.

நீரின்றி விளையும் தாவரங்கள் எனச் சில உண்டே?

கள்ளி, சப்பாத்தி, பிரண்டை, கற்றாழை, கண்டங் கத்தரி-இன்ன பிற முட் செடிகள், எங்கு பார்த்தாலும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளக் கூடியதாக விளங்குகின்றன, இராமநாதபுரம் மாவட்டத்தில்!

ஊருக்கு வெளியே, எங்கோ தொலை தூரத்தில் உள்ள ஊருணி நீர் அந்தந்தக் கிராம மக்களால் மிகச் சிரமத்தோடு போய் எடுத்து வரப்பட்டு, அளவோடு பயன்படுத்தப்படுகிறது இந்த மாவட்டத்திலே!

கால்நடைகளின் உடலில் உள்ள எலும்புகளைத் தோல் நீக்காமலே எண்ணிவிட முடியும்! அத்தனை வறட்சி!

18.3.81 அன்று காலை 8 மணிக்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளுகிறார். இந்தப் பயணத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு காளிமுத்து அவர்களும் உடன் வந்தார்.



தேவகோட்டைச் சாலையில் உள்ள அரியக்குடி கண்மாய் முதலாவதாகப் பார்வையிடப்பட்டது.

கருமொழி, திருவாடானை ஊராட்சி ஒன்றியக் கண்மாய், செலுகை குளம் ஆழப்படுத்தும் பணி, இராசசிங்கமங்கலம் பெரிய கண்மாய், திருப்பத்தூர் கண்மாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய், சின்ன கீரமங்கலம் ஊருணி, முதுகுளத்தூர் கண்மாய், பேரையூர் ஊருணி, கமுதி ஊருணி, மான ஊர் ஊருணி ஆகியவை வறண்டு கிடப்பதையும், அவற்றை ஆழப்படுத்திட அரசு மூலம் எடுக்கப்பட்டு வரும் துரித நடவடிக்கைகளையும் பார்வையிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பரமக்குடி, அருப்புக்கோட்டை வழியே ஏறத்தாழ 350 கிலோ மீட்டர் தூரம் முழு மூச்சோடு பயணம் தொடர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை வழி, நெடுகிலும் நின்று ஏராளமான மக்கள் வரவேற்றார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகள் நடக்கும் இடத்திலெல்லாம், அவற்றைப் பார்வையிட்டதோடு மட்டுமின்றி 'இத்தப்பணி தொடங்கியது எப்போது? எவ்வளவு நாளில் முடிவடையும்? திட்ட மதிப்பீடு என்ன?' என்பன போன்ற பல விவரங்களை உடன் வந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்ததோடு அவர்கள் நினைவுகூரவும் செய்து, போர்க்கால நடவடிக்கைகள் போல இப்பணிகள் இன்னும் விரைவு படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

ஒவ்வொரு மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போதும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அந்தந்தத் தொகுதிச் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டு நிலைமைகளைப் பற்றி விளக்கிக் கூறியதோடு, சுற்றுப் பயணத்தில் தாங்களும் பங்கேற்றனர்.

—ராஜா

## உங்களுக்குத் தெரியுமா?

உடல் ஊனமுற்றோர்க்கு நமது நாட்டில் உதவிடும் நடவடிக்கை

* இந்திய மக்களில் பத்தில் ஒருவர் ஊனமுற்றவர். காது கேளாதவராகவோ, பேசமுடியாதவராகவோ கண்ணொளி இழந்தவராகவோ, மனநோயாளியாகவோ, கை அல்லது காலை இழந்த உடல் ஊனமுற்றவராகவோ கை, கால் இரண்டையும் இழந்தவராகவோ இருப்பர்.
* 1981-ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றோர் சர்வதேச ஆண்டாகும். தேசிய நீரோட்டத்தில் உடல் ஊனமுற்றோரை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கை இவ்வாண்டு துவக்கப்படும்.
* உடல் ஊனமுற்றோர் பற்றிய தகவலைச் சேகரிப்பதற்குப் பல ஆய்வுகளை நடத்திய முதல் நாடு இந்தியாவாகத்தான் இருக்கலாம். சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள், வருங்காலப் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு அடிப்படையாக இருக்கும்.
* சுய வேலைவாய்ப்பை ஊக்குவிக்கப் பயிற்சித் திட்டங்களை விரிவுபடுத்துவது, சலுகை வட்டி விதத்தில் பாங்கு கடன், தொழில் மற்றும் வர்த்தக நிலையங்களில் உடல் ஊனமுற்றோர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அதிக உதவி நிதி [illegible] யவை உடல் ஊனமுற்றோர் பலன் பெறுவதற்கான [illegible] நடவடிக்கைகளில் [illegible] தக்கவைகளாகும்.

# வறட்சி நிவாரணப் பணிகளைக் கவனிக்க

# உயர்மட்டக் குழு

தமிழ்நாட்டில் பதினொரு மாவட்டங்களில் வறட்சி நிலை நிலவுகிறது. வறட்சி நிவாரணப் பணிகள், போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளன. மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து, மேற்பார்வையிட்டு, துரிதமான முறையில் அவை நடைபெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிபுரிகிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகளை, மாநில அளவில் பரிசீலித்தல், ஒருங்கிணைத்தல், அவற்றைச் செயல்படுத்தும் பொழுது ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் போன்ற முக்கியப்பணிகளைக் கவனிக்க மாநில அளவில் ஓர் உயர் மட்டக்குழு அமைப்பது அவசியம் என அரசு கருதியது.

அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் 20 உயர் அதிகாரிகள் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவினைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் உயர் மட்டக்குழுவில் அங்கம் வகிப்போர் விவரம் வருமாறு:

1. தமிழக அரசின் இரண்டாவது செயலாளர்
2. வருவாய்த்துறைச் செயலாளர்
3. நிதித்துறைச் செயலாளர்
4. வேளாண்மைத் துறைச் செயலாளர்
5. உணவு-கூட்டுறவுத்துறைச் செயலாளர்.
6. பொதுப்பணித்துறைச் செயலாளர்
7. ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறைச் செயலாளர்
8. வருவாய்த்துறை நிருவாக ஆணையர்
9. தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர்
10. வேளாண்மைத்துறை இயக்குநர்
11. கால்நடைப் பராமரிப்புத்துறை இயக்குநர்
12. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர்
13. தலைமைப் பொறியாளர், பொதுப் பணித்துறை (நிலத்தடி நீர்ப் பிரிவு)
14. தலைமைப்பொறியாளர், பொதுப் பணித்துறை (நீர்ப்பாசனப் பிரிவு)
15. நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் தலைமைப் பொறியாளர்
16. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர்
17. உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையர்
18. வேளாண்மைப் பொறியியல்துறை தலைமைப் பொறியாளர்
19. தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமைப் பொறியாளர்

இக்குழு, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கூடும். அரசின் வருவாய்த்துறைச் செயலாளர் இக்குழுவின் அமைப்பாளர் ஆவார்.

பல்வேறு வகையான வறட்சி நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்தல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுதல், மாநில அளவிலும், மற்ற பல்வேறு அளவிலும் வறட்சி நிவாரணப் பணிகள் செம்மையாகவும், துரிதமாகவும் நடைபெற அறிவிப்புகள் பிறப்பித்தல், நிலைமையைச் சமாளிக்க ஆக்கரீதியான நடவடிக்கையெடுத்தல் ஆகிய பணிகளுடன், வறட்சி நிவாரணத் திட்டங்கள் குறித்து கொள்கை அளவிலான முடிவுகள் எடுக்க அரசுக்கு இக்குழு ஆலோசனையும் கூறும்.

அரசுச் செயலாளர்களும், அரசுத்துறைத் தலைவர்களும் இந்த உயர் மட்டக் குழு எடுக்கும் முடிவுகள் தொடர்ந்து மிக வேகமாகச் செயல்படுத்தப்படுகின்ற வகையில் வடிக்கைகள் எடுக்க வேண்டும்.





# தமிழ் நெறிக் காவலர்

# மயிலை சிவமுத்து

வையகம் போற்றும் வள்ளுவர் திருநாளில் வள்ளுவத்துக்கு இனிய எளிய உரையளித்த தமிழ் நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்கள் தோன்றினார். சிவமுத்து அவர்கள் தமிழ்நெறிக் காவலர், குழந்தை நண்பர், தமிழாசிரியர் தந்தை, தாய்மார் முகப் புரவலர் என்றெல்லாம் தமிழ்மக்களால் போற்றிப் புகழப் பட்டவர்.



நடுத்தரமான உயரம்; மாநிறம்; உழைப்பும் சிந்தனையும் காட்டும் ஒளிபடைத்த கண்கள்; ஒழுங்காகச் சீவப்படாத தலைமுடி; வலக்கையில் தடி; இடக்கையில் அழுக்கடைந்த பை, எளிய நான்கு முழ ஆடை; பெட்டி போடப் படாத கசங்கிய சட்டை ஆகிய இவையே சிவமுத்து அவர்களின் தோற்றத்தை நம் மனக் கண்ணில் நிறுத்தும் அடையாளங்கள்.

இளமைப்பருவத்தே மிடுக்கான நடையும் மேலான உடையும் பெற்றிருந்த தமிழ்நெறிக்காவலர் முதுமைக்காலத்தில் மேலே கூறிய தோற்றத்துடன் தமிழ்ப்புலவர்களின் நல்வாழ்வும், தமிழ்வளர்ச்சியும் தமிழ்ப் பெண்மணிகளின் முன்னேற்றமும், மாணவமணிகளின் நல்லெழுச்சியுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

அவரது கைப்பையில் என்னென்ன இருக்கும், தெரியுமா? செல்லும் வழியில் ஓய்வு கிடைக்கும்போது தமிழ் வளர்ச்சி பற்றி அன்பர்களுக்கு எழுத வேண்டிய கடிதங்கள், எங்கோ இருக்கும் புலவர் ஒருவர் தமது துன்பம் துடைக்குமாறு எழுதிய வேண்டுகோள் கடிதம், மாணவர் மன்ற ஆண்டறிக்கைகள், அமைப்பிதழ்கள், வெளியீடுகள் ஆகியவை இருக்கும். பழுதடைந்த பணப்பை ஒன்று இருக்கும். அதில் நண்பர் வீட்டுக் குழந்தைகளுக்கு வழங்கும் புதுக்காசுகள் இருக்கும். மிட்டாய்கள், சாக்குக் கட்டிகள் ஆகியவற்றையும் பார்க்கலாம். பலசரக்கு நிறைந்த இப்பையை அவர் தமது மூச்சுப் பையைப் போலப் போற்றி வந்தார். ஏறக்குறைய ஐந்து கிலோ எடையுள்ள பையை அவர் எவரிடமும் தூக்கி வரச் சொல்லாமல் தாமே சுமந்து செல்வார்.

நம் பேராசிரியர் சிவமுத்து அவர்கள் 14-1-1892 மாட்டுப் பொங்கலன்று மயிலை சிவானந்தர், விசாலாட்சி அம்மையார் ஆகியோரின் செல்வக் குழந்தையாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் முத்துக்குமாரசாமி. நீளமான இந்தப் பெயரைச் சுருக்கி, தந்தையாரின் பெயர்ச் சுருக்கத்தோடு ஊர்ப் பெயரையும் சேர்த்து மயிலை சிவமுத்து என வைத்துக் கொண்டார். 1938-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுச் சிறை வாழ்வு பெற்ற திருமதி மலர்முகத்தம்மையார் நம் பேராசிரியரின் அருமைத் தமக்கையார் என்பது குறிப்பிடத்தக்கது.

குடும்பத்தில் ஏற்பட்ட வறுமைச் சூழலால் சிவமுத்து அவர்கள் ஏழாம் வகுப்போடு பள்ளிக் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்துக் விட்டார். அக்காலத்தே சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்த அச்சகத்தில் அச்சுக் கோக்கும் பணியில் ஈடுபட்டார். ஓய்வு கிடைத்தபோதெல்லாம் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள் போன்ற நூல்களைப் பயின்று தமது தமிழறிவை வளர்த்துக் கொண்டார். பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் மணிதிருநாவுக்கரசர் அவர்களிடமும், பல தமிழ் இலக்கியங்களைக் கற்றுச் சிறந்த புலமை பெற்றார்.

1912-ஆம் ஆண்டில் ஆசிரியப் பயிற்சியில் சேர்ந்து வெற்றி பெற்று, 1914-ஆம் ஆண்டில் 'சென்னைச் சிவனடியார் திருக் கூட்டம்' நடத்திய சைவத் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார்; பின்னர் முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளியில், தாம் ஓய்வு பெறும் வரையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். சிவமுத்து அவர்கள் பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார், எஸ். எஸ். அருணகிரிநாதர், டாக்டர் இராசமாணிக்கனார் ஆகியோரின் கெழுதகை நண்பராக விளங்கினார். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மறைமலை அடிகளார், காவேரிப்பாக்கம் பேராசிரியர் நமச்சிவாய முதலியார் ஆகிய தமிழ் வளர்த்த சான்றோர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

புலவர் தணிகை உலகநாதன்

ஆசிரியப் பணியின் பயனாக இவர் பலபாடநூல்களும், துணைப் பாடநூல்களும் எழுதினார். நித்தில வாசகங்கள், நித்திலக் கதைகள், தங்க நாணயம், இளமைப் பருவம், சிவஞானம், நாராயணன், நல்ல எறும்பு, நல்ல குழந்தை, பரந்தாமன் முதலியவை இவர் குழந்தைகளுக்காக எழுதிய இலக்கியங்கள். சிவமுத்து அவர்களின் திருக்குறள்—இனிய எளியவுரை மாணவர் மன்றத்தின் வாயிலாக வெளிவந்து தமிழன்னையின் புத்தணிகளில் ஒன்றாகப்பொலிகின்றது. மேலும் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய பல கட்டுரைகளும் இவர் ஆசிரியராகப் பணியாற்றிய நித்திலக் குவியலில் வெளிவந்துள்ளது.

சிவமுத்து அவர்கள் ஏறக்குறைய முப்பதுக்கு மேற்பட்ட தமிழ் நூல்கள் இயற்றியுள்ளார்.

பெண்கள் சமுதாயம் சிறந்து விளங்கச் சிவமுத்து அவர்கள் மேற்கொண்ட பணிகள் குறிப்பிடத்தக்கவை. சென்னைப் பெத்துநாய்கன் பேட்டையில் தாய்மார் கழகம் ஒன்றை நிறுவி, டாக்டர் தருமாம்பாள், தாமரைக் கண்ணியார், மலர் முகத்தம்மையார் ஆகியோர் வாயிலாகத் தமிழ்ப் பெண்மணிகளுக்கு அரிய தொண்டுகள் ஆற்றினார்; திருக்குறள் வகுப்பு நடத்தினார். மகளிர் நல்வாழ்வு பற்றிய செய்திகளை விளக்கிக் கூறினார்.

சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராகவும் விளங்கி, தமிழ்ப் புலவர்களுக்கு நேரும் குறைபாடுகளை நீக்கும் வீர மறவராக விளங்கினார். தமிழ் நாட்டில் ஆங்கில ஆசிரியர்க்கு அளிக்கும் சலுகை, ஊதியம் முதலியவை தமிழாசிரியர்களுக்கும் கிட்ட வேண்டும் என்று கிளர்ச்சி நடத்தி அதில் வெற்றிமாலை சூடினார், ''தமிழாசிரியர் நிலையுயர்ந்தாலன்றி வயிறார உண்ண மாட்டேன்'' என உறுதிகொண்டு வெற்றி காணும் வரை சிற்றுண்டியும் தேநீருமே உண்டு காலம் கழித்தவர் சிவமுத்து அவர்கள்.

நம் நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் இருக்கிறது என்பதை உறுதியாக நம்பிய சிவமுத்து அவர்கள் தாம் தலைவராக இருந்து தமிழ்ப் பணியாற்றிய மாணவர் மன்றத்தின் வாயிலாக இளைஞர்களுக்கு அரும் பெரும் தொண்டுகள் ஆற்றியுள்ளார். அவரது தன்னலமற்ற தொண்டினால் இன்று மாணவர் மன்றம் ஐந்து இலட்சம் மதிப்புடைய சொந்தக்கட்டடமும் இரு இலவசப் பள்ளிகளும் பெற்றுள்ளது. ஆண்டுதோறும் இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்குத் தமிழில் முன்மாதிரித் தேர்வுகள் நடத்தி ரொக்கப் பரிசுகளும் நன்மதிப்பிதழ்களும் வழங்கிவருகிறது. பாப்பா வகுப்பு முதல் கல்லூரி வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆடல், பாடல், கதை, கட்டுரை, கவிதை, ஓவியம் முதலிய துறைகளில் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் பதக்கங்களும் வழங்கி வருகிறது. மாணவர் மன்றம் தமிழகத்தில் மட்டுமல்லாமல் மோரிசு, மலேசியா முதலிய நாடுகளிலும் தமிழ்மணிப் பட்டத் தேர்வு நடத்தி அயல் நாட்டவரிடையேயும் தமிழ்ப்பற்றினை ஊக்குவித்து வருகிறது. இவ்வாண்டில் மன்றத்தின் பொன்விழா மிகச் சிறப்பாக நடக்க இருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும்.

சிவமுத்து அவர்கள் பிற்காலக் குடிமக்களாகிய தற்காலக் குழந்தைகளிடம் பேரன்பு கொண்டவர். குழந்தைகள் பலர் எப்போதும் அவரைச் சூழ்ந்துகொண்டே கதையும்பாடலும்கேட்டு இன்பக் கடலில் திளைப்பார்கள். குழந்தைகளிடமும் குறள் நெறியைப் பரப்பிய பெருமை சிவமுத்து அவர்களுக்கு உண்டு. தம்மிடம் வரும் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் ஒரு திருக்குறள் ஒப்பிக்க வேண்டும். வாய் நிறையக் குறள் ஒப்பிக்கும் குழந்தைக்குக் கைநிறையப் பொரிகடலை வழங்கி அவர்களுக்குத் திருக்குறள் மனப்பாடம் செய்வதில் ஊக்கம் அளிப்பார்.

'நித்தம் ஒருகுறள் நெட்டுருச் செய்யின்
உத்தமராக உலகினில் வாழ்வர்'

என்று அடிக்கடி அவர்களுக்கு அறிவுறுத்துவார். ஏழு வயதுக் குழந்தைக்குக் கதையும் பாட்டும் கூறிக் கொஞ்சும்போது ''இவர் எழுபது வயதுக் குழந்தையோ!'' என்று பார்ப்பவர் நினைக்கத் தோன்றும்.

இவர் செயற்கரிய செய்த செந்தமிழ்ப் புலவர். நாட்டுக்கும் மொழிக்கும் நற்பணிகள் பல புரிந்து புகழ் மணம் வீசிய தமிழ்க் கதிரவனாகிய நம் சிவமுத்து, சில நாள்கள் உடல் நலிவுற்று 6-7-68 அன்று இயற்கை எய்தினார். அவரது பிரிவால் தமிழன்னை கண்ணீர் உகுத்தாள்; தமிழகமே தேம்பிற்று. சிவமுத்து அவர்கள் மறைந்தாலும் அவர்தம் செந்தமிழ்ப் பணிகள் என்றும் மறைவதில்லை. தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதுண்டோ?

## மேல் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ....

மேல் நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டம் மட்டுமே பெற்று தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களை பி.எட். பட்டம் பெற 23.2.81 முதல் இரண்டாண்டுக் கால அவகாசம் கொடுத்தும், அதுவரை தற்காலி[illegible] பணியில் தொடர்ந்து அ[illegible]களைப் பணியாற்ற அனுமதித்தும் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.காம், பட்டதாரி மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆண்டு முடிவில் பள்ளியிலிருந்து பணி நீக்கம் செய்யப்படாமலும் அவர்கள் பி.எட். தகுதி பெற இரண்டாண்டு அவகாசமும் அளிக்கப்பெறுகிறது.

## மாமண்டூரில் கம்பர்!

காவியம் செய்த கவிச்சக்கரவர்த்தி கம்பர் - கலை வளம் மிகுந்த காஞ்சிபுரத்திலிருந்து கால்நடையாகச் சென்றபோது தூசி மாமண்டூர் என்னும் குக்கிராமத்தில் தங்கி முனை மழுங்கியிருந்த தன்னுடைய எழுத்தாணியைக் கூராக்கிக் கொள்ள உலைக்களம் வைத்து நடத்திய சிங்கன் என்பவன் உதவியை நாடி இருக்கிறார். இந்தச் செய்தியை கவியரசர் கம்பரே தமது இனிய இராமகாதையில் எடுத்து விளக்குகிறார்:

''ஆழியான் ஆழி
அரன்மழுத்தா என்பான்
கோழியான் குன்றெறிய
வேலென்பான் ஊழியான்
அங்கை எழுத்தாணி
அருள் என்பான் மாமண்டூர்
சிங்கன் உலைக்களத்தே சென்று''

பா. வ. இராமச்சந்திரன்

வாழ வழிகாட்டும் வங்கி !

# கல்வி முதல் கழனிவேலை வரை

சமுதாயத்திலுள்ள அடித்தளத்து மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட-அவர்கள் சொந்தக் காலில் நின்று சுய வேலை வாய்ப்புப் பெற்றிட, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அத்துடன், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் நலிந்தவர்களுக்கு நல்வாழ்வு தருகின்ற வகையில் கடன் தந்து, அவர்கள் வாழ்க்கை மேம்பட உதவி செய்து வருகின்றது. இந்த வகையில் 'வாழ வழிகாட்டும் வங்கி' என்ற வரிசையில் முதல் கட்டுரையாக, 'பாங்க ஆப் இந்தியா' இடம் பெறுகிறது.

அதோ, அந்தப் பெண்மணியைப் பார்க்கிறோம்.

இரண்டு கைகளும் செயலற்ற நிலையில் காட்சியளிக்கிறார்.

எப்படியோ நாற்பதாண்டுகளைக் கடந்து விட்டார்.......

இதற்கு இடையில் அவர் பட்ட இன்னல்கள், இடையூறுகள் எத்தனையோ?

மெதுவாக அவரிடம் பேச்சு கொடுக்கிறோம்.

சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்தவர் எஸ். அலமேலு; பிறவியிலிருந்தே இரு கைகளும் செயலற்றுப் போய்விட்டதாம். தாய் தந்தையரற்ற இவரை உறவினர்கள் யாரும் கவனிப்பதில்லையாம். ஊனம் என்பதால் அவரை ஒதுக்கி வைத்துவிட்டார்களோ? ஆனால், அவரது பாட்டி இவரைக் காப்பாற்றி வந்திருக்கிறார். எத்தனை நாள்தான் பாட்டியின் அரவணைப்பில் வாழ முடியும்? பாட்டிக்கும் தள்ளாமை வந்தது. முன்புபோல ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை. பிழைப்புக்கு என்ன செய்வது? என்ற கேள்விக்குறி அவர்கள் முன்னே நின்றது.

அந்த இக்கட்டான சமயத்தில் ஒளிவிளக்காய் வந்து உதவியது ஒரு கரம். அதுதான் பாங்க் ஆப் இந்தியா (Bank of India).

இப்போது அலமேலு பேசக் கேட்போம்:

''இந்தப் பாங்க் எனக்குத் தக்க சமயத்தில் உதவியது. அதைக் கொண்டு, ஒரு வருஷமா ஒரு பெட்டிக் கடையை வைச்சி பிழைப்பை நடத்திக்கிட்டு வர்றேன். வியாபாரமு[illegible]மாரா நடக்குது. மாதா 25 ரூபாய் தவணைப் [illegible]த்தைத் தவறாம கட்டி வர்றேன். இப்போது ரெண்டாவது தடவையும் எனக்குக் கடன் கொடுத்திருக்காங்க. பாட்டியையும் துணைக்கு வைச்சிக்கிட்டு காலத்தை நிம்மதியாக ஓட்டிக்கிட்டு வர்றேன். இவங்க (பாங்க்) உதவலேன்னா, என் வாழ்க்கையே பாழாப் போயிட்டிருக்கும்'' என்று சொல்கிறார். நம் நெஞ்சம் நெகிழ்கிறது.

## பி. வி. கிரி

ஒளிவிடும் தாரகையைச் சின்னமாக வைத்திருக்கும் பாங்க் ஆப் இந்தியா, சமுதாயத்தில் அடித்தட்டில் இருக்கும் ஏழை எளியவர்களுக்கு உதவி வழங்குவதில் முனைந்து செயலாற்றுகிறது.

சென்னை கதீட்ரல் சாலையிலுள்ள இவ்வங்கியின் தென் மண்டல அலுவலகத்துக்குள் நுழைகிறோம். அங்கே நம்மை மகிழ்ச்சியுடன் வரவேற்பவர், துணைப் பொது மேலாளர் திரு பி. ஜி. பட்டேல் அவர்கள். அவர் மூலம் இந்த வங்கியின் வரலாற்றை [illegible] கொள்கிறோம்.

1906-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த வங்கிக்குத் தற்போது 75 வயதாகிறது! ஆம். பவள விழாவை அது கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இந்த வங்கியின் ஒவ்வொரு ஆண்டு வளர்ச்சிக் கட்ட[illegible]லும் வைப்பீடுகள் (Depo[illegible]) [illegible] பணங்கள் (Advances), முதலீடுகள் (Investment[illegible]) என்று பெருகிக் கொண்டே வருவதை நாம் பார்க்க[illegible]ம். 1980-ஆம் ஆண்டில், இது முதல் தரமான வங்கியாகத் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது.

சமூகப் பொருளாதாரத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு ஆவன செய்து வரும் இந்த வங்கியின் நோக்கமென்ன?

வேளாண்மை, சிறுதொழில் வளர்ச்சிக்கும், பெட்டிக்கடை வைத்தல் போன்ற சிறுவாணிகத்திற்கும் கடன் தந்து உதவுவதுடன், மாணவர்களின் உயர் கல்விக்கும் இது உற்ற நண்பனாக இருந்து உதவி செய்கிறது.

இந்த வங்கியின் பவளவிழா ஆண்டுடன் மிக நெருக்கமாக

வங்கியின் தென்மண்டலத் துணைப் பொது மேலாளர் திரு. பி. ஜி. பட்டேல், ஊனமுற்றவருக்குக் கடன் வழங்குகிறார்.





எஸ். அலமேலு

வுள்ள ஒரு பணி, இந்த 1981ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர்களுக்குப் பெரிய அளவில் உதவி புரிவதேயாகும்.

இதுவரை தமிழ்நாட்டில் பல்வேறு பணிகளுக்காக மொத்தம் ரூ. 2 இலட்சம் என்னும் அளவுக்கு, 121 உடல் ஊனமுற்றோர்க்கு இந்த வங்கி கடன் வழங்கியுள்ளது. இவ்வங்கியின் எழும்பூர் கிளை மட்டும் கில்டு ஆப் சர்வீஸ் மூலம் பரிந்துரைக்கப்பட்ட 46 உடல் ஊனமுற்றோர்களுக்குக் கடன்கள் வழங்கியுள்ளது. இவ்வாண்டில் பெரிய அளவில், உடல் ஊனமுற்றோர்களுக்கு இவ்வங்கியின் எல்லாக் கிளைகளும் உதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்காக இவ்வங்கி, ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு 1248 இலட்ச ரூபாய்களை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த வங்கி, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. அவற்றுள் ஒன்று 'கிரகலட்சுமி திட்டம்' என்பதாகும். இதன் மூலம் வீட்டு வேலை செய்யும் பெண்மணிகள் மற்றும் விதவைகள் பயன்பெறுவர். அவர்கள் சுயமாகச் சம்பாதிக்கும் வகையில் பின்னல், தையல், பொம்மை செய்தல் போன்ற தொழில்களுக்கு இவ்வங்கி கடனுதவி வழங்கும்.

இரட்டைப் பயன் பொது வைப்பீட்டு மற்றும் ரொக்கப் பத்திரத் திட்டம் (Double Benifit Deposit and cash certificate Scheme) ஏற்கெனவே இங்குஅறிமுகப்படுத்தப்பட்டு அமலுக்கு வந்தது போல, பாங்க் ஆப் இந்தியா 'நன்கொடைக் காசோலை'யையும் வெளியிடவிருக்கிறது. இவையன்றி திருமணம், வீடு கட்டுதல், கல்வி போன்றவற்றுக்கு உதவுகின்ற பல நல்ல திட்டங்களும் தீட்டப்பட்டு, அவை விரைவில் செயல்படவிருக்கின்றன.

தென்மண்டலத்தில் - கர்நாடகாவில் 37 கிளைகளும், கேரளாவில் 11 கிளைகளும், தமிழ்நாட்டில் 47 கிளைகளும், பாண்டிச்சேரியில் ஒன்றுமாக மொத்தம் 96 கிளைகள் உள்ளன.

இந்த வங்கியின் மூலம் பலர் கடனுதவிப் பெற்றுள்ளார்கள். அவர்களில் சிலரைச் சந்தித்தோம்.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பு இவை இருந்தால் எதிலும் வெற்றி பெறலாம் என்பதை அவர்கள் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

சென்னை ஆழ்வார் திருநகரிலுள்ள வளசரவாக்கத்தில் 'நாக்மென் எண்டர்பிரைசஸ்' என்னும் தொழிற் நிறுவனத்தின் உரிமையாளர்கள் திரு வி.ஜி.சுப்பிரமணியம், திரு வி. நாகேந்திரன் என்ன சொல்கிறார்கள்?

பொறியாளர்களான இவர்கள் சொந்தக் காலில் நிற்க ஆசைப்பட்டார்கள். அதற்காக விடாமுயற்சியுடன் உழைத்தார்கள். ஆனால், முதலீடு செய்ய அவர்களுக்குப் போதிய வசதி இல்லை. அப்போதுதான் அவர்கள் இந்த வங்கியை நாடினார்கள். வங்கியும் அவர்களுக்குக் கடன் தந்து உதவியது. 1972ல் தொழிற்கூடம் துவங்கியது. இந்தக் கூடத்தில் 30 பேர் பணியாற்றிவருகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அரசினர் பல்தொழில் பயிலகத்தில் படித்த பெண்கள் சிலரும் இங்குப் பணிபுரிகின்றனர்

''பல்வேறு தொழில்களுக்குத் தேவைப்படும் கருவிகளை நாங்கள் இங்குத் தயார் செய்கிறோம். ஸ்டீல் பிளாண்ட், உரத் தொழிற்சாலை, அனல் மின் நிலையம், காகித ஆலை போன்றவற்றுக்குத் தேவையான கருவிகளை நாங்கள் தயார் செய்கிறோம். இரும்பு உருக்காலை போன்றவற்றில் நீராவி அல்லது வெப்பம் எவ்வளவு உள்ளது என்பதைக் கண்டறியும் கருவிகளும் ( Industrial Thermometer ) இங்குத் தயாராகின்றன.

Platinum Jubilee Year

1906 1981

75

YEARS OF SERVICE

''முதலில் இந்த வங்கி எங்களுக்கு ரூ. 50,000 கடனாகத் தந்து உதவியது. அத்தொகையைத் தவணை முறையாகத் தவறாமல் செலுத்திவிட்டோம். இப்பொழுது மீண்டும் எங்களுக்குக் கடன் தந்துள்ளார்கள். இன்று தொழிலில் நல்ல ஆதரவும், வருமானமும் இருந்து வருகிறதென்றால், அதற்கு மூலகாரணம் இந்த வங்கி என்று சொல்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.''

முப்பத்திரண்டு வயதுள்ள திரு பி.ஆர். பிச்சுமணி. இரு கண் பார்வையும் சரியாகத் தெரியாதவர். பி.இ., பட்டம் பெற்றுள்ள இவர் கல்லூரியில் படிக்கும்போது நன்றாகத்தான் இருந்தாராம். கண்பார்வை நன்றாகத் தெரிந்ததாம். பிறகு, மெல்ல மெல்ல பார்வை மங்கியதாம்-எவ்வளவோ பாடுபட்டும் பார்வை திரும்பவில்லையாம். இவர் இப்போது சென்னைக் கோடம்பாக்கத்தில் ஒரு தொழிற்கூடம் ஒன்றை நிறுவி, ஆட்டோமொபைல் சம்பந்தமான உதிரிபாகங்களைத் தயாரிக்கிறார்.

''நான் படித்து முடித்ததும் சொந்தமாகத்தொழில்தொடங்க எண்ணினேன். எனக்கு எந்த வசதியும் இல்லை. ஆர்வம் மட்டும் இருந்தது. அந்தச் சமயத்தில் கைகொடுத்து உதவியது இந்த வங்கி. இப்போது என்னிடம் எட்டுப்பேர் வேலை செய்கிறார்கள். டி. வி. எஸ். ஜாகாஸ் போன்ற நிறுவனங்களுக்கு நாங்கள் உதிரி பாகங்களை தயாரித்து அனுப்புகிறோம். இத் தொழிலை மேலும் வளர்க்கத் திட்டம் உள்ளது'' என்று கூறும் திரு பிச்சுமணியிடம் ''பார்வை சரியில்லையே! உங்களால் எப்படி வேலைசெய்ய முடிகிறது?'' என்று கேட்டதற்கு, ''பழக்கம்தான் காரணம், ஆகவே, வேலைக்கு எந்தத் தடையும் இல்லை. வெளியில் போக வரத்தான் சற்று சிரமம்; உள்ளுக்குள் எனக்கொன்றும் அப்படிக் கஷ்டமில்லை. பார்வை எனக்குக் குறைவாகப் படவில்லை...'' என்று அவர் தன்னம்பிக்கையுடன், தலைநிமிர்ந்து சொன்னது மகிழ்ச்சியாக இருந்தது.

அமைந்தக்கரையைச் சேர்ந்த திருமதி ரஹ்மத்பேகம், பாய் முடையும் தொழில் செய்கிறார். இந்த வங்கி இவருக்கு ஆயிரம் ரூபாய் கடன்கொடுத்தது. அதைக் கொண்டு இவர், தம் தொழிலை மேலும் வளப்படுத்திக் கொண்டுள்ளார்.

பாய் முடையும் தொழிலில் இவர் குடும்பத்தில் எல்லாரும்





ஜி. வாசுதேவன்



சி. பாலகிருஷ்ணன்

ஈடுபட்டிருக்கிறார்கள். செய்த பாய்களை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாக விற்பவர் இவரது கணவர். ஒரு பாயின் விலை 10 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரை இருக்கிறது. ஒரு நாளைக்கு 50 ரூபாய் வருகிறதாம். இதில் குடும்பச் செலவு போக, மீதத்தை இவர் சேமிக்கின்ற நல்ல பழக்கத்தையும் கொண்டுள்ளார். இவர் மாதம் ரூ 100 தவணைத் தொகையை தவறாமல் செலுத்தி வருகிறாராம்.

இவரைப்போல வைக்கோல் வியாபாரம் செய்யும் திருமதி பொன்னம்மாள் (என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம்), துணி வியாபாரம் செய்யும் திருமதி சாமந்தி (சேத்துப்பட்டு) மற்றும் உழைக்கும் மகளிர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி கே. வள்ளியம்மாள், திருமதி கே. ராஜேஸ்வரி ஆகியோரும் இந்த வங்கியின் மூலம் கடனுதவி பெற்று தம் குடும்பத்தில் துண்டுவிழும் பட்ஜெட்டைச் சரி செய்கின்றனர்.

ஒரு நிறுவனத்தில் பணியாற்றி பிறகு சொந்தமாகத் தொழில் செய்யவேண்டும் என்று கனவு கண்டவர். திரு சி. பாலகிருஷ்ணன். சென்னை அம்பத்தூர் 'சிட்கோ' தொழிற்பேட்டையில் தற்போது இயந்திரக் கருவிகள் பராமரிப்பு (Machine Tool Maintenance) சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டுள்ளார். அவர் கனவு நனவாகிவிட்டது. அவர் தொழிலைத் தொடங்க இந்த வங்கி கடன் தந்தது. அதனைக் கொண்டு தன் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டுள்ள இவர், தாம் தயாரிக்கும் பொருள்களை டான்சி, டி.வி.எஸ்.பெல் (BHEL) போன்ற நிறுவனங்களுக்கும் வழங்கி வருகிறார்.

அமைந்தக்கரையில் இருப்பது ''கார்த்திக் இண்டஸ்டிரீஸ்'' நான்கு சகோதரர்கள் இதனை நடத்தி வருகிறார்கள். இவர்களில் மூத்தவர் திரு ஜி. வாசுதேவன் சொல்கிறார் :

''எங்கள் தொழில் இன்று வளம் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம், எங்கள் உழைப்பு ஒரு பக்கம் இருந்தாலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கியான பாங்க் ஆப் இந்தியாவையே சாரும். அவர்கள் எங்களுக்குக் கடன் தந்தார்கள். அதைக் கொண்டு இயந்திரங்கள் வாங்கி எங்கள் தொழிலை வளர்த்துக் கொண்டோம்'' என்று கூறும் இவர், Flanges என்னும் கருவியைத் தயாரித்து, கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்கும் அனுப்புகின்றனர். இது உரத் தொழிற்சாலை, காகித ஆலை முதலானவற்றுக்குப் பயன்படுமாம். இவையன்றி, இவர்கள் பெட்ரோல் டாங்க், டீசல்டாங்க், வாட்டர் டாங்க்குகளையும் தயாரிக்கிறார்கள்.

பாங்க் ஆப் இந்தியாவின் தென்மண்டல அலுவலகத்தின் பொறுப்பு அலுவலர் திரு டி.என். ராமகிருஷ்ணன் அவர்களும், தொழில் நுட்ப அலுவலர் திரு வி.சி. சுவாமிநாதன் அவர்களும் என்ன கூறுகிறார்கள்?



ரஹ்மத் பேகம்

பொன்னம்மாள்





வி. ஜி. சுப்பிரமணியம்



பி. ஆர். பிச்சுமணி

''இந்த ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாதலால், அவர்களுக்கு நிறைய உதவிகள் செய்யத் திட்டங்கள் தீட்டி, அவற்றை விரைவில் செயல்படுத்தவிருக்கிறோம்.

'உழைக்கும் மகளிர் சங்கம், கில்டு ஆப் சர்வீஸ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் (MMDA) பெண்ணுரிமை இயக்கம், ஜெர்மன் தொழு நோயாளர் மையம், மீனவர் நல்வாழ்வு ஆகியவற்றுக்கு நாங்கள் கடனுதவி செய்து வருகிறோம். ஏழை எளியவர் வாழ்க்கைத் தரம் உயரவும், சமுதாயத்தில் அவர்கள் சமநிலை பெறவும் நாங்கள் எங்களாலான உதவிகளைச் செய்து வருகிறோம். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.''

இப்படி சிறு சிறு தொழில்களுக்கு மட்டுமின்றி, பெருந்தொழில்களுக்கும் இந்த வங்கி கடன் தந்து உதவுகிறது. படித்து வேலையின்றித் தவிக்காமல், சொந்தக் காலில் நிற்க-சுயவேலை வாய்ப்பு பெற ஆர்வமுள்ளவர்களுக்கு இந்த வங்கி உற்ற நண்பனாய் இருந்து உதவுகிறது. குடும்ப வருமானம் போதாமல் அல்லல்படும் இல்லத்தரசிகளுக்கு வீட்டிலிருந்து கொண்டே சிறு வாணிகம் நடத்த இந்த வங்கி உதவுகிறது. சுருங்கச் சொன்னால், கல்வி முதல் கழனி வேலை வரை ஈடுபட்டுள்ள ஏழை எளியவர்களுக்குத் தக்க சமயத்தில் அவர்கள் காரியம் யாவிலும் [illegible] கொடுத்து உதவுகிறது. [illegible] வங்கி என்றால், அது [illegible]

# மதுரையில்
# அரசு அருங்காட்சியகம்

மதுரையில் நிறுவப்பட்டிருக்கும் அரசு அருங்காட்சியகம், அருங்காட்சியகங்கள் துறையின் மூன்றாவது மாவட்ட அருங்காட்சியகமாகும். ஒவ்வொரு மாவட்டத் தலைமையகத்திலும் ஒரு மாவட்ட அருங்காட்சியகம் அமைத்தல் என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப இது அமைக்கப்பட்டது. தற்பொழுது மதுரையில் உள்ள காந்தி நினைவு அருங்காட்சியக வளைவில், உப்பு யாத்திரை பொன் விழாக் கூடத்தில் இந்த அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது. இது இம் மாவட்டத்தின் எல்லாக் கூறுகளையும் பிரதிபலிக்கவும் மாவட்டத்தின் அருங்காட்சியக நிகழ்ச்சிகளுக்கு மைய இடமாகவும் விளங்கும்.

மதுரைக்கூடம் என்று அழைக்கப்படும் நுழைவுக்கூடம் மதுரை மாவட்டத்தின் முக்கிய கூறுகளைக் கூறுகின்றது. இக் கூடம், இம் மாவட்டத்தின் இயற்கை அமைப்புகள், நிருவாகப்பிரிவுகள், வரலாறு, நினைவுச்சின்னங்கள், சுற்றுலா இடங்கள் ஆகியவற்றை விளக்கிக் காண்பிக்கின்றன. இவை நிலப்படம் மூலமாகவும், நிழற்படங்கள் மூலமாகவும் காட்டப்பட்டுள்ளன.

அடுத்து இருப்பது சிற்பக் கூடம். இங்கு ஒரு சிறிய பல்லவர் கால கஜலட்சுமி சிற்பமும், ஒரு பெரிய பாண்டியர்கால விஷ்ணுவும் தொடக்கக் காட்சிப் பொருட்களாக உள்ளன. மேலும் மூன்று கற்சிற்பங்களும் இருபத்தி நான்கு மரச்சிற்பங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**டி.பி.எஸ். சுந்தரநாதன்**
செய்தி-மக்கள் தொடர்பு
அலுவலர்,
மதுரை மாவட்டம்.

பிறகு படிமங்கள் மற்றும் நாணயங்கள் கூடத்தைக் காணலாம். பழந்தமிழ்க் கலைஞர்களின் படிமக்கலை கைத்திறனைக் காட்ட சில சோழர்காலப் படிமங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. வெள்ளாளர் அகரத்திலிருந்து வந்த ஒரு பெரிய நடராசர் சிற்பமும், மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர், சோமாஸ்கந்தர் ஆகிய சிற்பங்களும் இங்கு காண தலைசிறந்தவை ஆகும். வலப்புறத்தில் பல சிறிய படிமங்கள் இரண்டு காட்சிப் பெட்டிகளில் கவினுற அமைக்கப்பட்டுள்ளன. கூடத்தின் இடப்புறத்தில் முப்பத்தியொரு உலோக மாதிரி நாணயங்கள் புகைப்படங்களுடனும், அழகாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் வரலாற்றை இங்குக் காணப்படும் அரசு வம்சங்களின் நாணயங்கள் மூலம் நாம் அறிகிறோம்.

இதற்குப் பின் மானிடவியல் கூடம் இருக்கின்றது. இங்கு தமிழ்நாட்டில் கிடைத்த வரலாற்றிற்கு முற்பட்ட கற்களில் சில வைக்கப்பட்டுள்ளன. இவை சுமார் 125000 முதல் 500000 வரையான ஆண்டுகளைச் சார்ந்தவையாகும். சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு பெரிய முதுமக்கள் தாழியும், மதுரை மாவட்ட மலைவாழ்மக்களின் சில பொருட்களும், மரத்தில் செய்த மூன்று வாகனங்களும் கூட இக்கூடத்தில் இருக்கின்றன.



பிறகு இயற்கை அறிவியல் கூடத்திற்குச் செல்லலாம். இங்கு தற்கால விஞ்ஞான கருத்துக்களுக்கு ஏற்ப புவியியல், தாவரவியல், விலங்கியல் ஆகியவை ஒன்றிற்கொன்று தொடர்புள்ளவை என்பதைக் காட்ட இயற்கைச் சூழ்நிலைக் காட்சிப்பெட்டிகள் மூலம் ஒரு முயற்சி செய்யப்பட்டுள்ளது. அவைகள் பூமியின் ஐந்துவகை சூழ்நிலையைக் காட்டுகின்றன. அதாவது கடல், வெப்பநிலைக்காடு, புல்வெளி, பாலைவனம், பனிநிலம் ஆகியன ஆகும். ஆரம்பத்தில் பின்புறத்தில் சூரியமண்டலம் காட்டப்பட்டுள்ளது. அதன்கீழ் ஒரு மலைப்பகுதி மாதிரி செய்யப்பட்டுள்ளது. அங்கு முக்கியமான கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் கிடைத்துள்ள புதைபடிவங்கள் அடுத்துள்ள காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன. இக்காட்சிப் பெட்டிகளுக்கு எதிரில் உள்ள பலகையில் சில தாதுப் பொருட்களும், தாவர விலங்குக குடும்பங்களின் வரைபடங்களையும் காண்கிறோம்.

> **1969 எஸ்.எஸ்.எல்.சி. பாடத் திட்டப்படி தேர்வு பெறாத மாணவர்கள் மீண்டும் தேர்வு எழுத அனுமதி**
>
> 1969 எஸ். எஸ். எல். சி. பாடத்திட்டப்படியும், நீட்டிக்கப்பட்ட எஸ். எஸ். எல். சி. திட்டப்படியும் பயின்று, 1980 அக்டோபர் வரை தேர்வு பெறாத மாணவர்கள் அனைவரும் எந்தெந்தப் பாடங்களில் 35%க்குக் குறைவாக மதிப்பெண் பெற்றுள்ளார்களோ (விருப்பப் பாடம் தவிர), அந்தப் பாடங்களில் மட்டும், 10 ஆண்டு எஸ். எஸ். எல். சி. பாடத்திட்டப்படி 1981 அக்டோபரிலிருந்து எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத அரசு அனுமதித்துள்ளது. இவ்விதம் தேர்ச்சி பெறும் மாணவர்கள் 10 ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேறியவர்களாகக் கருதப்பட்டு, அப்பாடத் திட்டப்படி அவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.



மதுரையின் தொழிலகங்கள் அடுத்துள்ள கூடத்தில் இடம் பெறுகின்றன மூன்று முன்னணி தொழிலகங்களின் டி.வி.எஸ்., மதுரை கோட்ஸ், மற்றும் பென்னர் பணிகள் புகைப்படங்கள் மூலமாகவும், அந் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் மூலமாகவும் விளக்கப்பட்டுள்ளன.

பல்வேறு தலைப்புகளைக் கொண்ட அருங்காட்சியகத் துறையின் வெளியீடுகள் பொது மக்கள் அறிவதற்காக காட்சிப் பெட்டியில் உள்ளன .இவை விற்பனைக்குக் கிடைக்கும்.

அடுத்ததாக உள்ளது ஓவியக் கூடம். இதில் மரபு வழி ஓவியங்களும், சமகால ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மதுரை தலப்புராணத்தைத் தழுவிய பதினோரு சிறிய ஓவியங்களும், மரத்தின் மீதும், அபிரகத்தின் மீதும் தீட்டிய தஞ்சாவூர் ஓவியங்களும், இராமாயணக் காட்சிகள் அடங்கிய ஓவியமும், தமிழ்நாட்டின்மரபு வழி ஓவியக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும். அடுத்துள்ள பலகையில் ஏழு ஓவியங்களும், இரண்டு சிற்பங்களும் தமிழ்நாட்டின் சமகாலக் கலைக்குச் சான்றுகளாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில மதுரை மாவட்டத்தின் கலைஞர்களால் உருவாக்கப்பட்டவை.

இவ்வாறு சிறிய கூடத்தில் அருங்காட்சியகத் துறையினரால் அமைக்கப்பட்ட மதுரை அரசு அருங்காட்சியகம். இயன்றவரை மதுரை மாவட்டத்தின் சிறப்பு அம்சங்களை [illegible] காட்ட முயல்கிறது.

# இதய நோய்ச் சிகிச்சைக்கு புதிய இயந்திரம்

**தமிழ்ப்பித்தன்**

மனித உடலின் வெளிப்புற நோய்களை நம்மால் எளிதில் அறிந்துகொள்ள முடியும்; உட்புற நோய்களைக் கண்டறிவது உட்புற உறுப்புகள் செயலாற்றும் திறத்தை அறிந்து கொள்வது மனித இனத்திற்கு ஒரு பிரச்சினையாக நெடுங்காலம் இருந்தது. அறிவியலின் ஆற்றல்-உட்புற உறுப்புகளைத் துல்லியமாகக் கண்டறிவதற்கு வகை செய்தது. 'எக்ஸ்ரே' என்னும் புதிர்க்கதிர் கண்டு பிடிக்கப்பட்டது. மருத்துவ உலகிற்கு அது பெரும் பேறாக விளங்கியது. எலும்பு முறிவுகளைக் கண்டு பிடிப்பதும் நுரையீரலின் இயக்கத்தைத் தெரிந்து கொள்வதும் இதய நோய்களைக் கண்டறிவதும் எளிதாகியது.



இதயத்தின் இரத்த ஓட்டத்தைச் சரிவரத் தெரிந்து கொள்வதற்கு இ.சி.ஜி என்னும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இதயம் சுருங்கி விரியும் போது ஏற்படும் இரத்த ஓட்டத்தை - வரைபடம் வாயிலாக இந்தக் கருவி தெரிவிக்கிறது. என்றாலும் இதயத்தைக் குறித்து மேலும் துல்லியமாகத் தெரிந்து கொள்வதற்கு இ.சி.ஜி போதுமானதல்ல என்புதால் மருத்துவ உலகம் மென்மேலும் ஆய்வுப் பணியில் இறங்கியது.

அறிவு ஒரு தொடர்கதை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதற்கிணங்க — அறிவுலகம் தொடர்ந்து முனைப்புடன் பணியாற்றியதன் காரணமாகத் தற்போது இதயநோய்ச் சிகிச்சைக்குப் புதிய கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'எக்கோ கார்டியோ கிராம்' என்று வழங்கப்படும் இந்தக் கருவி சிறப்புத் தன்மைகள் கொண்டுள்ளது. பெல்ஜியத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இயந்திரம் இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னை பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

## நிதியமைச்சர் உரை

பிப்ரவரி 25 ஆம் நாளில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்களின் தலைமையில், மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அக்கருவியினை இயக்கி வைத்தார். அந்த விழாவில் அவர் தெரிவித்தார்.

"கல்விக்கு அடுத்தபடியாக மருத்துவத்துறைக்கு அதிகமான தொகை ஒதுக்கப்படுகிறது. சென்ற ஆண்டு 96 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

"இந்தியாவில் மனிதர்களின் சராசரி வயது 27 ஆக இருந்தது. அது இன்றைக்கு 53 வயதாக ஆகியுள்ளது. இதற்கு மருத்துவத் துறையின் முயற்சியே காரணம்.

"பொதுவாக உடல் உறுப்புகளில் எல்லாம் அதிகமான அளவில் திட்டு வாங்குவது இதயம் தான்! 'உனக்கு இதயம் இருக்கிறதா? உன் இதயம் என்ன கல்லா?' என்றெல்லாம் ஒரு மனிதனைப் பார்த்து மற்றொரு மனிதன் கோபத்திலே கேட்கிறான். அந்த அளவிற்குத் திட்டு வாங்கும் இதயம் எப்படிப் பணியாற்றுகிறது என்பதை இந்தக் கருவியின் வாயிலாக எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்."

## நல்வாழ்வுத்துறை அமைச்சர் உரை

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

"அரசு மருத்துவ மனைகளில் நிறுவப்படும் எத்தகைய விலை உயர்ந்த சாதனங்களும் ஏழை நடுத்தர மக்களுக்குப் பெரிதும் பயன்படவேண்டும். இத்தகைய கருவிகளை நாமும் பயன்படுத்தலாம் என்பதை நாம் அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும். இத்தகைய நவீன சாதனங்கள் மருத்துவத் துறைக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்."

மருத்துவ உலகிற்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள இந்தக் கருவி 8 இலட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது. சென்னை மருத்துவமனையில் இதய நோய்ப் பிரிவின் தலைவரும் சென்னை மருத்துவக் கல்லூரியின் இதய நோய்த் துறைப் பேராசிரியருமான டாக்டர் சி. இலட்சுமிகாந்தன் அவர்கள், மருத்துவ சம்பந்தமாக வெளி நாடுகளுக்குச் சென்ற சமயத்தில் இந்தக் கருவி குறித்து அறிந்தார். இது தமிழகத்திற்குக் கிடைத்தால் இதய நோய்ச் சிகிச்சைக்குப் பேருதவியாக இருக்கும் என்பதை உணர்ந்து, தமது கருத்தை, தமிழக அரசுக்குத் தெரிவித்தார். நற்பணிகளை முனைந்து செய்வதில் முன்னணியில் இருக்கும் தமிழக அரசு ஒப்புதல் அளித்தது. அதன் பயனாக இன்று சென்னை மருத்துவமனையில் இந்தப் புதிய கருவி நிறுவப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும் 'எக்கோ கார்டியோ கிராம்' என்னும் இயந்திரத்தின் செயல்முறையைப் பார்வையிடுகின்றனர்.

ஒலி அலைகளினால் இயங்கும் எலக்ட்ரானிக் கருவியான இந்த இயந்திரத்தில் பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன. பொதுவாக ஒலி அலைகள் வினாடிக்கு 20 முதல் 20000 கிலோசைக்கிள் வேகத்தில் செல்கின்றன. அந்தக் கருவியில் வினாடிக்கு 35000 கிலோசைக்கிள் வேகத்தில் செல்வது குறிப்பிடத்தக்கது. இந்தக் கருவியில் 62 கிரிஸ்டல்கள் உள்ளன.

ஐந்தடி உயரம் கொண்ட இந்த இயந்திரத்தின் தலைப் பகுதியில் தொலைக் காட்சிப் பெட்டி என்று உள்ளது. இந்தக் கருவியிலிருந்து இணைப்புக் குழாய் ஒன்று செல்கிறது. இதன் முனையில் 3 அங்குல உயரம் உள்ள சிறுபெட்டி போன்ற 'ட்ரான்ஸ்டியுசர்' என்னும் கருவி உள்ளது. நோயாளியின் மார்புப் பகுதியில் ஜெல்லி என்று சொல்லப்படும் ஒரு வகைப் பிசினைத் தடவி அதன்மீது இந்த 'ட்ரான்ஸ்டியுசரை' இணைத்தால், இதயத்தின் உட்புறப் பகுதிகள் தொலைக்காட்சிப் பெட்டியில் தெரிகின்றன. திரைப்படம் போலத் தொடர்ந்து தெரிந்து கொண்டே இருக்கிறது. இதயத்தின் மிக நுண்ணிய பகுதிகள் இரத்த சுத்திகரிப்பு அறைகள், மூடித் திறக்கும் வால்வுகள்- இரத்த ஓட்டம், இதயத்துடிப்பு ஆகிய அனைத்தும் தெளிவாகத் தெரிகின்றன. 'ட்ரான்ஸ்டியுசரை' மார்புப்பகுதியில் பல்வேறு இடங்களுக்கும் நகர்த்திக்கொள்ளலாம். இதன் மூலம் இதயத்தின் எந்தப் பகுதியை வேண்டுமென்றாலும் துல்லியமாகக் காணலாம். இதயத்தின் உருவப் படத்துடன் சோதனைக்குள்ளாக்கப்படும் நோயாளியின் எண், அவரது இதயத்துடிப்பின் வரைபடம்-இதய அறைகளின் பரிமாணம்-இதயச் சுவர்களின் கனம் ஆகிய விவரங்கள் எல்லாம் தொலைக் காட்சிப் பெட்டியில் தொடர்ந்து தெரிகின்றன.

அதன் கீழே சிறிய அளவில் உள்ள திரையிலும் இதயத்தின படம் ஒரே நேரத்தில் தெரிகின்றது. தொலைக் காட்சிப் பெட்டியில் தெரியும் உருவப்படத்தை விட இதில் தெரியும் உருவம் சிறியதுதான்; என்றாலும் மிகத் துல்லியமாக- தெளிவாகத் தெரிகிறது.

காட்சியளித்துக் கொண்டே இருக்கும் படத்தைக் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்திப் பார்க்கலாம். அதற்குரிய அமைப்பு இந்தக்கருவி யில் உள்ளது. தொலைக்காட்சிப் பெட்டியில் தெரியும் உருவத்தை புகைப்படமாக்கிப் பார்க்க விரும் பினால் அதற்குரிய சுவிட்சை இயக்க வேண்டும். சில வினாடி களில் இதயத்தின் செயற்பாடு வளவளப்பான தாளில்அச்சடித்த படமாக வெளியே வந்து விடு கிறது. அதில் உள்ள ஓர் அமைப்பை இயக்கிவிட்டால்,அது வீடியோ டேப் எடுத்துவிடுகிறது. அதனை திரைப்படம் போல எத்தனை முறை வேண்டுமென் றாலும் திரையிட்டுப் பார்த்து, நோயின் தன்மை குறித்துத் தெளிவாக ஆய்வு செய்ய முடியும்.

இந்த இயந்திரத்தின் மூலம் நோயாளியின் இதய இயக்கத்தை அறிந்து கொள்ளும்போது, அவ ருக்கு எந்தவிதச் சிரமமும் கிடையாது என்பது குறிப்பிடத் தக்கது. பொதுவாக அடிக்கடி எக்ஸ்ரே எடுப்பதனால் கதிரியக் கப் பாதிப்பு ஏற்படக்கூடும் என் றொரு கருத்து நிலவுகிறது. நரம் பின் வழியாக ஒருவகை திரவ மருந்தை உட்செலுத்தி இதய இயக்கத்தை அறிந்து கொள்ளும் முறையில் நோயாளி தொல் லைக்கு உட்படுத்தப்படுகிறார். ஆனால் இந்தக் கருவியின் மூலம் சோதனை செய்யப்படும் போது—நோயாளி ஒரு சிறிது கூட பாதிப்போ தொல்லையோ அடைவது கிடையாது; உடலுக்கு வேதனை கிடையாது; பிறந்த குழந்தை முதல் தளர்நடை போடும் முதியவர்கள் வரை இந்தக் கருவியின் மூலம் அனை வரும் சோதனை செய்யப்பட லாம். ஆபத்தே இல்லாதது; எக்ஸ்ரே, இ.சி.ஜி. ஆகியவை எடுப்பதற்குரிய கட்டணத்தை விட இதற்குக் கட்டணம் குறைவு.

மொத்தத்தில் புதுமை நிறைந்த இந்தக் கருவி-மருத்து வர்களின் பணியை எளிதாக்குவ துடன் நோயாளிகளின் பயத் தைக் குறைப்பதற்கும் பயன்படு கிறது. அதுமட்டுமல்ல, அறிவி யல் நித்தமும் வளர்கிறது-வளர்ந்து கொண்டே இருக்கிறது என்பதற்குச் சான்றாகத் திகழ் கிறது. இந்தப் பெருமைக்குத் தமி ழக அரசும் சென்னை மருத்துவ மனையின் இதய நோய்ப் பிரி வின் தலைவர் டாக்டர் லட்சுமி காந்தன் அவர்களும் உரியவர்கள். மேலை நாடுகளில் உள்ள அரிய நவீன மருத்துவக் கருவிகளை நமது மாநிலத்திற்கு விரைவில் வரவழைத்து மக்களுக்குப் பயன் படுத்தும் பெருந்தொண்டுக்கு ஈடு இணையே இடையாது!

# காசநோய் வில்லை விற்பனை: தஞ்சை மாவட்டம் முதலிடம்!



கடந்த ஆண்டு தமிழ்நாட்டிலேயே அதிக அளவு காசநோய் வில்லைதனை விற்றதற்காக தஞ்சை மாவட்டம் முதல் பரிசாக, சுழற்கோப்பையைப் பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட காசநோய் அலுவலர் அவர்களும் படத்தில் இருக்கிறார்கள்.



# பெரியார் மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம்

வே. இலட்சுமிரதன், ஐ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
பெரியார் மாவட்டம்.

இவ்வொரு கிராமத்திற்கும் அடிப்படை வசதிகள் அளிக்கப் படவேண்டும் என்ற சீரிய நோக் கத்துடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''தன்னிறைவுத் திட் டம்'' என்ற ஒரு திட்டத்தைத் தீட்டி அதை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் முடிக்க முனைப் பான நடவடிக்கைகள் எடுக்க தொடர்புள்ள அனைத்து அலு வலர்களுக்கும் நேரடியாகச் சுற் றுரைகளும், ஆணைகளும் வழங்கி உள்ளார். விரைந்து செயலாற் றும் நேரத்தில், விழிப்போடு தர மான பணியினை ஆற்றிட வேண் டும் என வலியுறுத்தி மேலும் இதனைக் கண்காணிக்க தொழிற் நுட்ப ஆய்வுக் குழுக்களைப்பணி களின் தரத்தை மதிப்பீடு செய்ய சிறப்பு அனுமதி வழங்கியும் உள் ளார்கள்.

முதல் கட்டமாக மாநில அள வில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு முடியும் நிலையில் உள் ளது. பெரியார் மாவட்டத்தில் உள்ள இருபது ஊராட்சி ஒன்றி யங்களில் இரண்டு ஊராட்சி ஒன் றியங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு நிறைவு பெறும் நிலையில் உள்ளது. 1981 -82ஆம் ஆண்டில் சுமார் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் மேலும் எட்டு ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படவும் உள்ளது.

ஒரு வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களும் தன்னிறைவுபெற நிறைவேற்றப்பட வேண்டிய திட் டங்களாவன:

* ஒவ்வொரு குக்கிராமத்திற் கும் போதிய குடிநீர் வசதி செய்தல்.
* அருகிலுள்ள பிரதான சாலையுடன் எல்லாப் பருவ நிலையிலும் பயன் படும் படியான ஒரு சீரான இணைப்புச் சாலை ஏற் படுத்துதல்.
* பள்ளிக் கட்டடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டு தல்.
* அரிசனக் குடியிருப்புகளி லிருந்து மயானத்திற்குச் செல்ல ஒரு நல்ல பாதை அமைத்துக் கொடுத்தல்.
* அரிசனங்களுக்காக ஊரக வீட்டு வசதித் திட்டத்தில் வீடு கட்டித் தருதல்.
* பேறுகால நிலையங்களுக் கும், மருந்தகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட் டிக் கொடுத்தல்.
* கழிப்பிடங்கள், சாக்கடை வசதிகள் செய்து கொடுத் தல்.
* தகுதியுடைய வயோதிகர் களுக்கும் உடல் ஊனமுற் றோர்க்கும், விதவைகளுக் கும் மாதாந்திர உதவித் தொகை வழங்குதல். மேலும் அவர்களுக்கு வாரந்தோறும் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கு தல்.

இவைகளைக் குறிப்பிட்ட ஒரு காலவரைக்குள் செய்து முடிப்ப தென்றால் அது ஒரு எளிதான காரியமல்ல. இதற்குத் தேவை யான நிதி உதவி தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் தேவைப் படக் கூடிய சிமெண்ட், கம்பி போன்ற பொருட்களைத் தடை யின்றி ஏற்பாடு செய்தல் வேண் டும்.

இவ்வளவு பெரியதொரு திட் டத்தை நடைமுறையில் சாத்திய மாக்க நம் மாவட்டத்தி லுள்ள தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அர சினரிடமிருந்து தேவையான நிதி உதவி மற்றும் கூடுதல் தொழில் நுட்ப அலுவலர்கள், சிமெண்ட், கம்பி போன்ற அத்தியாவசியப் பொருள்களை விரைவில் பெற்று இத்திட்டம் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

காங்கேயம் மற்றும் சத்தியமங் கலம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் திட்டத் தைச் செயல்படுத்தி 1980-81ஆம் ஆண்டுக்குள் தன்னிறைவு பெற எல்லா நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட் டத்தின் மூலம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் 61,327 பேர்களும், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 73,957 பேர்களும் ஆக மொத்தம் 1,35,284 பேர்களும் பயனடை கிறார்கள். இதற்காக தமிழ்நாடு அரசு ரூ.108.92 இலட்சரூபாயை ஒதுக்கி இருக்கிறது.

## குடிநீர் வசதி

இத்திட்டம் தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. சத்திய மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 56 கிராமங்களிலும், காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் 22 கிரா மங்களிலும் ஆக மொத்தம் 78 கிராமங்களில் குடிநீர் வசதி சரி யான முறையில் இல்லாமல் இருந் தது. இக்கிராமங்களுக்கு ரூ. 55.64 இலட்சம் செலவில் பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி செய்துதர திட்டமிடப்பட்டு இது வரை காங்கேயம் ஊராட்சி ஒன்றி யத்தில்14 கிராமங்களுக்கும், சத் தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத் தில் 25 கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 30,000 மக் கள் பயனடைகின்றனர். மீத முள்ள கிராமங்களுக்கு 31.3.81க் குள் குடிநீர் வசதி செய்து தரப் படும்.

## சாலை வசதிகள் :

இணைப்புச்சாலைத் திட்டத் தின் கீழ் இரு ஊராட்சி ஒன்றியங் களிலும் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை 47 ஆகும். இவற்றின் மொத்த நீளம் 81.06 கிலோ மீட்டர். இவற் றின்மதிப்பீடு ரூ.21.31 இலட்சம். இத்திட்டத்தின் கீழ் இதுவரை செய்து முடிக்கப்பட்ட வேலை கள் 31 ஆகும். இதற்கான செலவு ரூ. 18 இலட்சம். முடிக்கப்பட்ட சாலைகளின் நீளம் 47.6 கி.மீ. மீதமுள்ள 16 வேலைகளும் 15.3.81க்குள் முடிக்கப்படவுள் ளன. காங்கேயம் ஊராட்சி ஒன்றி யத்தில் 11 ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ. 1.42 இலட்சம்

மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு ரூ. 1.39 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுவிட்டன.

**ஆதிதிராவிட மலைவாழ் மக்கள் மயானங்களுக்குப் பாதை அமைத்தல் :**

இத்திட்டத்தின்கீழ் 9 ஆதிதிராவிட மலைவாழ் மக்கள் மயானங்களுக்கு ரூ. 50 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**சிறுபாலங்கள் :**

காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் 47-ம், சத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 61ம் ஆக மொத்தம் 108 சிறுபாலங்கள் ரூ. 16.61 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 66 வேலைகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 42 வேலைகள் 31.3.81க்குள் முடிக்கப்பட்டு விடும்.

**பள்ளிக் கட்டடங்கள் :**

காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கூடுதல் பள்ளிக் கட்டடங்களும், சத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 7 பள்ளிக் கட்டடங்களும் 5 கூடுதல் பள்ளிக் கட்டடங்களும் ஆக மொத்தம் 15 பள்ளிக் கட்டட வேலைகள் ரூ. 9.13 மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. பள்ளி[illegible]ட்ட வேலைகளும் 3[illegible].[illegible] 81.[illegible]க்குள் முடிக்கப்படவுள்ளன.

**மருத்துவ வசதி :**

இத்திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இராஜன் நகர் கிராம மருந்தகத்திற்கு, ஒரு சொந்தக் கட்டடம் ரூபாய் 85 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இதுவரை ரூபாய் 65 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 20 ஆயிரம் 31.3.81ம் தேதிக்குள் செலவு செய்து கட்டட வேலை முடிக்கப்பட உள்ளது.



**மகப்பேறு நிலைய கட்டடங்கள்:**

இத்திட்டத்தின் கீழ் காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு நிலையங்கள் ரூ. 90 ஆயிரம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு ரூ. 83 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள மதிப்பீட்டின்படி 28.2.81ம் தேதிக்குள் வேலைகள் முடிக்கப்படவுள்ளது.

**பொதுச் சுகாதாரம் :**

சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 15 சாக்கடை கட்டும் வேலைகள் ரூ. 2.32 இலட்சத்தில் எடுக்கப்பட்டு 15 வேலைகளும் ரூ. 2.23 இலட்சத்தில் முடிக்கப்பட்டுவிட்டன.

**மகளிர் கழிப்பிடம்:**

காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டும், சத்தி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டும் ஆக மொத்தம் 4 மகளிர் கழிப்பிடங்கள் ரூ. 28 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் 31.3.81க்குள் முடிக்கப்படவுள்ளன.

**பொதுக் கழிப்பிடம்:**

சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பொதுக் கழிப்பிடம் ரூ. 9 ஆயிரம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது.

**சிறுபாசனத் திட்டம்:**

சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு சிறுபாசன வேலைகளும் ரூ. 15 ஆயிரம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முடிகப்பட்டுவிட்டன.



**ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள்:**

காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றும், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றும் ஆக மொத்தம் இரண்டு ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் ரூ. 90 ஆயிரம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. இந்த வேலைகள் 31.3.81க்குள் முடிவுபெறும்.

**வீட்டு வசதித் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டித்தர 150 யூலக்கு திர்ணயிக்கப்பட்டதில் சத்தியமங்கலத்தில் 121 வீடுகளும், காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் 41 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் மீதமுள்ள 34 வீடுகள் 31.3.81க்குள் முடிக்கப்படவுள்ளன.

ஆதிதிராவிட நலத்துறையினரால் இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும், குடிநீர் வசதிக்காக ரூ. 1,97,000 கழிவுநீர் வெளியேற்ற வசதிகள் செய்துகொடுக்க ரூ. 16,000-ம் ,பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்க ரூ. 1,00,000- ஆக மொத்தம் ரூ. 3,13,000- செலவில் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் மலைப் பகுதியில் சுமார் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி, இணைப்புச் சாலைவசதிகள், பள்ளிக் கட்டடங்கள் போன்றவை செய்யப்பட்டு வருகின்றன. கடம்பூர், குத்தியாலத்தூர், மாக்கம்பாளையம் போன்ற இந்தப் பகுதியில் இதுவரை ஜீப்பில் செல்வது கூட மிகவும் கடினமான காரியமாகும். வெகுவிரைவில் இங்கு பேருந்துகள் செல்லும் அளவுக்குப் பாதை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் தன்னிறைவுத் திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. பணிகள் நிறைவேறுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு நல்ல முறையில் அமைந்துள்ளதால் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துணைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களது பணி விரைவாகவும் சிறப்பாகவும் நடந்தேறியுள்ளன.

# மக்கள் பெருக்க அலை....

**1980**-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், இந்தியாவின் மக்கள் தொகை 65 கோடியே 90 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டும் 1½ நொடியில் ஒரு குழந்தை பிறக்கிறது. ஓராண்டிற்கு 2 கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றனர். கி. பி. 2000-த்தில் இந்தியாவின் மக்கள் தொகை 110 கோடியே 37 இலட்சம் இருக்கும் என்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் மதிப்பீடு செய்திருக்கிறது. உலக மக்கள் தொகையை எடுத்துக் கொண்டால், கி. பி. 2,000 வரை, ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி என்று மக்கள் தொகை வளர்ந்துகொண்டே போகும். இதையெல்லாம் பார்க்கும்போது எதிர்கால உலகத்தின் அவல நிலை நமக்கு நன்கு புலனாகும்.

பிறந்த குழந்தைகளின் நிலை என்னவென்று நாம் கவனிக்க வேண்டும். பிறக்கும் 1,000 குழந்தைகளில் 122 குழந்தைகள் முதலாண்டிலேயே இறந்து போகின்றன. இந்தியாவில் இறப்பவர்களில் 100க்கு 40 பேர் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள். சத்து உணவு இன்மையால் ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சம் குழந்தைகள் இறக்கின்றனர்; ஆறு கோடி குழந்தைகள் நலிவுற்று இருக்கின்றனர். வைட்டமின் 'ஏ' குறைவினால் ஆண்டிற்கு 14,000 குழந்தைகள் கண்பார்வை இழக்கின்றனர்.

குழந்தைகளின் கல்வி நிலை எப்படி? முதல் வகுப்பில் சேர்க்கப்படும் 100 குழந்தைகளில் 24 பேர்தான் 8-ஆம் வகுப்புவரை படித்து முடிக்கின்றனர். முதல் வகுப்பில் சேரும் 100 மாணவிகளில் 30 பேர்தான் 5-ஆம் வகுப்பில் வெற்றி பெறுகின்றனர். இதனால் ஏற்படும் தேக்கமும் வியர்த்தமும் அதிகம். பள்ளிகளில் வசதியின்மை அதிகரிக்கின்றது. கல்வியின் தரம் குறைய நேரிடுகின்றது. 1971-ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 33.8 சதவிகிதம். உலகத்திலேயே இந்தியாவில்தான் மிக அதிகமான குழந்தைகள் வேலை செய்கின்றனர். 1.5 கோடிக்கு மேல் குழந்தைகள்வேலை செய்வதாகப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் எல்லாத் துறைகளிலும் வசதியின்மை ஏற்படுகின்றது. இந்தியாவில் படித்த 69 இலட்சம் பேர்களுக்கு வேலை கிடையாது. இவ்வாண்டில் ஆசியாவில் மட்டும் 85 கோடி மக்கள் வறுமையில் வாடுவதாக ஐக்கிய நாடுகளின் தொழிலாளர் நிறுவன இயக்குநர் கூறுகின்றார். வறுமையும்,வேலையில்லாத் திண்டாட்டமும் ஆசியாவில் 20-ஆம் நூற்றாண்டில் இரண்டு சிறப்பு இயல்புகள் என அவர் மேலும் கூறியுள்ளார்.

மக்கள்பெருக்கத்தினால் வீட்டு வசதி இன்மை, மருத்துவ வசதியின்மை. தண்ணீர் வசதியின்மை, உணவுப் பற்றாக்குறை, போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றன. உணவு, உடை ஆகியவற்றின் விலை உயர்வு அச்சத்தை அளிக்கின்றது. மக்கள் பெருக்கத்தினால் காற்றும் தண்ணீரும் அசுத்தமடைகின்றன. கிடைக்கக்கூடிய நிலம் முழுமையையும் வேளாண்மையின் கீழ் கொண்டு வந்தாலும், உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க இயலாது. எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுகின்றது.

மக்கள் பெருக்கத்தினால் ஏற்படும் தீய விளைவுகளை உணர்த்த, மக்கள் தொகை இயல் கல்வி தேவை. இக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும். கல்லூரிகளிலும் புகட்டலாம். மக்கள் தொகை குறைய வேண்டும்; சிறு குடும்பமே சிறந்தது என்ற எண்ணங்கள் மாணவர்கள் மனத்தில் ஏற்படுமாறு கற்பித்தல் வேண்டும். இதனால் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற நல்லுணர்வு ஏற்படுமாறு செய்தல் வேண்டும். அரசு எடுத்த நடவடிக்கைகளினால், 1979-80ல் 4 கோடி பிறப்புகள் தவிர்க்கப்பட்டிருப்பதைச்சுட்டிக் காட்ட வேண்டும்.

மக்கள் தொகை இயல் கல்வியை 14 கோடி மாணவர்களும், 30இலட்சம் ஆசிரியர்களும் பெறுகின்றனர். எல்லா மாநிலங்களும் இக்கல்வியை சமூகவியல், புவியியல், பொருளாதாரம், உயிரியல், பொது அறிவியல் ஆகிய பாடங்களின் வாயிலாகவும், த்னிப்பாடமாகவும் கற்பிக்க முயற்சிகள் எடுத்து வருகின்றன. குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். குடும்ப கட்டுப்பாட்டில் கட்டாயம் கூடாது. மக்கள் தாமாகவே உணர்ந்து செயல்படுமாறு செய்தல் வேண்டும்.

உலகில் மிக அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. 20ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தை அடியோடு நிறுத்திவிட முயன்று வருகின்றது. ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை என்பது அவர்கள் பிரச்சாரம். ''சிறந்த அமைப்பு, எல்லா சமூக நிலைகளிலும் தீவிரப்பிரச்சாரம், ஆராய்ச்சி, குடும்பக் கட்டுப்பாடு மருத்துவர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதல்'' என்ற அடிப்படையில் கொள்கையை, அமைத்து. வெற்றி காணமுயற்சிக்கின்றனர்.

மக்கள் தொகை இயல் கல்வியில் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தனிப்பொறுப்பு இருக்கின்றது. மக்கள் தொகை குறைந்தால் உடல் நலம், சமூக நலம் எவ்வாறு உயர்கின்றது. மகிழ்ச்சியான குடும்பம் எவ்வாறு அமைகிறது என்பதை கதைகள், நாடகங்கள், பாடல்கள், நடனங்கள் வாயிலாகக் கற்பித்தல் வேண்டும். விகட நூல்கள், கேலிச்சித்திரங்கள் என்பவைகளையும் பயன்படுத்தலாம். குடும்ப நலக்கல்வி இன்றியமையாதது. குடும்பத்தின் அளவு, வாழ்க்கையின் தரம், குடும்பப் பொறுப்பு, பெற்றோர் கல்வி, குடும்பப் பாதுகாப்பு - ஆகியவற்றைப் பற்றி மாணவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுமாறு கற்பித்தல் நன்று. உடல் நலத்திற்கும் மக்கள் பெருக்கத்திற்கும் உள்ள தொடர்பையும் உணர்[illegible]

டாக்டர்
**எச்.எஸ்.எஸ்.லாரன்ஸ்**

பசுமைப் புரட்சியினால் உணவு உற்பத்தி அதிகமாகியது. மக்கள் பெருக்கத்தினால் உணவு உற்பத்தி அதிகரித்தும், பயனில்லாமல் போய்விட்டது. வறுமையுள்ள நாடுகளில்தான், 90 சதவிகிதம் மக்கள் தொகை உயர்வு ஏற்படுகின்றது.

உயர்நிலைப் பள்ளிகளில் புவியியல் பாடத்திட்டத்தில் உணவு என்ற தலைப்பில் இக்கருத்தைக் கற்பிக்கலாம். இவ்வாறு கற்பித்தலின் நோக்கங்கள் வருமாறு :—

* பூமி, மக்கள் ஆகியவற்றிற்கும், உணவு, உணவு உற்பத்தி ஆகியவற்றிற்கும் இடையேயுள்ள விகிதத்தை உணர்த்துதல்.

* மக்கள் தொகை, பொருளாதாரத்தையும், சமூகத்தையும் எவ்வாறு பாதிக்கின்றது என்பதை அறிதல்.

* வெவ்வேறு இடங்களில் வாழும் மக்களின் உணவுப் பழக்கங்கள்--அவை எவ்வாறு உடலையும் உள்ளத்தையும் பாதிக்கின்றது என்பதை உணர்தல்.

* குழந்தைகள் சிறுவர்கள் ஆண்கள், பெண்கள் ஆகியோருக்குத் தேவையான சிறப்பு உணவுகள் ஆகியவற்றை அறிதல்.

மக்கள் தொகைப் பெருக்கம் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கும் என்பதை யாவரும் உணருமாறு செய்தல் வேண்டும். வாழ்க்கைத்தரம் என்பது ஒரு சாதாரண மனிதனுக்குத் தேவையான பொருள்களையும், சேவைகளையும் குறிக்கும். மக்கள் பெருக்கத்தினால் தனி ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய உணவின் அளவும் தரமும் குறைகின்றது. பெரிய நகரங்களில் இட வசதி இன்மையால் மக்கள் நடை பாதைகளில் உறங்குவதைச் சுட்டிக் காட்ட வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரம் குறையும்போது உற்பத்தித் திறன் குறைகிறது. மக்கள் தொகைப் பெருக்கம் மனிதனுடைய சூழ்நிலையைப் பாதிக்கின்றது. மக்கள் தொகை, வளமை, சூழ்நிலை ஆகிய மூன்றும் தொடர்புடையன என்ற விழிப்புணர்ச்சி வளர்ந்து வர வேண்டும்.

அறிவியல் பாடம் நடத்தும்போது, மக்கள் பெருக்கத்தின் தீமைகளை எடுத்துக்கூறி மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம். மக்கள் தொகை பெருகிக்கொண்டே போனால் உலகம் அழிவுறநேரும் என்பதை எடுத்துக்கூற வேண்டும். மக்கள் தொகையைக்கட்டுப்படுத்த நவீன சாதனங்கள், முறைகள் உள்ளன என்பதை மறைமுகமாகக் கூறலாம்.

மக்கள் பெருக்கத்தின் தீமைகளை வானொலி, தொலைக்காட்சி வாயிலாகப் பிரச்சாரம் செய்யலாம். திரைப்படங்களைப் பயன்படுத்தலாம். முறைசாராக் கல்வி முறை, கிராமங்களில் நல்ல பயனைத் தரும். சிறு குடும்ப விதிமுறைகளை மக்கள் மனம் உவந்து தாமாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். தூண்டுதல் மூலமாகவும், கல்வி மூலமாகவும் இந்த மனமாற்றம் நிகழவேண்டும். சமுதாயத்திலுள்ள கருத்துக் கூறும் தலைவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தி அவர்கள் வாயிலாக மக்களைத் தூண்டுதல் வேண்டும்.

மக்கள் தொகைப்பெருக்கத்தினால் வரும் தீமைகளைக் குழந்தைகள் உள்ளத்தில் பதியுமாறு கற்பித்தல் வேண்டும். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகின்றபோது நல்ல பயன் கிடைக்கும்.

குடும்பம், சமூகம், நாடு— இவை முன்னேற்றமடைய வேண்டுமானால் மக்கள் தொகை பெருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ''சிறு குடும்பமே, சீரான வாழ்வுக்கு வழி'', ''அளவோடு பெற்று வளமோடு வாழ்க'' போன்ற சொற்றொடர்களைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்த வேண்டும். பள்ளிகளில் இதற்கான பாடத்திட்டம் அமைதல் வேண்டும். இளமையில் கற்பித்தால், பசுமரத்தாணிபோல் எண்ணங்கள் நிலைத்து நிற்கும்.

எனவே, மாணவப் பருவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதைப்பற்றி ஆசிரியர்கள் வெட்கப்படக் கூடாது. மக்கள் பெருக்கமாகிய அலையைத் தடுத்திட வேண்டும். தாங்களே உருவாக்கிக் கொண்ட மக்கள் பெருக்கமாகிய ஊழி வெள்ளத்தில், உலகம் மூழ்கிப் போகாமல் தவிர்க்க வேண்டியது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

நன்றி : சென்னை வானொலி.

## திருப்பதி தேவஸ்தானத்தில் செயற்கை உறுப்புகள் பொருத்தும் மையம்

கை, கால்களை இழந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் திருமலை-திருப்பதி தேவஸ்தானம் முதலிடம் வகிக்கிறது. அங்கு நிரந்தரமான மனித உறுப்புக்கள் பொருத்தும் மையம் ஒன்றை அமைக்க தேவஸ்தானம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

உடல் ஊனமுற்றோர்கள் உட்பட பல பயணிகள் அதிக எண்ணிக்கையில் திருப்பதிக்கு வருகிறார்கள். இம்மையம் கை, கால் இழந்த உடல் ஊனமுற்றோருக்கு நிவாரணம் அளிக்கும். குறிப்பாக திருப்பதியிலுள்ள குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், சுற்றியுள்ள ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் மற்றும் தமிழ்நாட்டு மாவட்டங்களிலுள்ள குழந்தைகளுக்கும் நிவாரணம் அளிக்கும்.

மங்களம் என்ற அறக்கட்டளையின் தீவிர ஒத்துழைப்புடன் திருப்பதி தேவஸ்தானத்தில் பிப்ரவரி மாதம் 27-ந் தேதி ஒரு முகாம் நடத்தப்பட்டது. கை, கால்களை இழந்த உடல் ஊனமுற்றவர்கள் 190 பேர்கள் இம்முகாமுக்கு வந்திருந்தார்கள். இவர்களை வெங்கடேசுவரா மருத்துவக் கல்லூரியின் மருத்துவக்குழு பரிசோதித்தது. உத்திர பிரதேசத்திலும், தில்லியிலும் மங்களம், உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க சிறந்த பணி புரிந்தது. புறக்கணிக்கப்பட்டவர்களுக்குச் செயற்கை உறுப்புக்களை வழங்குவதற்காக இந்த நிலையம் கிராமப்புறங்களில் முகாம்களை நடத்துகிறது.

திருப்பதி மையத்தில் வழங்கப்படும் செயற்கை உறுப்புக்களுக்கான மொத்த செலவையும் திருமலை-திருப்பதி தேவஸ்தானம் ஏற்றுக்கொள்ளும். கான்பூரிலுள்ள அரசுக்குச் சொந்தமான உறுப்புத் தயாரிப்பு நிலையம் செயற்கை உறுப்புக்களை வழங்குகிறது. இச் செயற்கை உறுப்பு தயாரிக்கும் நிலையத்திற்குப் பிரதம மந்திரியின் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டது நினைவு கூரத்தக்கது. திருப்பதி-திருமலை தேவஸ்தானம் அளிக்கும் செயற்கையுறுப்புகள் ஒவ்வொன்றிலும் வெங்கடேசுவரரின் திரு உருவம் பொறிக்கப்பட்டிருக்கும்.

# வியப்பில் ஆழ்த்தும் வீரபாண்டி ஒன்றியம்



வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம். இது சேலம் மாவட்டத்தில் உள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் (வேலைக்கு உணவுத் திட்டம்), இவ்வொன்றியம் நிறைவேற்றியுள்ள சில வேலைகள் ஊராட்சிகளுக்கு நிரந்தர வருவாய் தருவதாலும், சுகாதார வாழ்விற்கு அடித்தளமாகவும் அமைந்துள்ளது. தவிர, பள்ளிக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

எலம்பிள்ளை என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள மகளிர் மன்ற-சமுதாய நிலையம், கழிவு நீர்ப்பாதை, இறைச்சி அங்காடிகள் ஆகியவை அவ்வூருக்கு மிகவும் பயனளிப்பதாக அமைந்துள்ளன.

இங்குள்ள இந்நிலையம், எலம்பிள்ளை பெண்களின் பொதுநலத்தொண்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தமிழகத்திலுள்ள ஏனைய மன்றங்களும் பின்பற்றத்தக்க முறையில் இவர்களின் சேவை போற்றுதற்கும் உரியதாகும்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 50,000 மதிப்பீட்டில் உருவாகியுள்ள இக்கட்டடத்திற்கு கட்டடப்பொருள்கள் வாங்குவதற்கான செலவுத்தொகையில் ரூ. 27,000 மகளிர் மன்றத்தினரே ஏற்றுக்கொண்டு, அத்தொகையை நன்கொடையாகத் திரட்டித் தந்துள்ளனர். நன்கொடையாளர்களில் ஒருவரே ரூ. 5,000/- தம் பங்காக அளித்துப் பலரது பாராட்டைப்பெற்றுள்ளது. எஞ்சிய கட்டடத் தளவாடச் செலவுகள், ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. பெரிய மணவறையொன்றும், மணமக்கள் தங்குவதற்கான தனித்தனி அறைகள், குளியலறைகள், கழிவறைகள் இரண்டிரண்டும் கட்டப்பட்டுள்ளன. இதனால் ஊராட்சிக்கு வாடகை மூலமாக, கணிசமான வருவாய் கிடைக்க வழியேற்பட்டுள்ளது. எலம்பிள்ளை மகளிர்மன்ற உறுப்பினர்களின் உற்சாகமிகுந்த இச்சேவையை மற்ற மன்றத்தினர்களும் பின்பற்றிச் செயலாற்றலாம்.

இதே ஊரில் ரூ. 20,000 மதிப்புள்ள 200 மீட்டர் நீள 1.5 மீட்டர் ஆழத்தில் கழிவு நீர்ப்பாதையொன்றும் கட்டப்பட்டுள்ளது. இதனால் 250 வீடுகளின் கழிவுநீர் அகற்றப்படுவதற்குப் போதிய வசதி சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது.

இறைச்சிக் கடைகளும், ஒரு கொல்லுமிடமும் ரூ. 17,500 மதிப்பில் மேற்சொன்ன திட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து சுமார் 250 வரை மாதந்தோறும் வாடகை கிடைக்கக்கூடும்.

வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஆட்டையாம்பட்டியில் ரூ. 18.000 மதிப்புள்ள தொடக்கப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கட்டடத்தின் கூரைகளுக்குத் தேவையான மரப்பொருள்கள், ஓடுகள் போன்றவற்றை வாங்க, நல்மனம் படைத்த 3 பேர்கள் ஒவ்வொருவரும் ரூ. 2,000 வீதம் ரூ. 6,000 நன்கொடையளித்துள்ளனர். இப்பள்ளியில் தான், 1978 ஆம் ஆண்டிற்கென, சிறந்த ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு எம். சின்னசாமி அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். அழகிய செடிகள், நிழல்தரும் மரங்கள், சுற்றுப்புறத் தூய்மை ஒலிபெருக்கிக் கருவிகள் போன்றவற்றைக் காணும்போது, ஊர்மக்களும், தலைமை ஆசிரியரும், ஒன்றியமும் காட்டும் பேரார்வம் வியப்பில் ஆழ்த்துகிறது.

“தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலகம்”

சென்னை அண்ணாசாலையில் உள்ள சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் மத்திய நூலகத்திற்கு "தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலகம்" என்று பெயரிட ஆணையிடப்படுகிறது.

# 1981ல், 1980ல் நாட்டப்பட்ட அடிக்கல்லின்மேல் கட்டுமானம் செய்வோம்

1980ல், கட்டுக்கடங்காது பெருகிய பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு,
நிலக்கரி, மின்சாரம், தொழில் துறைப் பொருட்கள் மற்றும்
உணவுத் தானியங்களின் உற்பத்தி கணிசமாக கூடுதலாக்கப்பட்டது.




சமூகத்தின் ஏதேனுமொரு பிரிவினர், தேசீயப் பயனில் தமக்கு மிகப் பெரிய பங்கு வேண்டுமென கோரு முன்னர், நாம் கண்ட பயன்களை உறுதிப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க இது தருணம்.

ஸ்ரீ

கடும் உழைப்பும் சுயக் கட்டுப்பாடும்
நமது கொள்கையாக வேண்டும்

davp 80/451




# இனியொரு விதி செய்வோம்

## நெல்லை மாவட்டம்

நன்னிறைவுத் திட்டத்தின் முதற்கட்டம் முடியும் தறுவாயில் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் இத்திட்டம் நெல்லை மாவட்டத்தின் மக்கள் வாழ்விலுள்ள பல தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளியிட்டுக் கொண்டிருக்கிறது என்ற உண்மையைக் கோடிட்டுக் காட்டவே இக்கட்டுரை.

நெல்லை மாவட்டத்தின் பல இடங்களை அணைத்துச் செல்லும் தாமிரபரணி அம்மாவட்டத்தின் மேன்மைக்கு வழி வகுத்துச் சென்றாலும், தன்னிறைவுத் திட்ட வட்டாரப் பகுதிகளில் தாமிரபரணியின் தண்ணீரைப் பெற இயலா நிலை உள்ளது. வறட்சி மிக்க பகுதிகளும் நெல்லை மாவட்டத்தில் நிறைய உண்டு. எனவேதன்னிகரில்லாத் தன்னிறைவுத் திட்டத்தை நெல்லை மாவட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் - வறட்சியின் பாதிப்பால் தாக்குண்டு-வாழ்க்கையின் அடிப்படை வசதிகளைப் பெற்றிராத வட்டாரங்கள் பட்டியலிட்டுப் பார்க்கப்பட்டு, அவ்வட்டாரங்களுள், புதூர், விளாத்தி குளம், ஒட்டப்பிடாரம், சங்கரன் கோவில், கருங்குளம் ஆகிய ஐந்து வட்டாரங்கள் முதற்கட்ட வட்டாரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இனி இந்த ஐந்து வட்டாரங்களிலும் நிறைவேற்றி முடிக்கப்படும் பணிகள் பற்றிச் சிறிது காண்போம்.

**புதூர் ஒன்றியம்:**

தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்குப் பிறகு புதூர் புதுப் பொலிவுடன் திகழத் தக்கவகையில் இவ்வட்டாரத்திற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. 1979-80 ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் மதிப்பு மட்டும் ரூ.4,60,000- இத்தொகையில், 6 சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மூன்று பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணியும், தாய் சேய் நல விடுதி ஒன்று கட்டும்பணியும், குழந்தைகள் காப்பக நிலையம், ஒன்றும் ஒரு மருந்தகக் கட்டிடமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 1980-81ல் எடுத்துக் கொள்ளப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன:

**விளாத்தி குளம் ஊராட்சி ஒன்றியம்:**

1979-80ல் நிறைவேற்றப்பட்ட 46 பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 5,57,000- 1980-81ல் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பீடு ரூ. 13,53,685- இந்த மதிப்பீட்டின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| இணைப்புச் சாலைகள் | 61 |
| சிறுபாலங்கள் | 24 |
| பாசன சிறு அமைப்புகள் மேம்பாடு | 6 |
| ஊர்ப்புற மருந்தகம் | 1 |
| மகப்பேறு நிலையம் | 5 |
| பள்ளிக்கட்டிடங்கள் | 11 |

இத் திட்டப்பணிகளின் பலனைப் பெறுபவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களாகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களாகவும் அமைந்திருப்பது இவ்வட்டாரப் பணிகளின் தனிச் சிறப்பு.


திரு எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப.,
ஆணையர்,
அரசு செயலாளர்,
ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை




**ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்:**

இவ்வொன்றியத்தில் பெரும்பாலான மக்கள் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவர்கள். மேலும் இங்கே வாழும் பல குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் வகையைச் சார்ந்தவை. எனவே தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப் படும்போது - அதன் வாயிலாகச் சிறந்த வேலைவாய்ப்பு வசதிகளை இவ்வட்டாரத்தில் வாழும் மக்களுக்கு ஏற்படுத்தித் தர எண்ணப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 285.17 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட பரந்த இவ்வொன்றியத்தில் இணைப்புச் சாலை வசதிகள் போதிய அளவு இல்லாதது பெரும் குறையாகக் கருதப்பட்டது. இக்குறையைக் களையும் நோக்கத்துடன் இணைப்புச் சாலைப் பணிகள் முதற்கண் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 11 பள்ளிக் கட்டிடங்களும் தாய்சேய் நல விடுதிகள் நான்கு ஊர்ப்புற மருந்தகம் ஒன்றும் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.



**சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றியம்:**

1979-80ல் ரூ. 2,35,000- மதிப்பீட்டிலும், 1980-81 ல் ரூ 14,18,400- மதிப்பீட்டிலும் 96 வேலைகள் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. அனைத்து வேலைகளும் நிறைவு பெறும் தருவாயில் உள்ளன. நீர்ப்பாசனக் கால்வாய் ஒன்றைச் சீர்படுத்தியதால் மட்டும் 150 ஏக்கர் பரப்பளவு நிலம் தற்போது புதிதாகப் பாசன வசதி பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்னும் செய்தி இத்திட்டத்தின் முழு வெற்றிக்கு ஒரு சான்றாகும்.

| | | எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் மொத்த மதிப்பு இலட்சத்தில் |
|---|---|---|
| இணைப்புச் சாலைகள் மேம்பாடு | 28 | 5.59 |
| சிறு பாலங்கள் | 5 | 1.82 |
| தாய்சேய் நல விடுதிகள் கட்டுதல் | 3 | 1.94 |
| பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் | 12 | 7.92 |
| பாசன சிறுதிட்டமேம்பாடு | 1 | 0.04 |
| மருந்தகங்கள் | 1 | 0.58 |
| இப்பணிகள் ஏறத்தாழ முடியும் தறுவாயில்உள்ளன | | 17.89 |

**கருங்குளம் ஊராட்சி ஒன்றியம்:**

இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணி இவ்வட்டாரத்தில் சிறப்பிடம் நல்கப்பட்டது. தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணியும் புதிதாகச் சாலைகள் அமைக்கும் பணியும் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. புதிதாக ரூ. 2,87,200- மதிப்பீட்டில் 17 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட உள்ளன. இத்திட்டங்களால்-எந்த வசதியுமில்லாத இருபது சிறு கிராமங்கள் இப்போது இணைப்புச் சாலை வசதிகளைப் பெறுவது குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும் மேலும் இவ்வொன்றியத்தால் நடத்தப்படும் 48 பள்ளிகளில் 45 பள்ளிகளில் நல்ல கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன. கூரைக் கட்டிடங்களில் செயல்படும் இரண்டு பள்ளிகளுக்கும், வாடகைக் கட்டிடத்தில் செயல்படும் ஒரு பள்ளிக்கும் சீர்மிகு கட்டிடப்பணிகள் நிறைவேற்றி முடிக்கப்படவிருக்கின்றன



மொத்தத்தில் தன்னிறைவுத் திட்டம் நெல்லை மாவட்டத்தின் சிறப்புகளுக்குச் சிறப்பு சேர்க்கும்.



# வீரர் வ.வே.சு ஐயர்

பாலி சு. நெல்லையப்பர்

**தோற்றம் 2.4.1881**

தெய்வத் தமிழ் நாட்டில் சிறந்த தேசபக்தர்களாய் விளங்கிக் காலஞ்சென்ற சி. சுப்பிரமணிய பாரதியார், வ.வே.சு. ஐயர் இருவரும் வியப்பான மனிதர்கள். பாரதி சிறந்த கவியாகத் திகழ்ந்தார். ஐயர் சிறந்த கர்ம வீரராக விளங்கினார். இருவரும் எதிர்பாராத அகால மரணம் அடைந்தனர். சுப்பிரமணிய பாரதியின் கவிகளை உலகம் ஒருவாறு அறிந்து போற்றி வருகிறது. ஆனால் சுப்பிரமணிய ஐயரின் செயல்கள் பலவற்றை உலகமே அறியாது.

வ.வே.சுப்பிரமணிய ஐயர் திருச்சியின் ஒரு பகுதியில் வரகனேரியில் 1881-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாந் தேதி பிறந்தார். இளமையில் திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரியில் கல்வி கற்றார். திருச்சியிலும், பின்னர் ரங்கூனிலும் வக்கிலாயிருந்தார். அங்கிருந்து பாரிஸ்டர் பதவிக்குப் பயிற்சிபெறும் நோக்கத்துடன் இங்கிலாந்து சென்றார். லண்டனில் அவர் தேசபக்த வீர சிகாமணியான விநாயக தாமோதர சாவர்க்கரைச் சந்தித்தார். அதுமுதல் அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த பெரிய மாறுதல்களும், அவர் செய்த வேலைகளும், தியாகங்களும் வியப்பானவை. சாவர்க்கரின் கூட்டுறவு, வக்கீல் சுப்பிரமணியரைத் தேசபக்த சுப்பிரமணியராக, தியாக சுப்பிரமணியராக, வீர சுப்பிரமணியராக மாற்றிவிட்டது.

தேசபக்தர் சாவர்க்கர் லண்டனில் அரசியற் புரட்சிக்குத் தலைவராயிருந்தாரென்ற காரணத்தால் அதிகாரிகளிடம் அகப்பட்ட பின்னர், ஐயர் ஐரோப்பாவில் பல இன்னல்களினின்றும் தப்பி வேடதாரியாய்ப் புதுச்சேரிக்கு வந்துசேர்ந்த விவரத்தை விவரிப்பதென்றால் அது பாரதமாகும். புதுவையில் ஐயர் அரசியற் புரட்சி முயற்சியில் ஈடுபட்டிருந்தாரென்று அதிகாரிகள் கருதினார்கள். ஆனால் ஐயர் அங்கே தமிழ் மொழி வளர்ச்சிக்காகவே பெரிதும் உழைத்தார்.

பெரு நோக்கங்கொண்டு, பெருஞ் செயல் செய்ய விரும்பிய ஐயர், சிற்றூரான புதுவையில் எத்தனை நாள் இருப்பதென்று கவன்றார். வருவது வருக என்று இறுதியில் ஐயர் சென்னைக்குத் துணிவுடன் வந்தார். நெடுநாளாகப் பிரிந்து வருந்திய நண்பர்களுக்கு அவரது வரவு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. 'பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?' ஆனால் இவ்வளவு விரைவில் அவர் திரும்பவும் வராமல், இவ்வுலகத்தைவிட்டே பிரிந்து விடுவாரென்று அவர் நண்பர்கள் அப்போது கனவிலும் கருதிலர்.'

சென்னைக்கு வந்தவுடன் ஐயர் அப்பொழுது காலியாயிருந்த 'தேசபக்தன்' பத்திராசிரியர் பதவியில் அமர்ந்தார். 'தேசபக்த'னில் அவர் எழுதிய சில கட்டுரைகள் காரணமாக அவர் மீது வழக்கு, ஏற்பட, ஒன்பது மாதம் சிறைவாசம் பெற்றார். சிறைவாசத்தை அவர் பெல்லாரியில் கழித்தார். பெல்லாரிச் சிறையிலிருந்து நீங்கியவுடன் அவர் வடநாட்டு யாத்திரை தொடங்கி காசி, அரித்துவாரம் முதலிய இடங்களுக்குச் சென்று திரும்பினார்.

1925ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூன்றாந் தேதி அன்று சேரன் மாதேவி அருகே அவர் நிறுவிய குருகுலத்துப் பிள்ளைகளுடன் ஐயர், பாபநாசம் அருவியில் நீராடச் சென்றார்; கூட அவருடைய மகள் சுபத்ராவும் சென்றாள். சுபத்ரா, அருவியின் ஓரிடத்தைக் கடக்க முயன்றாள்; முயலுகையில் கால் சறுக்கி அருவியில் விழுந்துவிட்டாள். அவளைத் தாவிப் பிடிக்க ஐயர் குதித்தார். அந்தோ! தந்தையும் மகளும் அருவிக்கு இரையானர்கள்.

ஐயரது வாழ்க்கை எவ்வளவு தீரமாக விளங்கியதோ, அவ்வாறே அவரது மரணமும் வீர மரணமாகவே விளங்கியது. அவர் முடிவடைந்த கதையும் ஒரு வியப்பான கதைதான். ஆற்றில் விழுந்த கன்னியைக் காக்குமாறு ஐயரும் பாய்ந்தார். அருவி இருவரையும் உண்டு பசி தீர்த்துவிட்டது.

ஐயர் போன்ற அரிய மனிதர்கள் தமிழ்நாட்டில் ஒரு சிலர்கூட இல்லையென்பது எனது தாழ்மையான கருத்து. தமிழகத்திற்கும், அதன் வாயிலாகப் பாரத தேசத்திற்கும் புத்துயிர் அளிக்குமாறு உழைத்த தேசபக்தர் திருக்கூட்டத்தில், ஐயர் முதற்பதவி பெறத் தகுந்தவர். அடிமைப் பட்டுழலும் தாய்நாட்டுக்கு விடுதலையளிக்குமாறு அல்லும் பகலும் உழைத்த வீர மைந்தர் குழுவில் ஐயர் சிறந்து விளங்கினார்.

இலக்கியத்துறையில் உழைத்த ஐயர், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். வேறு சில மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார். ஐயர் எழுதிய சிறு கதைகள் தனிச் சிறப்புடையன. உள்ளத்தை உருக்கி, உயர்ந்த கருத்துக்களை ஏற்றுவதில் அவரின் கதைகள் ஒப்பற்றனவாய்த் திகழ்கின்றன. தமிழில் கதை யெழுத விரும்புவோருக்கு ஐயர் நல்ல வழிகாட்டி!

(வ.வே.சு. அய்யர் அவர்களின் 'மங்கையர்க்கரசியின் காதல்' என்ற சிறுகதை தொகுப்பு நூலுக்கு எழுதப்பட்ட [illegible] யிலிருந்து)





# கால்நடை மருத்துவத்தில் எதிர்காலத் திட்டங்கள்


அ. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.,
துணைவேந்தர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.


கால் நடைப் பராமரிப்பில் தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் தேவைகளையும் பிரச்சினைகளையும் சமாளிக்க, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பல்வேறு ஆக்க ரீதியான புதிய செயல்திட்டங்களைச் செயல்படுத்தும் கருத்துரு உள்ளது. முதலில் புதிதாகத் தொடங்கப்பட உள்ள திட்டங்கள் குறித்துக் கூற விழைகிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரியில் பி.எச்டி வகுப்புகள் ஒன்பது பெரிய துறைகளில் மட்டுமே உள்ளன. வருகின்ற ஆண்டுகளில் பி.எச்டி பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு எல்லாப் படிப்புத்துறைகளுக்கும் விரிவாக்கப்படும்.

வளர்ச்சி பெற்றுள்ள படிப்புத்துறைகளில் உள்ள பல்வேறு பிரிவினர்களின் தேவைகளைச் சமாளிக்க மறுபயிற்சிப் பிரிவுகள் உருவாக்கப்படும்.

விலங்கினம், மற்றும் கோழிவளர்ப்பு நிர்வகிக்கும் முறை, பதப்படுத்தும் முறைகளில் குறுகிய காலச் சிறப்புப் பாடப் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழக கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சி சம்பந்தமாக பிரதான பகுதிகளில் இன்றைய அறிவியல் வளர்ச்சி, பிரச்சினைகள் தொடர்பானவற்றை வலியுறுத்தி அவற்றில் கவனம் செலுத்துவதற்காக வேண்டி கருத்தரங்குகளும் பணிமனை (Workshops) களும் நடத்தப்பெறும். விலங்கின அறிவியல் வளர்ச்சி தொடர்ந்து நிலவிட, விலங்கின அறிவியல் நூல்கள் வெளியிடப்படும்.

கால்நடை அறிவியல் துறையில் தொடர்ந்து ஆக்கரீதியாக செயலாற்றிட போதிய நூலக ஆய்வுக்கூட வசதிகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

பாடக்கல்வித் திட்டத்தை வலுப்படுத்தவும், ஆராய்ச்சிகளை மேலும் மேம்படுத்தவும் இரண்டு புதிய துறைகள் உருவாக்கப்படும். உயர் வேதியியல் துறை, கால்நடை நலம்-தொற்று நோய் இயல்துறை ஆகியவையே இவை. தற்பொழுது நுண்ணுயிரியல் துறையுடன் இணைந்துள்ள உயிர் வேதியியல்துறை பிரிக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு தனியாக இயங்கும் ஒரு துறையாக அமைக்கப்படும். பின்னால் பட்டமேற்படிப்பு, பி.எச்டி படிப்புகள் இத்துறையில் தொடங்கப்படும். இதனால் பட்டமேற்படிப்பு படித்தவர்கள் உயிர் வேதியியலில் மேம்பட்ட ஆராய்ச்சிப் படிப்புப் பெறும் வாய்ப்பினைப் பெறுவார்கள். மனிதனின் உடல் நலத்தை விலங்கின நோய்கள் எந்த அளவுக்குப் பாதிக்கின்றன, அவற்றை எப்படிக் கட்டுப்படுத்துவது, அவற்றைத் தடுக்க முன்கூட்டியே கையாளவேண்டிய முறைகள் ஆகியவை குறித்தெல்லாம் புதிதாக உருவாக்கப்படும் கால்நடை நலம் மற்றும் தொற்று நோய் இயல் துறை பயிற்றுவிக்கும்.

நவீனமான தேவையான சிறந்த கருவிகளைக் கொண்ட பால்வளத் தொழில் நுட்பக் கூடம் இந்தக் கல்லூரியில் உள்ளது. ஆகவே பால் வளத் தொழில் நுட்பத்தில் இளநிலைப் பட்டப்படிப்பிற்கான சிறப்புப் படிப்பினைத் தொடங்க நல்ல வாய்ப்பும் வசதியும் இக்கல்லூரியில் உள்ளன. மாநிலத்தில் ஏற்படுத்தப்படும் பால் வள வளர்ச்சித் திட்டங்களை விஞ்ஞானரீதியில் செயல்படுத்த தேவைப்படும் பயிற்சி பெற்றவர்கள், இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப் பெறுவார்கள். இவற்றோடு, கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிலதுறைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு, பயிற்றுவிக்கவும், ஆராய்ச்சிக்கும் தேவையான மேம்பட்ட ஆராய்ச்சி மையங்களாக (Advanced centres for teaching and research) மாற்றியமைக்கப்படும். கீழ்க்கண்ட மேம்பட்ட ஆராய்ச்சி மையங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**விலங்கின மரபியல் ஆராய்ச்சி மையம்**

இத்துறையில் கண்டுள்ள முன்னேற்றம் மிகப் பெரிது. மிகவும் பயனுள்ளவையாகும். ஆகவே, இம்மையத்தை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (1) விலங்கின மரபியலில் அடிப்படையானதும் விரிவானதுமான ஆராய்ச்சி நடத்துதல் (2) இத்துறைகளில் மேலும் உயர்மட்ட அறிவியல் திறன் பெற வாய்ப்பு அளித்தல் (3) ஆராய்ச்சி நிலையங்களில் கால்நடை, கோழி வளர்ப்புத் திட்டங்களுக்கு ஆக்க ரீதியாக உதவிபுரிதல் ஆகிய நோக்கங்களுக்காக இம்மையம் அமைக்கப்படும். அத்துடன், செயற்கை முறையில் கரு ஆட்டல் குறித்து பல்வேறு நுணுக்கங்கள் பற்றிய பயிற்சி வசதிகளையும் இம் மையம் அளிக்கும்.

**கால்நடைச் சத்துணவியல் பயிற்சி ஆராய்ச்சி நிலையம்**

பல்வேறு வகையான கால் நடைகளுக்குத் தகுந்தமாதிரியான தீவனப் பொருள்கள் யாவை? அவை விவசாயிகளுக்கு கட்டுபடியாகின்ற விலையில், அந்தந்த உள்ளூர்ப் பிரதேசங்களிலேயே கிடைக்கும் வழிமுறை என்ன என்பது குறித்து திட்டமிடப்படல் வேண்டும். அத்துடன், கால்நடைகளின் நலன், கால்நடைகளினால் நாம் பெறும் பயன்-பாதிக்கப்படாத வகையில் தரமான தீவனப் பொருள்கள் மிக கிடைக்க வழிவகை செய்தாக வேண்டும். மிக முக்கியமான இந்தப் பணியினைச் செம்மையாகவும் தீவிரமாகவும் நிறைவேற்றிட, இந்த மையத்தினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் வருமாறு :**

இனவிருத்தி செய்தல், கால்நடைத் தீவனம், பாதுகாப்பு, நிர்வாகம், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மண்டல ஆராய்ச்சி நிலையங்களில் ஒருங்கிணைந்து ஆராய்ச்சி செய்தல்.

ஏற்கனவே இருக்கும் ஆராய்ச்சிப் பண்ணைகளுடன், மாவட்டந்தோறும் புதிய ஆராய்ச்சி நிலையங்களையும் படிப்படியாக நிறுவுதல்.

இந்த அனைத்துப் பண்ணைகளிலும், பண்ணைப் பயிற்சி நிலையங்களை உருவாக்கி வளர்ச்சியடைந்த அறிவியல் கண்டுபிடிப்புகளை உழவர் பெருமக்களுக்கு தொடர்ந்து அறிவித்தல்.

நோய்களை அறிந்து அவை பற்றி சிகிச்சை முறைகளையும் அளிக்கும் வகையில் பணி நிலையங்களை உருவாக்குதல். இந்த நிலையங்கள், மாநில அரசின் பல்வேறு மேம்பாட்டுத் துறையினருடன் இணைந்து இப்பணிகளைப் புரியும்.

ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மட்டும் கவனிக்க இயக்குநர் தரத்தில், உயர் மட்ட அலுவலர்கள் அதற்கெனவே நியமிக்கப்படுவர். மாவட்டங்களில் நடத்த உத்தேசித்துள்ள அனைத்து ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கெல்லாம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வலுவான பக்க பலமாக இருந்து உறுதுணையாக நிற்கும். தங்களுடைய தொழில்முறையில் அவர்கள் மேலும் முன்னேற, இளநிலைப் பட்டப் படிப்பு படிப்போருக்கும் மேற்பட்டப்படிப்பு படிப்போருக்கும் இந்த மையங்கள் போதிய வாய்ப்புகளையும் வசதிகளையும் அளிக்கும்.

# பவழ விழா காணும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி



**கடைசி அட்டை சொல்லும் கட்டுரை**



டாக்டர் வி. எம். இராமசாமி,
தலைவர்,
கால்நடை மருத்துவக கல்லூரி,
சென்னை-7.



இன்றைய நவீன மருத்துவத்தை உண்டாக்கிய கால்நடை மருத்துவக் கல்லூரியின் தோற்றம், வளர்ச்சி முதலியன வியப்பூட்டும்.

கால்நடை மருத்துவம் மேல்நாட்டு முறையில் கி.பி.1774-ல் குதிரைப் படைகளைப் பேணிக் காக்க ஏற்பட்டாலும், கி.பி. 1862-ல் பூனாவில் தான் நம் நாட்டில் முதன் முதலாக இராணுவக் கால்நடை மருத்துவப் பள்ளி தொடங்கியது. இராணுவச் சார்பற்ற கால்நடைப் பள்ளி உத்திரப்பிரதேசத்திலுள்ள ஹாபூரில் 1872-ல் தொடங்கியது. காலம் செல்லச் செல்ல கால்நடை மருத்துவக் கல்லூரியின் தரம் அதிகரிக்க வேண்டியதாயிற்று. தொடர்ந்து 1882-ல் லாகூரில் (தற்போதைய பாகிஸ்தான் பகுதி) கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது.

அடிக்கடி நிகழும் பஞ்சம், கால்நடைக் கொள்ளை நோய் முதலியவற்றால் இழப்பு மிகுதியாயிற்று. அதனால் கால்நடை மருத்துவக் கல்வி முன்னை விட முக்கியத்துவம் பெற்றது. பம்பாயில் 1886-லும், . கல்கத்தாவில் 1893-லும், சென்னையில் 1903-லும் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தோன்றின.

அதைத் தொடர்ந்து முதன் முதலாக 1936-ல் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி பி.வி. எஸ்சி. பட்டப் படிப்பு தொடங்கியது. இதைத் தொடர்ந்து இந்நாட்டிலுள்ள மற்ற கால்நடை மருத்துவக் கல்லூரிகளும் படிப்படியாக டிப்ளமா படிப்புக்குப் பதில் பட்டப் படிப்பைப் புகுத்தியது. இச் சமயத்தில், கால்நடை பண்ணை மேம்பாட்டுப் பணிகள் எல்லாம் மாநில வேளாண்மைத் துறையிடமிருந்து கால்நடைத் துறைக்கு மாற்றப் பட்டன. இதனால் கால்நடை மருத்துவத் துறைக்குப் பெரும் பொறுப்பு ஏற்பட்டது.

இந்தியா 1947-ல் விடுதலை பெற்றதும் கால்நடை மேம்பாட்டில் அதிகக் கவனம் செலுத்தியது. 1946-1956 வரையான காலத்தில் 10 புதிய கல்லூரிகளும் 1958-1975 வரையான காலத்தில் நான்கு புதிய கல்லூரிகளும் திறக்கப்பட்டன.

இன்று குறைந்தபட்சம் ஒரு மாநிலத்திற்கு ஒரு கல்லூரி என்ற அளவில் 21 கால்நடை மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. சுமார் 13,000-க்கு மேற்பட்ட கால்நடை மருத்துவர்கள் இந்நாட்டில் உள்ளனர். இக்கல்லூரிகளின் தரம்மிக்கப் போதனைகளால் கால்நடை வளம் முன்னேற நல் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**பாடத் திட்டங்கள்:**

தரமான கால்நடைகளை அபிவிருத்தி செய்யவும், அவற்றை இலாபகரமான முறையில் பயன்படுத்தவும், அவற்றின் உடல் நலம் காத்து அதனால் பயன் பெறுதலும் கருத்தில் கொள்ளப் பட்டுள்ளன. நாட்டின் உடனடித் தேவையையும் மனதில்கொண்டு பாடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பும் சேர்த்துக் கற்பிக்கப்படுகின்றன.

கால்நடைகள் நம் நாட்டில் அதிக அளவில் இருப்பினும் அவைகள் தரம் குறைவுடையன. உலகிலுள்ள கால்நடைகளில் 23.1 சதவீதம் இந்தியாவில் இருந்தாலும் அவற்றின் பால் உற்பத்தி 6.5 சதவீதமே. எனவே பால்வளம் அதிகரிக்கவும் தேவையாக இருக்கிறது. இதையும் மனதில்கொண்டும் பாடத் திட்டம் அமைக்கப் பட்டுள்ளது.

இளமறிவியல் நிலையில் சிறப்புப் பாடம் என்று தனிப்பாடம் ஏதும் இல்லை. பள்ளி இறுதி (10+2) படித்தவர்களுக்கு 5 ஆண்டு பி.வி.எஸ்சி. பட்டவகுப்பு நடைபெறுகிறது.

**பி.வி.எஸ்சி. பாடத் திட்டமுறை**

முதலாம் ஆண்டு: ஆங்கிலம், பௌதிகம், வேதியியல், உயிரியல், பள்ளி விவா இயல். இரண்டாம் ஆண்டு: கால்நடைப் பராமரிப்பு, நலவியல். மூன்றாம் ஆண்டு: உடற்கூறியல், உடற் செயலியல், பால் இயல். நான்காம் ஆண்டு: நோய்க் கூறியல், நுண்ணுயிரியல், மருந்தாக்கியல், ஊட்டச் சத்தியல். இறுதியாண்டு முதற்பகுதி: கால்நடைப் பராமரிப்பு (விலங்கு மரபியல்) இரண்டாம் பகுதி: சிகிச்சை இயல், மருந்தியல், அறுவைச் சிகிச்சை இயல், ஈனியல்.

ஒவ்வொரு ஆண்டும் வேனிற்கால விடுமுறை சமயங்களில் ஒன்றரை மாதம் அரசு கால்நடைப் பண்ணைகளில் நேரடிப் பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். கால்நடைத் தொற்று நோய்த் தடுப்புக் கழகத்தில் மாணவர்களுக்குக் கால்நடை நோய்த்தடுப்பு, மருந்து தயாரிப்பு மற்றும் சோதனை செய்தல் ஆகியவற்றில் நேரடிப் பயிற்சிகள் தரப்படுகின்றன.

பின்னர் இத்துறையில் பணி புரிபவர்களுக்குக் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணியில் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கும் கல்வி முறைகளும் படிப்படியாக் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. அவை வருமாறு. 1. கால்நடை உதவி மருத்துவர்கள் கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை முன்னேற்றப் பணிகளில் அறிவைப் பெருக்கும் வண்ணம் மூன்றுமாத காலம் பயிற்சித் திட்டம். 2 கால்நடை வளர்ப்போருக்குக் கால்நடைப் பராமரிப்புப் பற்றி அறிவைப் புரவலாக்கும் வண்ணம் ஆறுமாதக் காலப் பயிற்சித் திட்டம். 3. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடத்தில் 9-ஆவது படிவம் தேறிய மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் முறையில் 12 மாத காலக் கால்நடை உதவியாளர் பயிற்சித் திட்டம். 4. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேறிய மாணவர்களுக்கு 11 மாத காலக் கால்நடை உதவியாளர் பயிற்சித் திட்டம். 5. தோல் பதனிடுதல்முறைகளைப் போதிக்கும் 3 மாத காலத் தோல் உரிப்புப் பயிற்சித் திட்டம். மேற்குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களில் சில நிறுத்தி வைக்கப்படும் மற்றவை தேவைப் படும்பொழுது நடத்தவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**பிராந்திய நிலையமாக உயர்த்தப் பட்டது.**

வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில், முதலாவதாக உருவான இந்திய அமெரிக்கக் குழுவின் சிபாரிசின்படி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நம் நாட்டின் ஒரு பிராந்திய நிலையமாக உயர்த்தப்பட்டதுடன் 1958-ல் முதுஅறிவியல் பட்டப் படிப்புத் திட்டமும் தொடங்கப்பட்டது. 1976-ஆம் ஆண்டு வரை இக் கல்லூரி தனி நெறியாளர் தகுதி பெற்றுப் பிராந்திய மேல்படிப்புக் கல்வி நிலையமாக இயங்கி வந்தது.

**வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது**

1976ஆம் ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பட்டது. இன்று பாடத்திட்ட முறைகள் முப்பருவத் திட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. மாணவரின் திறமை கற்பிக்கப் படும் ஆசிரியர்களாலேயே மதிப்பிடப்படுகிறது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் தற்சமயம் கீழ்க்கண்ட எட்டுத் துறைகளில் பி.எச்.டி பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன. அவை: 1. நுண்ணுயிர்த்துறை, 2. ஒட்டுண்ணி உயிரியல், 3 கோழியின் வளர்ப்பியல். 4. விலங்கு மரபியல், 5. விலங்கு உணவியல், 6. பால் இயல், 7. ஈனியல், 8. மருத்தியல். இக் கல்லூரியில் சிகிச்சை பிரிவுகள் விரிவு படுத்தப்பட்டு தனித் துறைகளாகச் சிகிச்சைப் பிரிவும், நோய் குறியீட்டுத்துறையும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. பல துறைகளில் கால்நடைக் கல்வி மேம்பாட்டில் அகில இந்திய ரீதியில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முன்னணியில் சிறந்து விளங்கி வருகிறது.

கல்லூரி நிர்வாகம் முதல்வர் அவர்களால் கவனிக்கப்படுகிறது. ஆராய்ச்சிகள், ஆராய்ச்சித் துறை இயக்குநரால் நெறிப்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களது நேரடிக் கண்காணிப்பில் பல துறைகள் விரிவடைந்து நமது நாட்டிலேயே கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கெல்லாம் கலங்கரை விளக்கமாக இயங்கி வருகிறது.

**வருங்காலத்தில் கால்நடை மருத்துவம்**

பொருளாதாரத்தில் மேம்பட்ட நாடுகளில் 5000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவர் உள்ளார். நமது நாடு போல் வளர்ந்து வரும் நாட்டில் 30,000 கால்நடைகளுக்கு ஒரு மருத்துவர் அவசியம் தேவை. கால்நடைச் செல்வம் பெருகும் போது இந்த விகிதம் மாறும்.

உணவு நச்சுப்பொருள் ஆய்வுக் கூடம் விரைவில் மாநில அளவில் துவக்கப்பட வேண்டும். கால்நடை மருத்துவமும் கால்நடை பேணுதலும் இரு தனித்துறைகளாக விளங்கித் தனிக்கல்லூரிகளாக இயங்க மிகப் பெரும் வாய்ப்புண்டு. பால் வளம் பெருக வேண்டிய சூழ்நிலையில் பால் இயல் கல்லூரி தனியே செயல்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. நம் நாட்டு மூலிகை மருந்துகளைக் கால்நடைகளுக்கும் உபயோகித்து ஆராய மருந்தியல் தனிப் பிரிவு ஏற்படும்.

கோழி வளர்ப்பு இயல் பற்றி அகில இந்திய அளவில் உத்தரப் பிரதேசத்தில் ஆய்வுக்கூடம் துவங்கப்பட்டுள்ளது. இந்திய வேளாண்மைக் கழகத்தின் ஒருங்கிணைந்த கோழி ஆராய்ச்சி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இயங்குவதாலும், கோழிஇயல் துறை வேளாண் மக்களின் தேவைக்கேற்ப வளர்ந்து வருவதாலும் இத்துறையைப் பிராந்திய கோழி ஆராய்ச்சிக் கூடம் ஆக விரிவு படுத்த வேண்டும்.

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

நுட்பவியல் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் தங்கும் விடுதிகளில் கூடுதலாக இல்லங்கள் கட்டுவ வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல பிரிவுகளில் புதிய பாட முறைகளைத் தொடங்குவதற்காக வரும் ஆண்டில் அரசு ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கி யுள்ளது.



### விளையாட்டு, இளைஞர் நலத் துறை

**36.** தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுகள், மேனிலை அடைவதில் அரசு அக்கறை காட்டி வருகிறது. இதற்கென அமைக்கப் பட்ட துறை ஒன்று இளம் வயதிலேயே விளையாட்டு களில் ஆற்றலுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களது ஆற்றலை வளர்க்கப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 1981–82-ல் புதுக்கோட்டை, பெரியார் மாவட்டங்களில் திறந்த வெளி விளையாட்டு அரங்குகள் கட்டும் பணி தொடங்கப்படும். இரு மாவட்டங்களின் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டப்படும். 150 ஊராட்சிகளில், கிராம விளையாட்டு நிலையங்கள் அமைக்கப்படும். இளம் வயதிலேயே ஆற்றல் பெற்ற விளையாட்டு வீரர்களைத் தெரிந்தெடுக்க அடுத்த ஆண்டில் '' இளமையிலேயே ஆற்றலைக் கண்டுபிடித்துப் பயிற்சியளிக்கும் '' திட்டம் விரிவாக மேற்கொள்ளப்படும். கட்டிடத்திற்குள் விளையாட்டுகள் நடத்துவதற்கான விளையாட்டு அரங்கம் ஒன்றை அடுத்த ஆண்டு சென்னை மாநகரில் இவ்வரசு கட்டக் கருதியுள்ளது.

### மருந்துவம்

**37.** கிராமப் பகுதிகளில் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்கிற கொள்கைக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அடுத்த ஆண்டில் 20 தொடக்க சுகாதார நிலையங் களைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மருத்துவமனைக்குரிய வசதிகளைச் செய்து கொடுப் பதற்கென, தற்போதுள்ள 14 நிலையங்கள், 82 இலட்சம் ரூபாய் செலவில் தரமுயர்த்தப்படும். இயங்கி வரும் மருத்துவ ஊர்திப் பிரிவுக்கென ஒதுக்கப்படும் தொகை 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படும். 6 முதல் 11 வயதுள்ள பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் நடப்பாண்டில் 20 தொடக்க சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப் பட்டது; இது அடுத்த ஆண்டில் 50 தொடக்க சுகாதார நிலையங்களிலும் 25 நகராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும். முத்தடுப்பு ஊசி போட்டு, சிறார்களுக்கு நோய் வராமல் பாதுகாக்கும் திட்டம், மேலும் 50 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இத்தகைய ஏற்பாடுகளினால் 1981--82-ல் 8.5 இலட்சம் சிறார் கூடுதலாகப் பயனடைவர். அதே சமயத்தில் நகர்ப்பகுதி மக்களின் தேவைகளையும் அரசு புறக்கணிக்கவில்லை. அனைத்து நாடுகள் உடல் ஊன முற்றோர் ஆண்டாகிய இவ்வாண்டில் மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் உறுப்பு பொருத்தும், மறுவாழ்வு அளிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கெனப் புதிய கட்டிடம் 24.50 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படும். அரசுப் பொது மருத்துவ மனையில் குண்டிக்காய் மாற்றியமைக்கும் பிரிவும், மதுரை மருத்துவக் கல்லூரியில் நச்சு நுண்ம ஆய்வியல் பிரிவும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். சென்னை மாநகரின் வட பகுதிச் சிறார்கள் பயனடைய, ஸ்டான்லி மருத்துவ மனையில், குழந்தை நோயியல் தனிப்பிரிவு ஒன்று தொடங்கப்படும். பெரம்பூரில் 170.91 இலட்சம் ரூபாய் செலவில் புறநகர் (Peripheral) மருத்துவமனை ஒன்று புதிதாகக் கட்டப்படும். அடுத்த ஆண்டில், கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை 15,050ஆக உயர்த்தப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் தற்போதுள்ள, 4,631 படுக்கைகளுக்கு மேலாக 507 படுக்கைகள் சேர்க்கப்படும். அடுத்த நிதி ஆண்டில் விபத்து அவசர உதவித் திட்டம், 181.38 இலட்சம் ரூபாய் செலவில் 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்திலும் மின் உற்பத்தி பதிலி இயந்திரங்கள் வைக்கப்படும். இதற்காக, அடுத்த ஆண்டில் 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



**38.** உடல் நலன் தொடர்பான அனைத்தும் இடம் பெறும் விரிவானதோர் உடல்நலப் பாதுகாப்புத் திட்டம் 1981-82ஆம் ஆண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும். மகப்பேறு–குழந்தை நலன், குடும்ப நலன், நோய்த் தடுப்புப் பணிகள் ஆகியவற்றுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கிராமப் புற மருத்துவமனைகளில் இன்றியமையா அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதும் இத்திட்டத்தில் இடம் பெறும். ' டேனிஷ் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம் ' இதற்கு நிதியுதவி செய்யும். சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் ஐந்தாண்டுகளில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இதற்கு 14 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டம் செயற்படுத்தப்படும் பகுதியிலுள்ள மக்களின் நல வாழ்வு சிறப்புடன் அமையவேண்டுமென்பதும் சமூகத்தின் நலிந்த பிரிவினர் மேன்மையுற வேண்டு மென்பதுமே இதன் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1981-82ஆம் ஆண்டில், 2.40 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்திற்கு 1975-76ஆம் ஆண்டில் 41.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. இத்தொகை, 1980–81ஆம் ஆண்டில் 102.37 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்தில் இவ்வரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இதைக் கருதியே, அடுத்த ஆண்டில் 200 தொடக்கச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குவதாக அரசு அறிவித்துள்ளது. இதற்கு 62 இலட்சம் ரூபாய் செலவாகும். இராமநாதபுரம், தருமபுரி, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் குழந்தைகளுக்கென 15



படுக்கைகள் கொண்ட வார்டுகள் ஏற்படுத்தப்படும். சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில், 24 படுக்கைகள் கொண்ட வார்டு ஏற்படுத்தப்படும். திண்டுக்கல், வேலூர் ஆகிய இடங் களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை களில், சித்த மருத்துவப் பிரிவுக்கென்றே தனிக் கட்டிடங்கள் கட்டப்படும். இதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவாகும். இத்திட்டங்கள் அனைத்தையும் செயற்படுத்துவதற்காக, இந்திய முறை மருத்துவம் என்பதன்கீழ் நிதி ஒதுக்கீடு, 171·47 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**39.** இவ்வாண்டில், ' தொடர் கதிர் வீச்சியக்க முப்பரிமாண உருப்பதிவு கணி பொறி ' (CAT. Scanner), இதயத் துடிப்புப் பதிவுப் பொறி (Echo Cardiogram) என்னும் விலையுயர்ந்த நவீன மருத்துவக் கருவிகள் இரண்டினைப் பயனுக்குக் கொண்டுவந்த பெருமையைச் சென்னை, பொது மருத்துவமனை பெற்றிருக்கிறது. மூளை, இதய நோயினால் அவதியுறும் ஏராளமான நோயாளிகளுக்கு இது ஒரு சீரிய வசதியாக அமையும். சென்னை மத்திய சிறைச் சாலையைச் சென்னைக்கு வெளியே ஓரிடத்தில் அமைத்துவிட்டு, சென்னை மத்திய சிறைச்சாலை இருக்கும் இடத்தைச் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் கிடைக்கும் வசதிகளைப் பெருக்குவதற்கான செயற்குறிப்பை அரசு ஆலோசித்து வருகிறது.

### குடும்ப நலன்

**40.** குடும்ப நலத் திட்டம் இம் மாநிலத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் 1,82,000 பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதென இலக்கு குறிக்கப் பட்டது ; 1981 சனவரி இறுதிவரை, 101,253 பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளது. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை களில் மகப்பேறுக்குப் பின் உடனடியாக ஒரு சில நாட் களுக்குள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய, கூடுதலாக 10 படுக்கைகள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில், மகப்பேறுக்குப் பின் உடனடியாக ஒரு சில நாட்களுக்குள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதெற்கென 20 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றைக் கட்ட 28·60 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. கருத்தடை அறுவை சிகிச்சை தரமானதாக இருக்கவும், மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டிய ஏனைய முறை கேடுகளைப் போக்கவும் ஏதுவாக, குடும்ப நலத் திட்ட மும்முரப் பிரச்சாரத்தைச் செம்மைப்படுத்த, அரசு இவ்வாண்டில் சிறிது காலம் நிறுத்தி வைத்திருந்த இத் திட்டம் தற்போது ஒரு சீராக, தொடர்ந்து, ஆண்டு முழுதும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### கிராம வளர்ச்சி.

**41.** ' வேலைக்கு உணவளிக்கும் திட்டமும் ', அதற்குப்பதிலாக நிறைவேற்றப்பட்டுவரும் ' கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டமும்', முறைப்படித் தேர்ச்சி பெற்றிராத கிராமத் தொழிலாளர்களுக்குப் [illegible] வேலைவாய்ப்புகள் அளித்து [illegible] திற்கு நிலையான சொத்துக்களை உருவாக்கியுள்ளது. இத் திட்டங்களின்கீழ், நடப்பாண்டில், 768.5 இலட்சம் ரூபாயையும் 60,000 டன் அரிசியையும் இந்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 1—4—1980ஆம் நாளி லிருந்து பிப்ரவரி 1981 இறுதிவரை, 8.36 கோடி ரூபாய் மதிக்கத் தக்க பணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. உறுதி யான. வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ், பிப்ரவரி இறுதிவரை, ஏறக்குறைய 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

### தன்னிறைவுத் திட்டம்.

**42.** மிகவும் முக்கியமான திட்டங்களில் தன்னிறைவுத் திட்டமும் ஒன்றாகும் ; இத்திட்டம் கிராமப் பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது ; 69 வளர்ச்சி வட்டாரங்களில் பணிகள் நடந்து வருகின்றன, இத்திட்டத்தில்—

(i) குடிநீர் வழங்கல் ;
(ii) இணைப்புச் சாலைகள் ;
(iii) மதகுப் பாலங்கள் ;
(iv) ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடுகாடுகளுக்கும் பாதைகள் ;
(v) சிறு பாசன ஆதாரங்கள் மேம்பாடு ;
(vi) கிராமப்புற மருந்தகங்கள் ;
(vii) மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள் ;
(viii) பள்ளிக் கட்டிடங்கள் ;
(ix) ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் (கிராமப்புற வீட்டு வசதி திட்டம்)

ஆகிய இன்றியமையாப் பணிகள் மேற்கொள்ளப் படுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருப்பர். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எய்தியுள்ள சாதனைகள் பாராட்டுக்குரியவை ஆகும். 6,796 கிலோ மைல் இணைப்புச் சாலைகள், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் 976 கிலோ மீட்டர் பாதைகள், 942 பள்ளிக் கட்டிடங்கள், 81 கிராமப்புற மருந்தகங்கள், 237 மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள் ஆகியவை குறித்த பணிகள் இந்த நிதியாண்டு இறுதியில் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் வெற்றி பெற்றுள்ளதால், 1981–82ஆம் ஆண்டில் மேற் கொண்டும் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டத்தை அரசு செயற்படுத்தும்.

### கிராமக் குடிநீர் வசதி

**43.** வகை II எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் குடிநீர் வசதிசெய்து கொடுக்கும் திட்டம் முடிக்கப் பெற்றுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள குடியிருப்பு களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கென்றே, 1981–82 ஆண்டுக்கான நிதி ஒதுக்கம் 24.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

### கிராம வீட்டு வசதித் திட்டம்

**44.** இவ்வரசு, 1979ஆம் ஆண்டில் தொடங்கிய கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், மாபெரும் வெற்றி கண்டுள்ளது. ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதென முதலில் இலக்கு குறிக்கப்பட்டிருந்தது.



எனினும், இக்கால அளவில் 2 இலட்சம் வீடுகள கட்ட அரசு உதவி செய்யக் கருதியுள்ளது. 1980 ஜூலை முதல் 1981 பிப்ரவரி வரையிலான கால அளவில் 73 ,756 கடன் மனுக்களுக்கு 22·68 கோடி ரூபாய் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அக்கால அளவில், 19,952 வீடுகள் கட்டி முடிக்கப்பெற்றன. அவற்றில் 15,009 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கென்று கட்டப்பட்டவை ஆகும். 1981–82ஆம் ஆண்டில், 40,000 வீடுகள் கட்ட நிதியுதவி செய்யப்படும்.

### குடிசை மாற்று வாரியம்

**45**. குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணி நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. 1980 வரை, 29 கோடி ரூபாய் செலவில், 27,783 அடுக்குத் தொடர் வீடுகள் (Tenements) கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், ரூ. 3·24 கோடி செலவில், அத்தகைய வீடுகள் 3,200 கட்டி முடிக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில், அத்தகைய வீடுகள் ரூ. 3.42 கோடி செலவில் மேலும் 3,500 கட்டப்படும். இத்திட்டத்திற்கென, குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, 1980–81 ஆம் ஆண்டில் 1,50 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்பட்டது; 1981–82ஆம் ஆண்டில் 2,50 இலட்சம் ரூபாயாக நிதியுதவி உயர்த்தப்பட்டுள்ளது.

### ஊனமுற்றோர் நலன்

**46**. ஊனமுற்றோர் சர்வதேச ஆண்டாகிய இந்த ஆண்டில், உடலூனமுற்றோர் நலனுக்காக அரசு பல புதிய திட்டங்களைத் தொடங்கும். ஊனமுற்றோருக்குச் சிறப்பாகப் பயிற்சியளித்து, அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொடுப்பதற்கென வட்டாரப் பயிற்சி நிலையங்கள் மூன்றினை அரசு ஏற்படுத்தக் கருதியுள்ளது. பார்வையற்றோருக்கான பள்ளிகள் இரண்டும், காது கேளாதோருக்கான பள்ளிகள் இரண்டும், கைகால் முடமாகி மிகவும் உடலூனமுற்றோருக்கான நிலையம் ஒன்றும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். வேலையற்ற பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவித்தொகை ஒருசில நிபந்தனைகளைச் சிறிது தளர்த்தி உடலூனமுற்றோருக்கும் கொடுக்கப்படும். உடலூனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு முயற்சிமூலம் சிறு தொழிற்கூடங்களைத் தொடங்க இயலும் வகையில், அவர்களுக்கு அரசு உதவித் தொகையை அளிக்கும். செயற்கை உறுப்புகள் பொருத்தும் துணை நிலையங்கள் இரண்டும், மதுரையில் உறுப்பு இணைப்பு-மறுவாழ்வு நிலையமும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். இவர்களுக்கெனத் தகுந்த திட்டங்களைத் தயாரிப்பதற்காக, உடலூனமுற்றோர்களை இனங்கண்டறிந்து, அவர்களது எண்ணிக்கையைத் கணக்கிட்டு அறிவது இன்றியமையாததாகிறது. உடலூனமுற்றோர் எத்தனை பேர் என்பதை அரசு கணக்கெடுக்கும். தொடர் திட்டங்களைத் தவிர உடலூனமுற்றோர் நலனுக்கான திட்டங்களுக்கு 1981–82-ல் 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்ற சிறார்களைப் பேருந்துகளில் இலவசமாக ஏற்றிச் செல்லும் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் செயல் படுத்தப்படும்.






மகளிர், குழந்தைகள் நலன்

**47**. வறிய மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. வறிய மகளிர் 1,000 பேருக்கு வணிகமுறையில் கணக்கு எழுதும் தொழில் பயிற்சியளிக்கும் புதிய திட்டம் 1981–82ஆம் ஆண்டில் செயற்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். கைம்பெண்களின் மக்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பதற்கு அவர்களுக்கு நிதியுதவி செய்யப்படும். குறைந்த விலையில் ''தாலிக்குத் தங்கம்'' வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். 1981–82ஆம் ஆண்டில் முதல் கட்டமாக, ஏழைக் கைம் பெண்களின் மகளிர் திருமணத்திற்குக் குறைந்த விலையில், ''தாலிக்குத் தங்கம்'' வழங்கப்படும். இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**48**. 1981–82ஆம் ஆண்டில், குழந்தை நல நிலையங்கள் 100 தொடங்கப்படும்; 20 நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்படும். மேலும், சென்னை மாநகரில், குழந்தை நல வளர்ச்சிப் பணி ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் குழந்தை காப்பகங்கள் (Creches) 100 தொடங்கக் கருதப்பட்டுள்ளது. பெண் தொழிலாளர்களின் சிறார்களைக் கவனித்துக் கொள்ள 50 குழந்தை காப்பகங்கள் கோயம்புத்தூரிலும் மதுரையிலும் தொடங்கப்படும். உலக வங்கி சத்துணவுத் திட்டம், 1981–82ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்திலுள்ள 33 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்படும். இதற்கென, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 8·54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதார துணை நிலையங்கள் கட்டுவது, சத்துணவுப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுத்துப் பயிற்சியளிப்பது, துணைச் சத்துணவு வழங்குவது ஆகிய பணிகள் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் நலன்

**49**. ஆதி திராவிட மாணவர்களுக்கு 15 மாணவர் இல்லங்கள் வரும் ஆண்டில் தொடங்கப்படும். உயர்நிலைப் பள்ளி மாணவரில்ல உணவுச்செலவை முன்னிட்டு இல்ல மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை 15 ரூபாய் உயர்த்தப்படும்; மானியம் பெறும் மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகை 10 ரூபாய் உயர்த்தப்படும். இதற்கு ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். 1981–82ஆம் ஆண்டில், ஆதி திராவிட, பழங்குடியினர் மாணவர் மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்கு 2,45 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளி அளவில், ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டத்தை முன்னோடித் திட்டமாக 1981–82ஆம் ஆண்டில் அரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் 500 உயர்நிலைப் பள்ளிகளில்



களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம், வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய திட்டக்குழு நிர்ணயித்துள்ளபடி, ஆண்டுதோறும் 7·8 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதி திராவிடர் வீட்டு வசதி-வளர்ச்சிக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு செய்ய ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் நன்மை பெறும் வகையில் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் இதன் நோக்கமாகும். மலை வாசிகளுக்கு உதவி செய்வதற்காக சிறு தொழில்கள் தொடங்கும் தனித் திட்டம் வகுக்கப்படும்.

### பிற்பட்டோர் நலன்

**50**. பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த மாணவர்களுக்காக 34 இல்லங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு உள்ளன. 1981–82ஆம் ஆண்டில் 13·16 இலட்சம் ரூபாய் செலவில் 40 புதிய இல்லங்கள் தொடங்கப்படும். 3 இல்லங்களின் கட்டிடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் நரிக்குறவர்கள், ஒட்டர்கள், முடிதிருத்துவோர். சலவைத் தொழிலாளர் ஆகியோர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க நில எடுப்பு செய்யும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 15 இலட்சம் ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பிற்பட்டோர் நலன் குறித்த செலவு 1980–81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 7,56 இலட்சமாக இருந்தது. 1981–82ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 7,99 இலட்சமாக உயர்த்தப் பட்டு உள்ளது.

### புயல் காப்பிடங்கள்

**51**. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி, புயலின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகிறது. ஆகவே, புயல் வீச்சுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் புயல் காலங்களில் காப்பிடங்கள் பலவும் அமைப்பதற்காக, கடற்கரை நெடுக ஆங்காங்கே புயல் துயர் தணிப்பு நிலையங்கள் 82 கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. செலவுத் தொகையில் 50 சதவீதத்தை நிதியுதவியாக இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையும் எஞ்சிய 50 சதவீதத்தைத் தமிழ்நாடு அரசும் ஏற்று, அத்தகைய துயர் தணிப்பு நிலையங்கள் 25 கட்டப்படுகின்றன. இதே அடிப்படையில், யுனிசெஃப் மூலம் 2 காப்பிடங்கள் கட்ட கனடா அனைத்து நாடுகள் நிறுவனம் உதவி வருகிறது. புயல் துயர் தணிப்பு நிலையங்கள் 50 கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் வழங்க ஐரோப்பிய பொருளாதார அமைப்பு முன்வந்துள்ளது. இக்காப்பிடங்கள் கட்டும் பணி சிறப்பாக நிறைவேறி வருகிறது.

### வருவாய்த் துறை நிர்வாகம்

**52**. வருவாய்த் துறை பிர்கா ஆய்வாளர்களுக்காக அலுவலகம்—குடியிருப்புக் கட்டிடம் கட்டும் பணியை அரசு படிப்படியாக எடுத்துக் கொண்டுள்ளது. 1981–82-ல் 50 இலட்சம் ரூபாய் செலவில், கூடுதலாக 200 கட்டிடங்கள் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்படும். கிராமச் சாவடிகள் கட்டும் பணியும் 10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும். அடுத்த ஆண்டில், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் இரண்டும், வட்ட அலுவலகங்கள் மூன்றும் 27·50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்படும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட பெரியார் மாவட்டத்திற்காக ஈரோட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் ஏனைய அலுவலகங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை எடுத்துக்கொள்ள 1981-82ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 126 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதால், துணை வட்டங்களைத் தரமுயர்த்தும் பணி 1980–81-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் சுயேச்சைப் பொறுப்புள்ள துணை வட்டங்கள் ஆறும், துணை வட்டங்கள் பத்தும், 32·32 இலட்சம் ரூபாய் செலவில் முழுமையான வட்டங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

### காவல் துறை

**53**. தமிழ்நாட்டுக் காவல் துறையினர், திறமையுடன்—பாரபட்சமின்றிக் கடமையாற்றி வருகின்றனர். மிகவும் கடினமான சூழ்நிலைகளில் பணியாற்றும் இவர்களுக்காக நலப்பணித் திட்டங்கள் பலவற்றை அரசு தயாரித்து வருகிறது. மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் ஏற்பாடு காவலர்கள் குடும்பங்களுக்குப் பெரிதும் நன்மை பயப்பதாக உள்ளது. ஓர் ஆண்டில் இதற்கு 4 கோடி ரூபாய் செலவாகிறது.

**54**. காவலர்களிடையே பணி உற்சாகத்தை வளர்க்கவும், அஞ்சாமை, நம்பிக்கை உணர்வுகளை ஊட்டவும் கருதி, தீரச் செயல் புரியும்போது உயிரிழந்தவர்களுக்காக 10,000 ரூபாய் சிறப்புக் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழும் 10,000 ரூபாய் மொத்தமாக வழங்கப்படுகிறது. அதே போன்று காயமுற்றவர்களுக்கும் 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. கடமை கருதி வீரச் செயல் புரியும்போது ஏற்பட்ட காயத்தினால் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கு 5,000 ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. சிறப்புச் சூழ்நிலைகளில் கூடுதல் தொகையும் கொடுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, திருப்பத்தூர் வட்டக் காவல் நிலையம் அருகே, 1980 ஆகஸ்டு மாதத்தில் உயிரிழந்த காவல் துறை அலுவலர் சிலருக்கு அவ்வாறு கூடுதல் தொகை கொடுக்கப்பட்டது. உயிரிழந்த ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் 30,000 ரூபாய் கூடுதல் கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இவ்வாறாக, ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் மொத்தம் 50,000 ரூபாய் நிதி உதவி செய்யப்பட்டது.

**55**. நடப்பாண்டில் இம்மாநிலத்தில் புதிதாக காவல் நிலையங்கள் 16ம், 8 புறக் காவல் நிலையங்களும், காவல் சரகத் தலைமையிடம் ஒன்றும்



தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்கள் மூன்று முழுத் தகுதி பெற்ற காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப் பட்டுள்ளன. சமூக விரோத சக்திகளிடமிருந்து கிராம மக்களைப் பாதுகாக்க வேண்டியதைக் கருத்தில் கொண்டு கிராமப் பகுதிகளில் அவசியமான இடங்களில் காவல் நிலையங்களை அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும். 12,000 காவலர்களை நியமிக்க அரசு திட்டமிட்டிருந்தது. அதன் பகுதியாக, இந்த நிதி ஆண்டில் 4,000 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**56.** உயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் (V. H. F. Sets) 350, இருவழி செய்தித் தொடர்புக் கருவிகள் (Walkie Talkies) 1,800 ஆகியவற்றை வாங்க 2 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. காவல் படையை நவீனமாக்கவும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவும் இவை வாங்கப்படுகின்றன. மிக உயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் வாங்க 1·2 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**57.** காவல் படையின் மகளிர் பிரிவும் வலுப் படுத்தப்படுகிறது. மகளிர் 60 பேரை சப்-இன்ஸ்பெக்டர்களாகவும், 60 பேரைத் தலைமைக் காவலர்களாகவும் 600 பேரைக் காவலர்களாகவும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**58.** தீயணைப்புத் துறை, தொடர்ந்தாற்போல் திறம்படச் செயல்பட்டு வருகிறது. நீர் தொட்டி மோட்டார் பிரிவு (Mobile Tank Unit), பம்பு இழுவை மோட்டார் வண்டி (Trailor Pump) வான்வழித் தொலைபேசி வசதியுள்ள கார்கள் (Wireless Cars) போன்ற ஆயத்த நிலை தீயணைப்பு என்சின்களையும் தீயணைப்பு நவீன இஞ்சின்களையும் வாங்க முன்னுரிமை அளிக்கக் கருதப்பட்டுள்ளது. வேறு வகை சாதனங்கள் சிலவும் இத்துறைக்கு வாங்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் செயல்களை வலுப் படுத்தும் வகையில் தீயணைப்பு நிலையங்கள் மேலும் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில நிலைகளுக்குக் கீழேயுள்ள தீயணைப்புப் பணியாளர்களுக்கு, மலிவு விலையில் சில உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### அரசு அலுவலர்களுக்குச் சலுகைகள்

**59.** மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளைச் செயல் படுத்துவதன் விளைவாக ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட முரண்பாடுகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒரு நபர்குழு அமைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவர். இக் குழுசெய்த பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது—

(அ) சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய விதங்கள் மாற்றியமைக்கப்படும்; இவ்வாறு மாற்றியமைக்கப்படும் ஊதிய விதங்கள் 1—4—1978 முதல் அமுல் செய்யப்பட்டு, அதன் நிதிப் பலன் (Monetary Benefit) 1—1—1981 முதல் அளிக்கப் படும்.

(ஆ) தற்போது ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை






கணக்கில் கொள்ளப்படுவதில்லை. இனி, அந்த இரண்டு படிகளும் ஒப்புவிப்பு ஊதியத்தில் சேர்த்து அளிக்கப்படும்.

(இ) தேர்வு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்களுக்கும் தேக்க நிலை ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

(ஈ) தேர்வு நிலை அளிக்கப்படாத சாதாரண நிலைப் பதவியிலுள்ளவர்களுக்கும், தேர்வு நிலைப் பதவியிலுள்ளவர்களுக்கும் அவர்கள் தத்தம் ஊதிய விதத்தின் உச்ச நிலையை அடைந்தால், தேக்கநிலை ஊதிய உயர்வு தொடர்ந்து அளிக்கப்படும்.

(உ) தேக்க நிலை ஊதிய உயர்வுக்கான ஊதிய உச்ச வரம்பு ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப் படும்.

(ஊ) தேர்வு நிலையில் அலுவலரின் ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது, ஊதியத் தரங்கள் 8 முதல் 11 வரையில் உள்ளவர்களுக்கு ரூ. 15ம், 12 முதல் 16 வரையிலுள்ளவர்களுக்கு ரூ. 10ம் குறைந்தபட்ச நன்மையாக அளிக்கப்படும்.

(எ) கூடுதல் பொறுப்புகளை உடைய உயர் பதவிக்கு அலுவலர் பதவி உயர்வு பெறும்போது, கீழ் பதவியில் பெற்ற ஊதியத்தைவிட 5 சதவீதம் குறைந்த பட்ச நன்மை பெறும் வகையில் ஊதியம் நிர்ணயிக்கப் படும்.

(ஏ) நிரந்தரமாக நியமிக்கப்பட்ட அல்லது தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்துள்ள அலுவலர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை ஒன்று அளிக்கப்படும். இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை, அலுவலர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து 240 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தூரத்தில் தமிழகத்திலுள்ள எந்த இடத்திற்கும் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்ய இச்சலுகை அளிக்கப்படும். இரயில் கட்டணத்தில் ஒரு வழிச் செலவை அரசு ஏற்கும். அலுவலர் குறைந்தது 15 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சென்றால் மட்டுமே இச்சலுகை அளிக்கப்படும்.

(ஐ) மூன்றாவது ஊதியக்குழு அல்லது ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஊதிய விதங்களில், 1—4—1978 முதல் 31—3—1979 வரையில் இடைப்பட்ட காலத்தில் ஊதியத்தை நிர்ணயம் செய்ய அலுவலர் மீண்டும் விருப்பம் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இந்த வாய்ப்பை 31-8-1981க்குள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முடிவுகளின் விளைவாக, அரசுக்கு ஆண்டிற்கு ரூ. 3 கோடி அளவில் செலவு ஏற்படும்.

**60.** அரசு அலுவலர்களுக்கு மகளின் திருமணத்திற்காகவும், மகனின் திருமணத்திற்காகவும் அளிக்கப்படும் திருமண முன் பணத்தின் தற்போதைய வரம்பான ரூ. 2,000, ரூ. 1,000 முறையே ரூ. 3,000, ரூ. 1,500 ஆக உயர்த்தப்படும்.

**61.** ஒய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற்றவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒய்வூதியத் தொகையை



முழுமையாக அளிக்க வேண்டும் என்று ஓய்வூதியம் பெறுபவர்கள் முறையிட்டு வருகின்றனர். சட்டப்படி இவ்வாறு முழுமையாகத் தர கட்டாயம் இல்லா திருப்பினும், ஓய்வூதியம் பெற்றவர்களின் முறையீட்டை கருணை அடிப்படையில் ஏற்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலருக்கு அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவுபெற்றவுடன் இச்சலுகை அளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட சலுகைகள் அனைத்தும் ஆணைகள் பிறப்பிக்கும் தேதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும்.

**62.** சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 376ஐக் கடந்துள்ளதால் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அகவிலைப் படியின் அடுத்த தவணையை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. 1980 டிசம்பர் 1ஆம் தேதி முதல் ரூ. 650 வரை ஊதியம் பெறுவோருக்கு 2·5 சதவீதமும், ரூ. 650க்கு மேற்பட்டவர்களுக்கு 1·875 சதவீதமும் அளிக்கப்படும்.

### ஆண்டுத் திட்டம்

**63.** 1980–81ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் ரூ. 438·61 கோடி அளவிலான ஆண்டுத் திட்டத்திற்கு வகை செய்தது. பிறகு மேற்கொள்ளப் பட்ட பல மாற்றங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ள 1980–81 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளிலிருந்து ஆண்டுத் திட்டம் ரூபாய் 4,54 கோடியாக வெளிப்படுகிறது. இதற்கு எதிராக, 1981–82ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 514 கோடி அளவில் அமையலாம் என மத்தியத் திட்டக் குழு வரையறுத் துள்ளது. எனது உரையில் முன்னர் குறிப்பிட்டுள்ள தவிர்க்க முடியாததும் மிக அவசியமும் ஆன சில திட்டங்களின் உயர்வுகள் இந்த அளவிற்குள் மட்டுப்படுத்த இயலாது. வரும் ஆண்டு புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் ரூ. 35 கோடி ஆண்டுத் திட்டச் செலவிற்கு வித்திடுகின்றன. இத்தகைய முக்கிய ஒதுக்கீடுகளையும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட அளவான ரூ. 3150 கோடி அளவையும் இணைத்துப் பரிசீலித்து, ரூ. 563·26 கோடி அளவில் அடுத்த ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள முக்கிய செலவினங்களை ஏற்கெனவே கோடிட்டுக் காட்டி உள்ளேன். மின் உற்பத்திக்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து, திட்டச் செலவில் 30 சதவீதம் இதற்கு ஒதுக்கியுள்ளது. ரூ. 169·59 கோடி மின் உற்பத்திக்கும், ரூ. 26·62 கோடி பாசனத்திற்கும், ரூ. 104·69 கோடி வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கும், ரூ. 55·61 கோடி தொழில் துறைக்கும் ரூ. 37·61 கோடி சாலை மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கும், ரூ. 23·58 கோடி கல்விக்கும், ரூ. 25·89 கோடி மருத்துவம், சுகாதாரம் துறைகளுக்கும், ரூ. 51·30 கோடி குடிநீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கும், ரூ. 33·83 கோடி வீட்டு வசதி நகர் வளர்ச்சி துறைகளுக்கும் ரூ. 17·87 கோடி ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் நலனுக்கும், [illegible] கோடி பிற துறைகளுக்கும் செலவிட ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

### நிதி நிலைமை

**64.** வருவாய்க் கணக்கில் ரூ. 15·39 கோடி அளவில் உபரி இருக்கும் வகையில் வரவுகள் ரூ. 9,82·66 கோடி என்றும், செலவுகள் ரூ. 9,67·27 கோடி என்றும் ரூ. 15·39 கோடி உபரி என்றும் 1980–81ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. திருத்த மதிப்பீடுகளில் மின்சார வாரியத்திற்கு மானியமாகக் கொடுக்கப்பட்டு, அதனிடமிருந்து பெற வேண்டிய வட்டித் தொகைக்கு ஈடு செய்யப்பட்ட ரூ. 90·58 கோடி வரவுகளிலும், செலவுகளிலும் சேர்க்காமல், வரவுகள் ரூ. 1083·17 கோடி அளவிலும் செலவுகள் ரூ. 1094·47 கோடி அளவிலும் நிகரப் பற்றாக்குறை ரூ. 11·30 கோடி என்றும் வகுக்கப் பட்டுள்ளன. வரி வருவாய் ரூ. 47·32 கோடி அளவிலும், வரி அல்லாத பிற இனங்களிலிருந்து வருவாய் ரூ. 105·75 கோடி அளவிலும், மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவித் தொகை, ஆயத் தீர்வையில் பங்கு ஆகியவை ரூ. 38·04 கோடி அளவிலும் உயர்ந்துள்ளபோதிலும், கடன் திருப்பிச் செலுத்துவதில் விவசாயிகளுக்கு அளித்த சலுகைகளுக்காகக் கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக வருவாய் கணக்கில் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது. மின் வாரியம், திட்டங்கள் முதலீடு செய்துள்ள மூலதனத் தொகைக்குக் கிடைக்க வேண்டும் என நிர்ணயித்துள்ள வருவாய்க்குக் குறைவு ஏற்பட்டுள்ளதைச் சரி செய்ய அளித்துள்ள உதவித் தொகை வருவாய்க் கணக்கில் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது. இதே தொகை, மின் வாரியத்திடமிருந்து கிடைத்த வட்டியாகவும் வருவாயாகக் கணக்கிடப்பட்டுள்ளது. திருத்த மதிப்பீடுகள் மூலதனக் கணக்குகளில் ரூ. 93·33 கோடி செலவிற்கு வகை செய்துள்ளது. இச் செலவினம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் ரூ. 94·21 கோடியாகும். கடன் கணக்குகளில் நிகர செலவினம் வரவு செலவுத் திட்ட கணக்குகளில் ரூ. 76·33 கோடி என்றும், திருத்த மதிப்பீடுகளில் ரூ. 77·55 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கடன் கணக்கில் நிகர வருவாய் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 110·83 கோடியாக இருந்தது, திருத்த மதிப்பீட்டில் ரூ. 109·70 கோடியாக அமைந்துள்ளது. மொத்தமாக, தொகு நிதியில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 44·32 கோடியாக இருந்த நிகரப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீட்டில் ரூ. 72·48 கோடியாக அளவிடப்பட்டுள்ளது. பொதுக் கணக்கில் நிகரமாக இருக்கும் தொகையைச் சேர்த்து நிகர உபரியாக ரூ. 33 இலட்சம் என வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டது, இப்போது திருத்த மதிப்பீட்டில் இது நிகரப்பற்றாக்குறை ரூ. 3·64 கோடி என்று திருத்தப்பட்டுள்ளது. ஆரம்ப இருப்பான ரூபாய் (—) 7·83 கோடியையும் சேர்த்து இவ்வாண்டு இறுதியில் கையிருப்பு ரூ. (—) 11·47 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**65.** 1981–82ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1128·27 கோடி என்ற அளவிலும், செலவுகள் ரூ. 1137·84 கோடி என்ற அளவிலும்,



நிகரப்பற்று ரூ. 9·57 கோடி அளவிலும் மதிப்பிடப் பட்டுள்ளன. மூலதனக் கணக்கில் நிகரச் செலவு ரூ. 135·99 கோடியாக உயர்ந்துள்ளது. கடன் கணக்கில் ரூ. 121·02 கோடி நிகரச் செலவிற்கு வகை செய்யப்பட்டு உள்ளது. பொதுக் கடன் கணக்கில் இடைக்கும் நிகர வருவாயான ரூ. 112·62 கோடியையும் சேர்த்து, தொகு நிதியில் நிகரப்பற்றாக்குறை ரூ. 153·96 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கணக்கில் நிகர ரூபாய் 42·47 கோடி உபரியைச் சேர்த்து இறுதி நிகரப் பற்றாக்குறை ரூபாய் 111·49 கோடி என்ற அளவிலும், ஆண்டு இறுதிக் கையிருப்பு ரூபாய் (—) 122·96 கோடி அளவிலும் அமைய 1981—82ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**66.** பொதுநலத் திட்டங்களை நிறைவேற்றவும், அளவில் பெரிய ஆண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் சில வருவாய் ஈட்டும் முயற்சிகள் தேவை என்பதை முதலில் குறிப்பிட்டுள்ளேன். இந்த வளர்ச்சித் திட்டங் களைச் செயலாக்க சில வரி வீதங்களில் மாற்றங்கள் செய்வது அவசியமாக உள்ளது. கூடுமானவரையில் வரிச்சுமை குறைவாகவும், ஏழை எளிய மக்களைத் தாக்கா வண்ணமும் இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கவனத்தில் கொண்டு இந்த அரசு பின்வரும் சில மாற்றங்களைச் செய்ய முற்பட்டுள்ளது.

**67.** பல ஆண்டுகளாகச் சென்னை மாநகராட்சி போதிய நிதி வசதி இல்லாமல் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. மாநகராட்சி எல்லைக்குள் பல வசதிகளை மேம்படுத்துவதற்கு அண்மையில் உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது. கூடுதலான பொறுப்புகளைச் சமாளிக்க நிலையான வகையில் மாநகராட்சிக்கு நிதி உதவி செய்வது அவசியமாகிறது. ஆகவே, தற்போது சென்னை மாநகராட்சி எல்லையிலும், சென்னை மாநகரைச் சுற்றிலும் 32 கி. மீ. பகுதியிலும் விதிக்கப்படும் விற்பனைவரி மீதான மேல்வரி தற்போதுள்ள 5 சத வீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. கிடைக்கும் கூடுதல் வருவாயிலிருந்து கணிசமான பகுதி மாநகராட்சிக்கு ஒதுக்கப்படும். இந்த மாற்றங் களுக்கான சட்ட வரைவு இக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

**68.** விற்பனை, பரிமாற்றம்(Exchange), அன்பளிப்பு (Gift) ஆகியவற்றின் பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி நகரங்களைத் தவிர பிற இடங்களில் வசூலிக்கப்படும் விகிதமான 6 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்த்தப் படும். அடைமானம் (Mortgage), குத்தகை (Lease) பாகப்பிரிவினை (Partition) விடுதலை (Release) குறித்த பத்திரங்கள் மீது 16வது பிரிவின்படி விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை சொத்து மதிப்பில் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ரூபாய் 2·50 லிருந்து ரூபாய் 3 ஆகவும், ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒவ்வொரு ஐநூறு ரூபாய் அல்லது அதன் பகுதிக்கு ரூபாய் 13லிருந்து ரூபாய் 15ஆகவும் விகிதம் உயர்த்தப் படுகிறது. சொத்து எழுதி வைப்பது (Settlement) குறித்த பத்திரங்கள் மீதான முத்திரத்தீர்வை 100






ரூபாய்க்கு ரூபாய் 2.50 என்ற விகிதத்திலிருந்து நகரங்களில் 8 சதவீதமாகவும், பிற இடங்களில் 7 சதவீதமாகவும் மாற்றியமைக்கப்படும். விடுதலைப் பத்திரங்கள் மீது 55வது பிரிவின்படி விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை செட்டில்மென்ட் பத்திரங்கள் தீர்வை அளவிற்கு மாற்றியமைக்கப்படும். விற்பனை வரிமீதான மேல்வரி, முத்திரைத் தீர்வை மாற்றங்களுக்குத் தேவையான சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

**69.** பெட்ரால், டீசல் மீதான வரிகளை விலையின் அடிப்படையில் கணக்கிட அண்மையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தமிழகத்தில் பெட்ரோல் விற்பனை மீது விதிக்கப்படும் 5 சதவீத வரியை, அண்டை மாநிலங்களான கேரளம் (15 சதவீதம்) கர்நாடகம் (12.5 சதவீதம்) ஆந்திரப் பிரதேசம் (11 சதவீதம்) ஆகிய மாநிலங்களில் விதிக்கப்படும் வரி விகிதங்களுடன் ஒப்பிட்டு 11 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, ஆந்திரப் பிரதேசம் (10 சதவீதம்), கேரளம் (20 சதவீதம்) கர்நாடகம் (10 சதவீதம்) ஆகிய மாநிலங்களில் டீசல் மீது விதிக்கப்படும் விற்பனை வரியைவிட தமிழ் நாட்டில் குறைவாக (9 சதவீதம்) வசூலிக்கப்படுவதால், அதை 11 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

**70.** வரி வீதங்களில் இந்த உயர்வுகளை அறிவிக்கும் அதே சமயத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி யையும், வாணிபத்தையும் ஊக்குவிக்கும் வகையில் சில சிறிய விற்பனைகளுக்குச் சலுகை அளிக்கும் வகையிலும் வரிகுறைப்பைச் செய்ய அரசு எண்ணியுள்ளது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஊக்க மளிக்கும் வகையில், மத்திய அரசு, இரயில்வே, மாநில அரசு ஆகியவை வாங்கும் பொருள்கள்மீது 4 சதவீதத் திற்குமேல் விதிக்கப்பட்டுவரும் பொது விற்பனை வரி வீதங்கள் அனைத்தும் மத்திய விற்பனை வரி வீதமான 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. வெளி மாநிலங் களிலிருந்து விற்பனை செய்ய முன்வருவோருடன் சமமான நிலையில் தமிழ் நாட்டிலுள்ள மேற் குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் போட்டியிட இந்த மாற்றம் வகை செய்யும்.

**71.** பாலிதீன் (Polythene), பாலிபுரோபிலின் (Polypropylene), பாலிவினைல் குளோரைடு ஆகிய வற்றிலிருந்து செய்யப்படும் டப்பாக்கள் (Cans and blow moulded Containers including closures), சுருள்கள் (Films, sheets), குழாய்கள் (Lay flat tubes) ஆகியவற்றின் மீதான ஒருமுனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீத மாகக் குறைக்கப்படுகிறது.

**72.** ரப்பருடன் சேர்க்கப்பட்ட தென்னை நார் (Rubberised coir) மீதான விற்பனை வரி அண்டை மாநிலங்களில் விதிக்கப் படுவதைவிட அதிகமாக இருப்பதால், இதனை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீ மாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**73.** 15,000க்குக் குறைந்த விற்பனையுள்ள பத்திரிகைகளுக்குத் தேவையான பத்திரிகைக் காகிதம் மீது விதிக்கப்படும் 8 சதவீத வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.




**74.** வணிகப் பெயர் இல்லாமல் அல்லது வணிக, வாணிப-குறிகள் 1958-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் (Trade and Merchandise Marks Act) வணிகக் குறி பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்யப்படும் அப்பளம், சேமியா, ரொட்டி வகைகள் (Bakery products) ஆகிய உணவுப் பொருள்களுக்குப் பலமுனை விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களிக்கப்படுகிறது. இந்த விற்பனை வரி மாற்றங்கள் 1-4-1981 முதல் செயலாக்கப்படும். இந்த வரிவிதிப்பு-வரிக் குறைப்பு ஆகிய வரி மாற்றங்களினால் அரசுக்கு நிகரமாக ரூபாய் 20 கோடி வருவாய் கிடைக்குமென மதிப்பிடப் படுகிறது.

**விவசாயிகளின் கடன்**

**75.** 1980—81ஆம் ஆண்டு. அரசு விவசாயிகளுக்கு அளித்த சலுகைகள் விளைவாகத் தக்காவிக் கடன்களில் நிலுவையாக இருந்த ரூ. 21 கோடியும் (முதலில் ரூ. 16 கோடி என்று அறிவிக்கப்பட்டது) சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டி நிலுவையாக இருந்த ரூ. 50 கோடியும் (முன்பு ரூ. 42 கோடி என அறிவிக்கப்பட்டது) ஆக ரூ. 71 கோடிக்குக் கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டன. மேலும், சிறு விவசாயிகள் திருப்பிச் செலுத்தியிருந்த ரூ. 23 கோடி அடுத்த ஆண்டுக் கடன் நிலுவைக்கு ஈடு செய்யப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது. விவசாயிகளின் கடன் சுமையை மேலும் குறைக்கும் வகையில் கீழ்க்கண்ட சலுகைகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(1) ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தைச் சொந்தமாகவோ குத்தகையாகவோ பயிர் செய்யும் சிறு விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங் களிடமிருந்து பெற்று நிலுவையிலிருக்கும் குறுகியகாலப் பயிர்க் கடன்களில் ஏற்கெனவே செலுத்தாமலிருந்து, அசலை 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தி விட்டால், திருப்பிச் செலுத்துகின்ற தேதி வரையில் கூடுகின்ற சாதாரண வட்டியும், தண்ட வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

(2) இதர விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்றுள்ள குறுகிய காலப் பயிர்க் கடன்களை 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள், அது வரையில் செலுத்த வேண்டிய சாதாரண வட்டியுடன் திருப்பிச் செலுத்தி விட்டால் அவர்கள் செலுத்த வேண்டிய தண்ட வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

**76.** சிறு உழவர்கள் வாங்கும் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 1981—82ஆம் ஆண்டில் புதிய ஏற்பாடு ஒன்றைச் செயலுக்குக் கொண்டு வருகிறோம். குறுகிய காலக் கடன் தவணைகளையும் நடுத்தர காலக் கடன் தவணைகளையும் உரிய நாளுக்குள் சிறு உழவர்கள் செலுத்தினால், அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டியில் 2 சதவீதம் கழித்துவிடப்படும்.

**மதுவிலக்கு**

**77.** இந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில், மன்ற உறுப்பினர்கள் மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி மனந்திறந்து கருத்துக்களை வெளியிடலாம் என்றும், அதனை எவ்வாறு செம்மைப் படுத்தலாம், திருத்தி அமைக்கலாம், மறுபரிசீலனை செய்யலாம் என்றும் கேட்கப்பட்டிருந்தன. மன்ற உறுப்பினர்கள் பலரும் தத்தம் கருத்துக்களை வெளி யிட்டனர். மதுவிலக்குக் கொள்கையைச் செம்மை யாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதி யாகவே இருந்து வந்ததையும், என்றாலும் சட்ட விரோதமாகக் கள்ளச்சாராயம் காய்ச்சப்பட்டும், கள்ளத்தனமாகக் குடிக்கப்பட்டும் வந்ததையும், அனுமதியின்றி கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் கடுமையாகத் தண்டிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டதையும் மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஏழை எளிய குடும்பங்கள் பல இன்னல்களுக்கு உள்ளானதைக் கண்டு, நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அனுமதிச் சீட்டு பெற்று மதுவகைகள் (liquor) அருந்தும் முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு, மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் இருக்கவில்லை என்றும், மதுவிலக்கு நாட்டில் இருக்கிறதா என்றும் அவை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டும் நிலை நீடித்து வருகிறது. இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது. மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்ய முடியும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே மதுவிலக்குச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கீழ்க் கண்டவாறு செய்ய இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

**78.** 25 வயசுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மது அருந்த அனுமதிக்கப்படுவர். அவர்கள் முறைப்படி அனுமதிச்சீட்டு (permit) பெற வேண்டும். பாட்டில் களில் சாராயம் அடைக்கப்பட்டு உரிய கடைகளில் விற்பதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும். கடை களில் இருந்து குடிக்க யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், அனைத்து மத வழிபாட்டு இடங்கள், மாணவர் விடுதிகள் போன்றவற்றின் அருகில் மதுக் கடைகள் திறக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. முறைப்படி உரிமம் பெற்றவர்கள் மட்டுமே மதுவகை கள் விற்க அனுமதிக்கப்படுவார்கள். அனுமதி-உரிமம் இன்றி சாராயம் காய்ச்சுவது, விற்பது, அருந்துவது போன்றவை தொடர்ந்து சட்டப்படி தடுக்கப்பட்டு, மீறுபவர்கள் சட்டப்படித் தண்டனைக்குள்ளாக்கப் படுவார்கள். கள் இறக்குவதற்கு முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட மரமேறுவோர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படுவார்கள். சாராயம், கள் தயாரித்தல், விற்பனை செய்தல் தொடர்பான விதிகள் அடங்கிய திருத்தச் சட்டம் தனியே கொண்டுவரப்படும்.

**79.** குடிப்பதனால் விளையும் தீமைகளைப் பற்றிய பிரச்சாரத்தை அரசு தீவிரமாக மேற்கொள்ளும். திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், பாடல்கள் போன்றவற்றின்மூலம் மதுவிலக்கு பற்றிய பிரச்சாரம் செய்வதற்கு முதல் தவணையாக ரூ. 1 கோடி ஒதுக்கப்படும். அரசு மேற்கொள்ளவிருக்கும் இந்த மாற்றங்களின் மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், அனுமதியின்றி விற்பனை செய்வோர் கள்ள மது நடமாட்டத்திற்கு உடந்தையாக இருப்போர் ஆகியோ ரிடமிருந்து பொதுமக்களுக்கு உண்டாகும் இன்னல்கள் விலகும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு தலைவர் அவர்களே,

**80.** தமிழ்நாட்டின் [illegible]
நிதி நிலைமையும் [illegible]

யுள்ளேன். விளக்கங்கள் தந்துள்ளேன்; வேண்டுகோள்கள் விடுத்துள்ளேன். இங்கு எடுத்து வைக்கப்பட்ட கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும் சிறப்பாகவும் செம்மையாகவும் நிறைவேற்றிட மன்ற உறுப்பினர்கள் அனைவரின் உதவியையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

81. வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம் மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும், குறை நீங்குகிற முறையில் எண்ணிச் செயல்படுத்த வேண்டும் என்ற சீரிய கருத்தினை உள்ளடக்கிய தன்மையில்

"பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்."

என்ற வள்ளுவர் கூறிய வாக்கிற்கிணங்க, செயல் புரிந்திட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் உறுதுணையான ஆதரவை இந்த அரசிற்கு அளித்திட வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

82. இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. கே. ஜே. எம். ஷெட்டி அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று பணியாற்றிய அதிகாரிகளுக்கும், அலுவலாளர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

83. *1981–82*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

# தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம், 1981–82

## சுருக்கம்

| விவரம். (1) | 1979–80 கணக்குகள். (2) | 1980–81 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1980–81 திருத்த மதிப்பீடு. (4) | 1981–82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிக் கணக்கில்) | | |
| I. தொகு நிதி— | | | | |
| வருவாய்க் கணக்கில் வரவுகள் .. | 9,44·85 | 9,82·66 | 11,73·75 | 11,28·27 |
| வருவாயிலிருந்து செய்யப்பட்ட செலவு (நிகரம்) .. .. .. .. | 8,49·55 | 9,67·27 | 11,85·05 | 11,37·84 |
| வருவாய்க் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை .. .. .. | (+)95·30 | (+)15·39 | (—)11·30 | (—)9·57 |
| மூலதனக் கணக்கில் வரவுகள் .. .. | 2,44·78 | 2,78·45 | 2,36·57 | 2,89·96 |
| கடன்கள், முன்பணங்கள் உட்பட மூலதனத்திலிருந்து செய்யப்பட்ட செலவு (நிகரம்) .. .. .. .. | 3,71·62 | 3,38·16 | 2,97·75 | 4,34.35 |
| மூலதனக் கணக்கில் உபரி அல்லது பற்றாக் குறை .. .. .. | (—)1,26·84 | (—)59·71 | (—)61·18 | (—)1,44·39 |
| மொத்த தொகு நிதி (நிகரம்) .. | (—)31·54 | (—)44·32 | (—)72·48 | (—)1,53·96 |
| II. எதிர்பாராச் செலவு நிதி (நிகரம்) .. | (+)0·56 | .. | .. | .. |
| III. பொதுக் கணக்கு (நிகரம்) .. .. | (+)24·90 | (+)44·65 | (+)68·84 | (+)42·47 |
| நிகர வரவு-செலவுகளின் மொத்தம் (I—II—III) .. .. .. | (—)6·08 | (+)0·33 | (—)3·64 | (—)1,11·49 |
| தொடக்க இருப்பு .. .. .. .. | (—)1·75 | (—)2·34 | (—)7·83 | (—)11·47 |
| இறுதி இருப்பு .. .. .. .. | (—)7·83 | (—)2·01 | (—)11·47 | (—)1,22·96 |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


இயற்கை அழகுக்கு
இணை இதுவே!
கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP-23

# பவள விழாக் காணும்
## சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி சித்திரை 4
16-4-81 50 காசு





வ.வே.சு. ஐயர் நூற்றாண்டு
நிறைவு விழா
5.4.1981





# வ. வே .சு. ஐயர் மறைவுக்கு

## பாவேந்தர் பாரதிதாசனின் இரங்கற்பா

கேட்டீரோ தமிழர்களே, நம்மில் மிக்க
கீர்த்திகொண்ட தமிழனுயிர் நீத்த செய்தி?
ஆட்பணிதல் கடவுளொரு வனுக்கே யன்றி
அத்தனைபே ரும்சமமே ஆகும் என்னும்
மாட்சிமிகும் எண்ணத்தால் நாட்டில் மீண்டும்
மலர்வித்த வீரர்க்குள் வீரன் கண்டீர்!
தாட்டிகஞ்சேர் சுப்பிரமணிய ஐயன் இந்தச்
சகம்நீத்தால் தமிழர்மனம் சகிப்பதுண்டோ?

தன்நாட்டிற் கவன்தொண்டு பெரிது; வேரில்
தன்புனலைப் பாய்ச்சிடுமோர் தியாகம் என்னில்
அன்புடைய அருள்கொண்ட நெஞ்சம் தன்னில்
அணை கடந்த வெள்ளம்போல் தேசபக்தி
நன்றுவளர் விப்பதுநாம் என்செய் வோமாய்!
நலம் விளைக்கும் கற்பகத்தைப் புது நினைப்புக்
குன்றத்தை-குன்றஞ்சார் குளிர் புனல் தான்
கொண்டதுவோ? பகைவருளம் குளிர்ந்த தேயோ.


தமிழரசு
மலர் 11 16-4-1981
இதழ் 20 திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி சித்திரை 4.



# தன்னிறைவை நோக்கித் தமிழகக் கிராமம்

**கா**லத்தின் வேகத்திற்கு ஏற்ப மனிதர்களின் தேவைகள் மாறுபடுகின்றன. அதிகமாகின்றன. நேற்றைய நம் தேவையை இன்று நிறைவு செய்வதற்கு முன் நாளைய தேவை நம்முன் நிற்கிறது. மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படும்போது அங்கே வளர்ச்சி ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. ஆனால் நேற்றைய வளர்ச்சி இன்றையத் தேவையின் முன்னே தளர்ச்சியுடன் நிற்க வேண்டிய நிலை ஏற்படும் போது பெற்ற வளர்ச்சி பாராட்டுப் பெற இயலாமல் போய் விடுகிறது. எனவே, தேவையும் வளர்ச்சியும் ஒன்றையொன்று விஞ்சிச் செல்ல நினைக்கும் பந்தயக் குதிரைகளாகவே அமைந்துள்ளன. தேவையும் வளர்ச்சியும் சந்திக்கும்போது-ஒன்றையொன்று மிஞ்ச எண்ணாமல் ஒன்று சேர்ந்து நிற்கும் போது உருவாகும் நிலைக்குப் பெயர், 'தன்னிறைவு'.

நாடு விடுதலை பெற்று எண்ணற்ற ஆண்டுகள் நிறைவடைந்திருந்தும், நம் கிராமவாழ் மக்களின் அடிப்படை வசதிகளைக் கூட நாம் முழுமையாகச் செய்து முடித்திராத குறையை நேரில் கண்டு பெரும் மனச் சுமையுடன் தமிழ் நாடு முதல்வர் 'புரட்சித்தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்று ஆற்றிய சொற்பொழிவு இன்றும் என் மன அரங்கில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது...''நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. குடிக்க தண்ணீர் - நல்ல குடிநீர் மட்டுமே கேட்கிறார்க்ள்... மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்குவுதே இவ்வரசின் முதல் குறிக்கோள்...'' என பெரும் மனச்சுமையோடு அவர் கூறிய கூற்று இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. முதல்வராகும் முன்பு மக்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்து வைக்குமாறு மக்கள் சார்பாக அறைகூவல் விடுத்த முதல் தனிப்பெரும் தலைவர் புரட்சித்தலைவராகத்தான் இருக்க முடியும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயப்பாடே இல்லை. பொன்மனச் செம்மலின் மீது மக்களுக்கு அத்தனை நம்பிக்கை...! நம்பிக்கைக்கு உரித்தாகும் முறையில் செயலாற்ற வேண்டுமென்ற நல் எண்ணம் நம் முதல்வர் அவர்களுக்கே உரியதாகும். அதன் விளைவே தன்னிறைவுத் திட்டம்.

அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி அளித்து தாய்மார்கள் வெற்றுக் குடங்களுடன் அலைவதைத் தவிர்த்து நிறைகுடத்துடன் மகிழ்ச்சி பொங்கும் காட்சியினைக் காணுவதைத் தன் முதல் குறிக்கோளாகக் கொண்டு திகழும் இந்திட்டத்தின் பிற பணிகள் பின்வருமாறு:—

1. இணைப்புச் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல்.
2. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் இடுதல்.
3. சிறுபாலங்கள் கட்டுதல்.
4. பாசன சிறுதிட்டங்கள் மேம்பாடு.
5. ஊர்ப்புற மருந்தகங்கள் கட்டுதல்.
6. தாய்சேய் நல விடுதிகள் கட்டுதல்.
7. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.
8. ஆதிதிராவிடர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல்.

மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளை அளித்து, கிராமங்களைத் தன்னிறைவு மையங்களாக மாற்றி கிராம வாழ் மக்களின் வாழ்வில் ஒரு புத்தொளியை ஏற்றுவதுடன் அவர்கள் நகர்ப்புறங்களுக்கு வசதிகள் நாடி குடிபெயரா நிலையை உருவாக்கும் இத்திட்டம், விரைவாக விரிவாக-செயல்படுத்தப்பட வேண்டியது மட்டுமின்றி கட்டுக்கோப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் அரசு அதிக அக்கறை காட்டியது.

தன்னிறைவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பு-தமிழகத்திலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களின் நிலைமைகள் - தேவைகள் குறித்து ஆய்வொன்று நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் வெளியான உண்மைகள் இத்திட்டத்தைச் சீராகத் திட்டமிடப் பெரிதும் துணை புரிந்தன. அது எங்ஙனம் என்பதுபற்றி உற்று நோக்குவோம்.

குடிநீரைப் பொறுத்தவரையில், தமிழகத்திலுள்ள 17,969 குடியிருப்புகளில், 12,603 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தி அளிக்க வேண்டியிருந்தது.

500 வரை மக்கட் தொகை கொண்ட குடியிருப்புகளின் பயனுக்காக 10,264 கி.மீ. இணைப்புச் சாலைகளும், 500 முதல் 1500 வரை மக்கட் தொகை கொண்ட குடியிருப்புகளின் பயனுக்காக 15,347 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகளும் [illegible] வேண்டிய நிலையை ஆய்வு உணர்த்தியது.



மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

**திரு ப. குழந்தைவேலு**

இணைப்புச் சாலைகளில் ஆங்காங்கே குறுக்கிடும் நீரோடைகளையும் மழை நீர் கால்வாய்களையும் கடப்பதற்கு மொத்தம் 23,612 சிறுபாலங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றுணரப்பட்டது. எண்ணற்ற அரிசன குடியிருப்புகளில் அவர்களுக்கென தனி இடுகாடு, சுடுகாடுகள் அமைந்துள்ளன. இறந்தவர் உடலை எரிப்பதற்கோ நல்லடக்கம் செய்வதற்கோ மயானத்திற்குச் செல்லும் பாதை பல இடங்களில் வயல்நடுவே அமைந்த ஒற்றையடி வரப்புகளாக முட்புதர்கள் படிந்தவையாக அமைந்துள்ளன. சில இடங்களில் இறந்தவரை நால்வர் தூக்கிச் செல்ல வழியின்மையால், தோளில் சுமந்து செல்ல வேண்டியிருந்ததாம். இந்த நிலையை உணர்ந்த அரசு தமிழகமெங்கும் அமைந்த அரிசன குடியிருப்புகளுக்கு மயானச் சாலைகள் அமைக்க உறுதி பூண்டது. மொத்தம் 4,268 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இந்த வகையில் ஏற்படுத்தித் தருவது அரசின் இலட்சியம்.

கண்ணுடையோர் என்போர் கற்றோர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே தொடக்க கல்வி தக்க அடிப்படையோடு திறம்பட அமைய வேண்டியது அவசியம். கல்வியின் பெருமை கல்விக் கூடங்களால் நிலை நாட்டப்படுகின்றன. ஓலைக் கூரைகளையும் அவற்றைத் தாங்கி நிற்கும் மரக் கம்பங்களையும் 'பள்ளிகள்' என அழைக்க இயலா. எனவே தமிழகத்தில் மொத்தம் 2,572 புதிதாக பள்ளிக் கட்டடங்களும், 4,561 கூடுதல் பள்ளிக் கட்டடங்களும் அவசியம் என அறிந்தோம். இந்தத் தேவை இப்போது படிப்படியாக நிறைவு செய்யப்படுகிறது.

சிறு குளங்களும், சிறு கால்வாய்களும் எத்தனையோ ஏக்கர் பரப்பளவு நிலத்திற்கு நீர் வழங்கும் தகுதியில் உள்ளன. எனினும் இவை நன்கு பராமரிக்கப்படாமையால் அவற்றின் மூலமாக உண்மை பலன் கிட்டவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் 12,226 பாசன சிறு அமைப்புகள் மேம்படுத்தப்படவிருக்கின்றன.

ஊர்ப்புறங்களில் இயங்கும் பெரும்பாலான தாய்சேய் நல மருத்துவ நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இதனால் அக்கட்டடங்களில் ஏதேனும் மாறுதல் செய்யவோ நிலையங்களை விரிவுபடுத்த மேலும் சில கட்டடங்களைக் கட்டவோ இயலவில்லை. காரணம்? அக்கட்டடங்களுக்கு உரிமை பெற்றவர்கள் எழுப்புகின்ற எதிர்ப்புக் குரல்களே இதற்குக் காரணம். எனவே தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமப்புற தாய் சேய் நல விடுதிகளைச் சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் நடவடிக்கைக்குத் தன்னிறைவுத் திட்டத்தில் ஓர் சிறப்பிடம் நல்கப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தால் 455 ஊர்ப்புற மருந்தகங்களும், 1262 தாய் சேய் நல மருத்துவ நிலையங்களும் கட்டும் மாபெரும் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

மேலும் 1,07,338 ஆதி திராவிட குடும்பத்தினர் வீடுகள் கட்டிக் கொள்ள ஊக்குவிக்கும் திட்டமும் தனனிறைவுத் திட்டத்தின் இலட்சியமாகும்.

தன்னிறைவுத் திட்டத்தின் நிறைவேற்றத்திற்காக தமிழகத்திலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்கள் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் நிலையான 69 ஒன்றியங்களில் திட்டப்பணிகள் 31.3.81க்குள் இறுதி பெற்றன இவ்வட்டாரங்களில் இதுவரை நடைபெற்றுள்ள வேலைகளை நோக்கும்போது நாம் உண்மையிலேயே பெருமிதமடைய வேண்டும்.

அடுத்த கட்டமாக, தேர்ந்தெடுக்கப்படும் வட்டாரங்களில் 1.4.81 தொடக்கம் தன்னிறைவுத் திட்டம் செயல்படும். அவற்றிற்குத் தேவையான அடிப்படை வேலைகள் அனைத்தும் வெகு முன்பாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய வட்டாரங்கள் இறுதியான மூன்றாம் கட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு. இனிவரும் ஈராண்டுகளில் நிறைவேற்றி முடிப்போம். முடிவில், தன்னிகரற்ற தமிழகம் விரைவில் உருவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

வளரும் தமிழகம்



# கிராமப் புறங்களில் மருத்துவ வசதிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை அமைச்சர்.

## டாக்டர் எச். வி. ஹண்டே

ஏழை எளிய மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே தமிழக அரசின் தலையாய நோக்கமாக இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் எண்ணத்தில் உதித்த, 'தன்னிறைவுத் திட்டம்' இன்றைக்குத் தமிழகத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சமூகப் பொருளாதார நிலைமைகளை வளர்ப்பதற்கான வசதி வாய்ப்புக்களை உருவாக்கி உதவுகின்ற இத்திட்டம் கிராமத்து மக்களின் சுற்றுப்புற சுகாதார வாழ்வை மேம்படுத்துவதற்கும், ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவ வசதிகள் கிடைப்பதற்கும் வழிவகை செய்து தருகிறது. இத்திட்டத்தை முதல் கட்டமாக ஏற்றுக்கொண்ட ஒன்றியங்களில் நல்வாழ்வு, மருத்துவ மற்றும் குடும்பநலத் திட்டப் பணிகள் மிகுந்த முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நம்முடைய 'தன்னிறைவுத் திட்டப்' பணிகளை இந்திய அரசும் மற்ற மாநிலத்தினரும் பாராட்டி வருகின்றனர்.

80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் தமிழகத்தில் 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் சிறப்பாக, நடமாடும் மருத்துவக் குழுக்களை உருவாக்கி (Mobile Medical Teams) அதன் மூலம் கிராம மக்களின் வீடுகளுக்கே, மருந்துவ வசதிகள் செல்லும் நிலையைத் தமிழக அரசு உருவாக்கித் தந்துள்ளது. சிறிய கிராமங்களில் வாழுகின்ற மக்கள், குறிப்பாக தாய்மார்கள், குழந்தைகள், ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று தான் சிகிச்சை பெற வேண்டும் என்ற நிலையைமாற்றி அவர்கள் வாழுகின்ற கிராமங்களுக்கே மருத்துவக் குழுவினர் சென்று, தேவையான சிகிச்சைகளை அளிக்கின்றார்கள். ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தத்திட்டம் உண்மையிலேயே மக்களிடையே நல்வாழ்வு மருத்துவ, குடும்பநல சத்துணவுத் திட்டங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது என்று நாம் கூறலாம்.

காலரா, மலேரியா போன்ற பல்வேறு தொத்து வியாதிகள் பரவாமல் இருப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள், அவற்றுடன் இணைந்த குடும்ப நல நிலையங்கள் மூலம் தாய்மார்கள், குழந்தைகள் நலம் காக்க பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பாக தடுப்பு மருந்து அளிக்கும் பணி 10 இலட்சரூபாய் செலவில் விரிவுபடுத்தப்பட்டு (expanded immunisation programme) இந்நிலையங்கள் மூலம் செயல்பட்டு வருகிறது. பிறந்தது முதல் 5 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு



## தமிழ்நாட்டில்...

மருத்துவமும் பொதுச் சுகாதாரமும்

மருத்துவ - பொதுச் சுகாதாரப் பணிகளுக்கு, 1978-83 கால அளவிற்கான திட்டத்தில் 36.55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தொகை, ஆறாவது திட்டக் கால அளவில் 67.80 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

டைபாய்டு, காசநோய், தட்டம்மை இளம்பிள்ளை வாதம், இரண ஜன்னி, தொண்டை அடைப்பான் கக்குவான் போன்ற நோய்கள் வராமல் தடுக்க முனைப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடும்பநலத் திட்டத்தின் கீழ் சத்துணவுத்திட்டம், தடுப்பு ஊசி போடும் திட்டம், குழந்தைகளின் கண் ஒளி காக்க வைட்டமின் 'ஏ' மருந்து வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தந்தை மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை எல்லாக் குடும்ப நல நிலையங்களிலும் செய்யப்படுகிறது. பேறுகால வசதிகள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இருக்கின்றன.

மருத்துவ சுகாதார நிலையங்கள் இல்லாத பகுதிகளில் தன்னியக்க நிறுவனத்தார் 50 சதவிகித செலவு ஏற்க, அரசு 50 சதவிகித செலவினை ஏற்று சிறு சுகாதார நிலையங்கள் (Mini Health Centre) திறக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 5000 மக்கள்தொகை வரை கொண்ட பகுதிக்கு ஒன்று என்ற முறையில் 120 சிறு சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள 8 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிற்கும் அறுவைச் சிகிச்சைக்கூடம் உள்பட எல்லா வசதிகளும் கொண்ட மூன்று பெரிய ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் துணையோடு ஒவ்வொரு மருத்துவக்கல்லூரியும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களைஎடுத்துக்கொண்டு அதன் மூலம் சிறந்த மருத்துவ வசதிகள் கிராம மக்களுக்குக் கிடைக்கும்படி செய்து வருகின்றன. பொதுவாக சென்னை போன்ற நகரங்களில் கிடைக்கின்ற மருத்துவ வசதிகள் மற்ற இடங்களில் கிடைப்பது இல்லை என்ற குறைபாடு உண்டு. இந்தக் குறையை மாற்றவேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்த அரசு, புதிய திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி பெரு நகரங்களில் கிடைக்கும் வசதிகள் மாவட்டத்தலைமை மருத்துவ மனைகளில் கிடைக்கவும், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் உள்ள வசதிகள் தாலுகா மருத்துவ மனைகளில் கிடைக்கவும், தாலுகா மருத்துவ மனைகளில் உள்ள வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுஉள்ளது. இதனால், பெரு நகரங்களில் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் ஏற்படும் கூட்டத்தைத் தவிர்ப்பதுடன் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு ஆங்காங்கே தரமான சிகிச்சை அளிக்கின்ற வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழகத்தில் 383 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 188 அரசு மருந்தகங்களும், 110 தாலுகா அல்லாத மருத்துவ மனைகளும் 116 தாலுகா மருத்துவ மனைகளும், 15 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளும் உள்ளன. இவைகளைத் தவிர மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ளன.

பொதுவாகப் புற்றுநோய் போன்றவைகளுக்கு மருத்துவ வசதிகள் பெரு நகரங்களில் மட்டுமே கிடைக்கும். தற்போது, முதன் முறையாக, காஞ்சிபுரத்தையடுத்துள்ள காரப்பேட்டையில் மிகப் பெரிய அளவில், 'அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனை' நிறுவப்பட்டுள்ளது. இம்மருத்துவ மனையில், நோய் வந்தவர்களுக்குச் செய்யப்படும் சிகிச்சையும், இந்நோய் வராத வகையில் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

சென்ற ஆண்டில் பல மருத்துவமனைகளில், பல் சிகிச்சைப் பிரிவு, எலும்பு சிகிச்சைப் பிரிவு கண் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகளுக்கெனத் தனி சிகிச்சைப் பிரிவு, இரத்த சேமிப்புப் பகுதி ஆய்வுக் கூட வசதிகள் ஆகியவற்றைத் தமிழக அரசு ஏற்படுத்தித் தந்துள்ளது.

தொழுநோய் ஒழிப்புப் பணியில் தமிழக அரசு முனைப்புடன் பணியாற்றி வருகிறது. ஆயிரம் பேர்களில் 20 பேர்களுக்கு இந்நோய் இருந்தது ஒரு காலத்தில். தற்போது ஆயிரம், பேர்களில் 15 பேர்களுக்கு இந்நோய் உள்ளது என்ற அளவில் குறைந்துள்ளது. காச நோய் ஒழிப்புப்பணிக்கென நடமாடும் மருத்துவக் குழுக்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்குழுக்கள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று, காச நோய் ஒழிப்புப் பணிகளை முறையாகச் செய்து வருகின்றன. நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் மத்தியில் காசநோய் அதிகம் இருக்கிறது என்று கண்டறிந்து தமிழக அரசு அவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

அனைத்து மருத்துவ மனைகளிலும் குடும்பநலத்திட்ட அறுவைச் சிகிச்சை வசதிகள் இலவசமாகக் கிடைக்கின்றன. இந்தியாவின் பிறப்பு விகிதம் 1000-க்கு 33 என்றும், இறப்பு விகிதம் 1000-க்கு 15 என்றும் உள்ளது. ஆனால், தமிழகத்தில் பிறப்பு விகிதம் 1000-க்கு 28.5 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இறப்பு விகிதம் 14 என்று உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில் இயங்கி வரும் இந்த அரசு மருத்துவ, குடும்பநலப் பணிகளை, குறிப்பாகக் கிராமங்களில், இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இது நம்முடைய தமிழகத்திற்கே ஒரு பெருமையாகும்.

வணக்கம்.

('வளரும் தமிழகம்' என்ற தொடரில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் சென்னை வானொலியில் 15.3.81 அன்று ஆற்றிய உரை).



# பாட்டுப் பாட்டன்

டாக்டர் கே. எம். ஏ. வகாப்



வடமொழியால் செந்தமிழின் வாழ்வுங் குலைந்து
மடமை விளைந்ததுபோல் மாப்புலவர் வாழ்ந்த

கழகத்துக் காலம் கடிதுசென்ற பின்னர்
பழகுதமிழ்ப் பாவலரின் பாட்டுணர்வும் தொய்ந்ததுவாம் !

போகும் பழமையதும் பூக்கும் புதுமையதும்
நோக்காமல் சந்தித்து நோக்கால் சிரித்திட்ட

அக்காலம் தன்னில் அரிமா எழுந்ததுபோல்
எக்கால மும்போற்றும் எம்பாவேந் தர்பிறந்தார் !

பாட்டுக்கே ஓர்புலவன் பாரதிக்கு தாசனானான்
பாட்டுத் திறத்தாலே பாரதியின் தோழனானான் !

தந்தை பெரியாரின் தன்மதிப்புப் பாதையிலே
முந்து தமிழை முழங்கும் பெரும்புலவன் !

மன்னர் புகழ்ச்சிக்கும் மங்கையரின் மென்மைக்கும்
தின்னும் பொருளுக்கும் தேடுபொருள் அத்தனைக்கும்

பாட்டெழுதி வாழ்ந்திட்ட பாவலர்போல் வாழாமல்
நாட்டுமக்கள் பண்பாட்டை வாழ்வித்த மாகவிஞன்

கூலிக்குப் பாட்டெழுதிக் கும்மாளம் போடுகின்ற
போலிப் புலவரைப்போல் பொய்வாழ்வு வாழாமல்

நாடுமொழி மக்கள்எனும் நல்ல குறிக்கோளில்
சூடு சொரணைதந்து சொல்நெருப்புத் தந்தமகன் !

மான உணர்வை மறுபடியும் தூண்டியவன் !
கூனை நிமிர்த்தவந்த கொள்கைப் பெருங்களிறு !

ஆன தமிழரின் ஆட்சி நிறுவுதற்கே
ஊனுடல் நல்கி உவந்தளித்த வீரன்

புரட்சியெனும் சொல்லைப் புரியவைத்த சான்றோன் !
வறட்சியிலா நல்லுணர்வு வாய்த்த அறிஞன் !

தொழிலாளர் வாழ்வுக்கும் தாய்மொழிப் பெண்டிர்
பழியிலா வாழ்வுக்கும் பாதை பலசெய்தோன் !

பாட்டினையே வாளாய்ப் பயன்படுத்திக் கொண்டிருந்த
நாட்டைத் திருத்திநின்ற நல்ல படைமறவன் !

பாட்டுப் புறங்கடையின் பான்மை தெளிவாக்கிக்
காட்டி, ஒளிரும் கலங்கரை நல்விளக்கம் !

தாழ்வுகண் டஞ்சித் தலைவணங்கா நற்றலைவன் !
வாழ்வையே பாட்டாக்கி வண்டமிழை வாழ்வித்தோன் !

சாவேந்தாப் பாமணிகள் சாம்போதும் தந்துயர்ந்த
பாவேந்தன் நம்பாட்டன் பார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார். தோற்றம்: 29-4-1891 மறைவு: 21-4-1964



# ஏன் ஆவலுடன் படிக்கிறார்கள்!

அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி

பல ஆண்டுகளுக்கு முன்னர், 30.4.34-ல், பகுத்தறிவுவாதி களாகிய நண்பர்கள் சுமார் இருபது பேர் சேர்ந்து சென்னையிலிருந்து புறப்பட்டு பக்கிங்காம் கால்வாய் வழியாக மகாபலிபுரத்திற்கு யாத்திரை சென்றோம். மகாபலிபுரத்தில் உள்ள சிற்பக் கலைகளைக் காணவேண்டும் என்பது அந்த யாத்திரையின் நோக்கம். இளவேனிற் காலத்தில் மாலை வேளையில் படகு ஏறிப் பயணம் செய்வது அதுவும் நண்பர்களுடன் சேர்ந்து பயணம் செய்வது-மிக இன்பகரமானது. அந்த யாத்திரையின் போதுதான், புரட்சிக்கவி என்றும், பாரதிதாசன் என்றும் சிறப்புப் பெயர் பெற்றுள்ள தோழர் கனக சுப்புரத்தினம் அவர்களுடன் அறிமுகம் ஆனேன். சாந்தமான இயல்பு, அமைதியும் இனிமையும் கலந்த பேச்சு, கவிதையில் திளைத்துக் கொண்டிருக்கும் உள்ளம் இவற்றை உடையவர் பாரதிதாசன். இன்பகரமான மகாபலிபுரயாத்திரை எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது போலவே, தோழர் பாரதிதாசன் உள்ளத்தைக் கவர்ந்தது. எங்கள் மனத்தில் அந்த யாத்திரையின் நிகழ்ச்சி ஊமையன் கனவு போல வெளிப்படாமல் இருந்தது. எங்களுக்கு கவிதை பாடும் ஆற்றல் இல்லாமையினால், ஆனால், கவிதை புனையும் புலமை வாய்ந்த பாரதிதாசன் அவர்கள் அடுத்த நாளே அந்த யாத்திரையைப் பற்றிக் கவிதை ஒன்று பாடிவிட்டார்.

சென்னையிலே ஒரு வாய்க்கால் புதுச்
சேரி நகர் வரை நீளும்
அன்னத்தில் தோணிகள் ஓடும்-எழில்
அன்னம் மிதப்பது போலே!
என்னருந் தோழரும் நானும்-ஒன்றில்
ஏறி அமர்ந்திட்ட பின்பு,
சென்னையை விட்டது தோணி-உடன்
தீவிரப்பட்டது வேகம்.

படகு சென்றுகொண்டிருக்க, மாலை நேரத்தில் அதன் மேற்புரத்தில் அமர்ந்து எத்தனையோ இயற்கைக் காட்சிகளைக் கண்டோம். அவற்றில் ஒன்று நடுத்தர உயரம் உள்ள ஒரு பனைமரமும் ஒரு ஈச்சமரமும் இணைபிரியா நண்பர்கள் போல நெருங்கி நின்றுகொண்டிருக்க, அவற்றின் இடையே அன்று பௌர்ணமி-முழு வட்டமுள்ள நிலா கடலிலிருந்து சிவந்த மேனியுடன் புறப்பட்டு மேலெழும்பி வந்தது. இக் காட்சியைக் கண்ட கவிஞர் உள்ளம் சும்மா இருக்குமா? பாருங்கள் பாரதிதாசன் கூறுவதை.

வெட்ட வெளியினில் நாங்கள்-எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்
குட்டைப் பனைமரம் ஒன்று-எழிற்
கூந்தல் சரிந்த ஓர் ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே-இன்ப
வார்த்தைகள் பேசிடும்போது
கட்டுக் கடங்கா நகைப்பைப்-பனை
கலகல வென்று கொட்டும்
எட்டிய மட்டும் கிழக்குத்-திசை
ஏற்றிய எங்கள் விழிக்குப்
பட்டது கொஞ்சம் வெளிச்சம்-அன்று
பௌர்ணமி என்பது கண்டோம்
முத்துச் சுடர்முகம் ஏனோ-இன்று
முற்றும் சிவந்தது? சொல்வாய்
இத்தனைக் கோபம், நிலாவே?-உனக்
கேற்றிய தார் எனக் கேட்போம்.

எங்கள் மகாபலிபுர யாத்திரையைப் பற்றி வாசகர்களிடம் விவரித்துக் கூறி நேரம் போக்க வேண்டும் என்பது எனது கருத்தன்று. நான் சொல்லவந்த செய்தியைக் கூறுகிறேன்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் அறிமுகமானது முதல், அவர் உள்ளத்திலிருந்து அவ்வப்போது வெளிப்படும் அவரது கவிதைகளை படித்து வந்தேன். அக் கவிதைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. எனது உள்ளத்தை மட்டு அன்று. படித்த ஏனையோர் உள்ளங்களையும் கவர்ந்தன. கற்பவர் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் பாரதிதாசன் கவிதைகளுக்கு எப்படி உண்டாயிற்று? ஏன் எல்லோரும் இவர் பாடல்களை ஆவலுடன் படிக்கிறார்கள்?

பாரதிதாசன் கவிதைகளில் உண்மை, இனிமை, அழகு, இம்மூன்றும் அமைந்துள்ளன. அதனால்தான் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்துக்கு இன்பம் அளிக்கின்றன.

["பாவேந்தர் பாரதிதாசன் பெருமை" என்னும் நூலிலிருந்து.]

# புரட்சியை உருவாக்கியவர்!

முருகு-சுப்பிரமணியன்

தமிழ் இலக்கியத்தில் புது மலர்ச்சியைப் பாரதியார் தொடங்கி வைத்தார். அப் பணியை முழு அளவிலே நிறை வேற்றி வருகிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

செம்மையையே குறிக்கோளாகக் கொண்டு வளர்ந்த தமிழ் இலக்கியம் இடைக்காலத்தில் பொய்மை புனைந்துரையில் பட்டுத் தவித்தது. அதற்குப் பின் சில்லறைப் பாடல்களே தமிழுக்குக் கிடைத்தன. நிலையான இலக்கியங் காணுவார் இல்லாமல் போயினார்.

இச்சமயத்தில் பாரதியார் ஒரு கவிதைப் பரம்பரைக்கு வழி வகுத்தார். பரம்பரையான போக்கையும் சில மாறுபாடுகளுக்கு உள்ளாக்கினார். நாட்டு வேட்கை, மொழிப்பற்று இவற்றை மக்களுக்கு ஊட்டவும் கவிதை கருவியாகலாம் என்று காட்டினார். புரியாமல் இருப்பதே பாட்டு என்ற நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்து எளிய நடைக்கு ஏற்றம் தந்தார். யாப்பு முறையிலேயே புதுப்பாவினங்களைக் கையாண்டார். இவைகளே பாரதியார் செய்த புரட்சிகள்.

எந்தக் கொள்கைக்கும் தொடங்குபவர்கள் எவ்வளவு அவசியமோ அதுபோலக்கொண்டு செலுத்துபவர்களும் அவசியமாகும். ''அவ்வகையில் பாரதிதாசன் பாரதியின் சொள்கையை கொண்டு செலுத்துபவர்'' 'என்பதை ஐயமறக் காட்டி வருகிறார். மறுமைக்கு வழிகாட்டுவதே பாட்டின் நோக்கம் என்றிருந்த எண்ணத்தைச் சிதற அடித்து வருகிறார்.

பாடல் பெறும் பொருள்களிலே கடவுள் ஒன்று என்பது அவர் கருத்து. அவர் கவிதைகளிலே வண்டிக்காரன் மனைவி பேசுவாள். கிராமத்துக் குப்பன் பேசுவான். காணுகின்ற பொருளைப்பற்றிச் சிந்தனை கொடுப்பதாக அமைந்திருக்கும் அவர் கவிதை.

பாரதியார் தம் கவிதையால் தேசிய வெறியூட்டினார். பாரதிதாசன் சமுதாயப் புரட்சியை உருவாக்கி வருகிறார். இருவரும் மக்களின் நலத்துக்கே-மக்களின் உயர்வுக்கே தம் கவிதைகளைப் பயன்படுத்தியுள்ளதைக் காண்கிறோம்.

மற்றும், பாரதியார் மேற்கொண்ட எளிய நடை, புதுப் பாவினங்கள் இவற்றையும் பாரதிதாசன் கையாண்டு வருகிறார்.

பாரதிதாசனுக்கென இலங்கும் சிறப்பியல்புகள் சிலவற்றைப் பார்ப்போம். ஒன்று-அவர் கையாண்டு வருகின்ற தமிழ் நடை, இனிமை, எளிமை, அதோடு தெளிவும் சேர்ந்து உயிருள்ள நடையாய்ப் படிக்கப் படிக்கச் சுவை பயக்கிறது. அவருடைய வாக்கில் சொற்கள் கொஞ்சுகின்றன என்று சொல்லலாம். கருதிய பொருளை விளக்குவதில் அவற்றிற்கு இணை அவைகளே என்று சொல்லலாம்.

இரண்டாவது பிழையற்ற யாப்பு முறை. இலக்கணப் பிழை. சொற்பிழை. பொருட்பிழை என்ற பேச்சே கூடாது என்பது அவர் வாதம். கவிஞர்கள் இலக்கண இலக்கியங்களை நன்கு படித்திருக்கவேண்டும் என்பது அவர் அடிக்கடி வற்புறுத்தி வருகின்ற கருத்து.

மூன்றாவது — 'அவருடைய இயற்கை உணர்வு பெரும்பாலான கவிஞர்கள் இயற்கையைப் பற்றிச் சொல்லும்போது தாம் பழைய நூல்களிலே படித்தவற்றைத்தான் பாடுவார்கள். நேரில் இயற்கையைத் தெரிந்து, நுணுக்கமாக உணர்ந்து கவி புனைவார் மிக அருமை. நம் புரட்சிக் கவிஞர் இயற்கையைப் பற்றி பாடியன மிகுதி. அத்தனையும் அவர் சொந்தமாகத் தெரிந்து சொல்கின்ற கருத்துக்களின் கோவை. பழைய பாடம் ஒப்புவிக்கும் வழக்கம் அவரிடம் இல்லை.

இன்னும் சொல்லிச் செல்லலாம், நீண்டு போகுமென்று நிறுத்துகிறேன். பாரதிதாசனார்க்கு ஒரு குறிக்கோள் உண்டு. அதை வலியுறுத்தும் முறையிலே பாடல்களை இயற்றுகிறார். அப் பாடல்கள் இளைஞர்களின் உள்ளத்தைத் தொட்டுவிட்டன. அதன் அறிகுறியே புரட்சிக் கவிஞருக்கும் பாராட்டு, நிதிமலர் என்பேன். அவரின் கவிதைகள் காலத்தை வென்று நின்று நிலவும் என்பதையும் நாம் காண்போம்.

(1946ல் எழுதியது)







# இனி ஒரு விதி செய்வோம்

# இராமநாதபுரம் மாவட்டம்

எச். பி. என். ஷெட்டி,
இ.ஆ.ப.,
ஆணையர்,
அரசு செயலாளர்,
ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை
சென்னை

தமிழ்நாட்டில், சென்னை நீங்கலாக எஞ்சிய பதினைந்து மாவட்டங்களுள், பொருளாதார மற்றும் வாழ்க்கை நிலைகளில் பின்தங்கிய மாவட்டங்களுக்குள் இராமநாதபுரம் முதலிடம் வகிக்கிறது. எனவே அம்மாவட்ட முன்னேற்றத்தில் அரசின் அனைத்துத் துறைகளும் அக்கறைகாட்டி வருகின்றன. ஊர் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எனினும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் குறித்து சற்று காணவே இக்கட்டுரை.

இராசபாளையம், வெம்பக் கோட்டை, காரியாபட்டி, போகலூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து வட்டாரங்கள் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றத்திற்காக இம்மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்து ஒவ்வொரு கிராமங்களும் தன்னிறைவு எய்த வேண்டும் என்ற குறிக்கோள் இம்மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்நிலையை எய்தியுள்ளது என்பதைப் பார்ப்போம்.

தன்னிறைவுத் திட்ட வட்டாரங்கள் ஐந்திலும், மொத்தம், 424 இணைப்புச் சாலைப் பணிகளும், 146 சிறுபாலங்கள் அமைக்கும் பணியும், 61 மயான சாலை அமைக்கும் பணியும், 47 பாசன சிறு அமைப்பு மேம்பாட்டுப்பணிகளும், மேற்கொள்ளப்படுகின்றன. இவை மட்டுமின்றி கட்டிட வேலைகளைப் பொறுத்தவரையில், 5 கிராம மருந்தகங்களும், 11 தாய்சேய் நல விடுதிகளும், 80 பள்ளிக் கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்பது இலக்கு. இந்த இலக்கு தற்போது வெகுவாக விரைவாக எய்தப்பட்டு வருகிறது.



ராஜபாளையம் ஒன்றியத்தில் 88 வேலைகள், ரூ. 20.60 இலட்சம் மதிப்பீட்டில் நிறை

வேற்றப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஐந்து வட்டாரங்களுள் இராஜபாளையம் ஒன்றியம் மட்டுமே நல்ல நிதி வசதிகளைக் கொண்டு திகழ்கிறது.

வெம்பக் கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில், இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பட்டியல் இதோ—

| | |
|---|---|
| இணைப்புச் சாலைகள் | 107 |
| சிறு பாலங்கள் | 24 |
| அரிசன குடியிருப்புகளுக்கான மயான சாலை வசதி | 10 |
| பாசன சிறு திட்ட மேம்பாடு | 6 |
| பள்ளிக் கட்டிடம் | 3 |

இப்பணிகளுள் பெரும்பாலானவை நிறைவு பெறும் நிலையில் உள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மற்றொரு ஒன்றியமான காரியாபட்டி ஒன்றியத்தில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணிக்கு முதலிடம் நல்கப்பட்டுள்ளது. 90 இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகளும், 72 சிறுபாலங்கள் கட்டும் பணியும், பத்து அரிசன குடியிருப்புகளுக்கு மயான சாலை வசதி ஏற்படுத்திக்கொடுக்கும் பணியும், பத்து பாசன சிறு திட்டங்கள் மேம்பாடும் இத்திட்டத்தின் சிறப்பு கூறுகள். கட்டிடங்களைப் பொறுத்தவரையில், ஓர் ஊர்ப்புற மருந்தகமும், மூன்று தாய்சேய் நல விடுதிகளும் 30 பள்ளிக் கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. தற்போது கூரை அமைப்புகளிலும், வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பெரும்பாலானவை இத்திட்டம் நிறைவு பெறும் போது சொந்தக் கட்டிடங்களில் இனிது இயங்கும்.

போகலூர் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், தன்னிறைவுத் திட்ட வேலைகள் 174, ஏறத்தாழ ரூ. ஐம்பது லட்சம் மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் ஒன்றியத்தில் 115 வேலைகள் ரூ. 41.75 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நீர்வளம் அறவே அற்ற இம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்கும் பணி ஒரு சவாலாகவே அமைந்திருந்தது. எனினும் இச் சவாலை ஏற்று இம்மாவட்ட அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் பணியை தமிழ் நாடு குடிநீர்வடிகால் வாரியம் மேற்கொண்டு வருகிறது. இந்த ஐந்து ஒன்றியங்களிலும் குடிநீர் வழங்குவதற்காக ஆறுவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒன்று முதல் ஐந்து வகையைச் சார்ந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 256. இவைகளில் 94 குடியிருப்புகளுக்கு ஏற்கனவே குடிநீர் வழங்கப்பட்டு விட்டது. எஞ்சிய குடியிருப்புகளுக்கும் விரைவில் குடிநீர்வழங்கப்படும்.

மொத்தத்தில், பின்தங்கிய இராமநாதபுரத்தின் தற்போதைய நிலை இத்திட்டம் முழுவதும் நிறைவேற்றி முடிக்கப்பட்டவுடன் வெகுவாக மாறிவிடும் என்பது உறுதி.

## கடைசி அட்டை

### உண்மையான சகோதரத்துவம்

**ஓர் உத்தமமான சமூக அமைப்பில் எல்லாருக்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் தொடர்பு ஏற்பட பலதிறப்பட்ட மார்க்கங்களும் சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும். அதாவது சமூகத்தில் அங்கம் பெற்றுள்ள உறுப்பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்கு சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம்.**

**டாக்டர் அம்பேத்கார்**



தோற்றம் : 14—4—1891
மறைவு : 6—12—1956





## பழனியில் இரண்டாவது மின் இழுவை இரயில்

குன்றமர்ந்த வேல்முருகன் திருத்தலமாம் பழனியில் பெருகி வரும் பக்தர்கள் கூட்டத்திற்கு நாளும் சீரிய வசதிகள் செய்யும் பணி தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. ஆலய நிருவாகம் ஆற்றிடும் பணிகளால் வருகை தரும் மக்களுக்குக்கிடைத்திடும் நன்மைகள் பலப்பல. நடக்க இயலாதோர், மலை மீதேறி முருகனை வழிபட இழுவை இரயில் ஒன்று பழனிக்குன்றின் மேல் பகுதியில் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. 7 டன் இழுவைத் திறன் கொண்ட இந்த இழுவை இரயில் 980 அடி இருப்புப்பாதையில் 36 பயணிகளை 8 நிமிட நேரத்தில் மேலே கொண்டு செல்கின்றது. ரூபாய் 6 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட இந்த இழுவை இரயில் மூலம் பழனி திருக்கோயில் ஆண்டொன்றுக்குப் பெற்று வரும் வருமானம் சுமார் 7.6 இலட்சமாகும்.

மென்மேலும் மக்கள் இவ்வசதியைப் பெற வரும்போது ஒரு இழுவை இரயிலால் ஈடுசெய்ய முடியாததை உணர்ந்த ஆலய அறங்காவலர்க் குழுவினர் இரண்டாவது இழுவை இரயிலை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். ரூபாய் 18.5 இலட்சம் செலவில் ரெயில் பாதையும், இழுவை இயந்திரங்களும் மின் சாதனங்களும் அமைக்கப்பட்டு கடந்த 14.3.81-ஆம் நாளன்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களால் இரண்டாவது இழுவை இரயில் தொடங்கி வைக்கப்பட்டது.

32 பேர்கள் செல்லக்கூடிய அழகிய இரண்டு இரயில் பெட்டிகளை ஒரு இலட்ச ரூபாய் செலவில் தயாரித்து சேரன் போக்குவரத்துக் சழகத்தினர் அன்பளிப்பாக பழனி கோவிலுக்கு வழங்கியுள்ளனர்.

தொடக்க விழா நாளன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் இப்பெட்டிகளை சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கினார்கள்.



பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் திருமதி ராதா தியாகராசன் அவர்கள் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து திருக்கோயில் சார்பில் பெற்றுக் கொண்டார். இந்த 8 டன் இழுவைத் திறனுள்ள இந்த இரயில் 950 அடி இருப்புப்பாதை நீளத்தை 7 நிமிடங்களில் கடந்து செல்கிறது. பழனிக்கு வரும் பக்தர்களுக்கு இந்த இரண்டாவது இழுவை இரயில் சிறந்த பயனை நல்கும் என்பதில் ஐயமில்லை.

# தமிழகத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

ஏ. பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்.
இயக்குநர்,
மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்ககம்

**1981**-ஆம் ஆண்டு மக்கட் கணக்கெடுப்பு பிப்ரவரி மாதம் 9-ஆம்தேதி அன்று தொடங்கி மார்ச் 5-ந்தேதி வரை நடந்தது. மார்ச் 1-ந்தேதி அன்று சூரிய உதயத்தின்போது நாட்டின் மக்கள்தொகை எவ்வளவு என்று கணக்கிடுவதே இக்கணக்கெடுப்பின் முக்கிய நோக்கமாகும். தமிழ் நாட்டின் மொத்தம் 94,000 பேர் இப்பணியில் ஈடுபட்டனர். இம்மாபெரும் பணி, கணக்கெடுப்பாளர் மற்றும் பொது மக்களுடைய ஒத்துழைப்புடன் தமிழ் நாட்டில் செவ்வனே நடந்தேறியது. கணக்கெடுப்பு முடிந்த 15 தினங்களுக்குள் இந்தியா முழுவதற்குமான பூர்வாங்க விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1981-ஆம் ஆண்டு மார்ச் 1-ந்தேதி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 48,297,456. 1971-ல் தமிழ் நாட்டின் மக்கள் தொகை 41,199,168 ஆக இருந்தது. 1971-லிருந்து 1981-வரை, அதாவது பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மக்கள் தொகை 17.23% அதிகரித்திருக்கிறது. தற்பொழுது, இந்தியாவின் மக்கள் தொகை பூர்வாங்கக் கணக்கின்படி 68,38,10,051 ஆகும். இந்தியாவின் மக்கள் தொகை பத்தாண்டுகளில் 24.75% உயர்ந்திருக்கிறது. 1971-81ல் தமிழ்நாட்டு மக்கள் தொகை சுமார் 71 இலட்சம் அதிகரித்திருக்கிறது. 1961-71ல் இந்த உயர்வு 75 இலட்சமாக இருந்தது.

1961-ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்நாட்டில் அனைத்திந்திய விகிதாசாரத்தைவிட குறைந்த அளவில்தான் மக்கள் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் பிறப்புவிகிதம் குறைந்து வருகிறது. 1971ல் 1000பேருக்கு 31 ஆக இருந்த பிறப்பு விகிதம் 1979-ல் 28.1ஆகக் குறைந்துள்ளது. அதே கால கட்டத்தில் இறப்பு விகிதம் 14.4 லிருந்து 12 ஆக குறைந்துள்ளது. இதைப் பார்க்கும் பொழுது தமிழகத்தில் சுகாதார, மற்றும் குடும்ப நல முயற்சிகளை மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் கணிசமான பங்கு பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இந்தியாவில் எழுதப் படிக்க தெரிந்த மக்களின் சதவிகிதம் 36.17 ஆகும். தமிழ்நாட்டில் மொத்தம் எழுத படிக்கத் தெரிந்தவர்கள் 22,111,593. இது மக்கள் தொகையில் 45.78 சதவிகிதமாகும். எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் தமிழ்நாட்டில் இந்தியாவைவிட 10 சதவிகிதம் கூடுதலாக இருக்கின்றனர். தமிழ்நாடு மற்ற மாநிலங்களிடையே மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. கேரளா முதலிடத்தையும், மகாராட்டிரம் இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் ஆண்களிடையே இந்த சதவிகிதம் கடந்த பத்தாண்டுகளில் 51.78லிருந்து 57.19 வரைஅதிகரித்திருக்கிறது. பெண்களிடையே இந்த சதவிகிதம் 26.86லிருந்து 34.12க்கு உயர்ந்திருக்கிறது. பெண்களிடையே எழுத்தறிவு சதவிகிதம் சற்று அதிகமாக உயர்ந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது மிகவும் வரவேற்கக்கூடிய ஒரு நிலையாகும். எழுத்தறிவில் சென்னை மாநகரம் மாவட்டங்களிடையே முதல் இடத்தைப் பெறுகிறது. (66.29%) சென்னையைத் தவிர மற்ற 15 மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் கன்னியாகுமரி மாவட்டம் முதலிடத்தைப் பெருகிறது (62.05%)

மாநிலங்களிடையே தமிழ்நாடு 1971-ல் இருந்தது போலவே இப்பொழுதும் மக்கள் எண்ணிக்கையில் ஏழாவது இடத்தைப் பெறுகிறது. இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் 7.06% மக்கள் தமிழ் நாட்டில்தான் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் மாவட்டங்களிடையே மதுரை மாவட்டம் மக்கள் தொகை அடிப்படையில் முதலிடம் பெறுகிறது. அதற்கு அடுத்தாற்போல் வரும் மூன்று மாவட்டங்களாவன: வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், ஆகியவை. மிகக் குறைந்த அளவு மக்கள் தொகையுடைய மாவட்டம் நீலகிரி மாவட்டமாகும்.

தமிழ்நாட்டின் பரப்பளவு 130,057 சதுர கிலோ மீட்டராகும். மக்கள் அடர்த்தி (Density of Population) 1971-ல் தமிழ்நாட்டில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 317 பேராக இருந்தது. தற்போது இது 371 ஆக உயர்ந்திருக்கிறது. இந்தியாவில் இது 221 ஆகும். மாவட்டங்களில் சென்னை மாநகரத்தில் மக்கள் அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு 18,942 ஆகும். சென்னை மாநகரம் தவிர மற்ற மாவட்டங்களிடையே கன்னியாகுமரி மாவட்டம்தான் (843) மிகுந்த மக்கள் அடர்த்தியுடைய மாவட்டமாகும். மிகக் குறைவான மக்கள் அடர்த்தி தருமபுரி மாவட்டத்தில் (207) காணப்படுகிறது.

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஆண்களின் எண்ணிக்கை 24,420,228, பெண்களின் எண்ணிக்கை 23,877,228. தமிழ் நாட்டில் ஆண்-பெண் விகிதம் 1,000 ஆண்களுக்கு 978 பெண்களாகும். 1971-லும் இதே விகிதம் தான் இருந்தது. அகில இந்தியாவில் இந்த விகிதம் 1971-ல் 930லிருந்து 1981-ல் 935 ஆக உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் சென்னை மாநகரத்தில் இவ்விகிதம் மற்ற மாவட்டங்களை விட குறைந்த அளவில் இருக்கிறது. புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ளனர்.

தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகையுடைய 6 நகரங்களும், 14 நகரத்தைச் சார்ந்த கூட்டுகளும் (Urban Agglomerations) இருக்கின்றன. நகரங்களிலேயே நாகர்கோயில் நகரத்தில்தான் அதிக அளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள். 75.71% சென்னை நகரத்தின் மக்கள்தொகை கடந்த 10 ஆண்டுகளில் 26.63% ஆக உயர்ந்திருக்கிறது. சென்னை நகரத்தைச் சார்ந்த கூட்டுப் பகுதியில் (Madras Urban Agglomeration) மக்கள் தொகை கடந்த 10 ஆண்டுகளில் 3,203,557 லிருந்து 4,276,635 ஆக உயர்ந்திருக்கிறது. இவ்வுயர்வு 33.5 சதவிகிதமாகும். சென்னையைச் சுற்றியுள்ள நகரங்களில் மக்கள் தொகை வேகமாகப் பெருகுவதை இது துல்லியமாகக் காட்டுகிறது. சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களுள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் மாநில சராசரியைவிட அதிகமான சதவிகிதத்தில் மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது. செங்கல்பட்டு, (29.10) நீலகிரி (27.17), புதுக்கோட்டை, (21.99) தர்மபுரி, (18.81) கோயம்புத்தூர், (18.44).

## நூற்றி ஏழைத் தாண்டியவர்

நூறாண்டுக் காலம் வாழ்க என்று நாம் எவரையும் எளிதில் வாழ்த்தி விடுகிறோம்; ஆனால் நூறாண்டு வாழ்வது என்பது எளிதான நிகழ்ச்சியல்ல.

நூறாண்டுகளுக்கு மேல் வாழ்வேன் என்று சொல்லிய அண்ணல் காந்தியடிகள் கொடியன் ஒருவனால் கொலை செய்யப்பட்டதன் காரணமாக நூறாண்டு வாழ இயலவில்லை.

'நூறாண்டு வாழ்வது எப்படி' என்று நூலை எழுதிய மறைமலையடிகளாரும் நூறாண்டு வாழவில்லை.

பல நிறுவனங்கள் - கட்டடங்கள் - கல்லூரிகள் நூற்றாண்டைத் தாண்டியிருக்கின்றன. ஆனால் மனிதர்கள் நூறு வயதைக் கடந்து வாழ்வது என்பது சாதனைக்குரிய விஷயம் மட்டுமல்ல, வியப்புக்குரிய நிகழ்ச்சியும் ஆகும்.

அண்மையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது நூறாண்டைத் தாண்டிய ஒரு பெரியவரை மக்கள் தொகைக் கணக்கெடுப்பாளர் சந்தித்திருக்கிறார்.

திருச்சிராப்பள்ளி வட்டத்தைச் சார்ந்த ஆலூர் கிராமத்தில் வசித்து வரும் 107 வயதுடைய ஜோதிநாதன் என்னும் ஜோதி வளையாபதி அடிகள் அவர்களைத் தமிழக அரசின் பொதுத்துறைத் துணைச் செயலாளர் திரு கணேசன் அவர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது பேட்டி கண்டு சேகரித்த தகவல்கள் சுவைமிக்கவையாகும்.

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மாயூரத்தில் 1873ல் பிறந்தவர் அவர். கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த பெங்களூரில் உயர்நிலைக் கல்வியைக் கற்றார். பின்னர் டாக்காப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். அடையாறு, தியாசாபிகல் கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகச் சிறிது காலம் பணிபுரிந்திருக்கிறார். ஆஸ்திரேலியா போன்ற பல வெளி நாடுகளுக்கும் அவர் சென்று வந்திருக்கிறார். வியன்னாவில் அரசு மருத்துவக் கல்லூரியில் தனிப்பட்ட முறையில் படித்து டிப்ளமா பட்டம் பெற்றிருக்கிறார்.

ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மிகவும் திறமை பெற்றவராகத் திகழும் இந்த முதியவர், ஆஸ்த்மா, வெண்புள்ளி ஆகிய நோய்களுக்குரிய நாட்டு மருந்துகளை வழங்கி வருகிறார். 90 நாட்களுக்குப் பயன்படுத்தப்பெறும் அந்த மருந்துக்கு 100 ரூபாய் கட்டணம் வாங்குகிறார்.

அரவிந்தகோஷ், காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, வ.உ. சிதம்பரனார், சுபாஷ் சந்திர போஸ், வ.வே.சு. ஐயர் போன்ற தலைவர்களையும் தேசிய கவி சுப்ரமணியபாரதி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன போன்ற கவிஞர் திலகங்களையும் தன் வாழ்நாளில் சந்தித்துப் பேசியிருக்கிறார். நாட்டு விடுதலைப்போரில் பங்கேற்று சிறைத் தண்டனையையும் பெற்றிருக்கிறார்.



புத்தகங்களை விரும்பிப் படிக்கிறார்—கண்ணாடியின் உதவியால்தான் படிக்கிறார், என்றாலும் புத்தகம் படிக்கும் ஆர்வம் 107 வயதைத் தாண்டியும் அவரிடம் காணப்படுவது வியப்புக்குரிய செய்தி. இந்த வயதிலும் ஊன்றுகோலின் உதவியின்றி நடந்து செல்கிறார்.

ஆளுடைய வள்ளல் அருள் மாலை, திருக்குறள் கடவுள் வாழ்த்துரை, கலைகள், தேவி கீதம் என நான்கு நூல்களை எழுதியுள்ள இவர், ஒரு பிரமச்சாரி என்பது குறிப்பிடத்தக்க செய்தி. இவரது சகோதரரின் கொள்ளுப் பேத்தியான கங்கா என்பவர் இவருக்கு ஒத்தாசையாக இருந்து வருகிறார்.

வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
**டான்சி**யின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


# நூல் நயம்



திரு கந்தசா.

**மரணத்தை வென்ற மகாகவி**

தொகுத்துப் பதிப்பித்தவர்:
சீனி. விசுவநாதன்
வெளியிட்டோர்:
ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்,
2, மாடல் ஹவுஸ் லேன்,
சி.ஐ.டி. நகர்,
சென்னை–600 035.

164 பக்கங்கள் விலை ரூ. 6

கவியரசர் பாரதியார் நூற்றாண்டு விழா தொடங்கவிருக்கும் நேரத்தில் பாரதியாரை முழுமையாக அறிய ஒரு நூலைத் தொகுத்து அளித்துள்ளார் சீனி விசுவநாதன்.

பாரதியாரைப் பல கோணங்களில் ஆராய-அறிந்து கொள்ள இந்நூல் பேருதவியாக அமைந்துள்ளது. பாரதியாரைப்பற்றி குடியரசுத் தலைவர் சஞ்சீவி ரெட்டி, பேரறிஞர் அண்ணா, எஸ். சத்தியமூர்த்தி போன்ற நாட்டுத் தலைவர்களும், சங்கராசார்ய சுவாமிகள், ச.து.சு. யோகியார், ஏ.என். சிவராமன், சி.ஆர் ஸ்ரீநிவாசன் போன்ற பெருமக்களும், சோமசுந்தரபாரதியார், கா. ஸ்ரீ. ஸ்ரீ. எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு, குமாரவாடி சே. ராமானுஜாசார்யார் போன்றோரும், பாரதியாருடன் நெருங்கிப் பழகியோரும் மற்றும் பலரும் பாரதியார் பற்றி தெரிவித்துள்ள கருத்துக்குவியல் இந்நூல்.

பாரதியாரின் வரலாற்றை முறையாகத் தொகுக்க, ஆதாரமான செய்திகளை அள்ளித்தரும் நூலாகவும் அமைந்துள்ளது 'மரணத்தை வென்ற மகாகவி'.

அரிய செய்திகளைத் தரும் இந்நூலைத் தொகுத்துப் பதிப்பித்தமைக்காக ஆராய்ச்சியாளர்களும் பாரதி அன்பர்களும் சீனி-விசுவநாதனை நன்றியுடன் பாராட்ட வேண்டும்.

காலத்தால் வெல்ல முடியாத மக்கள் கவிஞரைப் பல்வேறு கோணங்களில் பல்வேறுபட்ட வித்தகர்கள்-சான்றோர்கள் பத்தொன்பது பேர் படம் பிடித்துக் காட்டியுள்ள இந்நூலைப் பயிலும் மாணவர்களுக்கு ஆராய்ச்சி நோக்கும் மொழி அறிவும் மிகும். இத்தகைய பெருமை உடைய மரணத்தை வென்ற மகாகவி கல்லூரிகளில் பாடநூலாக அமையும் தகுதி உடையதாகும்.

**Agni and other poems and Translations and Essays and other prose and Fragments.**

தொகுப்பாளர் :
விசுவநாத அய்யர்
வெளியீடு : ஏ. நடராஜன்
137, ஜானிஜான்கான் ரோடு,
சென்னை-600014.

விலை ரூ. 12 பக்கங்கள் 148

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று தமிழ்க் குரல் எழுப்பிய புதுயுகக் கவிஞர் பாரதியார், ஆங்கிலத்திலும் கவிதை, கட்டுரை எழுதும் திறம் பெற்றிருந்தார் என்பதை எடுத்துக் காட்டுகிறது இந்நூல்.

1937ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்தபோது இடம் பெறாத கவிதைகள், கட்டுரைகள் இந்த இரண்டாம் பதிப்பில் (1980 மார்ச்) இணைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரிய செய்தி. இந்தச் சிறப்புக்கு - தொகுப்பாளர் விசுவநாத அய்யர் (பாரதியின் இளவல்) அவர்களின் தொண்டுதான் காரணம் என்பது தெளிவாகிறது.

பாரதியார் தமது கவிதைகளை ஆங்கிலத்தில் பெயர்த்திருப்பதுடன் நம்மாழ்வார், ஆண்டாள், அருணகிரிநாதர் ஆகியோரின் செய்யுட்களில் ஒரு சிலவற்றையும் சுவையுறப் பெயர்த்திருப்பது இனிமை பயக்கிறது—இன்பம் அளிக்கிறது.

வண்ணம் மின்னும் வகையில்-பளபளப்புக் காகிதத்தில் நூலுக்கு உறையை வெளியிட்டு வரும் இக்காலத்தில் எளிமை ததும்பும் வகையில் உறையை உருவாக்கி வெளியிட்டிருக்கும் திரு ஏ. நடராஜன், பாரதி தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பது புரிகிறது. பாரதியின் கவிதை திசையெல்லாம் பரவுவதற்கு இந்நூல் பயன்படும் என்பது உறுதி.

—மாமூலன்

**பெரியார் படைக்க விரும்பிய புதிய மனிதன்**

ஆசிரியர் : மயிலைநாதன்
வெளியீடு : பொறி பதிப்பகம்
15, ரங்கநாதபுரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600004.

விலை ரூ. 7 பக்கங்கள் 160

தந்தை பெரியாரின் புரட்சிச் சிந்தனைகளை - புதிய கோட்பாடுகளை எடுத்துக் காட்டியிருப்பதன் வாயிலாக அவர் படைக்க விரும்பிய புதிய மனிதனை அடையாளம் காட்டுகிறார் நூலாசிரியர்.

காந்தியடிகளுக்கும் பெரியாருக்கும் உள்ள ஒப்பியல்புகளையும் வேற்றுமைகளையும் தொகுத்து விரிவாக எடுத்துச் சொல்லியிருப்பது பாராட்டுக்குரியது. அவர்கள் இருவருக்கும் இடையே இந்து சமயம் குறித்து நடைபெற்ற விவாதத்தை இந்நூலில் எடுத்துக்காட்டி இளைய தலை முறையினருக்கு நல்விருந்து வழங்கியுள்ளார் நூலாசிரியர்.

இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள் இப்பகுதியில் மதிப்புரை செய்யப்பட மாட்டா.

ஆராய்ச்சிப் பாங்கும் வரலாற்றுக் கருத்துக்களும் ஏராளமான தகவல்களும், மேற்கோள்களும் கொண்ட பேழையாக இந் நூல் திகழ்வதற்கு நூலாசிரியரின் தேர்ந்த அனுபவம் பின்னணியாக உள்ளது. நூலின் நடை நம்மைக் கவர்கிறது.

### தமிழ் வளம்

**ஆசிரியர்: கவிஞர் தமிழ்முடி**

**வெளியீடு: தமிழ்முடி நிலையம்**

**விலை ரூ. 6 பக்கங்கள் 160**

தமிழ் மொழி, தோன்றிய காலந்தொட்டு செய்யுள் நடையில் இலக்கியங்களை வடித்து வரும் பெருமை மிக்கது. அதில் உள்ள செய்யுட்கள் சிலவற்றிற்கு விரிவுரை வழங்கி இந்நூலை வளம் நிறைந்ததாக உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர். பதவுரை, பொழிப்புரை ஆகியவற்றைத் தொகுத்து சுவைகுன்றச் செய்யும் வழக்கமான முறையை மாற்றி-கதை வடிவில், நிகழ்ச்சிகளாக மாற்றி-இடையிடையே உரையாடல்களை இணைத்து-சுவை மிகுந்த நவீனம் போல் உருவாக்கியிருப்பது பாராட்டுக்குரியது. செய்திகளை ஆசிரியர் தெரிவித்திருக்கும் முறையில் நாடகப் பாங்கு மிளிர்கிறது. நம்மைக் கவர்கிறது.

விறுவிறுப்பான இனிய -தெளிவான நடை; பிஞ்சுக் குழந்தைகள் முதல் பெரியோர் வரை சுவைத்துப் படிக்கும் வகையில் முத்தமிழ் வளம் இந்நூலில் செறிந்திருக்கிறது.

### அன்னை ஓர் அகல் விளக்கு

**ஆசிரியர்: கோ. பாலச்சந்திரன்**

**வெளியீடு: ஸ்ரீ நடராஜா பதிப்பகம்**
**5, கன்னிராமபிள்ளை தெரு,**
**சிதம்பரம்-608 001.**

**விலை ரூ. 3 பக்கங்கள் 56**

குழந்தைகள் இலக்கிய வரிசையில் இடம் பெற்றுள்ள இந்நூலில் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதை-தலவரலாறு- அறிவுப் புதிர்-வினா விடை என 16 இனங்கள் உள்ளன. அனைத்தும் சிறுவர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய செய்திகள் ஆகும். எளிய நடையில் சிறப்பாக இந்நூலை உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

மகாபாரதம் அறிவுப் புதிர்-நடுகற்கள்-பகத்சிங் உலகம் என்ன சொல்கிறது ஆகிய தலைப்புகளில் உள்ள செய்திகள் சுவையும் பயனும் நல்குகின்றன.

—தமிழ்ப்பித்தன்

### தெய்வப்புலவர் திருவள்ளுவர்

**ஆசிரியர் : பி. எஸ். ராஜேந்திரன்,**

**வெளியீடு : பூவழகி பதிப்பகம்**
**31, எஸ். பி. சன்னதி தெரு.**
**சென்னை-600 014.**

**விலை ரூ. 5 பக்கங்கள் : 104**

வான்புகழ் வள்ளுவன் பற்றி – அவர் யாத்த திருக்குறள் பற்றி இன்று நேற்றல்ல. நினைப்புக்கு எட்டாத நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே கருத்துரைகள்-ஆராய்ச்சிகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அந்த வகையில் இந் நூல், இளைஞர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் படித்துப் பயன் பெறத் தக்க வகையில் அமைந்துள்ளது.

வள்ளுவர் வரலாறு, குறளின் அமைப்பு என்றெல்லாம் மேற்போக்காகக் கூறிச் செல்லாமல், ஓர் ஆராய்ச்சி நூலாகவே செய்து சிந்தனைக்கு விருந்தூட்டுகிறார் நூலாசிரியர். மாணவர்க்கு இந் நூல் பெரிதும் பயன்படும்.

### அன்னைத் தமிழில் அறிவியல் வளர்ச்சி

**ஆசிரியர் : வே. தமையந்திரன்,**

**வெளியீடு : லெ. வேலாயுதம்,**
**கழனீர்குளம்–627 861**
**திருநெல்வேலி மாவட்டம்**

**விலை ரூ. 1.50 பக்கங்கள் : 32**

'தமிழில் எல்லாம் முடியுமா?' என்று வினாவை எழுப்பி, அதற்கு விடையாக 'முடியும்' என்றோ முடியாது' என்றோ திட்டவட்டமாகக் கூறாமல், 'முடியும் ஆனால்....?' என்று சொல்லி, 'தமிழை அதற்கு நாம் தயார்ப்படுத்த வேண்டும்' என்று 'விடியும் வரை ஊதுவேன்' என்னும் தம் உரையில் கோடிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

''தமிழில் அறிவியற் கலைச் சொற்கள் மிகவும் குறைவு. இப்போது உள்ள சொற்கள்கூட நிலைப்படுத்தப் படவில்லை'' என்று குறிப்பிட்டு, ''தமிழில் ஒரு விரிவான அறிவியற் கலைச்சொல் அகர முதலி தொகுக்கப்படவேண்டியது மிகவும் அவசியம்'' என்று கூறுகிறார். நமது தாய்மொழியை வளப்படுத்தியே ஆகவேண்டும் என்று முழங்கும் ஆசிரியர் 'தமிழனே சிந்திக்க நேரமில்லை, செயல்படு'! என்கிறார். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட இச் சிறுநூல் சிந்தனையைத் தூண்டுகிறது.

—'கிரிஜா'



### பப்பாளி மரம்

**ஆசிரியர்: எஸ். ஏ. சூசைராஜா**

**வெளியீடு: ஸ்டார் பிரசுரம்**
**72, பெரிய தெரு,**
**திருவல்லிக்கேணி,**
**சென்னை-600 005.**

**விலை ரூ. 3 பக்கங்கள் 64**

பப்பாளிமரத்தின் இலை, பூ, காய், கனி, அனைத்தும் மனித இனத்துக்குப் பயன்படும் அருமையை ஆராய்ச்சி முறையில் எழுதியுள்ளார் நூலாசிரியர். பப்பாளிப் பழம் அருந்துவது கெடுதலானது என்ற கொள்கை தவறானது என்பதை எடுத்துக் காட்டி 3 மாத கருக்கொண்ட மகளிரைத் தவிர ஏனையோர் அனைவராலும் அது உண்ணத்தக்கது என ஆதாரத்துடன் விளக்கியிருக்கிறார். பப்பாளி, பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுவது விவரிக்கப்பட்டுள்ளது. ஏனைய பழங்களைவிட இது சத்தானது என்பது புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

### பொதுமைப் பூக்கள்

**ஆசிரியர் : இளையபாரதி**

**வெளியீடு : வி. ஆர். பப்ளிகேஷன்**
**20, அய்யா முதலி தெரு,**
**இராயப்பேட்டை, சென்னை-14.**

**விலை ரூ. 5 பக்கங்கள் 120**

வசன கவிதைகளின் தொகுப்பு இந்நூல்: 29 கவிதைகள் கொண்ட இத்தொகுப்பில் 'புயற் பறவைகளே புறப்படுங்கள்' போன்ற கவிதைகள் சந்தச்செறிவுடன் விளங்குகின்றன. கவிதைகளில் பொருள் ஆழம் இருந்த போதிலும், வடிவம், சுவைக்க விடாது தடுக்கிறது.

'ரத்தஞாயிறு' என்னும் கவிதையில் 'பாரதியே' என்று முன்னிலையில் விளித்த கவிஞர், பிறிதோரிடத்தில் படர்க்கையில் குறிப்பிடுகிறார். இட வழுவும் புதுக்கவிதையின் அம்சம் நூலாசிரியர் கருது[illegible] போலும்!





## வடார்க்காடு—தருமபுரி மாவட்டங்களில் வறட்சி நிலைமை:

# துயர் துடைப்பில் துரிதப் பணிகள்

**பி. வி. கிரி**

அதோ! அந்த வயல்வெளியில் ஏற்றம் இருப்பது தெரிகிறது; ஆனால், கிணற்றில் தண்ணீர்தான் இல்லை!

அங்கே, ஆடு மாடுகள் அலைவது தெரிகிறது; ஆனால் நிலத்தில் புல்தான் இல்லை!

அந்த இடத்தில், திருவிழாபோல திரளான கூட்டம் தெரிகிறது; ஆனால், ஊற்றில் தண்ணீர்தான் வரவில்லை!

வடார்க்காடு — தருமபுரி மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்கிறோம். அங்கெல்லாம் இந்த அவல நிலையைக் காண்கிறோம்.

**வறட்சியிலும் வளர்ச்சிப் பணிகள்:**

பார்க்கும் இடமெல்லாம் பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளுக்குப் பதில், இன்று, பாளம் பாளமாக வெடித்திருக்கும் நிலங்கள்!

வளமான, ஆழமான நீர் நிலைகளெல்லாம் இன்று வறண்டு கிடக்கும் காட்சிகள்!

[illegible]ங்கு பார்த்தாலும் வறட்சி...வறட்சி... [illegible]ந்த வறட்சியிலும் வளர்ச்சிப் திரு கந்தசாமி துடைப்பதிலும் துரிதப்

வடார்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காவேரிப்பாக்கம் ஏரிக்கு வருகிறோம். இம் மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியான இதில், சொட்டு தண்ணீர்கூட இல்லை! பார்வையைச் சுழல விடுகிறோம். பரந்த வானம் போல் காட்சியளிக்கிறது அது. மேலேயும் வானம், கீழேயும் வானமா?

இந்த ஏரிக்கரையின் நீளம் 4.5 மைல் நீர்ப்பரப்பின் பரப்பு 6 சதுர மைல். அதிகமான அகலம் 2 மைல். ஏரியின் கொள்ளளவு 1,400 இலட்சம் கன அடி. நீர் வரும் பரப்பு 49 சதுர மைல். இவ்வளவு பெரிய இந்த ஏரியின் வயது எத்தனைத் தெரியுமா? 500 ஆண்டுகள்! பழம்பெருமைமிக்க இந்தப் பரந்த ஏரி, இன்று மழை இல்லாமல் பாழடைந்து காணப்படுகிறது. பக்கத்து ஊருக்குப் போக, இந்த ஏரி, இன்று கிராமத்து மக்களுக்கு ஒரு குறுக்கு வழியாகவும் பயன்படுகிறது!

26-3-81 அன்று, வறட்சிப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்ய வந்த மேதகு தமிழக ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள் இந்த ஏரியைப் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்



காவேரிப்பாக்கம் ஏரியை மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் பார்வையிடுகிறார்.

தலைவர் திரு. டி. கங்கப்பா, ஐ. ஏ. எஸ்., வடார்க்காடு மாவட்டப் பொறியாளர் திரு எம். பத்மநாப நாயர் மற்றும் சம்பந்தப் பட்ட அரசு அலுவலர்கள் ஆளுநருடன் வந்திருந்தார்கள்.

அக்டோபர், நவம்பர் மாதத்தில் தண்ணீர் ஏரிக்கு வரும் என்றும், 20 ஆண்டுகளாக இந்த ஏரியில் தண்ணீர் வற்றியது கிடையாது என்றும், ஏரியில் ரூ.46,000 செலவில் இரண்டு கிணறு எடுத்து குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் மாவட்டப் பொறியாளர், ஆளுநர் அவர்களிடம் கூறுகிறார். பிறகு அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் அங்கே நடந்தது.

**வேலைகள் நடக்கின்றன!**

இந்த ஏரியின் வறட்சி பற்றி, அப்பகுதியில் வாழும் சலவைத் தொழிலாளி திரு. குப்பன் (வயது 60) அவர்களைக் கேட்ட போது சொன்னார்:

''எனக்குத் தெரிஞ்சி இந்த ஏரியிலே மூணு தடவை வறட்சி ஏற்பட்டிருக்கு. ஆனா, இப்ப ஏற்பட்டதுபோல, எப்போதும் இல்லே. இந்தப் பகுதியிலே பயிரெல்லாம் காய்ஞ்சு போச்சுங்க...துணி துவைக்க மூணு மைல் தொலைவு போய், அங்கே ஆற்றுப் பள்ளத்திலே இருக்கிற ஊற்று நீரிலே துணியைத் துவைச்சிகிட்டு வரேன். வருமானம் முன்ன போல இல்லே, ரொம்பக் கஷ்டம்தான்..... எங்கப் பகுதியிலே இப்ப கிணறுலே எல்லாம் தூர் வார்றது போன்ற வேலைங்க நடந்துகிட்டிருக்குது.....''

பெருங்காஞ்சியில் உள்ள கொடைக்கல் ஏரியைப் பார்க்கிறோம். ஏழு கிராமத்துக்குப் பாசனம் செய்த அந்த ஏரி, இன்று வறண்டு வெடிப்புடன் காட்சி தருகிறது. அந்த ஏரியில் தூர் வாரும் பணி நடந்து கொண்டிருக்கிறது. சுமார் 300 பேர் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். போகிற வழியில், குளங்களிலும் தூர் வாரும் பணிகள் நடைபெறுவதைப் பார்க்க முடிகிறது.

**புற்று உள்ள இடத்தில்...**

கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாத்துமதுரை, துத்திப்பட்டு, சஞ்சீவபுரம், பாப்பன்தோப்பு, நிமலாம்பட்டு ஆகிய கிராமங்களுக்கும் சென்று பார்க்கிறோம்.

புற்று உள்ள இடத்தில் ஊற்று இருக்கும் என்பார்கள். ஆகவே, அதையும் பார்த்து விடுவோமே என்று நில இயல் வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்ததில் பலனில்லாமல் போய்விட்டது என்கிறார் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஓர் அலுவலர்.

கணியம்பாடியில் உள்ள அரிசனக் குடியிருப்பில் குழாய்த் தண்ணீருக்காக நான், நீ என்று போட்டி போடுவதையும், சாத்து

**தூர் வாரும் வேலை நடக்கிறது.**





**இந்திய அரசின் மாண்புமிகு வேளாண்மை இணை அமைச்சர் திரு ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் (30.3.81) அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி விவாதித்தார்.**

மதுரையில் கைக்குழாயில் தண்ணீர் பிடிக்கப் பெண்கள் காத்துக் கொண்டிருப்பதையும் கண்டு மனம் நெகிழ்கிறோம். இங்கு 45 அடி ஆழம் உள்ள ஒரு கிணறு வறண்டு, வெறும் பாறைகளாகக் காட்சியளிக்கிறது. துத்திப்பட்டு அரிசனக் காலனிக்குள் நுழைகிறோம். அங்குள்ள கிணறு வறண்டு கிடக்கின்ற காட்சியைக் காண முடிகிறது. சிறுகளம்பூர் ஏரி ஒன்றும் மைதானம் போல் காட்சி தருகிறது.

**இரவும் பகலும் :**

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர் ஒருவர் பள்ளி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்.

''வீட்டுக்குப் போய் பத்துக் குடம் தண்ணியாவது பிடிச்சாத்தான் நாளைக்குக் குளிக்க எல்லாம் சரியாக இருக்கும்'' என்று அவர் சொல்வதைக் கேட்டால், பரிதாபமாக இருக்கிறது.

இரவும் பகலும், எந்த நேரமும், கையில் குடத்துடன் நீர் நிலையைத் தேடிச் செல்லும் ஆடவர் மகளிரை இங்கே பார்க்கலாம். தண்ணீர் கிடைத்ததும் மகிழ்ச்சியுடன் தலையில் சுமந்து வருவதையும், சிலர் சைக்கிளிலும், மாட்டு வண்டியிலும் தண்ணீர் எடுத்து வருவதையும் அன்றாடம் நாம் பார்க்கலாம்.

சாலையின் இருமருங்கும் பார்த்துக் கொண்டே போகிறோம். வயல்வெளிகள் கட்டாந்தரையாகக் கிடக்கின்றன. ஆடுமாடுகள் அங்கெல்லாம் புல் கிடைக்குமா என்று அலைந்து கொண்டிருக்கின்றன. நீர்நிலையைத் தேடி பறவைகள்கூட இங்கும் அங்கும் பறந்து செல்லுகின்றன. ஆனால், வறட்சிப் பணியையே வளர்ச்சிப் பணியாக மாற்றும் கையில், தூர் வாருதல், ஆழ்துளைக் கிணறு, குழாய் போடுதல், சாலை அமைத்தல் ... நிவாரணப் பணிகள், பல பகுதிகளில் துரிதமாக நடப்பதையும் நாம் பார்க்க முடிகிறது.

திரு கந்தசாம

**நிவாரணப் பணிகளுக்கு...**

26—3—81 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்தபோது, மாவட்டத்தில் நடைபெறவிருக்கின்ற நிவாரணப் பணிகள் பற்றிய விளக்கம் ஒன்றினைத் தந்தார்.

நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசு வடார்க்காடு மாவட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

12 நகராட்சிகளில் 200 ஆழ்துளைக் கிணறுகள் - கைப்பம்புகள் அமைக்க ரூ. 30 இலட்சம்

பாலாறு தண்ணீர் விநியோகத் திட்ட மேம்பாட்டு வேலைக்காக ரூ. 10 இலட்சம்.

ஊராட்சி ஒன்றியங்களில், 500 ஆழ்துளைக் கிணறுகள் - கைப்பம்புகள் அமைக்க ரூ. 75 இலட்சம்.

பொதுமக்களுக்கான குடிநீர்க்கிணறுகள் அமைக்க ரூ. 25 இலட்சம்.

புதிய மண் சாலைகள் அமைக்க ரூ. 35 இலட்சம்.

சிறிய பாசனக் குளங்கள் பழுது பார்க்கவும், மேம்படுத்தவும் ரூ. 20 இலட்சம்.

கால்நடைகளுக்கான குட்டைகள் உட்பட ஊருணிகள் அமைக்க ரூ. 5 இலட்சம். ஆக மொத்தம் ரூ. 200 இலட்சம் இப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கிராமங்களில் குடிநீர் கிடைத்திட :

கிராமங்களில் குடிநீர் கிடைப்பதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில், கிராமப்புறங்களுக்காக அமைக்கப்படும் ஆழ்துளைக் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 500.

ஒப்பளிக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை. 414.

முடிக்கப்பட்ட நில இயல் ஆய்வுகளின் எண்ணிக்கை 348.

தோண்டப் பெற்ற ஆழ்துளைக் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 153.

செயல்பாட்டில் உள்ள ஆழ்துளைக் கிணறு தோண்டும் கருவிகளின் மொத்த எண்ணிக்கை 11.

ஆழ்துளைக் கிணறுகளுக்காகச் செய்யப்பெற்ற மொத்தச் செலவு 8.67 இலட்சம்.

• இதற்கான முழு ஒதுக்கீட்டுத் தொகையும், பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### தருமபுரி மாவட்டத்தில் ....

தருமம் புரிகின்ற நிலையில் இல்லாத தருமபுரி, இன்று யாராவது தருமம் செய்வார்களா என்று கையேந்தி நிற்பது போல் காட்சி தருகிறது! அதற்குத் தமிழக அரசு, தாராளமாக நிதியினைத் தந்து நிவாரணப் பணிகளைச் செய்வதன் மூலம், அம்மக்கள் வறட்சியிலிருந்து மீள வழி வகை கண்டு வருகின்றது.

மார்ச் 27-ந் தேதி தருமபுரி மாவட்டத்தில் காலடி எடுத்து வைக்கிறோம். கடுமையான வெய்யில் கானலைச் சுடுவதுபோல், கடுமையான வறட்சி நம் நெஞ்சைச் சுடுகிறது.

''தருமபுரியில் பெரும்பான்மையான பகுதிகளிலெல்லாம் கடுமையான வறட்சி நிலவுகிறது. 383 கிணறுகளை ஆழப்படுத்தும் பணி இப்போது நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக, இதுவரை 120 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள கைக் குழாய்களில் 27ல் 15 குழாய்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. மற்றவை மிக விரைவில் சரி செய்யப்படும்'' என்று கூறுகிறார் துணை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கிறிஸ்தோபதாஸ் காந்தி ஐ. ஏ. எஸ். அவர்கள்.

### தூர் வாரும் பணிகள்

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாப்பன் ஏரியைப் போய்ப் பார்ப்போமா?

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 7,000 மதிப்பீட்டுச் செலவில் தூர் வாரும் பணி நடைபெறுகிறது. இங்கே 10-3-81 முதல் நடைபெறும் இந்தப் பணியில் 55 பேர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதோ! அங்கே ஆடவரும் மகளிரும் சேர்ந்து புதிதாக மண்பாதை ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிறார்களே! ஆம். 60 கி.மீ. நீளமுள்ள இந்த மண்பாதையை அவதானப்பட்டி-தாசங்கொட்டாய்ப் பகுதியில் ரூ.7,000 மதிப்பீட்டுச் செலவில் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். 15-10-80 முதல் தொடங்கப்பட்ட இந்தப் பணியில் 45 பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு 2 கிலோ அரிசியும், ரூ. 1.50ம் கூலியாகத் தரப்படுகிறது.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், அகசிப்பள்ளி ஏரியில் தூர் எடுக்கும் பணி ரூ. 7,000 மதிப்பீட்டுச் செலவில் நடைபெற்று வருகிறது. 55 பேர் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். 18 ஏக்கர் பரப்பளவுள்ள முருகன்குட்டை ஏரியும் வறண்டு கிடக்கிறது.

### பட்டினி இல்லாமல்...

பர்கூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சுண்டம்பட்டி ஏரியிலும் தூர் வாரும் பணி தீவிரமாக நடைபெறுவதைப் பார்க்க முடிகிறது.

தூர் வேலையில் ஈடுபட்டிருக்கிற செட்டிப்பள்ளிக் கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி (வயது 45) என்பவரைக் கூப்பிடுகிறோம். அவர் சொல்கிறார்:

''எங்க குடும்பத்திலே ஏழு பேருங்க. எனக்கு விவசாயம்தான் தொழில், மழை

ஆழ் துளைக் கிணறு அமைக்கும் காட்சி





இல்லாததனாலே, இந்தத் தூர் வாருகிற வேலையைச் செய்யறேன். வறட்சின்னாலும் இந்த வேலை கிடைச்சிது. அரிசியும் கூலியும் தர்ராங்க. அதனாலே எங்க குடும்பம் பட்டினி இல்லாம சாப்பிட முடியுது.''

இதே சுண்டம்பட்டியில், கிணற்றை ஆழப்படுத்தும் வேலையையும் பார்த்துக் கொண்டே போகிறோம். பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தை அடைகிறோம். அங்கே கிடைத்த பல தகவல்கள்....

தருமபுரி மாவட்டத்தில் 1,000 குடிநீர்க் கிணறுகள் ரூ. 15 இலட்சம் செலவில் ஆழப்படுத்தும் வேலை நடந்து வருகிறது. ஏறத்தாழ 800க்கு மேற்பட்ட கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 149 குழாய்க் கிணறுகள் ரூ. 23 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றது; இது குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் நடவடிக்கையாகும்.

தேசியக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரும்பொருட்டு 2,100 வேலைகள் ரூ. 1 கோடியே 27 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக தமிழக அரசு முதல் கட்டமாக ரூ. 40 இலட்சமும், ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் 3 ஆயிரம் டன் அரிசியும் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் 65,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள்.

### மழை இல்லாமல்:

புதிய சாலை அமைத்தல், ஊரகச்சாலை செப்பனிடுதல், ஏரிகள் தூர் வாருதல், நீர் வரும் கால்வாய்கள் தூர்வாருதல், பொதுக் கழிப்பறைகள் அமைத்தல், புதிய ஏரிகளை உருவாக்குதல், பள்ளிக் கட்டடம் கட்டுதல், குழந்தைகள் காப்பகம் கட்டுதல், கிராமங்களில் வானொலிக்கென தனி அறைகள் கட்டுதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் சராசரி 844 மி. மீ. மழை பெய்யும். இந்த ஆண்டு 50 சதவிகிதம் குறைந்துள்ளது. இதனால் குடிநீர்ப் பற்றாக்குறை வெகுவாக ஏற்பட்டது. மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும். பொதுவாக, மானாவாரி பயிர்தான் பயிரிட முடியும். 5.5 இலட்சம் ஏக்கரில் அதுவும் இல்லாமல் போய்விட்டது, மழை இன்மையால்!



திரு கந்தசாமி



திருமதி சீரங்கியம்மாள்

இரண்டு' நீர்த் தேக்கங்களான 1. சின்னாறு. 2. கிருஷ்ணகிரி அணை இதன் மூலம் 12,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. நடப்பாண்டில் மழை இல்லாததால், அணைக்கு நீர் வரத்து இல்லை. இதனால் விவசாயம் ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்து விட்டது.

### புதிய நீர்த்தேக்கங்கள் :

புதிய நீர்த் தேக்கங்கள் தும்பளஹள்ளி, தொப்பையாறு, வாணியாறு, ஈச்சம்பாடி, பாம்பாறு, எர்ரபட்டி ஆகிய அணைத் திட்டங்கள் ரூ. 26 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது. இது முழுமை பெற்றால், மேலும் 75 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

இந்த ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த மாதேப்பள்ளி திரு சி. சண்முகம் அவர்கள் திராட்சைத் தோட்டம் வைத்திருக்கிறார். அவர் கூறுகிறார்:

''தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கி, எங்க கிராமத்திலே 18 பேர் திராட்சைத் தோட்டம் போட்டிருக்கிறோம். நான் 1.5 ஏக்கரில் திராட்சை போட்டிருக்கிறேன். ஒரு ஏக்கரில் நல்ல விளைச்சல் இருந்தால் நல்ல வருமானமும் கிடைக்கும். வறட்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், இந்தக் கடனை எங்களுக்குத் தருகிறார்கள். எங்க பகுதியிலே திராட்சை போடும்படி நான், பிரச்சாரமும் செய்து வருகிறேன். சிலருக்குப் பாங்க் மூலமா கடனும் வாங்கிக் கொடுத்திருக்கிறேன்''

### ஊராட்சி மூலமாக உதவிகள்:

திருமதி சீரங்கியம்மாள், ஒன்றேக் கால் ஏக்கரில் திராட்சைத் தோட்டம் வைத்திருக்கிறார். அவர் சொல்வதைக் கேட்போமா?

''திராட்சைத் தோட்டம் நல்ல வருமானத்தைக் கொடுக்குது. ஒரு தடவைப் போட்டால், 100 வருஷம் வரை அது காய்க்கும்.'' என்று கூறும் அவர், ''எங்கள் ஊரில் 15 கிணறுகள் உள்ளன. இவற்றில் 5 கிணறுகள் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவை. இப்ப வறட்சிக்காகவும் கிணறு வெட்டினார்கள். பஞ்சாயத்து யூனியன் மூலமா எங்களுக்கு இப்ப தண்ணீர் வசதி கிடைச்சிருக்கு'' என்கிறார் அவர்.

தருமபுரி லக்கியம்பட்டியில், ஒரு தெரு வழியாகப் போய்க்கொண்டிருக்கிறோம். அங்கே புதிதாக ஆழ்துளைக் கிணறு ஒன்றைக் கருவியின் மூலம் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆழ்துளைக் கிணறு போட ரூ. 15,000 செலவு பிடிக்கிறதாம். 228 கிராமங்களில் இதுவரை 99 கிராமங்களில் இப்பணி முடிந்துள்ளது என அறிகிறோம்.

**ஆம். ''வறட்சிப் பணியையே வளர்ச்சிக்கான பணியாக மாற்றுவோம்'' என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் வாக்கிற்கிணங்க, 'வறட்சிப் பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணிகள்—ஆக்கப் பணிகள்—போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறதென்றால், அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!**

# தஞ்சை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை இந்த ஆண்டு மிகக் குறைவாக இருந்தது. 1980ஆம் ஆண்டு மொத்த மழை 15,389 மி.மீ. ஆனால் பருவ மழை சராசரி அளவு 28.944 மி.மீ.க்கு குறைவாகஇருந்தாலும் காவேரி, மேட்டூர் வாய்க்கால்களில் தொடர்ந்து போதுமான தண்ணீர் சாகுபடிக்கு விடப்பட்டு இருந்ததால் அந்தப் பகுதிகளில் விளைச்சல் சுமாராக இருந்தது. ஆனால் தஞ்சாவூர் கோட்டம் ஒரத்தநாடு மற்றும் தஞ்சை வட்டங்களில் காவேரி மேட்டூர் பாசன முறையில் சேராத சில பகுதிகளில் விளைச்சல் 50 சதவீதத்துக்கு கீழ்தான் இருந்தது.

இந்தப் பகுதிகளில் முழு சோதனை மேற்கொண்டு 57 கிராமங்களில் வறட்சியால்பாதிக்கப்பட்டதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தின் 22 கிராமங்களும் பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 22 கிராமங்களும் திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் 7 கிராமங்களும் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் 6 கிராமங்களும் அடங்கும்.

வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக் குறையை நீக்குவதற்காகத் தமிழக அரசு 52 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

இதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 41 இலட்சத்து 28ஆயிரம் ரூபாய் செலவில் 78 ஆழ்க்குழாய்க் கிணறுகள் அமைக்கிறது. இதுவரை 10 இலட்சம் ரூபாய் செலவில் 24 கிணறுகள் அமைக்கப்பட்டு கைப்பம்புகள் வைக்கப்பட்டுள்ளன. ஆழ்குழாய்க் கிணறு தோண்டும் கருவிகள் (Rigs) 13 இம்மாவட்டத்தில் வேலை செய்கின்றன. அதனால் ஏப்ரல் மாதம் 15ந் தேதிக்குள் எல்லா கிணறுகளும் அமைக்கப்பட்டு விடும். இதுதவிர திறந்த வெளி கிணறுகள் அமைத்தல், ஆழப்படுத்துதல் மற்றும் உணவுக்கு வேலை திட்டத்தின் கீழ் சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகளுக்காக 11 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது.

அரசின் வறட்சி நிவாரணப் பணிகளை பார்வையிடுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. துரை. சுந்தரேசன் அவர்கள் ஏற்பாட்டின்படி தஞ்சை பத்திரிகையாளர்கள் வறட்சிப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார்கள்.

முதலில் தஞ்சை ஒன்றியம் திருக்கானூர்பட்டி கிராமத்தில் 325 அடி ஆழத்தில் ஆழ்க்குழாய் கிணறு அமைக்கும் வேலை பார்வையிடப்பட்டது. பத்திரிகையாளர்களிடம் அக்கிராமத்தைச் சேர்ந்த வயதான பெண்மணி ஒருவர் பேசும்போது ''குடி தண்ணீருக்காக நாங்கள் நீண்டதூரம் போக வேண்டி இருக்கிறது. இந்த குழாய்க் கிணறு போட்டால் எங்கள் கிராம மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினை தீர்ந்துவிடும்'' என்றார்.

மின்னாத்தூர் கிராமத்தில் குளங்கள் மற்றும் குடி தண்ணீருக்காகப் பயன்படும் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடந்தன. இம்மாதிரியான வறட்சியை இதுவரை பார்த்ததில்லை என்று அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இராமசாமி கோனார் என்ற 50 வயது பெரியவர் பத்திரிகையாளர்களிடம் கூறினார். காவேரி அம்மாள் என்ற 60வயது மூதாட்டியிடம் கேட்ட போது ''தற்போது குடி தண்ணீருக்காக ஒரு மைல் தூரம் சென்று கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டு வருகின்றோம்'' ''குழாய் கிணறு அமைக்கப்படுவதால் குடி தண்ணீர் கஷ்டம் தீரும். மேலும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி தெருக்களுக்குக் குழாய் அமைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்'' என்றார்.

மருங்குளம் கிராமத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளதை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் புண்ணியமூர்த்தி வரவேற்றதோடு அரசுக்கு பாராட்டையும் தெரிவித்தார்.







அதினாம்பட்டி கிராமத்தில் ஆழ்க்குழாய் கிணற்றில் தண்ணீர் வருவதை மக்கள் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் ஆனந்தக்கூத்தாடினார்கள்.

திருவோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆவணான்டிகொல்லை கிராமத்தில் ஆழ்க்குழாய் கிணறு அமைக்கப்பட்டு ''கைப்பம்பு'' மட்டும் பொருத்தப்பட வேண்டி இருந்தது. தற்போது அந்த கிராம மக்கள் ஒரு மைல் தூரத்தில் உள்ள ஏரியில் 15 அடி ஆழத்துக்கு கிணறு வெட்டி தண்ணீர் எடுக்கிறார்கள். அதுவும் உப்புத் தண்ணீராக தான் இருக்கிறது என்று அக் கிராமத்தைச் சேர்ந்த லெட்சுமி என்ற பெண் கூறினார்

மற்ற மாவட்டங்களைப்போல் தஞ்சை மாவட்டத்தில் வறட்சி அதிகம் இல்லை. ஆனாலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட 57 கிராமங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. துரை. சுந்தரேசன் தலைமையில் அதிகாரிகள் வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் தீவிரமாகச் செய்து வருகிறார்கள்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வரி விலக்கு

சேலம், மதுரை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வரி விலக்கு அளிக்கும் பிரச்னையை அரசு பரிசீலித்து கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பித்துள்ளது:

(1) 1390-ஆம் பசலியில் சாகுபடி நிலங்களிலிருந்து வருமானம் 50 சதமானத்திற்கும் குறைவான (அதாவது சாகுபடி வருமானம் 37 காசு) அளவில் இருந்தால் நிலவரியும், உள்ளூர் வரியும் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பது;

(2) நஞ்சை நிலங்களில் சாகுபடி வருமானம் 37 காசு என்ற அளவில் இருந்தால், கூடுதல் தண்ணீர் வரி, தனி தண்ணீர் வரி, வணிகப் பயிருக்கான வரி ஆகியவை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பது,

(3) புஞ்சை நிலங்களில் சாகுபடி வருமானம் 37 காசு என்றிருந்தால் உள்ளூர் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பது.

சேலம், மதுரை, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 1390-ஆம் ஆண்டு பசலிக்கான உள்ளூர் வரிகளை விதிக்காமல் இருக்குமாறு தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கு அறிவுரை கூறவேண்டும்.

லோக்கல் செஸ் சர்சார்ஜ், மாட்சிங் கிரான்ட் முதலிய கடந்த பசலி ஆண்டில் வழங்கப்பட்டது போல வழங்கப்படும்.

சாகுபடி வருமானம் 50 சதமானத்திற்கும் குறைவாக உள்ள விவசாயிகள் 1390-ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி, உள்ளூர்வரி பாக்கி, அரசுக்கடன் நிலுவை ஆகியவை 1391-ஆம் பசலி ஆண்டில் செலுத்தும்படி தள்ளிவைக்கப்படும்.



ஏழைகளின் இயக்கத்தை பெரும்
வசதிபடைத்தோர் சீர் குலைப்பதா?
கூட்டுறவு இயக்கம்
கூட்டுறவு இயக்கம் ஏழை விவசாயிகளுக்காகவே செயல்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் மூலம் அடைந்து வரும் உதவிகள் எண்ணற்றவை. குறைந்த வட்டியில் நிபந்தனையில்லாத கடன்கள். நியாயவிலையில் விவசாயக்கருவிகள், விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், வீட்டுப்பொருள்கள் விளை பொருள்களுக்கு கிராமங்களிலேயே நல்லவிலை, இயற்கை தவறும்போது தவணை பாக்கிகளில்
சலுகை, வட்டியில் தள்ளுபடி இன்னும் அரசு சலுகைகள் பல.
இவ்வளவையும் ஏழை விவசாயிகள் அடைய முடியாதபடி வசதி படைத்தவர்கள் இயக்கத்தையே அழிக்க முற்படுகின்றனர்.
எவ்வாறு?
பெரும் விவசாயிகள் தங்களின் தவணை பாக்கியாக ரூ.72/-கோடி வைத்துக்கொண்டு சிறு விவசாயிகளையும் தூண்டிவிட்டு அவர்கள் பாக்கியையும் கட்டவிடாமல் கூட்டுறவு இயக்கத்தையே வலுவிழக்கச்செய்து அழிக்கப்பார்க்கிறார்கள்.
எண்ணிக்கையில் குறைவான இந்த பணக்கார பெரிய விவசாயிகளின் தவறான வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காதீர்கள். உங்கள் சக்தி பெரிது. நிமிர்ந்து நின்று இயக்கத்தை வலுப்படுத்தி நியாயமான எல்லா பலன்களையும் நீங்கள் பெற்று வளம் பெறுங்கள்.
உங்களுடைய கடன் தவணை பாக்கிகளை உடனே செலுத்தி கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துங்கள்.
கூட்டுறவு இயக்கம் உங்கள் உடைமை.
பெரிய விவசாயிகளின் பிடியிலிருந்து அதைப் பேணிக் காப்பது உங்கள் கடமை.
வெளியீடு :
தமிழ் நாடு அரசு.
ARIES/DIPR/1007/81-29



# வறட்சி போக்க ஆக்கப் பணி

## தென் ஆர்க்காடு மாவட்டம்

தென் மேற்குப் பருவமழை-பொய்த்து விட்ட காரணத்தால், இன்று தமிழகத்தின் பெரும்பகுதி வறட்சியின் கோரப் பிடியில் சிக்கியுள்ளது.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். அந்த வள்ளலார் பிறந்த தென் ஆர்க்காடு மாவட்டம் இதற்கு விதிவிலக்கல்ல என்றாலும், இம்மாவட்டத்தில் வறட்சி என்பது புதுமையல்ல!

சிதம்பரம், காட்டுமன்னார்குடி, பண்ருட்டி (ஒரு பகுதி) வட்டங்களைத்தவிர பிற பகுதிகளில் எல்லாம் வறட்சி நிலை ஆண்டாண்டுக் காலமாக இருந்து வருகிறது என்பது வரலாற்று உண்மையாகும். தஞ்சையை ஆண்ட சோழ மன்னன், கொள்ளிடத்தின் வடகரைக்கு அப்பால் உள்ள 'காடுகளை அழித்து நாடாக்கினான்' என்றும், பெரிய ஏரிகளையும், குளங்களையும் வெட்டினான் என்றும் தமிழ் நூல்கள் பறைசாற்றுகின்றன. அப்படி சோழ மன்னனால் உருவாக்கப்பட்ட ஒன்று வீராணம் ஏரியாகும். தென் ஆர்க்காடு மாவட்டத்திலேயே இது மிகப் பெரிய


ம. நடராசன்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

தென் ஆர்க்காடு மாவட்டம்.


தாகும். இதிலேயும் தண்ணீர் முற்றிலும் வற்றிடும் நிலை என்றால், இம்மாவட்டத்தில் வறட்சி எந்த அளவிற்கு உள்ளது என்பதை எவரும் எளிதில் ஊகித்து விடலாம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி, திண்டிவனம், திருக்கோயிலூர், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம் ஆகிய பகுதிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்ப டுள்ளது. கூலி வேலை செயவோர் வேலை கிடைக்காமல் வேற்றிடம் செல்லும் அவல நிலை உருவாகிறது என்ற செய்தி கிடைத்த மாத்திரத்தில், மாவட்ட ஆட்சித்தலைவரும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும், அப்பகுதிகளுக்கு நேரிடையாகச் சென்று, விரிவாக ஆய்வு நடத்தி, நிலைமைகளை நன்கு அறிந்து, என்னென்ன நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். எப்படிச் செயல்பட வேண்டும், வறட்சி நிலையைச் சமாளிக்க எவ்வளவு நிதி உதவி தேவை என்ற விவரங்களைத் தொகுத்து தமிழக அரசிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை சமர்ப்பித்தார்

அதன் அடிப்படையிலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வறட்சிப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்ததால் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையிலும், அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, வறட்சி நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வறட்சிக் காலத்தில் குடிநீர்ப் பிரச்சினை என்பது பொதுவான ஒன்றாகும். இதனைப் போக்கி குடிநீர் இல்லாமல் அல்லலுறும் மக்களுக்கு எவ்வகையேனும் குடிநீர் வழங்கிட வேண்டும் என்ற முதல்வர் அவர்களின் அறிவுரையினைச் செயல்படுத்த ரூ. 9 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. இதில் தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குரிய பங்கு ரூ. 80 இலட்சம் ஆகும். இது போதாது இன்னும் அதிகம் வேண்டும் என்ற கோரிக்கையினை அரசுக்கு அனுபபியுள்ளார், மாவட்ட ஆட்சித்தலைவர். அத்தொகை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட செஞ்சி-திண்டிவனம் பகுதிகளில் சில ஊர்களான தீவனூர், அணங்கூர், மங்களூர் கொணக்கம்பட்டு ஆகிய கிராமங்களில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும் வறட்சி நிவாரணப்பணி ஆணையர் திரு பசுபதி அவர்களும், தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. சந்திரலேகா அவர்களும் ஏனைய அரசு அலுவலர்களும் கடந்த 13.3.81 ஆம் நாளன்று நேரில் சென்று பார்வையிட்டு வறட்சி ஏற்பட்டுள்ள அந்தப் பகுதி மக்களுக்கு ஆவன செய்ய உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த மாவட்டத்தில் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படும் வல்லம்ஏரிவறண்டு கிடப்பதை நேரில் பார்த்த அமைச்சர், தேவைக்குத் தகுந்த பொறியாளர்களை அமர்த்தித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும், அதற்காக எவ்வளவு பொறியாளர்களை நியமிக்க வேண்டுமோ அவ்வளவு பேரை நியமித்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார். மற்றும் தண்ணீர் இல்லாத கிராமங்களுக்குத் தண்ணீர் உள்ள பகுதியிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல வாகன வசதிகள் போன்ற மற்றைய அனைத்து வசதிகளையும் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதன்பேரில், இந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவரும் மிக முனைப்புடன் திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்தி வருகின்றார். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்குறித்து அமைச்சர் திருப்தி தெரிவித்தார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் 14.3.81 அன்று விருத்தாச்சலம், மங்களூர் ஆகிய பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து வறட்சி நிவாரணப்பணிகளைப் பார்வையிட்டார்.

### ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன?

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நிலவிடும் அசாதாரணமான வறட்சி நிலையினால், மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க ரூ.40 இலட்சம் குடி தண்ணீர்த் திட்டங்களுக்காகவும், ஊருணிகள், கிணறுகள், குளங்கள் தூர் எடுக்கவும் ஒதுக்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது வரை இம்மாவட்டத்தில் புதிதாக 80 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, கைபம்புகள் போடப்பட்டு குடிநீர் பொதுமக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய குழாய்க் கிணறுகள் தோண்ட இராட்சச எந்திரங்கள் (Rigs) வரவழைக்கப்பட்டு இரவு, பகலாக வேலை நடைபெற்று வருகின்றன. குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் பிரிவினர், நிலத்தடி நீர்ப்பிரிவினர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நெய்வேலி நிலக்கரி சுரங்கப்பணியில் ஈடுபட்டிருந்த மூன்று இராட்சசக் கிணறுகள் தோண்டும் எந்திரங்கள் பெறப்பட்டு அவையும் வறட்சிப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், குடிநீர் வாரியத்தின் மூலம் 16 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 348 குடியிருப்புகள்-கிராமங்களுக்கு குடிநீர் வழங்கிட குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

| ஊராட்சி ஒன்றியங்கள் | கைப் பம்புகள் |
|---|---|
| 1. செஞ்சி | 15 |
| 2. மேல்மலையனூர் | 51 |
| 3. வல்லம் | 51 |
| 4. காட்டுமன்னார் கோயில் | 7 |
| 5. ரிஷிவந்தியம் | 18 |
| 6. தியாகதுருகம் | 15 |
| 7. உளுந்தூர்ப்பேட்டை | 25 |
| 8. கள்ளக்குறிச்சி | 11 |
| 9. சங்கராபுரம் | 22 |
| 10. சின்னசேலம் | 13 |
| 11. திருவெண்ணெய் நல்லூர் | 12 |
| 12. திருநாவலூர் | 24 |
| 13. விருத்தாசலம் | 7 |
| 14. கம்மாபுரம் | 8 |
| 15. மங்களூர் | 36 |
| 16. நல்லூர் | 33 |



**பாராட்டுக்குரிய பணிகள் :**

மாவட்டத்திலுள்ள மிகச்சிறிய ஊரானாலும் மக்கள் தொகை குறைவென்றாலும் அவர்களை வறட்சிக் கொடுமையிலிருந்து அரசு காப்பாற்றும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக செஞ்சி தாலூக்காவிலுள்ள சேதுவராய நல்லூர் கிராம மக்கள் தொகை 100 பேர்தான் என்றாலும், அக் கிராமத்தில் ரூ. 16 ஆயிரம் செலவில் குழாய்க் கிணறு தோண்டி சமீபத்தில் பம்ப் போடப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் பங்குனி உத்திரத் திருவிழாவிற்கு ஆண்டுதோறும் இலட்சத்திற்கு அதுகமான மக்கள் திரள்வது வழக்கம். இவ்வாண்டு தண்ணீர்த் தட்டுப்பாட்டால் விழாக் காலத்தில் வரும் மக்கள் சிரமப்படுவார்கள் என்ற கருத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அப்பகுதியில் சுற்றுப் பயணம் செய்தபோது தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அருகில் உள்ள ஏரியில், தேசிய அரசு வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் மூன்று பெரிய கிணறுகள் (Open Wells) தோண்டப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. அத்துடன் லாரியில் தொட்டி அமைத்து குடி தண்ணீர் எடுத்துச் சென்று அங்குள்ள மக்களுக்குச் சீராக விநியோகிக்கப்பட்டது.

பண்ருட்டி அருகில் உள்ள சோமக்கோட்டை காலனியில் உள்ள ஆதிதிராவிடர் நலக் கிணற்றில் நீர் வற்றிப் போனது. சட்டக் கல்லூரியில் இறுதிஆண்டு பயிலும் திரு லோகநாதன் என்பவரின் முயற்சியால், தேசிய சேவை அணி (NSS) இளைஞர்கள் ஒன்று கூடி தூர் எடுத்தார்கள். இன்று அக்கிராம மக்கள் தட்டுப்பாடின்றி குடிநீர் பெற்று வருகின்றார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகள் செம்மையாகவும். சீராகவும் நடந்தேறிட தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மாவட்ட அளவிலான 'மக்கள் குழு' அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர். தலைவராய் இருந்து செயல்படுத்துவார். இக் குழுவில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், 3 சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவன்றி 12 தாலூக்காக்களில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்டு 'மக்கள் குழு'க்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் கூடி, வறட்சி நிலைமைகள், நிவாரண நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க, அவற்றை மாவட்டக் குழு பரிசீலித்து, மாவட்ட ஆட்சித் தலைவரால், அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும். இதுவன்றி இம் மாவட்டத்தில், வறட்சிப் பணிகளைக் கண்காணிக்கவும், தீவிரப்படுத்தவும், ஒவ்வொரு ஒன்றியமும், கோட்டாட்சித் தலைவர், கோட்ட வளர்ச்சி அலுவலர் நேரடிக் கண்காணிப்பில் செய்யப்பட்டு வருகின்றது.

**கிராமப்புற வேலை வாய்ப்பு :**

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிதண்ணீர் சட்டுப்பாட்டினை ஒட்டி ஏற்படுகின்ற நிலைமையினால் கூலி வேலை செய்து அன்றாடம் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வேலை கிடைக்காது போவதாகும். விவசாயப் பணிகள் ஏதும் இல்லாத சூழ்நிலையில், கூலி வேலை செய்வோருக்கு வேலை அளித்துக் காப்பாற்றிடும் முயற்சி தான் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்கென்றே 1,500 மெட்ரிக் டன்கள் அரிசி ஒதுக்கப்பட்டு கிராமப்புற வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அரிசியின் மொத்த மதிப்பு ரூ. 24,75,000. இதனைக் கொண்டு 4,95,000 மனித நாட்கள் (Mandays) உழைப்பு பெறப்படும் கைவசமுள்ள அரிசியைக் கொண்டு வறட்சிப் பகுதிகளில் வேலையற்று இருக்கும் 20,000 விவசாயக் கூலியாட்கள் மற்றும் நலிவுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சமீபத்தில் அறிவித்துள்ளது இப்பகுதி மக்களுக்குச் செந்தேனாய் இனிக்கின்றது.

## ஊராட்சி ஆசிரியர் அரசு ஊழியராவர் !

தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 1.6.1981 முதல் அரசு ஊழியர்களாவார்கள். இந்தத் தேதியிலிருந்து அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளை அவர்கள் அடைவார்கள்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் போது இந்த ஆண்டு ஜூன் மாதம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்த முடிவின் பேரில் கல்வித் துறைக் குழு மற்றும் செயலாளர் தலைமையில் இக் கொள்கையை அமல் நடத்த நடைமுறைகளை வகுக்க உயர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழு அறிக்கை சமர்ப்பித்து அதன் பேரில் விரிவான ஆணைகள் பின்னால் பிறப்பிக்கப்படும். அவ்வறிக்கை கிடைப்பதற்கு முன்கூட்டியே, இப்பொழுது, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆவார்கள் என அரசு அறிவித்துள்ளது.

எரிசக்திக்காக பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்ய ஆண்டுதோறும் நமது நாடு ஏறத்தாழ ரூ. 6000 கோடி வரை செலவு செய்கிறது. நம்நாடு ஈட்டும் அந்நியச் செலாவணியில் ஏறத்தாழ 75 சதவீதத்தை இதற்கு செலவிட வேண்டியுள்ளது. பெட்ரோலியப் பொருள்களின் விலையேற்றம், தட்டுப்பாடு இவைகளைக் கருத்தில் கொண்டும் புதியதாக எரிசக்தியினை கண்டுபிடிக்க வேண்டியது மிக அவசியமாகும்.

இத்தகைய முயற்சியில் பேருக்கத்துடன் சென்னை கிண்டிப் பொறியியல் கல்லூரியின் வெப்ப ஆற்றல் பொறியியல் துறை (Ethanal Project) 'எத்தனால்' திட்டத்தில் ஈடுபட்டு மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளது. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம், எத்தனால் திட்டத்தின் வெற்றியால் இந்தியாவில் பெரும் புகழினை எய்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. அதனை எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

# எத்தனாலில் ஓடும் கார்




**மாமலன்**

எரிசக்தி பிரச்சினை உலகம் முழுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள்விலையை உயர்த்துவதாலும் வளர்ந்து வரும் தேவைகளை மனதில் கொண்டும் புதிய எரிசக்தியைக் கண்டு பிடிப்பதில் ஒவ்வொரு நாட்டினரும் ஆர்வம் கொண்டனர்.

நம்நாட்டிலும் எரிசக்திக்கு மாற்றுப் பொருள் கண்டு பிடிப்பதில் ஆர்வம் கொண்டு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

1973-ஆம் ஆண்டில் வேளாண்மைப் பணிகளுக்கு 'எரிசக்தி' மாற்றுப் பொருள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகிய பொழுது கிண்டி பொறியியல் கல்லூரி 'வெப்ப ஆற்றல் பொறியியல்துறை இம்முயற்சியில் ஈடுபட்டது.

விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் விசையேற்றங்களுக்குத் தேவையான டீசலுக்கு பதிலாக மாற்றுப் பொருள் தயாரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர்.

விசையேற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் பம்புசெட்டுக்கான ஐந்து குதிரைதிறன் கொண்ட மோட்டாரில்டீசலுக்குப் பதிலாக எத்தனாலைப் பயன்படுத்தும் சோதனையில் ஈடுபட்டு வெற்றி கண்டனர்.

இதனை தொடர்ந்து விசைத் தெளிப்பான்களில் எத்தனாலை பயன்படுத்தி இயக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இம்முயற்சியில் அடுத்தபடியாக எத்தனாலையும் டீசலையும் பயன்படுத்தி பெரிய மோட்டார்களை இயக்கும் முயற்சியில் இறங்கினர்.

அடுத்தபடியாக பியட்காரின் எஞ்சினை எத்தனாலைக்கொண்டு இயக்குவதில் வெற்றி கண்டனர். இதனைத் தொடர்ந்து அம்பாஸிடர் காரின் எஞ்சினில் எத்தனாலை பயன்படுத்தும்சோதனையில் ஈடுபட்டனர்.

கிண்டி பொறிஇயல் கல்லூரியின் வெப்ப ஆற்றல் துறையின் பேராசிரியர் டாக்டர் தி. ரா. ஜெகதீசனும் அத்துறையில் பணிபுரியும் ஆசிரியர்களும் மாணவர்களும் அரிதின் முயன்று எத்தனாலில் ஓடும் காரை இயக்கினர். எத்தனாலில் ஓடும் ஸ்கூட்டரையும் இயக்கியுள்ளனர்.

நமது நாட்டில் டில்லியிலுள்ள ஐ. ஐ. டி. யிலும், சென்னை யிலுள்ள ஐ. ஐ. டி. யிலும் புதிய

எரிசக்தியைக் கண்டு பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலக்கரியிலிருந்து எடுக்கப்படும் மெத்தனாலைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி நடைபெறுகிறது.

' Ethanal ' கரும்பாலையிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருளிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

இன்று உலகிலே முழு அளவில் எத்தனாலை எரிசக்திக்குப் பயன்படுத்திக் கொள்ளும் நாடாக 'பிரேஸில்' விளங்குகிறது. அந்நாட்டில் கரும்பு சாகுபடி மிக அதிகமாகும். கரும்பு ஆலைகளும் அதிகம். 1975-ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்நாட்டில் எத்தனாலைப் பயன்படுத்துவதில் மிகுந்த அக்கறையுடன் முயற்சிகளை மேற்கொண்டனர். அதன் விளைவு, இன்று அங்கு எத்தனாலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கரும்பு உற்பத்தியை அதிகப்படுத்துவதுடன், நாட்டுச் சர்க்கரை, வெல்லம் போன்றவைகளை தயாரிப்பதை குறைத்துக் கொண்டு, ஆலைகளின் மூலம் சர்க்கரைத் தயாரித்தால் எத்தனால் உற்பத்தியை மிகுதியாகப் பெருக்க முடியும்.

ஒரு காலன் பெட்ரோல் அல்லது டீசல் தரும் வெப்பத்தில் 60 சதவீதம் வெப்பத்தைத் தான் ஒரு காலன் எத்தனால் தரும். ஆனால், அது பெட்ரோல்விலையைவிட மிகக் குறைவு அதைவிட மிக முக்கியமானது அந்நிய செலாவணி செலவில் பெருமளவில் மிச்சப்படுத்த முடியும்.

இப்பொழுது ஒரு லிட்டர் எத்தனால் ரூ. 2.65க்கு விற்கப்படுகிறது. பெட்ரோல் ஒரு லிட்டர் சுமார் ரூ. 5-50 காசுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை வித்தியாசம் தவிர, நம் நாட்டில் மிக அதிகமாக எத்தனால் உற்பத்தி செய்யத் தொடங்கினால், எத்தனால் விலை மிகவும் குறையும். ஒரு லிட்டர் சுமார் ரூ. 1.50-க்கு விற்கப்படும் வாய்ப்பும் உள்ளது.

எத்தனாலைப் பயன்படுத்துவதற்கு காரில் என்ன மாற்றம் செய்ய வேண்டும்.? காரின் எஞ்சினில் மட்டும் மாற்றம் செய்ய வேண்டும் இப்பொழுதுள்ள மோட்டார் கார்களின் எஞ்சின்கள், பெட்ரோலைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வடிவமைப்புகள் செய்யப்பட்டவை. அதனால், அவைகளின் எஞ்சினில் ஒரு சில மாற்றம் செய்ய வேண்டி உள்ளது. பெரும்பாலானோர் மிகுதியாக எத்தனாலை பயன்படுத்தும் நிலை வருமானால், கார் உற்பத்தியாளர்களே, எத்தனாலைப் பயன்படுத்துவதற்கு உரிய எஞ்சினை வடிவமைத்து விடுவார்கள்.

எத்தனாலில் சிறிதளவும் நீரும் கலந்து இருப்பதால் ஸ்கூட்டர் போன்ற வாகனங்களுக்கு பெட்ரோலுடன் மசகு எண்ணெயைப் பயன்படுத்துகிறோம் அல்லவா? அது போன்று, எத்தனாலை, பெட்ரோலுக்குப் பதிலாகப் பயன்படுத்தும் பொழுது-மசகு எண்ணெய்க்குப் பதிலாக தாவர எண்ணெய்யைப் பயன்படுத்த வேண்டும்.



விசையேற்றத்திற்குப் பயன் படுத்துவதற்காக முதன் முதலில் எத்தனால் பயன் படுத்த ஆராய்ச்சி செய்யப்பட்டது.



விசைத் தெளிப்பான் எத்தனால மூலம் இயக்க சோதனை நடைபெற்றது.





டீசலுடன் எத்தனாலையும் சேர்த்து பயன்படுத்த சோதனை நடைபெற்றது.



எத்தனாலில் ஓடும் ஸ்கூட்டர்

எத்தனாலில் ஓடும் கார் எங்கு வேண்டுமானாலும், எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் ஓடுமா? இந்தச் சோதனையையும் செய்து மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளனர், பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பவியல் பல்கலைக் கழக, கிண்டி பொறியியல் கல்லூரி வெப்ப ஆற்றல் பொறியியல் துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும். தமிழ்நாடு முழுவதிலும் எத்தனால் மூலம் ஓடும் காரில் ஏறிப்பயணம் செய்திருக்கிறார்கள்.

உதகமண்டலத்துக்கு மலையேறிப் பயணம் சென்று, அங்கிருந்து கன்னியாகுமரிவரை பயணம் செய்துள்ளனர். ஏறத்தாழ 2,000 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்துள்ளனர் எத்தனாலில் ஓடும் காரில். அவர்கள் பயணத்தின்போது எந்தவித இடையூறும் ஏற்படட்டதில்லை.





எத்தனாலில் ஓடும் காரில் இஞ்சினில் மட்டும் மாறுதல்

''எத்தனாலில் ஓடும் காரிலிருந்து வரும் புகையினால் ஏற்படும் நெடி, மதுபான நெடிபோல் உள்ளது. இதைப் போக்க முடியாதா?' என்று வினவியபோது கிடைத்த பதில் இது :—

''எத்தனாலை மதுவாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காகச் சிலவகை நச்சுப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன அவைகளால் ஏற்படும் அந்த நெடியை குறைக்க முடியும்''

—இப்படி எந்தவித குறைபாடுகளுக்கும் இடமளிக்காத வகையில் எத்தனாலை எரிசக்தியாகப் பயன்படுத்துவதில் பெரும் வெற்றியைக் குவித்துள்ளார்கள் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் தொடர்ந்து இவ்வாராய்ச்சியில்.

அடுத்து பேருந்துவில் டீசலுக்குப் பதில் எத்தனாலைப் பயன்படுத்துவது குறித்து சோதனையில் ஈடுபடவிருக்கிறார்கள்.

இம்முயற்சிக்கு, தமிழ்நாடு அரசு உதவியுடன் இப்பல்கலைக் கழக துணைவேந்தர் சிவலிங்கம் அவர்கள் பேருக்கம் அளித்து வருகின்றார்.

மாணவர்களும் ஆசிரியர்களும் அதனை மிகச் செம்மையாக பயன்படுத்தி தங்கள் முயற்சிக்கு ஆய்வுத்திறனுக்கு—மெய் வருத்தத்திற்கு கூலியாக இந்த அரிய வெற்றியை ஈட்டியுள்ளனர். இம் முயற்சியில் மேலும் மேலும் வெற்றி குவிக்க நாமும் வாழ்த்துவோம்!

## அஞ்சலக சேமிப்பு வங்கியில் கணக்கு உள்ளவர்கள் 287 லட்சம் பெறுமானமுள்ள 624 ரொக்கப் பரிசுகளை பெற்றிருக்கிறார்கள். அஞ்சலக சேமிப்பு வங்கியில் ரூ. 200- மட்டுமே வைத்திருந்தீர்களானால் நீங்களும் ரூ. 1, 00, 000 பரிசு பெறலாம்.

உண்மைதான். சிறு தொகையான ரூ. 200 ஐ அஞ்சலக சேமிப்பு வங்கியில் வைத்திருந்தீர்களானால், பெரும் தொகை பரிசாகக் கிடைக்கக்கூடும். ஒரு ரூபாய் கூட செலவில்லாமல் வருடமிரு முறை நடத்தப்படும் பகிரங்க சீட்டுக் குலுக்கல்கள் ஒன்றில், உங்களுக்கு முதல் பரிசான ரூ. 1, 00, 000 கிடைக்கக் கூடும். ஒவ்வொரு குலுக்கலிலும், மொத்தம் ரூ. 20, 50, 000 மதிப்புள்ள 11 ,116 பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசேதும் கிடைக்காவிடினும், வங்கியிலுள்ள ரூ. 200-க்கு ஆண்டுக்கு 5. 5% வீதம் வரியற்ற வட்டி கிடைக்கும்.

### நீங்கள் செய்ய வேண்டியது

உங்கள் கணக்கில் 6 மாதங்களுக்கு ஏப்ரலிலிருந்து செப்டம்பர் வரையில் அல்லது அக்டோபரிலிருந்து மார்ச் வரையில் குறைந்த பட்சம் ரூ. 200 வைத்திருக்கவேண்டும். பரிசு சீட்டு குலுக்கலின் போது உங்கள் வரவு நல் வரவு. வர இயலவில்லையெனில் உங்கள் அதிர்ஷ்டம் குறித்த செய்தி உங்களை தேடி நீங்கள் கொடுத்திருக்கும் முகவரிக்கு வரும்.

### வாய்ப்பைப்பெருக்கிக்கொள்ளுங்கள்

பரிசு சீட்டுக் குலுக்கலில் உங்கள் கணக்கு இடம் பெறுவதற்கு வசதியாக,

கணக்கில் இடையறாது ரூ. 200/— நிலுவை வைத்திருந்து, பரிசு பெறுவதற்குரிய வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவரின் பெயரிலும் கணக்கு ஆரம்பிப்பதன் மூலம் இந்த வாய்ப்பை அதிகரித்துக் கொள்ளலாம். உங்கள் பேரிலேயே அனேக கணக்குகள் ஆரம்பிக்கலாம். ஆனால், இவற்றை வெவ்வேறு அலுவலகங்களில் துவங்க வேண்டும்.

### நவீன வசதிகள்

இந்தியாவில் மிகப் பழமையான, மிகப்பெரிய அஞ்சலக சேமிப்புவங்கி, அதில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு, நவீன வசதிகளை வழங்குவதில் பின்னடையவில்லை. பணமெடுப்பதற்கு வரம்பு கிடையாது. கொடுக்கல் வாங்கலுக்கு வசதியாக, அஞ்சலக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. காசோலை வசதியுண்டு காசோலை மூலம் டெப்பாஸிட் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. உள்ளூர் செக்குகளை வசூலிப்பதற்கு கட்டணம் கிடையாது. நாட்டில் எப்பகுதிக்கும் கணக்கை மாற்றிக் கொள்ளலாம். இந்த வங்கியிலுள்ள பணத்தை அடமானமாக வைக்கலாம். வாரிசு நியமனம் அனுமதிக்கப்படுகிறது, என்பதைக் காட்டிலும் ஊக்குவிக்கப்படுகிறதென்றே சொல்ல வேண்டும்.

### ஒரு சிறப்பு

உங்களுக்கு, கிராமத்திலோ அல்லது கிளை அஞ்சலைமொன்றிலோ கணக்கிருந்தால், நீங்கள், சம்பந்தப்பட்ட துணைத் தலைமை அஞ்சலகத்தில் பணம் எடுக்கலாம்—டெப்பாஸிட் செய்யலாம். கிராம மக்களுக்கு இது பயனளிக்கும். அவர்கள் பணத்தை நகரத்துக்கு எடுத்துச் செல்லவோ அங்கிருந்து கொண்டு வரவோ வேண்டாம்)

மேற்பட்ட விவரங்களுக்கு, தயவு செய்து கீழ்க்காணுமிடங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- ★ அருகிலிருக்கும் அஞ்சலகம்
- ★ மாவட்ட சேமிப்பு அதிகாரி கலெக்டரக மேற்பார்வை
- ★ உங்கள் மாநிலத்தின் சிறுசேமிப்பு டைரெக்டொரேட்
- ★ பிராந்திய அலுவலகம், தேசிய சேமிப்பு நிறுவனம இந்திய அரசு

அல்லது இந்த முகவரிக்கு எழுதுங்கள்.

**நாஷனல் ஸேவிங்ஸ் ஆர்கனை சேஷன்**
**12, ஸெமினரி ஹில்ஸ்.**
**நாக்பூர் – 440006**

டி. ஏ. வி. பி. 80/438

உடல் ஊனமுற்றோர் ஆண்டு

# செயின்ட்லூயி பள்ளியின் சிறப்பான பணிகள்

பி.எல்.ராஜேந்திரன்

பிரான்ஸ் நாட்டில், செருப்புத் தைக்கும் தொழிலாளியொருவரின் மகனாகப் பிறந்தவர் லூயி பிரெய்ல். ஒரு சமயம், தனது தந்தையார் வெளியே சென்றிருந்த நேரத்தில், செருப்புத் தைக்கும் ஊசியை எடுத்து எதற்கோ முயன்ற நேரத்தில் அது அவரது ஒரு கண்ணைப் பதம்பார்த்து விட்டது. சரியாகக் கவனிக்கப்படாத நிலையில், அந்தப் புண் மற்றொரு கண்ணுக்கும் புரையோடி இரண்டு கண் பார்வையுமே இழந்தார் லூயி பிரெய்ல்.

அதன் பின்னர் சாதாரண பள்ளியிலிருந்து பார்வையற்றோர் பள்ளிக்கு மாற்றப்பட்ட அவர், அங்கே பின்பற்றப்பட்ட 'லைன் டைப்' முறையில் கல்வி பயில மிகவும் துன்பப்பட்டார். அந்த முறைப் படிப்பு தொல்லை தருவதாக இருக்கவே, வேறொரு புதிய முறை எழுத்தை தம் போன்ற பார்வையற்றோருக்காகக் கண்டு பிடிக்கலாமே என்ற எண்ணம் தோன்றிற்று பிரெய்லுக்கு.

### பிரெய்ல் எழுத்து

இதற்கடுத்த சில நாட்களிலேயே ஊசியால் தாளில் குத்திக் குத்தி புதுமுறை எழுத்தொன்றைக் கண்டுபிடித்தார் லூயி பிரெய்ல். அப்படி உருவாக்கப்பட்ட எழுத்துத்தான், பார்வையற்றோர் பள்ளிகள் தோறும் இப்போது பயிற்றுவிக்கப்படும் 'பிரெய்ல் எழுத்து.'

பிரெய்ல் இருக்கும்போதே இந்த எழுத்துமுறை அங்கீகரிக்கப்பட்டதா என்றால், அதுதான் இல்லை. அவர் இறந்து இரண்டு ஆண்டுகள் சென்ற பின்னாலே தான் அது பிரான்ஸ் நாட்டில் அங்கீகரிக்கப்பட்டு அறிமுகமாகி பிறகு இங்கிலாந்து, இந்தியா என நாடுகள் தோறும் பரவியது.

இந்த எழுத்து முறையை, 12 வயதைத் தாண்டாதவர்கள் ஆறுமாதத்தில் கற்கலாம். ஓரளவு படித்தவர்கள் ஒரே மாதத்தில் கற்றுக்கொண்டு விட முடியும்.



ஆங்கிலச் சுருக்கெழுத்துமுறை வேகத்தைவிட, இந்த முறையில் நிமிடத்திற்கு 145 வார்த்தைகளைக் கற்கமுடியும்.

சென்னை-அடையாறில் உள்ள செயிண்ட் லூயி பள்ளிக்குச் சென்று அந்த மாணவர்கள் பயிலும் முறையை நேரில் காணும்போது, பிரெய்ல் எழுத்து முறை அவர்களுக்கு எந்த அளவிற்குப் பயன்படக்கூடிய எழுத்து முறையாக இருக்கிறது. கற்க எளிதானதாக இருக்கிறது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை உள்ள இந்த 'செயிண்ட் லூயி செவிக் குறையுடையோர் - பார்வையற்றோர் பள்ளி'யில் (Institute For the Deaf and the Blind) ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

1962ல் சகோதரர் பாக்கியராஜ் என்பவரை முதல்வராகக் கொண்டு துவக்கப்பட்ட இப்பள்ளியில், இப்போது சகோதரர் அந்தோணி முதல்வராக இருக்கிறார்.

## ஆசிரியர்களும் மாணவர்களும்

செவிக்குறையுடைய மாணவர்கள் 188 பேர்களும், பார்வையற்ற மாணவர்கள் 60 பேர்களும் இங்கே பயின்று வருகிறார்கள். அரசின் பாடத் திட்டப்படியே இங்கே பாடபோதனை நடக்கிறது. செவிக்குறையுடையோர் தமது முக்கியப் பாடமாக அச்சுக் கலைப் பயிற்சி (Printing technology), தையல் கலைப் பயிற்சி எதையாவது எடுத்துக் கொள்ளலாம்.



செவிக்குறையுடைய மாணவர்களுக்கென 22 ஆசிரியர்களும் பார்வையற்ற மாணவர்களுக்கென 12 ஆசிரியர்களும் செயின்ட் லூயி பள்ளியில் சிறப்புறப் பணியாற்றி வருகிறார்கள். பார்வையற்றோர் பள்ளியின் பார்வையற்ற ஆசிரியர்களில் இந்த ஆண்டுக்கென (1981) சிறந்த ஆசிரியர் மாநில விருது இப்பள்ளியைச் சேர்ந்த திரு. எஸ்.பி.வின்செண்ட் ஜார்ஜ் என்பவருக்கே மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

22.3.81 அன்று சென்னையில் நடைபெற்ற 'ஊனமுற்றோர் உலகநாள்' நிகழ்ச்சியின் போது-உடல் ஊனமுற்ற பல்வேறு கல்வி நிறுவன மாணவ மாணவிகளும் கலை நிகழ்ச்சிகள் நடத்தினர். அதில் செவிக்குறையுடையோர் நடத்திய கலை நிகழ்ச்சிகள் வரிசையில் முதன்மைப் பரிசைப் பெற்றதும் இப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்களேயாவர்.

## வெற்றி வீரர்கள்

இப்பள்ளியின் கைப் பந்தாட்டக் குழுவினர் மாநிலத்திலேயே முதன்மை பெற்றதுண்டு. 1965 ஜூலையில் வாஷிங்டனில் நடைபெற்ற உலகநாடுகள் ஊனமுற்றோர் போட்டியில் இந்தப் பள்ளியிலிருந்து போய்க் கலந்து கொண்ட சி. ஜான் பிரிட்டோ, கே. கஜேந்திரன், என்.வி.ரவிச்சந்திரன், எட்வர்டு அலெக்ஸ் போன்றோர் பெரு வெற்றி குவித்திருக்கிறார்கள்.

அனைத்திந்திய அளவில் நடைபெற்ற போட்டிகளில் பி.விஷ்ணு மூர்த்தி, ஜேசுதாஸ் ஃபெர்னாண்டஸ் போன்றவர்கள் தேசிய விருதைப் பெற்றுப் புதிய சாதனைகளை ஏற்படுத்தினர்.

படிப்பிலும் இந்தப்பள்ளி மாணவர்கள் ஆண்டுதோறும் தேர்ச்சி பெறுவது நூற்றுக்கு நூறு சதவீதம்தான்.

ஆறாம் வகுப்பு முதலே இங்கே மெல்லிசை பாடவும், கருவிகளை இசைக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1964ல் துவக்கப்பட்ட இந்த இசைப் பிரிவில் தயாரான பார்வையற்ற மாணவர்களின் 'செயின்ட் லூயிஸ் இசைக்குழு' ஒன்று பம்பாய், கல்கத்தா, டில்லி என்று பல மாநிலங்களுக்கும் போய் இசை மழைபெய்து புகழ் பரப்பி வருகிறது. இக்குழுவினர் வைத்துள்ள இசைக்கருவிகளின் மதிப்பு ஐந்தரை இலட்சம் ரூபாயாகும். இவ்வகையில் மத்திய அரசும், மேற்கு ஜெர்மனியும் பெரிதும் உதவியுள்ளன. மாஸ்டர் சுப்பிரமணியன் என்பார், மாணவச் செல்வங்களுக்கு இசை கற்பிப்பதற்காக இங்கே அமர்த்தப்பட்டுள்ளார்.

இசைக் குழுவிற்குத் தனியே பஸ் வசதி உண்டு.

செயின்ட் லூயி பள்ளியில், தனியே அச்சகம் ஒன்றும் பெரிய அளவில் 1963ல் நிறுவப்பட்டது. மோனோ (Mono Type) ஹைடில்பர்க் (Automatic Heidelberg) போன்ற எந்திரங்களும், பைண்டிங், "எழுத்துக்களை உருவாக்கி வார்த்தல், தைத்தல் போன்றவற்றுக்கான எந்திரங்களுமா சுமார் 20 இலட்சம் ரூபா





மேலான திட்டத்தில் இந்த அச்சகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், இப்பள்ளியில் உள்ள செவிக் குறையுடைய, பேச்சாற்றல் இழந்த மாணவர்கள்பயிற்சி பெறுகிறார்கள். பணிபுரிகிறார்கள்.

## அரசு உதவிகள்

செயின்ட் லூயி பள்ளியில்-உடல் ஊனமுற்ற மாணவச்செல்வங்கள் உள்ள ஊனம் அடையாமலிருப்பதற்காகக் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான சம்பளமாகத் தமிழக அரசு மாதம் ரூ. 25,000 தந்து வருகிறது.

கட்டடப் பராமரிப்புக்கென மாதம் மூவாயிரம் ரூபாயும், ஊனமுற்ற குழந்தைகள் பராமரிப்புக்கென மாதம் 23 ஆயிரம் ரூபாயும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

இங்குள்ள மாணவர்கள் எந்தக் குறையும் இல்லாத மாணவர்களைவிட—வேகமும் விவேகமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்கிறார்கள் பள்ளி நிர்வாகிகள். டெய்லர் ஃபிரேம் என்ற கருவி உதவியால் அல்ஜிப்ரா கணக்கையும் மிக எளிதில் அவர்கள் செய்வது நமக்குப் பெருவியப்பாக இருக்கிறது.

"உங்கள் மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளுவதாகச் சொல்கிறீர்களே பார்வையற்றநிலையில் கிரிக்கெட் ஆடுவதும் கைப் பந்து ஆடுவதும் எப்படிச் சாத்தியம்" என்று பள்ளி முதல்வரைக் கேட்ட போது அவர் இப்படிப் பதில் சொன்னார்: "கனகனவென்று மணியடிக்கும் வகையில் தனியே தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் பந்துகளையே அப்படிப்பட்ட ஆட்டங்களுக்கு நாங்கள் பயன்படுத்துகிறோம். பந்து மேலே வரும்போது அதன் ஓசையைக் கொண்டே விளையாட்டு வீரர்கள் முந்திக் கொள்வார்கள்.!"

இந்த மாணவர்களுக்குத் தேர்வு நேரங்களில் உதவ முன் வருபவர்கள் - ஸ்டெல்லாமேரீஸ் கல்லூரி மாணவிகள், நவநிர்மான் மகளிர், பெசன்ட் நகர் அரிமா சங்கப் பெண்டிர் ஆகியோராவர். கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியானாலும் தவறானாலும்—பார்வையற்றோர் சொல்லும் விடைகளை அப்படியே எழுதி உதவுவது இவர்களுடைய தேர்வு நேரப்பணியாகும்!

## பாவேந்தரைக் கவர்ந்த பாரதி

புதுயுகக் கவிஞர் பாரதியார் புதுவையில் தங்கியிருந்த காலம்; புரட்சிக் கவிஞர் என்று புகழ்பெற்ற பாரதிதாசன் அவர்களுக்கும் பாரதியாருக்கும் மிகுந்த நட்பு ஏற்பட்டிருந்தது. ஒரு நாள் பாரதியாரின் இல்லத்தை நாடி பாரதிதாசன் சென்றார். அச்சமயத்தில் பாரதியார் தமது வீட்டில் இல்லை. அதனால் அவரது வருகைக்காக அங்கேயே காத்திருந்தார் பாரதிதாசன். தற்செயலாக அவர், பாரதியாரின் மேசை டிராயரைத் திறந்தார். அதனுள்ளே 'பாஞ்சாலி சபதம்' கையெழுத்துப் பிரதி இருந்தது. அதனை எடுத்து ஆவலுடன் படிக்கத் தொடங்கிய பாரதிதாசன் வியப்புக்கு ஆளானார். அது குறித்து அவர் சொன்னார்:

"கவிதை எழுதப்பட்டிருந்த முறை என்னைப் பெரிதும் வியப்புக்கு ஆளாக்கியது. அதன் எளிமையைக் கண்டு திகைத்தேன். அன்று முதல் பாரதியாரின் எளிமையைப் பின்பற்ற முடிவு செய்தேன்; அந்தக் கவிதைகளைப் படித்திருக்காவிட்டால் நான் இவ்வளவு எளிமையாகக் கவிதை எழுத எண்ணியிருக்க மாட்டேன்" என்று பாரதிதாசன் குறிப்பிட்டார்.

இந்தத் தகவலை பாவேந்தர் விருதுபெற்ற உவமைக் கவிஞர் சுரதா பல மேடைகளில் தெரிவித்திருக்கிறார்.

— தகவல்: சீனி. விசுவநாதன்



# ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்!

ஏழை விவசாயிகள் கஷ்டப்படுகிறார்களேயென்று பெரும்
வசதிபடைத்தோர் ஏதேதோ பேசுவது ஏன்? ஓநாய் அழுத
கதை தான்.

ஒரு ஆடு மழையில் நனைந்து வந்துகொண்டு இருப்பதை
ஓநாய் ஒன்று தன் குகையில் இருந்தபடி பார்த்தது. அதனுடன்
அனுகூலமாகப் பேசி,தன் குகைக்குள் வரவழைத்து விட்டால்
தானும் நனையாமல் ஆட்டையும் சாப்பிட்டு விடலாமே என
எண்ணியது. உடனே ஆட்டைப்பார்த்து அடபாவமே! வீணாக
மழையில் நனைகிறாயே!! இங்கே வந்துவிடு!!! என்று
தன்னுடைய அனுதாபக்குரலில் அழுததாம்.

கூட்டுறவு இயக்கத்தில் அதிக எண்ணிக்கையுள்ள சிறு
விவசாயிகளின் சராசரி கடன் பாக்கி தலைக்கு ரூ. 400/- தான்.
இதில் தவணை தவறியது இன்னும் குறைவு. ஆனால்
எண்ணிக்கை குறைந்த பெரிய விவசாயிகள் கொடுக்க
வேண்டியது ரூ. 72 கோடி. அதாவது சராசரி தலைக்கு
ரூ. 800/-.

இது அவர்களுக்கு ஒரு சுமையே அல்ல. வீண் விவாதம் பேசி
தங்களுடைய பாக்கியையும் செலுத்தாமல் அவர்களுக்குக்
கட்டுப்பட்ட ஏழை விவசாயிகளையும் தூண்டி விட்டு அவர்கள்
பாக்கிகளையும் செலுத்தவிடாமல் செய்கின்றனர்.

ஏழைகளின் வறுமை என்ற போர்வையில்
அவர்கள் குளிர் காய்கின்றனர்.

இவர்களது நோக்கம் அவர்களும் கடன் பாக்கிகளை
செலுத்தாமல் மற்றவர்களையும் செலுத்தவிடாமல் செய்து
கூட்டுறவு இயக்கத்தையே சீர்குலைத்து ஏழை விவசாயிகள்
எந்த நன்மையையும் அடைய முடியாமல் செய்து அவர்களுக்கு
அதிகவட்டிக்கு தங்களது பணத்தைத் தந்து அவர்களைத்
தங்களின் கீழ் என்றென்றும் கட்டுப்பட்டவர்களாக
வைத்திருந்து நாளடைவில் அவர்களது சொத்து சுகங்களையும்
தாங்கள் தந்த கடனுக்காக கபளீகரம் செய்யத்
திட்டமிடுகிறார்கள்.

ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை தான்.

ஏழை விவசாயிகளே! சுயநல சக்திகளுக்குச்
செவிசாய்க்காதீர்கள்.

உங்கள் கடன் பாக்கிகளை உடன் செலுத்துங்கள்.
தொடர்ந்து உதவிகள் பெற்று வளம் பெறுங்கள்.

**கூட்டுறவு இயக்கம் உங்கள் உடைமை.**

**பெரிய விவசாயிகளின் பிடியிலிருந்து
அதைப் பேணிக் காப்பது உங்கள் கடமை.**

வெளியீடு :
தமிழ்நாடு அரசு



# போடி ஒன்றியத்தில் ஆதிவாசிகளுக்கு வீடுகள்!

டி. பி. எஸ். சுந்தரநாதன்
செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர்,
மதுரை.

மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டப்பணிகளால் ஏழை எளிய மக்களில் பல்வேறு பிரிவினரும் பயன்களைப் பெற்று வருகிறார்கள். குறிப்பாக ஆதிதிராவிட-ஆதிவாசிகள் வாழும் பகுதிகள் மிகச் சிறந்த முறையில் அடிப்படை வசதிகளைப் பெற்று வருகின்றனர்.

போடிநாயக்கனூர் ஒன்றியம் அணைக்கரைப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த முந்தல் கிராமத்தில் பளியர்கள் என்ற ஆதிவாசி பிரிவினருக்கு 24 வீடுகள் கிராமிய வீடுசட்டும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகின்றன. இந்த மக்கள் வீடுகள் என்பதையே அறியாத வகையில் மலைச்சரிவுகளில் 'அலைகள்' எனப்படும் குகைப் பொந்துகளில் இதுநாள் வரை வாழ்ந்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களை ஊருக்குள் குடியமர்த்தி அவர்களின் வாழ்வு மலர்ந்திட பல்வகை வளர்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்த அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.3,000 வீதம் இந்த 24 வீடுகளுக்குமான மொத்தச் செலவு ரூ. 72,000 ஆகும். இதில் அரசு மானியமாக ரூ. 24,000 வழங்கியுள்ளது. மீதித் தொகையை முந்தல் கூட்டுறவு வீடுசட்டும் சங்கம் கடனாக வழங்கி 10 முதல் 20 ஆண்டு தவணைகளில் வட்டியின்றி வசூலிக்கும். பளியர்கள் என்ற இந்த ஆதிவாசிகள் இத்தகைய திட்டத்தினால் தங்கள் வாழ்நாளில் முதன் முதலாகச் சொந்த வீட்டிற்கு உரிமையாளர்களாகிறார்

போடி ஒன்றியத்திலிருந்து 21 குழல் விளக்குகளும், ஒரு ஆழ்குழாய் கிணறும் அமைக்கப்பட்டுள்ளன. பொழுதுபோக்கிற்கென ஒரு வானொலிப்பெட்டியும், வானொலி அறையும் ஊராட்சியிலிருந்து கட்டப்பட்டு செயல்படுகின்றது.

விரைவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இவர்களுக்கென ஒரு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்து கறவை மாடுகள் மானியத்தொகையுடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அரசின் தன்னிறைவுத் திட்டம் ஆதிவாசிகளாகிய இந்த மக்களை வாழ்விக்க வந்த திட்டமாக இம்மக்கள் கருதுகின்றனர்.

இந்தக் குடியிருப்புப் பகுதியில் கல்வியறிவையே இதுநாள்வரை பெற்றிராத இம்மக்களின் குழந்தைகளுக்கென அழகான ஆரம்பப் பள்ளிக்கட்டடம் ஒன்று கட்டப்பெற்று சில மாதங்களுக்கு முன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆசிரியர்களைக் கொண்ட இப்பள்ளியில் 53 மாணவர்கள் பயிலுகிறார்கள்.







# ஊனம்

டி கே. டி. துரைராஜன்

வேதாளம் மறுபடியும் முருங்கைமரம் ஏறிவிட்டது.

முன்பெல்லாம் பாதி மரத்தோடு நின்றுவிடும். ஆனால் இப்போது உச்சிக் கிளையில் போய் உட்கார்ந்து கொண்டுவிட்டது.

கந்தசாமிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அடித்து உதைத்து அனுப்பலாம் என்றாலும் ஆள் உயரத்துக்கு வளர்ந்திருக்கிற பிள்ளை. நயந்துதான் சொல்லவேண்டும்.

''டேய்.... சொன்னாக் கேளுடா...ஒவ்வொரு ட்ரெயினிங்கையும் இப்படி பாதியிலே விட்டுட்டா எப்படி!'' என்று கெஞ்சாத குறையாகத் தமது மகன் சண்முகத்தைப் பார்த்தார்

சண்முகமோ முறைத்துக் கொண்டு நின்றான். ''முடியாதுன்னா முடியாதுப்பா.. வேறே கம்பெனி எங்கேயாச்சும் சேர்த்து விடு. போய் வேலை கத்துக்கிறேன்... ஒன்னோட ஃப்ரெண்ட் ஃபாக்டரிக்கு மட்டும் போகமாட்டேன்....'' என்று கத்தினான்.

சுலபமாகச் சொல்லிவிட்டான் அவன் - வேறு கம்பெனியில் சேர்த்து விடுமாறு. ஆனால் கந்தசாமிக்கு -அச்சகத்தில் கம்பாசிட்டராக இருப்பவருக்கு - அந்த அளவுக்குச் செல்வாக்கு இருக்கிறதா என்ன?

சண்முகம் அவரது ஒரே பையன். ஆஸ்திக்கும் அவன்தான் ஆசைக்கும் அவன்தான். எஸ்.எஸ்.எல்.சி. நான்கு தடவை படை எடுத்தும் வெற்றி பெறவில்லை. சுமாரான திறமையுள்ள மாணவர்களும் குறைந்தபட்சம் பள்ளி இறுதித் தேர்வு தேறுவதற்கு உதவி செய்யும் நல்லெண்ணத்தோடு அண்ணாவின் அரசு கொண்டு வந்த புதிய தேர்வுமுறைத் திட்டத்தின்படி, தமது மகன் ஒவ்வொரு பாடமாகவாவது எழுதித் தேறிவிட மாட்டானா என்று எவ்வளவோ ஆசையுடன் இருந்தார் கந்தசாமி.

ஆனால், சண்முகமோ பிடிவாதமாக 'நானாவது எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்வதாவது!' என்று சொல்லாமல் சொல்லிவிட்டான்.

டைப்ரைட்டிங் படிக்க வைத்தார்-தையற் பயிற்சிக்கு அனுப்பினார்-மாதம் எழுபது ரூபாய் கட்டி ரேடியோ ரிப்பேரிங் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். ஆனால் சண்முகமோ ஒன்றையாவது முறைப்படி - முழுமையாகக் கற்றுக் கொள்ளாமல்— பாதிக்கிணறு தாண்டிய நிலையில் வந்து நின்றான். கேட்டால் 'எனக்குப் பிடிக்கலே.... என்னாலே முடியலே' என்ற பதில்.

நம்பிக்கையிழந்து போனார் கந்தசாமி. 'நடக்கிறது நடக்கட்டும்... அவன் தலைவிதி' என்று அவர் தளர்ந்து விட்டபோது—

ஒரு நாள் நெருங்கிய நண்பர் ஒருவரைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. அவர் பெயர் சந்தானம். பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள்.

''நான் இப்ப மாவட்டத் தொழில் மையத்தின் உதவியோட ஒரு பாக்டரி ஆரம்பிச்சி நடத்திக்கிட்டிருக்கேன்.. நல்ல பிசினஸ்..'' என்றார் சந்தானம்.

கந்தசாமிக்கு ஒரு நப்பாசை. மெதுவாகத் தமது பையனைப் பற்றிச் சொன்னார்.

''என்ன படிச்சிருக்கான்?'' என்று கேட்டார் சந்தானம்.

''எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும்'' கந்தசாமிக்கு வார்த்தை உள்ளே போனது.

''வேறே ட்ரெயினிங்?''

''ஒண்ணுமில்லே.. எல்லாம் அரைகுறை....''

சந்தானம் யோசித்தார். ''சரி நாளைக்கு.. பாக்டரிக்கு அனுப்பி வையுங்க.. ஏதாவது செய்றேன்'' என்றார்.

மறு நாளிலிருந்து சண்முகம் சந்தானத்தின் பாக்டரிக்குப் போய் வரத் தொடங்கினான். முதல் நான்கைந்து நாட்கள் ''ஒரு வேலையும் தரலே..'' என்றான். பிறகு, ''லேத் வொர்க்கிலே ட்ரெயினிங் எடுக்கச்சொல்லியிருக்காரு'' என்றான். இதில் ஒரு வாரம் கழிந்தது.

எட்டாம் நாளிலிருந்து வண்டி மக்கர் செய்ய ஆரம்பித்தது. குறிப்பிட்ட நேரத்துக்குப் போகாமல் தாமதமாகப் போனான். சிலநாட்களில் 'உடம்பு சரியில்லே' என்று போகாமல் இருந்தான். இப்போது—

'இனிமேல் அந்த பாக்டரிக்குப் போகவே மாட்டேன்' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

அதற்கு அவன் சொன்ன காரணம்?

லேத் வொர்க்கில் அவனுக்குப் பயிற்சி கொடுப்பவர் ஒரு காலும் ஒரு கையும் ஊனமாகிவிட்ட இருபத்தஞ்சு வயது இளைஞனாம்.

அவனைப் பார்க்கும்போதெல்லாம் சண்முகத்துக்கு என்னவோ போல் இருக்கிறதாம். அதனால் போகமாட்டானாம்.

இந்த இடத்தில்தான் பிள்ளையைப் பெற்றவள் மகனுக்குப் பரிந்து கொண்டு வந்தாள்.

''-நீங்களேதான் சொல்லுங்க ...ஒரு கை-ஒரு கரல் ஊனமான ஒருத்தர் கிட்டே நம்ம பையன் என்னத்தைக் கத்துக்க முடியும்?''

ஒருவகையில் அந்தக் கேள்வி கந்தசாமிக்கு நியாயமாகத்தான் பட்டது. ஆனால், தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்துப் பார்க்கலாமோ! போனால் போகிறதென்று சந்தானம் பெரிய மனது பண்ணி சண்முகத்துக்கு ட்ரெயினிங்கும்-தினமொன்றுக்கு ஆறு ரூபாயும் கொடுக்கிறார். அதை விமர்சிப்பதா?

''இப்ப என்ன பண்றதுன்னு தெரியலியே...'' என்றார் தம் மனைவியையும் - மகனையும் மாறிமாறிப் பார்த்தபடி.



நேரா ஒங்க பரண்ட்கிட்டே போயி வேறே யார்கிட்டயாவது ட்ரெயினிங்குக்கு விடச் சொல் லுங்க...'' என்றாள் மனைவி.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட் டார் கந்தசாமி.

சந்தானம் கொஞ்சம் 'பிசி' யாக இருந்தார். ஆனால் கந்த சாமி வந்ததும் எல்லா வேலை களையும் தள்ளி வைத்துவிட் டார்.

''என்ன கந்தசாமி.. ஒங்க பையன் ரெண்டு மூணு நாளா பாக்டரிக்கு வரலியே...'' என்று கேட்டார்.

கந்தசாமியின் தலை அரைத் தூக்கலாய்த் தாழ்ந்தது.

''என்ன விஷயம்? உடம்பு சரி யில்லையா? அல்லது வேறே எடத் திலே வேலை கிடைச்சிருச்சா?''

''இரண்டும் இல்லே....'' என் றார் கந்தசாமி. அவர் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல் இருந்தன.

''பின்னே.. ஏன் அவன் பாக் டரிக்கு வரலே?''

''சொன்னா நீங்க தப்பா நினைக்கக்கூடாது...''

''நிச்சயமா இல்லே....''

''என் பையனை லேத்வொர்க் கிலே ட்ரெயினிங் எடுக்கச்சொல் லியிருக்கிங்களாம்!''

''ஆமா...'' என்றார் சந்தா னம்.

''அதிலே ட்ரெயினிங் குடுக்கி றவருக்கு ஒரு காலும்-ஒருகையும் ஊனம்ன்னு கேள்விப்பட்டேன்.. ..''என்று தயங்கித் தயங்கிச் சொன்னார் கந்தசாமி.

''ஆமா.. அந்தப் பையன் பேரு தனபால்.. மெட்றா சுக்குப் பக் கத்திலே முட்டுக்காடு என்கிற இடத்திலே உடல் ஊனமுற்றவர் களுக்குத் தொழிற்பயிற்சி கொடுக் கிறதுக்காக அரசாங்கம் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் நடத் திக்கிட்டு இருக்கு. அதிலே பயிற்சி பெற்றுத் தேறியவன் தன பால். அவன் மட்டுமில்லே.... இன்னும் ரெண்டு மூன்று உடல் ஊனமுள்ள இளைஞர்கள் என் பாக்டரியிலே வேலை செய்றாங்க, அவங்களுக்கு வேலை கொடுத்த தாலே எனக்கு ஒரு ஆத்ம திருப்தி. அதே சமயம் அரசாங்கத்திட மிருந்து பாக்டரி கட்டடம் கட்டு றதுக்காக கூடுதலான மான்யமும் கிடைக்குது..'' என்று விளக் கிய சந்தானம் ''அது போகட் டும்.. உன் பையன் பாக்டரிக்கு வராததுக்கும் -உடல் ஊனமுற்ற தனபாலுக்கும் என்ன சம்பந்தம்''? என்று கேட்டார்.

''இல்லே.. அந்த தனபாலை பார்க்கிறப்ப எல்லாம் என் பைய னுக்கு என்னவோ மாதிரி இருக் காம்...''

''ஏன்?

''தெரியலே.. மேலும் ஒரு காலும்-ஒரு கையும் ஊனமான வர்கிட்டே என்ன கத்துக்க முடி யும்ன்னு என் சம்சாரமும் அபிப் ராயப்படுது...''

''ஐ.. சீ..'' என்றார் சந்தா னம். அவர் பார்வை முகட்டை வெறித்தது. பிறகு கந்தசாமி யிடம் வந்தது.

''கந்தசாமி.. ஒரு காலும்-ஒரு கையும் ஊனமானவர்கிட்டே என்ன கத்துக்க முடியும்ன்னு உங்க சம்சாரம்கேட்டாங்கள்லே'' என்று சந்தானம் ஆரம்பிக்கவுமே கந்தசாமிக்குப் பகீரென்றது.. ''நீங்க தப்பா நினைக்கக்கூடாது. என் சம்சாரத்துக்கு விவரம் தெரி யாது'' என்று குறுக்கிட்டார்.

''உங்க சம்சாரம் மட்டுமில்லே ......பலருக்குப் பல விவரம்-பல உண்மைகள் தெரியாது. அதிலே ஒரு உண்மை, உடல் ஊனமுற்ற வர்கிட்டேயிருந்து நாம வேறே எதைக் கத்துக்க முடியலேன்னா லும், மன தைரியத்தை -உறு தியை-முயற்சியைக் கத்துக்க முடி யும். நம்மை நாம்தான் காப்பாத் திக்கணும்ங்கிற உணர்வைக் கத் துக்க முடியும். உங்க பையன் சண்முகத்துக்கு இப்பத் தேவை யானது படிப்போ - பயிற்சியோ இல்லே. தைரியம்.. தன்னம் பிக்கை-முயற்சி -நம்மை நாம் தான் காப்பாத்திக்கணும்கிற உணர்வு! ஆரம்பத்திலே நாலு நாள் நான் உங்க பையனுக்கு எந்த வேலையும் கொடுக்கலே... அவன் கிட்டேபேச்சுக் கொடுத்து 'அவனை அப்சர்வ்' பண்ணி னேன். அப்ப நான் தெரிஞ்சிக் கிட்டது, உங்க பையனுக்கு மன சிலே தைரியமும்-தன்னம்பிக்கை யும் இல்லேங்கிறதுதான். ஒருத்த ருக்குக் கை-கால் இல்லாதது பெரிய ஊனமில்லை.. ஆனால் மனுஷனுக்கு மனசிலே தைரிய மில்லேனா - உழைச்சு முன்னேற ணுங்கிற ஆர்வம் இல்லேன்னா அதுதான் பெரிய ஊனம்.

''ஒங்க பையனுக்கு அந்த ஊனம் இருக்கு.. தனபால் கிட்டே ட்ரெ யினிங் எடுத்தா அது சரியாயிடு ம்ன்னு நினைச்சேன்.. ஏன்னா தனபால் இருக்கானே அவ்வளவு அருமையான வொர்க்கர். ஆனால் நான் எதிர்பார்த்தது ஏமாற்றம் தான்...'' என்று சந்தானம் சொல்லி முடிப்பதற்குள்—

''இல்லே.. இல்லே'' என்று ஆவேசம் வந்தவர்போல் எழுந் தார் கந்தசாமி. 'இப்பவே என் பையன் தலைமுடியைப் பிடிச்சி இழுத்துட்டு வர்றேன்.. இனி மேல், அவன் இருபத்து நாலு மணி நேரம் அந்தத் தனபால் கூடத் தான் இருக்கணும்...'' என்று தனக்குத்தான் சொல்லிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப் போனார்.





# புரட்சியில் பூத்த புலவன்

பாரதியின் கவிவானில் பறந்த கிள்ளை
பைந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த கவிதைப் பிள்ளை !
நீரதிகம் சேர்த்தவர்முன் கள்ளிச் சொட்டை
நிகர்ப்பதுவாய்க் கவிப்பாலைத் தந்த மேதை !
சீர்திகழும் வேலவனில் விதையைப் போட்டுச்
சீர்திருத்தத் துறையினிலே கிளைவி ரித்து
வேராகிச் சமுதாய மண்ப ரந்து
விழுதுவிட்ட முதற்கவிஞன் பாவேந் தன்தான் !

முன்னேற்றம் காட்டியவன் ! அழுது நைந்த
முடங்களினைத் தேற்றியவன் ! ஏழ்மை வேரில்
வெந்நீரை ஊற்றியவன் ! புதுமை பூக்க
விரைந்துபணி யாற்றியவன் ! கைம்பெண் கண்ட
கண்ணீரை மாற்றியவன் ! கவிதைத் தாயைக்
கண்ணாகப் போற்றியவன் ! அடிமை வாழ்வைப்
'புண்''என்று தூற்றியவன் ! புரட்சி பூக்கப்
போர்க்கொடியை ஏற்றியவன் பாவேந் தன்தான் !

காந்தம்போல் நமைஇழுக்கும் கவிதைக் கண்கள் !
கச்சிதமாய்ப் பதித்ததுபோல் நறுக்கு மீசை !
வாய்ந்தஎழில் தோள்மேலே சால்வை ! போலி
வைதீகம் எதிர்க்கின்ற வைர நெஞ்சம் !
நீந்துவதோ எப்போதும் எதிர்நீச் சல்தான் !
நெருப்புவரிக் கவிதையிலோ புலிப்பாய்ச் சல்தான் !
சேர்ந்திவைகள் ஒன்றான சங்க மம்தான்
சுடர்வீரப் பாவேந்தன் ! அன்னோன் வாழ்க !

— மதிவண்ணன்





# வறட்சி நிவாரணப் பணிகள்

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்



சீர்கேடான பருவநிலை காரணமாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரும் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு நிவாரணம் அளிக்க பல்வேறு நடவடிக்கைகள் 'போர்க்கால' அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

21.2.81 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை நிருவாக ஆணையர், திரு பசுபதி, ஐ.ஏ.எஸ்., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்து சீர்கேடான பருவநிலை குறித்து பல்வேறு துறை அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்படவிருக்கும் நிவாரணப்பணிகள் பற்றி விவாதித்தார். பல்வேறு துறை அலுவலர்களிடையே ஒருங்கிணைந்து செயல்படும் அவசியத்தை வலியுறுத்தி குறிப்பிட்ட காலவரைக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்க போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இம் மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கவும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் அரசு இதுவரை ரூ. 60 இலட்சம் வழங்கியுள்ளது. நடைமுறைப் பணிகளும், ஊரகவளர்ச்சிப் பணிகளும் முழுவேகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்டமாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 8 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு ரூ. 2.5 கோடிக்கான பணிகள் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்திற்குமுன் மேற்கொள்ளப்படும்.

நிலத்தடி நீரை வெளிக்கொண்டுவந்து குடிநீர் விநியோகம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் 15 எந்திரச்சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில் 6 ஊராட்சி ஒன்றியங்களில் 58 துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.. முதற் கட்டமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் 400 துளைக்கிணறுகள் அமைக்கப்படவுள்ளது. இந்தத் துளைக்கிணறுகளில் கைப் பம்புகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இத்துடன், பொன்மலைப் பகுதியில் 7 துளைக்கிணறுகளும் திருச்சிராப்பள்ளி, பொன்மலை நகராட்சிப்பகுதிகள்மற்றும் திருச்சிராப்பள்ளி புறநகர்ப்பகுதிகளில் 30க்கு மேற்பட்ட துளைக்கிணறுகள் வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இயந்திர சாதனங்கள் மூலம் வெடிமருந்து வைத்து பாறையைப் பிளந்து கிணறுகள் ஆழப்படுத்தும் முயற்சியில் 190 கிணறுகள் இதுவரை ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி, பொன்மலை ஆகிய நகராட்சிகளிலும், கே. அபிஷேகபுரம், உடையார் பாளையம் மற்றும் அரியலூர் பேரூராட்சியிலும் மக்களுக்கு லாரிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதயில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு கூடுதலாக 450 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம நியாய விலை கடைகளுக்குப் போதுமான அரிசி அனுப்பப்பட்டுள்ளது.

பருவ நிலைக்கோளாறின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக வட்டாட்சியரையோ அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரையோ அணுகி தனக்கு வேண்டிய நிவாரணம் சம்பந்தமான கோரிக்கையைத் தெரிவித்தால் இத்தகைய கோரிக்கைகள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனப் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளுக்கான திட்டங்கள் தயாரிக்கவும், அம்மாதிரியான திட்டங்களை மேற்பார்வையிடவும் வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், சட்ட மேலவை உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கியிருப்பார்கள்.



# அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகள்

**1—3—81**

'நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த ஊரகச் சாலை கண்காணிப்புப் பொறியாளர்களின் வேலைப் பளுவைக் குறைத்து மேலும் அதிக அளவில் கண்காணிப்புப் பொறியாளர்களை நியமிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் மேலவையில் அறிவித்தார்.

**2—3—81**

பருத்திக் கொள்முதலுக்குப் ''பருத்திக் கழகம்'' தனியாக அமைக்க சட்ட அமைப்புத் தயாராகிறது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

கிழக்கு ராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைப் பகுதியில் கிடைக்கும் பல நிறக் கற்களை எடுத்து விற்பனை செய்வதற்கு 603 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் ஆர்ஜிதம் நடைபெற்று வருவதாக மாண்புமிகு தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**3—3—81**

கடைகளில் எடை மோசடி செய்பவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கச் சட்டத் திருத்தம் கொண்டு வரலாமா? என்பதனை அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

பழனி அருகே 12.5கோடி யூனிட் கிடைக்கிற சண்முக நதி நீர் மின்திட்டம் அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

**4—3—81**

போறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒலி-ஒளிக் காட்சி ஏற்பாடு செய்யும் குறிப்பு இப்போது இல்லை என்றாலும் உரிய நேரத்தில் அதனை அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

அரசாங்க டாக்டர்கள், வேலை நேரங்களில் வெளி மருத்துவமனைகளில் வேலை பார்ப்பதைத் தடுக்க, சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் தெரிவித்தார்.

**5—3—81**

விவசாயிகளின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்காக அமைக்கப்படவிருக்கும் ''உயர் மட்ட விவசாயக்குழு''வின் தலைவராக முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**6—3—81**

அரசு மருத்துவமனைகளில் நிர்வாகத்தைக் கண்காணிக்க மக்கள் ஆலோசனைக்குழுக்கள் நியமிக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

**8—3—81**

சிங்கப்பூர்-மலேசியா ஆகிய இடங்களில் இருந்து தமிழகம் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவி செய்ய, மேற்கண்ட இடங்களில் தமிழகச் சுற்றுலா வாரியத்தின் சார்பில் ஏஜண்டுகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சுற்றுலா வாரியத் தலைவர் திரு துரை. கோவிந்தராசன் அவர்கள் தெரிவித்தார்.

**9—3—81**

குடிசை மாற்று வாரியத்தின் ''மினி எல். ஐ.சி. திட்டம்'' தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி முதலில் 1,500 ரூபாய் செலுத்தினால் அந்த குடியிருப்பு அவர்களுக்குச் சொந்தமாகும் என்று குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு டி. கே. கபாலி அவர்கள் தெரிவித்தார்.

**12—3—81**

இன்னும் மூன்று ஆண்டுகளில் கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதியில் தன்னிறைவு ஏற்படுத்தி முடிக்கும் திட்டம் செயல்படுத்தி வருவதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்.



## பேராசிரியர் ஔவை துரைசாமி பிள்ளை மறைவு:

### மாண்புமிகு முதல்வர் இரங்கற் செய்தி

தமிழ்ப் பேரறிஞர் திரு ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் மதுரையில் இயற்கை எய்திவிட்டார்கள் என்று அறிந்து வேதனைப் படுகின்றேன். அவர் தமிழ் உலகத்தில் பெரும் பேராசிரியராகத் திகழ்ந்தவர். அவர் ஓர் சிறந்த இலக்கிய மேதை. சங்க இலக்கியங்களுக்கும், சமய இலக்கியங்களுக்கும் ஒரு உரையாணியாகத் திகழ்ந்தவர். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் பரிசுபெற்றுச் சிறப்பெய்தியவர். அவருடைய இறப்பு தமிழ் அறிஞர் உலகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

தோற்றம் : 5—9—1902
மறைவு : 3—4—1981

## தொகுப்பு — மருது

**14—3—81**

தமிழக கைத்தறித் துணிகளுக்கு உள்ள தேவையைப் பற்றி கண்டறிந்து மேலும் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வது பற்றி பேச்சு வார்த்தை நடத்த கிழக்காசிய நாடுகளுக்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ்.என். ராசேந்திரன் அவர்கள் 14.3.81 அன்று சென்றார்.

**15—3—81**

அரசுத் துறைகளில் 3 சதவிகித இடங்களை உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்க அரசு பரிசிலித்து வருகிறது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்.

தென் ஆர்க்காடு மாவட்ட வறட்சிப் பகுதிகளில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பார்வையிட்டு உடனடி நிவாரணப்பணிகளுக்கு உத்தரவிட்டார்.

**16—3—81**

தஞ்சை மாவட்டம் நாகூரில் ரூ. 5இலட்சம் செலவில் கட்டப்பட்ட மருத்துவமனையை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்.

**18—3—81**

மலேரியா நோய்த் தடுப்பில் இந்தியாவிலேயே தமிழகம் இப்போது இரண்டாம் இடத்தை வகிக்கிறது. விரைவில் முதலாவது இடத்திற்கு வந்துவிடும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் தெரிவித்தார்.

**20—3—81**

பள்ளி ஆசிரியர்களுக்கு வங்கி மூலம் சம்பளம் வழங்க அரசு ஆலோசித்து வருகின்றது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

காலங் காலமாக வறட்சியின் கொடுமைக்கு ஆளாகிவரும் தர்மபுரி மாவட்டில் ரூ. 34.62 இலட்சம் செலவில் 4 புதிய சிறு பாசனத் திட்டங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 புதிய சிறு பாசனத் திட்டங்களும் நிறைவேற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**21—3—81**

உடல் ஊனமுற்றோரை அதிக அளவில் பணிகளில் நியமித்ததற்கு இந்திய அரசின் தேசிய விருது தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சகத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. 140 உடல் ஊனமுற்றோர் முழு நேர ஊழியர்களாகப்பணி புரிந்து வருகின்றனர். 17 உடல் ஊனமுற்றோர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வரப்படுகிறது.

**முகப்பில்**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்—

கவிஞரின் கவிதை வரிகளில் சில காட்சிகள்.



# வ.வே.சு.ஐயர் நூற்றாண்டு நிறைவு விழா

நிகழ்ச்சித்தொகுப்பு
புலவர் தமிழ்ப்பித்தன்

விடுதலைப் போரில் ஈடுபட்டு, அளப்பரும் தொண்டுகளையும் தியாகத்தையும் செய்த வீர விளக்கு வ.வே.சு. ஐயர். அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவைத் தமிழகஅரசு,5.4.81ல் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

காலை 9 மணியளவில் மங்கல இசையுடன் விழா துவக்கம் ஆகியது.

கலைவாணர் அரங்கின் முன் பகுதியில் வ.வே.சு. ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளைக் கொண்ட வரலாற்றுக் கண்காட்சி ஒன்றினை மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவுக்கு வருகை புரிந்திருந்தோர் அனைவரையும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார்கள்.

**ஆளுநர் உரை**

விழாவைத் தொடங்கிவைத்த மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் கூறியதாவது:

''தமிழகம் உருவாக்கிய -இந்தியா உருவாக்கிய வீர புருஷரான வ.வே.சு. ஐயர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை, நாம் கொண்டாடுவது-சரியான செயல். அவரது போராற்றலின் காரணமாகவும் - இந்திய விடுதலைப் போரில் ஏற்றுக் கொண்ட பெரும் பங்கின் காரணமாகவும் இன்று நாம் அவரை நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

''சின்னஞ் சிறு வயதிலிருந்தே அவர் கெட்டிக்காரராகத் திகழ்ந்திருக்கிறார். படிப்பில் முதன்மையானவராக விளங்கியிருக்கிறார். பெரிய மனிதர்களைக் குறித்து நாம் நன்கு அறிய வேண்டுமென்றால் அவர்களது இளம் பிராய நிகழ்ச்சிகளைக் குறித்து நாம் தெரிந்துகொள்ள வேண்டும். வீர புருஷருக்குரிய அடித்தளமானது வ.வே.சு. அய்யர் அவர்களிடம் இருந்தது.

''அவரது அறப்போர் முறை பகிரங்கமானது; அதில் ரகசியம் கிடையாது. இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர் அரும்பாடுபட்டிருக்கிறார்.

''கம்பன், காளிதாசன், சேக்ஸ்பியர், ஹோமர், வெர்ஜில், ஹக்ஸலே, எமர்ஸன் ஆகியோரின் நூல்களை அவர் நன்கு கற்றிருக்கிறார். இராணுவ அறிவியலையும் அவர் கற்றிருக்கிறார். சிறந்த போர்வீரர்களானநெப்போலியன் கரிபால்டி ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்திருக்கிறார். தமது எழுத்தாற்றலின் வாயிலாக இளம் சந்ததியினருக்கு சுதந்திர உணர்வையும் - தாயகத்தின் பெருமையையும் எடுத்துக் கூறியிருக்கிறார்; மிகப் பெரும் தேசபக்தராக விளங்கினார்.




### கருத்தரங்கம்

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்கள் தலைமையில் 'வாழ்வாங்கு வாழ்ந்த வ.வே.சு அய்யர்'என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் அவர் குறிப்பிட்டார்.

''நாட்டின் பல்வேறு பகுதியில் இருக்கின்ற - தேசியம் என்றால் என்னவென்றே அறியாத பலரும் தேசிய வாதிகளாக மாறி வரும் இந்நாளில் நமக்கும் முன்னரே வ.வே.சு. ஐயர் அவர்கள் தியாகம் செய்து - சுகத்தை இழந்து -மரணப் போரில்தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதை இன்றைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த விழாகொண்டாடப்படுகிறது. இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட வீரத் திருமகனின் பிறந்த நாள் விழாவை தமிழகத்திலே பிறந்த அந்தப் பெருமகனின் நூற்றாண்டு நிறைவு விழாவை - தமிழகம் மட்டுமே இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிற தேசியம் ஒன்று வளர்ந்திருக்கிறது; இது தவறான தேசியம் தான்!

''வ.வே.சு அய்யர் நல்ல குடும்பத்தில் பிறந்தார். வக்கீல் தொழில் செய்தார். அதனை ஒழுங்காகச் செய்திருந்தால் கொஞ்சம் பணம் பார்த்திருக்க முடியும். ஆனால் அதனைத் துறந்துவிட்டு சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு, எண்ணரிய இழப்புகளைத் தேடிக்கொண்டதுடன் அந்தப் போராட்டத்திற்குப் பல இளைஞர்களைத் தயாராக்கினார் என்றால் அவரது உள்ளத்தில்நாட்டைக்காப்பாற்றுவதற்காக எப்படிப்பட்ட வெறி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்க்க முடியும்.அந்த அளவுக்கு நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

''வ.வே.சு. அய்யர் போன்ற நமது முன்னோர்கள் செய்த தியாகம் என்ன? அவர்கள் நாட்டுக்காகக் கொடுத்த விலைஎன்ன? அவர்கள் எல்லாரும் அப்படிப் பாடுபட்டிருக்காவிட்டால் இன்றைய நல்வாழ்வை நாம் பெற்றிருக்க முடியுமா என்பதை எல்லாம் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்கள் வாங்கித் தந்த சுதந்திரம் கெட்டுப்போகாமல்-பட்டுப் போகாமல் காப்பாற்ற நாம் அவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடி வருகிறோம்.''

அடுத்து, 'விடுதலைப்போர்' என்னும் தலைப்பில் திரு கு. இராஜவேலு அவர்களும்

'ஆசிரியர் பணி' என்ற தலைப்பில் திரு கி. இராஜேந்திரன் அவர்களும்.

''நாட்டுப்பற்று'' என்ற தலைப்பில் திரு அகிலன் அவர்களும்.

'புரட்சிவீரர்' என்னும் தலைப்பில் பெ. சு. மணி அவர்களும்.

'மொழிப்பற்று' என்னும் தலைப்பில் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் அவர்களும் உரையாற்றினார்கள்.

பின்னர் சிறப்புரையாற்றிய கவியோகி சுத்தானந்தபாரதி குறிப்பிட்டார்:

''வ.வே.சு. ஐயர் புரட்சிக்காரராகத் திகழ்ந்தாலும், ஆசாரமிக்கவராக வாழ்ந்தார். தியானத்தில் ஆழ்ந்தார் என்றால் அவர் மீது கல் வீசினால் கூட கலைந்து எழமாட்டார். அவர் அதிகம் பேசுவது கிடையாது.

''1917ல் புதுவைக்கு அவர் வந்து சேர்ந்த பின்னர் காந்தியடிகள் அவரைக் காணவந்தார். அவரிடத்தில் பாத்தூண் என்னும் குறளையும் பகுத்துண்டு என்னும் குறளையும் எடுத்துரைத்துப் பொருள் விளக்கம் செய்தார். அதனைக் கேட்ட அண்ணல்; ''ஓகோ மிகவும் புதுமையான கருத்தாக உள்ளதே!'' என்று சொல்லி வியந்து பாராட்டினார்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே வந்த சுத்தானந்த பாரதியார் அவர்கள் உணர்ச்சிப் பெருக்கின் காரணமாகவும் -வ.வே.சு ஐயர் அவர்களுடன் தான் வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்த்ததன் காரணமாகவும் நெஞ்சம் கலங்கி கண்ணீர் சிந்தத் தொடங்கினார். அந்த நிகழ்ச்சி அவையினரின் நெஞ்சத்தை உருக்கி விட்டது.

பின்னர் செய்தி மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றியுரை கூற, காலை நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது.

### பிற்பகல் நிகழ்ச்சிகள்

பிற்பகல் 6 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

அனைவரையும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார்.

" அடுத்து, திரு டி. செங்கல்வராயன் உரையாற்றினார். அவர் குறிப்பிட்டார்:

ஐயரது சிறந்த பண்பு -சிறந்த பாத்திரம் - இந்திய தேசியப் போராட்டத்தில் தலைசிறந்து விளங்குகிறது.''

அடுத்து, உரையாற்றிய திரு கி.வா. ஜகந்நாதன் அவர்கள் தெரிவித்தார்:

''சாந்தம் என்பது, வீரமில்லாத கோழைத்தனமல்ல;பெரிய



வீரம் அது! சுதந்தர தாகத்தை மூட்டிவிட்ட பெருந் தலைவர்களில் ஒருவர் வ.வே.சு. ஐயர்.

### ஐயரின் குமாரர்

அவரை அடுத்து வ.வே.சு. ஐயர் அவர்களின் குமாரரான டாக்டர் வ.வே.சு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''என் தந்தையார் அவர்களை தந்தையாக மட்டுமல்ல - ஒப்பற்ற வீரராக - தியாகியாக - யோகியாக - தெய்வமாக-கருதுகிறேன். 44 வயதுக்குள் அவர் சாதித்த சாதனைகள் எல்லாவற்றையும் அறியும்போது, இப்படி ஒரு மனிதர் இருந்தாரா-வாழ்ந்தாரா என்று வியக்கிறோம்.

பின்னர், கம்பன் அடிப்பொடி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.

''தமிழகத்தில் சுப்பிரமணிய சிவா-சுப்பிரமணிய பாரதி சுப்பிரமணிய ஐயர், எனும் மூவரும் ஒரே நோக்கில் நின்று பணியாற்றினர். தமிழ்நாட்டில் பிறந்து - இந்திய நாட்டுக்குச் சேவை செய்தனர். . தன்னல மற்ற தியாகி அவர்!''

பின்னர் பேசிய எஸ்.என். சோமயாஜுலு குறிப்பிட்டார்:

''இங்கே தமிழகத்தில் தேசிய அரசு நடைபெறுகிறது. அதற்குக் காரணமாக இருக்கும் முதல்வர்களையும் அமைச்சரவையையும் பாராட்டுகிறேன்

அதன் பின்னர் திரு பெ.சு. மணி அவர்களால் தொகுக்கப்பெற்று திரு எஸ்.என். சோமயாஜுலு அவர்களால் பதிப்பிக்கப்பட்ட 'வ.வே.சு. ஐயர் கட்டுரைகள்' என்னும் நூலை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட, முதல் பிரதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

### நாவலர் உரை

மாண்புமிகு நாவலர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''வ.வே.சு. ஐயர் அவர்கள் புவியோர் போற்றும் தலைவராக வீரராக-தீரராக - நாட்டுத் தொண்டராக - பன்மொழிப் புலவராக-அறிஞராகத் திகழ்ந்தார். தமிழில் சிறப்பாக எழுதுவது போலவே-ஆங்கிலத்திலும் அருமையாக எழுதும் திறமை பெற்றிருந்தார். குறுந்தொகைப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். கம்ப ராமாயணம் குறித்தும் ஆய்வு நூலாக (Kamban a study) என்ற நூலை எழுதினார். அவர் எழுதிய நெப்போலியன் வரலாறு அந்த நாள் ஆங்கில அரசால் தடைசெய்யப் பட்டது.

''இன்று எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் என்று முழக்கமிடுகிறோம் - அந்த வகையில் செயலாற்றி வருகிறோம். இதற்குரிய அடிப்படைக் கருத்தை வ.வே.சு அய்யர் குறிப்பிட்டிருக்கிறார்.

''பாரதியின் கவிதையில் அவர் தோய்ந்து நின்றார். சொல்லுக்குச் சொல் சுவையூறி நின்று வியந்து போனது தான் அதற்குக் காரணம். கவிதை புனையும் திறனும் அவருக்கிருந்தது.

''நாட்டு மக்களுக்கு இன்பம் தரும் செயலைச் செய்வதில் தமக்கு எவ்வளவு துன்பம் வந்தாலும் அதைப் பொருட்படுத்தக் கூடாது என்ற கருத்தை உடையவர் வ.வே.சு. ஐயர்.''

### மேலவைத் தலைவர்

அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''வ.வே.சு. ஐயர் தனி மனிதரல்ல: அவருக்குப் பின்னே நீண்ட வரலாறு உண்டு. முன்னேயும் நீண்ட வரலாறு உள்ளது. இரண்டிற்கும் மையபுருஷராக அவர் விளங்குகிறார்.

''இந்தியாவின் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து கல்லூரிகள் வரை ராஜ வாழ்த்துப் பாடிக் கொண்டிருந்த காலத்தில்-பாரிஸ்டர் பட்டம் பெற்ற வ.வே.சு. ஐயர், சான்றிதழ் பெறும்போது ராஜ விசுவாசப் பிரமாணம் எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டபோது, மறுத்து -சான்றிதழ் பெறாமலேயே வந்துவிட்டார் என்றால்-அப்படி வந்தவர் ஓர் இந்தியர் - அதிலும் தமிழர் என்பதுதான் நமக்கெல்லாம் உள்ள பெருமை!

''அந்த நாட்களில் வன்முறை இருந்தது. அது சன்மார்க்கமில்லை; ஆனால் சத்யமார்க்கம்; கொன்றது உண்மை; கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்! என்றனர்புரட்சி வீரர்கள்.

''எந்தக் காலத்தில் அவர் தொண்டு செய்தார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த சார்ஜண்ட் கையால் அடிபட்டாரோ, அவர் வெள்ளையர்; எந்த இன்ஸ்பெக்டரால் பிடிபட்டாரோ அவர் வெள்ளையர். எந்தக் கலெக்டரால் தண்டனை வழங்கப்பட்டாரோ அவர் வெள்ளையர்; எந்த சூப்பிரண்டால் ஜெயிலுக்குள் அடைக்கப்பட்டாரோ அவர் வெள்ளையர். அந்நாளைய உள்துறைச் செயலாளர் வெள்ளையர். இப்படி அனைவரும் வெள்ளையர்களாக இருந்தனர்; எங்கள் இனத்தின் எதிரிகள் என்ற விரோத உணர்ச்சியின்



காரணமாகத் தேசபக்தர்களை வேட்டையாடினார்கள் வெள்ளையர்கள்.

''மாபெரும் புரட்சி வீரரான வ.வே.சு. ஐயரிடம், கலையுள்ளம் பெருகப் பெருக-பன்மொழி அறிவு வளர வளர- இலக்கியத்தை ஆராய ஆராய கொலை வெறி மாறியது. கொள்கையில் மாற்றம் கொள்ளவில்லை; வழிமுறையில் மாற்றம் ஏற்பட்டது. ஸ்தாபனத்தில் மாற்றம் செய்யவில்லை; திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது.

**முதல்வர் உரை:**

வ.வே.சு ஐயர் அவர்களின் உருவப்படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். விழா நிறைவுச் சொற்பொழிவை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் விடுதலை பெறவேண்டும் என்ற இலட்சியத்திற்காகப் போராடியவர்கள் எல்லாரும் எப்படி ஒருமித்த உணர்வுடன் இருந்தார்களோ, அந்த எண்ணம் மீண்டும் இப்போது தமிழகத்தில் தலை தூக்கத் தொடங்கியிருக்கிறது. நிலப் பரப்புக்கு விடுதலை கேட்டார் வ.வே.சு ஐயர். மன உரிமை கேட்கும் நேரம் இது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்!

''44 வயதுக்குள் முழுமையான -முழுவரலாற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார். அவரது வாழ்க்கைப் போராட்டக் குவியலாகவே இருந்திருக்கிறது. 44 ஆண்டுக்குள் கல்வி - கேள்விகளில் சிறந்து-பன்மொழிப் புலமை பெற்று-நாட்டுக்காகப் போராடியதுடன் நாட்டுப்போரில் சடுபடுவதற்கு இளைஞர்களைத் தயார் செய்து-துப்பாக்கி சுடும் பயிற்சியும் தந்தார் என்பதை நினைக்கின்றபோது அவரது வாழ்க்கை சாதாரண வாழ்க்கை அல்ல என்பதை ஒவ்வொருவரும் ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். கல்வி கேள்விகளில் சிறப்படையவேண்டும் என்று எண்ணியது போலவே, போர் வீரனாகவும் விளங்க வேண்டும் என்று கருதிய வ.வே. சு. ஐயர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது பொருந்தும் என நினைக்கிறேன்.

இப்படிப் பட்ட பாராட்டும் வழிமுறைகளை அமரர் அண்ணா அவர்கள்தான் எங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். அதே கொள்கைப்படி இன்று வ. வே. சு. ஐயர் அவர்களுக்கு இந்த அரசு விழா எடுப்பது - அமரர் அண்ணா அவர்களின் கருத்தை பிரதிபலிக்கிறது. இதை பெருமையோடு மட்டுமல்ல — மன நிறைவோடு சொல்லிக் கொள்ள உரிமை இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

''இங்கே சில கோரிக்கைகளைச் சொன்னார்கள். அவற்றில் இரண்டை நிறைவேற்ற ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

''இதுவரை அச்சில் வெளி வராத வ.வே.சு. ஐயர் அவர்களின் நூல்களை தமிழக அரசே அச்சிட்டு வெளியிடும்.

''திருச்சி - தஞ்சாவூர் நெடுஞ்சாலைக்கு வ.வே. சுப்ரமணியம் நெடுஞ்சாலை என மாற்ற அரசு உத்தரவிட்டுள்ளது.

''வ.வே.சு ஐயர் பிறந்த ஊரில் இருக்கும் வீட்டைத் தமிழ்நாடு அரசு எடுத்து நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கும்.

''அதுமட்டுமல்ல. கோரிக்கைகளில் எதை எதைச் செய்ய முடியுமோ அவற்றைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும்.

''சமுதாயத்தில் யாரையும் எளிதில் மாற்றிவிட முடியாது என்பதை வ.வே.சு. ஐயரின் வாழ்க்கை வரலாறு தெரிவிக்கிறது. அவர் நடத்திய குருகுலத்தில் ஏற்பட்ட பிரச்சினையைக் குறிப்பிடுகிறேன். சமூகத்தில் ஊறிப் போயுள்ள - தேவையற்ற சில நம்பிக்கைகளை எதிர்த்துப் போராட முடியவில்லை வ. வே. சு. ஐயர் அவர்களால். இதை நான் வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன்

''இன்று தமிழகத்தில் மட்டுமல்ல - இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் அமைதி இருக்கிறதா? மக்களின் வாழ்க்கையில் அமைதிக்கு உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறதா? எல்லாம் இருந்தும் நிம்மதியாக வாழ முடியும் என்று கருதநம்பிக்கை ஊட்ட முடிகிறதா?

''சுதந்திரம் பெறும்போது எந்த உணர்வு இருந்ததோ-அனைவரும் ஒன்றே என்ற எண்ணத்துடன் ஒரே நிலையில் ஒன்றுபட்டுப் பணியாற்றினோமோ அந்த எண்ணத்துடன் ஒன்றுபட்டு இன்றும் செயல்பட்டால் பிளவுகளை -பிரிவுகளை -அதன் விளைவுகளை நாம் எளிதில் களைந்துவிட முடியும்.

''நம்மை வளர்த்துக் கொண்டால் மட்டும் பயன் இல்லை; நாட்டை வளர்ப்பதற்காக நாம் பயன்பட வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடாவிட்டால் ஜாதிப் பிரச்சினை தீராது; ஏற்றத்தாழ்வு நீங்காது!

''எனவே அனைவரும் தமது ஆற்றலை அறிவை உழைப்பை சமுதாயத்துக்கு உதவும் வகையில் பாடுபட வேண்டும்; ஒதுங்கி நிற்கக் கூடாது!

''தனி மனிதருக்கு இங்கே நாம் நூற்றாண்டு நிறைவு கொண்டாட வில்லை! தனிமனிதரான வ.வே.சு. ஐயர் அவர்கள் சமுதாயக் கொள்கையின் சின்னமாக ஆக்கப்பட்டார் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அவரது நூற்றாண்டு நிறைவுநாள் மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியாளரால் எளியமுறையில் சிக்கனமான முறையில் — ஆனால் சிறப்பான வகையில் கொண்டாடப்படும்.''

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைக்குப் பின்னர் செய்தி மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி நவில, விழா இனிது நிறைவேறியதுடன் அனைவரின் உள்ளத்திலும் தேசபக்தியின் மெய்ப் பொருளை நாட்டுப் பற்றின் பெருமையை ஒலிபரப்பும் உன்னத விழாவாகத் திகழ்ந்தது!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



இயற்கை அழகுக்கு
இணை இதுவே!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி


Licence No. TN/MS(C)/PP-23
டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள்
ஏப்ரல் - 14

# தமிழரசு

1-5-1981 50 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012 [illegible] சித்திரை 18






தன்னிறைவுத் திட்டச் சிறப்பிதழ்
மலர் 11. இதழ் 21
திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி சித்திரை 19
தமிழரசு 1-5-1981



# தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டம்

## மாண்புமிகு முதல்வர்

நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்து கிராம முன்னேற்றம் பற்றிய சிந்தனை வளர்ந்து பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டபோதிலும் காந்தியடிகள் காணவிழைந்த "பொருளாதார வளர்ச்சியடைந்த, சுய தேவைகள் பூர்த்தியடைந்த வளங்கெழு கிராம ஆட்சி" முகிழ்க்கவில்லை.

இந்நிலை மாற வேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தில் பெருங் கவலையை ஏற்படுத்தியது. இன்றைய உலகின் வளர்ச்சியை, வசதி வாய்ப்புகளை அறியாத மக்களின் வளர்ச்சி பற்றி நாம் பேசிக் கொண்டு மட்டும் இருப்பதில் பயனில்லை. "சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வு எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும்" என்று குறிப்பிட்டார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில்தான் தன்னிறைவுத் திட்டம் செம்மையாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டியது அவசரப் பணியாகும். இந்தக் குறிக்கோளோடு வகுக்கப்பட்டதுதான் கிராமத் தன்னிறைவுத் திட்டம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் வட்டாரங்களில் 69 வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் முதற்கட்டமாகத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் நோக்கமாகும். குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக் கட்டட வசதி, தாய்-சேய்-நலநிலைய ஊரக மருந்தக வசதி, கிராமப்புற மின்வசதி முதலியவற்றை நிறைவேற்றிக் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து தன்னிறைவு பெற்ற கிராமங்களாகத் திகழச் செய்ய வேண்டுமென்ற முனைப்போடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் இந்த உயரிய நோக்கத்தினை உணர்ந்து இடர்களைப் பொருட்படுத்தாது அயராது உழைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா வட்டாரங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு கிராம மறுமலர்ச்சி கண்ட தமிழகம் உருவாகிடும் நாளே, அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கண்ட கனவை நனவாக்கும் புனிதத் திருநாளாகும்.



# தொழிலே வாழி நீ!

தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ
எழிலைஉலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

*

இந்தவான், மண், கனல், ஏரி, வளி தோன்றா
அந்தநாள் எழுந்ததோர் "அசைவி"னால்வானொடு
வெண்ணி லாவும், விரிகதிர் தானும்,
எண்ணிலா தனவும் எழுந்தன வாகும்.
அணுத்தொறும் இயங்கும்அவ் வசைவியக் கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வர்
அழியா தியங்கும்அவ் வசைவே மக்களின்
தொழிலுக்கு வேரெனச் சொல்லினும் பொருந்தும்.
ஆயினும் உன்னினும் அதுசிறந் ததன்று
தாயினும் வேண்டுவது தந்திடு தொழிலே!

*

மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்
தக்க வாறு தளிர்த்திடு கின்ற
அறிவிலே தோன்றுவை; அந்தோள் தழுவுவை;
மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை;
பொருள்பல நல்கிஅப் பொருள்தொறும்கலைத்திறம்
அருள்புரிந்து குறைபா டகற்றுவை தொழிலே!

*

பசித்தவன் புசித்திடப் பறப்பது போன்றஓர்
அசைப்பிலா ஆவலும், அசைப்பிலா ஊக்கமும்
அடைந்தோர் உனைத் தம் ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமை!

தொழிலே காதுகொடு! சொல்வேன்! எங்கள்
அதிர்தோள் உன்றன் அழகிய மேனி
முழுதும் தழுவமுனைந்தனர் பார்நீ!
அழகிய நாட்டில் அந்நாள் இலாத
சாதியும் மதமும் தடைசெயும் வலிவிலே
மோதுதோள் அனைத்தும் மொய்த்தன ஒன்றாய்க்
கெண்டை விழியாற் கண்டுகொள் தொழிலே
வாராய் எம்மிடை வாராய் உயிரே!
வாராய் உணர்வே! வாராய் திறலே!

அலுப்பிலோம் இருப்புக் கலப்பை துடைத்தோம்
மலையெனச்செந்நெல் வழங்களம் தோளில்வா!-
கரும்பாலைக்குக் கண்ணெலாம் நெய்யிட்
டிரும்பாலைக்கு வரும்பழு தகற்றினோம்
பண்டம்இந் நாட்டிற் பல்க மகிழ்ந்துவா!



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டம்



மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு ப. குழந்தைவேலு




ஒரு புதிய வரலாறு ...❀...

**அறிமுகம்:**

பரந்து விரிந்த நம்நாட்டில், ஆங்காங்கேத் தனித்தீவுகளாக அமைந்துள்ள கிராமங்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் உயர்நோக்குடன் ஒருங்கிணைந்த ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவே சமுதாயநலத் திட்டம். கிராம வாழ் மக்கள், பொருளாதார முன்னேற்றம் அடைய, வேளாண்மையிலும், கால்நடை மேம்பாட்டிலும், அறிவியல் ஆற்றலுடன் கூடிய புதிய முறைகள் 'சமுதாய நல திட்ட வட்டாரங்கள்' மூலம் புகுத்தப்பட்டன. குடிசைத் தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன. மக்களிடையே சமுதாயப்பொறுப்புணர்ச்சிகளும், விழிப்புணர்ச்சிகளும் மலர்வதற்காகச் 'சமூகக் கல்வித் திட்டங்'கள் முனைப்பாக செயல்படுத்தப்பட்டன. மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகள், பள்ளிக் கட்டிடங்கள், சாலை வசதிகள் ஆகியவைகள் வட்டாரங்கள் வழியாக செய்து தரப்பட்டன. இத்திட்டம் ஏறத்தாழ கடந்த 30 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டிருப்பினும் இன்னமும் மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை.

**தன்னிறைவுத் திட்டத்தின் பின்னணி :**

சில குடங்கள் குடிநீரைக் கொண்டு வருவதற்கு பல கல் தொலைவு நடக்க வேண்டிய கிராம மகளிரின் அவல நிலையையும், 'கட்டிடம்' என அழைக்க இயலா கட்டிடங்களிலிருந்து கல்வி பயில வேண்டிய கட்டாயத்திற்குள்ளான கிராம வாழ் இளஞ்சிறார்களையும், உழைத்து விளைவித்த பொருள்களை விற்பனை செய்வதற்கு சாலையின்றி பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலைக்கு உட்படும் கிராம வாழ் மக்களின் இன்னல்களையும், இடர்ப்பட்டு நின்ற மக்களையும் கண்டு, அவர்கள் வாழ்வில் புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் எண்ணத்துடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டதே 'தன்னிறைவுத் திட்டம்' எனும் தன்னிகரில்லாத் திட்டமாகும். குறிப்பிட்ட கால அளவிற்குள் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவுடன் ஏற்படுத்திக் கொடுப்பதே இத்திட்டத்தின் அடிப்படை இலட்சியம்.

**தன்னிறைவுத் திட்டவழி முறைகள்;**

தேவைகள் விரிவானவை; எண்ணற்றவை; நமது கிராமப் புறங்களும், இதற்கு விதி விலக்கல்ல. நிதி வசதிதான் நம்முடைய குறிக்கோள்களைக் குறைக்கும் வகையில் இடையூறாக உள்ளது. எனினும் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக குடிநீர் வழங்குதல், சிறு பாலங்கள் உட்பட, இணைப்புச் சாலைகள் இடுதல், ஆதிதிராவிட குடியிருப்புக்களுக்கு மயான சாலை வசதிகள் அமைத்தல், சிறு பாசன அமைப்புக்களை மேம்படுத்துதல் தவிர, கிராம மருந்தகங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆதிதிராவிட மக்களுக்காக வீடுகள் கட்டுதல் ஆகியவை அமைகின்றன.

**அடைய வேண்டிய எல்லை:**

இத்திட்டத்தை நிறைவேற்றத் தொடங்குமுன் 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு-இனி நாம் அடைய வேண்டிய எல்லையைச் சுட்டிக் காட்டியது—செல்ல வேண்டிய பயணத்தைக் கணக்கிட்டுக் காட்டியது அவை......

**குடிநீர் வழங்குதல்:**

தமிழ்நாட்டிலுள்ள 47075 குடியிருப்புகளில், 12603 குடியிருப்புகளுக்கு இன்னும் குடிநீர் வசதி செய்து தர வேண்டியதாயிற்று. அக்குடியிருப்புகளில் நீர் தரும் நிலைகளின் அடிப்படையில், குடியிருப்புகள் ஆறுவகையாகப் பிரிக்கப்பட்டு அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிதண்ணீர் குறைவின்றி வழங்கும் தன்னிகரற்ற பணியை மூன்றாண்டு கால அளவிற்குள் நிறைவேற்றி முடிக்கும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இணைப்புச் சாலைகள்:**

எத்தனையோ சாலைகள் எந்தவொரு வாகனமும் செல்ல இயலாமல் அமைந்தவை. பெருவழியிலிருந்து கிளையாக வளைந்து வளைந்து வரப்புகள் நடுவே நடந்து நடந்து உருவான ஒற்றையடிப் பாதைகளே ஊரை இணைக்கும் சாலைகளாக உள்ளன. இத்தகைய கிராமங்கள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை வசதிகள் நன்முறையில் அமைப்பது மட்டுமின்றி, தற்போதுள்ள சாலைகளை எல்லா பருவங்களிலும் பயன்படுமாறு செய்யவேண்டுமெனவும் கருதப்படுகிறது. மக்கள் தொகை 500 வரை கொண்ட குடியிருப்புகளுக்கு, முரம்பு பரப்பிய சாலைகள் 12,264 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும்.



500 முதல் 1500 வரை மக்கட் தொகை கொண்ட கிராமங்களைப் பொறுத்தவரையில், 'சரளை'க் கற்களால் சாலைகள் மொத்தம் 17,302 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும்.

**சிறு பாலங்கள்:**

இணைப்புச் சாலைகளில் குறுக்கிடும் வடிகால்களைக் கடப்பதற்காக 27718 சிறு பாலங்கள் கட்டி முடிக்கப்படும்.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலை வசதிகள் :**

மயானங்களுக்கு இறந்தவர் உடலை எடுத்துச் செல்ல நல்ல சாலை வசதி இன்மையால், முட்புதர்களையும், ஒற்றையடி வயல் வரப்புகளையும், இடுப்பளவு நீரையும் கடந்து செல்ல வேண்டிய துயரமான நிலை சில ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பொதுவாகக் காணக் கூடியதே! அந்த நிலையை அகற்ற, மொத்தம் 5,268 கி.மீ. நீளத்திற்கு மயான சாலைகள் அமைக்கப்படும்.

**பள்ளிக் கட்டிடங்கள்:**

மொத்தமுள்ள 23,257 தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளிகளில், 2,572 ஒன்றியப் பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களிலும், ஓலைக் கூரைகளின் கீழும் நடைபெறுகின்றன. எனவே, இத்தகைய பள்ளிகளுக்காக 2,572 பள்ளிக் கட்டிடங்கள் கட்ட திட்டமுண்டு. மேலும் போதிய அளவு இடவசதி இல்லாத பள்ளிகளுக்காக 4,561 கட்டிடங்கள் கூடுதலாகக் கட்டப்படும்.

**சிறு பாசன திட்டம் :**

**12,226 சிறு பாசன குளங்களை (ஒவ்வொரு குளமும் நூறு ஏக்கர் பரப்பிற்குக் குறைவான நிலங்களுக்கு நீர் வழங்குபவை)** தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் உரிய மேம்பாடுகள் செய்யப்படும்.

ஊர்ப்புற மருந்தகங்கள் மற்றும் தாய் சேய் நல விடுதிகள்:

இவை தற்போது பெரும்பாலான கிராமங்களில் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. 455 ஊர்ப்புற மருந்தகங்களுக்கும், 1,262 தாய் சேய் நல விடுதிகளுக்கும் கட்டிடங்கள் கட்ட தன்னிறைவுத் திட்டம் வகை செய்கிறது.

**ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்:**

ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட குடும்பங்கள் சொந்த வீடின்றி சிறுகுடிசைகளில் வாழ்கின்றனர். இவர்கள் கூட்டுறவு வீட்டு வசதிக் கடன் திட்டத்தில் உதவிபெற்று, வீடுகள் கட்டிக் கொள்ள ஊக்குவிக்கப்படுவர்.

செயல்முறை:

இம்மாபெரும் தேவைகளை வழக்கம் போல் அணுகி, நிறைவேற்றத் தொடங்கினால் அவற்றினை முடிக்க பல ஆண்டு காலங்கள் தேவை. தேவைகள் அதுவரை காத்திரா! எனவே, கிராமங்களில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து அவற்றினைத் தேசிய நீரோட்டத்துடன் இணைப்பதே தற்போதைய தலையாயப் பணியாகும். அதற்கேற்ப இத்திட்டங்களை 1980-81ல் தொடங்கி, மூன்று அல்லது நான்காண்டு கால அளவிற்குள் செய்து முடிக்க, முடிவு செய்யப்பட்டது. 69 வட்டாரங்கள் முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. தன்னிறைவுத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டு கிராமப் புற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு நல்கி, அதே வேளையில் அவ்வேலை வாய்ப்புகள் மூலம் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் தீர்த்து வைக்கும் எண்ணத்துடன் திட்டப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 1981-82ஆம் ஆண்டில் 150 ஒன்றியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எஞ்சிய 157 ஒன்றியங்கள் 1982-83ஆம் ஆண்டில், இத் திட்டத்தை எதிர்நோக்கும்.

மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இரு முறை நடத்தப்பெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் பிற அமைச்சர் பெருமக்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு இத்திட்டத்தின் இலட்சியம், செலவு, கால அளவு தேவைப்படும் அலுவலர்கள், பொருள்கள், ஒன்றியங்களின் நிதி நிலைமைகள், அரசு நடைமுறைகளுக்கு தேவைப்படும் மாறுதல்கள் போன்றவை ஆராயப்பட்டு, உடனுக்குடன் முடிவுகளெடுத்ததிலிருந்தே, இத்திட்டத்திற்கு அரசு அளித்துள்ள முதன்மையிடம் தெள்ளென விளங்கும். குறிப்பிட்ட கால அளவிற்குள் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க இயலாது என்ற எண்ணம் நிலவியது. தளரா முயற்சி, தங்கு தடையற்ற உழைப்பு தியாக உணர்வுடன் இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு—சிமெண்ட், இரும்பு, குழாய்கள் போன்ற பொருள்கள் கிடைக்கவில்லை என்ற குறையைச் சுட்டிக் காட்டாமல் அவற்றைப் பெற வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டு, பெற்று, குறிப்பிட்ட கால அளவிற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டிய ஆர்வம், 'இயலாது' என்ற எண்ணத்தை 'இயலும்' என மாற்றியது.



**நிதி:**

1982-83 முடிவு வரை 376 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மொத்தம் இத்திட்டத்தின் கீழ் ரூ. 290.00 கோடி தேவைப்படும். முதல் கட்ட நிறைவேற்றத்திற்கான தொகை ரூ. 45.41 கோடியின் விவரம் வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

| | | |
|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கும் திட்டங்கள் | ... 2,100.00 |
| 2. | இணைப்புச் சாலைகள் | ... 1,221.00 |
| 3. | சிறுபாலங்கள் | ... 138.00 |
| 4. | ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயானப் பாதை வசதி | ... 143.00 |
| 5. | சிறு பாசன திட்டங்கள் மேம்பாடு | ... 23.00 |
| 6. | ஊர்ப்புற மருந்தகங்கள் | ... 28.40 |
| 7. | தாய்சேய் நல விடுதிகள் | ... 91.00 |
| 8. | பள்ளிக் கட்டிடங்கள் | ... 545.00 |
| 9. | ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் | ... 252.00 |
| | | 4,541.40 |

**ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கடன் உதவி:**

இத்திட்டத்திற்கான செலவில் 5 முதல் 60 விழுக்காடு வரை ஊராட்சி ஒன்றியங்கள் அவைகளின் நிலைக்கு ஏற்றவாறு அவற்றின் பங்குத்தொகையாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கிணங்க, ஒவ்வொரு ஒன்றியமும் அதன் பங்காக பல இலட்சம் வரை ஏற்கவேண்டியுள்ளது. இத்தகைய மிகப்பெரும் முதலீட்டை ஏற்றுக் கொள்ள இயலா நிலையில், பல ஒன்றியங்களின் நிதி நிலை குறைவாக இருப்பதால், தம் பங்குத்தொகையைச் செலுத்துவதற்காக ரூ. 359 இலட்சம் வரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு கடனாக அரசு வழங்கியுள்ளது.

**புதிய திட்டங்கள்:**

தன்னிறைவுத் திட்டப் பணிகளோடு ஊராட்சி அலுவலகங்கள் மனமகிழ் மன்றங்கள் மற்றும் பெண்களுக்கான பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவை கட்டும் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுத் தன்னிறைவுத் திட்டம் சற்று விரிவுபடுத்தப்பட்டது. சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் மனமகிழ் மன்றக் கூட்டங்கள், மகளிர் மன்றக் கூட்டங்கள், மற்றும் இளைஞர் சங்கக் கூட்டங்கள் போன்றவை நடத்துவதற்கு ஏற்ற வகையில் ஊராட்சி அலுவலகம்-மற்றும் மனமகிழ் மன்றக் கட்டிடங்கள் கட்ட வேண்டியது அவசியமாயிற்று. எண்ணற்ற சிற்றூர்களில் ஊராட்சிகள் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. எனவே, முதல் கட்டமாக ரூ. 15 இலட்சம் செலவில் 41 கட்டிடங்கள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட எடுத்துக்கொள்ளப்பட்டது. கிராமங்களில் பெண்களுக்காக தனிமையான கழிப்பிட வசதிகள் இல்லாத நிலையை நீக்க, நீர் வசதியுள்ள இடங்களில் நான்கு அறைகள் கொண்ட இரு கழிப்பிடங்கள் கட்ட தன்னிறைவுத் திட்டம் வழி செய்துள்ளது.

### கட்டுமானப் பொருட்களும் கனரக எந்திரங்களும்:

தேவைக்கேற்ப கட்டுமானப் பொருட்களும், கனரக எந்திரங்களும் தேவைப்படும் நேரத்தில் கிடைப்பதைப் பொறுத்தே இம்மாபெரும் திட்டத்தின் வெற்றி அமையும் எனக் கூறவேண்டியதில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களுக்கான பொருட்கள் மற்றும் எந்திரங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| | | முதல் கட்டம் | இரண்டாவது கட்டம் |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் | 43,410 | 1,31,000 மெ.டன் |
| 2. | இரும்பு | 2,962 | 8,620 மெ.டன் |
| 3. | ஏ.சி. குழாய்கள் | 1,810 | 3,018 மெ.டன் |
| 4. | பி.வி.சி. குழாய்கள் | 2,600 | 5,700 மெ.டன் |
| 5. | ஜி.ஐ. குழாய்கள் | 13,322 | 18,628 மெ.டன் |
| 6. | சாலை உருளைகள் | 50 | 150 எண்கள். |



மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், மேற்கொண்ட பெருமுயற்சிகளின் விளைவாக தேவையான சிமிண்ட்டும், இரும்பும் தேவைப்பட்ட அளவிற்குக் கிடைக்கப் பெற வழியேற்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் அமைச்சரின் பெருதவியால் நீர் வழங்கும் திட்டங்களுக்கான குழாய்கள் மைய அரசின் உதவியோடு பெறப்பட்டன. சாலை விசை உருளைகளைப் பொறுத்தவரையில் நிதிநிலை நன்குள்ள ஒன்றியங்கள் அவற்றை வாங்குவதற்கு ஊக்குவிக்கப்பட்டன. மேலும், சில உருளைகளையும் கல் உடைப்பான்களையும் வாங்குவதற்கு, நெடுஞ்சாலைத் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### நிர்வாகம் :

மாபெரும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், ஊராட்சி ஒன்றியங்கள் அச்சாணியாகச் செயல்படுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு ஒன்றியமும் சுமார் ரூ.60 இலட்சம் மதிப்புள்ள பணிகளை ஏற்று நிறைவேற்றுகின்றன. இவற்றின் மதிப்பு அவை வழக்கமாக நிறைவேற்றும் பணிகளை விட ஆறு முதல் பத்து மடங்குகள் அதிகமானவையாகும். எனவே, வேலைப் பளு மிகுந்ததால் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு வட்டாரத்திலும், கோட்ட உதவிப் பொறியாளர் தலைமையில் சிறப்புப் பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதவிப் பொறியாளர்களும், மேற்பார்வையாளர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்ட நிறைவேற்றத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் முழுக்கவனம் செலுத்துவதற்குகந்த முறையில் பிற பணிகளில் அவருக்கு உதவ ஒரு கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் எழுத்து, கணக்கு வேலைகளைக் கவனிக்க வட்டாரங்கள், கோட்டம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் எழுத்தர் மற்றும் கணக்காளர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, குறிப்பிட்ட கால அளவிற்குள் இத்திட்டத்தைச் செயலாக்க வட்டார அளவில் நிர்வாகத்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவில் ஒரு இணை இயக்குநர் பதவி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்ட நிறைவேற்றத்தையும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகிய திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து சிறப்புத் திட்டப்பணிகளுக்கும் அவர் பொறுப்பு வகிப்பார்.

### தொழில் நுட்ப உதவிகள் :

உரிய தொழில் நுட்ப உதவிகளை உடனடியாக களப் பணியாளர்களுக்கு அளிப்பதைப் பொறுத்தே இத்திட்டத்தின் வெற்றி அமையும். தக்க உதவிப் பணியாளர்களோடு கோட்ட உதவிப் பொறியாளர் தலைமையில் இப்பணிகளை தொழில் நுட்பத்திறனுடன் மேற்பார்வையிட்டு வேலைகளை மேற்கொள்ள உட்கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மேற்பார்வை :

இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் வாரம் ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், மாநில அளவில், மாதம் ஒரு முறையும் ஆணையர் மற்றும் அரசு செயலர், ஊரக உள்ளாட்சித் துறை அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. திட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாதந்தோறும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பல நிலைகளிலும் நடத்தப்படும் ஆய்வுகள் இத்திட்டம் தொய்வின்றி முனைப்புடன் செயல்படுத்தப்படவும், அவ்வாறு செயல்படுத்தும்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும் பெரும் உதவி புரிகின்றன.

### மாநில உயர்நிலைக் குழு :

இத்திட்டத்தை ஆய்வு செய்யவும், இத்திட்டத்தில் ஈடுபட்டு நிறைவேற்றுகின்ற அனைத்துத் துறைகளுக்கும் இடையே ஓர் ஒருங்கிணைப்பை உருவாக்கவும், அரசுத் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில உயர்நிலை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொடர்புடையத்துறை அரசுச் செயலாளர்கள் உறுப்பினர்களாகவுள்ள இக்குழுவின் அமைப்பாளராக ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் ஆணையாளர்—அரசுச் செயலாளர் அவர்கள் பணியாற்றுகிறார். இதே போல் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் அரசு அலுவலர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்ட மாவட்டக் குழுக்கள் இத்திட்டத்தை அவ்வப்போது ஆய்வு செய்கின்றன.

தன்னிறைவுத் திட்டம் செயலில் உள்ளபோதே அதனை உடனுக்குடன் ஆய்வு செய்யும் பொறுப்பு, ''மதிப்பீடு மற்றும் ஆய்வுத்'' துறை இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோட்ட உதவிப் பொறியாளர்-உதவிப் பொறியாளர் தலைமையில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பணியாற்றும் ''தொழில் நுட்ப ஆய்வுக் குழுக்களுக்கு,'' இத்திட்ட வேலைகளை, மேற்பார்வையிடுவதற்கும் மறு சோதனைச் செய்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.





### பிற திட்டங்களுடன் இணைந்து செயல் படுதல் :

அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கம் முடிந்து விடுவதில்லை. இந்த வசதிகள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் குறிப்பாக மகளிர்க்கும் குழந்தைகளுக்கும் உரிய வழியில் பயன் படுவதற்கேற்ப தக்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### முடிவுரை :

சுருக்கமாகக் கூறினால், சமுதாயத்திலுள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் உதவும் வகையில், ஒருங்கிணைந்த முன்னேற்றம் ஏற்படுவதற்காக அமைந்த இனிய திட்டமே தன்னிறைவுத் திட்டம். இப்புதிய மாபெரும் முயற்சியினால் கிடைக்கக் கூடிய பலன்களோ எண்ணற்றவை. அவற்றால் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளோ கணக்கற்றவை. புத்துணர்ச்சியும் புதுப்பொலிவையும் நமது ஊர்ப்புறங்கள் இப்போது ஏற்று மிளிர்கின்றன. அடிப்படை வசதிகளை அளித்து, கிராமப்புற வாழ்வை, பொருள் பொதிந்த, விருப்பு மிகுந்த வாழ்வாக மாற்றியமைக்கும் தன்னிகரற்றத் திட்டமே 'தன்னிறைவுத் திட்டமாகும்'

# பாசன நீரை நவீனமுறையில் பயன்படுத்துதல்



மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

**கா. இராசாமுகமது**

நீர்வளங்களை அதிக அளவு நிலங்களுக்குப்பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதுதான் நம் அரசின் தலையாய கொள்கை. இதற்காக சிறியதாகவும் பெரியதாகவும் பல்வேறு திட்டங்களை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையில் பொறுப்பேற்றுள்ள நம் அரசு மேற்கொண்டிருக்கிறது.

பாசன வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி, பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கு ஈடு செய்யத்தக்க அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

புதிய நவீன விஞ்ஞான யுக்திகளைக் கையாண்டு நீர் வளத்தில் ஏற்படும் சேதாரங்களைத் தவிர்த்து அதைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும்.

புதிய திட்டங்களை உருவாக்கி பாசன வசதியை இதுவரை பெறாத நிலப்பரப்புகளைப் பாசனத் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல் வேண்டும் - ஆகியவை நம் அரசின் முக்கியமான நோக்கங்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பரவலான திட்டங்கள் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்களை அடுத்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்ற 168 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நம்முடைய அரசு தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடியும்போது இவைகளின் மூலம் 2 இலட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதியை பெறும்.

பொதுவாக, தமிழ்நாட்டில் உள்ள விளை நிலங்கள் ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவகையில் பாசனவசதிகளைப்பெறுகின்றன. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 95 சதவிகித நீர் வளத்தைப் பயன்படுத்தி வருகிறோம். எஞ்சியுள்ள நீர் வளத்தையும், பயன்படுத்தி, தற்போது பாசனம் பெறும் நிலங்களுக்கு மேலும் உறுதியான பாசன வசதி அளிக்கும் வகையிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

1. பாசன அமைப்புகளின் தலைப் பகுதியைச் சீரமைப்பதன் மூலம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல் 2. வாய்க்கால்களில் தூர் எடுத்தல், கரைகளை உயர்த்துதல், நீர்க் கசிவுள்ள பகுதிகளைப் பூசுதல் ஆகியவை மூலம் நீர் வீணாவதைத் தவிர்த்து வேண்டிய அளவு நீரைக் கடைமடை வரையில் சமமாகப் பங்கீடு செய்ய இயலும். 3. வாய்க்கால்களில் தேவையான பகுதிகளின் தரத்தை உயர்த்துதல். 4. வெள்ளக் காலங்களில், வெள்ள நீரால் பாதிக்கப்படும் நிலங்களிலிருந்து நீர் விரைவாக வடியும் பொருட்டு, வடிகால்களைச் சீரமைத்தல் மற்றும் வெள்ள வடிகால் போக்குகளை நேராக அமைத்தல். 5. பண்ணைப் பகுதியில் மேம்பாட்டு வேலைகள் (on Farm Works).

இம்முறைகளால் நீர் சிக்கனப் படுத்தப்பட்டு அதிக பரப்பினை விவசாயத்திற்குக் கொண்டு வர இயலும்.

தற்போது ஆறுகளின் தள மட்டம் மற்றும் கரைகள் பாதிக்கப் பட்டுள்ளதால் தேவையான அளவு நீரை எல்லாக் காலங்களிலும் அனுப்ப இயலவில்லை. நீர்ப் பற்றாக்குறை உள்ள காலத்தில் விவசாயிகள் ஆங்காங்கே மண் அணைகளை அமைத்து நீரைப் பெற முயல்கிறார்கள். இவைகளைத் தவிர்க்கவும், எல்லாக் காலங்களிலும் பாசனத்திற்குத் தேவையான அளவு நீரைப்பாசன அமைப்புகளில் அனுப்பவும், மதகு அணைகள் கட்டுதல், மற்றும் பாசன ஆதாரங்களின் கரைகளை உயர்த்துதல், பலப்படுத்துதல் முதலிய வேலைகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் வெள்ளக் காலங்களில், வடிகால்களுக் இடையே உள்ள படுகை அணைகளால், தடைபடும் தண்ணீரின் உயர்வால் நிலங்கள் மூழ்குவதைத் தவிர்க்கவும, நீரைச் சரியான முறையில் செலுத்துவதற்காகவும் படுகை அணைகளை மதகணைகளாக மாற்றி அமைக்க வேண்டியுள்ளன.

பாசன நீரைச் சிக்கனமாக உபயோகிக்கவும், கால்வாய் மற்றும் அதன் அமைப்புகளின் வழியாகப் பாயும் நீரைத் திட்டமிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்தவும், வாய்க்கால்களின் குறுக்கே பகுப்பு அணைகள், மட்டச்சுவர்கள் போன்ற அமைப்புகள் அவசியமாகின்றன.

சில வாய்க்கால்கள் அதிக தூரம் பாய்வதால் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வதில் தாமதமேற்பட்டு அப்பகுதி பாசன வேலைகள் துவங்குவது தாமதப்படுகின்றது. மேலும் சில இடங்களில் தளம் மற்றும் கரைப் பகுதிகளின் மண்ணின் தன்மையால் நீர்க் கசிவு ஏற்படும். எனவே, கசிவு நீரின் அளவைப் பெருமளவு குறைக்கவும், நீரின் ஓட்டத்தைக் கூட்டவும் கால் வாய்களுக்குப் பூச்சு வேலைகள் தேவையாகின்றன.

இந்தக் காரணங்களைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழைமையான பாசன அமைப்பான பெரியாறு வைகைப் பாசன முறையை நவீனப்படுத்தும் வேலை, உலக வங்கியின் உதவியுடன் ரூ. 41.04 கோடி மதிப்பீட்டில், தற்போது செயலாக்கப்பட்டு வருகின்றது. வைகைக் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டமும் இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது தவிர மேலும் பல பழைய நீர்ப் பாசன முறைகளை நவீனப்படுத்துவதற்கு நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவிரி பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் ரூ. 366 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தும் நோக்கத்துடன் அரசின் கவனத்தில் உள்ளது.

[48-ஆம் பக்கம் பார்க்க...]

**வளரும் தமிழகம்**



# தன்னிறைவுத் திட்டத்தின் தனித் தன்மைகள்

ஓரிரு தனி மனிதர்கள் அல்லது ஒருசில குடும்பங்கள்-ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து சில குடிசைகளை அல்லது வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழத் தொடங்கும் போது ஒரு கிராமம் உருவாகி விடுகிறது. அத் தனிமனிதர்களோடு அக்குடும்பங்களோடு பிற சிலரும் வந்து இணைந்து வாழத் தொடங்கும்போது . அக்கிராமம் விரிவடைகிறது. சிற்றூர்கள் பேரூராக. மாறும்போது-அதன் மக்கட் தொகை பெருக, தேவைகள் முளைக்கின்றன. தேவைகள் அதிகரிக்கும்போது - அவ்வூர்வாழ் மக்கள் அரசின் உதவியை எதிர் பார்க்கத் தொடங்கிவிடுகின்றனர்... இதுவே அன்றைய சமுதாய நலத்திட்டத்தின் பின்னணி.

ஆனால், இன்றைய நிலைமை மாறுபட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தோடு அவர்களின் தேவைகளும் விரைவாக வளர்ந்து கொண்டே சென்றுள்ளன. சில தேவைகளைத் தீர்ப்பதற்கு முன்பே வேறு புதிய தேவைகள் உருவாகிவிடுகின்றன. எனவே, தேவைகளற்ற தன்னிறைவு நிலையை உருவாக்கவே-உருவாக்கப்பட்டதுதான் தன்னிறைவுத் திட்டம். இது தனித்துவம் மிக்கதோர் திட்டம் என்றால் மிகையாகாது. அது எங்ஙனம் தனித்துவம் மிக்கது என்பதைக் கூறவே இக்கட்டுரை.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒன்பது பணிகள் நிறைவேற்றப் படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர். அந்த ஒன்பது பணிகளும் கிராம முன்னேற்றத்தில் எங்ஙனம் தன்னிறைவைத் தோற்றுவிக்கின்றன என்பதைத் தனித் தனியாகக் காண்போம்.

நீரின்றி அமையாது உலகு. எனவே, குடிநீருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. குடிப்பதற்குச் சில குடங்கள் நீரைக் கொண்டு வருவதற்கு கிராம மக்கள் அல்லல்படக்கூடாது என்பதோடு, தூய்மையான குடிநீர் அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் வழங்கப்பட தன்னிறைவுத் திட்டம் வழி வகுத்தது. எனவே இத்திட்ட. நிறைவேற்றத்தால் குடிநீர் தேவைகளைப் பொறுத்த வரையில் முதலில் நம் மக்கள் பெறுவது—தன்னிறைவு...

அடுத்ததாக, இணைப்புச் சாலைகள். இணைப்புச் சாலை அமைக்கும்பணி வழக்கமாக ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படும்பணி தானே..என்ற எண்ணம் எழலாம். ஏறத்தாழ பல மைல் பரப்பளவு கொண்ட ஒன்றியங்களில் சில இடங்களில் மட்டுமே வழக்கமான திட்டங்கள் வாயிலாக இணைப்புசசாலைகள் ஆண்டுதோறும் இடப்பட்டன. ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. இதனால் உழைத்து விளைவித்த விளை பொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்லவும் மற்றும் நகரங்களுக்குச் செல்லவும் கிராமமக்கள் சாலை வசதி இன்றி இனியும் துயருற வேண்டியதில்லை.

அடுத்து, சிறுபாலங்கள். சிறுபாலங்கள் இல்லையெனில்


எச். பி. என். ஷெட்டி, ஐ. ஏ. எஸ்.

ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்

ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறை




பெரும்தூரம் கொண்ட இணைப் புச் சாலைகள் அமைப்பதில் பய னில்லை, மக்களும் பயனடைய வாய்ப்பில்லை. ஏனெனின் பல கிராமங்களின் இணைப்புச்சாலை களில் ஆங்காங்கே குறுக்கிடும் சில நீரோடைகள், மற்றும் மழைநீர் வடிகால்கள், மழைக் காலங் களில் இணைப்புச் சாலைகளைத் துண்டித்து கிராமங்களைத் தனித் தீவுகளாக்கி விடுகின்றன. எனவே, சிறுபாலங்கள் அமைப்பு பணி யும் மேற் கொள்ளப்பட்டுள்ளது. கோடை காலங்களில் மட்டுமின்றி மழைக் காலங்களிலும் இணைப் புச் சாலைகளைப் பயன்படுத்தப் படும் வகையில் அவை அமைக்கப் படுவது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.



ஆதிதிராவிடர் குடியிருப்பு களுக்கான மயான சாலை வசதி. நல்ல சாலை வசதி இன் மையால், இறந்தவர் உடலைச் சுமந்து செல்வதற்குப் பாதை இன்றி, பிணத்தைத் தோளில் கிடத்தி எடுத்துச் செல்ல வேண் டிய அவல நிலைகளைக்கொண்ட ஆதிதிராவிடர் குடியிருப்புக் களுக்கு மயான சாலை வசதி அமைக்கப்பட்டு வருவது-மேற் கூறிய அவல நிலைக்கு நிரந்தர மாக முற்றுப் புள்ளி இடும்.

கண்ணுடையோர் என்போர் கற்றோர். எனவே, கிராமவாழ் மக்களின் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் பொறுப்பு அரசின் தலையாயக் கடமை. கற்பதற்கு அறிவு மட்டுமின்றி நல்ல சூழ் நிலையும் தேவை. ஓலைக் கூரை அடியிலும் சிதிலமான சூழ்நிலை யிலும் இடிந்து விழும் நிலையி லிருக்கும் பழைய பள்ளிக் கட்ட டங்களிலும் கல்விபயிலும் வேண் டிய கட்டாயத்தை அகற்ற பள் ளிக் கட்டடங்கள் கட்டும் பணி இத்திட்டத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டது.

அடுத்து, சிறு பாசனத் திட்டம். வேளாண்மை நீர்ப்பாசனத்திற் குப் பெரிய அணைக்கட்டுகளை யும், பெருக்கெடுத்து ஓடும் ஆறு களையும் நம்பி வாழும் நிலை மையில் நமது அனைத்து மாவட் டங்களும் அமைந்திருக்கவில்லை. எனவே, சிறு குளங்கள் மற்றும் பாசன அமைப்புகளை நன்கு பராமரிக்க வேண்டியது அவசிய மாயுள்ளது. ஊராட்சி ஒன்றியங் களின் பராமரிப்பிலுள்ள நூறு ஏக்கர் பரப்பளவிற்கு மிகாத நிலங்களுக்கு நீர்ப்பாசனம் நல் கும் அனைத்து நீர்நிலைகளும், இத்திட்டத்தின் மூலம் செப்ப னிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்படும். எனவே, சிறு குளங்களால் பயன்பெறாமல், 'வானம் பார்த்த பூமியாக' உள்ள நிலங்களும் நிரந்தரமாகப் பயன் பெறுவதோடு அந்நிலங்களுக்குக் உரிமைபூண்ட பெரும்பாலான சிறு விவசாயிகள் தம் வாழ்வில் மேம்பாடடைவர் என்பது உறுதி.

நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம். எனவே, கிராம மக்கள் நோயற்ற வாழ்வு கொண்டு, நலமுற்று வாழ பிணி நீக்கும் மருந்தகங்களும் - தாய் சேய் நல விடுதிகளும் இத்திட் டத்தின் கீழ் கட்டப்படுகின்றன. ஏற்கனவே, வாடகைக் கட்டடங் களில் இயங்கி வந்த மருந்தகங் கள் தாய்சேய் நல விடுதிகள் இனி சொந்தக் கட்டடங்களுக்கு மாற் றப்படும்.

எண்ணற்ற ஆதிதிராவிடர். குடும்பங்கள் குடிசைகளில் வாழ் கின்றனர். எனவே, அவர்களுக்கு வீட்டு வசதி நல்க இத்திட்டம் வழி வகுக்கிறது. மொத்தத்தில்..

இத்திட்டம் தமிழகம் முழுவ தும் நிறைவேற்றப்பட்டு முடியும் போது, தமிழகத்தின் அனைத்துக் கிராமங்களும் அடிப்படை வசதி கள் அனைத்தையும் பெற்று, தன் னிகரற்று திகழ்ந்து பிற மாநிலங் களுக்கும் வழிகாட்டியாய் அமை யும் என்பது உறுதி!



## பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக தமிழ்நாடு அரசு ஓர் அறக்கட்டளையை ரூபாய் 25,000 முதலீடு செய்து ஏற்படுத்தி உள்ளது. 'பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை' என்னும் பெயரில் ஏற்படுத்தியுள்ள இந்த அறக்கட்டளை மூலம் இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய ஆய்வு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும். இதன்படி இவ்வாண்டு முதன்முதலாக பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய ஆய்வுச் சொற்பொழிவுகளை சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏப்ரல் 20, 21, 22 ஆகிய நாட்களில் முறையே 'தமிழ்க் கவிஞர்', 'புரட்சிக் கவிஞர்', 'உலகக் கவிஞர்' என்ற தலைப்புகளில் திருமிகு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.



# புது மனை புகும் ஆதி திராவிட மக்கள்


பெ. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்., ஆணையாளர், அரசுச் செயலாளர்
வீட்டுவசதி, நகர வளர்ச்சித் துறை.


கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் குடியிருக்க சொந்த வீடின்றி கொட்டில்களி லும், இருண்ட சுகாதாரமற்ற சிறு சிறு குடிசைகளிலும் வாழ்ந்து வரும் நிலையினைப் போக்கிட, தமிழ்நாடு அரசு 1976 ஏப்ரல் திங்களில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைத் துவக்க ஆணை பிறப்பித்தது. வட்ட அளவில் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களை ஆரம்பிப்ப தென துவக்கத்தில் முடிவெடுத்த போதிலும், இத்திட்டத்தின் முழுப்பயனை அனைத்துக் கிரா மப்புற மக்களும் அடையும் வண் ணம், கோட்ட அளவில் கிராமக் கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத் தினை விரிவாக்கி, 1977-ஆம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித் தது.

வாழ்க்கையின் அடித்தளத் திலுள்ள அனைத்து ஏழை எளிய வர்களுக்கும் இத்திட்டத்தின் பயன் பெருவாரியான அளவில் கிடைக்கும் வண்ணம், 201 ச.அ. பரப்பில் ஒரே மாதிரியான வடி வமைப்போடு வீடு ஒன்று, ரூபாய் 3,750 மதிப்பீட்டில் கட்டுவதற்கு தற்போது கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டு இத்திட்டம் செயலாற்றப்பட்டு வருகிறது. இத்தகைய வீடு கட்டுவதில், வீடு கட்டும் அங்கத்தினர், வீட்டின் மதிப்பில் 20 விழுக்காடு, அதா வது ரூபாய் 750, பணமாகவோ உழைப்பாகவோ அல்லது வீடு கட்டப் பயன்படும் பொருளா கவோ செலுத்தி, பங்கேற்க வேண்டும். மேற்படி திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கும், ஆதி திராவிடர் குடியிருப்பில் வீடு கட்டி குடியிருக்க முன்வரும் ஆதி திராவிடர் அல்லாத இதரர் களுக்கும் தற்போது இந்தக் கடன் தொகையில் ரூபாய் 1,000 மானியமாக அரசால் வழங்கப் பட்டு வருகிறது. எனவே, எஞ்சிய கடன் தொகை ரூபாய் 2,000-ஐ மாதத் தவணையில் சுமார் ரூ. 8- என்ற வீதத்தில் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் மற்று மொரு முக்கிய அம்சம் என்ன வெனில், ஆதிதிராவிட மக்க ளுக்கு அளிக்கப்படும் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை. வட்டி முழுவதையும் அரசே ஏற் கிறது என்பதாகும். மேலும், கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த அங்கத்தி னர்களில் 25 விழுக்காடு ஆதி திராவிட மக்களுக்கென்று ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வும், வேலை வாய்ப்புத்திட்டங் களை உருவாக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக் கப்பட்ட ஊராட்சி ஒன்றியங் களில், 'தன்னிறைவுத் திட்டம்' ( Self sufficiency scheme ) என்னும் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. தெரிந்தெடுக் கப்பட்ட ஊராட்சி ஒன்றியங் களில் உள்ள மக்களுடைய முக் கிய தேவைகளை அறிந்து, அதற் கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு செயலாற் றப்படும் திட்டங்களில் ஒன்று ஆதிதிராவிட மக்களுக்குக் கூட் டுறவுச் சங்கங்கள் மூலமாக வட் டியில்லாக் கடன் உதவி அளித்து வீடுகள் கட்டிக்கொள்ள ஏற்பாடு கள் செய்தலாகும்.

1980-1981-ஆம் ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செயலாற்றப்பட்டு வரும் தன்னி றைவுத் திட்டத்தில் கிராமப்புற வீட்டு வசதி திட்டமும் அடங்கிய தாகும். மேற்படி ஆண்டில், இத் திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 2.39 கோடி மதிப்பில் 7966 வீடுகள் கிராம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் கட்டி முடிப்ப தென திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள், 6240 வீடுகள் ஆதி திராவிட மக்களுக்காகவும், 1,726 வீடுகள் இதரர்களுக்காகவும் கட் டுவதென திட்டமிடப்பட்டுள் ளது.

தன்னிறைவுத் திட்டத்தில் 1981 ஜனவரி திங்கள் 31ஆம் தேதிவரை, ஆதிதிராவிட மக் கள் 3,998 வீடுகளும், இதரர்கள் 1,042 வீடுகளும் கட்டி முடித்தி ருக்கிறார்கள். இவற்றின் மதிப்பு ரூபாய் 148.47 இலட்சமாகும். ஆதிதிராவிட மக்களால் கட்டப் படும் 4,039 வீடுகளும் இதரர் களால் கட்டப்படும் 936 வீடு களும் கட்டுமானத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. இவ்வாறு கட்டுமானத்தில் உள்ள வீடுகளின் மதிப்பு ரூபாய் 75.03 இலட்ச மாகும்.

தன்னிறைவுத் திட்டம் 1981-1982-ஆம் ஆண்டில் மேலும் 150 ஊராட்சி ஒன்றியங் களுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயலாற்ற திட்டமிடப்பட்டுள் ளது. வாழ்க்கையில் அடித்தளத் தில் உள்ள நலிவுற்ற ஏழை எளிய மக்களாகிய ஆதிதிராவிடர்கள், வீடுகள் கட்டிக்கொள்ள வசதி கள் செய்து கொடுப்பதன் மூலம் ஈடுஇணையற்ற தொண்டினை இவ்வரசு ஆற்றி வருகின்றது.



# குடிநீரில் தன்னிறைவு

வே. கருப்பன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

**பா**ரதத் திருநாடு சுதந்திரம் பெற்று மக்களாட்சித் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தின் அடிப்படையில், பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவை பல நிலைகளிலே நிறைவேற்றப்பட்டிருந்தும் கூட, கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளாகிய குடிநீர் வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற வசதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. கிராமங்களில் குடிநீர் வசதியற்ற நிலையும், போக்குவாத்துச் சாலை இல்லாத நிலையும், மருத்துவவசதி, கல்விவசதி நல்ல முறையில் இல்லாத நிலையும் குடிசை வாழ்வோர் மின் வசதி பெறாத நிலையும் இருந்து வருகிறது. இந்நிலையைக் கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிராம மக்களின் நிலையை உயர்த்திடும் வகையில், 'தன்னிறைவுத் திட்டம்' என்ற புதிய திட்டத்தினை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

இம்மகத்தான திட்டத்தின் படி, எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, சாலை வசதி, கல்வி வசதி, முழுமையான மருத்துவ வசதி, ஆதி திராவிட மக்கள் இடுகாட்டிற்குச் செல்லப் பாதை வசதி போன்றவற்றைக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்துவிட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக 1980-81ல் 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, மேற்குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கு மிக மிகத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு திட்டப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. 69 ஒன்றியங்களிலுள்ள 2208 குடியிருப்புகளில் ரூ. 15 கோடி செலவில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதன் மூலம் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்று அரசு முழுமையாக நம்புகிறது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது என்பது மக்களின் அடிப்படைத் தேவை நிறைவு செய்யப்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் வேலை வாய்ப்புத் தோன்றிடவும் ஏதுவாகிறது.

தண்ணீரின் மூலம் பரவக் கூடிய டைபாய்டு, மலேரியா, வயிற்றுப் போக்கு, காலரா போன்ற கொடுமையான நோயகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடிகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதால், இது போன்ற பிணிகள் அறவே குறைவதன் காரணமாக இறப்பு எண்ணிக்கை குறைவதோடு, ஆயுட்காலமும் நீடிக்கிறது. மக்களின் மருத்துவச் செலவும், அரசுக்குக் குறைகிறது. குடிநீர் வசதி தருவதன் மூலம் தொழில் வளர்ச்சி, நிதிவசதி, வணிகவசதி வளர்கிறது. மனை இடங்களின் மதிப்பும், வீடுகளின் விலை மதிப்பீடும் உயருகிறது. இல்லத்திற்குத் தேவையான நீரைச் சேமிப்பதற்காக நெடுந் தொலைவு அலைந்து கொண்டிருந்த தாய்மார்களின் நீண்ட நாள் துயர் துடைக்கப்படுகிறது. வீட்டுக்கு அருகிலேயே நீர் வழங்கப்படுவதன்மூலம் நீர் கொணர்வதற்காக எடுத்துக் கொள்ளும் நேரமும், வேலைப் பளுவும் குறைவதால், எஞ்சுகின்ற நேரத்தையும், சக்தியையும் பயனுள்ள வழியில் செலவழிக்க இயலும்.

கிராமங்களில் இருக்கின்ற மக்கள் போதுமான அளவு வேலை வாய்ப்பும் வேலைக்குத் தகுந்த வருவாயும் கிடைக்காததால் நகரங்களுக்குச் சென்று நகரங்களில் இருக்கின்ற வசதியைக் குறைப்பதோடு அருவெறுப்பும், ஆபத்தும் தரக்கூடிய நிலையில் நகரங்களிலே வாழ்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. நகரங்களில் கிடைக்கின்ற வசதிகளான, நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கல்வி வசதி போன்ற இன்ன பிற வசதிகளும் கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதன் வாயிலாக கிராம மக்கள் நகரங்களுக்குச் செல்லும் அவல நிலை மாற ஏதுவாகிறது.

ஆக, மேற்கூறிய குறிக்கோள்களை எய்துகின்ற வகையில், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தமிழகத்தில் 100க்கும் மேற்பட்ட மக்கள் தொகையினைக் கொண்ட குடியிருப்புகளாக 47,705 குடியிருப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன. இதில், 69 தன்னிறைவு ஊராட்சி ஒன்றியங்களில் 2208 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் திட்டங்கள் விரைவு படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரம் இல்லாதவைகளும், நீர் ஆதாரம் இருந்தும் குடிப்பதற்கு ஏற்ற நிலையிலும் இல்லாத தமிழகத்தில் மொத்தமுள்ள 5474 குடியிருப்புகளுக்கு ரூ. 25.76 கோடி செலவில் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரையில் 4401 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 1073 குடியிருப்புகளிலும் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

இந்தத்திட்டத்தினை நிறைவேற்றுகின்றபொழுது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக வாகைக்குளம், சாயர்புரம் போன்ற பகுதிகளிலே நல்ல நிலத்தடி நீர் தேவையான அளவு இருந்தும், தேவைப்பட்ட பகுதிகளுக்கு அவற்றை எடுத்துச்செல்வதை, அங்குள்ள மக்கள் தவறான அச்சத்தின் காரணமாக நியாயமற்ற முறையில் எதிர்க்கிறார்கள். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பழந்தமிழ் சொல்லுக்கு இலக்கணமான மக்கள், நீரற்ற தங்களுடைய சகோதர மக்களுக்குக் குடிநீர் எடுத்துச் செல்வதைத் தடுப்பது விந்தையிலும் விந்தையல்லவா? அவர்களுடைய நல்லெண்ணத்தை எதிர் நோக்கி அவர்களுடைய தேவையற்ற ஐயப்பாடுகளைக் களைந்து முழு ஒத்துழைப்போடு நிலத்தடி நீரை மற்ற குடியிருப்புகளுக்கு எடுத்துச் செல்ல ஆவன மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தவிர, இவ்வாண்டு தோன்றியுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிடும் வகையில், அரசின் ஆணைகேற்ப சுமார் 470 இலட்சம் ரூபாய் செலவில் 2500 ஆழ் துளைக்கிணறுகள் அமைக்கும் பணியில், வாரியம் போர்க்காலத் தீவிரத்தோடு தன்னை முழுமையாக சடுபடுத்திக்கொண்டுள்ளது.

மேலும் நடப்பு நிதி ஆண்டில் (1981-82ல்) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 4076 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட விருக்கின்றன. 3.3.82க்குள் இக்குடியிருப்புகளிலுள்ள மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழுமையாக வழங்கிட வாரியம் ஊருரை எடுத்துக் கொண்டு மிக முனைப்போடு பணியாற்றி வருகிறது.

## தஞ்சை அரண்மனையில் மராட்டிய இருட்டறை கண்டுபிடிப்பு

**அ**ண்மையில் தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள், தஞ்சை அரண்மனைக்கு வருகை தந்து அதன் கட்டட நுணுக்கத்தையும், ஓவியங்களையும் கண்டு களித்தார்கள். அவ்வமயம், இவ்வரண்மனையின் பல பகுதிகளில் சுரங்கப் பாதைகள் இருக்கக் கூடும் என்பதையும், பாதாள இருட்டறைகள் இருந்தால் அவற்றையும் கண்டுபிடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு ஆணையிட்டார்கள். அதன்படி அரண்மனையின் பல பகுதிகளையும் மாநிலத் தொல்பொருளாய்வுத்துறை ஆய்ந்து வருகிறது.

இப்பொழுது மராட்டிய இளவரசர் குடும்பம் வாழும் பகுதிக்குக் கீழ் ஒரு பெரிய இருட்டறைப் பகுதி காணப்பட்டுள்ளது. இதில் சுமார் 15 அறைகளுக்கு மேல் உள்ளன. பல அறைகளில் வண்ண ஓவியங்களும், சுதை உருவங்களும் உள்ளன. சுமார் 18-ஆம் நூற்றாண்டில் மராட்டிய மன்னர்களால் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களாகும், இவை. சுதை உருவங்களில் பல குறிப்பிடத்தக்க தெய்வ உருவச் சிலைகள் உள்ளன. ஐந்து தலைகளுடன் கூடிய கபிலர் என்னும் மகாவிஷ்ணுவின் சிலை, ஐந்து முக ஆஞ்சனேயர், பஞ்சமுக கருடன், பஞ்சமுக ஹேரம்ப கணபதி, விஸ்வரூப இராமர், துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகியோர் சிற்பங்கள் இவ்வாறு நின்ற நிலையில் உள்ளன. ஓவியங்களில் ஆஞ்சநேயர், உமா மகேஸ்வரர், கஜலட்சுமி ஆகிய உருவங்கள் உள்ளன. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தஞ்சை அரண்மனையை மேலும் ஆய்ந்து வருகிறது.

# தன்னிறைவுத்திட்ட முதற்கட்டம்!

**க. ச: லோகவிநாயகம்**
**தலைமைப்பொறியாளர்**
**நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்**

இதுவரை மாநிலம் முழுவதும் தழுவிய திட்டத்திற்குட்பட்டே கிராமங்களில் பணிகள் செயலாக்கப்பட்டு வந்தன. இம்முறையில் திட்டத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்து மட்டுமே, கிராமங்களுக்கும் குறிப்பாக அவற்றில் உள்ள ஏழை மக்களுக்கும் ஓரளவு பயன் கிட்டியது. இதனால் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கூட முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலை இருந்து வந்தது. இம்முறையை மாற்றி அமைத்து, மக்களின் அடிப்படை வசதிகள் குறுகிய காலத்தில் நிறைவு பெற வேண்டும் என்கிற கொள்கையை அடிப்படையாக வைத்து, தமிழக முதல்வர் தீட்டிய திட்டத்தின் முழுவடிவம்தான் தன்னிறைவுத் திட்டம். இத்திட்டம் தமிழக அரசின் மிகப் பெரும் சிறப்புத் திட்டமாகும்.

கிராம மக்களின் குறைந்த பட்சத் தேவைகளையும் அவர்களுக்குத்தேவையானஅடிப்படை வசதிகளையும் உடனடியாக, மிகக் குறைந்த காலத்தில் முழுமையாக அமைத்துத் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாடு விடுதலை அடைந்து 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் கிராமமக்களுக்குஇன்னும்கிட்டாத இணைப்புச் சாலைகள், மயானங்களுக்குக்கூட இதுவரை அமைக்கப்படாதிருந்த பாதைகளை அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சிறிய நீர்ப்பாசன நிலைகளை மேம்பாடு செய்தல், தாய் சேய் நல விடுதி கட்டடங்கள் மற்றும் ஊரக மருந்தகங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை முழுமையாகவும் விரைவாகவும் கிடைக்க வகை செய்யும் நோக்குடன் தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைச் செயலாக்க முன் வந்துள்ளது. சில ஆண்டுகளுக்குள்ளாகவே இவ்வசதிகள் அனைத்தும் கிராம மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வரையப்பட்டுள்ள இத்திட்டம், மூன்று கட்டங்களில் செயலாக்கப்படும்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம மக்களும் இவ்வசதிகளைப் பெற்று, தமிழ் நாடெங்கும் புத்துணர்வும் மறுமலர்ச்சியும் பெறுவர்.



இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டத்தை முதல் கட்டத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டத்தில் 150 ஊராட்சி ஒன்றியங்களிலும், மூன்றாவது கட்டத்தில் எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்துவது அரசின் நோக்கமாகும்.

நம்மாநிலத்தில் முதல் கட்டமாக 1980-82ஆம் ஆண்டு 15 மாவட்டங்களில் உள்ள 69 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**இணைப்புச் சாலைகள்:**

விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ள நமது மாநிலத்திற்கு சாலைப் போக்குவரத்து மிக இன்றியமையாததாகும். சிறிய பெரிய விவசாயிகள் தங்களது விளை பொருட்களை அருகிலுள்ள சந்தைக்குக் கொண்டு செல்லவும், மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்லவும் இணைப்புச் சாலை முக்கியமான ஒன்றாகும். மேலும் கிராமப்புற மக்கள் நோய்வுற்றகாலங்களில் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குச் செல்லவும், தாய்க்குலம் பிரசவக் காலங்களில் விரைவில், எளிதாக தாய்சேய் நல விடுதிக்குச் செல்லவும், கிராம மக்கள் விரைவில் பேருந்துகள் நிலையத்துக்குச் செல்லவும், கிராமங்களை அருகிலுள்ள முக்கியநெடுஞ்சாலைகளுடன் இணைக்கவும் தன்னிறைவுத் திட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 250-க்கு மேல் 1500-க்குள் உள்ள மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் இந்த ஆண்டு மொத்தம் 69 ஊராட்சி ஒன்றியங்களின் மூலம், 5788.00 கி.மீ. சாலை வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்காக 679.5825 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.



**மயானங்களுக்குப் பாதை அமைத்தல்:**

ஏற்கெனவே அரிசனங்களுக்கு முன்னோடியாக அவர்களில் மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு இறந்தவரின் இறுதிச் சடங்கை நிறைவேற்ற ரூபாய் 50 வழங்கப்பட்டு வருகிறது. அதோடு நிற்காமல் அரிசன மக்களின் மயானங்களுக்கு இறந்தவரின் உடலை எவ்வித இடையூறும் இல்லாமல் கொண்டு செல்வதற்காகப் பாதைகள் அமைக்க தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 1980-81ல் 856.20 கி. மீட்டர் நீள பாதை வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கு 53.410 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

**சிறு பாலங்கள்:**

இணைப்புச் சாலைகளுக்காகத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தனியாக நிதி ஒதுக்கப்பட்டதோடல்லாமல், சாலைகள் எல்லாப் பருவ காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகளில் குறுக்கிடும் ஓடைகள் வாய்க்கால்கள் முதலியவற்றிற்குச் சிறுபாலங்கள் கட்டவும், பழுதடைந்த சிறு பாலங்களைப் புதுப்பிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டு 69 ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் மொத்தம் 2615 சிறு பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு 171.4215 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள்:**

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.''

என செப்பிச் சென்ற பாரதியின் கனவு நனவாக, கிராமங்களால் எல்லாம் பள்ளிகள் தமிழகம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக வேலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் சொந்தமான கட்டடங்கள் இல்லாத ஆரம்பப்பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டடமும், படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்தும் இன்னமும் நிறைய பள்ளிகள் சொந்தக் கட்டடம் இல்லாத நிலையில் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகிறது. இந்த நிலையைப் போக்கி கிராம மக்களுக்கு நல்ல முறையில் கல்வி கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களில் 770 புதிய பள்ளிக்கட்டடங்களும் கூடுதல் பள்ளிக் கட்டடங்களும் கட்ட 290 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 1980-81ஆம் ஆண்டில் 162 புதிய கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 246.191 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் மேலும் மொத்தம் 2000 பள்ளிக் கட்டடங்கள் கட்ட 582 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

**பாசனச் சிறு திட்டங்கள்:**

''நீர் உயர நெல் உயரும்'' என்ற அவ்வையின் அமுத வாக்கிற்கிணங்க, நீரைத் தேக்கி வளத்தை உயர்த்திட சிறு பாசன குளங்கள், கண்மாய்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் சீரமைப்புப் பணிகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பல பெரும் நீர்த்தேக்கங்கள் அரசினால் கட்டப்பட்டிருப்பினும் அவைகளின் நீர்ப்பிடிப்பினுள் வராத பல கிராமங்களில் இருக்கும் பல சிறு நீர்ப்பாசன நிலைகள் நல்ல நிலையில் இல்லாதகாரணத்தால், மழைக்காலங்களில் தண்ணீரைத் தேக்கிவைத்து பாசனத்திற்குப்பயன்படுத்த முடியாது உள்ளது. இந்நிலையை மாற்றி எல்லா நீர்ப்பாசன சிறிய நிலைகளையும் ஆழப்படுத்தியும் ரிவெட்மென்ட்டுகள் கட்டியும், மதகுகளைச்செப்பனிட்டும் மழை காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலம் பாசன வசதியைப் பெருக்குவதுடன் அருகாமையிலுள்ள கிணறுகளிலும் நீர் மட்டத்தைச் சமன் செய்யவும் 1980-81ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் 765 வேலைகள் எடுக்கப்பட்டு 39.348 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளன.

**தாய் சேய் நல விடுதி:**

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''. இது முதுமொழி, கிராம மக்கள் நோயற்ற வாழ்வு வாழ கிராமிய மருந்தகங்கள் மற்றும் தாய் சேய் நல நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆயினும் பல நிலையங்களுக்குக் கட்டடம் இல்லாத நிலை உள்ளது.

பல கிராமங்களில் நல்ல முறையில் மகப்பேறு நிலையங்கள் இல்லாது ஆங்காங்கு ஆயாக்களே மகப்பேறு மருத்துவம் செய்து வந்தனர். இந்நிலையை மாற்றி கிராம மக்களுக்கும் நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்களின் வசதி கிடைக்க செய்யும் பொருட்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81-ம் ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் 234 தாய்சேய் நல விடுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ. 71.249 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக மருந்தகங்கள்**

பல கிராமங்களில் கிராம மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி கிட்டாமல், நோயுற்ற காலங்களில் தொலை தூரம் சென்று மருத்துவ உதவி பெற்று வந்த நிலையை மாற்றியமைக்க திட்டமிட்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81ஆம் ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களில் 79 ஊரக மருந்தகக் கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்



காக 30.517 இலட்சம் ரூபாய செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டம் தவிர குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழும் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. 1972-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஊரக சாலைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. 1500க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களை இணைக்கும் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டு மேற்படி திட்டம் முழுமையும் தன்னிறைவுத் திட்டத்திற்கே பயனுறும் வகையில் திட்டம் மேற்கொண்டு செயல்படுத்தப்பட்டது. இதன்படி 424 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு, தார் சாலைகளாக மாற்றியமைக்கும் பணி செயலாக்கப்படுகிறது.

இதைத் தவிர, பேருந்துகள் செல்லும் ஊராட்சி சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச்சாலைகள் மேம்பாடு செய்யும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1960-61ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1973-74ஆம் ஆண்டு முடிய சுமார் 12,500 கி.மீ. ஊராட்சி சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேற்படி திட்டத்தில் மேம்பாடு செய்யப்பட்டு அரசு சாலைகளாக நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையால் பராமரிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நிதி நிலை பற்றாக்குறை காரணமாக 1974-ஆம் ஆண்டு முதல் 1979ஆம் ஆண்டு முடிய மேற்படி திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் மேற்படி திட்டம் 1979-80ஆம் ஆண்டு செயல்படத் துவங்கி பன்மடங்கு வேகத்தில் செயல்பட்டு ரூ.600 இலட்சம் செலவில் 2510 கிலோ மீட்டர் நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு பராமரிப்புக்காக அரசு சாலைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. 1980-81-ம் ஆண்டிலும் 10கோடி ரூபாய் செலவில் மேலும் 3146 கி.மீ. நீள ஊராட்சிச் சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்ய அங்கீகரிக்கப்பட்டு அதில் 2000 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் 1980-81-ஆம் ஆண்டிலேயே மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

1981-82ஆம் ஆண்டு மீதமுள்ள 1146 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் 13 கோடி ரூபாய் செலவில் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1.4.1978 முதல் 31.3.1980 முடிய அபிவிருத்தி செய்யப்பட்ட 2257 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பேருந்துகள் செல்லும் சாலைகளும் 11.28 கோடி செலவில் மேம்பாடு செய்ய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது தன்னிறைவுத் திட்டம் செயல்படும் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் பேருந்துகள் செல்லும் சாலைகளுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. 1979-80-ல் இருந்து 1981-82 முடிய மேற்படி திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்படும் சாலையின் தொகுப்பு கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | பேருந்து செல்லும் சாலைகளின் நீளம் கி.மீ. | தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் வரும் சாலையின் நீளம்-கி.மீ. | (ஊராட்சி ஒன்றியங்கள்) |
|---|---|---|---|
| 1979—80 | 2,510 | 887 | (69 ,, ) |
| 1980—81 | 3,146 | 550 | (69 ,, ) |
| 1981—82 | 2,257* | 705 | (100 ,,, ) |

* அரசின் அங்கீகாரம் எதிர் பார்க்கப்படுகிறது.



மேற்படி திட்டங்களினால் முதல் கட்ட தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 49,74,639 மக்கள் பயனடைவர்.

| | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| 1. தன்னிறைவுத் திட்டத்தை செயல் படுத்த | 1,644 |
| 2. பேருந்து செல்லும் சாலைத் திட்டத் தொகை | 1,000 |
| 3. குறைந்த பட்ச தொகைத்திட்டம் | 600 |
| மொத்தம் ஒதுக்கப் பட்ட தொகை | 3,244 |


# தாகம் தீர்க்கும் பணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

* 1980-81ல் தன்னிறைவு திட்டத்தின் கீழ் 2208 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட ரூ 15 கோடியில் திட்டங்கள்!
* 1981-82ல் (நடப்பு நிதியாண்டில்) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 4407 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட ரூ 47 கோடியில் திட்டங்கள்!
* வறட்சியால் வாடிடும் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்திட ரூ 430.12 இலட்சம் செலவில் 2380 ஆழ் துளைக் கிணறுகள்!
* 1981-82ல் நகரக்குடிநீர்த் திட்டங்களுக்கும் வடிகால் திட்டங்களுக்கும் ரூ 15 கோடி நிதி ஒதுக்கீடு!

மேற்காணும் பணிகளை விரைந்து முடித்திட வாரியம் மிகுந்த முனைப்போடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.



'Ravi Arts' M.S.17

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
31, காமராசர் சாலை, சேப்பாக்கம்,
சென்னை- 600 005.



# அரசியல் சட்ட மேதை
# அம்பேத்கார் பிறந்த நாள் விழா

அரசியல் சட்டமேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு அரசின் சார்பில் 1981 ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது.

மகிழ்வூட்டும் நாயன இசைக்குப் பிறகு மாலை 6 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம், இ. அ. ப., அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் விழாத்தலைமை ஏற்றார். அவர் தன்னுடைய தலைமையுரையில் வரலாற்றுச் சிறப்புடைய பல நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டி, அரசியல் மேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களது சீரிய கருத்துக்களை, அந்தத் தனிப் பெருந்தலைவரின் தன்மான இயக்கக் கொள்கைகளை உணர்ச்சிமிகு அழகுதமிழில் தெளிவுபட எடுத்துக் கூறினார். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சிறந்த அரசியல் மேதை; வடமொழியில் சிறந்த புலமை பெற்றவர்; தனக்கென ஒரு சகாப்தத்தையே உருவாக்கிய தனிப் பெருந்தலைவர் என்றும் குறிப்பிட்டார். அம்பேத்கார் அவர்களின் சுயமரியாதை இயக்கம்தான் தமிழ்நாட்டில் அவரை அறிமுகப்படுத்தியது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''நானும், தந்தை பெரியார் அவர்களும் இரங்கூனில் 1952-ல் நடைபெற்ற புத்த மத மாநாட்டில் சந்தித்தோம். நான் அப்போது தந்தை பெரியார் அவர்களது அந்தரங்க செயலாளனாக இருந்தேன். அவருடன் உரையாடும் போதுதான் அவரது அறிவுத்திறன், நுண்மான் நுழைபுலம் புலப்பட்டது. டாக்டர் அம்பேத்காருக்குச் சமமாக இந்தியாவில் தந்தை பெரியாரைத் தவிர வேறு எவரையுமே கூறமுடியாது. தந்தை பெரியார் அவர்களின் 'குடியரசு' ஏடு டாக்டர் அம்பேத்கார் அவர்களது கொள்கைகளை, இலட்சியங்களைப் பரப்புகின்ற பணியைச் சீரிய முறையில்-அந்தக் காலத்திலேயே செய்து வந்தது.

டாக்டர் அம்பேத்கார் அவர்களது பிறந்த தின விழாவைக் கொண்டாடும் யோக்யதை இந்த அரசுக்குத்தான் உள்ளது என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். இந்தியாவில் முதன் முதலில் உயர்நீதிமன்றத்தில் ஒரு ஆதிதிராவிட குடிமகன் நீதிபதியாக நியமிக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். தற்போது அவர் உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றுகிறார். இப்படி ஒரு எழுச்சிமிக்க நிகழ்ச்சி தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் நடைபெறவில்லை. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் கொள்கையை, தாழ்த்தப்பட்டோருக்கு அவர் ஆற்றிய பணிகளை நம்மால் மறந்துவிட முடியாது.''

**அரசு அலுவலகங்களில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவப்படம்!**

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை தமிழ்நாடு அரசு அலுவலகங்களிலும், அரசுக் கட்டடங்களிலும் வைக்கலாம் என, தமிழக அரசு 24.10.80 நாளிட்ட அரசு ஆணை 2363ல், தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

தலைமையுரைக்குப் பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு ஜி. மூர்த்தி அவர்கள் உரையாற்றியபொழுது குறிப்பிட்டதாவது: ''இந்த நாட்டில் தோன்றி மறைந்த-வாழுகின்ற தலைவர்கள் அனைவருமே அண்ணல் அம்பேத்காரின் சிதறல்தான். தீண்டாமைக்கு மூலகருவாக உள்ள சாதி ஒழிய வேண்டுமென வீர முழக்கமிட்ட வீரத் திருமகன் அம்பேத்கார் அவர்கள்.''

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எஸ். விஜயசாரதி அவர்கள் விழாத் தொடக்க உரையாற்றினார். ஆதித்திராவிட மக்களுக்கு அரசு ஆற்றியுள்ள பணிகளை எடுத்து விளக்கி, 'தீண்டாமை எனும் கொடிய நோயினை தமிழகத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும், எல்லா சமுதாயத்தினரும் ஒன்றுபட்டு பாடுபட்டு விரட்டியடித்து தமிழகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும்' என அவர் குறிப்பிட்டார்.



அதன்பிறகு பேசிய திரு வலம்புரிஜான் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது; டாக்டர் அம்பேத்கார் அவர்கள் காலத்தால் உருவாக்கப்பட்ட தலைவர் மட்டும் அல்ல; காலத்தையே உருவாக்கிய தலைவர். அரசியல் விடுதலையைவிட, சமுதாய விடுதலைதான் முக்கியமென்று முழக்கமிட்ட மாபெரும் வீரர்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதிசீனிவாசன் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது, ''மேடையில் பேசுவது ஒன்றும் செயல்படுவதும் ஒன்றுமான நிலை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. உண்மையை, நியாயமானதை, நல்லதை நினைக்க வேண்டும்-பேச வேண்டும். அது மட்டுமல்லாமல், செயலிலும் காட்டவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் மனிதர்களாக இருக்கப் பாடுபட்டவர் அம்பேத்கார் ஆவார். அவரது கொள்கைகள்-இலட்சியங்கள் வெற்றியடைய நாம் தொடர்ந்து பாடுபடவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் திரு பி.எல்.பொன்னுசாமி, இ.அ.ப. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் அறிவுரைகளை விளக்கி, உலகத்துப் பேரறிஞர்களின் வரிசையில் 6-வது இடத்தைப் பெற்றவர் அம்பேத்கார் என்று குறிப்பிட்டார். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் இலட்சியக் கொள்கைகள் மூன்று ஆகும். அவற்றை ஆங்கிலத்தில் சொல்வதானால் educate, agitate, organise என்பவனவாகும். எல்லா மக்களும் கல்வி அறிவு பெறவேண்டும். கல்வி அறிவு பெற்றால்தான் மனிதன் மனிதனாக இருக்க முடியும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. ஏன் தாழ்த்தப்பட்டவர்களாக உள்ளோம், ஏன் இந்த அவலநிலை என்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் சிந்திக்க வேண்டும். கிளர்ச்சி என்றால் பலாத்காரம் அல்ல. வன்முறையிலே அல்ல; சிந்தனையிலே கிளர்ச்சி வேண்டும், எழுச்சி வேண்டுமென முழங்கியவர் டாக்டர் அம்பேத்கார்.

கல்வியறிவு, சிந்தனை மட்டும் போதாது. இவை கட்டுக் கோப்பான அமைப்பு ரீதியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென இலட்சியப்பாதை வகுத்துக் கொடுத்தவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்.

அடுத்து, தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு டி.கே. சீனிவாசன் அவர்கள் பேசுகையில், தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்னைஒரு கருணைப் பிரச்சினை அல்ல. அது ஒரு உரிமைப் பிரச்னை. எனவே, ஒரு நாட்டுப் பிரச்னையைப் போக்குவதற்காக அரும்பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஆவார். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு சமுதாயத்திற்காகப் போராடியவர் என்ற சிறு வட்டத்திற்குள் அடைத்துவிடாமல் நாட்டுப் பிரச்சினைக்காகப் போராடினார் என்பதை நாம் எடுத்துச் சொல்லியாகவேண்டும். தான் கொண்ட இலட்சியத்தைக் கடைசிவரை அவர் கைவிடவே இல்லை. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்குப் பதிலாக யான் பெற்ற துன்பம் மற்றவருக்கு வரக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் நகைச்சுவை ததும்ப, பேசுகையில் கேட்போரை சிரிக்க சிரிக்க வைத்து அதே சமயத்தில் சிந்திக்க வைத்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார். அம்பேத்காருடன் நான் நேரில் பழகியவன். அவர் ஒரு மாபெரும் அறிவுலக மேதை. ஆங்கிலப் புலமை, வடமொழிப் புலமையும் ஒருங்கே அமையப்பெற்றவர். அரசியல் சட்டத்தை உருவாக்கியவர். அவருடன் பல தடவை உரையாடியிருக்கிறேன். சாதியை ஒழிக்க அம்பேத்கார் அவர்கள் பாடுபட்டார். அவர் மட்டும் பாடுபடவில்லை. தந்தை பெரியார் அவர்களும் பாடுபட்டார். ஆனால் இன்றுவரை சாதி பிரச்னையை நம்மால் ஒழிக்க முடியவில்லை. நம் சமுதாயத்திலே சாதிப் பிரச்சினை இருந்து கொண்டே வருகிறது. படித்த மக்கள் ஒவ்வொருவரும் சமுதாயம் முன்னேறுவதற்கான செயல்முறைகளையுணர்ந்து



அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

''சாதி வித்தியாசத்தை வைத்துக் கொண்டு ஒரு நாடு எப்படி முன்னேற முடியும்? சாதி முறை இருக்கும் வரை இந்த நாடு முன்னேறவே முடியாது. யார் யாருடைய படத்தையோ வீட்டிலே மாட்டுகிறோம். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டும். எல்லாக் கொடுமைகளையும் விட சாதிக் கொடுமை மிகக் கொடுமையாகும். சாதியானது அறிவைக் கொல்கிறது. டாக்டர் அம்பேத்கார் போன்ற மாபெரும் மேதைகளையே சாதி என்ற கொடுமை ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியாமல் செய்துவிட்டது. இந்த சாதி இருக்கின்ற வரை நாடு எப்படி முன்னேற முடியும்?''

அடுத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ''தாழ்த்தப்பட்ட மக்கள் சலுகை பெற வருமான வரம்பு ரூ. 3,000 என்பதிலிருந்து ரூ. 10,000என்று மாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

செய்தி, மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே முடிந்தது.

—நிகழ்ச்சி தொகுப்பு
வ. சம்பந்தம்



ஓசூரிலுள்ள தாலி சாலைத் திட்டத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் திரு ஈ. எஸ். வெங்கடேசன், எம். எல். சி., அவர்களின் தலைமையில், ஒதுக்கீட்டுக் குழு 18-3-1981-ஆம் நாளன்று ஓசூரில் கூடி, வீடுகளை ஒதுக்கீடு செய்தது.

இத்திட்டமானது 11.19 ஏக்கர் நிலப்பரப்பில், 'ஹட்கோ'வின் நிதி உதவியைக் கொண்டு, ரூ. 43.0 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி அடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருவாயில் நலிந்த பிரிவினர்களுக்கு 6 வீடுகளும், குறைந்த வருமானம் உள்ள பிரிவினர்களுக்கு 93 வீடுகளும், நடுத்தர வருமானம் உள்ள பிரிவினர்களுக்கு 41 வீடுகளும், உயர் வருமானம் உள்ள பிரிவினர்களுக்கு 6 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் உயர் வருமானம் உள்ளவர்களுக்காக 8 மனைகளும் இத்திட்டப்பகுதியில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, ஓசூரில் கட்டப்படும் வீடுகளில் 50 சதவீதத்தை சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீதி உள்ள 50 சதவீத வீடுகளை மற்றும் மனைகளை, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச் சாதியினருக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும், உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கும், இராணுவ சிப்பந்திகளுக்கும், முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் முறையே 10 சதவீதம், 18.5 சதவீதம், 11 சதவீதம், 7.5 சதவீதம் 5 சதவீதம், 48 சதவீதம் என்ற அடிப்படையில் செய்யப்பட்டன.



# வெட்டப்பட்ட விரலை ஒட்டிடலாம் விரைவில்!

நவீன மருத்துவ உலகம் பல்வேறு வியப்புகளையும் சாதனைகளையும் இந்த நாட்களில் உருவாக்கி வருகிறது. கற்பனையில் வடித்தெடுக்கப்பட்ட செய்திகள்—கதைகளில் வருணிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்—கனவில்கூட எண்ணிப் பார்க்க இயலாத பல உண்மைகள் மருத்துவ உலகத்தின் அயராத தொண்டினால் நடைமுறைக்கு வந்துள்ளன. அந்த வரிசையில் சிறப்பிடம் பெறுவது பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை; அதிலும் குறிப்பாக மைக்ரோ அறுவைச் சிகிச்சை ஆகும். இதன் வாயிலாக வெட்டப்பட்ட விரலை ஒட்டலாம்; துண்டிக்கப்பட்ட கரத்தை இணைக்கலாம். சென்னை நகரில் ஸ்டான்லி மருத்துவ மனையில் இந்த அதிசயம் நடைபெறுகிறது—நடத்தப் பெறுகிறது.

விபத்தின் காரணமாக ஒருவரின் கைவிரல், கால்விரல் துண்டிக்கப்பட நேரலாம். அப்படித் துண்டிக்கப்பட்ட பின்னர், மருத்துவச் சிகிச்சை செய்து புண் ஆற்றப்பட்டாலும் கூட, ஊனமுற்றவராக—உறுப்புக் குறைவு உள்ளவராகத்தான் வாழ நேர்ந்தது—ஒரு காலத்தில்! ஆனால் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையும் மைக்ரோ அறுவைச் சிகிச்சையும் புதிய நம்பிக்கையை இந்த நாட்களில் அளித்து வருகின்றன. பட்ட மரம் துளிர்ப்பது போல, வெட்டுப்பட்ட விரலும் ஒட்டப்படுகிறது. செயற்கரிய இந்தச் செயலை ஸ்டான்லி மருத்துவ மனை சாதித்து வரலாற்றுப் பெருமை பெறுகிறது.

25 வயதுள்ள இளைஞர் ஒருவர் வலக்கரத்தின் பெருவிரல் துண்டிக்கப்பட்டு, மருத்துவ மனைக்கு வந்தவர் தக்க வகையில் மைக்ரோ அறுவைச்சிகிச்சை செய்ததன் மூலம் வெட்டப்பட்ட விரல் ஒட்டப்பட்டுள்ளது இழந்த விரலை அவர் திரும்பப் பெற்றிருக்கிறார். அந்த விரலை அவரால் தற்போது நீட்ட, மடக்க முடிகிறது.

மற்றோர் இளைஞர், 20 வயது அவரது வலது கரத்தின் உள்ளங்கை சரிபாதியாகத் துண்டிக்கப்பட்டு விட்டது—பணியின் போது ஏற்பட்டவிபத்தின் காரணமாக; சிகிச்சைக்கு ஸ்டான்லியை நோக்கி விரைந்தார். தக்கவகையில் சிகிச்சையளிக்கப்பட்டு உள்ளங்கை இணைக்கப்பட்டது. இந்திய நாட்டிலேயே இந்த வகையில் இது முதல் சாதனை எனச் சொல்லப்படுகிறது, ஏறக்குறைய 11 மணி நேரம் மைக்ரோ அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

மைக்ரோ அறுவைச் சிகிச்சை என்பது நுட்பமான சிகிச்சை முறையாகும். உடலின் மற்ற பாகங்களில் அறுவைச் சிகிச்சை செய்யப்படும்போது வெறுங் கண்களினால் பார்த்தே செய்து விடலாம். ஆனால் கால் விரல், கைவிரல் போன்ற பகுதிகளை இணைக்கும் சிகிச்சைக்கு வெறும் கண்கள் போதா. அந்தப் பகுதிகளில் பல நுண்ணிய நரம்புகள் உள்ளமையால், மைக்ரோஸ்கோப் என்னும் நுண்ணியல் கண்ணாடியின் துணை கொண்டு 0.8 மில்லி மீட்டரிலிருந்து 1 செ. மீ. அகலம் உள்ள இரத்தக் குழாய்களையும் நரம்புகளையும் கவனமாகப் பார்த்து அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

மைக்ரோ அறுவைச் சிகிச்சை மேல்நாடுகளிலும் சைனாவிலும் புதிய சாதனைகளையும் புதிய வரலாற்றையும் உருவாக்கியுள்ளது. நமது நாட்டில் இந்தச் சிகிச்சை முறை சமீப காலத்தில் தான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. என்றாலும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் சாதனைக்குரியதாகத் திகழ்கிறது. அதற்கு ஸ்டான்லி மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மற்றும் கரம் திருத்தியமைத்தல் துறைதான் முக்கிய காரணம்.

மைக்ரோ அறுவைச் சிகிச்சை செய்வதற்கு முறையான ஆய்வுக் கூடப் பயிற்சி தேவைப்படுகிறது. மிகுந்த பொறுமையும் இருக்க வேண்டும். தினமும் பன்னிரண்டு மணி நேரம் பாடுபடுவதற்குரிய மன ஒருமைப்பாடும் வேண்டும்.

கடந்த 2 ஆண்டுக் காலமாக இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறது ஸ்டான்லி மருத்துவமனை.



உள்ளங்கை வெட்டுப்பட்ட போது...



உள்ளங்கை இணைக்கப்பட்டுள்ள நிலை





...நாமு நோயினால் பாதிக்கப்பட்ட நரம்புகளையும் மைக்ரோ அறுவைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்துகிறது இந்தத்துறை. இந்த அரும்பணிக்கு உதவும் வகையில் இந்த நிலையத்திற்குத் தேவைப்படும் கருவிகளை அளித்ததுடன்; பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளது தமிழக அரசு. இதனால், அரசு மருத்துவ மனைகளில் மைக்ரோ அறுவைச் சிகிச்சையை வளர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்கிறது தமிழக அரசு.

வெட்டுப்பட்ட விரல்களையும், கரங்களையும், இணைப்பதற்கு உதவும் இந்தச் சிகிச்சை முறை எதிர்காலத்தில் பல்வேறு வகையான உறுப்புக்களின் சிகிச்சைகளுக்கும் உதவுவது உறுதி. உடலின் ஒரு பகுதியிலிருக்கும் தோல்நரம்பு, எலும்பு ஆகியவற்றை எடுத்து மறு பகுதியில் இடம்பெறச் செய்யும் சாதனையை இதனால் நிகழ்த்த முடியும். யானைக் கால் நோயின் காரணமாக வீக்கம் பெற்றிருக்கிறதசைப் பகுதியையும் நீக்குவதற்கு இந்தச் சிகிச்சை முறை பயன்படும். திருத்தி அமைக்கும் சிகிச்சை முறை எதிர்காலத்தில் மனித குலத்தின் இமாலயச் சாதனையாக விளங்கப் போகிறது.

விபத்துக்கு ஆளாகி விரல் அல்லது கரம் துண்டிக்கப்படுபவர்கள் இந்தச் சிகிச்சைக்காக மருத்துவ மனையை நாடி வருவதற்கு முன்னர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய செய்திகள் சில உள்ளன.

துண்டிக்கப்பட்ட பகுதியை நல்ல-சுத்தமான தண்ணீரால் கழுவி-சுத்தமான பாலிதீன் பைக்குள் போட்டு—பையின் வெளிப்புறத்தைச் சுற்றிலும் ஐஸ் கட்டிகளை வைக்க வேண்டும். ஐஸ் கட்டிகள் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. பாலிதீன் பையில் போட்டுக் கொண்டு வந்தால் போதுமானது.

துண்டிக்கப்பட்ட பகுதியில் எக்காரணம் கொண்டும் ஐஸ் கட்டிகளை நேரடியாக வைத்து விடக் கூடாது.

எழுது மை போன்ற திரவப் பொருள் எதையும் ஊற்றக்கூடாது.

கோணி போன்ற அழுக்குப் பொருள்களினாலோ பஞ்சு போன்றவற்றாலோ சுற்றக் கூடாது. பவுடர் எதையும் தூவக் கூடாது.

விபத்து நடைபெற்ற ஒரு மணி நேரத்திற்குள், துண்டிக்கப்பட்ட பகுதியுடன் மருத்துவ மனைக்கு விரைதல் வேண்டும். தாமதம் செய்யக் கூடாது. காலதாமதம் சிகிச்சைக்குரிய முழுப் பயனையும் தராது.

இவ்வாறு எச்சரிக்கையுடன் கொண்டு வரப்பட்டால் மருத்துவர்கள் தக்க வகையில் 8 மணி நேரத்திலிருந்து 11 மணி நேரம் வரைக்குள் மைக்ரோ அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள்.

வெட்டுப்பட்ட பகுதிகள் திருத்தம் செய்யப்பட்ட சில நாட்களுக்குள் அந்தப் பகுதியில் உணர்ச்சி தெரியாவிட்டாலும் நாளாக ஆக உணர்வு ஏற்படுகிறது. எலும்பு வளருகின்றது.

தற்சமயம் வாரத்திற்கு 2½ நாட்கள் மட்டும்தான் மைக்ரோ அறுவைச் சிகிச்சை, ஸ்டான்லி மருத்துவ மனையில் செய்யப்படுகிறது. விரைவில் அறுவைச் சிகிச்சைக்கெனப் புதிய பிரிவும்—புதிய அறுவை அரங்குகளும் உருவாக்கப்பட இருக்கின்றன.

கால், விரல், கைவிரல்கள் வெட்டுப்பட்ட பரிதாப மக்களுக்கு அவற்றை மீண்டும் இணைத்து வாழ்க்கையில் புதிய நம்பிக்கையைக் கொடுக்கும் பணியில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் பேராசிரியரும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மற்றும் கை அறுவைச் சிகிச்சைத் துறையின் தலைவருமான டாக்டர். ஆர். வெங்கடசாமி அரும்பாடு பட்டு வருகிறார்.

இனிவரும் உலகில் மைக்ரோ அறுவைச் சிகிச்சை பல்வேறு உறுப்புகளின் திருத்த அமைப்புக்கும் பயன்படும் என்பது உறுதி. அறுவைச் சிகிச்சைகளில் 50 சதவீதம் மைக்ரோ அறுவைச் சிகிச்சையின் வாயிலாக நிறைவேற்றப்படும் நிலை ஏற்படப் போவது திண்ணம்—அந்தச் சாதனைக்கு அமைதியானமுறையில்-ஸ்டான்லியின் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைத் துறை ஆற்றிவரும் அருந்தொண்டு துணை புரிகிறது.

-தமிழ்ப்பித்தன்


பெருவிரல் துண்டிக்கப்பட்ட நிலை


பெருவிரல் இணைக்கப்பட்டுள்ள நிலை

உடல் ஊனமுற்றோர் நலன் ஆண்டு

## வாழ்வு தரும்

# வருங்கால வைப்புநிதி அலுவலகம்

கண் பார்வையற்ற மூன்று பேரைக் காண்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். உருக்கம் மேலிடுகிறது; உள்ளம் பேதலிக்கிறது. தனக்குத் தானே வினாவெழுப்பி, விடையிறுத்துக் கொண்டு அமைதி காண்கிறார் அவர்:

''கண்ணிலார் இம்மூவர் மட்டுமா? எண்ணிலார்! எண்ணிலார் காதிலார்! காலிலார், கையிரார் எண்ணிலார்! உண்ணிலார் எண்ணிலார்! ஏதிருந்தும் உள்நிறை வில்லார் உலகத்தில் எண்ணிலார்! தப்பமுடியாத சாவுகள் மூப்பு நோய் எப்புறமும் உண்டன்றோ, மூப்போதும் துன்பன்றோ!...''

—புரட்சிக் கவிஞர் மட்டுமல்ல; இன்னும் பல பேரறிவாளர்களும் கூட உடல் ஊனமுற்றோரைக் கண்டு உள்ளம் ஊனப்பட்டது உண்டு!

சிறப்பாகப் பணி புரிந்தமைக்காக, குடியரசுத் தலைவரிடம் பரிசு பெற்ற செல்வி எம். வி. ஆர். கீதா.



### அனுதாபமும் ஆதரவும்!

ஊனமுற்றோர் நலன் ஆண்டான இந்த ஆண்டில் - இது பற்றிய அவர்களுடைய எழுத்துக்களை - சொற்பொழிவுகளை நினைவுகூர்வது நமது கடமை.

ஆனால் ஒன்று—

உடல் ஊனமுற்றோர் பால் நாமெல்லாம் அனுதாபம் காட்டுவது மட்டுமே அவர்களைக் காப்பாற்றிவிடாது; ஆதரவு காட்ட முன்வரவேண்டும். அதுதான் ஊனமுற்றோர்பால் உளப்பூர்வமாக நாம் காட்டும் பச்சாதாபத்திற்கு அடையாளமாகும்.

அதிலும் குறிப்பாக இந்த ஆண்டானது உடல் ஊனமுற்றோர் நலன் ஆண்டு என அறிவிக்கப்பட்டுள்ள காரணத்தாலே, பலரும் அவர்கள்பால் அன்பு காட்டிவரும் காட்சியைப் பரவலாகக் காணமுடிகிறது. இத்தகைய அன்பு நிரந்தரமானதோ இல்லையோ, சில அரசு அலுவலகங்கள், ஊனமுற்றோர் தம் நலனில் காட்டிவரும் அக்கறை நிரந்தரமானது.

சென்னையிலுள்ள வருங்கால வைப்புநிதி அலுவலகம் (Regional Provident Fund Office) இந்த வகையில் குறிப்பிடத் தக்கதாகத் திகழ்கிறது. உடல் ஊனமுற்றோர் இந்த அலுவலகத்தில் பெரிதும் ஆதரிக்கப்படுகிறார்கள் - அன்பு காட்டப்படுகிறார்கள். இத்தகைய பாசம், ஊனமுற்றோர் நலன் ஆண்டு இது என்பதாலே உண்டானதல்ல.

### முதன் முதலாக

1956 முதலே இங்கு, ஊனமுற்றோர் உள்ளப் பரிவோடு வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் அந்த வகையில் முதன் முதல் வேலையில் சேர்க்கப்பட்ட முதலாவது உடல் ஊனமுற்றவர் திருமதி என். சிவகாமு என்கிற பெண்மணி ஆவார். அவர் இப்போது வரிக் கட்டுப்பாட்டு கணக்கு அதிகாரி (Enforcement Officer) அளவுக்குப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்.



முதலாவதாகப் பணியேற்று முன்னேறிய திருமதி என். சிவகாமு.

கடைசியாக வேலையேற்ற (1.12.80) ஊனமுற்றவர் செல்வி ஜி. சாந்தகுமாரி.

எண்சான் உடம்பில் இருக்கின்ற அங்கமெலாம் சரியாக இருக்கின்றவர்களை விட, அங்கக் குறைவுடையோர் அதிசயிக்கத் தக்க விதத்தில் பணியாற்றி வருகிறார்கள் என்பதற்கு உதாரணம் போல் திகழ்கிறார் இந்த அலுவலகத்தில் பணிபுரியும் செல்வி எம்.வி.ஆர். கீதா. இதற்கான வெகுமதியாக, மத்திய சமூகநலத் துறை, இந்தியக் குடியரசுத் தலைவர் மூலம் ரூ. 500 அளித்துப் பாராட்டியது சென்ற ஆண்டில். இந்தியத் தலைநகராம் டில்லிக்கே சென்று அவர் இந்தப் பரிசைப் பெற, அரசே போக்குவரத்துச் செலவுகளை ஏற்றுக்கொண்டது.

**பி.எல்.ராஜேந்திரன்**





ஊனம் என்கிற எண்ணம் இன்றி வேலையில் கருத்தூன்றியுள்ள திருமதி வி. யசோதா, கே. கார்த்தியாயினி.

1975, 76, 77 ஆகிய மூன்று ஆண்டுகளில் மட்டும் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் 41 உடல் ஊனமுற்றோர் எழுத்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கெனப் பாராட்டி வட்டார வருங்கால வைப்பு நிதி அலுவலக ஆணையருக்கு மத்திய அரசின் தேசியப் பரிசாகக் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது

1978, 79, 80 ஆம் ஆண்டுகளில் மேலும் 20 உடல் ஊனமுற்றோர் எழுத்தர்களாக இவ்வலுவலகத்தில் நியமிக்கப்பட்டார்கள் இதற்கான பாராட்டாக 2·4·80 அன்று, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் வட்டார - வருங்கால வைப்பு நிதி அலுவலக ஆணையருக்கு மற்றுமோர் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது

ஆணையர் திரு எஸ்.எஸ். சாட்டர்ஜியின் இருபுறமும், அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும், அலுவலகப் பணியில் குறை வைக்காத பி. எஸ். பாலசுப்பிரமணியம், சி. சுந்தரமூர்த்தி.



### புதிதாக ஒருவர்

சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் உள்ள இந்த அலுவலகப் பிரிவுகள் அத்தனையிலுமாக வேலை பார்க்கும் சுமார் 1300 பேர்களில் இப்போது பணியாற்றிடும் இந்த 61 ஊனமுற்றோர் தவிர இருவிழியிலும் பார்வையிழந்த இன்னொரு பெண்மணிக்கு வேலை தருவதற்கான அனுமதியும் மேலிடத்தில் கோரிப்பெறப்பட்டிருப்பதாக வருங்காலவைப்புநிதி அலுவலக ஆணையர் எஸ். எஸ். சாட்டர்ஜி பெருமிதத்தோடு தெரிவித்தார்.

''ஒரு கண்ணில் பார்வையிழந்தவர்களால், கேட்கும் சக்தி இழந்தவர்களால், காலோ கையோ ஊனமானவர்களால் கூட அலுவலகப் பணி ஆற்றிவிட முடியும். இரு கண்களிலும் பார்வையற்றவரால் என்ன செய்ய முடியும்?'' என்று அவரை நாம் கேட்டோம்.

''அலுவலகத்திற்காக வாங்கப்பட்ட ஏராளமான ஒயர் பின்னல் பிரம்பு நாற்காலிகள் பழுதடைகிறபோது அவற்றைச் சரிப்படுத்த வெளியேதான் யாரிடமாவது தரவேண்டியிருக்கிறது. அதற்குப் பதில் இங்கேயே ஒருவரை நியமித்து விட்டால் அந்தச் சிரமம் மிச்சம்தானே? அந்த வேலையில் திறமையான ஒரு பெண்மணி கிடைத்தார். அவரைச் சேர்த்துக் கொண்டோம்''. என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார் திரு. சாட்டர்ஜி.

இந்த அலுவலகத்தில் பணியாற்றுகின்ற உடல் ஊனமுற்றோருக்கு மொத்த சம்பளத்தொகை போக, கூடுதல் தொகையாக ரூ. 35 வீதம் தரப்படுகிறது.

1977ல், உடல் ஊனமுற்றோர் உலகநாள் விழா தமிழகத்திலே கொண்டாடப்பட்டபோது, ஊனமுற்றோர்க்கு இந்த அலுவலகம் தொடர்ந்து காட்டி வருகின்ற பெரும் பரிவு கருதி, தமிழக அரசு நற்சான்றிதழ் வழங்கியது, அரசு தலைமைச் செயலாளர்மூலம்.

''மற்றவர்கள் கேலி செய்வார்களே என்ற அச்சத்தால் வீட்டுக்குள்ளேயே ஊனமுற்றவர்கள் முடங்கிக் கிடக்கத் தேவையில்லை. அதையெல்லாம் பெரிதுபடுத்தாமல் அவர்கள் வேலைக்கு வந்து விட்டால் வேறு யாரும் அவர்களுக்கு இணையில்லை!'' என்று கூறும் ஆணையர் திரு. சாட்டர்ஜி ''ஊனமுற்றோருக்கு வேலை தரும் எங்கள் எண்ணம் முற்றுப் பெற்றுவிடவில்லை - தொடரும்'' என்கிறார்.

1980ல், அதிக அளவில் ஊனமுற்றோரை வேலையில் அமர்த்தியமைக்காக, இந்த அலுவலகத்திற்கு 'நிம்கர் பரிசு' அண்மையில் தரப்பட்டது. இதனை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கினார்.

# குடிநீர் வழங்குதலில் தன்னிறைவு பெறுவதே எங்கள் சீரிய குறிக்கோள்!

**இரண்டு முக்கியத் துறைகளில் இரு பெரும் பணிகள்!**

சென்னை பெருநகர் பகுதியில் நோய்க் கிருமிகளற்ற தூய்மையான குடிநீர் வழங்குவது எங்கள் பொறுப்பு. இதில் தன்னிறைவு காணத் திட்டமிட்டு செயல்படுத்துவதையே எங்கள் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறோம்.

**குடிநீர் வழங்குதல் மட்டுமல்ல! கழிவுநீர் அகற்றுதலும் கூட!**

சுற்றுப்புறத் தூய்மை சுகாதாரத்தின் மேன்மை; இதைப் பேணிக்காக்க, கழிவுப் பொருட்களை அகற்றி அவைகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதும் எங்கள் பணியே. இதற்கு நாங்கள் நவீன உத்திகளைக் கையாளுகிறோம்.

நாங்கள் கடைப்பிடிக்கும் பயன்தரும் வழிமுறைகள் எங்கும் சுகவாழ்வு நிலவ அடிகோலுகிறது.

MADRAS METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD
METRO WATER
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்

**சென்னை பெருநகர்**
**குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம்,**
43-46, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.

## சென்னைக் குடிநீர்




# சட்டமன்றத்திலே...

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்குழு காஞ்சி மாநகரில் ரூ. 10 இலட்சம் செலவில் 1980-81ஆம் ஆண்டு நிதியாண்டில் ஒரு ஹோட்டல் சுற்றுலாமாளிகை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்து விரிவான கருத்துக்கள் அக்கழகத்தின் பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

* * *

தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

கண் பார்வையற்றவர்கள் மருத்துவ
மனை வேலை செய்யும் இடம் கல்விக் கூடம்
முதலிய இடங்களுக்குத் தங்கள் இல்லங்களி
லிருந்து பேருந்துகளில் இலவசமாக சென்று
வர இலவச பயண அனுமதிச் சீட்டுகள் திரு
வள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர
ஏனைய போக்குவரத்துக் கழகங்களால் 1979-
ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து வழங்கப்படு
கின்றன.

* * *

இம்மாநிலத்தில் தகுதிவாய்ந்த முதியோ
களுக்கு 1,51,224 நபர்களுக்கு உதவித்
தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்
ளது. மாவட்ட ஆட்சியாளர்களால் அனுமதி
வழங்கப்பட்டு தற்சமயம் 1,27,610 நபர்கள்
உதவித் தொகை பெறுகின்றனர். இதுதவிர
தகுதி வாய்ந்த அனைவரும் முதியோர் உத
வித்தொகை பெற வழிவகை செய்யும்
செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்
ளது.

* * *

அரசுப் புறம்போக்கு நிலங்கள் 1964 முதல் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்படை செய்யப்படுவதற்கு முன் தனிப்பட்டவர்களுக்கு மேற்படி புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் மீது வழங்கப்பட்ட 2சி பட்டாக்கள் வழக்கில் உள்ளன.

மறு ஒப்படை செய்யும் உத்தேசம் தற்போது இல்லை. எனினும் அவற்றின் மூலம் கிடைக்கும் வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது.

* * *

தமிழ்நாட்டில், சென்னை, கன்னியாகுமரி, பெரியார். நீலகிரி மாவட்டங்களைத் தவிர 12 மாவட்டங்களில் 1.6.1979 முதல் நிலப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டம் (நடப்பு காலத்திற்கிணைய வைக்கும் பதிவுத் திட்டம்) அமல்படுத்தப்பட்டு, அத்திட்டம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

* * *

தமிழ்நாட்டில் நீதிமன்றங்களில் குற்ற வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதக் காலத்திற்குள் அவ்வழக்குகளை விரைவாக முடிவு செய்வதற்காக சென்னை உயர்நீதிமன்றம் இம்மாநிலத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டுகளுக்கு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

* * *

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கிண்டி, வேளச்சேரி பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை வசதிக்கென ரூ. 106.46 இலட்ச மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட திட்டத்தை இவ்வாண்டு முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

* * *

பொதுத் துறையில் நிறுவ இருக்கும் செய்தித்தாள் மற்றும் காகித ஆலையை திருச்சி மாவட்டத்தில் புகளூரில் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* * *

மாவட்ட வேலைத் தேடித்தரும் நிறுவனங்களில் (District Employment Exchange) வேலைக்காக பெயரைப் பதிவு செய்து சுமார் பத்தாண்டுகளாகியும் இதுவரை வேலை வாய்ப்பு கிடைக்காமல் எண்ணற்ற இளைஞர்கள் அவதியுறுவதை நீக்க அரசு எடுத்துவரும் துரிதமான நடவடிக்கைகள்:

வேலை வாய்ப்பகங்களில் சுழல் செல்லுபடிப் பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்து பத்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 30.9.1980ல் கணக்கிட்ட



மொத்த எண்ணிக்கையில் 0.7 சதவீதமாகும். இவர்களுக்குப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. வேலை வாய்ப்பகங்களில் சுழல் (Rotation) முறைக்கு மற்றவர்களை போல் உட்படுத்தாமல் இதர நிபந்தனைகளாகிய வயது மற்றும் கல்வித் தகுதிகளை கொண்டிருப்பின் வேலைக்கான காலியிடங்களுக்கு இவர்கள் பெயர்களைப் பரிந்துரை செய்யப்படுகிறது.

2. இவர்கள் வேலைவாய்ப்பக அலுவலர்களிடம் தங்கள் பெயரைத் தகுதியான காலியிடங்களுக்கு உடனடியாகப் பரிந்துரை செய்ய முறையிடலாம்.

3. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து நீண்டகாலமாக வேலைவாய்ப்பிற்கு காத்திருக்கும் பதிவாளர்களுக்கு, பணியிலமர்த்தும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனிக்க ஒரு சிறப்புப் பதிவேடு பயன்படுத்தப்படுகிறது.

* * *

1980 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் 100 சதவிகிதம் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை 56. அவைகளில் அரசுப் பள்ளிகள் 20; தனியார் பள்ளிகள் 34; மீதமிரண்டு நகராட்சிப் பள்ளிகளாகும்.

* * *

அனைத்து நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கு பணிப்படி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

அனைத்திந்திய வழக்கறிஞர்கள் மன்றத்தின் இறுதி அறிக்கையைப் பொறுத்து தற்போதுள்ள 3 வருட பி.எல். சட்டப் படிப்பை மாற்றியமைப்பது பற்றி அரசு முடிவெடுக்கும்.

* * *

சிறைத் துறையிலிருந்து நன்னடத்தைப் பிரிவை பிரித்து அது தனித்துறையாக இயங்க வேண்டுமென்று தமிழ்நாடு சிறை நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. அப்பரிந்துரையின் மீது, உயர்நீதி மன்றம் மற்றும் சிறைத் துறைத் தலைவரிடமிருந்து தருவிக்கப்பெற்ற அறிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

* * *

மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், பரமக்குடி மற்றும் கடலாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 78 சிற்றூர்களுக்காக ஒரு கூட்டு குடிநீர்த் திட்டம் 1978ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு ஆக்கப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பொது மக்கள் ஆட்சேபம் செய்ததால் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



மருதையாற்றில் பெரம்பலூர் வட்டத்தில் நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது.

* * *

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் மடிக்கல் கிளைக்கால்வாய் வெட்டப்பட வேண்டியகோரிக்கைமீது அரசு நவம்பர் 1978ல் ரூ. 18.10 இலட்சம் அனுமதி அளித்தது. ஆனால், கேரள அரசுடன் இம்மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் கொடுப்பதற்குப் பதிலாக தற்போது வினாடிக்கு 50 விழுக்காடு (50 ) தண்ணீர்தான் கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து கொடுக்கிறது. மேலும் ஆயக்கட்டுதாரர்கள் போதிய தண்ணீர் கிடைக்காததால் தங்கள் நிலங்களை மேம்படுத்த முன்வரவில்லை. ஆகையால் இதுபற்றி மறு ஆய்வு செய்து, ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும் வரை இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

* * *

குமரி மாவட்டத்தில் பழங்குடி மக்களுக்கு வாளேற்றிவயல் என்னுமிடத்தில் கட்டியிருக்கும் பள்ளிக்கூடத்திற்குப் போதுமான ஆசிரியர்கள் இருக்கைகள் இல்லை என்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தேவையான விவரங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் நல இயக்குநர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளன. அவை இன்னமும் முழுமையாக வந்து சேரவில்லை. விவரங்கள் கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

* * *

தஞ்சாவூர் மாவட்டம் தில்லையாடி வள்ளியம்மை நகரில் கட்டப்பட்ட வீடுகள், பயன்பெறுவோர் குடியேறியதிலிருந்து ஒரு வருடத்தில் மழைக்காலத்தில் ஒழுகுவது உண்மையே. 1973-74ல் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையால் இந்த வீடுகள் பழுது பார்க்கப்பட்டன.

ஆதிதிராவிட மற்றும் ஆதிவாசிகள் நலத்துறை இயக்குநர் இவ்வீடுகளைப் பழுது பார்க்க தற்போது கருத்துரு ஒன்றினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

கூட்டுறவு மின்சார விநியோக அமைப்பு முறை என்ற நிலையை அமைக்க மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.



தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப்படுத்துதல், கீழ்பவானி பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல், கோதையாறு பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துதல், காவிரி டெல்டா சீரமைப்பு செய்தல் ஆகிய நான்கு திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன.

* * *

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோதையாறு பாசனத்திட்டம் முழுவதையும் நவீனப்படுத்தும் திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிந்த பிறகு, உலக வங்கியின் உதவி பெறுவது என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

* * *

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு-வடஆர்க்காடு கிராமங்களில் 5,400 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திட்டப்பகுதியில் தல எல்லை வேறுபாடு குறிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதில் 4092.33 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்கு உகந்தது என தீர்மானிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 120 இலட்சமாகும்.

* * *

இத்திட்டத்தில் இதுவரை (பிப்ரவரி 81) ரூபாய் 5.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 10 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் மற்றும் 400-300 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் ( Seasonal Labourers ) அளிக்கப்பட்டு வருகிறது. 1982ம் ஆண்டு முதல் கட்டமாக இத்திட்டத்தில் 10,000 டன் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் எல்லா வகையிலும் பூர்த்தியாகும் பொழுது 1.20000 டன் உப்பு உற்பத்தி செய்யும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஜிப்சம் ( Gvpsum ) போன்ற கனிமங்களும் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தரவேலை வாய்ப்பும், 1000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

* * *



குடியாத்தம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு தேவை புரிய கீழ்க்கண்ட மூன்று சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

1. குடியாத்தம் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்

2. வளத்தூர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம், வளத்தூர்.

3. பேரறிஞர் அண்ணா சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்.

முதற்கூறிய இரண்டு சங்கங்களும் இயங்கி வருகின்றன. மூன்றாவது சங்கம் விரைவில் செயற்படத் துவங்கும் மேற்குறிப்பிட்ட மூன்று சேவை சங்கங்களுக்கும் 300 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு சேவை புரிய இயலும்.

* * *

**1969**ஆம் வருடம் காஞ்சிபுரம் ஓரிக்கை தொழிற்பேட்டை 4 வாடகை தொழிற்கூடங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 4 தொழிற்கூடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் 10 சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் சிட்கோ நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன. உபயோகப்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றியமைக்க 'சிட்கோ' நிறுவனத்துக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

* * *

தொண்டி-மதுரை-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

* * *

திருச்சி மாவட்டத்தில் கரூரில், அமராவதி ஆற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணி மத்திய அரசால் அங்கீகரிப்பட்டு தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி 30.4.83 அன்று முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

* * *

ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி செவிலியர் பயிற்சி அரசுப் பணி ஆகியவைகளில் சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரு 18 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


ஒவ்வொரு மின் வழங்கு கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு ஏறத்தாழ ரூ. 150 இலட்சம் ஆரம்ப மூலதனம் தேவைப்படும்.

* * *

முதலில் ஒரு கிராமிய மின் வழங்கு கூட்டுறவுச் சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தில் 1.7.80ல் இருந்து துவக்கப்பட்டு செயல்படுகிறது. இரண்டாவது கிராமிய மின் வழங்கு கூட்டுறவு சங்கத்தை புதுக்கோட்டையில் உள்ள திருமயம் என்னும் ஊரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* * *

நெல்லை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. திருநெல்வேலியில் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படுகிறது.

* * *

பழனி தேவஸ்தானத்தால் நடத்தப்படும் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு அரசு மான்யம் வழங்க பரிசீலித்து வருகிறது.

* * *

டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கலந்து கொண்டார். அதுபோது மாநாட்டில் எடுக்கப்பட்ட 49 முடிவுகளில் முக்கிய முடிவுகள் பின்வருமாறு:

1. 1947ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தில் ''பொருத்தமான அரசு'', ''தொழில்'', ''சம்பளம்'', ''தொழிலாளர்'' போன்ற சொற்களுக்கான பொருள் விளக்கங்களைத் திருத்துதல் அல்லது விரிவுபடுத்துதல், தனிப்பட்ட தொழிலாளி தொழில் நீதிமன்றத்தில் நேரிடையாக அரசின் தலையீடு இன்றி வழக்குத் தொடர வழி செய்தல், சமரச அலுவலர்கட்கு அதிக அதிகாரங்கள் அளித்தல், தொழிற் தகராறுகளில் துரிதமாக முடிவு காண கால நிர்ணயம் செய்தல். தொழில் நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புக்களை அமல்படுத்த அவைகளுக்கு அதிகாரம் அளித்தல் போன்றவற்றிற்காகத் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

2. 1946ஆம் ஆண்டு தொழில் நிலைஆணைகள் சட்டத்தில், பணியாளர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் காலத்தில் வாழ்க்கைப்படி வழங்க வழி செய்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.



3. 1926ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற் சங்கங்களைப் பதிவு செய்ய நிறுவனத்தில் உள்ளவர்களில் குறைந்தபட்சம் 10 சதவீதமாவது உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்தல், குறைந்தபட்ச சந்தாவினை ஒரு ரூபாயாக உயர்த்துதல், விவசாய கிராமப்புறத் தொழிலாளர்கட்கும் சட்டத்தினைப் பொருந்தச் செய்தல், நிர்வாகம் பொறுப்பில் வெளியார்கள் 25 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று விதித்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.

4. பல்வேறு சம்பளக் குழுக்களின் பரிந்துரைகளை அமல்படுத்தி மைய அரசு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும்.

5. 1948ம் ஆண்டு குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தில், அடிக்கடி சம்பள விகிதங்களை மாற்றி அமைத்தல் போன்றவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்

6. இதேபோல் ஊதியத் கொடைச் சட்டம் பணியாளர் வைப்பு நிதிச் சட்டம், பணியாளர் மாநில காப்புறுதிச் சட்டம் முதலிய சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

7. மேலும் தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு, வீட்டு வசதித் திட்டம் பாதுகாப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல் போன்ற பல்வேறு பொருள்களை பற்றியும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

கொல்லிமலையில் ஓடும் ஐந்தாறு ஆகாச நீர் வீழ்ச்சியில் மின்சாரம் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இப்பொழுதுள்ள விதிமுறைகளின்படி ரூ.10- ம் அதற்குள்ளும் நிலவரி செலுத்துவோர் தீ விபத்தால் பாதிக்கப்பட்டு, அவர்கள் வீடுகளைத் திரும்பக் கட்டிக்கொள்ள முடியாத அளவு ஏழையாக இருந்தால் நிதி உதவி பெற முடியும். ரூ. 10-க்கு மேல் நிலவரி செலுத்தும் நபர்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்களின் ஏழ்மை நிலை, சேதத்தின் அளவு, சம்பந்தப்பட்ட கிராமம் அல்லது வட்டத்தில் உள்ள பாதகமான பருவநிலை-ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி தனிவகையாக, நிதியுதவி அனுமதிக்கவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் மருத்துவ மனை ரூ 15 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 8.1.1981 முதல் செயல்படத்தொடங்கியுள்ளது.

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற 6.2.81ல் அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புதிதாக ஐந்து பாலிடெக்னிக்குகள் துவக்கலாமென்று தொழில் நுட்ப கல்வி வாரியம் தமிழக அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

பட்டுக்கோட்டை-அரசினர்பாலிடெக்னிக்
திருச்சி- நாராயணசாமி அய்யர் அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.
கோவை- குன்னியமுத்தூர்; வி.எல்.வி. நாயுடு அறக்கட்டளை பாலிடெக்னிக்.
சேலம்- திரு. சௌடேஸ்வரி மகாஜன அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.
சேலம்- குமாரபாளையம்: ஜே.கே. ரங்கம்மாள் அறக்கட்டளை பாலிடெக்னிக்.
மதுரை- சிலைமான்: ருக்மணி அறக்கட்டளை பாலிடெக்னிக்.

* * *

வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள அரும்பருதி என்னும் கிராமத்தில் வசிக்கும் 70 நரிக்குறவர் குடும்பங்களுக்கு, பாசன கிணறுகள் தோண்டுவதற்கு சென்னை, பிற்பட்டோர் நல இயக்குநர் அனுப்பிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்குடும்பங்களில் பலவற்றிற்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையிலுள்ளது.

* * *

பிற்பட்ட வகுப்பினருள் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் சேருவதற்குத் தனியாக ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் ஒதுக்கீடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்பட்டால், ஒவ்வொரு மாவட்டத்திலும், தனித்தனி போக்குவரத்துக் கழகங்களை அமைக்கலாம் என்ற பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதன் பேரில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* * *

கும்பகோணத்தில் சாலை ஓர தங்கும் விடுதி ( Motel ) அமைப்பது பற்றிய திட்டம் ஒன்று தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

* * *

திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் அருள்மிகு நாறும்பு நாதசுவாமி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் செய்ய ரூ. 1,16,500 மற்றும் ரூ. 1,10,00 மதிப்பீட்டில் இரண்டு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் மேல் தளம் பழுது பார்த்தால் வேலையின் ஒரு பகுதி மட்டும் நடந்துள்ளது.



மாமல்லபுரத்தில் ஒலி-ஒளி காட்சி அமைப்பது பற்றிய திட்டங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு பரிசீலித்து அனுப்பிய பின் முடிவு எடுக்கப்படும்.

* * *

பாவலர் செய்குத்தம்பியின் நினைவாக நாகர்கோவிலை அடுத்த கோட்டாறில் நினைவு மண்டபம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

துறையூர் அரசினர் மருத்துவமனையை மேலும் 24 படுக்கைகள் கொண்டதாக விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்ட மதிப்பீடு ரூபாய் 2.05 இலட்சம்

* * *

சண்முகாநதி நீர்மின் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மைய அரசு செப்டம்பரில் 1980ல் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

* * *

முதல் நிலை. தமிழ் ஆசிரியராகத் தன் தகுதியை உயர்த்திக் கொண்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்க அரசு பரிசீலித்து வருகின்றது.

* * *

பாலாற்றுப் படுகையில் பழைய சீவரத்துக்கும் வாலாஜாபாத்துக்கும் அருகில் உள்ள இரண்டு நிலையங்களிலிருந்து நீர் எடுத்து ஆலந்தூர் பல்லாவரம் மற்றும் வழியிலுள்ள ஊர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* * *

தற்போது உலக வங்கி உதவி பெற்று தமிழ்நாட்டில் பெரியாறு-வைகைப் பாசனத் திட்டம் ஒன்றுதான் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.



அட்டைப் படக் கட்டுரை

# தஞ்சை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம்



கிராமங்கள் ஊர்ந்து ஊர்ந்து ஊர்களாயின; ஊர்கள் நகர்ந்து நகர்ந்து நகரங்களாயின; நகரங்கள் படர்ந்து படர்ந்து பட்டினங்களாயின என்பார்கள். எது எவ்வாறானாலும், எல்லாவற்றுக்கும் அடிப்படை கிராமங்களே!

கிராமங்களின் வளர்ச்சியும் வளமுமே நம்நாட்டு நகரங்களிலும் பட்டினங்களிலும் பிரதிபலிக்கின்றன. கிராமத் தாயின் பாசமும் பராமரிப்புமே நகரம்-பட்டினம் ஆகிய குழந்தைகளின் வலிவுக்கும் நிமிர்வுக்கும் முழுமுதற் காரணங்களாகின்றன.

இவ்வளவுஅருமை பெருமைக்கு உரிய கிராமங்கள் தன்னைப் பொறுத்தமட்டிலே நிறைவு பெற்றிட வேண்டாமா?

இந்தக் கேள்விக்கு விடைபோல் பிறந்ததுதான் 'தன்னிறைவுத் திட்டம்'!

தமிழக அரசால் பெரும் சிந்தனைக்குப் பின்னாலே வகுக்கப்பட்டு, அனைத்து மாவட்டத்தையும் சேர்ந்த பலவீனமான கிராமங்கள் தொகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும் சிறப்பான திட்டமிது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களையும் இத்திட்டத்தின் கீழ் இணைத்திட எண்ணமிருந்தாலும், அரசின் பொருளாதார நிலை அதற்கு இடம் தரவில்லை.

எனவே, உடனடியாகக் கவனிக்க வேண்டிய கிராமங்கள் எனத் தன்னிறைவுத் திட்டத்தின் முதற்கட்டமாக, 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1980-81ஆம் ஆண்டின் குறிப்பிட்ட காலக் கெடுவில் அந்த ஒன்றியங்களிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னாலே 1981-82ஆம் ஆண்டுப் பணிகளுக்கான இரண்டாவது கட்டமாகச் 150 ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தெளிவுபடுத்தப் படவிருக்கின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை விட- இன்னபிற சமுதாய நலத் திட்டங்களைவிட இந்தத் தன்னிறைவுத் திட்டம் உயரியதாக விளங்குவதாகும்.

குடிநீர் வசதிபெறாத நிலையில் இன்றுமுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதரல்..

இணைப்புச் சாலைகள் அமைத்தல்.....

சிறு பாலங்களைக் கட்டுதல்...

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இடுகாட்டுப் பாதையை வசதியுடையதாக்கித் தரல்...

கல்விக் கண் திறந்திடப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்....

தாய்சேய் நல விடுதிகளைக் கட்டித் தரல்...

ஊரக மருந்தகங்கள் உருவாக்கித்தரல்......

சிறுபாசனத் திட்டங்களை மேம்படுத்தல்....

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி செய்து தருதல்.....

—ஆகிய ஒன்பது திட்டங்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் உட்பிரிவுகளாகும். நவரத்தினங்களாகத் திகழும் இத் திட்டங்கள் இம்மாதத்தோடு முதற் கட்டப் பணிகளாக ஏறத்தாழ எல்லா ஒன்றியங்களிலும் நிறைவேறுகின்றன.

அப்படிப்பட்ட அதிவேகச் செயற்பாட்டு ஒன்றியங்கள் உள்ள மாவட்டங்களும், தமிழகத்தின் மைய மாவட்டங்களுமான தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி ஆகிய இரு மாவட்டங்களில் - அண்மையில் - தன்னிறைவுத் திட்ட நிறைவேற்றத்தை நேரில் காணும் சுற்றுப் பயணம் ஒன்று மேற்கொண்டோம்.

அந்த ஏழு இனிய நாட்களின் பின்னாலே எங்கள் நெஞ்சம் நினைத்தது இது தான் -''தமிழகத்தின் அத்தனை மாவட்டங்களிலும் இவ்வகையிலான ஏற்றமும் சுறுசுறுப்பும் பரவலாக உண்டாகுமேயானால், தமிழகத்துக்

இல. ராமச்சந்திரன்

## தஞ்சை மாவட்டத்தில்

இத்திட்டத்தால் பயன்பெறும் கிராமங்களின் எண்ணிக்கை : 261.

மக்கட் தொகை : 3.94 இலட்சம்

பயன்பெறும் அரிசனக் குடியிருப்புகளின் மக்கட்தொகை : 1.32 இலட்சம்

திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ 515.25 இலட்சம்

செலவிடப்பட்ட தொகை ரூ.371.47 இலட்சம்

அரசு மான்யம் ரூ 268.58 இலட்சம்

ஊராட்சி ஒன்றியங்களின் பங்குத் தொகை : 102.89 இலட்சம்

குத் தமிழகம்தான் இணை என்கிற நிலைதான் இருக்குமே அல்லாமல் வேறெந்த மாநிலமும் ஈடுதர முடியாது!''

### தஞ்சை மாவட்டம்

தஞ்சை மாவட்டத்தில் -பூதலூர், கீழ்வேளூர், குத்தாலம், கோட்டூர், திருத்துறைப் பூண்டி ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் முதற் கட்டப் பணி நிறைவேற்றத்தக்க ஒன்றியங்களாக அரசால் தேர்ந்தெடுத்து அறிவிக்கப்பட்டன.

'பூவிரி பொழில் சூழ் காவிரி' பாயும் தஞ்சை என்று கூறப்பட்டாலும் கோடை தலை தூக்கும் நாட்களில் தஞ்சையின் மேற்குப் பகுதி ஏறத்தாழ வறட்சிப் பிரதேசமாகவே மாறிவிடும் என்பது யாராலும் மறுக்க முடியாதது. 'வான்பொய்ப்பினும் தான்பொய்யாக் காவிரி'க்குக் கரிகாற் பெருவளத்தான் கல்லணை கட்டியது இந்தப் பகுதியிலே தான்!

என்ன இருந்து என்ன?

மேற்குத் தஞ்சைப் பகுதி வறண்ட கண்டமாகவே காட்சி தருகிற இந்த வேளையில், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் தளர்வின்றி நிறைவேற்றப்பட்டுள்ள வியப்பினைக் கண்டோம்.

கீழ்வேளூர், குத்தாலம், கோட்டூர், திருத்துறைப் பூண்டி ஆகிய மற்ற ஒன்றியங்களோ தஞ்சைக்குக் கிழக்குப் பகுதியிலே அமைந்துள்ளவைகளாகும். இங்கெல்லாம் அத்தனை வறட்சியில்லை.

### பூதலூர்

அவற்றுள்சில ஒன்றியங்களைப் பார்வையிட எண்ணி, முதலாவதாகப் பூதலூர் ஒன்றியத்திற்குச் செல்கிறோம்.

''தமிழகத்திலேயே சிறந்த ஊராட்சி ஒன்றியம் என்பதற்கான பரிசு பெற்ற ஒன்றியம் எங்களுடையது'' என்று பெருமையோடு சொல்லிக் கொண்ட வட்டார வளர்ச்சி அதிகாரி திரு எம். சிவசண்முகம்-சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்கியமைக்காக, கதர் விற்பனையில் மேம்பட்டு நின்றதற்காக என்று பல்வேறு நற்பணிகளுக்காகப் பூதலூர் ஊராட்சி ஒன்றியம் பெற்ற பரிசுகளையும் நற்சான்றிதழ்களையும் நமக்குக் காட்டிவிட்டு, கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. எஸ். முருகேசன் அவர்களோடு-தமது ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டப்பணிகள் பற்றிய விவரங்களைத் தங்குதடையின்றி அடுக்கடுக்காக நமக்குத் தெரிவிக்கிறார்.

மொத்தம் 39 பாடசாலைகள் உள்ள இந்த ஒன்றியத்தில், தன்னிறைவுத்திட்டத்தின்கீழ் துருசுப்பட்டியில் ஒரு பள்ளிக் கட்டிடமும் மாரனேரியில் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.

அரிசனக் குடியிருப்புக்களிலிருந்து இடுகாட்டுக்கான பாதைகள் 35 அமைக்கப்பட்டிருக்கின்றன.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 14 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஐயனாபுரம், இளங்காடு, சோழகம்பட்டி, திருக்காட்டுப் பள்ளி ஆகிய நான்கு ஊர்களில் தாய்சேய் நலவிடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

சுமார் பதினோராயிரம் பேர் பயன்பெறும் விதத்தில், மாரனேரியில் ஒரு சிறு மருந்தகமும் பூதலூரில் ஓர் ஊராட்சி ஒன்றியக் கட்டடமும் உருவாக்கப்பட்டுள்ளன.

148 சிறு மதகுகளும், 3பெரிய பாலங்களும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழே பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 50 கிலோ மீட்டர் தூர அளவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவை தவிர, பூதலூரிலேயே ரூ 7,500 செலவில் பெண்கள் கழிப்பிடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

பூதலூர் ஒன்றியத்தில், சோழகம்பட்டி கிராமச் சாலையில் உள்ள ஒரு குளத்திற்குத் தடுப்புச் சுவரே எழுப்பியிருக்கிறார்கள் தன்னிறைவுத் திட்டக்கின்?மே!

**மாரனேரி பாடசாலை அன்றும்**



இந்த ஒன்றியத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் கோயிலடி ஊராட்சியில் உள்ள சுக்காம்பார் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஆறு தெருக்களுக்குக் குழாய் இணைப்பு தரப்பட்டுள்ளது.

கொள்ளிடக் கரை ஊராளையும், இந்தக் கிராம மக்கள்-தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் செய்துதரப்பட்டுள்ள இந்தக் குடிநீர்வசதிக்காக அரசை வாயாரப் புகழ்கிறார்கள். இப்படியோர் அரிய பணிசெய்ய நேர்ந்தமைக்காக அதிகாரிகளெல்லாம் பெருமகிழ்ச்சி கொள்கிறார்கள் அங்கே.

பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கான தன்னிறைவுத் திட்ட வேலைகளின் திட்ட மதிப்பீடு ரூ. 51.65 இலட்சமாகும். தன்னிறைவுத் திட்டத்திற்காகவும் வேலைக்கு உணவு திட்டத்திற்காகவும் தரப்பட்ட அரசு மான்யம் ரூ. 27.82 இலட்சம். பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தின் செலவுப் பங்கு ரூ. 21.18 இலட்சம். கூடுதல் செலவோ ரு. 49 இலட்சம். இரண்டு இலட்சம் ரூபாய் திட்டத்தில் பால வேலைகள் நடந்து முடியவிருக்கின்றன.

### கீழ்வேளூர்

தன்னிறைவுத் திட்டத்தின் அத்தனைக் கூறுகளும், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திலும் தடம் பதித்துள்ளன. இயற்கை நீரூற்று ஒன்றினாலே மட்டுமல்ல; இத்திட்டத்தினாலும் இந்த ஒன்றியம் புதுப்பொலிவு பெற்று விளங்குவதை நாம் காண்கிறோம்.

சில திட்ட நிறைவேற்றங்களை நாமே நேரில் போய்ப் பார்க்கிறோம்.

முக்கியச் சாலைக்கும் ஜீவா நகருக்கும் இடையே இந்த ஒன்றியத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இணைப்புச் சாலை போட்டிருக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள அந்தச் சாலை 3 மீட்டர் அகலத்தில் பத்தாயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திருக்கண்ணங்குடியில் - கீழ்வேளூர், ஆளியூர் வழியே செல்லும் இணைப்புச் சாலை ஒன்றையும் சொட்டாள் வண்ணம் கூத்தூர் செல்லும் ஒரு கிலோமீட்டர் தூர கப்பிச் சாலையையும் நாம் பார்வையிடுகிறோம்.

இரும்புக்கண்ணியில் உள்ள குடிசைகளில் 3,459க்கு 'குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்'தின்கீழ் விளக்குப் போட்டிருக்கிறார்கள். இதற்காகவும், தன்னிறைவுத்திட்டத்தின் மூலம் பெரும்பலன் பெற நேர்ந்தமைக்காகவும் இந்த ஊராட்சி ஒன்றிய மக்கள் உள்ளம் பூரித்திருக்கிறார்கள்!

### திருத்துறைப்பூண்டி

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு பா. இராமச்சந்திரன், தம்முடைய ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு பணிகளும் பற்றி புள்ளிவிவரங்களோடும்-அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றிய பூரிப்போடும் நமக்குத் தெரிவித்தார்.

''1979-80ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக எங்கள் ஒன்றியத்தில் 28 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. 75 சதவீதத்திற்கும் மேல் பிற்படுத்தப்பட்ட மக்களே வாழும் இந்த வட்டாரம் சுமார் 10 இலட்சம் ரூபாய் உபரி நிதியுடன் செயல்பட்டு வந்தது. தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒன்றியப் பங்குத் தொகை ரூ. 18.45இலட்சம் தேவைப்பட்டதால் அரசிடமிருந்து 8 சதவீத வட்டி அடிப்படையில் ரூ 15 இலட்சம் கடனாகப் பெற்று இதை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறோம். இந்தக் கடனை ஐந்தாண்டுகளில்திருப்பித்தந்து விடுவோம்' என்று பெரும் நம்பிக்கையோடு தெரிவித்தார் அவர்.

ஒன்றியத்தைப் பார்வையிடச் செல்கிறோம் நாம்.

பள்ளிக்கூடக் கட்டிடத்தைப் பொறுத்து இந்த வட்டாரம் முன்பே தன்னிறைவை எட்டியுள்ளதால் இத்திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 196 அரிசனக் குடியிருப்புகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மின் வசதியளிக்கப்பட்டு, மின்னொளியிலே திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

158 குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 86 குடியிருப்புகளுக்கு, சுமார் 23.38 இலட்சத்தில் 120 இணைப்புச்சாலைகள் போடப்பட்டுள்ளன. 86 சிறுபாலங்கள், தடுப்புச் சுவர்கள், சருக்கைகள் ஆகியவைகளும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழே கட்டப்பட்டுள்ளன.

25 அரிசனக்குடியிருப்புகளுக்கு மொத்தம் 22 கிலோமீட்டர் அளவில் மயான சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராம மருந்தகக் கட்டடமொன்று 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு தாய்சேய் நல விடுதிகளும், கிராம மருந்தகமும் இரண்டு மகளிர் கழிவறைகளும் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன.

**மாரனேரி பாடசாலை இன்றும்**



ராய நல்லூரில் ஊராட்சி மன்றக் கட்டடமொன்று கட்டியிருக்கிறார்கள். ராயநல்லூரில் இதற்கு இடம் கொடுத்து உதவியிருக்கிறார் திரு இராமநாதன் என்பார் ''இந்த 13 சென்ட் நிலத்தை, ஊருக்கு உதவும் நல்ல நோக்கோடுதான் தந்திருக்கிறேனே தவிர, இதனால் எனக்கொன்றும் பெரிய லாபமோ பாதிப்போ இல்லை'' என்றார் அவர்.

## முயற்சியே இல்லாமல், ஆச்சரியகரமாக, சிறு சேமிப்பு விரைவிலேயே கணிசமான தொகையாக உருவெடுக்கிறது !

### அஞ்சலக டெப்பாசிட் திட்டத்தின் மூலம்

தனிப்பட்டவர்களுக்கும் சாதாரண வருவாயுள்ள குடும்பங்களுக்கும் ஒரு லட்சியத் திட்டம்; சிறு சேமிப்புக்களை மொத்தத் தொகையாக்குவதற்குச் சுலபமானத் திட்டம்.

*பயனுள்ளது*

துவக்க எளியது, எளிய நடைமுறை கொண்டது. பெரும் பயன் அளிப்பது. ஆண்டுக்கு 10.5% கூட்டு வட்டி அளிக்கக் கூடியது. இத்திட்டத்தின் உள்ளடக்கமான ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் திட்டம், குறைந்த தொகையில் சேமிப்பவர்களுக்கு இரட்டைக் கவர்ச்சியை அளிக்கிறது.

*தொல்லையற்றது*

ரூ. 5 அல்லது அதனுல் பெருக்கவல்லதொரு தொகையைச் செலுத்தி அருகிலுள்ள அஞ்சலகத்தில் ஐந்து வருட ரெக்கரிங் டெப்பாஸிட் கணக்கைத் துவக்குங்கள். ஒவ்வொரு மாதமும் ஒரே சீரான தொகையைச் செலுத்தி வாருங்கள். இதற்குக் கூட நீங்கள் சிரமப்படத் தேவை இல்லை. விரும்பினுல் மகிலாப் பிரதான் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வந்து டெப்பாஸிட் தொகையை இலவசமாகச் சேகரித்துச் செல்லுவார். நீங்கள் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் சம்பள தின சேமிப்புத் திட்டத்தில் சேருங்கள். உங்களது சேமிப்புக் கணக்கிலிருந்தோ அல்லது உங்களுக்கு டைம்டெப்பாஸிட் கணக்கிருந்தால் அதிலிருந்தோ உங்களது அஞ்சலக ரெக்கரிங் டெப்பாஸிட்டிற்கு தேவையான பணத்தை மாற்றுமாறு, போஸ்ட்மாஸ்டருக்கு நிரந்தரமான உத்தரவு கொடுங்கள்.

*தேவையிருந்தால்*

கணக்குத் துவங்கி ஒரு வருடம் முடிந்த பின்னர் நிலுவையிலிருக்கும் பணத்தில், ஐம்பது சதவீதம் வரையில் ஒரு முறை எடுக்க அனுமதியுண்டு.

செலுத்தத் தவறிய தவணைகளை சிறியதொரு கட்டணத்துடன் செலுத்தலாம். பணம் கட்டாமல் நின்று போன கணக்கை மீண்டும் துவக்க வேறு வழிகளும் இருக்கின்றன.

*இவற்றைக் கவனியுங்கள்*

அஞ்சலக ரெக்கரிங் டெப்பாஸிட் கணக்கில் ரூ. 5, 10, 15 மற்றும் 20ஐ கட்டும், 15லிருந்து 53 வயதிற்கிடையிலானவர்களுக்கு ஒப்பற்ற உபரி பயன் ஒன்றும் உண்டு.

ஒரு சமூக பந்தோபஸ்து நடவடிக்கையாக, சிறு சேமிப்பாளர்களுக்கு, பிரிமியம் கட்டாமலேயே ஆயுள் இன்சூரன்ஸ் பயனை அளிக்கும் இந்த திட்டத்திற்கு, பாதுகாப்புக் கொண்ட சேமிப்புத் திட்டம் என்பது மறு பெயராகும்.

கணக்குத் துவங்கியவர் மரணமுறும் பட்சத்தில், வாரிசு அல்லது சட்டப்பூர்வமான வாரிசுக்கு கணக்கின் முதிர்வ மதிப்புத் தொகை கிடைக்கும். இதற்கு, 24 மாதங்கள் கணக்கில் பணம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும், என்ற ஒரு நிபந்தனை மட்டுமே உண்டு.

---

மேற்கொண்டு விவரங்களுக்கு தயவு செய்து கீழ்க்காணும் இடங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் :

* அருகிலுள்ள அஞ்சலகம் அல்லது
* மாவட்ட சேமிப்பு அதிகாரி, அல்லது
* உங்கள் மாநிலத்தின் சிறு சேமிப்பு டைரக்டரேட் அல்லது
* பிராந்திய அலுவலகம், தேசிய சிறு சேமிப்பு நிறுவனம் அல்லது

இந்த முகவரிக்கு எழுதுங்கள்:
**நேஷனல் சேவிங்ஸ் ஆர்கனைசேஷன்,**
**12, ஸெமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.**

டி.ஏ.வி.பி. 80/286/427


# தன்னிறைவுத் திட்டச் சாதனைகள்



## பி. ஏ. ஜெயவேலு


இணை இயக்குநர்
ஊரக வளர்ச்சி இயக்ககம்


ஊர்ப்புறங்களின் வளர்ச்சிக்கென செயல்படுத்தப்பட்ட சமுதாய நலத் திட்டமானது, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, ஊரகத் தொழில்களின் மேம்பாடு, ஊர்ப்புற மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்துதல் போன்ற துறைகளில் நல்ல பலனளித்தது என்றாலும், பெருகிக்கொண்டு வருகின்ற மக்களின் தேவைகளைப் பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. இன்னும் பலஊர்ப்புறங்களில் குடிநீர் பற்றாக்குறை, பள்ளிகளுக்குச் சொந்தமாகச் சரியான கட்டடங்கள் இல்லாமை, போக்குவரத்துக்கான சாலைகள் இல்லாமை போன்ற நிலையினைக் காண்கிறோம். இத்தகைய குறைபாடுகளை நீக்கி ஊர்ப்புறங்களில் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தந்து பொருளாதார வளர்ச்சிக்கேற்றதொரு கட்டமைப்பினை ஒரு கால வரம்புக்குள் உருவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பெற்று ஓராண்டுக் காலமாக அமலில் உள்ளதே தன்னிறைவுத் திட்டமாகும்.

கீழ்காணும் அடிப்படை வசதிகளை அமைத்துத் தருதல் தன்னிறைவுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.—

1. குடிநீர் வழங்குதல்;
2. இணைப்புச் சாலைகளை அமைத்தல், மேம்படுத்துதல்;
3. ஆதி திராவிடர் குடியிருப்புக்களுக்கு மயான சாலைகளை அமைத்தல்;
4. சிறுபாலங்களை அமைத்தல்;
5. சிறு பாசன அமைப்புகளை மேம்படுத்துதல்;
6. ஊர்ப்புற மருந்தகங்கள் அமைத்தல்;
7. தாய் சேய் நல விடுதிகள் அமைத்தல்;
8. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்;
9. ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி அளித்தல்.

மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற நிதி வசதி போன்ற மற்ற சில வசதிகளைக் கருத்திற் கொண்டு, இத்திட்டத்தினைப் பின்வருமாறு மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது:

முதற் கட்டம் : 1980-81 ஆண்டு—69 ஒன்றியங்களில்.

இரண்டாம் கட்டம் : 1981-82 ஆண்டு—150 ஒன்றியங்களில்.

மூன்றாம் கட்டம் : 1982-83 ஆண்டு—எஞ்சிய 157 ஒன்றியங்களில்.

69 ஒன்றியங்களில் முதற்கட்டப் பணி வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

குடிநீர் வசதி :—தற்போது அநேக குடியிருப்புகளில் குடிதண்ணீருக்காக வெகு தூரம் சென்று பெறவேண்டியுள்ளது. இவ்விடர்ப்பாட்டினை அறவே நீக்கும் பொருட்டு ஒவ்வொரு குடியிருப்புக்கும் அருகாமையிலேயே குடிநீர் வசதி செய்து தர பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் வசதி வடிகால் வாரியத்தின் பொறுப்பில் உள்ளது. இவ்வறுபத்தொன்பது ஒன்றியங்களில் சுமார் 2945 குடியிருப்புகளுக்கு 2100 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி



ஊர் வளர்ச்சிக்கு ஒரு முனைப்புச் சக்தி

"தாரா"
உங்களை
அழைக்கின்றது...



நூறு சதவிகித
வருமான வரிச்சலுகை




ஊரக வளர்ச்சிப் பணி
மேற்கொண்டால்

வருமானவரி நிர்வாகத்தால்
அங்கீகரிக்கப்பட்ட பதிவுச் சங்கம்
(எண்: 205/35சிசி/35சிசிஎ/80-23
தேதி 31.10.80)

**தமிழ்நாடு ஊரகச்
சீரமைப்புச் சங்கம்,**
(பதிவு எண்: 30/80,
நான்காவது மாடி,
குறளகம், சென்னை 600 001.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
முதன்மை நிர்வாக அலுவலர்
"தாரா"
தொலைபேசி எண் : 20901

ARIES/DIPR/468 TAM


ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு, அவைகளில் சுமார் 1334 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளிலும் மிக விரைவில் இவ்வசதி செய்து தரப்படும்.

**இணைப்புச் சாலைகள் :—** ஊர்ப்புறங்களிலுள்ள அநேக சாலைகள் எந்தவொரு வாகனமும் செல்ல உகந்ததாக இல்லை. பொது வழியிலிருந்து இணையாக வளைந்து வளைந்து, வரப்புகள் மற்றும் கால்வாய்களினூடே நடந்து நடந்து உருவான ஒற்றையடிப் பாதைகளே உள்ளன. நல்ல இணைப்புச் சாலைகளை தேவையான இடங்களில் அமைக்கவும், தற்போதுள்ள இணைப்புச் சாலைகளை அனைத்துப் பருவங்களிலும் பயன்படுமாறு மேம்படுத்தவும் இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கட் தொகை 500வரை உள்ள குடியிருப்புகளுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை செலவு செய்து முரம்பு பரப்பிய சாலைகளையும் 500 முதல் 1,500 வரை மக்கட்தொகையுள்ள குடியிருப்புகளுக்கு ரூ. 40,000 முதல் ரூ. 50,000 வரை செலவு செய்து சரளைக்கல் சாலைகளையும் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்ட 69 ஒன்றியங்களில் மொத்தம் 1221 இலட்சம் ரூபாய் செலவில் 4220 கிலோ மீட்டருக்கு இணைப்புச் சாலைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 3138.2 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குச் சுமார் 143.00 இலட்ச ரூபாய் செலவில் 950 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைக்கும் திட்டத்தில் 412.6 கிலோ மீட்டர் நீளத்திற்கு இப்பணி முடிந்துள்ளது.

**சிறு பாலங்கள் அமைத்தல் :—** இணைப்புச் சாலைகளை அமைக்கும் போது குறுக்கிடும் வடிகால்களைக் கடப்பதற்காக ரூ. 138 இலட்ச ரூபாய் செலவில் 4150 சிறு பாலங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1248 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சிறுநீர்ப் பாசன அமைப்புகளை மேம்படுத்துதல் :—** சுமார் 1,000 ஏக்கர் பரப்பிற்கு குறைவான நிலங்களுக்கு நீர் வழங்கக் கூடிய சுமார் 683 சிறு நீர்ப்பாசன [illegible] மேம்படுத்த 33.00 இலட்சம் ரூபாய் செலவில் பணி [illegible]ப்பட்டன.

**ஊர்ப்புற மருந்தகங்கள் மற்றும் தாய் சேய் நல விடுதிகளை அமைத்தல் :—** இவை தற்போது பெரும்பாலான ஊர்ப் புறங்களில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் நல்ல கட்டிடங்களை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டத்தில் 71 மருந்தகங்கள் மற்றும் 228 தாய் சேய் நல விடுதிகளுக்காக கட்டிடங்களை அமைக்கும் பணி 119.40 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 3 மருந்தக கட்டடங்களும், 2 தாய்சேய் நலக் கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது எஞ்சியுள்ளவை விரைவில் கட்டி முடிக்கப்படவுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள் :—** நாட்டிலுள்ள 23,257 தொடக்க மற்றும் உயர் தொடக்க பள்ளிகளில் 2,572 பள்ளிகள் வாடகைக் கட்டடங்களிலும், தற்காலிகக் கட்டடங்களிலும் அமைந்துள்ளன. முதற்கட்டத்தில், 69 ஒன்றியங்களில் 1364 பள்ளிகளுக்கான கட்டடங்கள் சுமார் 545 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவைகளில் 128 பூர்த்தியடைந்துள்ளன. எஞ்சியவை விரைவில் முடிக்கப்பெறும்.

**ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல் :—** நம் நாட்டில் தற்போது 1,07,338 ஆதி திராவிடர் குடும்பங்கள் சொந்த வீடின்றி சிறு குடிசைகளில் வாழ்கின்றனர். முதற்கட்டத்திலுள்ள 69 ஒன்றியங்களில் 7,000 குடும்பங்களுக்கு 252 இலட்ச ரூபாய் செலவில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகளில் 5418 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இம்மாபெரும் திட்டத்தினை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்கள் மிக முக்கிய இடத்தினை வகித்து செயலாற்றுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு ஒன்றியமும் 60 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பணிகளை ஏற்று நிறைவேற்றுகின்றன. இவை, சாதாரணமாக ஒன்றியங்கள் நிறைவேற்றும் பணிகளைப்போல் ஆறு முதல் பத்து மடங்காகும். எனவே, வேலை பளு மிகைவாலும், திட்டத்திற்கான அடிப்படைக் கட்டுமான பொருள்களான எஃகு, சிமெண்ட், சரளைக்கற்கள் ஆகியவை தேவையான அளவுக்கு உரிய நேரத்தில் கிடைக்காததாலும் திட்டச் சாதனையை 100 சதவீதம் அடைய இயலவில்லை. எனினும் இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் மேற்கொள்ளும்போது [illegible] களையப்பெற்று [illegible] ஏற்படுத்த முடியும்.

## திரு ஜீவானந்தம் குடும்பத்துக்கு ஓய்வு ஊதியம்!

மறைந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம் அவர்கள் குடும்பத்துக்குத் தமிழ்நாடு அரசு மாதம் ரூ. 500 ஓய்வு ஊதியம் கொடுக்கிறது.

மறைந்த ப. ஜீவானந்தம் அவர்கள் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றி உள்ள தியாகத்தினையும், தொண்டினையும் பாராட்டி, அவரது மனைவி திருமதி பத்மாவதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 ஓய்வு ஊதியம் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஓய்வு ஊதியம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படும்.

திரு ஜீவானந்தம் அவர்கள் களின் குழந்தைகளுக்கு அரசுப் பணியில் தகுதிக்கு ஏற்ப விசேட உரிமையும், முன்னுரிமையும் கொடுக்கப்படும்.

அவரது மனைவிக்கு அரசு மருத்துவ மனைகளில் அமைச்சர்களுக்கு அளிப்பது போல மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

திரு ஜீவானந்தம் அவர்களின் குடும்பத்தார் வேறு கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பினாலும் அவையும் பரிவுடன் பரிசீலிக்கப்படும்.

திரு ஜீவானந்தம் அவர்களின் பிறந்த நாளான 21.8.81 ல் நாகர்கோவிலில் அவரின் முழு உருவச்சிலை ஒன்றை திறந்து வைக்கவும் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

# அக்மார்க் லேபிள்

பொட்டலங்களிலுள்ள பொருட்களின் பரிசுத்தம் மற்றும் தரத்திற்கு, இந்திய அரசளிக்கும் உத்திரவாதமாகும்.

## நம்பிக்கையுடன் வாங்குங்கள்
## அக்மார்க்கை நம்புங்கள்

நெய், வெண்ணெய், உணவெண்ணெய்கள், தேன், பருப்புக்கள், மசாலாப்பொடிகள், போன்றவற்றுக்கு, அனைத்து வசதிகளும் கொண்ட ஆராய்ச்சி சாலைகளில், விரிவாக பரிசோதிக்கப்பட்ட பின்னரே அக்மார்க் லேபிளளிக்கப்படுகிறது.

**எப்போதும் "அக்மார்க்" உள்ள பொருட்களையே வாங்குங்கள்!**

## இவை சுத்தத்திற்காகவும் தரத்திற்காகவும் பரிசோதிக்கப்பட்டவை

**இந்த லேபிளுடைய பொருட்கள்**
**மளிகைக் கடைகளிலும் ஜெனரல் ஸ்டோர்களிலும்**
**எளிதில் கிடைக்கும்.**


# தமிழகத்தில் வறட்சி நிவாரண நடவடிக்கைகள்



[மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வருவாய்த்துறை மானியத்துக்கு 9.4.81 அன்று சட்டமன்றப் பேரவையில் அளித்த பதில் உரையிலிருந்து தொகுக்கப்பட்ட முக்கிய விவரங்கள்]

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| வறட்சி நிவாரணப் பணிகளுக்காக, இதுவரையில், ஒதுக்கப்பட்டுள்ள தொகை | 2,817.05 |

ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை, பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளின் விவரங்களும், தொகை விவரங்களும்....

குடிநீர் விநியோகப் பணிகள்:

| | | (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| (அ) | புதிய குழாய்க் கிணறுகள், கிணறுகள் அமைக்க | 372.12 | |
| (ஆ) | கிணறுகளை ஆழப்படுத்த | 235.32 | |
| (இ) | நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டங்களின் மேம்பாட்டுக்கு | 87.61 | 695.05 |
| (ஈ) | ஏரிகளின் உள்பக்கம் கிணறுகள் அமைக்க | 100.00 | |
| (உ) | லாரிகள், வண்டிகள், ஆட்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு | 50.00 | |
| (ஊ) | நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் நீரேற்றுச் சாதனங்களுக்கு, தனி, மின் சப்ளைக் கம்பிகள் அமைப்பதற்கு | 50.00 | |
| (எ) | தண்ணீர் டாங்கிகள் செய்வதற்கு | 20.00 | 220.00 |
| | | | 915.05 |
| (ஏ) | மேலும் புதிய குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு | 390.00 | |
| (ஐ) | மதுரை மாநகராட்சிக் குடிநீர்த் திட்ட மேம்பாட்டுக்கு, மேலும், 50 குழாய்க் கிணறுகள் அமைக்க | 10.00 | 400.00 |
| | மொத்தம் ரூ | | 1,315.05 |

**வேலை வாய்ப்புத் திட்டங்கள்:**

| ஊராட்சி ஒன்றியங்கள் மூலம்: | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| அ. | 50 ஏக்கர் வரை பாசன வசதி அளிக்கும் ஏரிகளை மராமத்து செய்வதற்கு | 106.00 |
| ஆ. | மண் சாலைகள் அமைக்க | 156.00 |
| இ. | ஊருணிகள் பழுதுபார்த்துச் சுத்தம் செய்ய | 31.00 |
| ஈ. | நீர் சேகரிப்புக் குட்டைகள் அமைக்க | 7.00 |

**பொதுப்பணித் துறை மூலம்:**

| | | |
|---|---|---|
| உ. | பெரிய ஏரிகள் மராமத்து செய்ய | 950.00 |
| ஊ. | வைக்கோல் விநியோகம் | 20.00 |
| எ. | எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் செய்து, பாதுகாத்து விநியோகிக்க | 32.00 |

**நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறைமூலம்:**

| | | |
|---|---|---|
| ஏ. | நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை மூலம், வேலை வாய்ப்புத் தரக்கூடிய வகையில் சாலைகளைச் செப்பனிடுவதற்கு | [illegible] |
| | ஆக மொத்தம் ரூபாய் | [illegible] |

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| அ) | குடிநீர்த் திட்டங்கள் | 1,315.05 |
| ஆ) | வேலை வாய்ப்புத் திட்டங்கள் | 1,502.00 |
| | மொத்த ரூபாய் | 2,817.05 |

### கைப்பம்புகள்

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 50 அடிக்கு மேல் ஆழமுள்ள குழாய் கிணறுகளில் உள்ள கைப்பம்புகள்

| | | |
|---|---|---|
| 1. | தற்போது இயங்கும் நிலையில் உள்ளவை | 21,670 |
| 2. | பழுதாக உள்ளவை. | 347 |
| 3. | கைவிடப்பட்டவை. | 144 |
| | மொத்தம் | 22,161 |

### ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள கைப்பம்புகள்

| | | |
|---|---|---|
| 1. | தற்போது இயங்கும் நிலையில் உள்ளவை | 11,989 |
| 2. | பழுதுபட்டவை | 721 |
| 3 | கைவிடப்பட்டவை | 208 |
| | மொத்தம் | 12,918 |

### மேல்நிலைத் தொட்டிகள்
### மின்விசை பம்புகள் விவரம்-11,022

| | |
|---|---|
| தற்போது இயங்கும் நிலையில் உள்ளவை | 10,440 |
| பழுதான நிலையில் உள்ளவை | 504 |
| 3பார் மண் அடைத்து கைவிடப் பட்டவை | 72 |
| மின்விசை III ம் பிரிவுக்கு மாற்றப்படுபவை(III Phase) | 6 |
| | 11,022 |

### பழுது பார்க்கும் பணியின் முன்னேற்றம்

| | |
|---|---|
| 31.3.81 வரை பழுது பார்க்கப் பட வேண்டியவை | 1,268 |
| பழுது பார்க்கப்பட்டவை | 817 |
| இன்னும் பழுது பார்க்கப்பட வேண்டியவை (1.4.81) | 451 |

## கிராம அதிகாரிகள்

பகுதி நேர கிராம அதிகாரிகள் திட்டத்தை மாற்றி, கிராம நிர்வாகத்தின் பொறுப்புக்கு, முழு நேர கிராம அதிகாரிகள் நியமிக்கும் முறையை, நிர்வாக அவசியத்தை முன்னிட்டு, தமிழ் நாட்டில் இருந்த பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவிகள் அனைத்தும், அவசரச் சட்டத்தின்மூலம், 14-11-1980 முதல் நீக்கப்பட்டன.

முழு நேர கிராம அதிகாரிகள் நியமிக்கப் படும் பணி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிதாக கிராம நிர்வாக அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்ட பின்னர் அவர்கள் பணியில் சேர்ந்த 1 ஆண்டுக்குள், 1 மாதக் காலத்திற்கு, நில அளவைப் பயிற்சி வழங்கப்படும். இதற்காக—

1. 100 பயிற்சிப் பள்ளிகளும்,
2. ரூ. 4.50 இலட்சம் செலவில் பணியாளர் களும்,
3. ரூ. 2.61 இலட்சம் செலவில் கருவிகள் வாங்கவும்,

ஆக மொத்தமாக ரூபாய் 10.31 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுமாராக 2,500 ஆதிதிராவிடர்கள், கிராம அலுவலர்களாக நியமிக்கப்பட உள்ளார்கள்.

### நிலை நீர்த் தொட்டிகள்

ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து புதிதாக குடிநீர் வடிகால் வாரியம் பொறுப்பேற்கும் நிலைநீர்த் தொட்டிகள் -பம்புகள் விவரம்:

| | |
|---|---|
| பொறுப்பு ஏற்க வேண்டிய மொத்த பம்புகள் | 1,459 |
| மார்ச் மாதம் வரை பொறுப்பு ஏற்றவை | 1,208 |
| இன்னும் பொறுப்பு ஏற்கப்பட வேண்டியவை | 251 |

### புதிய குழாய்க் கிணறுகள்

| | |
|---|---|
| குழாய்க் கிணறுகள் அமைக்க எடுத்துக்கொண்ட எண்ணிக்கை | 2,596 |
| 31.3.1981-க்குள் முடிந்தவை | 1,209 |
| வேலை நடைபெற்று வருவது | 1,387 |

மேலும் 9,000 குழாய்க் கிணறுகளை வரும் மாதங்களில் தேவைக்கேற்ப அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### கிணறுகள் ஆழப்படுத்துதல்

| | | |
|---|---|---|
| 1. | மாநிலம் பூராவும் ஆழப் படுத்தப்பட வேண்டிய கிணறுகள் | 10,688 |
| 2. | 31.3.81 முடிய ஆழப்படுத்த பட்ட கிணறுகளின் எண்ணிக்கை | 1,076 |
| 3. | வேலை நடைபெற்றுவருபவை | 2,445 |
| 4. | வேலை எடுத்துக்கொள்ள இருப்பவை | 7,167 |
| 5. | இதனால் வேலை வாய்ப்பு பெறுவோர் (மனித நாட்கள்) | 98,000 பேர்கள். |

### மாட்டுத் தீவனத்திற்கு முன்னேற்பாடாக செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

வறட்சியால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள வட ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் கால் நடைத் தீவனத் தட்டுப்பாட்டுக்கு நிவாரணமாக ரூ. 20 இலட்சம் அளவில் வைக்கோலை அரசு பண்ணைகளிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் வாங்கி விநியோகிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கால்நடைத்துறையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### விதைபொருள் வாங்கி சேமித்துவைப்பதற்கு செய்யப்பட்ட நடவடிக்கைகள்

வேர்க்கடலை போன்ற எண்ணெய்வித்துப் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பின்னால் விதைப்பதற்குத் தேவையான வித்துக்கள் கிடைப்பதற்கு முன்னேற் பாடாக ஓரளவு கிடைக்கக்கூடிய வித்துக்களை வாங்கி சேமித்து வைத்து தக்க சமயத்தில் வறட்சிப் பகுதிகளிலுள்ள சிறு விவசாயி களுக்கும், மார்ஜினல் விவசாயிகளுக்கும் விநி யோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 500 டன் வேர்க்கடலையை இவ்விதம் வாங்கி சேமித்து வைக்க ரூ 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோல நெல்விதை சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### நிலவரிச் சலுகை

கண்டு முதல் (விளைச்சல்) 50 சதவீதத்திற்கு குறைவாக விளைந்தால்,

1. நிலவரி,
2. உள்ளூர் வரி,
3. தண்ணீர்த் தீர்வை,
4. தனித்தண்ணீர்த் தீர்வை
5. பணப்பயிர் தீர்வை

[illegible] செய்யப்பட்டுள்ளது.

[illegible] உள்ள நிலங்களில் பாதிக்கு [illegible] வறட்சியால் பாதிக் [illegible] தீர்வை [illegible]

துள்ள நிலங்களுக்கு கூட தண்ணீர்த் தீர்வை அரசு கடன்கள் முதலியவை அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படும்.

இதனால் அரசுக்கு சுமாராக 8 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும்.

### நிவாரணப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பு

நிவாரணப் பணிகள் செம்மையாகவும் துரிதமாகவும் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் முழுப் பொறுப்பு ஏற்பார்கள்.

### வட்ட குழுக்கள், மாவட்ட குழுக்கள் மாநில உயர்மட்டக் குழு

(அ) வட்டக்குழு:

பெருமளவில் நடைபெறவேண்டிய, இந்த நிவாரணப் பணிகளில், பொதுமக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களையும், அறிவுரைகளையும் வழங்கும் வகையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும், பொது மக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு வட்ட குழுவும்—

(ஆ) மாவட்டக் குழு:

அதேபோன்று, மாவட்ட அளவில், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மாவட்ட குழுவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

## பயிரிடும் குத்தகைதாரர்கள்

பயிரிடும் குத்தகைதாரர்களுடைய நன்மையைக் கருதி, இவர்களுடைய, நீண்ட கால வேண்டுகோளான 25:75 சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது, மாண்புமிகு எம் ஜி. ஆர். தலைமையிலான தமிழக அரசு தான்.

இயற்கை இடர்ப்பாடு வருகிறபொழுது ஏற்படுகிற நஷ்டத்தினால், குத்தகைதாரர்கள் "வாரம்" கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நீக்குகின்ற வகையில், அவர்களது குத்தகை பாக்கியைத தள்ளுபடி செய்து சட்டத்தை நிறைவேற்றியது. இதனால், சுமார் 30 கோடி ரூபாய் அளவுக்கு ஏழைக் குத்தகை விவசாயிகள் பயன் அடைந்தார்கள்.

மீதி உள்ள குத்தகை பாக்கிகளை ஒரே தவணையில் பூராவும் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும் என்பதைக் கருதி, மூன்று தவணைகளில் செலுத்த இந்த அரசு, வழிவகை செய்தது.

(இ) மாநில உயர்மட்டக் குழு:

மாநில அளவில், வறட்சி நிவாரணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குத் துரித மாக முடிவுகள் எடுப்பதற்கும், வறட்சி நிவா ரணப் பணியில், பல்வேறு துறைகளை ஒருங் கிணைந்து செயல்படுத்தவும், தலைமைச் செயலாளர் தலைமையில், ஒரு உயர்மட்டக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் உதவி

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலை பற்றி, மத்திய அரசின் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி, குடி தண்ணீர்க்குழாய் கிணறுகளை அமைப்பதற் காக, துளை போடும் கருவிகள் தேவையை எடுத்துரைத்து, 100 துளை போடும் கருவி களை, தமிழ்நாட்டிற்கு, ஒதுக்கும்படி வேண்டு கோள் கொடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதி, மத்திய அரசு, இம்மாநிலத்திற்குப் பெருமளவில் எல்லாவித உதவிகளும் அளிக் கும்படி வேண்டுகோள் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஆயவுககுழு

மத்திய அரசின் ஆய்வுக்குழு வறட்சி யால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், நிவா ரணப்பணிகளையும் ஏப்ரல் 1 முதல் 4 தேதி களில் நேரில் பார்த்து சென்றுள்ளனர். கணிச மான அளவு மத்திய அரசின் உதவி கிடைக் கும் என நம்பப்படுகிறது.

## வருவாய் சரகம் (Revenue Firka)

பல ஆண்டுகளாக வருவாய்ச் சரகத்தைப் பற்றி எவ்விதச் சீர்திருத்தமும் செய்யப்படாமல் இருந்தது.

சில வருவாயச சரகங்களில் 15 கிராமங் களிலிருந்து 40 கிராமங்கள் வரை இருந்தன.

சில வருவாய்ச் சரகம் பெரிதாகவும், சில சிறிதாகவும் இருந்தன.

இதனால் வருவாய் ஆய்வாளர்கள் (Revenue Inspector) மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்தார்கள்.

வருவாய் ஆய்வாளர்களுக்கு ஏறக்குறைய 37 வகையான பணிகள் இருந்தன.

ஆனால், வருவாய் வாரியம் ஏற்பட்ட திலிருந்து அவர்களுக்கென்று அலுவலகம் இல்லை.

இப்படி 37 பொறுப்புகள் உள்ள வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகம் இல்லாத காரணத்தால், அவர்களுடைய பணிகளை ஒழுங் காகச் செய்ய முடியவில்லை.

பொதுமக்களும், வருவாய் ஆய்வாளர் களும் செய்து முடிக்க வேண்டிய காரியங்களுக்கு வருவாய் வட்டாட்சியர் இடத்திற்கோ அல்லது வருவாய் கோட்டாட்சியர் இடத்திற்கோ சென்று கொண்டு இருந்தார்கள்.

இவைகள் திறமையாக நடைபெற வேண் டும் என்பதற்காக, மக்களுடைய குறைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக வருவாய்ச் சரகங்கள் அதிகமாக்கப்பட்டது.

முதலில் 774 சரகங்கள் இருந்தன. இன் றைக்கு 1,097 சரகங்கள் உள்ளன.

இதுவரையிலும் வருவாய்ச் சரக அலுவலகம் இணைந்த வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் 358 கட்டப்பட்டுள்ளன.

## பட்டாப்புத்தகத் திட்டம்

பட்டா பாஸ் புத்தகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், பல குறைபாடுகள் இருந் தன.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து, குறை பாடுகளைப் போக்குவதற்கான பரிந்துரை களை அரசுக்கு வழங்க, வருவாய் ஆணையர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை, 1979-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அளித்தது.

அந்த அறிக்கைக்கு ஏற்ப, 1979-ஆம் ஆண்டு, மே மாதத்தில், பட்டா புத்தகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட, அரசு ஆணைகள் பிறப்பித்தது.

நிலம் உள்ளவர் ஒவ்வொருவருக்கும், அவருடைய சொத்தின் சட்ட ரீதியான அடிப் படையாக, இந்தப் பட்டா புத்தகம் அமைய வேண்டும் என்பதுதான், முக்கியமான கருத்து.

அந்த அடிப்படையில், நிலம் உள்ளவர் களுக்கு, அவர்களுடைய விவசாயத் தேவைக் கான கடன் உதவி வழங்கும் வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் பட்டா புத்தகத்தை வைத்துக் கொண்டு கடன் வழங்கும் ஒரு முறையை உருவாக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம்.

அவ்வாறு செய்ய வேண்டுமென்றால், பட்டா புத்தகத்திற்கு, சட்ட ரீதியான அந் தஸ்து வழங்க வேண்டியுள்ளது. விரைவில், இதற்காக, ஒரு சட்ட முன் வடிவு, சட்டப் பேரவையில் அறிமுகம் செய்ய எல்லா நட வடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

இந்தப் பட்டா புத்தகத் திட்டத்தின் மூலம், நிலத்தை ஒருவர் விற்க வேண்டுமென் றால், பட்டா புத்தகத்தைக் காண்பித்தால் தான் [illegible]



# திருச்சி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம்!

இதுவரையில், தமிழ் நாட்டில் மாநிலம் முழுவதற்குமாகத் தீட் டப்படும் திட்டங்களுக்கு உட் பட்டே கிராமங்களிலும் பல் வேறு திட்டங்கள் செயல்படுத் தப்பட்டு வந்தன. இதனால், கிராமங்களாகட்டும், கிராம மக் களாகட்டும் பரிபூரணமாகப் பயன்பெற இயலாத நிலைமை இருந்து வந்தது. அரசு மூலம், கிராமங்களுக்காகத் தீட்டப்படும் திட்டங்களின் பலன் கிராமங் களை அப்படியே முழுவதுமாகப் போய் அடைய முடியாத நிலை இருப்பதாகக்கூட பேசப்பட்டது.

எனவே, மிகச் சாதாரண மக் களும் அரசின் திட்டப் பலனை அனுபவத்திடவேண்டும் என்கிற நோக்கத்தில், ஆன்றவிந்தடங் கிய கொள்கை அரசுச் சான்றோ ரால் நுணுக்கமாக ஆராய்ந்து வகுக்கப்பட்ட திட்டம்தான் தன் னிறைவுத் திட்டமாகும்.

தமிழகத்தின் மைய மாவட்ட மான திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் உள்ள—உப்பிலியபுரம், கரூர், பரமத்தி, ஆலத்தூர், ஜெயங்கொண்டம், வேப்பூர் ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றி யங்கள் 1979-80-க்கான முதற் கட்டத் தன்னிறைவுத்திட்ட நிறைவேற்றத்திற்கான வட்டா ரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட் டன.

இந்தப் பணிகளுக்கெனத் திருச்சி மாவட்டத்திற்காக ஒதுக் கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 5.37 கோடி ஆகும்.

இம்மாவட்டத்தில், இரண்டா வது கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் நடப்பு நிதியாண்டில்— மணப்பாறை, மணிகண்டம், அர வக்குறிச்சி, தான்தோனி , தாத் தையங்கார் பேட்டை, துறையூர் பெரம்பலூர், ஆண்டிமடம், அரியலூர், புள்ளம்பாடி ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

இதுவரையில் கிராமப்புறப் பணிகளுக்குக் குறைவான நிதி ஆதாரங்களே ஏற்படுத்தப்பட்டு, அவற்றுக்கு உட்பட்டே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் இருந்து வந்தது. தன் னிறைவுத் திட்டம் மேற்கொள் ளப்பட்டவுடன் இந்நிலை முழு மையாக மாறிவிட்டது. மக் களுக்குத் தேவையான பணிகள் பற்றி அறிந்து, திட்டம் வகுக்கப் பட்டு, அதற்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டது. எனவே, அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வரைக்கு உட் பட்டே பணிகள் மேற்கொள்ளப் படும்போதுதான் கிராமங்களின் தேவைகள் நிறைவு பெறும். சாதாரண மக்களின் நெஞ்சிலும் நீக்கமற மகிழ்ச்சி தேங்கும்.

பி.எல்.ஆர்

இவ்வகையில் மக்களுக்குத் தேவையானஅடிப்படை வசதிகள் அமைப்பதற்கான பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படு வதற்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கீடு தன்னிறைவுத் திட் டத்தின் மூலம் கிடைக்கிறது.

இத்திட்டத்தின் முதற்கட்ட மாகத் திருச்சியில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் எவ்வாறு பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன என்பதைக் காண நேரில் சென்றிருந்தோம்.

திருச்சி மாவட்டத்தில் தேர்ந் தெடுக்கப்பட்ட ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலுமாக ரூ. 5 கோடியே 37 இலட்சம் செலவில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 48 பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

### ஆலத்தூர் கேட்

திருச்சியிலிருந்து 45 கி.மீ. தூரத்திலுள்ள ஆலத்தூர் கேட் ஊராட்சி ஒன்றியத்தில், தன் னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறை வேற்றப்பட்டுள்ள பணிகளைப் பார்வையிடச்செல்கிறோம் நாம். வட்டார வளர்ச்சி அலுவலர் திரு ஜே. ராஜகோபாலன் நம்மை இன்முகத்தோடு வரவேற்று தனது ஒன்றியத்தில் நடைபெற் றுள்ள பணிகள் பற்றி [illegible] கிறார்.

பெரம்பலூர் [illegible] சேர்ந்த இந் [illegible]



ஊராட்சி மன்றங்கள் 39 ஆகும. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மொத்தப் பணிகளின் எண்ணிக்கை 333.

இத் திட்டங்களைக் கிராம மக்கள் நலன் கருதி, நிறைவேற்றிட ஆன செலவுத் தொகை எவ்வளவு தெரியுமா? ரூ. 49,67,246 ஆகும்.

ஒன்றியம் முழுவதும் அதிகாரிகளோடு சுற்றி, நிறைவேற்றப்பட்டிருக்கும் ஆக்கப்பணிகளைப் பார்வையிடுகிறோம் நாம்.

15.4 கி.மீ. தூரத்திற்குக் கப்பியில் இணைப்புச் சாலையும் 150.2 கி.மீ. தூரத்திற்கு செங்கப்பிச்சாலையும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தில் போடப்பட்டுள்ளன.

43 குடிநீர்த் திட்டங்கள், 77 இணைப்புச் சாலைகள், 47 சிறு பாலங்கள், 15 சறுக்கைகள், 2 கிராம மருந்தகங்கள், 4 தாய் சேய் நல விடுதிகள், 22 பள்ளிக் கட்டடங்கள், ஒரு சமூகக்கூடம், 2 மகளிர் கழிப்பிடங்கள், ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்கு 15 சாலைகள், சிறு பாசனத் திட்டங்கள் 104 ஆகியவை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த வட்டாரத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கொளக்காநத்தம் பகுதியைப் பார்த்து விட்டுப் புறப்படுகையில் ஊர்ப் பெரியவரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான திரு என். நாராயணசாமியைச் சந்தித்துப் பேசினோம்.—''இப்போது போலவே தொடர்ந்து நல்லபடி நிறைவேற்றப்படுமானால், இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்கு நிகரே இல்லை. கிராம மக்கள் இத்திட்டத்தின் மூலம் பெரும் பலனைப் பெற முடியும்'' என்றார் அவர்.

ஐயனாபுரம், சாத்தனூர், அனப்பாடி,, விஜயகோபாலபுரம் ஆகிய கிராமங்களிலெல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டப்பணிகள் நம்மால் பார்வையிடப்படுகின்றன.

## க. பரமத்தி

கரூர் பரமத்தி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டங்கள் பற்றி நம்மிடம் பெருமிதத்தோடு விவரித்தார் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு கே. இஷ்டலிங்கம்.

30 ஊராட்சி மன்றங்கள் இந்த வட்டாரத்திற்குள் அடங்கியுள்ளன ஆனாலும், ஒதுக்கப்பட்ட பணத்தில் பரவலாக 214 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

க. பரமத்தியில் 50 ஆயிரம் ரூபாயில் கட்டப்பட்டுள்ள கிராம மருந்தகத்தை நாம் பார்வையிடுகிறோம். இதன் மூலம் க.பரமத்தி, நெடுங்கூர், முன்னூர், அரியூர், நாதந்தை, குப்பம்ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 13,655 மக்கட் தொகையினர் பெரும்பயனடைவார்கள்.

அதே ஊரில், 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தாய்சேய் நல விடுதிமூலம் 2.276 பேர் பயனடைவர்.

பரமத்தி காளிபாளையத்தில் ரூ 50 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் பள்ளிக் கூடம் பற்றி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு டி. கே. பெரியதம்பியைக் கேட்டபோது- ''மிகவும் உன்னதமான காரியம். கூடிய சீக்கிரம் இந்தப் பகுதியிலும் உயர் நிலைப் பள்ளிக்கூடமும் வர அரசு உதவவேண்டும்'' என்று என்று நன்றிப் பெருக்கோடும் நம்பிக்கையோடும் தெரிவித்தார்.

அதே பகுதியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பார்த்து விட்டு-தென்னிலை மேற்குப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்றக் கட்டடத்தைப் பார்த்தோம்.

''இதற்கு முன்னால் ஊராட்சி மன்றம் எங்கே கூடிக்கொண்டிருந்தது?'' என்ற நம் கேள்விக்கு- ''முன்பிருந்த ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டிலேயே கூடிக் கொண்டிருந்தது. ரூ. 4மட்டுமே அப்போது அதற்கு வாடகையாகத் தரப்பட்டது'' என்று கூறினார்கள் உடன்வந்த அதிகாரிகள்.

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் ,தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள் 110, சிறுபாலங்கள் 50, ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்கான சாலைகள் 5, கிராம மருந்தகங்கள் 3, தாய் சேய் நல விடுதிகள் 6, பள்ளிக் கட்டடங்கள் 20, சிறுபாசனத் திட்டங்கள் 21, ஆசிரியர் குடியிருப்பு 1, மகளிர் கழிப்பிடங்கள் 2 ஆகியவை குறித்தகாலத்திலேயே சிறப்பாகக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

வட்டார மக்கள் இந்தப் பணிகளை வானளாவப் புகழ்கிறார்கள்.

## உப்பிலியபுரம்

உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் முக்கியக் கிராமங்கள் சிலவற்றில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் முழுநிறைவு பெற்றிருப்பதை வட்டார வளர்ச்சி அலுவலரும், கோட்ட வளர்ச்சி அலுவலரும் அழைத்துச் சென்று காட்டினர்.

இணைப்புச் சாலைகள் 29, சிறுபாலங்கள் 48, ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் 3, சிறு பாசனத்திட்டங்கள் 5, கிராம மருந்தகங்கள் 3, தாய்சேய் நல விடுதிகள்5, பள்ளிக் கட்டடங்கள் 24, சிறு பாசனத் திட்டங்கள் 30,இதர வேலைகள் 7 என 154 பணிகள் மொத்தத்தில் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்தச் சீரிய திட்டங்களை நிறைவேற்றிட செலவிடப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 39 இலட்சத்து 98 ஆயிரத்து 660 ஆகும்.

ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டமும் இந்த ஒன்றியத்தில் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தளிகை முருங்கைப்பட்டி என்ற கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பில் 19 வீடுகள் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டு சிமெண்ட் பூச்சுக்காகக் காத்திருப்பதை நாம் கண்டோம்

இத் திட்டத்தின்படி, ஒரு வீட்டுக்கு மூவாயிரம் ரூபாய் அரசு தருகிறது. ஆயிரம் ரூபாய் மான்யம் தரப்படுகிறது. கட்டுப்பாட்டு விலையில் சிமெண்ட் மூட்டை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

இவ்வகையில் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பரவலாக 522 வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில்472 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

இதுவும், தன்னிறைவுத் திட்டத்தின் ஒரு கூறாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி கட்டப்படும் வீடுகளின் சொந்தக்காரர்கள் ரூ.600 கூலிக்குத் தகுந்த வேலையைத் தாமே செய்தாகவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்திட்டம் பற்றி, த. முருங்கைப்பட்டியைச் சேர்ந்த கே.குப்பன், ஏ. கூனிமுத்து ஆகியோரிடம் பேசியபோது - ''நமக்காக ஒரு வீட்டை நாமேகட்டிக்கொள்ளப்போகிறோம் என்று நாங்கள் கனவுகூடக் கண்டதில்லைங்க. உள்ளபடியே இது ரொம்பவும் ஒசத்தியான ஏற்பாடுங்க'' என்று உளமாரப் புகழ்ந்தார்கள்.

—இந்த மூன்று வட்டாரங்களைக் கண்டதே, திருச்சிமாவட்டம் முழுமையையும் பார்த்துவிட்ட திருப்தியை எங்களுக்கு உண்டாக்கின!



### திருச்சி மாவட்டத்தில்

**1980-81** ஆம் ஆண்டு, தன்னிறைவுத்திட்டத்தின் முதற்கட்டமாகத் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை: 1357

குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் : 125

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஆன குடிநீர் வினியோகப் பணிகள் : 203

மொத்தம் 724.5 கி. மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள்: 472

பள்ளிக் கட்டடங்கள் : 107

மொத்தம் 27.20. கி. மீ. நீளத்தில், ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து அமைக்கப்பட்ட மயான சாலைகள் : 27

சிறு பால வேலைகள் : 236

சிறு பாசன வேலைகள் : 277

கட்டப்பட்ட தாய்சேய் நல விடுதிகள் : 26

கிராம மருந்தகக் கட்டிடங்கள் : 9

இந்தத் தன்னிறைவுத் திட்டப்பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 5 கோடியே 37 இலட்சம்.

[6-ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோதையாறு பாசன அமைப்பின் ஒரு பகுதியான ஆனந்தனாறு மற்றும் அதன் பிரிவு கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் தற்போது அரசால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட இருக்கிறது. கோதையாற்றின் குறுக்கே உள்ள திருப்பரப்பு அணைக்கட்டின் வடபுறக் கால்வாயை விரிவு படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேலம், திருச்சி மாவட்டங்களில் பாயும் காவிரியின் பாசனக் கால்வாய்கள், கீழ் பவானித் திட்டக் கால்வாய், சாத்தனூர் நீர்த் தேக்கத்தின் கீழ் பெண்ணையாற்றுக் கால்வாய்கள், கோதையாற்றுப் பாசன முறை, கீழ்கொள்ளிடம் பாசன முறை, மணிமுத்தாறு பிரதானக் கால்வாய், தாமிரபரணியார் பாசன முறை முதலியவைகளை நவீனப் படுத்துதல் மற்றும் கல்லணைக் கால்வாய்க்குப் பூச்சு வேலை செய்யும் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் 37,000 ஏரிகளுக்கு மேல் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை மிகப் பழமையானவையாகும். இவைகளில் நீர்க் கட்டுப்பாடு முறையில்லாமையாலும், திறமைக் குறைவான விநியோக முறையாலும் நீர் உபயோகத்தின் மிகவும் குறைவாக உள்ளது. இம்முறையில் முன்னமேயே பாசனம் பெறும் விளை நிலங்களின் பாசனத் திறனை அதிகரிக்கும் பொருட்டு ஏரிப் பாசனத்தை நவீனப்படுத்துதல் மிகவும் அத்தியாவசியமாகிறது.

இத்திட்டத்தின் கீழ் (1) ஏரியின் வரத்துக் கால்வாயையும், வினியோகக் கால்வாயையும் மேம்படுத்துதல், (2) ஏரியையும் அதைச் சேர்ந்த கரை, மதகு, வழிந்தோடிகளையும் மேம்படுத்துதல் (3) பாசன பிரதான கால்வாய்களையும், அதன் உட்பிரிவுகளையும் நவீனப்படுத்துதல் (4) விஞ்ஞான முறையில் நீர்ப்பங்கீடு கண்காணிப்பு முறை ஆகியவைகளை அமல்படுத்துதல் (5) மேம்பட்ட விவசாய முறைகளைக் கையாளுதல் மற்றும் விவசாயப் பணிகளுக்கான அமைப்புகளை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

முதற்கட்டமாக 500 ஏக்கருக்கும் அதிகமான பாசனப் பரப்பு கொண்ட சுமார் 490 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் ரூ.120 கோடி செலவில் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முன்னோடியாக, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பிள்ளைப்பாக்கம், ஏரியையும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கட்டிக்குளம் ஏரியையும் செயல்முறைப் படிப்பினையாக மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. பிள்ளைப்பாக்கம் ஏரியின் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன. உலக வங்கியின் ஆலோசனைப்படி இவை நடைபெறுகின்றன. இவைகளை நிறைவேற்ற உலக வங்கியிடம் உதவி கோரப்படும்.

பண்ணை மேம்பாட்டு வேலைகள் ஆயக்கட்டுப் பகுதியில் பல துறைகளும் இணைத்துச் செயல்படுத்த வேண்டியதால் புது திட்டங்களில் தேவையான முக்கியத்துவம் பெறுவதில்லை. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் விரிவான பணிகளாவன:

1. பயிர்களின் தன்மையைப் பொறுத்து அவைகளின தேவைக்கேற்ப பாசன நீரை தக்க சமயத்தில் ஒதுக்கீடு செய்து வினியோகிப்பதால் அதிக விளைச்சல் பெறலாம்.
2. பாசன ஆதாரத்தின் தலைப்புப் பகுதியில் உள்ளவர்களைப் போல் கடைநிலைப் பகுதியிலுள்ளவர்களுக்கும் சீரான நீர் வினியோகித்தல்.
3. பாசனத் திறனை அதிகரித்து விவசாய உற்பத்தி பலனை அடைதல்.
4. நாளாவட்டத்தில் நிலவளத்தன்மை, மண் அரிப்பு நிலச் சத்துக்குறைதல், நீர் தேங்கும் தன்மை, மண் உப்புத் தன்மை, நில அமைப்பு சீர்கேடு இவைகளைத் தவிர்த்து உற்பத்தித் திறனை வெகு நாட்களுக்கு அடைதல்.
5. பாசன முறைகளைக் குறைந்த செலவில் பாதுகாத்து இயக்குதல்,
6. பாசன முறையை நவீனப் படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான மசோதாக்களை நிறைவேற்றுதல்.
7. நீர் சண்காணிப்பு முறைக்க்கான விதிமுறைகளை விவசாயிகளின் மத்தியில் அமல்படுத்துவதன் மூலம் திட்ட நிர்வாகத்தில் நீதியையும், சம பங்கீட்டு முறையையும் நிலைநிறுத்துதல்.

இவ்வாறாக, பண்ணை மேம்பாடுவேலைகளால் பாசனப்பகுதிகளில், பல நவீன விஞ்ஞான, தொழில் முறைகளை அறிமுகப்படுத்துவது போன்றவை திட்டத்தில் இடம் பெறுதல் அவசியம்.

பாசனப் பரப்பிற்குட்பட்ட ஒவ்வொரு நில உடைமையாளர்களும் தங்களுக்கான நீரளவையும், கால அளவையும், அங்கீகரித்தப்படி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த முன்னறிவிப்பால் ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய விவசாய செலவு முறையைத் திட்டமிட்டு வாங்க வேண்டியவைகளை வாங்கி உபயோகிக்க ஏதுவாகிறது. இதனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் நீரைப் பயன்படுத்தத்தக்க வகையில் உபயோகிக்க ஊக்கமேற்படுகிறது. இதனால் வினியோகிக்கும் நீரைப் பெரும் விரையமில்லாமல் நன்முறையில் உபயோகிக்க முடிகிறது.

தற்போது வாரபந்தி அல்லது முறைப் பங்கீடு இம்மாநிலத்தின் பாசன திட்டங்களில் இடம் பெறுவதில்லை. இப்புது முறையைப் படிப்படியாகத்தான் செயல்படுத்த முடியும். பெரியார் வைகை பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் முடிந்ததும் இம்முறையை அமல்படுத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1980-1985 )ரூபாய் 23 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இவை நீங்கலாக ஆழ் மட்டத்தில் உள்ள நிலத்தடி நீரை குழாய்க் கிணறுகள் மூலம் வெளிக்கொணர்ந்து பாசனத்திற்குப் பயன் பயன்படுத்தவும் ஒரு திட்டத்தை தம்முடைய மாநில அரசு மேற்கொண்டிருக்கிறது. நிலத்தடி நீரை வெளிக் கொணர்வது என்பது சிறு விவசாயிகளால் இயலாதகாரியம். அதிலும் குறிப்பாக சிறிய அளவே உள்ள நிலத்தடி நீரை நல்ல முறையில் சிக்கனமாக பயன்படுத்துவது அவசியமானதாகும்.

இதற்காக சமுதாயக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, மாநிலக் குழாய்க் கிணறுக் கழகம் என்ற அமைப்பின் மூலம் நிர்வகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் குழாய்க் கிணறுகளை அமைத்து, விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு நீர்வழங்குவதுடன், தண்ணீர்த் தீர்வையையும் வசூல் செய்யும் இக்கழகம் விரைவில் அமைக்கப்பட அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இப்படி நம்முடைய மாநிலத்தில் அடுத்து வரும் ஆண்டுகளில் 440 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப் பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

இதன்மூலம் உணவு உற்பத்தியில் தமிழகம் ஓர் உபரி மாநிலமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

[19-4-81 - சென்னை வானொலி]


இயற்கை அழகுக்கு
இணை இதுவே!
கோ-ஆப்டெக்ஸ்



குடி நீர் வசதி



சிறு பாலம்



தாய் சேய் நல விடுதி



ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்



ஆதிதிராவிடர் குடியிருப்பு மயானப் பாதை

# தன்னிறைவுத் திட்டப் பணிகள்



சமுதாய மன்றம்



பள்ளிக் கட்டிடம்



கிராம மருந்தகம்



இணை


திருவள்ளுவர் ஆண்டு
துன்மதி வைகாசி 3
6-5-1981 50





# சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள்

மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர்
திரு. இராம. வீரப்பன்

ஏராளமான சுற்றுலா மையங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், அழகைக் கொட்டும் அருவிகளும், அடவிகளும், பார்ப்போரைப் பரவசப்படுத்தும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் அழகிய நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் செழிக்கும் நம் தமிழகத்தை அலங்கரிக்கின்றன. நீண்ட சாலை வசதிகளும், நாளும் வளர்ந்து வரும் போக்குவரத்து வசதிகளும் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன. எனவே சுற்றுலாத் தொழிலில் எந்தவொரு முதலீடும் மிக நல்ல பலனை அளிக்கும் நிலை உருவாகி வருகிறது.

சுற்றுலாவினால் ஏற்படும் நற்பயன்களை நன்குணர்ந்துள்ள இவ்வரசு, தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருவதினை, வரவு-செலவுத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அறியலாம். 1975–76 ஆம் ஆண்டில் சுற்றுலாவிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 22.70 இலட்சத்திலிருந்து இன்று 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 110 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதே இதற்கு எடுத்துக் காட்டாகும்.

தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியானது கீழ்க்கண்ட அடிப்படை நோக்கங்களைக் கருத்தில் கொண்டு அமையப் பெற்றதாகும் :—

1. பன்னாட்டுப் பயணிகளைக் கவரும் சுற்றுலாத் தலங்களை, அதிகப் பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாடடையச் செய்தல்,

2. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்களை, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணம் வளரும் வண்ணம் மேம்படுத்துதல்.

3. மாநிலத்திற்குள்ளே சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சங்களைக் கொண்டுள்ள, ஆனால் அதிகம் விளம்பரப் படுத்தப் பெறாத, சுற்றுலாத் தலங்களை வளர்ச்சிபெறச் செய்தல்,

4. உள்நாட்டுப் பயணிகளுக்கும் குறைந்த வருவாய்

85370
தமிழரசு
16—5—1981
மலர் 11 இதழ் 22
திருவள்ளுவர் ஆண்டு 2012 துன்மதி
22 மே 1981

பெறுவோர்க்கும் ஏற்ற வகையில், குறைந்த வாடகையில் தங்கு மிடவசதி ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவையாகும்.

**பயண வட்டங்களின் மேம்பாடு :**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சிக்காக குறைந்தது இரண்டு பெரிய ''பயண வட்டங்களைத்'' தமிழகத்தில் தெரிந்தெடுக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், கீழ்க்கண்ட மூன்று பயண வட்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென மைய அரசும், மாநில அரசும் செய்யவிருக்கும் முதலீடுகள் நல்ல பயனைவிளைவிக்கும் வகையில் இப்பயண வட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

1. சென்னை — மாமல்லபுரம் — திருக்கழுக்குன்றம் — காஞ்சிபுரம் — திருச்சிராப்பள்ளி — தஞ்சாவூர் — புதுக்கோட்டை — மதுரை — இராமேசுவரம் — கன்னியாகுமரி — குற்றாலம் — திருவனந்தபுரம் ;

2. சென்னை — கிருஷ்ணகிரி — ஓகேனக்கல் — ஏர்க்காடு — கோயம்புத்தூர் — உதகமண்டலம் — முதுமலை — மைசூர் — பெங்களூர் ;

3. இராமேசுவரம் — மதுரை—கொடைக்கானல்— புதுக்கோட்டை — திருச்சிராப்பள்ளி — தஞ்சாவூர் — மாமல்லபுரம் — சென்னை.

இம்மூன்று பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென ரூபாய் 70 கோடி செலவினைக்கொண்ட பெரும் திட்ட வரைவு ஒன்றும் வரையப்பட்டுள்ளது. பயண வட்டங்களின் மேம்பாட்டுத் திட்ட வரைவு, இந்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதற்கென அனுப்பப்பட்டு, மைய அரசின் பரிசிலனையில் இருந்து வருகின்றது.

**மாமல்லபுரம் :**

மாமல்லபுரத்தின் மேம்பாட்டிற்காக ரூ. 6 கோடி செலவில் மாபெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பெற்றுள்ளது. மாமல்லபுரத்தின் குடைவரைக்கோவிலும், கடற்கரைக் கோவிலும், வெண்மணற் பரப்பும், அழகிய கடற்கரையும், மாமல்லபுரத்தை உலகிலுள்ள சிறந்த சுற்றுலா இடங்களில் ஒன்றாக ஆக்குகின்றன. மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னுரிமை அடிப்படையில் முதற் கட்டமாக பின்வரும் ஐந்து திட்டங்களை நிறைவேற்றுவதெனக் கருதியுள்ளது :—

1. சுற்றுச் சாலை அமைத்தல்.
2. வாகனங்கள் நிறுத்துமிடத்தை உருவாக்குதல்.
3. ஒழுங்குமுறையில் அங்காடிகளை ஏற்படுத்துதல்.
4. எழில் வளாகம் உருவாக்குதல்.
5. பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து தருதல்.

இந்த ஐந்து திட்டங்களையும் மேம்படுத்துவதற்காக முதல் தவணையாக ரூ. 25 இலட்சம் வழங்குமாறு நாம் மத்திய அரசினைக் கேட்டுள்ளோம். அவர்களது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதியாக தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் கட்டுவதற்காக



1978–79 ஆம் ஆண்டில் 1,81,814 ரூபாய் செலவிடப்பட்டது. பயணிகள் தங்கவும், உணவினைச் சமைக்கவும் ஏற்ற விடுமுறைக்கால பயணத் திட்டத்திற்காக ரூபாய் 3.5 இலட்சம் 1979–80 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. பயணிகள் தங்குமிட மேம்பாட்டிற்காக 1980–81-ல் ரூபாய் 2.20 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பயணிகளின் தங்குமிடம் கட்டும் பணி நடந்தேறிவருகிறது. சித்திர, சிற்ப வேலைப்பாடு அமைந்த திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்றையும், மாமல்லபுரத்தில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வருங்காட்சியகம் கடற்கரைக்கருகில் சுமார் இருபத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1980–81-ல் இந்த அருங்காட்சியகத்திற்கென ரூ. 9.80 இலட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. 1981–82-ல் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்காகத் தேவை என்பதும் அரசின் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**இராமேசுவரம் :**

இராமேசுவரம் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மிக முக்கியமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாகும். ஸ்ரீலங்காவிலிருந்து கப்பலில் வரும் சுற்றுலாப் பயணிகள் இங்குதான் இறங்க வேண்டும். இராமேசுவரம் அழகிய கடற்கரையினையுடையதாகவும், பொழுது போக்குவதற்குச் சிறந்த இடமாகவும் விளங்குகிறது. இதற்கு அருகாமையிலுள்ள தீவுகள், அங்கு



கடல்வாழ் உயிரினங்களைக் கொண்டு தேசிய கடற்பொருள் பூங்கா அமைப்பதற்கு உகந்ததாக இருக்கின்றன. இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வாய்ப்பிருப்பதால், இராமேசுவரத்தையும், அதன் சுற்றுப் பகுதிகளையும் மேம்படுத்த மாபெருந்திட்டத்தை வகுத்துள்ளோம். இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 28 கோடியாகும். இத்திட்டம் பத்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் அனைத்து நாட்டு உதவிபெறும் தகுதியுடையதாக இருப்பதால் உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்றுத் தரும்படி மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

இங்கு போதிய வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்களையும், உடைகளை மாற்றிக்கொள்ள அறைகளையும் கட்டுவதற்கு அரசு ரூ. 3 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இராமேசுவரத்தைக் காண வேண்டுமென்ற ஆவலில் வருகின்ற குறைந்த வருமானமுடைய பயணிகளுக்காக 1981–82-ல் ரூபாய் 10 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் (துயிலக விடுதி) கட்டத் திட்டமிட்டுள்ளது.

**கன்னியாகுமரி:**

நம்நாட்டின் தெற்குமுனையில் அமைந்திருக்கும் கன்னியாகுமரியைக் காண நாள்தோறும் வெளிநாட்டுப் பயணிகளும், நம் நாட்டுப் பயணிகளும் வந்தவண்ணமிருக்கின்றனர்.

கன்னியாகுமரிப் பகுதியை மேம்படுத்த பெரும் திட்டத்தை தயாரிக்கவேண்டி சுற்றுலா பற்றி நன்கு அறிந்த வல்லுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இத்திட்டத்தைத் தயாரித்து வருகின்றார்.

குறைந்த வருமானமுடையோர் நிறைந்த பயனைப்பெறும் வண்ணம் துயிலக விடுதியும் (இளைஞர் இல்லம்), சுற்றுலா அலுவலகமும் கட்ட முறையே ரூபாய் 5 இலட்சமும், ரூ. 1 இலட்சமும் 1980–81-ல் ஒதுக்கப்பட்டது.

**உதகமண்டலம் :**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரிப்பகுதியை அழகுபடுத்த ரூ. 20.5 இலட்சம் ஒதுக்கப்பட்



டுள்ளது. இங்குள்ள படகு இல்லத்தை விரிவுபடுத்தவும், இப்பகுதியில் குழந்தைகள் இரயில் விடவும் கருதப்பட்டுள்ளது. 1981–82 இல் மேற்படி திட்டத்தின் கீழ் உதகமண்டலத்தை மேம்படுத்த ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**ஏர்க்காடு :**

**ஏர்க்காடு ஏரியை அழகுபடுத்த அரசு இதுவரை ரூ. 6.72 இலட்சம் வழங்கியுள்ளது.** புதிதாகப் படகு இல்லமும், சிற்றுண்டி விடுதியும் கட்டப்பட்டுள்ளன. பயணிகள் படகுகளில் உல்லாசமாகச் செல்வதற்குப் படகுகளும் உள்ளன. மேலும் ''லேடீஸ் சீட்'' என்னுமிடத்தில் தொலை நோக்கியகம் (Telescope House) ஒன்று கட்ட ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**கொடைக்கானல் :**

கொடைக்கானலில் இரண்டு தொலைநோக்கியகங்கள் ரூபாய் 1.6 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. சிற்றுண்டி இல்லம் கட்ட 1977–78 இல் ரூபாய் 2.8 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1978–79 இல் துயிலக விடுதி கட்ட ரூ. 7.03 இலட்சம் வழங்கப்பட்டது. துயிலக விடுதியும், சிற்றுண்டி இல்லமும் கட்டப்பட்டு வருகின்றன.

**பிச்சாவரம் :**

கிழக்குக் கடற்கரையில் இயற்கையன்னை எழிற்கோலம் பூண்டு, நீர்வழிப்பாதைகளும் காண்பதற்கரிய கானகக் காட்சிகளும் அமைந்த சிறப்பிடமாக பிச்சாவரம் அமைந்துள்ளது. விடுமுறை நாட்களில் மகிழ்வுலா வருவோரும், ஓய்வினை விழைவோரும் சென்று காண்பதற்கான சிறப்பினை உடையது. இப்பகுதியை, மேம்படுத்தி அங்கு வருகின்ற பயணிகள் தங்குவதற்கு ஓய்வுக்கூடம் கட்டுவதற்கு 1978–79-ல் அரசு ரூபாய் 4.5 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த ஓய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பல வசதிகளை அங்கு செய்து கொடுக்க

1979–80 இல் ரூபாய் 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அங்கு படகு இல்லம் கட்டி, வருகின்ற பயணிகள் உல்லாசமாகப் படகு சவாரி செய்ய, படகுகள் வாங்க, 1981–82 இல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல் :**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரக்கூடியதாக இருக்கிறது. இந்நீருக்கு நோய்களை நீக்கும் சக்தியும் உண்டு. குறைந்த வருமானம் உடைய பயணிகளுக்காகத் துயிலக விடுதி கட்ட 1979–80 இல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இவ்விடுதி கட்டப்பட்டு வருகிறது. 1981–82 இல் ரூபாய் 5 இலட்சம் செலவில் அங்கு தொங்குபாலம் கட்டவும் கருதப்பட்டுள்ளது.

**இளைஞர் இல்லங்கள் (துயிலக விடுதிகள்) :**

இளைய தலைமுறையினரும், குறைந்த வருமானமுடையோரும் பல்வேறு இடங்களையும் கண்டு மகிழ்வதற்கு ஏற்றவாறு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த எல்லா இடங்களிலும் இளைஞர் இல்லங்கள் (துயிலக விடுதிகள்) கட்டப்பட்டு வருகின்றன. ஒரு பயணிக்கு ரூபாய் 5 முதல் ரூபாய் 7.50 வாடகை கொடுத்து தங்குவதற்கேற்றவாறு இந்த இல்லங்கள் கட்டப்படவிருக்கின்றன. கீழ்க்காணும் இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

1. ஏர்க்காடு
2. மண்டபம்.
3. பிச்சாவரம்.
4. ஒகேனக்கல்.
5. கொடைக்கானல்.
6. கன்னியாகுமரி.
7. உதகமண்டலம்.
8. இராமேசுவரம்.
9. மாமல்லபுரம்.

**ஏர்க்காடு**, மண்டபம், ஒகேனக்கல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் இளைஞர் இல்லங்கள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மற்ற இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.



**சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிகள் :**

போர் நினைவுச் சின்னத்திற்கு அருகில் உள்ள ''தீவுத் திடலில்'' அகில இந்திய சுற்றுலா வர்த்தக 8-ம் பொருட்காட்சியை தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தியுள்ளது. இந்தத் தீவுத்திடலின் ஒருபகுதியை நமது வேண்டுகோளுக்கிணங்க, சுமார் 5.5 ஏக்கர் கொண்ட பகுதியை மத்திய அரசு மாநில அரசுக்கு மாற்றிக் கொடுத்துள்ளது. இப்பொருட்காட்சித் திடலை நிலையான பொருட்காட்சி இடமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதற்காக, இவ்வாண்டில், அரசு அடையாள நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி ஏற்படுத்தப்பட்ட தமிழ்ப்பண்பாட்டுச் சிறப்புப்பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை சிறப்பாகப் பங்கேற்றது. இதில் இத்துறை ஒலி-ஒளிக்காட்சியை அமைத்திருந்தது. இக்காட்சி, வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், நம்நாட்டு மக்களையும் பெரிதும் கவர்ந்தது.

**சுற்றுலாத் திரைப்படம் :**

இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களைப்பற்றி அறிவிக்கச் செய்தித் திரைப்படங்களைத் தயாரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ''தமிழ்நாட்டின் விடுமுறை நாள் மகிழ்விடங்கள்'' என்பது பற்றிய செய்தித் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திரைப்படம் ஓரிரு திங்களில் தயாரித்து முடிக்கப்படும்.

**நிழற்படத் தொகுப்பகம் :**

இத்துறை, நிழற்படத் தொகுப்பகம் ஒன்றை கொண்டுள்ளது. நம் மாநிலத்தில் உள்ள, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் பற்றிய நிழற்படங்களின் மூலப் பிரதிகள், வண்ணப் பிரதிகள் சேகரிக்கப்பட்டு, அட்டவணையிடப்பட்டு, இத்துறையில் வைத்து வரப்படுகின்றன. இவை, இத்துறையின் வெளியீடுகள், பொருட்காட்சிகள், விளம்பரங்கள் ஏனைய விளம்பர முறைகள் ஆகியவற்றில் அதிக அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை, செய்தித் தாள்கள், குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை வெளியிடப்படும் ஏடுகள், போக்குவரத்து வர்த்தக ஏடுகள் ஆகியவற்றிற்கும் வழங்கப்படுகின்றன.

நமது வெளியீடுகளில் வண்ண நிழற்படங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் 1981-82-ஆம் ஆண்டில் மூன்று இலட்சம்

ரூபாய் செலவில் வண்ணப் புகைப்படம் தயாரிக்கத் தேவையான கருவியும் (Colour Photo Processing Equipment) ஒலி—ஒளிக் கருவியும் (Audio—visual Equipment) வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் :

பொங்கல் விழாக் காலம் தமிழ்நாட்டிற்குரிய மிக முக்கியமான சுற்றுலாக் காலமாகும். இக்கால அளவில், வெளிநாட்டு மற்றும் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அதிக அளவிற்குத் தமிழ்நாட்டிற்கு வருகின்றனர். முக்கியமான சுற்றுலா நிலையங்கள் அனைத்திலும் பொங்கல் சுற்றுலா விழாவை ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்துறை நடத்தி வருகிறது.

உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு ஆகிய மலைவாழ் இடங்கள் அனைத்திலும் " கோடை விழா " வைக் கொண்டாட இத்துறை சிறப்பாக உதவி புரிகிறது.

சுற்றுலாத் தகவல் நிலையங்கள்:

1980-81-ஆம் ஆண்டில் நாம் சுற்றுலாத் துறையை பலப்படுத்தியுள்ளோம். சென்னையில் புதியதாக சுற்றுலா அலுவலகம் ஒன்றை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1980-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் டில்லியில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்றையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

திருநெல்வேலி இரயில் சந்திப்பு நிலையத்திலும், சென்னை மத்திய இரயில் நிலையத்திலும், சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:

சுற்றுலா வளர்ச்சியை வணிக அடிப்படையில் கவனிக்கும் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அளிக்கும் நிதி உதவி ஆண்டுக்காண்டு பெருகி வருகிறது. இதனால், இத்துறையில் நல்ல முன்னேற்றம் காண இக்கழகத்திற்கு வழி ஏற்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகம் வணிக அடிப்படையில் சீரமைக்கப்பட்டு, அதன் பணிகள் பல மடங்கு விரிவடைந்துள்ளன. தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவையான பயண வசதிகளையும் தங்கும் வசதிகளையும் உருவாக்கித் தருவதில் இக்கழகம் முன்னணியில் நிற்கிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இக்கழகம் அளிக்கும் போக்குவரத்து வசதிகளையும், தங்கும் இடவசதிகளையும் விரும்பி ஏற்கின்றனர். குறைந்த நியாயமான செலவில் அதிக வசதிகளை இக்கழகம் அளிப்பதே இதற்குக் காரணமாகும். இதனால், இக்கழகத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு கோடியையும் மிஞ்சியுள்ளது. எனவே, இது 1—7—1980 முதற்கொண்டு, வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறியுள்ளது.

இக்கழகத்தின் வருமானம் 1971-72-ல் ரூபாய் 4·58 இலட்சமாக இருந்தது. 1976-77-ல் இக்கழகத்தின் வருமானம் ரூபாய் 68·51 இலட்சமாக உயர்ந்தது. 1980-81-ல் இவ்வருவாய் ரூபாய் 153 இலட்சமாகப் பெருகியது. 1981-82-ல் இது ரூபாய் 200 இலட்சமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. முதன் முறையாக இக்கழகம் 1977-78-ல் நிகர ஆதாயம் ஈட்டியது. முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகள் இப்பொழுது ஈடு செய்யப்பட்டுவிட்டது. மேலும், அரசிடமிருந்து பெற்ற கடன்களுக்கும், இக்கழகம் வட்டி கட்டத் தொடங்கியுள்ளது. வட்டி செலுத்துவதற்கு முன்னர் 1980-81-ஆம் ஆண்டிற்கான நிகர வருவாய் ரூபாய் 15 இலட்சமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 1971-ல் ரூபாய் 50 இலட்சமே. இது 1974-ல் ரூபாய் 100 இலட்சமாகவும், 1977-ல் ரூபாய் 200 இலட்சமாகவும், 1980-ல் ரூபாய் 500 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இக்கழகத்தின் தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 195·05 இலட்சமாகும்.

1981-82-ல் இக்கழகத்திற்கு பங்கு மூலதன உதவியாக ரூபாய் 20 இலட்சமும் கடனுதவியாக ரூபாய் 20 இலட்சமும் அரசினால் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஓட்டல்கள் :

1971-ல் இக்கழகம் அமைக்கப்பட்டபோது அரசால் நடத்தப்பட்ட 6 சுற்றுலா மாளிகைகளை அது தனது நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொண்டது. அப்போது அச்சுற்றுலா மாளிகைகளில் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 253 ஆக இருந்தது.

1975-76-ல் மொத்தம் 752 படுக்கை வசதிகள் கொண்ட 11 சுற்றுலா மாளிகைகள் இருந்தன. அண்மையில் மதுரையில் கட்டப் பெற்ற 3 நட்சத்திர ஓட்டல் உட்பட தற்போது மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை கழகத்திற்குச் சொந்தமான 16 ஓட்டல்களிலும் 1,095 ஆகும். அத்துடன் மதுரை, உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, ஏர்க்காடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள ஓட்டல்கள் விரிவு படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூரில் ரூபாய் 35 இலட்சம் செலவில் கட்டப்படும் 91 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு புதிய மூன்று நட்சத்திர ஓட்டல் விரைவில் செயல்படத் தொடங்கும். மாமல்லபுரத்தில் ரூபாய் 30 இலட்சம் செலவில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய 30 புதிய குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. முதுமலை, காஞ்சிபுரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய ஓட்டல்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. சென்னையில் நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்ட, இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வழி நெடுகிலும் வசதிகளைச்செய்து கொடுப்பதற்காக இராணிப்பேட்டையிலும், உளுந்தூர்ப்பேட்டையிலும் இரண்டு " பெருவழி விடுதிகள் " செயல்படத் தொடங்கியுள்ளன. கிருஷ்ணகிரியில் மூன்றாவது " பெருவழி விடுதியைக் " கட்டும் பணி நடந்தேறி வருகிறது. இம்மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்திலும் " பெருவழி விடுதிகளைக் " கட்ட இக்கழகம் விழைகிறது.

தற்போது கழகம் நடத்தி வரும் ஓட்டல்கள், பெருவழி விடுதிகள் ஆகியவை பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன :—

ஓட்டல்கள் :

சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை (இரு ஓட்டல்கள்), இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி (இரு ஓட்டல்கள்), உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, ஒகேனக்கல், மாமல்லபுரம்.

பெருவழி விடுதிகள் :

இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை.

ஓட்டல்களிலிருந்து 1971-72 ஆம் ஆண்டில் ரூபாய் 4·50 இலட்சம் வருவாய் கிட்டியது. இது 1976-77 ஆம் ஆண்டில் ரூபாய் 40 இலட்சமாகவும், 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 85 இலட்சமாகவும் உயர்ந்தது.

போக்குவரத்து :

கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு கடந்த மூன்றாண்டுகளில் முழுவதும் மாற்றியமைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் தெரிவித்த அனுபவத்தின் அடிப்படையில் பழைய பயணத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டதுமல்லாமல் எல்லோரையும் கவரும் வகையில் புதிய பயணத் திட்டங்களும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. நமது பயணத்திட்டங்கள் நாட்டிலேயே மிகச் சிறந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அண்டை மாநிலங்களிலும் இதுபோன்ற கழகங்கள், நமது போக்குவரத்துப் பணி குறித்துக் கண்டறிந்து செல்வதற்காக தங்களது அலுவலர்களை அனுப்பியுள்ளதுவே, இதற்கு சான்றாகும். இக்கழகம் தற்போது பின்வரும் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகின்றது :

1. சென்னை மாநகரில் முக்கிய இடங்களை அன்றாடம் சுற்றிப்பார்த்தல்.

2. காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்க்கும் அன்றாடப் பயணம்.

3. திருப்பதிக்கு அன்றாடப் பயணம்.

4. ஏழு நாள் தமிழ்நாடு சுற்றுப்பயணம்.

5. ஏழுநாள் தென்னிந்திய சுற்றுப்பயணம்.

வாடிக்கையாளர்களின் வசதிக்குத் தகுந்த வகையில் தனிப்பட்ட சுற்றுலாப் பயணங்களும் நடத்தப்படுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே நாம் ஏற்பாடு செய்யும் சுற்றுலாப் பயண திட்டங்கள் மிகவும் பாராட்டு பெற்றவையாக உள்ளன. இப்பகுதிகளிலிருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு, மலேசியாவிலும் சிங்கப்



பூரிலும் பொது விற்பனை முகவர்களைக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் இந்தியாவிலேயே இத்தகைய ஏற்பாட்டை முதன் முதல் மேற்கொண்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாப் பயணச் சீட்டுகள் எளிதில் கிடைக்க வகை செய்யும் பொருட்டு, சென்னையிலுள்ள பெரிய ஓட்டல்களும், சுற்றுலாப் பயண முகவர் அமைப்புகளும் 1979 அக்டோபர் திங்கள் முதல் இக்கழகத்தின் பயணச் சீட்டு விற்கும் முகவர்களாக ஆக்கப்பட்டனர். பம்பாய், டில்லி போன்ற பெரும் நகர்களிலும் நமது சுற்றுலாப் பயண ஊர்தியில் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டுகள் கிடைக்கின்றன.

1972 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவில் தொடக்கத்தில் 2 சொகுசு ஊர்திகள் மட்டுமே இருந்தன. தற்போது குளிர் சாதன வசதியுடன் கூடிய ஒரு சுற்றுலா ஊர்தி உட்பட மொத்தம் 15 சொகுசு ஊர்திகள் உள்ளன. விரைவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய ஊர்திகள் இன்னும் இரண்டு சேர்க்கப்படவுள்ளன.

நமது சுற்றுலாப் பயணங்களுக்கு இவ்வூர்திகள் பயன்படுத்தப் படுவதோடு, கூட்டமாகச் சேர்ந்து சுற்றுலா செல்வோருக்கு வாடகைக்கும் விடப்படுகின்றன.

போக்குவரத்துப் பிரிவில் 31—3—1981 ஆம் நாள் வரையில் 35 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவிலிருந்து 1972-73 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாயும் 1976-77 ஆம் ஆண்டில் 14 இலட்சம் ரூபாயும் வருவாய் கிடைத்தது. 1980-81 ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது.

**ஏனைய நடவடிக்கைகள் :**

**படகு இல்லம் :** உதகமண்டலத்தில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான படகு இல்லத்தை 1977 ஆம் ஆண்டில், அதனிடமிருந்து இக்கழகம் எடுத்துக் கொண்டது. புதிய படகு இல்லம் ஒன்று ஏர்க்காட்டில் 1979 ஏப்ரலில் கட்டப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக இப்படகு இல்லத்தில் அதிகப் படகுகள் இயக்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள் :**

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டபோது அதில் மொத்தம் 143 பேர்கள் பணியாற்றினர். தற்போது 750 பேர்கள் பணியாற்றுகிறார்கள். பணியாளர்களின் நலனில் நிர்வாகம் எப்போதுமே அக்கறை செலுத்தி வருகிறது. உணவகப் பிரிவிலும் போக்குவரத்துப் பிரிவிலும் உள்ள பணியாளர்கள், அரசின் பல்வேறு சட்டங்களில் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு சம்பளம், மற்றும் படிகளைவிட அதிகமாகவே பெற்று வருகிறார்கள். இத்துடன், கழகம் தனது பணியாளர்களுக்குப் பல ரொக்க, ரொக்கமல்லாத பயன்களையும் வழங்கி வருகிறது.

இக்கழகம் தனது பணியாளர்களுக்கு முதன் முதலாக 1978 செப்டம்பரில் ஊதியக் கொடையை (Bonus) வழங்கியது. அதிலிருந்து தொடர்ந்து கொடுத்தும் வருகிறது.

பணியாளர்கள் தங்களது பிரிவில் ஈட்டிய உபரித் தொகையில் பங்குபெற இயலும் வண்ணம் ஊக்க ஊதியக் கொடை வழங்கும் முறை தயாரிக்கப்பட்டு 1979 அக்டோபர் முதல் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த நடைமுறை 1980 அக்டோபர் முதல் நாளிலிருந்து மேலும் தாராளமாக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகளிலும் பெருவழி விடுதிகளிலும் (Motels) உள்ள பணியாளர்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்கப்படுகிறது. பணியாளர் பணிக்கொடை பொறுப்பு நிதி ஒன்று 30—1—1980 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளியூரில் உள்ள பணியாளர் அனைவருக்கும் வீட்டு வசதி செய்து தரும் பொருட்டு, படிப்படியான நிலையில் பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகப் பணியாளர் அனைவருக்கும் மருத்துவ உதவித் திட்டம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அரசு மருத்துவ மனைகள் அனைத்திலும் இதன் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களுக்கு நிகராக இலவச மருத்துவ சிகிச்சை பெறலாம்.

தனி ஊதியங்கள் (Adhoc wages) பெற்ற பணியாளர்கள் 1—1—1979 முதல் காலச் சம்பள ஏற்ற முறையின் கீழ் கொண்டு வரப்பட்டனர். "சிறப்பாக அமைக்கப்பட்ட ஊதியங்கள் துணைக் குழுவின்" பரிந்துரைகளை ஒட்டி, மலைப் பகுதிப் படி, அகவிலைப்படி போன்ற சிறப்புப் படிகளை வழங்குவதன் மூலம் பணியாளர்களின் ஊதியங்கள் 1980 அக்டோபர் முதல் கணிசமான அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டன.

இவை அனைத்துடன் சேர்த்து பணியாளர் ஒருவரின் மாத சராசரி ஊதியம் 1971-72ல் ரூ. 140 ஆகவும் 1976-77ல் ரூ. 210 ஆகவும் இருந்தது. பின் 1980-81ல் ரூ. 420 க்கு உயர்ந்தது.

**[29—4—1981 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து].**

# பாவேந்தர் பாரதிதாசன் விழா

உழைப்பாளர் திருநாளான மே முதல் நாள்!

சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவச் சிலை கம்பீரமாகக் காட்சி தருகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் விழா வினையொட்டி, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பாவேந்தர் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். அவ்வமயம் அமைச்சர் பெருமக்களும்



உடன் வந்திருந்து பாவேந்தர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்று காலை, சென்னை கலைவாணர் அரங்கிலிருந்து மங்கல இசை காற்றிலே மிதந்து வந்தது.

ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இப்படித் திரள் திரளாக மக்கள் வந்த வண்ணமிருந்தனர்.

பாவேந்தர் பாரதிதாசன்விழாவைக் காணத்தான் வெள்ளம் போல் தமிழர் கூட்டம் அங்கே திரண்டிருந்தது.

தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்பெற்ற இந்தச் சீர்மிகு பெருவிழாவை, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தொடங்கி வைத்தார். தொடக்க உரையில் அவர் குறிப்பிட்டதாவது:

"பாவேந்தர் பாரதிதாசன் [illegible]

ஆண்டிலேயே வித்துவான் பட்டம் பெற்றுப் பாராட்டப்பெற்றவர். அந்தக் காலத்தில், சுதேசமித்திரன், தேசபக்தன் ஆகிய பத்திரிகைகளிலே புரட்சிகரமாக எழுதி மக்களிடையேவிழிப்புணர்ச்சியை ஊட்டி வந்தவர். 1929ல் தந்தை பெரியார் அவர்களுடன் அவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. அதுமுதல் அவர், பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்லி வந்தார்.

"அவர் தொழிலாளர் உலகம் பற்றி, நிறையப் பாடியிருக்கிறார்' லெனினே ஒரு கவிஞராக இருந்தால்கூட அப்படிப் பாடியிருப்பாரோ என்பது சந்தேகம்தான்!

"திருக்குறளுக்குப் புதிய கோணத்தில் புத்துரை கண்டவர் அவர். சோஷலிச சித்தாந்தங்களை ஆராய்ந்த அவர், தமிழைப் பற்றியே எண்ணினார், தமிழுக்காகவே வாழ்ந்தார். அவருடைய கவிதைகள் நோபல் பரிசு பெறக் கூடிய அளவுக்குத் தகுதி வாய்ந்தவை. பாவேந்தர் கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது."

பிறகு, கருத்துமழை பொழியும் கவியரங்கம் நடந்தது. கவியரங்கத்தில் பங்குபெறும் கவிஞர்களை சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

கவியரங்கத்திற்கு டாக்டர் சரளா ராசகோபாலன் அவர்கள் தலைமை வகித்தார். 'பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில்...' [illegible]

திருமதி நிர்மலா சுரேஷ் (குடும்பம்), திருமதி கு. ரோகிணி (மகளிர்), திருமதி தங்க அன்புவல்லி (தொழிலாளர்) ஆகியோர் கவிதை பாடி அவையோரைக் களிப்பில் ஆழ்த்தினர்.

மாலை 3 மணிக்கு இனிய இசை நிகழ்ச்சி நடந்தது. திரு சீர்காழி ஜி. சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசை விருந்து அனைவரையும் கவர்ந்தது.

மாலை 4 மணியளவில் மாலை நிகழ்ச்சி துவங்கியது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் அவர்கள் தமது வரவேற்புரையில் "சமுதாய மறுமலர்ச்சிக் கவிஞராக-தனக்கென வாழாத் தகைசால் பெருங்கவிஞராக விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனின் விழாவினை தமிழக அரசு கொண்டாடுவதில் பெருமை கொள்கிறது" என்றார்.

"பாவேந்தர் பாடல்களில் காதல் உணர்வே விஞ்சி நிற்கிறது என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கா. காளிமுத்து அவர்கள் தலைமை ஏற்றார். திரு. வலம்புரிஜான், திருமதி உமையாள்முத்து இருவரும் வழக்குத் தொடுத்தனர்.

திரு. தமிழ்க் குடிமகன், திருமதி இளம்பிறை மணிமாறன் இருவரும் எதிர்வழக்காடினர்.

இறுதியில் மாண்புமிகு அமைச்சர் திரு காளிமுத்து அவர்கள் [illegible]

பூரிலும் பொது விற்பனை முகவர்களைக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் இந்தியாவிலேயே இத்தகைய ஏற்பாட்டை முதன் முதல் மேற்கொண்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாப் பயணச் சீட்டுகள் எளிதில் கிடைக்க வகை செய்யும் பொருட்டு, சென்னையிலுள்ள பெரிய ஓட்டல்களும், சுற்றுலாப் பயண முகவர் அமைப்புகளும் 1979 அக்டோபர் திங்கள் முதல் இக்கழகத்தின் பயணச் சீட்டு விற்கும் முகவர்களாக ஆக்கப்பட்டனர். பம்பாய், டில்லி போன்ற பெரும் நகர்களிலும் நமது சுற்றுலாப் பயண ஊர்தியில் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டுகள் கிடைக்கின்றன.

1972 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவில் தொடக்கத்தில் 2 சொகுசு ஊர்திகள் மட்டுமே இருந்தன. தற்போது குளிர் சாதன வசதியுடன் கூடிய ஒரு சுற்றுலா ஊர்தி உட்பட மொத்தம் 15 சொகுசு ஊர்திகள் உள்ளன. விரைவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய ஊர்திகள் இன்னும் இரண்டு சேர்க்கப்படவுள்ளன.

நமது சுற்றுலாப் பயணங்களுக்கு இவ்வூர்திகள் பயன்படுத்தப் படுவதோடு, கூட்டமாகச் சேர்ந்து சுற்றுலா செல்வோருக்கு வாடகைக்கும் விடப்படுகின்றன.

போக்குவரத்துப் பிரிவில் 31—3—1981 ஆம் நாள் வரையில் 35 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவிலிருந்து 1972-73 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாயும் 1976-77 ஆம் ஆண்டில் 14 இலட்சம் ரூபாயும் வருவாய் கிடைத்தது. 1980-81 ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது.

**ஏனைய நடவடிக்கைகள் :**

**படகு இல்லம் :** உதகமண்டலத்தில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான படகு இல்லத்தை 1977 ஆம் ஆண்டில், அதனிடமிருந்து இக்கழகம் எடுத்துக் கொண்டது. புதிய படகு இல்லம் ஒன்று ஏர்க்காட்டில் 1979 ஏப்ரலில் கட்டப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக இப்படகு இல்லத்தில் அதிகப் படகுகள் இயக்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள் :**

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டபோது அதில் மொத்தம் 143 பேர்கள் பணியாற்றினர். தற்போது 750 பேர்கள் பணியாற்றுகிறார்கள். பணியாளர்களின் நலனில் நிர்வாகம் எப்போதுமே அக்கறை செலுத்தி வருகிறது. உணவகப் பிரிவிலும் போக்குவரத்துப் பிரிவிலும் உள்ள பணியாளர்கள், அரசின் பல்வேறு சட்டங்களில் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு சம்பளம், மற்றும் படிகளைவிட அதிகமாகவே பெற்று வருகிறார்கள். இத்துடன், கழகம் தனது பணியாளர்களுக்குப் பல ரொக்க, ரொக்கமல்லாத பயன்களையும் வழங்கி வருகிறது.

இக்கழகம் தனது பணியாளர்களுக்கு முதன் முதலாக 1978 செப்டம்பரில் ஊதியக் கொடையை (Bonus) வழங்கியது. அதிலிருந்து தொடர்ந்து கொடுத்தும் வருகிறது.

பணியாளர்கள் தங்களது பிரிவில் ஈட்டிய உபரித் தொகையில் பங்குபெற இயலும் வண்ணம் ஊக்க ஊதியக் கொடை வழங்கும் முறை தயாரிக்கப்பட்டு 1979 அக்டோபர் முதல் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த நடைமுறை 1980 அக்டோபர் முதல் நாளிலிருந்து மேலும் தாராளமாக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகளிலும் பெருவழி விடுதிகளிலும் (Motels) உள்ள பணியாளர்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்கப்படுகிறது. பணியாளர் பணிக்கொடை பொறுப்பு நிதி ஒன்று 30—1—1980 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளியூரில் உள்ள பணியாளர் அனைவருக்கும் வீட்டு வசதி செய்து தரும் பொருட்டு, படிப்படியான நிலையில் பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகப் பணியாளர் அனைவருக்கும் மருத்துவ உதவித் திட்டம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அரசு மருத்துவ மனைகள் அனைத்திலும் இதன் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களுக்கு நிகராக இலவச மருத்துவ சிகிச்சை பெறலாம்.

தனி ஊதியங்கள் (Adhoc wages) பெற்ற பணியாளர்கள் 1—1—1979 முதல் காலச் சம்பள ஏற்ற முறையின் கீழ் கொண்டு வரப்பட்டனர். "சிறப்பாக அமைக்கப்பட்ட ஊதியங்கள் துணைக் குழுவின்" பரிந்துரைகளை ஒட்டி, மலைப் பகுதிப் படி, அகவிலைப்படி போன்ற சிறப்புப் படிகளை வழங்குவதன் மூலம் பணியாளர்களின் ஊதியங்கள் 1980 அக்டோபர் முதல் கணிசமான அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டன.

இவை அனைத்துடன் சேர்த்து பணியாளர் ஒருவரின் மாத சராசரி ஊதியம் 1971-72ல் ரூ. 140 ஆகவும் 1976-77ல் ரூ. 210 ஆகவும் இருந்தது. பின் 1980-81ல் ரூ. 420 க்கு உயர்ந்தது.

**[29—4—1981 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து].**

# பாவேந்தர் பாரதிதாசன் விழா



உழைப்பாளர் திருநாளாம் மே முதல் நாள்!

சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவச் சிலை கம்பீரமாகக் காட்சி தருகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் விழாவினையொட்டி, மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பாவேந்தர் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். அவ்வமயம் அமைச்சர் பெருமக்களும்

ஆண்டிலேயே வித்துவான் பட்டம் பெற்றுப் பாராட்டப்பெற்றவர். அந்தக் காலத்தில், சுதேசமித்திரன், தேசபக்தன் ஆகிய பத்திரிகைகளிலே புரட்சிகரமாக எழுதி மக்களிடையேவிழிப்புணர்ச்சியைஊட்டி வந்தவர். 1929ல் தந்தை பெரியார் அவர்களுடன் அவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. அதுமுதல் அவர், பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்லி வந்தார்.

''அவர் தொழிலாளர் உலகம் பற்றி, நிறையப் பாடியிருக்கிறார்'

திருமதி நிர்மலா சுரேஷ் (குடும்பம்), திருமதி கு. ரோகிணி (மகளிர்), திருமதி தங்க அன்புவல்லி (தொழிலாளர்) ஆகியோர் கவிதை பாடி அவையோரைக் களிப்பில் ஆழ்த்தினர்.

மாலை 3 மணிக்கு இனிய இசை நிகழ்ச்சி நடந்தது. திரு சீர்காழி ஜி. சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசை விருந்து அனைவரையும் கவர்ந்தது.

மாலை 4 மணியளவில் மாலை நிகழ்ச்சி துவங்கியது,

உடன் வந்திருந்து பாவேந்தர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்று காலை, சென்னை கலைவாணர் அரங்கிலிருந்து மங்கல இசை காற்றிலே மிதந்து வந்தது.

ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இப்படித் திரள் திரளாக மக்கள் வந்த வண்ணமிருந்தனர்.

பாவேந்தர் பாரதிதாசன்விழாவைக் காணத்தான் வெள்ளம் போல் தமிழர் கூட்டம் அங்கே திரண்டிருந்தது.

தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்பெற்ற இந்தச் சீர்மிகு பெருவிழாவை, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தொடங்கி வைத்தார். தொடக்க உரையில் அவர் குறிப்பிட்டதாவது:

''பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பழகுவதற்கு இனியவர்; தாய் உள்ளத்தோடு பழகுகிற பாங்கினைப் பெற்றவர். அவரது கவிதையிலே இலக்கணமும், இலக்கியமும் இணைந்து நிற்பதைப் [illegible] 1908-ஆம் [illegible]

லெனினே ஒரு கவிஞராக இருந்தால்கூட அப்படிப் பாடியிருப்பாரோ என்பது சந்தேகம்தான்!

''திருக்குறளுக்குப் புதிய கோணத்தில் புத்துரை கண்டவர் அவர். சோஷலிச சித்தாந்தங்களை ஆராய்ந்த அவர், தமிழைப் பற்றியே எண்ணினார், தமிழுக்காகவே வாழ்ந்தார். அவருடைய கவிதைகள் நோபல் பரிசு பெறக் கூடிய அளவுக்குத் தகுதி வாய்ந்தவை. பாவேந்தர் கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது.''

பிறகு, கருத்துமழை பொழியும் கவியரங்கம் நடந்தது. கவியரங்கத்தில் பங்குபெறும் கவிஞர்களை சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

கவியரங்கத்திற்கு டாக்டர் சரளா ராசகோபாலன் அவர்கள் தலைமை வகித்தார். 'பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில்...' என்னும் தலைப்பில், [illegible] பங்கு பெற்ற [illegible] கவியரங்கம் நடந்தது.

திருமதி அரசு மணிமேகலை (இயற்கை), செல்வி மதிஒளி (தமிழ்), திருமதி பொன்மணி [illegible]

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம் அவர்கள் தமது வரவேற்புரையில் ''சமுதாய மறுமலர்ச்சிக் கவிஞராக-தனக்கென வாழாத் தகைசால் பெருங்கவிஞராக விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனின் விழாவினை தமிழக அரசு கொண்டாடுவதில் பெருமை கொள்கிறது'' என்றார்.

''பாவேந்தர் பாடல்களில் காதல் உணர்வே விஞ்சி நிற்கிறது என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கா. காளிமுத்து அவர்கள் தலைமை ஏற்றார். திரு. வலம்புரிஜான், திருமதி உமையாள்முத்து இருவரும் வழக்குத் தொடுத்தனர்.

திரு. தமிழ்க் குடிமகன், திருமதி இளம்பிறை மணிமாறன் இருவரும் எதிர்வழக்காடினர்.

இறுதியில் மாண்புமிகு அமைச்சர் திரு காளிமுத்து அவர்கள் தமது உரையில்,

''இவ்வுலகில் பாவேந்தர் தம் கவிதை வாக்கு மூலத்தின் [illegible]

நிகழ்ச்சித் தொகுப்பு

பீ. வி. கிரி.



பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும் கவிஞர் முத்துலிங்கம்.

வாயிலாகத் தீர்ப்பு வழங்கமுனை கிறேன்.

''ஏடெடுத்தேன் கவியொன்று எழுதிட என்று தொடங்கிய பாவேந்தர் 'வானம் என்னை எழுது' என்று சொல்லியது' என் றும், 'மான், மயில், கதிர், நிலவு, தென்றல், குன்றம், அனைத்தும்' தம்மை எழுதுமாறு கேட்டன என்றும் குறிப்பிட்டு விட்டு இறுதி யில் இன்னலில் சிக்கிய தொழி லாளர்களைக் குறித்து எழுத முனைகிறார்.

''காதல் என்பது விரிந்துபட்ட பொருள் உடையது என்று வலம் புரிஜான் குறிப்பிட்டார். அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவ் வாறின்றி ஆண் பெண் சேர்க்கை தான் காதல் எனக் கருதப்பட் டால் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்.'' என்று குறிப்பிட் டார்.

மாண்புமிகு தலைமை நீதிபதி டாக்டர் திரு மு.மு. இஸ்மாயீல் அவர்கள் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தலைமை நீதிபதி நமது தலைமையுரையில், 'சாதி மத-இனம் அனைத்திற்கும் வேறு பட்டவராக, கட்சி மாச்சரியங் களுக்கு இரையாகாமல் கட்சி களுக்கு அப்பாற்பட்ட ஒப்புயர் வற்ற உண்மைக் கவிஞராக பாரதிதாசன் திகழ்ந்தார்.

'மக்களின் மனப்போக்குக் தகுந்தாற்போல் பாடல்களைப் பாடியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மக்க ளோடு மக்களாக இரண்டறக் கலந்து எழுச்சியான பாடல் களைப் பாடி நீங்காத புகழுடன் மறைந்தும் மறையாத கவிஞராக விளங்குகிறார். இருபதாம் நூற் றாண்டின் இணையற்ற பெரும் கவிஞராக பாரதிதாசன் புகழ்க் கொடி நாட்டினார். எந்தக் கட் டத்திலும் பாரதிதாசனின் பாடல்கள் வயிற்றுப் பிழைப்புக் காக இருக்கவில்லை.

'சமுதாயத்திலுள்ள சீர்கேட் டைக் களைவதற்கும் சமுதாய மறு மலர்ச்சியையும் எழுச்சியை யும் உண்டாக்குவதற்காகவும் அவ ரது பாடல்கள் அமைந்திருந்தன. சமுதாய விடிவெள்ளியாக விளங் கும் பாரதிதாசனுக்கு விழா எடுப் பது மிக மிகப் பொருத்த முடை யதே' என்பர்.

பேராசிரியர் திரு ந. ராம நாதன் தமது உரையில், உண்மைக் கவிஞராக சுயமரியாதைச் சுட ராக விளங்கியவர் பாரதிதாசன்.

''மாங்குயில் கூவிடும்
பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும்
சிறைச்சாலை'
''மங்கை ஒருத்தி தரும் சுகமும்
எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை'

என்பன போன்ற பாட்ல்கள் சாகாவரம் கொண்ட பாடல் கள் எக்காலத்திற்கும் எக்காலத் தாராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை' என்று மேற்கோ ளுடன் விளக்கினார்.

பேராசிரியர் டாக்டர் திரு ந. சஞ்சீவி அவர்கள் பேசுகையில் ''முத்தமிழுக்கும் பொருந்தும் வித்தகக் கவிஞராக வாழ்ந்து காட்டியிருக்கிறார், பாரதிதாசன். உணர்வுதான் கடவுள் என்ற உயரிய கருத்தைச் சொல்லி விட்டுச் சென்றவர், 'நடுநிலைப்' பார்வையில் யார் அவரைப் பார்த்தாலும் அவர் பெரும் புல வர் என்பதை மறுக்கவோ மறைக் கவோ முடியாது. ''பாவேந்தர் பாரதிதாசன் விருது'' என்ற அறக்கட்டளை அமைத்த தமி முக முதல்வரைப் பாராட்டு கிறேன்'' என்றார்.

மாண்புமிகு சட்ட -மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள் பேசுகையில்,







பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் துணைவியார்.

''மாண்புமிகு புரட்சித் தலைவர் தத்துவங்களாக இருக்கிறவர் களுக்கு அரசு சார்பில் விழா எடுக்க ஏற்பாடு செய்திருக்கிற பாங்கினைப் பாராட்டுகிறோம்.

''தமிழ் என்னுடைய உயிர்'' என்று பாடியவர் பாரதிதாசன்- பொதுவுடைமை, சமுதாய ஏற்றத்தாழ்வுகளை விரட்டு வதற்கு வழி என்ன? என்பன போன்ற புரட்சிக் கவிதைகளைப் பாடிப்புகழ் உச்சியில் நிற்கிறவர் பாவேந்தர்.

''அவர் பாடிய பாடல்கள் அனைத்தும் இன்றைக்கு நனவா கிக் கொண்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் பேசுகையில், ''வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியுறச் செய்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். சொல்லுக்குச் சொல் சூடேற்றி, பொருளுக்குப் பொருள் ஒளி ஏற்றியவர் பாவேந்தர். பாவேந்தர் எந்தக் கருத்தா னாலும் அது மக்கள் மத்தியில் விரைவாகப் போக வேண்டும் என்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டவர். துணிவுட னும் தயக்கமின்றியும் தான் கொண்ட கருத்தை கூறுவார்.

"பாரதி தாசன் இன்றைக்கும்- என்றைக்கும் அணையாத விளக் காக விளங்குகிறார்'என்று புகழ் மாலையும் சூட்டினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கி விழா நிறைவு உரை யாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்: 'அமரர் பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தில் இருந்து குற்ற வியல் நீதிமன்றங்களில் தமிழ் பயன்படுத்தப்படும். சிவில் வழக் கிலும் தமிழைப் புகுத்த இருக் கிறோம் - அனைத்து மாவட்டங் களிலும் தமிழை ஆட்சி மொழி யாக்கி வருகிறோம்.




''பாவேந்தரின் நம்பிக்கைக குரிய பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் துணைவியார் இங்கு வந்து இருக்கிறார். அவ ருக்கு நாம் காணிக்கை செலுத்த இருக்கிறோம்.

''1958ஆம் ஆண்டு நான் கால் முறிந்து படுக்கையில் படுத்த நேரம். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை இழக்க நேரிட்டது. அவர் உடல் நிலை மோசம் அடைந்தபோது இதனை என்னிடம் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

''அவர் படுக்கையில் இருந்த சமயம் அமைச்சராக இப் போது இருக்கும் மாண்புமிகு ஆர். எம். வீ. அவர்களையும் மற்றும் நண்பர்களையும் அனுப்பி வைத்தேன். ஆனால் இயற்கை நம்மை ஏமாற்றிவிட்டது.

''தேவையான சமயத்தில் இயற்கை நம்மை மோசம்செய்து விடுகிறது. தனது பாடல்களில் அவர் தீவிரமான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்.

''தூங்காதே தம்பி தூங்காதே'' என்ற பாடல் எல்லாத் தரப்பின ருக்கும் பொருத்தமானதாக இருந்தது.

''திருடாதே பாப்பா திரு டாதே'' என்ற பாடலும் அவர் எழுதியதுதான். இவ்வளவு சிறப் பான அவர் பரிசுபெற இத்தனை யாண்டுகள் காத்துக் கொண் டிருக்க வேண்டியது இருந்தது. இதற்கு முன்பு யாரும் இத னைச் செய்ய முன்வரவில்லை.




வழக்காடு மன்றத்தில்...

''ஜீவாவின் துணைவியாருக்கு உதவிகள் செய்து இருக்கிறோம். இது எனது பணம் அல்ல-மக்கள் தந்த பணம். அது, மக்களின் தலைவர்களுக்கும் கவிஞர்களுக்கும் தொண்டர்களுக்கும் போய்ச் சேருகிறது. விழா கொண்டாடுவதில் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. மக்களுக்குச் செய்யும் நன்மைகளிலும் மகிழ்ச்சி அடைகிறோம் - மக்கள் துணையாக இருந்தால் மேலும் மேலும் பணியாற்ற முடியும்

''கவிஞர் முத்துலிங்கம், ஒரு கவிஞன் எப்படி இருக்கவேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறதோ அந்த வகையில் செயல்பட்டவர். இதுபோல, ஆண்டுதோறும் பரிசுகள் தர இருக்கிறோம். இதைச் செய்வதில் சில பிரச்சினைகளும் வரும். மக்கள் எங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என்று தெரிவித்தார்.

1980 -81ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருதாக பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் துணைவியாரிடமும், கவிஞர் முத்துலிங்கம் அவர்களிடமும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் பத்தாயிரம் வீதம் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார். இறுதியில் செய்தி - மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு. கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி கூறினார்.



## பெரியார் நினைவுக்குச் சில திட்டங்கள்

**1922**ஆம் ஆண்டில் கேரள மாநிலத்தில் வைக்கம் என்னும் ஊரில் பெரியார் அவர்கள் தீண்டாமையை எதிர்த்துப் போராடிய வரலாற்றின் நினைவாக அவ்வூரில் தந்தை பெரியார் அவர்களின் முழு உருவச் சிலை ஒன்று வைக்கவும், சிலை எழுப்பப்படவிருக்கும் இடத்தில் பூங்கா ஒன்று அமைக்கவும் கேரள அரசின் உதவியுடன் இத்திட்டங்களை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தந்தை பெரியார் மாநாட்டு அரங்கம் திராவிட கட்டிடக் கலையழகும், புதுமையும், வனப்பும், அனைத்து வசதிகளும் கொண்டதாக தந்தை பெரியார் நினைவாகச் சென்னையில் அமைக்கப்படும் திட்டமொன்று ஆலோசனையில் உள்ளது.

மாவட்டத் தலைநகரங்களில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு நினைவுத்தூண்கள் நிறுவப்பட வேண்டும் என்ற திட்டத்தின்படி முதல் நினைவுத்தூண் திருச்சியில் திறக்கப்படவிருக்கிறது. அந்நினைவுத்தூணில் தந்தை பெரியாரின் பொன்மொழிகள் சிறப்பிடம் பெறும்.

தந்தை பெரியார் சிறை வைக்கப்பட்டிருந்த சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மத்திய சிறைச் சாலைகளில் நினைவுக் கல்வெட்டுக்கள் அமைக்கும் ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட உள்ளது.



# உலகெலாம் மெச்சும் ஒப்பற்ற படைப்புகள்

மாமூலன்

**தோ**ன்று தொட்டு நிலவி வரும் பண்பாட்டுப் பெருமைகளையும், பலதலைமுறையாகப் பழகிவரும் கைவினைத் திறன் நேர்த்திகளையும், தமிழகத்தின் கைவினைப் பொருட்கள் உலகுக்குணர்த்திக் கொண்டிருக்கின்றன.

அவனி முழுவதும் தமிழ்நாட்டின் புகழைப் பரப்பிவருகின்ற கைவினைத் திறன் தொழில்களின் நுணுக்கங்கள், வடிவமைப்புக்கள் இவற்றைப் பாதுகாத்து வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி நிறுவனம் (Tamilnadu Handicrafts Development Corporation) மகத்தான சாதனை புரிந்து வருகிறது.

தமிழ்நாட்டுக்கு என்று தனிச் சிறப்புக்குரிய கைவினைப் பொருட்களைத் தயாரித்து விற்பனைக் கூடங்களான 'பூம்புகார்' விற்பனை மூலம் செய்து வருகிறது.

தமிழ்நாட்டின் கைத்திறன் தொழில்களில் தொன்மையானதும் சிறப்பானதும் உலோக வார்ப்படத் தொழிலாகும். கோவில்களுக்கான சிலைகளை உருவாக்குவது இத்தொழிலின் மூலம்தான். கலைச் சிறப்பும் கற்பனை வளமும் கொண்டது இத்தொழில். இவற்றைக் காப்பாற்றி இத்தொழில் சிதைந்து போகா வண்ணம் செயல்பட வைக்கும் பொருட்டு, சுவாமிமலையில் ஒரு பயிற்சி நிலையமும் சேலத்தில் ஒரு பயிற்சி நிலையமும் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு நிலையத்திற்கு 15பேர் வீதம் பயிற்சி





















கொடுத்து, பயிற்சி பெற்றவர்கள் இத்தொழிலைத் தொடர்ந்து நடத்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது. அனுபவம், தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களைக் கொண்டு, அடிப்படைத் தொழில் நுணுக்கங்களான மெழுகுவேலை, கரு உருவாக்குதல், மெழுகுவடித்தல், உலோக வார்ப்படம் செய்தல், வார்க்கப்பட்ட சிலையை முழு வடிவத்துக்கு ராவி, சீவி செதுக்கித் தீர்மானம் செய்தல் போன்ற எல்லா நுணுக்கங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதுவரை இவ்விரு நிலையங்களிலும் 60 பேர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் தொன்மையான தொழில்களில் கற்சிற்பத் தொழிலும் ஒன்றாகும். முற்காலத்தில் கற்கோயில் பல மன்னர்களால் கட்டப்பட்டுள்ளன. அதனால் அவர்கள் தொடர்ந்து இத்தொழிலைக் கடைப்பிடிக்க ஏதுவாக இருந்தது. இக்காலத்தில் அது போன்ற வாய்ப்புகள் இல்லையாதலால், தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை சார்பில் பல கோவில்களுக்குத் திருப்பணிகளை நடத்தி இக் கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புஅளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல கற்சிற்பத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் மாமல்லபுரத்தில் ஒரு கற்சிற்ப உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு, ஆற்றலும் திறனுமிக்க கைவினைஞரின் கண்காணிப்பில் 20 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்நிலையத்தில் கோவில்களுக்குத் தேவையான சிற்பங்களும் ஏற்றுமதிக்குத் தேவையான சிற்பங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.



இதே போன்று மரச்சிற்பத் தொழிலும் தமிழ்நாட்டின் மிகப் பழமையான தொழிலாகும். கோயில் இரதங்களை உருவாக்குவது இக்கைவினைஞர்களின் முக்கியத் தொழிலாகும். இப்பழமையான தொழில் சிதைவுறா வண்ணம் தொடர்ந்து வளர்வதற்கு வழி செய்யும் வகையில் நாகர்கோயிலில் தேர்ப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு, 10 தொழிலாளர்களுக்கு மூன்று ஆண்டு காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் இதுவரை சுமார் 60 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

## வெளிநாட்டுத் தேர்

நாகர்கோயில் மரச் சிற்பத் தொழில் நிலையத்தின் மூலம் சென்ற ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் ராயவரம் அருகில் உள்ள சாஸ்தா கோவிலுக்கு 36 அடி உயரத்தில் ஓர் இரதம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கோலாலம்பூரிலுள்ள மகாமாரியம்மன் கோயிலுக்காக 21 அடி உயரத்தில் ஒரு தேர் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பல கோயில்களுக்குத் தேவையான இரதங்கள் பற்றிய மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது. 'பூம்புகார்' எதிர் காலத்தில் தேர் செய்யும் தொழிலில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.







மேலும் தமிழ்நாட்டின்தொன்மையான கைத்திறன் தொழில்களான தஞ்சாவூர் கலைத்தட்டுத் தொழிலுக்கும் தஞ்சாவூர் பாணி ஓவியத்திற்கும் தனித்தனி பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர்க் கலைத்தட்டின் மையத்தில் இதுவரை இந்து கடவுளர் உருவங்கள் மட்டுமே பதிக்கப்பட்டு வந்துள்ளன. தற்பொழுது திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, போன்றோரின் உருவங்கள் ,தஞ்சைப் பெரிய கோயில், முஸ்லீம் மார்க்கச் சின்னங்கள், கிறிஸ்துவ மதச் சின்னங்கள், பல நிறுவனங்களின் அடையாளச் சின்னங்கள் போன்றவை பதிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் பாணி ஓவியத்திலும் கிறிஸ்துவ மத உருவங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களின் விற்பனை வாய்ப்பை அதிகரிக்க இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதில் நல்ல பயன் விளைந்துள்ளது.

நம்முடைய கைவினைப் பொருட்களில் இன்று உலகத்தோர் அனைவரையும் கவர்ந்துள்ளவைகளாகக் காணப்படுபவைகளில் தஞ்சாவூர்த் தட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளாக தஞ்சாவூரில், தஞ்சாவூர்த் தட்டுகள் கலைப் பொருட்களை



# தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம்

## சில தகவல்கள்



தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பொதுந் துறை நிறுவனமாக தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் நாள் நிறுவப்பட்டது. முன்பு அரசின் தொழில் துறையின் கீழ் இயங்கி வந்த விற்பனைகூடங்களின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும், மற்றும் மாநில கைத்திறத் தொழில் வளர்ச்சி கூட்டுறவு சங்கத்தின் வாணிப விற்பனைப் பொருட்களையும் ஏற்றுக் கொண்டு 1973ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி முதல் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இதற்கு அடுத்த ஆண்டில் அதாவது 1974-ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் முதல் தொழில் வணிகத் துறையின்கீழ் இயங்கிவந்த 14 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களையும் இந்நிறுவனம் மேற்கொண்டது.

கைத்திறன் தொழில்களுக்கும் கைவினைஞர்களுக்கும் தொழில் நுட்ப உதவி தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளித்தும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் வாயிலாக விற்பனை செய்வதன் மூலமும், மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொருட்காட்சிகள் அமைத்து விற்பனை வசதி ஏற்படுத்துவதன் மூலமும் தமிழ்நாட்டில் கைநுட்பத் தொழில் வளர்ச்சியில் தனியானதோர் எழுச்சியையும் புதிய போக்கையும் உருவாக்கிட கைநுட்பக் கலைத்தொழிலை மேம்பாட்டு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு த்னியானதோர் நிறுவனம் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, கடலூர், சேலம், வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை திருநெல்வேலி, சிதம்பரம் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்கள் மூலமாகவும், புதுடில்லி, பம்பாய் மற்றும் பெங்களூரிலுள்ள மூன்று விற்பனை நிலையங்கள் மூலமாகவும் பல்வேறு வகையான கைத்திறன் பொருட்கள் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம் 1980-81ஆம் ஆண்டில் புதிய விற்பனை நிலையங்களை கன்னியாகுமரியிலும், மதுரையிலும் உள்ள இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டிடத்திலும் துவக்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் 1979-80ஆம் ஆண்டின் வாணிபத் தொகை ரூ. 143 இலட்சமாகும். 1980-81ஆம் ஆண்டிற்கு வாணிபத் தொகை ரூ. 150.00 இலட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம் 17 பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் பலவகை கைத்திறன்களில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1979-80ஆம் ஆண்டில் 291 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கலைத்தட்டு செய்வதிலும், தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள் தீட்டுவதிலும் பயிற்சி அளிக்க தஞ்சாவூரில் இரண்டு பயிற்சி நிலையங்களை இந்நிறுவனம் துவக்கியுள்ளது. மேலும், வேலூரில் நூக்கமர கைத்திறன் பொருட்கள் பயிற்சி நிலையத்தையும் சென்னையில் நிர்மல் ஓவியம் பயிற்சி நிலையத்தையும், நடப்பாண்டில் துவக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூர் மக்களின் விருப்பத்திற்கும், அயல்நாட்டு சுற்றுலாப்பயணிகளின் விருப்பத்திற்கும் ஏற்றபடி, கைவினைப் பொருட்களில் புதிய வடிவமைப்புகளையும் புதிய செயல் முறைகளையும் உருவாக்கி ஒரு வடிவமைப்பு நிலையத்தை சென்னையில் நடத்தி வருகிறது.

செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தலைமுறை தலைமுறையாகத் தஞ்சாவூர் தட்டுகளைச் செய்யும் வேலைகளில் ஈடுபட்டுள்ள பொற்கொல்லர்கள் குடும்பங்கள் தஞ்சையில் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் நிறுவனத்தின் பயிற்சிக் கூடத்தில் இன்று பலர் ,தஞ்சாவூர்த் தட்டு செய்வதில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தஞ்சாவூர்த் தட்டு ரூ.15 முதல் ரூ. 15,000 வரை செய்யப்படுகிறது. மூன்று அங்குலம் விட்டம் உள்ள தட்டு முதல் 48 அங்குலம் விட்டம் உள்ள தட்டு வரை செய்யப்படுகிறது. இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் நாட்டு கைவினைப் பொருட்களில் ஒன்றாகத் தஞ்சாவூர்த் தட்டு திகழ்கிறது. உலகிலேயே இது போன்ற கைவினைப் பொருள் தமிழ்நாட்டில் தான் தயாரிக்கப்படுகிறது.

**காகிதப் பொம்மைகள் - மண் பொம்மைகள்**

சென்னை, கல்லூரிச் சாலையிலுள்ள வடிவமைப்புக் கூடத்தில் உற்பத்தி யாகும் கைவினைப் பொருட்களில்தான் எத்தனை விதம்!

காகித பொம்மைகளில் எத்தனை விதமான பொம்மைகள்! ஒவ்வொன்றும் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளவை.

" Terrocotta " என்று அழைக்கப்படும் சுட்ட மண் பொம்மைகள், செய்கிறார்கள். வெளிநாட்டாரைக் கவரும் வகையில் இப்பொம்மைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பித்தளைத் தகட்டில் உருவம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டின் கைவண்ணப் பொருட்களின் களஞ்சியமாகத் திகழும் பூம்புகார் விற்பனைக் கூடங்களில் விற்கப்படும் கைவினைப் பொருட்கள் இன்று உலகப் புகழ் பெறும் அளவில் வளர்ந்துள்ளன. இதற்கு அடிப்படையாக இருந்து, தரமான கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம் நாள்தோறும் வளர்ந்து வருகிறது.

அமெரிக்கா ஜப்பான், கிழக்கு ஆசிய நாடுகள், இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளில் நமது கைவினைப் பொருட்கள் எதிர் காலத்தில் மேலும் விற்பனையாகும் நல்வாய்ப்புகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. தனியான கலைச் செல்வமாக-தரமான கைவினைப் பொருட்களாக உற்பத்தியாகும் தமிழ்நாட்டுக் கைவினைப் பொருட்களால் நம் அனைவருக்குமே பெருமை!






அதோ! வருகிறாரே ஒரு இளைஞர், அவர் பி.ஏ., பட்டதாரி!

படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று சும்மா ஊர் சுற்றி வரவில்லை அவர்; வேலைக்கு ஒரு பக்கம் முயன்று கொண்டிருந்தாலும், பொழுதை வீணே கழிக்க விரும்பவில்லை அவர்.

அவருக்கு ஒரு யோசனை வந்தது. அவருடைய தந்தையார் தையல் தொழில் செய்து வந்தார். அந்தத் தொழில் இவருக்கும் தெரியும். அதில் கவனம் செலுத்தினால் என்ன? மனம் அவரை உந்தித் தள்ளியது.

தையல் தொழில்தான் என்றாலும், கடைக்கு இடம் பார்க்க வேண்டும், தையல் மிஷின் வாங்க வேண்டும், இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது? எவ்வளவு வேகத்துக்கு ஆர்வம் அவரை முன்னுக்குத் தள்ளியதோ, அதே வேகத்துக்குப் பொருளாதாரச் சிக்கல் அவரைப் பின்னுக்குத் தள்ளியது! அப்போது தான் அவருக்கு உதவி செய்ய முன் வந்தது ஒரு கரம். அந்தக் கரம் தான் அவர் வாழ வழி காட்டிய வங்கி! ஆம். அதுதான் 'தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்'. (Tamilnadu State Co-operative Bank Ltd.)

சென்னை மந்தைவெளியைச் சேர்ந்தவர் எம். கமாலுதீன், பி.ஏ., (தமிழ்) பட்டம் பெற்றவர். இந்த வங்கி கொடுத்த ரூபாய் ஆயிரத்தில் தையல் தொழிலைத் தொடங்கினார். இப்போது சாந்தோமில் தையற் கடை வைத்திருக்கிறார். இரண்டு தையல் மிஷின்கள் வைத்துக் கொண்டு சொந்தக் காலில் நிற்கும் இவர், 'வேறு வேலை கிடைத்தாலும் இந்த வேலையைவிட மாட்டேன்!' என்கிறார்.

இதேபோல, தங்கசாலையைச் சேர்ந்த எம். ராஜேந்திரன் அவர்களும் சொந்தமாகத் தையற் கடை வைத்திருக்கிறார். இந்த வங்கி இவருக்கு ரூ. 2,000 கடன் தந்து உதவியிருக்கிறது.

இப்படி, சமுதாயத்தின் அடித் தட்டில் இருக்கின்ற நலிந்தவர்களுக்கு நல்வாழ்வு தருகின்ற வகையிலே தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட், சிறு தொழில் முதல் பெருந்தொழில் வரை வளர்வதற்கு உதவி பல புரிந்து வருகின்றது.

சென்னை நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் சாலையிலுள்ள இந்த வங்கியின் தலைமையகத்துக்குள் நுழைகிறோம். வானளாவ நிற்கும் இந்த வங்கியின் வரலாற்றை ஓரளவு தெரிந்து கொள்கிறோம்.

1905ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இந்த வங்கியின் வயது எத்தனைத் தெரியுமா? எழுபத்தைந்து ஆண்டுகள்! ஆம். எழுபத்தைந்து ஆண்டுகள் ஏறுநடை போட்டு இந்த வங்கி இன்று பவள விழாவைக்கொண்டாடிக் கொண்டிருக்கிறது. துவக்கத்தில் இதன் பெயர்: 'சென்னை மத்திய நகர வங்கி'.

கடந்த 75 ஆண்டுகளாக தமிழகத்தில் தன் கூட்டுறவுப் பணியில் கோபுரமென வளர்ந்துவரும் இந்த வங்கி, பல்வேறு பணிகளுக்காகக் கடன்கள் தந்து உதவி வருகின்றது:

* விவசாயக் கடனுதவி.
* கைத்தறி நெசவு உற்பத்தி மற்றும் விற்பனைக்கான கடன்கள்.
* கூட்டுறவுச் சர்க்கரைஆலைகள், கூட்டுறவு நூற்புஆலைகள் ஆகியவைகளின் முதற் பொருள் மூதலனம் மற்றும் நடைமுறை மூலதனக்கடன் வசதி.
* உர விநியோகம், அத்தியாவசியப் பொருள்கள் விநி

பி. வி. கிரி

யோகம் ஆகிய கூட்டுறவு முயற்சிகளுக்கு நிதி வசதி.

* சிறப்பங்காடிகளுக்குக் கடனுதவி.

* நகைக் கடன் உதவி (நேரிடை மற்றும் மறுநிதிக் கடன்).

* சுயதொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவி, மாதச் சம்பளம் பெறுவோர்க்குக் கடன் உதவி மற்றும் பயன்படுபொருள் பெறக் கடன் உதவி.

* சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல்.

* மாநில தொழில் கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளுக்கு நிதி வசதியளித்தல்.

* தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு நிதி உதவி அளித்தல்.

* விவசாய வளர்ச்சிக்குஉதவுகின்ற அரசு நிறுவனங்களுக்கு நிதிஉதவி அளித்தல் (உத்தேசிக்கப்பட்டுள்ளது)

மேலே கூறப்பட்டுள்ள பணிகளுள், ஒரு சில அம்சங்களைத் தவிர ஏனைய அனைத்திலும், மாநில கூட்டுறவு வங்கி, தான் இயங்குகின்ற முறையில் வங்கிகளின் வங்கியாக (Federal) கூட்டுறவுகளின் மாநில அமைப்பாக (Apex Body) இயங்கி வருகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிராம அளவில், தமிழகத்தில் இன்று ஏறக்குறைய 5000 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவின் ஆணிவேர் அமைப்புக்களாக (Grass Root Agencies) விவசாயிகளுக்குப் பெரும்பணி ஆற்றிவருகின்றன. வட்ட அளவில், ஒன்றிய அளவில், 129 கூட்டுறவு நகர வங்கிகள் இயங்கி வருகின்றன. மாவட்ட அளவில் 16 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவின் கேந்திரமான அமைப்புக்களாகச் செயலாற்றி வருகின்றன. இந்த அமைப்புகள் அத்தனைக்கும் தலைமை அமைப்பாக, உயிர்நாடியாக, சிந்தனைப் பெட்டகமாக உயர்ந்தோங்கி நிற்கிறது தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி.

**கண்ணைக் கவரும் வண்ண வேலைப்பாடுமிக்க கைத்தறித் துணிகள் ஏழை, எளிய நெசவாளர்களின் கைவண்ணத்தால் உரு**



தனி அலுவலர்
திரு. இரெ. ஆறுமுகம்



பொது மேலாளர்
திரு. டி. ஆர். ராமமூர்த்தி

வாவது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் இன்று ஏராளம்! ஏராளம்! அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நெசவாளர் சங்கங்கள்உற்பத்தி செய்த கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதில் 'கோ-ஆப்டெக்ஸ்' என்னும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் முக்கிய இடம் வகிக்கிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான நூல் வழங்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது. இந்தப் பணிகளுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை கோ-ஆப் டெக்ஸுக்கு ரிசர்வ் வங்கியின் மறு நிதி உதவியுடன் இவ்வங்கி அளித்து வருகிறது. 1979-80ஆம் ஆண்டிற்கென கைத்தறித்துணி உற்பத்தி மற்றும் விற்பனைக்காக ரூ. 1000.00 இலட்சமும், கைத்தறி நூல் விற்பனைக்காக ரூ. 200.00 இலட்சமும் வழங்க கடன் வரம்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நிலவள வங்கி, கடன் வழங்கி அடமானங்கள் திரட்டிக் கடனீட்டுப் பத்திரம் மூலம் நிதி-திரட்டும் முன், பிரதம நிலவள




வங்கிகள் மூலம் நில வளர்ச்சிக்கும், டிராக்டர் முதலிய இயந்திரச் சாதனங்கள் வாங்கவும், கடனுதவி வழங்கவும், மற்றும் அவ்வங்கியின் இதர நடவடிக்கைகளுக்காகவும் வங்கி, தனது சொந்த நிதியிலிருந்து ரூ.750.00 இலட்சம் வரை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு அனுமதித்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் நடைமுறை மூலதனத்திற்கு இவ்வங்கி நிதி உதவி அளித்து வருகிறது. இந்நிறுவனம் தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களிலுள்ள பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இரசாயன உரங்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு நிதி உதவி அளிப்பதுடன் இவ்வங்கி உர உற்பத்தியாளர்களுக்குக் கடன் உத்தரவாதமும் அளிக்கிறது. இதற்காக இது அமைத்துள்ள சுழல் நிதி வரையறை ரூ. 500.00 இலட்சமாகும்.

விளைந்த பொருளுக்கு நல்ல விலை கிடைத்தால்தான் விவசாயிகளின் வாழ்வு மலரும். அந்த நல்ல குறிக்கோளை அடையும் பொருட்டு, இந்த ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஏறத்தாழ 17 கோடி ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தது. இதற்கு வேண்டிய முழு நிதி வசதியையும் மாநில வங்கி கொடுத்து உதவியது.

நுகர்வோருக்குத் தேவையான பொருள்களை விற்பனைச் சங்கங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகளுக்கு இந்நிறுவனம் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இதற்காக சம்மேளனத்தின் நடைமுறை மூலதனத்திற்கு வங்கி ரூ. 150.00 இலட்சம் காசுக் கடன் வசதி அளித்துள்



ளது. மத்திய அரசின் உத்தரவாதம் பெற்று கொள்முதல் செய்த பொருள்களின் பேரில் 10 சதவிகிதம் வரம்பு வைத்தும் அதற்கு மேற்பட்ட அளவில் கொள்முதல் செய்த பொருள்களின் பேரில் 40 சதவிகிதம் வரம்பு வைத்தும் நிதி வசதி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, தமிழ்நாட்டிலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. அவ்வங்கி தேயிலைச் தொழிற்சாலை மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை சேவா சங்கங்களுக்குக் கடன் வழங்கத் தேவையான நிதி வசதியை 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் இவ்வங்கி அளித்து வருகிறது. இதற்கு அளிக்கப்பட்டுள்ள காசுக் கடன் வரம்பு தொகை ரூ. 150.00 இலட்சமாகும்.

இவ்வங்கி தன் சொந்த நிதியிலிருந்து பெருமளவு தமிழகத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் நீண்டகாலக் கடன்களை அளித்து வருகிறது. மேலும் சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் இயந்திரச் சாதனங்களைத் தவணை முறையில் பெறுவதற்குத் தேவையான உத்தரவாதம் மற்றும் பொறுப்பும் வங்கி அளித்து உதவுகிறது.

பல் கடன் நிவாரண நடவடிக்கைகள் காரணமாகத் தனிப்பட்டோர் வழங்கும் கடன் வசதி குறைந்து விட்டது. எனவே, சென்னை நகரில் இந்த வங்கி அதன் கிளைகள் மூலம் தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் வசதி அளித்துவருகிறது. 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 3 கிளைகளில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது மேலும் 15கிளைகளில் செயல்படுத்தப்படுகிறது. 31.12.1980 வரை 46,687 பேர்களுக்கு நகைக் கடன் வழங்கி ரூ. 200.18 இலட்சமும் அத்தேதியில் நிலுவையிருந்தது.

மேலும் நகர வங்கிகள், பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தங்க நகையின் பேரில் வழங்கும் கடன்களுக்கு வங்கி மறுநிதிக் கடன் வழங்கி வருகிறது. இவ்வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வரம்பு ரூ. 3302.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, 31.12.1980 தேதியில் ரூ. 885.60 இலட்சம் நிலுவையிருந்தது.

நலிவுற்ற பிரிவினருக்குக் கடன் வழங்கும் பணியிலும் வங்கி ஈடுபட்டுள்ளது சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷா, தையல் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், நடமாடும் இஸ்திரி வண்டி முதலியன வாங்கி அவை மூலம் சுயதொழில் செய்து தங்கள் பொருளாதார நிலையை வளமாக்கிக் கொள்ள ரூ. 2000 வரை கடன் வழகி அதை 24 மாதத் தவணைகளில் எளிய வட்டியுடன் திரும்பி பெறும் கடன் திட்டம் 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மேதகு ஆளுநர் அவர்களால் துவக்கப்பட்டது. இதுவரை 765 பேர்களுக்கு ரூ. 8.76 இலட்சம் கடனாக வங்கி வழங்கி உள்ளது. மேலும் மத்திய கூட்டுறவு வங்கிகள் இத் திட்டத்தின்கீழ் வழங்கும் கடன்களுக்கு மறுநிதி வசதி அளிக்க வங்கி முன் வந்துள்ளது.

ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினரல்லாத, பல நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் வங்கி கடன் உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 2000 அல்லது இரண்டு மாத மொத்த சம்பளம் இவற்றில் குறைந்ததொகை கடனாக வழங்கப்படுகிறது. இக்கடன் குறைந்த வட்டியுடன் 12 மாதத் தவணைகளில் திரும்பிச் செலுத்தப்பட வேண்டும். 31.12.1980 வரை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களில் நிலுவை பாக்கி ரூ.62,413 ஆகும்.

1979ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வங்கியின் ஊழியர்கள் சங்கத்துடன் உடன்பாடு செய்து, ஊழியர்கள் தேர்வு, நியமனம், பதவி உயர்வு, ஊழியர்கள் ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு போன்றவை குறித்து வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை தொகுப்பு ஒன்று நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இது வங்கியின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் துவக்கியுள்ளது.

சென்னை நகரில் வங்கியின் 27 கிளைகள் இயங்கி வருகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இக்கிளைகள் யாவும், பொதுமக்களின் வசதிக்கேற்ப காலையிலும், மாலையிலும், தினசரி இரண்டுமுறை செயல்பட்டு வருகின்றன. தலைமை அலுவலகத்திலும் கிளைகளிலும் பாதுகாப்புப் பெட்டக வசதி பொதுமக்கள் உபயோகத்திற்காக உள்ளன.

1978ஆம் ஆண்டு மே மாதம் வங்கி இரண்டு மண்டல அலுவலகங்களைச் சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாகத் துவக்கியுள்ளது. மற்றுமொரு உதவி மண்டல அலுவலகம் சேலத்தில் 18.3.1980ல் திறக்கப்பட்டுள்ளது. இவை மத்திய கூட்டுறவு வங்கிகளின் வங்கி நடவடிக்கைகள் மற்றும் கடன் வழங்கும் முறைகளைப் பரிசீலித்து முன்னேற்றம் காண உதவுகின்றன. மத்திய வங்கிகளை ஆய்வு செய்யவும் மண்டல அலுவலகங்கள் உதவுகின்றன.

இவ்வங்கி தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி முதலிய பொருள்கள் வாங்கவும் கடன் வழங்கி வருகிறது.

நலிந்தோர்க்கு நடமாடும் இஸ்திரிப்பெட்டிக் கடை.



தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி முதன் முறையாக 1980 நவம்பர் திங்களிலிருந்து தேசிய அளவில் இயங்கும் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு நிதி உதவி வழங்க ஆரம்பித்தது. இதன் தென்மண்டல அலுவலகத்தின் பொது விநியோகத்தை வலுப்படுத்த இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

மாநில மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகளில் உள்ளது போல தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் நிர்வாகமும் 10.6.1976 முதல் தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட தனி அதிகாரியின் பொறுப்பில் இருந்து வருகிறது.

இந்த வங்கியில் கடன் உதவி பெற்று சோளப்பொறி (பாப் கார்ன்) தயாரிப்பவர் திருவல்லிக்கேணியைச் சேர்ந்த எஸ். சீனிவாசன், கடந்த பத்து ஆண்டுகளாக இவர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார். இந்த வங்கி இவருக்கு ரூ. 2,000 கடன் தந்திருக்கிறது. முதலில் சோளப்பொறி தயாரிக்கும் ஒருவரிடம் மாதம் ரூ. 150க்கு வேலை செய்து கொண்டிருந்த இவர், சொந்தமாகத் தொழில் தொடங்க முனைந்தபோதுதான், இவ்வங்கி இவருக்குக் கடன் தந்தது. இப்பொழுது இவர் சோளப்பொறி தயாரித்து மூன்று திரைப்பட அரங்குகளுக்குச் 'சப்ளை' செய்கிறாராம். இதன் மூலம் இவருக்கு மாதம் ரூ. 500 வருமானம் கிடைக்கிறதாம்! அதில் தவணைத் தொகையையும் தவறாமல் கட்டி வருகிறார் இவர்.

பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த என்.கே. விஜயன் சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்தவர். வேலைக்கு முயன்று வந்தாலும், தன் தந்தை வைத்துள்ள பெட்டிக் கடையில் உதவியாக இருந்து வருகிறார். வங்கி தந்த ஆயிரம் ரூபாயில் பொருள்களை வாங்கிப் போட்டிருக்கிறார். ''வெளியில் கடன் வாங்கினால் வட்டி அதிகம் தரவேண்டியிருக்கிறது. சமாளிக்கவும் முடியாது. ஆனால் இந்த வங்கியில் குறைந்த வட்டிக்குக் கடன் தந்ததால், காலை உறுதியாக ஊன்றமுடிகிறது'' என்கிறார் இவர்.

இதேபோல், தங்கசாலையைச் சேர்ந்த ஆர். ராமச்சந்திரன் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருக்கிறார். கடந்த 9 ஆண்டுகளாக இதே வியாபாரம் தான். இடையில் பணமுடை ஏற்பட்டது. வியாபாரம் படுத்துவிடுமோ என்ற நிலையிலிருந்தது. [illegible] இக்கட்டான சமயத்தில்

**TNSC BANK**

இந்த வங்கி இவருக்கு ரூ. 2,000 கடன் தந்து உதவியது. தவணைப் பணத்தையும் ஒழுங்காகச் செலுத்திவிட்டு, ஐந்துபேர் கொண்ட தன் குடும்பத்தையும் பட்டினி இல்லாமல் கவனித்து வருகிறார் இவர்.

இந்த வங்கியின் **பொது மேலாளர், திரு டி. ஆர். ராமமூர்த்தி** அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்:

''சொந்தமாகத் தொழில் செய்யவும், அவர்கள் சொந்தக் காலில் நிற்கவும் நாங்கள் ஏழை எளியவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வாங்கித் தருதல், நடமாடும் இஸ்திரிப் பெட்டி வண்டி வழங்குதல் போன்ற உதவிகளைச் செய்து வருகிறோம். இந்த இரண்டு வண்டிகளும் டான்சியின் தயாரிப்புகளாகும்''.

குறிப்பாக, என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்? எதிர்காலத் திட்டங்கள் என்னென்ன? என்பது பற்றியெல்லாம், இந்த வங்கியின் **தனி அலுவலர்-நிர்வாக இயக்குநர் திரு இரெ. ஆறுமுகம் அவர்கள்** சொல்லக் கேட்போமா?

''உலக ஊனமுற்றோர் நலன் ஆண்டானதால், அதனையொட்டி ஊனமுற்றவர்களுக்குக் கடன வழங்கும் திட்டம் ஒன்றை விரைவில் செயல்படுத்த எண்ணியுள்ளோம். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், அவர்கள் சிற்றுண்டி பங்க் வைத்தல், தையலகம், பழைய பேப்பர் கடை, பெட்டிக்கடை போன்றவைகளுக்குக் கடனுதவி தரவிருக்கிறோம். ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு, பொருளாகவோ, அல்லது பணமாகவோ உதவி செய்யும் திட்டம் ஆலோசனையில் உள்ளது. சிறிய அளவில் பள்ளி ஒன்று துவக்கும் திட்டமும் உள்ளது.

''தமிழ்நாட்டில் எண்ணெய் வளம்பெருக்கிடும் நோக்கில், எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு இணையத்திற்கு முழு அளவில் நிதி உதவியளிக்க முனைந்துள்ளோம். இதேபோல பால்வள நிறுவனத்துக்கும் இவ்வங்கி நிதி உதவி செய்யும். விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் விவசாயத்துக்குத் தேவையான இடுபொருட்கள் வழங்கிட இந்த வங்கி உதவி செய்யும். சுமார் 20,000 கூட்டுறவு அமைப்புகள் வளம் பெற இந்தத் தலைமை வங்கி இயங்கிக் கொண்டிருக்கின்றது.

''மேலும், சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் ஆகியவற்றுக்கும் நாங்கள் கடன் தந்து உதவுகிறோம். ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்-இதுதான் இந்த வங்கியின் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு மத்தியக் காலக் கடன்களாக கறவை மாடுகள் வாங்குதல், பண்ணை அமைத்தல், ஆடு கன்றுகள் வளர்த்தல், மீன்வளர்த்தல், பட்டு உற்பத்தி போன்றவற்றுக்கு உதவத் திட்டம் உள்ளது. வரும் ஆண்டில் செயல்படுத்த வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன''

இவை மட்டுமா? தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம், தேசிய விவசாய விளைபொருள் கூட்டுறவு விற்பனை இணையம்-இவை போன்ற தேசிய கூட்டுறவு நிறுவனங்களுக்கும், பல வங்கிகள் இணைந்து கடன்வழங்கும் முறையில் முதன் முறையாக இது நிதி உதவி அளிக்கிறது. இந்த வகையில் இவ்வங்கி ஓர் முன்னோடியாகவும் விளங்கி வருகிறது.

மாணவர்களுக்கு மலிவு விலையில் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் நியாய விலையில் வழங்கிட 'மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டமும் செயல் படுத்தப்படுகிறது.

டெபாசிட்டைப் பொருத்த வரையில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை விட, கால் சதவீதம் கூடுதலாக வட்டித் தருகிற ஒரே ஷெட்யூல் வங்கி, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிதான்

கிராமங்களில்' ஊருக்கு ஓர் அங்காடி' என்னும் திட்டத்தின் கீழ், அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் அங்காடிகள் இன்று செயல்பட்டு வருகின்றன.

மாவட்டந்தோறும் 'கிராம ஏற்புத் திட்டம்' ஒன்றும் விரைவில் செயல்படவுள்ளது.

இவ்வாறு, பல்வேறு ஆக்கப் பணிகளுக்கு ஊக்கமூட்டும் வகையிலே கடனுதவி தந்து தன் கடமையைச் செவ்வனே ஆற்றிவரும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, கூட்டுறவிலே வளரும் ஒரு கோபுரமாக உயர்ந்து வருகிறது என்று சொன்னால் அது முற்றிலும் உண்மையே!

## தமிழ் வளர்த்த பெரியார்கள்

# பேராசிரியர் சி. இலக்குவனார்

இல. பழனியப்பன்



தஞ்சைத் தரணி தமிழுலகத்திற்கு அளித்த தமிழறிஞர்களில் தலையானவர் பேராசிரியர் இலக்குவனார். அவரைப் போன்ற ஈடு இணையற்ற ஒரு தமிழ்ச் சிங்கத்தை இனி தமிழகம் காண்பதரிது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியாம் தமிழ் குடியின் ஒப்பற்ற கருவூலம் உயரிய செந்தமிழை அணுஅணுவாகப் பகுத்துப் படித்த பேராசிரியர் இலக்குவனார் 17.11.1910ல் தஞ்சை மாவட்டம் வாய்மைமேடு என்னும் சிற்றூரில் சிங்காரவேலு, இரத்தினம் தம்பதிகளின் தவப் புதல்வராகத் தோன்றினார். இவரது கல்விப்பணிக்கும் மொழி பணிக்கும் வித்திட்டது, திருவையாற்றில் உள்ள அரசர் கல்லூரி எனில் மிகையாகாது.

பல தமிழ் அறிஞர்களை உருவாக்கி தமிழன்னைக்குப் புகழாரம் சேர்த்த இலக்குவனார் தமிழ்நாடு முழுவதும் பல கல்வி நிறுவனங்களில் தமிழ்ப் பேராசிரியராகவும் ,முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் அவர் வெளி மாநிலத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் டணியாற்றியது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் அவர் ஆற்றிய மொழிப் பணி தனித்தன்மை வாய்ந்த பணியன்றோ?

இளமை முதல் இறுதிவரை ஒவ்வொரு கட்டத்திலும் அவர் வாழ்க்கை ஓர் போராட்டக் களமாகவே அமைந்தது எனலாம். தேனியைப் போன்று பம்பரமாய் உழைத்து, தன் சொந்த முயற்சியாலும், மொழியுணர்வாலும் முன்னுக்கு வந்தவர் பேராசிரியர் இலக்குவனார்.

தமிழ்க் கருவூலமாகத் திகழும் தொல்காப்பியம் பற்றி ஆய்வு நடத்தி உலகப் புகழ். பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தில் அந்தக் காலத்திலேயே 'டாக்டர்' பட்டம் பெற்றமை அவரது தனித்தன்மைக்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் துணிவு நம்பேராசிரியருக்கே ஏற்பட்டது. மிக ஆழமான நுட்பமான இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்தை மொழி பெயர்த்து உலக நாட்டார் தமிழை அதன் தனித்தன்மையை உணர வைக்கும் அளவிற்கு அவர் கற்ற கல்வி ஆழமான கல்வியாகும்.

'குறள்நெறி' எனும் பத்திரிகையைத் தன் மொழிப் போராட்ட வாழ்வின் கேடயமாகப் பயன்படுத்தினார். அதுமட்டுமின்றி குறள்வழி இறுதிவரை வாழ்ந்தும் காட்டினார். வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த வைர நெஞ்சம் அவர் நெஞ்சம்.

தமிழ் மொழியைக் காக்க பல முறை பல வழிகளில் போராடிய பேராசிரியரவர்கள், தமிழைப் பயிற்று மொழியாக்கப்பட்ட பாடு ஏராளம். ஆம். தமிழ் பயிற்றுமொழிக் கொள்கையை வலியுறுத்த 1965ஆம் ஆண்டு மதுரையிலிருந்து புறப்பட்ட வீரத்தமிழ் மறவர் படையின் தானைத் தலைவர் ஐயா இலக்குவனார் அவர்கள்.

சாமி சிதம்பரனாரின் மாணவரான பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் பெரியார் அவர்களின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். அவ்வாறே பெருந்தலைவர் காமராசரின் கல்விப் பணி சிறக்க இறுதி வரை உறுதியாகப் பாடுபட்டவர். தமிழுக்கும், தமிழ் நாட்டவருக்கும் நன்மை பயக்கும் எந்தப் பணியையும் தன் சொந்தப் பணியாகச் சிரமேற்கொண்டு பணியாற்றிய பெருந்தகை.

தமிழகப் புலவர் குழுவில் சிறப்பான பங்கு வகித்த பேராசிரியர் அவர்கள், அக்குழுவின் வளர்ச்சிக்குப் பல்லாற்றாலும் அமைதியாக ஆரவாரமின்றி உழைத்தார்கள்:'' தமிழ்ப் பகைவர் எமது பகைவர். தமிழ் நண்பர் எமது நண்பராவர்'' என்பதே இலக்குவனாரின் சீரிய கொள்கையாகும்.

அந்தக் காலத்தில் மிகச்சிறந்த நூலாசிரியராக விளங்கியவர்களுள் தலையாயவர் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள். சங்க இலக்கியத்தைப் பற்றி தாழ்வாகத் தமிழர்களே கருதிக் கொண்டிருந்த காலத்தில், அதன் பெருமையை உணர்த்த 'சங்க இலக்கியம்' என்ற தமிழ் வார இதழை 1944ல் நெல்லையில் தொடங்கி மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார். டாக்டர் மு.வ. மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் போன்றோர் கட்டுரைகள் தொடர்ந்து இடம் பெற்றன. டாக்டர் மு.வ. அவர்கள் எழுதிய இலக்கியக் காட்சிகள் கட்டுரைகளுக்குச் 'சங்க இலக்கியமே' ஓர் தூண்டுகோலாக அமைந்தது எனில் மிகையாகா. 'சங்க இலக்கியம்' வார இதழ் மட்டுமல்லாமல் 'இலக்கியம்'. 'திராவிடக் கூட்டரசு' 'குறள் நெறி, ஆகிய தமிழ இதழ்களையும், 'குறள் நெறி; 'திராவிடக்கூட்டரசு' ஆகிய ஆங்கில இதழ்களையும் சிறப்பாக நடத்தி சிறந்த பத்திரிகையாளர் ( Journalist ) என்ற பெருமையையும் நிலைநாட்டினார்.

அவ்வாறே குறள்நெறியை நாளிதழாகவும் நடத்திக் காட்டிய பெருமை ஐயா அவர்களையே சாரும். 'தமிழ்நாடு' நடுநிலை நாளிதழ் நின்ற பின்னர் 'குறள்நெறி' யை நாளிதழாக்கித் தமிழ்த் தொண்டாற்றினார்.

'வள்ளுவர் வகுத்த அரசியல்', 'வள்ளுவர் கண்ட இல்லறம்', 'தொல்காப்பிய [illegible]', 'பழந்தமிழ்', 'தமிழ் [illegible]' ஆகிய நூல்கள் [illegible] அப்பாற்பட்டவையாக

## வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
## உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
## அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
## டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


இன்னும் நிலைத்து நிற்கின்றன. ஐயா அவர்களின் திறன் ஆய்விற்கும் ஆராய்ச்சித் திறமைக்கும் பெருமை சேர்க்கும் நன்முத்துக்களாகத் திகழ்கின்றது.

ஒரு நாட்டின் வரலாற்றை, உண்மையான பண்பாட்டை எடுத்துக் காட்டும் கண்ணாடி, அந்நாட்டின் இலக்கியங்களே என்றும் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்கிறது. பேராசிரியர் அவர்களின் 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்) எனும் வரலாற்றுப் படைப்பு.

கல்விப்பணி சிறக்க காலமெல்லாம் உழைத்த பெருந்தலைவர் காமராசா வாழ்க்கை வரலாற்றை 'கர்மவீரர் காமராசர்' எனும் அழகிய வரலாற்று நூல் வாயிலாகத் தமிழர்களுக்கு வழங்கியுள்ளார்கள். அவ்வாறே 'என் வாழ்க்கைப் போர்' (இளமைப் பருவம்) என்ற பெயரில் தன் வாழ்க்கை வரலாற்றை மேல் நாட்டு இலக்கிய மரபு துணை கொண்டு அழகாக சுவைபட ஆக்கித் தந்துள்ளார்கள். அது பேராசிரியர் அவர்களின் சொந்த வாழ்க்கைப் போர்' என்றுசொல்வதை விட, தமிழ்நாட்டுப் பண்பாட்டுப் போர் என்பதே சாலப் பொருந்தும்.

பேராசிரியர் அவர்கள் ஓர் சிறந்த கவிஞரும்கூட. அவருடைய கவித் திறனுக்கு 'எழிலரசி' 'மாணவர் ஆற்றுப்படை', 'துரத்தப்பட்டேன்', 'அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து' ஆகியவை சான்றாக விளங்குகின்றன.

அவ்வாறே பேராசிரியர் அவர்களின்' திருக்குறள் எளிய பொழிப்புரை' மற்றும் தொல்காப்பிய விளக்கம் ஆகியவைகளைக் கொண்டு தமிழ் தெரியாதவரும் எளிய இனிய செந்தமிழ் விருந்துண்ணலாம்.

ஆங்கிலத்தின் உதவியை தமிழ் வளர்ச்சிக்கு என்றைக்கும் பயன்படுத்திய ஒரு சில தமிழறிஞர்களுள் இலக்குவனார் அவர்கள் முதன்மையானவர்கள்.

(1) The making of Tamil Grammbr
(2) A brief study of Tamil words.
(3) Tamil Language.
(4) Semanterms and Morphemes in Tamil Language.
(5) Tholkappiam in English with critical studies.

—ஆகிய ஆங்கில நூல்கள் [illegible] திறமைக்கும், ஆங்கிலப் புலமைக்கும் ஓர் சவாலாகத் திகழ்கின்றன. தொல்காப்பியம் ஆங்கில நூலைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது, அங்குள்ள பல்கலைக் கழகங்களுக்கு வழங்கியதே அந்த நூலுக்கு உள்ள தனித்தன்மையைக் காட்டுகிறது.

கல்வித் துறையில் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய பணியின் விளைவால் இன்று தமிழகம் முழுவதும் தமிழுணர்ச்சி மேலோங்கி நிற்கிறது. பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்று சொல்வதைவிட, தமிழர்களுக்கு தமிழ் வரலாற்றைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் என்று சொல்வதே பொருந்தும். 'தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா, தமிழ் சோறு போடுமா?' என்று கேலியும், கிண்டலும் பேசியவர்கள் மத்தியில் மொழியுணர்வை ஊட்டி ஆயிரக்கணக்கானவர்களைத் தமிழ் படிக்க வைத்ததே அவர் செய்த மாபெரும் சாதனை.

சென்னை, அண்ணாமலை, உஸ்மானியா பல்கலைக் கழகங்களின் பாடத்திட்ட குழுக்களில் உறுப்பினராக விளங்கி நல்ல பல திட்டங்கள் கல்வித்துறையில் அறிமுகம் பெற பெரிதும் பாடுபட்டவர் பேராசிரியர் இலக்குவனார்.

தமிழ்க் காப்பு இயக்கத்தின் தலைவராயிருந்து ஆற்றிய பணிகள் கணக்கில் அடங்கா. அவ்வாறே பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றி ஆசிரியர் சமுதாயத்தின் நல்வாழ்விற்காக அருந் தொண்டாற்றியவர் ஐயா அவர்கள்.

இத்துணை சிறப்பியல்புகளைப் பெற்றுள்ள பேராசிரியர் அவர்களை,

முத்தமிழ்க் காவலர்

செந்தமிழ் மாமணி

பயிற்சி மொழிக் காவலர்

தமிழர் தளபதி

தமிழ்காத்த தானைத் தலைவர்

இலக்கணச் செம்மல்

ஆகிய பட்டங்கள் நாடி வந்து குவிந்தன. ஆனால், அவற்றை எல்லாம் கருதாமல் தமிழர் நல்வாழ்வு - தமிழ்ப் பண்பாட்டுக் காப்பு இரண்டிற்கும் தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் இரு கண்களாகக் கொண்டு இறுதி வரை பாடுபட்டு உழைத்தார்கள். அவர் விட்டுச் சென்றுள்ள பணிகளைத் தொடர்ந்து செயலாக்குவதே நாம் பேராசிரியர் அவர்களுக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

# முறையற்ற நிலமாற்றங்கள்

நில உச்சவரம்புச் சட்டம் வரப் போகிறதென்று 1955-ஆம் ஆண்டிலிருந்தும் அதற்கு முன்பும் பரவலாகப் பேசப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் ஆளுநர் அவர்களின் உரையிலும், அமைச்சருடைய பேச்சிலும் நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி அவை குறிப்பில் இடம் பெற்றன.

இதனால் முறையற்ற நில மாற்றங்கள் பெரும் அளவில் தமிழ்நாட்டில் ஏற்பட்டது.

இந்த முறையற்ற நிலமாற்றத்தை முற்றிலும் சரிசெய்ய வேண்டுமானால் 1955-இல் இருந்து செய்யப்பட்ட நில மாற்றங்களைச் செல்லுபடி ஆகாதென்று சட்ட முன் வடிவு கொண்டு வரவேண்டும்.

ஆனால், இதை கடைமுறைப்படுத்துவதில் உள்ள சங்கடங்களை எண்ணிப்பார்த்து 1-1-58-க்குப்பிறகும் 6-4-1960க்கு முன்னரும் செய்யப்பட்ட முறையற்ற நிலமாற்றங்கள் செல்லுபடி ஆகாதென்று சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

30-8-1980 அன்று குடியரசுத் தலைவர் இசைவுக்காக சட்ட முன்வடிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காகத் தொடர்ந்து மத்[illegible] அரசினை தமிழக அர[illegible] கேட்டுக்கொண்டு [illegible]



# பாரதிதாசன் ...வது பிறந்த நாள்

29-4-1891



## தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத் தமிழ்இன்பத் ... எங்கள் உயிருக்கு நேர்!

- ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு பாவே... ...து ரூ. 10,000/-.
- ஆண்டுதோறும் தமிழ் அறிஞர் ஒருவருக்குத் தமிழ்... ...ல் திரு.வி.க. விருது ரூ. 10,000/-.
- தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தம். ...திய தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை.
- மதுரை மாநகரில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு. ● ...ஊசையில் தமிழ்ப் பல்கலைக் கழகம்.
- மதுரையில் உலகத் தமிழ்ச்சங்கம். ●. தமிழாசிரியர்க... ...லைமையாசிரியர்கள் ஆக வாய்ப்பு.

## பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை — இந்த... பிழை நீக்குவதே உயிருள்ளாரின் கடமை!

- தெருக்களின் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர்கள் ...கம். ● கலப்புமணம் புரிந்துகொள்வோருக்குத் தங்கப்பதக்கமும் ரூ. 4,000 வைப்புத் தொகையும்.
- கலப்புத் திருமணம் செய்தவர்களின் குழந்தைகளுக்கு ...லை வாய்ப்பில் முன்னுரிமை. ● தீண்டாமைக் குற்றங்களை விசாரிக்க தனி கோர்ட்.
- அனைத்திந்தியப் பணிக்கான தேர்வில் வெற்றிபெற ...விகள். ● தீண்டாமை ஒழிப்புச் சேவைபுரியும் சமூகநல ஊழியர்களுக்குப் பாராட்டு.
- கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டோருக்கு ம...ழ்வுத் திட்டங்கள். ● ஆதிதிராவிட மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரிப் படிப்பு இலவசம்.
- அரிசனங்கள் தொழில் தொடங்க ரூ. 20 ஆயிரம் வட்...ல்லாக் கடன். ● ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சட்டத் தொழில் புரிய ஊக்கமளிப்பு.

## கண்ணிலார் எண்ணிலார்! எண்ணிலார் காதிலார்! ...ளார் கையிலரார் எண்ணிலார்! உண்ணிலார் எண்ணிலார்! எப்புறமும் உண்டன்றோ முப்போதும் துன்பமன்றோ?

- ஊனமுற்றோர் ஆண்டான இந்த ஆண்டில் பார்... ...க்கு இலவச பஸ்பயண வசதி. ● ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிப்பு. ● ஊனமுற்றோர் தொழி... தொடங்க வங்கிக் கடன் வசதி விரிவாக்கம். ● ஊனமுற்றோருக்கு அதிகப் பள்ளிகள். ● கண்ணிழந்து வேலையற்றிருப்போ...க்கு உதவித் தொகை.
- உடல் ஊனமுற்றோர் நலனுக்காக ரூ. 59 இலட்சம்,

# அண்ணாவின் அரசில் பாவேந்தரின் சிந்தனைகள் செயலாகின்றன.

## புதியதோர் உலகு ...வோம்

- பேரறிஞ... அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம்.
- உலகவ... ...யின் உதவியோடு வேளாண்மை விரிவாக்கப் பணிக்கு புதிய திட்ட... ● பாசனத் திட்டங்களுக்கு ரூ. 150 கோடி.
- புதிய மீ... ...த் துறைமுகங்கள். ● காடுவளர்ப்புக்கு ஸ்வீடன் நாட்டு உ... ...ன் 45 கோடி ரூபாயில் புதிய திட்டம்.
- மின் உ... ...த் திறனை இருமடங்காக உயர்த்தும் திட்டம்.
- மதுரை ... ...ட்டத்தில் 32 கோடியில் புதிய சிமெண்ட் ஆலை.
- கூட்டு... ...றையில் மேலும் 4 நூற்பாலைகள்.
- புதிய ச... ...ர் ஆலை தொடங்க ரூ. 1.70 கோடி ரூபாய்.
- பெரியா... ...வட்டத்தில் விவசாயப் பயிற்சிப் பள்ளி.
- பட்டுப்பு... ...வளர்ப்புக்கு ரூ. 265 இலட்சம்.
- இ... ...கள் அமைக்க நிதி ஒதுக்கீடு இருமட... ...உயர்த்தப்படுகிறது. ● வறட்சியால் பாதிக்கப்... ...திகளில் தீவிரமான நிவாரணப் பணிகள்.
- கிராம... ...வசதிக்கு ரூ. 24.5 கோடி ஒதுக்கீடு.
- ஏழை... ...விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் 70 ...





இயக்குநர், ... ...தொடர்புத்துறை.



# தமிழ் நாட்டில் தன்னிறைவுத் திட்டம்

## 1980-81ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்

**செங்கல்பட்டு மாவட்டம்**

1. மதுராந்தகம்
2. குன்றத்தூர்
3. காஞ்சிபுரம்
4. உத்தரமேரூர்
5. ஸ்ரீபெரும்புதூர்

**வடஆர்க்காடு மாவட்டம்**

6. திருவண்ணாமலை
7. கீழ்பெண்ணாத்தூர்
8. துரிஞ்சாபுரம்
9. போளூர்
10. கலசப்பாக்கம்

**தென்ஆர்க்காடு மாவட்டம்**

11. கண்டமங்கலம்
12. திருநாவலூர்
13. உளுந்தூர் பேட்டை
14. மயிலம்
15. மங்களூர்

**திருச்சி மாவட்டம்**

16. வேப்பூர்
17. ஆலத்தூர்
18. உப்பிலியாபுரம்
19. செயம்கொண்டான்
20. க. பரமத்தி

**தஞ்சாவூர் மாவட்டம்**

21. கோட்டூர்
22. திருத்துறைப்பூண்டி
23. குத்தாலம்
24. பூதலூர்
25. கீழ்வேளூர்

**புதுக்கோட்டை மாவட்டம்**

26. திருமயம்
27. அன்னவாசல்
28. அரிமளம்
29. விராலிமலை
30. குன்னாண்டார்கோயில்

**சேலம் மாவட்டம்**

31. தலைவாசல்
32. கொளத்தூர்
33. நாமகிரிப்பேட்டை
34. திருச்செங்கோடு
35. காடையம்பட்டி

**தர்மபுரி மாவட்டம்**

36. பெண்ணகரம்
37. மொரப்பூர்
38. பாப்பிரெட்டிபட்டி
39. ஹோசூர்
40. தளி

**நீலகிரி மாவட்டம்**

41. கூடலூர்
42. உதகமண்டலம்
43. கோத்தகிரி
44. குன்னூர்

**மதுரை மாவட்டம்**

45. பெரியகுளம்
46. போடிநாயக்கனூர்
47. நிலக்கோட்டை
48. பழனி
49. திண்டுக்கல்

**இராமநாதபுரம் மாவட்டம்**

50. காரியாபட்டி
51. வெம்பக்கோட்டை
52. ராஜபாளையம்
53. ராமநாதபுரம்
54. போகலூர்

**கன்னியாகுமரி மாவட்டம்**

55. அகஸ்தீஸ்வரம்
56. ராசாக்கமங்கலம்
57. குருத்தங்கோடு
58. கிள்ளியூர்
59. முஞ்சிறை

**திருநெல்வேலி மாவட்டம்**

60. ஓட்டப்பிடாரம்
61. விளாத்திக்குளம்
62. சங்கரன்கோயில்
63. புதூர்
64. கருங்குளம்

**கோயம்புத்தூர் மாவட்டம்**

65. அன்னூர்
66. அவினாசி
67. பொள்ளாச்சி (தெற்கு)

**பெரியார் மாவட்டம்**

68. காங்கேயம்
69. சத்தியமங்கலம்

## 1981-82ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்

**செங்கற்பட்டு மாவட்டம்:**

1. எல்லாபுரம்
2. திருப்போரூர்
3. வாலாஜாபாத்
4. திருவள்ளூர்
5. பூண்டி
6. திருவேலங்காடு
7. பள்ளிப்பட்டு
8. திருக்கழுக்குன்றம்
9. சித்தாமூர்
10. திருத்தணி

**வடஆர்க்காடு மாவட்டம்:**

11. அரக்கோணம்
12. சோளிங்கர்
13. நாட்றம்பள்ளி
14. அணைக்கட்டு
15. மேற்கு ஆரணி
16. திமிரி
17. கே.வி. குப்பம்
18. குடியாத்தம்
19. பேரணாம்பட்டு
20. ஆலங்காயம்
21. கந்திலி
22. புதுப்பாளையம்
23. அனக்காவூர்
24. வந்தவாசி
25. தெள்ளார்

**தென்ஆர்க்காடு மாவட்டம்:**

26. மேல்மலையனூர்
27. தியாகதுர்க்கம்
28. நல்லூர்
29. பண்ருட்டி
30. மேல்புவனகிரி
31. கீரப்பாளையம்
32. சங்கராபுரம்
33. விருத்தாசலம்
34. செஞ்சி
35. மரக்காணம்
36. காணை
37. கடலூர்
38. குறிஞ்சிப்பாடி
39. குமராட்சி
40. சின்னசேலம்
41. ரிஷிவந்தியம்
42. கள்ளக்குறிச்சி

**தர்மபுரி மாவட்டம்:**

43. சூளகிரி
44. கேலமங்களம்
45. கிருட்டிணகிரி
46. வேப்பனப்பள்ளி
47. பர்கூர்
48. தர்மபுரி
49. நல்லம்பள்ளி
50. ஊத்தங்கரை

**சேலம் மாவட்டம்**

51. ஓமலூர்
52. பெத்தநாயக்கன் பாளையம்
53. கங்கவள்ளி
54. எருமைப்பட்டி
55. எலச்சிபாளையம்
56. எடப்பாடி
57. நங்கவள்ளி
58. மேச்சேரி
59. ஏற்காடு
60. வீரபாண்டி
61. அயோத்தியாபட்டினம்
62. பனமரத்துப்பட்டி
63. வெண்ணந்தூர்
64. புதுச்சத்திரம்
65. பரமத்தி
66. சங்ககிரி

**கோயம்புத்தூர் மாவட்டம்:**

67. காரமடை
68. தொண்டாமுத்தூர்
69. கிணத்துக்கடவு
70. மடத்துக்குளம்
71. பொங்களூர்
72. பல்லடம்
73. சூலூர்
74. மதுக்கரை

**பெரியார் மாவட்டம்:**

75. குண்டடம்
76. தாராபுரம்
77. மூலனூர்
78. ஊத்துக்குளி
79. அந்தியூர்
80. நம்பியூர்
81. பவானிசாகர்
82. தாளவாடி

**மதுரை மாவட்டம்:**

83. ஆண்டிப்பட்டி
84. சேடபட்டி
85. கல்லுப்பட்டி
86. வத்தலக்குண்டு
87. அலங்காநல்லூர்
88. மதுரை கிழக்கு
89. சாணார்பட்டி
90. ரெட்டியார் சத்திரம்
91. ஒட்டன் சத்திரம்
92. தொப்பம்பட்டி
93. கொடைக்கானல்
94. சின்னமனூர்
95. கள்ளிக்குடி
96. உசிலம்பட்டி
97. திருப்பரங்குன்றம்
98. மதுரை மேற்கு
99. கொட்டாம்பட்டி
100. குஜிலியாம்பாறை



**திருச்சி மாவட்டம்:**

101. தாந்தோணி
102. தாத்தையங்கார் பேட்டை
103. துறையூர்
104. புல்லம்பாடி
105. அரவக்குறிச்சி
106. மணப்பாறை
107. பெரம்பலூர்
108. அரியலூர்
109. ஆண்டிமடம்
110. மணிகண்டம்

**தஞ்சாவூர் மாவட்டம்:**

111. கொரடாச்சேரி
112. பேராவூரணி
113. நீடாமங்கலம்
114. வலங்கைமான்
115. சீர்காழி
116. வேதாரண்யம்
117. மதுக்கூர்
118. திருவோணம்

**இராமநாதபுரம் மாவட்டம்:**

119. திருவாடனை
120. இளையாங்குடி
121. நரிக்குடி
122. கடலாடி
123. முதுகுளத்தூர்
124. அருப்புக்கோட்டை
125. சாக்கோட்டை
126. தேவகோட்டை
127. பரமக்குடி
128. மண்டபம்
129. திருப்புலாணி
130. திருச்சுழி
131. திருவில்லிபுத்தூர்

**திருநெல்வேலி மாவட்டம்:**

132. கயத்தாறு
133. கோவில்பட்டி
134. மேலநீலிதநல்லூர்
135. மானூர்
136. ராதாபுரம்
137. வள்ளியூர்
138. திருச்செந்தூர்
139. தூத்துக்குடி
140. தென்காசி
141. கடையம்
142. சேரன்மாதேவி
143. நாங்குநேரி

**புதுக்கோட்டை மாவட்டம்:**

144. பொன்னமராவதி
145. திருவரங்குளம்
146. கந்தர்வகோட்டை
147. கரம்பக்குடி
148. ஆவுடையார்கோயில்

**கன்னியாகுமரி மாவட்டம்.**

149. தோவாளை
150. மேல்புரம்

# மலேரியா தலை தூக்குகிறது; ஜாக்கிரதை!

உங்கள் குடும்பத்தில் யாருக்கேனும் காய்ச்சல் கண்டிருக்கிறதா? காய்ச்சல், மலேரியாவாக இருக்கலாம்; அலட்சியமாக இராதீர்கள். மலேரியா, எதிர்பாராமல் ஆரோக்கியமானவர்களைத் தாக்கி, உடல் சோர்வுடன் உள சீர்கேட்டையும் ஏற்படுத்த வல்லது. பல சந்தர்ப்பங்களில், இக்காய்ச்சல் முழுக் கிராமம், நகரம் அல்லது பிராந்தியத்தையே பீடிக்கும்.

**அறிகுறிகள்:**

மலேரியா ஏற்பட்டால்:

* திடீரென, குளிர் காய்ச்சல் காணும், சாதாரணமாக, குளிர் சில மணி நேரங்கள் நீடிக்கும்.
* உடலெரிவது போன்ற உணர்வும் கடும் தலைநோவும் இருக்கும்.
* இறுதியில், பெருவாரியாக வியர்த்து, காய்ச்சல் குறையும். மிகவும் சோர்வேற்படும்.

**சிகிச்சை:**

காய்ச்சல் ஏற்பட்ட உடனடியாக, கட்டாயமாக இரத்தப் பரிசோதனை செய்து கொண்டு, பரிந்துரைக்கப்பட்ட அளவில் குளோரோக்வின் உட்கொள்ள வேண்டும். இரத்தப் பரிசோதனை, மலேரியா இருப்பதை வெளிப்படுத்தினால், தீவிர சிகிச்சையாக, ஐந்து நாட்களுக்கு மலேரியா ஒழிப்பு மருந்துகள் உட்கொள்ள வேண்டும்.

காய்ச்சல் மிகக் கடுமையாக இருந்தால், நினைவிழந்திருந்தால், ஜன்னி கண்டிருந்தால், நோயாளியை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம், மருந்துச் சாலை, அல்லது ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும். இவ்விடங்களில், அனைவருக்கும் இலவசமாக மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கப்படும்.





## மலேரியாவைத் தடுக்க

- உங்கள் வீட்டைச் சுற்றி, தண்ணீர் தேங்க விடாதீர்கள். இத்தண்ணீர், மலேரியாவுக்கு மூலகாரணமானகொசுக்களின் உற்பத்தி இடமாகும். தண்ணீர் தேங்குவதை தவிர்க்க இயலாவிடில், தண்ணீரில் சிறிது மண்ணெண்ணையை தெளியுங்கள்.
- பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வரும் குழுவினருடன் ஒத்துழையுங்கள்; மற்றவர்களையும் ஒத்துழைக்கச் செய்யுங்கள்.
- உங்கள் வீடு முழுதிலும் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வையுங்கள். சமையலறை, பூஜையறை, பண்டக அறை, கொட்டில் ஆகியவற்றையும் மறக்க வேண்டாம்.
- மருந்து தெளிக்கப்படும்போது உணவுப் பொருட்களையும் தீவனங்களையும் மூடி வையுங்கள்.

கொசுவுக்கு எதிரான போராட்டத்தை வெல்லுவோம்

**நேஷனல் மலேரியா எராடிகேஷன் ப்ரோக்ராம்**

(மினிஸ்டிரி ஆஃப் ஹெல்த் & ஃபேமிலி வெல்ஃபேர்)

22, ஷாம் நாத் மார்க், டில்லி-110054.

davp 80/428

## மாணவர் பக்கம்

### பறவைகளே! பறவைகளே!

சீனாவில் ஏறக்குறைய 420 வகை விலங்குகள் உண்டு. இது உலகிலுள்ள மொத்த வகைகளில் 11 விழுக்காடாகும்.

சீனாவில் மட்டும் காணப்படும் பண்டா, பொன் ரோமக் குரங்கு ஆகியன தென்மேற்குச் சீனாவிலும், கான்சு, சென்சி மாநிலங்களின் தென்பகுதிகளிலும் காணப்படுகின்றன. பொன் குரங்கு கவர்ச்சிகரமானது. நீல மூக்கும், நீண்ட வாலும் அதற்குண்டு. தங்கச் சால்வை போலப் பொன்னிற ரோமம் அதன் முதுகில் படர்ந்திருக்கிறது. சிங்காய் - திபெத் பீடபூமியில் வாழும் வெள்ளை உதட்டு மானும் சீனாவில் மாத்திரம் காணப்படுகின்றது. மானின் முகத்தில் வெள்ளைக் கோடுகள் இருக்கின்றபடியால் அது இப்பெயர் பெற்றது. மெதுவான குரங்கு என்பது சீனாவில் காணப்படும் ஒரே யொரு பூர்வீகக் குரங்காகும். சிறிய உருவம் உடைய இந்தக் குரங்கு மிகவும் மெதுவாக நகர்கின்றது. பகலில் தூங்கி இரவிற் செயற்படும் இந்தக் குரங்கு 'சோம்பற் குரங்கு' என்றும் அழைக்கப்படுகின்றது.

சீனாவில் ஏறக்குறைய 1,200 வகை பறவைகள் உண்டு. இது உலகிலுள்ள வகைகளில் 13 விழுக்காடாகும். உலகிலுள்ள 46 வகை காணற்கரிய பாடும் பறவைகளில் 33 வகைப் பறவைகள் சீனாவில் உண்டு.

**'மாணவர் பக்கம்' பகுதிக்கு எழுதுவோருக்கு....**

தமிழரசு இதழில் 'மாணவர் பக்கம்' பகுதிக்கு — மாணவர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிவுக்கு விருந்து தரும் வகையிலும், தாளின் ஒரு பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

## தம்பி! வேண்டுமே...!

— சென்னிமலை தண்டபாணி

அன்பு வேண்டும் பண்பு வேண்டும்
அறிவில் சிறக்க வேண்டுமே! — தம்பி
உண்மை பேசி நன்மை செய்தே
உலகை வெல்ல வேண்டுமே!

நல்ல காட்சி நாளும் கண்டு
நன்மை கொள்ள வேண்டுமே! — தம்பி
கல்வி யாலே ஏழை மக்கள்
கவலை தீர்க்க வேண்டுமே!

இரும்பு நெஞ்சம் கரும்புச் சொற்கள்
இனிமைப் பழக்கம் வேண்டுமே! — தம்பி
எறும்பு போல சுறுசுறுப்பே
என்றும் வாழ்வில் வேண்டுமே!

மனித வாழ்வில் புனிதனாக
மலர வேண்டும் நாட்டிலே! — தம்பி
இனிய செயல்கள் செய்தே என்றும்
இருக்க வேண்டும் ஏட்டிலே!

தெரிந்து கொள்வோம்:

# இந்தியாவில் பத்திரிகைகள்

இந்தியச் செய்தி பத்திரிகைகளின் விற்பனை 1978-ல் முதன் முறையாக நான்கு கோடியைத் தாண்டியது. 1977-ல் 3,74,37000 ஆக இருந்த பிரதிகள் எண்ணிக்கை, 1978-ல் 9.1 சதவீதம் உயர்ந்து 4,08,50,000 பிரதிகளாக உயர்ந்துள்ளது. 1979ல் 'இந்தியாவில் பத்திரிகைகள்' என்ற தலைப்பில் அண்மையில் மாநிலங்களவையில் வெளியிடப்பட்ட தகவல் வருமாறு:

பல்வேறு 75 இந்திய மற்றும் அந்நிய மொழிகளில் வெளியிடப்படும் 15,814 பத்திரிகைகள் 1978ல் இருந்து தொடர்ந்து தமது வளர்ச்சியைக் கடைப்பிடித்து வருகின்றன. 1978-ல் 1234 புதிய பத்திரிகைகள் பிரசுரத்தினைத் துவக்கின.

இந்தியாவிலுள்ள மொத்தப் பத்திரிகைகள் 15,814. இவைகளில் நாளிதழ்கள் 992. வாரம் இருமுறை, மும்முறை வெளிவரும் பத்திரிகைகள் 81. வாரப் பத்திரிகைகள் 4,654; மாத இதழ்கள் 5,739 ஆகும்.

முதன் முறையாக, ஆங்கிலப் பத்திரிகைகள் விற்பனையை இந்திப் பத்திரிகைகள் முறியடித்துள்ளன. எண்ணிக்கையிலும் இந்திப் பத்திரிகைகள் முன்னணியில் உள்ளன. 1977ல் 3,736-ஆக இருந்த இந்திப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 1978ல் 4,196ஆக உயர்ந்தது. இந்திப் பத்திரிகைகளின் விற்பனை 1977ல் 86,79,000 ஆக இருந்து, 1978-ல் 97,06,000 ஆக உயர்ந்து 11.8 சதவீத வளர்ச்சியை எட்டியது. ஆங்கிலப் பத்திரிகைகள் 2,982-லிருந்து 3,085 ஆக உயர்ந்தது. ஆங்கிலப் பத்திரிகைகளின் விற்பனை 81,000 உயர்ந்த போதிலும், இந்திப் பத்திரிகைகளிடம் முன்னணி இடத்தை இழந்தன.

நாளிதழ்களின் எண்ணிக்கையில் முதலிடம் இந்திப் பத்திரிகைகளுக்குச் (294) செல்கின்றது. அடுத்து வரும் பத்திரிகைகள் உருது-103, மராத்தி-102, ஆயினும் ஆங்கிலத் தினசரிகளின் விற்பனை, இந்திப் பத்திரிகைகளின் விற்பனையை விட அதிகம்.

**முன்னணியில் உள்ள மாநிலங்கள்**

அதிக எண்ணிக்கையில், 1978-ல் 2,169 பத்திரிகைகளை வெளியிடும் மாநிலமாக மகாராஷ்டிரம் முன்னணியில் இருக்கின்றது. உத்தரப் பிரதேசம் 2,089 பத்திரிகைகளுடன் இரண்டாவது இடத்தையும், டில்லி 1,909 பத்திரிகைகளுடன் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. மேற்கு வங்கம் 1,712 பத்திரிகைகளையும், தமிழ்நாடு 1,112 பத்திரிகைகளையும் வெளியிடுகின்றன.

நாளிதழ்களைப் பொறுத்தவரை உத்தர பிரதேசம் 146 பத்திரிகைகளை வெளியிட்டு முதலிடத்தை வகிக்கின்றது. மகாராஷ்டிரம் 140 பத்திரிகைகளை வெளியிட்டு இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இதர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 100க்குக் குறைவான நாளிதழ்களே வெளிவருகின்றன.

விற்பனையிலும் மகாராஷ்டிரம் முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. மகாராஷ்டிரத்தில் 79,05,000 பிரதிகளும், தமிழ்நாட்டில் 61,14,000 பிரதிகளும் வெளியிடப்படுகின்றன. டில்லியில் 54,05,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

இந்தியாவில் வெளிவரும் மொத்தப் பத்திரிகைகளில் 30.8 சதவீதம் பத்திரிகைகள், பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை போன்ற பெருநகரங்களில் வெளியிடப்படுகின்றன. இதர மாநில, யூனியன் பிரதேசத்தின் தலைநகரங்களில் 16.3 சதவீதப் பத்திரிகைகள் வெளியாகின்றன. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கும் நகரங்களில் 29.2 சதவீதமும், 23.7 சதவீதப் பத்திரிகைகள் ஒரு லட்சத்துக்கும் குறைவாக மக்கள் வாழும் நகரங்களிலும் வெளியாகின்றன. விற்பனையைப் பொறுத்தவரை 49 சதவீதத்துக்கும் மேலாகப் பெருநகரங்களில் விற்பனை செய்யப்படுகின்றது.

டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஐதராபாத், பெங்களூர், புனா, ஜெய்ப்பூர், லக்னோ, பாட்னா, கான்பூர், திருவனந்தபுரம், அகமதாபாத், கொச்சி, சண்டிகார், லூதியானா மற்றும் ஜலந்தர் நகரங்களில் 100க்கும் மேற்பட்ட பத்திரிகைகள் வெளியாகின்றன. முதல் மூன்று நகரங்களில் மட்டும் வெளியாகும் பத்திரிகைகளின் எண்ணிக்கை 1,000க்கும் மேற்பட்டதாகும்.

கடந்த நூறு ஆண்டுகளாக வெளிவரும் பத்திரிகைகளின் எண்ணிக்கை 24. இதில் 9 பத்திரிகைகள் நாளிதழ்கள். 1822-ல் துவக்கப்பட்டு பம்பாயிலிருந்து வெளிவரும் 'பம்பாய் சமாச்சார்' என்ற குஜராத்திப் பத்திரிகையே மிகவும் பழமையாக வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகையாகும்.

பத்திரிகைப் பதிவாளர்களிடமிருந்து வரும் தகவல்களின்படி, 50,000-க்கும் மேற்பட்ட விற்பனை உள்ள 153 பெரிய பத்திரிகைகளும், 15,000-த்திலிருந்து 50,000 வரை விற்பனை உள்ள பத்திரிகைகளில் 288 நடுத்தரப் பத்திரிகைகளும், 15,000-க்கும் குறைவாக விற்பனை உள்ள 7,075 சிறிய பத்திரிகைகளும் உள்ளன.

பெரிய பத்திரிகைகளில் 58 தினசரிகள்; மற்ற 97 இதழ்கள். மொத்தம் 153 பெரிய பத்திரிகைகளில் 66 பத்திரிகைகள் ஒரு லட்சத்துக்கும் மேலாக விற்பனை உள்ளவை. இவற்றில் 28 நாளிதழ்களும் அடங்கும்.

மூன்று பிரிவுகளில் பெரிய பத்திரிகைகள் 43.1 சதவீதம், நடுத்தரப் பத்திரிகைகள் 18.4 சதவீதம்; சிறிய பத்திரிகைகள் 38.5 சதவீதம்.

தினசரிகளைப் பொறுத்தவரை பெரிய பத்திரிகைகள் 56.8 சதவீதமும், நடுத்தரப் பத்திரிகைகள் 23.3 சதவீதமும் வெளியாகின்றன.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் வங்காள மொழிப் பத்திரிகையான 'ஆனந்த பஜார்' பத்திரிகை 3,76,464 பிரதிகள் விற்பனையுடன் முன்னணியில் நிற்கின்றது.



## அறிவுச்சுடர்

● வெய்யில் காலங்களில் நிலத்தில் மேற்பரப்பில் 'ஜிலுஜிலு' என்று காற்றுப் பாய்வது போன்ற தோற்றம் உண்டாகிறது. இது எதனால்?

வெய்யில் காலங்களில தார் போட்ட சாலைகளின் மேற்பரப்பில் உள்ள காற்று ஒரே வெப்ப நிலையில் இல்லை. வெப்ப நிலை அதிகமான காற்று மேல் நோக்கிச் செல்கின்றது. வெப்ப நிலை குறைவான காற்று அடிப்புறத்தில் உள்ளது. ஒளி காற்று மண்டலத்தால் விலக்கப்படுகிறது. அதிக வெப்ப நிலை கொண்ட காற்று அடர்வு குறைந்த ஊடகம் போலும், குறைந்த வெப்ப நிலை கொண்ட காற்று அடர்ந்த ஊடகம் போலும் செயல்படுகின்றது. ஒளி விலகல், வெப்பச் சலனம் (Convection) இரண்டு சேர்ந்து காற்று ஓடுவதைப் போல "கானல் நீரை" (Mirage) உண்டு பண்ணுகின்றன.

● பஸ் எஞ்சினைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

டீசல் எந்திரத்தை ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் டொல்ப் டீசல் என்பவர் 1890-95இல் அமைத்தார். பெட்ரோல் எந்திரத்தை ஆட்டோ என்பவர் 1876இல் அமைத்தார்.

● பிளாஸ்டிக் சர்ஜரி முறையில் பெரிய அளவுடைய காதுகளைச் சரியான அளவுடைய காதுகளாக்க முடியுமா? இந்த அறுவை சிகிச்சை செய்ய அதிகச் செலவு ஆகுமா?

வடிவமைப்பு அறுவையினால் (Plastic Surgery) திருத்தி அமைக்க மிக ஏற்ற உறுப்புகளில் முதன்மையானது காது. மண்டையினின்று விலகி விரிந்து நிற்கும் காதுகளை அடக்கி மண்டையோடு ஒட்டி வைத்து அழகுபடுத்துவது எளிது. தைப்பு வெளியே தெரியாது. சாதாரணமாக வெட்டுக் காயங்களைத் தைப்பது போன்ற எளிய அறுவைதான். கைத்திறனும், செவிலியச் சேவையும் (Nursing) மிக்க உயர்ரகமாக அமைய வேண்டும். சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனையில் உள்ள வடிவமைப்பு அறுவைப் பிரிவு இவ்வகையில் சிறந்ததாகத் தெரிகிறது. திறமை மிக்க அறுவை மருத்துவர் எங்கும் உளர். அதற்கு ஏற்ற செவிலியத் திறன் பல இடங்களில் அரிதாகவே உள்ளது. எனவே, இடம் பார்த்துச் சேரவேண்டும். தனியார் மருத்துவமனையில் ரூ. 500-1000க்குள் இரு காதுகளையும் செப்பம் செய்து கொள்ளலாம்.

● சில வேளைகளில் சந்திரனைச் சுற்றி ஒளிவட்டம் காணப்படுவதேன்?

புவி மண்டலத்தில் மேற்பகுதியில் உள்ள பனித் திவலைகளில் சந்திரனிலிருந்து வரும் ஒளி அடையும் ஒளிச் சிதறல் காரணமாக, சந்திரனைச் சுற்றி ஒளி வட்டம் உள்ளது போல் தோன்றுகிறது.

நன்றி: 'கலைக் கதிர்'

## இரண்டு தலை மனிதன்



தென்மேற்குச் சீனாவில் யுன்னான் மாகாணத்தில் வாழும் ஒரு இரண்டு தலை மனிதன் பற்றிய வண்ணத் திரைப்படம் ஒன்று தற்பொழுது சீனாவில் காண்பிக்கப்படுகிறது.

சாங்சிபிங் என்ற அந்த இரண்டு தலை மனிதனுக்கு வயது 35. அவர் வடகிழக்கு யுன்னாவிலுள்ள மலைக் கிராமமொன்றில் வாழும் விவசாயி ஆவார். அவர் பிறக்கும்போது அவருடைய உண்மையான தலையில் வலது பக்கத்தில் ஒட்டுயிர்த் தலை ஒன்று முன்தள்ளிக் கொண்டிருந்தது. 'ஒ ரா னி யோ பா க் க ஸ்' என்று மருத்துவ வார்த்தைகளில் பரசிற்றிக்கஸ்' என்று மருத்துவ வார்த்தைகளில் அழைக்கப்படும் இந்த ஒட்டுயிர்த்தலை மிகுதியும் அரிதாக ஏற்படும் ஒரு நிலைமையாகும்.

சாங்சிபிங்கினுடைய ஒட்டுயிர்த் தலையில் குறை வளர்ச்சியுடைய தலைமயிர், கண்கள், நெற்றிப் புருவங்கள், கண் இமைகள், மூக்குத் துளைகள், தாடி, மேல் உதடு, பற்கள், நாக்கு ஆகியன இருந்தன. சாங்சிபிங் உணவருந்தும்போது அல்லது உதட்டைப் பிதுக்கியபோது அல்லது சீழ்க்கை அடித்தபோது, ஒட்டுயிர்த் தலையிலும் இதே போன்ற செயல்கள் ஏற்பட்டன.

# நூல் நயம்

### மதுரை வரலாறும் பண்பாடும்

ஆசிரியர்: வி. கந்தசாமி

வெளியீடு: இந்திரா பதிப்பகம்
72, புதுமண்டபம்,
மதுரை.

விலை ரூ. 10 பக்கங்கள் 240

மதுரை மாநகருக்கு -வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வரலாறு ஏற்பட்டுள்ளது. அது நித்தமும் தொடர்கிறது என்ற உண்மையை இந்நூல் புலப்படுத்துகிறது.

மதுரை நகரில் உள்ள ஆலயங்கள்-சுற்றுலா இடங்கள் - ஆட்சி செய்த மாமன்னர்கள் பட்டியல்-நகராட்சித் தலைவர் பட்டியல்-நகரில் உள்ள சமயங்கள் -நகரின் தோற்றம் வளர்ச்சி - அருகில் உள்ள சுற்றுலாத் தலங்கள் ஆகியவை குறித்து அரிய தகவல்களை வழங்கும் களஞ்சியமாக இந்நூல் திகழ்கிறது. நாட்டு விடுதலைப் போரில் மதுரை நகரம் வகித்த பெரும்பங்கு குறித்தும் நூலாசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. தமிழ் வளர்ச்சி-இசை வளர்ச்சி ஆகியவற்றிலும் மதுரை சிறந்து விளங்கியதை - விளங்குவதை நூலாசிரியர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

முக்கிய நிகழ்ச்சிகள் (1790 முதல் 1981 வரை) நிழல்படத் தொகுத்துத் தந்துள்ளமை பாராட்டுக்குரிய தாகும். அச்சு அமைப்பில் பதிப்பாளர்கள் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

— தமிழ்ப்பித்தன்

### எலி கடித்த பூனை

ஆசிரியர் குழ. கதிரேசன், பி.ஏ,

வெளியீடு: மீனாட்சி புத்தக நிலையம்,

கிளை: 228, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005.

விலை ரூ. 5.30 பக்கங்கள் 52.

ஆடல், பாடல் என்றால் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான். நல்ல நல்ல பாடல்கள் அவர்களை நல்லவர்களாக்குகின்றன. வல்லவர்களாக்குகின்றன. புதுமையான தலைப்புள்ள இந்தக் குழந்தைப் பாடல் தொகுப்பில் அத்தகைய நல்ல நல்ல பாடல்கள் நிறைய இருக்கின்றன.

மழை பொழிகிறது; கவிஞரின் கற்பனை மழையும் பொழிகிறது.

மேகமே ஏனழுதாய்
மின்னலுனை அடித்ததுவோ?
வேகமாய் பெருங்காற்று
வீசிஉனை விரட்டியதோ?

என்கிறார். 'உள்ளே ஒரு கதைப் பாடல். அதுதான் எலி கடித்த பூனை! எலி பூனையைக் கடிக்கிறது. பிறகுதான் தெரிந்து கொள்கிறோம்- அது பிளாஸ்டிக் பூனை என்று!

இத்தொகுப்பில் 23 பாடல்கள் உள்ளன. அவை, தேனாய் இனிக்கின்றன; தெம்பாய்ப் பாட வைக்கின்றன.

### வணக்கம் செய்த வளையாபதி

ஆசிரியர்: புலவர் ஆலந்தூர்
கோ. மோகனரங்கன் பி. லிட்.

வெளியீடு: வசந்தா பதிப்பகம்,
21, தருமராச கோயில் தெரு,
சென்னை-600 016.

விலை ரூ. 5.25 பக்கங்கள்: 112.

மாணவர்கள் மனத்தில் அறிவு, ஒழுக்கம், வீரம் போன்ற நல்ல விதைகளைத் தூவுதல் வேண்டும். அதுவே நாளை மரமாகி எல்லாருக்கும் நிழலைத் தரும்.

ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. பணிவும், அடக்கமும் அவற்றுள் ஒன்று. இந்த நல்ல பண்பைப் படம்பிடித்துக் காட்டுகிறது, சிறுவர்க்கான இந்தச் நெடுங்கதை. அத்துடன், ஆணவம் கொள்ளின் அழிவு தொடரும் என்பதையும் சொல்லாமல் சொல்கிறது. ஆசிரியரின் எளிய, இனிய நடை நம்மைக் கவர்கிறது.

—பி.வி.ஜி.

### நில உச்ச வரம்புச் சட்டம்

நில உச்ச வரம்புச் சட்ட[illegible] தின்படி, நிலப் [illegible] மிருந்து, [illegible] நிலம் நிலமில்லாத [illegible] பகிர்ந்து கொ[illegible]. [illegible] ஏழைகளிடமிருந்து பணம் [illegible] நிலப் [illegible] ஈட்டுத் தொகையாக [illegible] கப்பட்டது. அவ்வாறு [illegible] கப்படுகிற தொகை [illegible] பட்ட அந்த நிலத்தின் [illegible] விலைக்குச் சமமாகும். [illegible] இடங்களில் அதிகமாகவும் இருந்தது. இதனால் [illegible] பெற்ற [illegible] தொகை [illegible] யாமல் [illegible] இழந்து [illegible] இழந்து விட்டார்கள்.

நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்த மிகப் [illegible] குறைபாடு ஆகும் இது.

மாண்புமிகு எம். ஜி. ஆர். தலைமையிலான அரசு வந்த பிறகு. இந்தக் குறைபாடு நீக்கப்பட்டது.

சட்டத்திருத்தம் கொண்டு வந்து, நிலத்தின் [illegible] குறைத்தது.

இதனால் [illegible] கிரயம், [illegible] ரூபாய் 50 [illegible] 3,500 [illegible] பட்டது.

[illegible]



# மாற்றுச் சிறு நீரகம்
# அறுவைச் சிகிச்சையில் அற்புதம்!



**ம். எல். ராஜேந்திரன்**

இந்தியாவிலேயே ஆங்கில முறை மருத்துவமனையாக, 1664ல், முதன் முதலில் துவக்கப்பட்டது சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவ மனையாகும். (Government General Hospital). இந்த வகையில் அது முதலாவதாகவும், இராயப்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனை இரண்டாவதாகவும் கருதப்பட்டாலும்-பல வகைகளில் முதலாவது என்று கூறத்தக்க பெருமையுடையது இராயப்பேட்டை மருத்துவமனை. உண்மை மெவெறும் புகழ்ச்சியில்லை!

மலேரியா போன்ற நோய் வகையைச் சேர்ந்தது காலா ஆஜர் (Kala Azar) என்கிற நோய். இந்தக் கொடிய நோய்க்கு மூலகாரணமான டோனோவன் அணுக்களை (Donovon Bodies) உலக மருத்துவத்துறைக்கு அறிமுகம் செய்த பெருமை இராயப்பேட்டை மருத்துவ மனையையே சேரும். அதைக் கண்டுபிடித்த மருத்துவ மேதை டோனோவன் என்பார் இங்கேதான் பணியாற்றினார்.

இதய நோய் சிகிச்சைக்கான தீவிர சிகிச்சைப்பிரிவை (Intensive Coronary Care Unit) இன்று எல்லா பெரிய மருத்துவ மனைகளிலும் நாம் கண்டாலும் —அதை முதன் முதல் அமைத்த சிறப்புக்குரியவர்கள் இராயப்பேட்டை மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்களான டாக்டர் எம்.வி. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் ஆர் எஸ். ராஜகோபாலன் இருவருமே!

வாய்ப்புற்று நோய்க்கான (Oral Cancer) புதியதோர் அறுவைச் சிகிச்சையினை முதன் முதல் செய்து காட்டி வெற்றி பெற்ற திறமையாளர் இராயப்பேட்டை மருத்துவமனை அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் எம். நாராயணன் என்பவரே!

தம்பதிகளுக்கிடையேகுழந்தையில்லாக் குறைக்குப் பெண்கள் மட்டுமே காரணமல்ல; ஆண்மலட்டுத்தன்மையும் காரணமாகலாம் என்பதை உணர்த்தி, அந்தக் குறை நீக்கும் சிகிச்சைப் பகுதி தென்னகத்திலேயே முதன் முதல் இராயப்பேட்டை மருத்துவமனையிலேதான் துவக்கப்பட்டது. இந்தப் பிரிவின் மூலம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு அறுவைச் சிகிச்சை அளித்துப் பலன் காணச் செய்த சிறப்புக்குரியவர் சிறு நீரக அறுவைச் சிகிச்சைப் பிரிவின் (Urology) தலைவர் டாக்டர் ஏ. ராஜசேகரன் ஆவார்!

அவரே இப்போது இன்னொரு பெருமைக்கும் உரியவராகியிருக்கிறார். அண்மையில் செய்தித்தாள்களிலெல்லாம் வெளியிடப்பட்ட 'மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை'யை (Kidney Transplantation) வெற்றிகரமாகச் செய்துகாட்டி இராயப்பேட்டை மருத்துவ மனையின் புகழ்மகுடத்தில் மேலுமோர் நன்முத்தைப்பதித்திருக்கிறார் டாக்டர் ஏ. ராஜசேகரன்!

1954ல் இந்தச் சிகிச்சை முதன் முதலாக அமெரிக்காவிலும், அதைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டிலும் செய்யப்பட்டது.

நாளடைவில் இந்தியாவும் அந்த வகையில் முன்னேறியது. சண்டிகார், டில்லி, பம்பாய், வேலூர் மருத்துவ மனைகளில் எல்லாம் இப்போது மாற்றுச் சிறு நீரகம் பொருத்தப்படுகிறது. ஆனால், அங்கெல்லாம் ஒருவர் சிகிச்சை செய்து கொள்ளுவதென்றால் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. நான்குமாதம் வரையில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனையிலேயே இருத்தப்படுகிறார்கள்.

ஆனால், ஏழை எளியவர்கள் அவ்வாறான பாதிப்புக்கு ஆளானால் அந்த அளவுக்குத் தங்கு

சிறுநீரியல் அறுவை சிகிச்சைப் பகுதியின் தலைவர் டாக்டர் ஏ. ராஜசேகரன்.



மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஆர். எஸ். ராஜகோபாலன்.



சிறுநீரக மருத்துவச் சிகிச்சைப் பகுதியின் தலைவர் டாக்டர் எம். ஏ. முத்துசேதுபதி.





மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப் பெற்ற புவியரசு.

வதோ-செலவிடுவதோ எப்படிச் சாத்தியம்?

அரசுப் பொது மருத்துவமனைகள் அப்படிப்பட்ட சிகிச்சைகளைத் துவக்கினால், சாதாரண மக்களும் தங்களது சிறுநீரகக் கோளாறைச் சிக்கனச் செலவு-சிரமக் குறைவு மூலம் நிவர்த்தி செய்துகொள்ள முடியும். தென் மாநிலங்களில் எந்த அரசு மருத்துவமனையும் செய்யாத இந்த நூதன சிகிச்சையைச் செய்துதான் பெரும்புகழ் கொண்டிருக்கிறது, அரசினர் இராயப்பேட்டை பொது மருத்துவமனை.

இந்த மருத்துவமனையில் அப்படியொரு அற்புதம் நிகழ்ந்தது பற்றி நேரில் கண்டறியச் சென்றோம். மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் ஆர்.எஸ் ராஜகோபாலன் அவர்களோடு தொடர்பு கொண்டோம், பெரு முயற்சி எடுத்துக்கொண்டு இந்த மருத்துவமனையில் சிறு நீரக மருத்துவப்பிரிவு ( Nephrology ) துவக்கியவரான அவர் "அந்த மாற்றுச் சிறுநீரகச் சிகிச்சையை செய்த டாக்டர்களையே உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அதுபற்றி அவர்களையே கேட்டெழுதினால் நன்றாயிருக்குமே!" என்றார். சம்மதித்தோம்.

## டாக்டர் முத்து சேதுபதி

டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி முதலில் நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார்.

சிறுநீரகம் இரண்டும் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருபது வயது இளைஞரான புவியரசு என்பவரை மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்குத் தக்கபடி பக்குவப்படுத்தவும், அந்தச் சிகிச்சை முடிந்தபின் எந்தத் துன்பமும் நேராமல் பாதுகாக்கவும் அரும்பாடுபட்ட ஆற்றலாளர் டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி.

'சிறுநீரக மருத்துவ சிகிச்சைப் பகுதி' யின் ( Nephrology ) தலைவர் அவர். அவரது குழுவில் டாக்டர் கே. தாமோதரன், டாக்டர் எஸ். சிவகுமார், டாக்டர் ஜெயகோபால், டாக்டர் எஸ்.பி. கணேசன், டாக்டர் யசோதா ஆகியோர் இடம்பெறுகிறார்கள். இவர்களைத் தவிர வசுந்தரா தேவி, சாந்தா அனந்த கிருஷ்ணன், லட்சுமி, மங்கள கௌரி ஆகிய செவிலியர் நால்வரும் இக்குழுவில் உண்டு. கிருஷ்ண காந்த் என்கிற தொழில் நுணுக்கக் கலைஞரும் உதவியிருக்கிறார்.

"சிறு நீரகக் கோளாறு எதனால் ஏற்படுகிறது?" என்று நாம் டாக்டர் முத்து சேதுபதியைக் கேட்கிறோம்.

மிக நிதானமாகப் பதில் சொல்கிறார் அவர்— "சொறி சிரங்கு அதிகரிக்கிற காரணத்தாலும், தொண்டையில் எச்சில்கூட விழுங்க முடியாத அளவில் வலியேற்பட்டு நீடிப்பதனாலும் சிறு நீரகங்கள் பாதிக்கப்படக்கூடும். ஆனால் இப்போது நாங்கள் சிகிச்சை செய்திருக்கிற புவியரசுக்கு அப்படி எதுவும் உண்டானதாகத் தெரியவில்லை. 1976ல், பள்ளியில் படிக்கிற காலத்தில், அவ்வப்போது கால்கையெல்லாம் திடீர் திடீரென்று வீங்கி வடியும் என்றும், அதற்காக ட்டாக்டரை அணுகியபோது அவருடைய சிறு நீரகம் இரண்டும் பழுதுபட்டிருப்பது தெரிந்தது என்றும் சொன்னார். போன வருஷம் ஜூனில் தான் இங்கே இராயப்பேட்டை மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார். சிறுநீர் சரியாகக் கழியாமலும், பாதிக்கப்பட்ட பகுதியின் மேல்தடம் வீங்கியும், இரத்த அழுத்தம் உடையவராகவும் காணப்பட்ட அவருடைய இரண்டு சிறுநீரகமுமே பாதிக்கப் பட்டிருந்ததைப் பரிசோதித்து நாங்கள் கண்டறிந்தோம்! இப்படிப்பட்ட சிறுநீரகக் கோளாறு 'நெப்ரிடிஸ்' (Glomerulo Nephritis) எனப்படும்!"

"மாற்றுச் சிறு நீரகம் பொருத்த வேண்டும் என்று அவரே கேட்டுக் கொண்டாரா, நீங்களாக வலியுறுத்தினீர்களா?"

"ஏற்கெனவே சண்டிகார் மருத்துவமனையில் பணிபுரிந்தவன் நான். அங்கே இது போன்ற மாற்றுச் சிறு நீரக அறுவைச் சிகிச்சைகள் நடந்ததுண்டு. அதையெல்லாம் சொல்லி, உன் உறவினர்கள் யாராவது உனக்கு ஒரு சிறு நீரகத்தைத் தானம் செய்ய முன் வருவார்களா என்று கேட்டோம். இரண்டு வயது மூத்த தன்னுடைய அண்ணனே அதற்கு உடன்படுவார் என்றார். இதில் ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், ஒரு சிறு நீரகம் சரியாக இருந்தாலே ஒரு கோளாறும் இல்லாமல் உயிர் வாழமுடியும். இரண்டும் பழுதாகிவிட்டால், அவருடைய தகப்பனார், சகோதரர், சகோதரி, தாய், யாராவது சரியாக இருக்கும் தனது இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றைத் தானம் செய்தால்தான் பொருந்திவரும், நீண்ட நாள் வாழவும் முடியும். மற்ற யாருடைய சிறுநீரகமும் பொருந்தாது. சிலருக்குப் பிறப்பிலேயே ஒரு சிறு நீரகம் அமைந்துவிடுவதும் உண்டு. அதனால் எந்தப் பாதகமும் இல்லை. புவியரசுவுக்கு அவருடைய அண்ணன் எழிலரசின் சிறுநீரகம் சரியாகப் பொருந்தியது. ஆரம்பத்தில், டிஸ்யூ டைப்பிங்' (Tissue Typing) என்ற முறையில் திசுக்களின் பாகுபாட்டையும், இரத்தத்தையும் பரிசோதித்தபின் மதுரைப் பல்கலைக் கழகத்தில் உள்ள டாக்டர் பிச்சப்பன் அவர்களும் திசுக்களின் பாகுபாட்டினை பரிசோதித்து எழிலரசின் சிறு நீரகம் புவியரசுக்குப் பொருந்தி வரும் எனத் தெரிவித்தார். இதற்கெல்லாம் பிறகுதான் இந்த அறுவைச் சிகிச்சை முயற்சி மேற்கொள்ளப்பட்டது."

## செயற்கைச் சிறுநீரகம்

சிறு நீரகத்தினுள் இரத்தம் செல்வதும் வெளியேறுவதும் ஒழுங்குற நிகழவேண்டும். இரத்தமும் சிறுநீரும் கலக்கக்கூடாது. அப்படிக் கலந்துவிடுமானால் சிறு நீரகம் பழுதுபட்டிருப்பதாகப் பொருள்.

அப்படிப்பட்ட நிலையில், செயற்கைச் சிறுநீரக முறை ( Dialysis ) மூலம் அதை ஒழுங்குபடுத்தி 'யூரியா' சிறுநீரகத்தில் வராமல் இரத்தத்தோடு கலப்பதைத் தவிர்ப்பதுண்டு. இயந்திரத்தின் மூலமே இந்த வித்தை நிகழ்த்தப்படும். இராயப்பேட்டை மருத்துவமனையில் இதற்கான இயந்திரங்கள் மூன்று இருக்கின்றன.




1 சிறுநீரகத்திற்குக் குருதி கொண்டு செல்லும் நாளம்.

2 சிறுநீரகத்திலிருந்து குருதி எடுத்து வரும் குழாய்.

3 சிறுநீர்ப்பை.

4 சிறுநீர்க் குழாய்.

வாரம் இரண்டு முறை, சிறு நீரகம் பாதிக்கப்பட்டவருக்கு இந்த முறையில் சிகிச்சை செய்யலாம். இப்படிப்பட்ட 'நோயாளிகள்' இப்போது மாதம் பன்னிரண்டு பேராவது வருவதாகச் சொல்கிறார்கள்.

வெளி மருத்துவமனையில் இந்த செயற்கைச் சிறுநீரகச் சிகிச்சை செய்துகொள்ளுவதென்றால் ஒரு தடவைக்கு ஏறத்தாழ நானூறு ரூபாய் பிடிக்குமாம்.

இந்த விதச் சிகிச்சை, சிறு நீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதற்கு முன்னால், புவியரசுக்கு 94 முறை செய்யப் பட்டது என்று தெரிவித்தார் டாக்டர் முத்துசேதுபதி.

## டாக்டர் ராஜசேகரன்

ராயப்பேட்டை மருத்துவமனையின் சிறுநீரக அறுவைச் சிகிச்சைப் பிரிவு ( Urology Department ) தலைமை மருத்துவர், பேராசிரியர் டாக்டர் ஏ. ராஜசேகரன் அவர்கள் நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மாநில அரசு மருத்துவமனைகளில் எல்லாம் நடைபெறாத அளவில் தமிழக அரசு மருத்துவமனையான இராயப்பேட்டை மருத்துவமனையில் மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையை (Renal Transplantation) வெற்றிகரமாக நடத்தி முடித்த பெருமிதம் அவரது தோற்றத்திலேயே தெரிந்தது.



டாக்டர் ஏ. ராஜசேகரன் தமது மருத்துவக் குழுவினருடன்.



தன்னுடைய ஒரு சிறுநீரகத்தைத் தானம் செய்த எழிலரசு.

டாக்டர் ராஜசேகரன் அவர்களின் குழுவில் டாக்டர் லாகூர் அகமது, டாக்டர் எஸ். துரைசாமி, டாக்டர் எஸ்.வரதராஜன், டாக்டர் ஆர். என். சுஜீர், டாக்டர் எஸ். பி. உமாபதி ஆகியோர் இடம்பெறுகிறார்கள். ரங்கமணி சரோஜினி, ஞானாம்பாள் லானி ஆகிய செவிலியர் குழாமும், அறுவைச் சிகிச்சையின் போது பெரிதும் தமக்கு உதவியாக இருந்ததை நன்றிப் பெருக்கோடு சொல்லிக் கொள்கிறார் அவர்.

இது மட்டுமல்ல —இன்னும் இருவரும் அவரது நன்றிக்குரியவர்களாக நமக்குத் தெரிவிக்கப் படுகிறார்கள். ஒருவர் -புவியரசுக்கு அறுவைச் சிகிச்சை நடந்த போது மயக்க மருந்து செலுத்திய டாக்டர் சீனிவாசன். இன்னொரு



மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை முடிந்து குணம் பெற்று வரும் இளைஞன் புலியரசை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். [illegible] ஹண்டே, டாக்டர் ஏ. ராஜசேகரன், மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஞான தேசிகன், டாக்டர் எம். ஏ. முத்துசேதுபதி, ஆகியோர் பார்க்கிறார்கள்.

வர்-அறுவைச் சிகிச்சை நடைபெற்றபோது புலியரசுவின் இதயத்துடிப்பு சீராக இருக்கும்படி கண்காணித்த டாக்டர் ஆர். கோவிந்தராசன்.

''அறுவைச் சிகிச்சை வெற்றி, இவர்கள் எல்லோரும் என்னுடைய நோக்கம் அறிந்து, வேகம் உணர்ந்து நல்லபடி ஒத்துழைப்பு தந்ததால் தான் அமைந்தது என்றே சொல்லலாம். இவர்களில் யார் என்னைப் புரிந்துகொள்ளத் தவறியிருந்தாலும் நான் சிரமப்பட்டிருப்பேன்!'' என்று பெருமையோடு தன் கீழ் பணியாற்றுவோர் பற்றிக் குறிப்பிட்டார் டாக்டர் ஏ. ராஜசேகரன்.

அந்தோனி, வரப்பிரகாசம், இராமன், வின்சென்ட், மதுரை, கண்ணன், குமார், சுப்பையா- என மற்ற ஊழியர்கள் பெயரையும் அவர் தெரிவிக்கத் தவறவில்லை.

''சிறு நீரகக் கோளாறு அத்தனை ஆபத்தானதா?'' என்று நாம் அவரைக் கேட்கிறோம்.

''இல்லையா பின்னே?''என்று கேட்டுவிட்டு அவர் சொன்னார்- ''மனித உறுப்புகளில் மூளை, இதயம் போன்றவை ஒன்றாக இருந்தாலும் சிறுநீரகம் மட்டும் இரண்டாக அமைக்கப்பட்டுள்ளது. மனித உடலில் உண்டாகும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முக்கிய உறுப்பு சிறுநீரகம் தான். அந்தக் கழிவுப் பொருட்கள் உடலிலிருந்து அகற்றப்படாவிட்டால் யூரியாபோன்ற பொருட்களால் மூளையும் மற்ற முக்கிய உறுப்புகளும் தாக்கப்பட்டு உயிருக்கே ஆபத்தாகிவிடும்''.

''ஆணுக்குப் பெண்ணின் சிறுநீரகத்தையும், பெண்ணுக்கு ஆணின் சிறுநீரகத்தையும் பொருத்தலாமா?''

''சிறு நீரகத்தில் பால் வேற்றுமை இல்லை; அமைப்பெல்லாம் ஒன்றுதான். ஆனால் பிளட் குருப் ஒத்திருக்க வேண்டும்''.

உறுப்புமாற்றுச் சிகிச்சை என்பது மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களில் ஒன்றேயாகும். ஆனால் ஒன்று— ஒருவருக்கு இன்னொருவரின் உறுப்பை எடுத்துப் பொருத்தும் போது இரத்த அணுக்கள் ஒரே வகையினதாக இல்லாத பட்சத்தில் அதன் எதிர்ப்புச் சக்திகள் வெளியாகி அந்த உறுப்பு ஏற்காமல் எதிர்த்துச் செயலிழக்கச் செய்துவிடும்.

''இருதய நோயினால் இறப்பவர்களுக்கு அடுத்தபடி, அதிக அளவில் உயிரிழப்போர் சிறுநீரகக் கோளாறினால் இறப்பவர்களாகவே இருக்கிறார்கள்'' என உருக்கத்தோடு சொன்ன டாக்டர் ஏ. ராஜசேகரன், ''இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றைத் தானம்செய்வதால் நம் உயிருக்கு எந்த ஆபத்தும் வந்து விடாது என்பதனை மக்கள், உணர்ந்து, சிறு நீரகங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். அப்படி வரும் பட்சத்தில் அதனால் ஏற்படும் சாவைத் தவிர்க்கலாம்— குறைக்கலாம்''.

அறுவைச்சிகிச்சையின் போது உடனிருந்து உதவிய செவிலியர்.




மேனாடுகளில் இதைச்சார்ந்து நடக்கும் ஒரு நல்ல காரியத்தையும் அவர் நமக்குத் தெரிவித்தார்.

யாராவது விபத்தில் சிக்கி உயிரிழக்கிறார்கள் - அல்லது மூளை கலங்கி அடியோடு சுவாதீனம் இழக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய சிறுநீரகத்தை அவர்கள் உறவினர் அனுமதியோடு எடுத்து, சிறுநீரகக் கோளாறால் அவதிப்படுவோருக்குப் பொருத்தி வாழ்விக்கிறார்கள்.

''ஒருவருக்கு இன்னொருவருடைய சிறுநீரகம் ஒத்துவராத நிலையில் அதை மறுபடி அறுவை சிகிச்சை செய்து நீக்கிவிட்டுச் சரியான வேறொன்றைப் பொருத்தலாம்'' என்றார் அவர்.

''ஒருவர் உடம்பிலிருந்து சிறுநீரகத்தை எடுப்பது எப்படி? இன்னொருவர் உடம்பில் அதைப் பொருத்துவது எப்படி?''

இப்படி நாம் கேட்டதும் டாக்டர் ராஜசேகரன், படம் போட்டே நமக்கு விளக்க ஆரம்பிக்கிறார் - ''தானம் அளிக்கிறவரின் ஒரு சிறுநீரகத்தை அவற்றின் இரத்தக்குழாய்களுடனும் சிறுநீர்க்குழாயுடனும் அகற்றி, அப்படி அகற்றிய ஒருமணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்டவரின் அடிவயிற்றில் கவனமாகப் பொருத்த வேண்டும். பொருத்துவது என்றால், தானமளித்தவரின் இரத்தக் குழாய்களைப் பாதிக்கப்பட்டவரின் இரத்தக் குழாய்களோடும், சிறுநீர்க் குழாயினை நோயாளியின் சிறுநீர்ப்பையின் உள்ளும் இணைக்கவேண்டும். இந்த அறுவைச்சிகிச்சை ஒரே அறுவைச்சிகிச்சைக் கூடத்தில், ஒரே நேரத்தில் இரண்டு குழுவினரால் - அதாவது ஒரு குழு ஒருவர் உடலிலிருந்து சிறுநீரகத்தை அகற்றவும், இன்னொரு குழு மற்றவர் உடலில் அதைப் பொருத்தவும் வேண்டும். எடுக்கப்பட்ட சிறு நீரகம் பொருத்தப்படுகிற இடைவெளி [illegible] இயக்கம் ஜனில் வைத்துப் பாதுகாக்கப்படும். என்ன இருந்தாலும் எடுக்கப்படுவதும் பொருத்தப்படுவதும் ஒருமணி நேரத்திற்குள் முடிந்தாக வேண்டும்''.



டாக்டர் எம். ஏ. முத்துசேதுபதி தமது மருத்துவக் குழுவினருடன்.

டாக்டர் சொல்லச் சொல்ல, கண்ணெதிரிலேயே அந்த அறுவை சிகிச்சை நடப்பதைப் பார்ப்பது போலிருக்கிறது நமக்கு!

''இரத்தச் சேமிப்பு, கண்கள் சேமிப்பு போலச் சிறு நீரகத்தையும்சேமித்து வைத்தால் என்ன?''

''அது ஒருபோதும் முடியாது. ஏனென்றால் அதன் இயக்கம் ஒரு மணி நேரம்தான் செம்மையாக இருக்கும்!'' என்றார் டாக்டர்.

''மொத்தத்தில் இந்த அறுவை சிகிச்சைக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?''

''ஆறு மணி நேரம் பிடிக்கும்'' இப்படிச் சொன்ன டாக்டர் ராஜசேகரன் இராயப்பேட்டை மருத்துவமனை தலைமைப் பெர்றுப்பில் உள்ளவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களும் அளித்த உதவிகளும் ஆசியும்தான் இந்த சிகிச்சை வெற்றிக்கு முழுமுதற் காரணமாகும்'' என்றும் தெரிவித்தார்.

''எல்லா வயதினரும் இந்த சிகிச்சையைச் செய்து கொள்ளலாமா?'' என்ற நம் கேள்விக்கு— ''ஊகூம், சின்னஞ்சிறு பாலகர்களுக்கும் செய்ய முடியாது, தொண்டுக் கிழவருக்கும் செய்ய முடியாது. இதைத் தாங்கும் சக்தி அவர்கள் உடலுக்கு இருக்காது'' என்று பதில் கூறினார் டாக்டர்.

புலியரசு எழிலரசு

இந்தியாவின் கவனமே தன் பக்கம் திரும்பும்படி இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை நடைபெற்றது ஏப்ரல் இருபதாம் தேதி!

சிறுநீரகத்தில் ஒன்றைத் தன் தம்பிக்குத் தானமளித்த எழிலரசைப் போய்ப் பார்த்துப் பேசினோம். அறுவைச் சிகிச்சையின் பின் தனக்கு அவ்வளவுக்கு உபாதை இல்லை என்றும் மே முதல் தேதி 'டிஸ்சார்ஜ்' ஆக விருப்பதாகவும் மகிழ்வோடும் தெளிவோடும் தெரிவித்தார் அவர்.

சிறு நீரகத்தைப் பொருத்திக் கொண்ட புலியரசு குளிர்சாதன வசதிசெய்யப்பட்ட அறையில் வைக்கப்பட்டுள்ளார்.

''பொருத்திய சிறுநீரகத்தின் ஏற்பு - எதிர்ப்பைக் கண்காணிக்கவும், வேறு ஏதேனும் கிருமிகள் தொற்றுவதைத் தவிர்க்கவுமே இப்படி வைத்திருக்கிறோம்'' என்றார்கள் மருத்துவர்கள்.

தெம்போடு நடமாடிய அவருக்கு ஆசி வழங்கி, அரசு மருத்துவமனைகளின் அந்தஸ்தை உயர்த்திய இராயப்பேட்டை மருத்துவமனையை விட்டு வெளியேறுகிறோம் நாம்.

இவர்களது நற்பணி என்றும் வெற்றி பெற வாழ்த்துவோம்.

# சட்டமன்றத்தில் திரட்டியவை!

தொகுப்பு: அ. மருது

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய நிர்வாகத்தின் கீழ்க்கண்ட இடங்களில் எட்டு கைமுறை காகித அலகுகளும், ஆறு காகிதக் கூட்டுறவு சங்கங்களும் இயங்கி வருகின்றன.

**அலகுகள்**

| | இடங்கள் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | வீரராகவபுரம் | செங்கல்பட்டு |
| 2. | மாமண்டூர் | செங்கல்பட்டு |
| 3. | அரப்பாக்கம் | வடஆர்க்காடு |
| 4. | பிடாகம் | தென்ஆர்க்காடு |
| 5. | மகேந்திர மங்கலம் | திருச்சி |
| 6. | செண்பகப்புதூர் | பெரியார் |
| 7. | அத்தியூத்து | நெல்லை |
| 8. | செய்துங்கநல்லூர் | நெல்லை |

**காகிதக் கூட்டுறவு சங்கங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | செம்பனார் கோவில் | தஞ்சை |
| 2. | கக்கன்புரம் | தர்மபுரி |
| 3. | பரப்பாடி | நெல்லை |
| 4. | வேப்பங்குளம் | நெல்லை |
| 5. | பிரம்மதேசம் | நெல்லை |
| 6. | [illegible]ஞ்சேரி | கன்யாகுமரி |

**கீழ்க்கண்ட ஐந்து புதிய காகித அலகுகள் துவங்க வாரியம் அங்கீகாரம் அளித்துள்ளது.**

| | | |
|---|---|---|
| 1. | பொன்னவராயன் கோட்டை | தஞ்சை |
| 2. | வந்தவாசி | வடஆர்க்காடு |
| 3. | வடகிரமங்கலம் | புதுக்கோட்டை |
| 4. | சித்தக்கன்னி | புதுக்கோட்டை |
| 5. | கமுதி | இராமநாதபுரம் |

* * *

**1976** ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 35 சி.சி. சக்தி வாய்ந்த இயந்திரங்களை சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்த அரசு அனுமதித்துள்ளது. அண்மையில் 120 சி.சி. இயந்திரம் பொருத்திய 50 புதிய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கவும், ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கும் பழைய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு 120 சி.சி. இயந்திரம் பொருத்த அனுமதித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

* * *

**1979-80**-ல் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 3.67 இலட்சம் டன்கள். 1980-81ல் சர்க்கரை உற்பத்தி 3.92 இலட்சம் டன்கள். கூடுதலாக 25,000 டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடும்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் புதிதாகச் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மாயூரம் பகுதியிலோ அல்லது சீர்காழிப் பகுதியிலோ ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

* * *

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிப்பதற்கு வகைசெய்யும் நோக்குடன் அவ்வகுப்பை நடுநிலைப் பள்ளிகளிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றலாமா என்பது குறித்து கருத்து அறியப்பட்டு வருகிறது.

* * *

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது.

* * *

ஆரணி நகருக்குக் கிழக்கே உள்ள பையர் என்னும் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஏரியை மீன் துறை எடுத்துக் கொண்டு அதில் விரைவாக வளரும் மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. ஓராண்டிற்குப் பின் கிடைக்கும் வளர்ந்த மீன்களை நகர மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம்.

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை :**
**முதுமலைக் காட்டில் ஒரு காட்சி**

**இரண்டாவது அட்டை :**
**கண்கவர் கழுகு மலைச் சிற்பம்**

**கடைசி அட்டை :**
**முண்டந்துறை வனவிலங்கு உய்விடத்தில் ஒரு காட்சி**

வண்ணப் படங்கள் உதவி



# காலம் அருளிய கவிஞன்

– ப. ஜீவானந்தம் (ஜீவா)



"ஷேக்ஸ்பியரால் மட்டுமே ஷேக்ஸ்பியரின் வரலாற்று ஆசிரியனாக விளங்க முடியும் அவனும் கூட, நம்முள் இருக்கும் ஷேக்ஸ்பியரை அல்லாமல் வேறெதையும் சொல்ல முடியாது"– இவ்வாறு அமெரிக்கப் பேரறிஞராகிய எமர்சன் ஒரு தடவை கூறினான்.

கவிஞர்களையும், கலைஞர்களையும் பற்றிக்கூறுவது இத்தன்மையது என்றால், நான் கண்ட கவிஞர் பட்டுக்கோட்டையை, தமிழ்ப் பெருமக்களான நீங்கள் கண்ட கவிஞர் பட்டுக்கோட்டையை நினைவூட்ட முயல்வது எப்படி இருக்குமென்று சொல்லத் தேவை இல்லை.

ஒருமுறை, நான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை கவிஞர் பட்டுக்கோட்டை என்று அழைத்தேன். "அண்ணாவுக்குக்கூட நான் 'கவிஞர்' ஆகிவிட்டேனா" என்று அவர் விநயமாக எதிரொலித்தார். 'கவிஞர்' என்ற சொல்லைப் பற்றிய அவருடைய மதிப்பீடு எவ்வளவு ஆழமும் அகலமும் உடையதோ இன்று வரையில் எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு அவர் கவிஞர் தான்.

**'மக்கள் கவிஞர்'**

எந்தப் புலவர் பேரவையும், எந்தப் பல்கலைக் கழகமும், எந்தத் தமிழ்த் தெய்வமும் பட்டுக்கோட்டைக்கு 'மக்கள் கவிஞர்' என்ற பட்டம் சூட்டவில்லை. மக்கள் மன்றமே அவருக்கு 'மக்கள் கவிஞர்' என்ற பட்டத்தினை மனமார, வாயார வழங்கிற்று.

1957, '58, '59 ஆகிய ஆண்டுகளில், தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதிலும் அவருடைய பாடல்களுக்குச சாதாரணத் தமிழரிடம் ஏற்பட்ட விரைவான வரவேற்பு, எந்தக் கவிஞனுடைய பாடல்களுக்கும் எந்தக் காலத்திலும் ஏற்பட்டதில்லை.

படாடோபத்தில் மயங்கி, 'நஞ்சும் வேம்பும் நன்று' என்று சொல்லும் தமிழகத்தில் பட்டுக்கோட்டை பாடல்களுக்கு ஏற்பட்ட துரித வரவேற்பு, உண்மையில் காலத்தின் அதிசயம்தான், பட்டுக்கோட்டையின் பாடல்களைப் பொறுத்தமட்டில், செட்டியார் மிடுக்கல்ல, சரக்குத்தான் மிடுக்கு என்று சொல்ல வேண்டும்.

இறுதிக் காலத்தில் ஒரு பாடலுக்கு ஓராயிரம் ரூபாய் வீதம் பெற்றார் அவர். அதுவும், அவர் நிர்ணயித்த சன்மானம்தான் அது. ஆனால், திரைப்படத் தொழிலதிபர்களோ, தொகை எழுதாது 'செக்' புத்தகத்தை நமது கவிஞரிடம் கொடுத்து, இஷ்டம்போல், எழுதிக் கொள்ளச் சொன்னார்கள். திரைப்பட உலகில் அவ்வளவு மதிப்பேறி நின்றன அவருடைய பாடல்கள்.

**அனுபவ ஆசான்**

2500 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் வாழ்ந்த அடிமையும் உலகு புகழ் கட்டுக்கதை ஆசிரியனுமாகிய ஈசாப், "அனுபவமே சிறந்த ஆசிரியன்" என்று அறிவுறுத்தினான். வாழ்க்கை அனுபவத்தையே முக்கிய உணவாகக் கொண்டு வளர்ந்தவர் கவிஞர் பட்டுக்கோட்டை. அவர் கொஞ்ச வயதில் நம்மை விட்டு மறைந்து விட்டார். ஆயினும் வயதுக்கு மிஞ்சிய ஆழ்ந்த அனுபவம் உடையவர்.

"எழுத்துக் கலைஞனாகப் பிரகாசிப்பதற்குச் சாமர்த்தியம் மட்டும் இருந்தால் போதாது; சரக்கும் இருக்க வேண்டும்" என்று கூறுகிறான் ஒரு ஆங்கில ஆசிரியன். பட்டுக்கோட்டையின் பாடல்களில் அனுபவச் சரக்கு நிறைந்து கிடப்பதை வரிக்குவரி காணலாம். பல்வேறுபட்ட அடித்தட்டுமக்களின் வாழ்க்கை அனுபவங்களை மிகக் கூர்மையாகத் தன்மயப்படுத்திய கவிஞராக அவர் விளங்கினார்.

**உயிராற்றல் உள்ள சொல்**

"அறிஞர் குழுவிலே பேசப்படும் மொழியைவிட தெருவிலே பேசப்படும் மொழிக்குத்தான் அதிக ஆற்றல் உண்டு" என்று அமெரிக்க அறிஞனான எமர்சன் கூறுகிறான். பட்டுக்கோட்டை அகராதிப் புலவன் அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். ஆயினும் எளிமையும் இனிமையும் வன்மையும் மிக்க சொற்களுக்கு அகராதிப் புலவர்கள்— மெத்தப் படித்த அறிஞர் திலகங்கள் பட்டுக்கோட்டையிடம் கையேந்தி நிற்க வேண்டும் என்று சொன்னால் அது மிகையாகாது.

**எண்ணமும் வண்ணமும்**

பட்டுக் கோட்டை செயற்கைப் பெரும் புலவனுமல்ல, பன்மொழிப் புலவனுமல்ல, அவர் தமிழ் மொழியில் குறிப்பிடத்தக்க புலமை படைத்தவர்கூட அல்ல. அவர் செம்மைசான்ற தமிழ் யாப்புக்களில் பல கவிதைகள் பாடியவருமல்ல, அவர் தமது எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் நாடோடிப் பாடல்களுக்கு, சிந்துகளுக்கும் பாரம்பரியத்திற்கு அடங்காத சுதந்திர உணர்ச்சியோடு, பல பல புதிய வண்ணங்களைத் தீட்டியிருக்கிறார்.

பட்டுக் கோட்டை ஒரு சிறந்த இயற்கை கவிஞர்.

பட்டுக்கோட்டை சாதாரணத்தமிழ்ப் படிப்புள்ளவர். அவர், ''இயற்கையோடு இசைந்த வாழ்வில்'' திளைத்து பாடல் உருவங்களில் கவிதைகள் செய்தார். ''கவிதை சொல்பவன் கவிஞன் அல்ல; கவிதை செய்பவனே கவிஞன்' என்று சிறந்த ஆங்கில எழுத்துக் கலைஞர் தாமஸ் கார்லைல் கூறிய கூற்றினை நினைப்பில் வைத்துக் கொண்டே, ''பட்டுக்கோட்டை கவிதை செய்தார்'' என்று கூறுகிறேன்.

இயற்கை வாழ்வை ஊன்றிப் படித்தவர் கவிஞர் பட்டுக்கோட்டை.

அவரது பாடல்களைத் திரும்பத் திரும்ப பாடி, பாடலின் கருத்தை மென்று மென்று சுவைத்தால்தான், பாடல் தேனினும் இனிப்பது தெரியவரும். பட்டுக்கோட்டை இயற்கை கவிஞன் என்பதன் உட்கருத்தும் விளங்கும்.

ஒரு பாடல்:

பெண்: கொடுமையையும் வறுமையையும்
கூடையிலே வெட்டிவை
கொஞ்சநஞ்சம் பயமிருந்தால்
மூலையிலே கட்டிவை
நெடுங்கவலை தீர்ந்ததென்று
நெஞ்சில் எழுதி ஒட்டிவை
நெருஞ்சிக் காட்டை அழித்து
—அதில்
நெல்லுவிதையைக் கொட்டிவை
ஆண்: ''ஏழைகளின் புது உலகம்
தெரியுதடா—நாம்
ஏமாந்து வந்த நிலை
ஒழியுதடா.''

''கவிஞன் என்று நாம் நன்மதிப்புக் காட்டும் ஒருவனிடம் உள்ள சிறப்பு என்னவென்றால், நாம் சொல்ல விரும்புவதை எல்லாம் அவன் ஒருவனே அழகாகச் சொல்லி முடிக்கிறான்'' என்று இரவீந்திரநாத் தாகூர் கூறுகிறார். மேற்காட்டிய வரிகளைப் படித்ததும் அல்லது பாடக் கேட்டதும் கோடானு கோடிச் சாதாரண மக்கள், ''நாம் சொல்ல விரும்புவதை எல்லாம் பட்டுக்கோட்டை ஒருவரே அழகாகச் சொல்லி முடிக்கிறார்'' என்பார்கள்.

''உணர்ச்சி வாயிலாக வாழ்க்கையைப்பார்ப்பதே கலை'' என்கிறான் பிரெஞ்சுப் பேராசிரியனாகிய எமிலி ஜோலா. ஜோலாவின் இலக்கணப்படி, மேற்கூறிய பாடலைப் பார்த்தால் பட்டுக்கோட்டை சிறந்த கலைஞர்'' என்பதில் ஐயமில்லை.

''உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்குவது கலை'' என்கிறான், தாமஸ் டிக்குன்ஸி என்ற பேர்போன ஆங்கில நாவலாசிரியர். மேற்கூறிய பாடலைப் பாடுங்கள்! அல்லது [illegible]

[illegible]

''பொருளே [illegible]



கலை இலக்கியப் பெருமன்றம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம்-தமிழ்க் கவிஞர் மன்றம் ஆகியவை இணைந்து சென்னை கலைவாணர் அரங்கில் (6.5.1981ல்) நடத்திய கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 51ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அவரது திருவுருவப் படத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார்.

இலக்கிய ஆராய்ச்சி மன்னனான கோல்ரிட்ஜ். ''கற்பனை!'' ஆ! இந்த அற்புதமான ஆற்றல் மனிதனிடம் குடி கொள்ளவில்லை என்றால், ''கலை' என்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கவே முடியாது'' என்கிறான் புது உலக இலக்கிய மேதையான மார்க்ஸிம் கார்க்கி தாய்ப்பால் போல் சீக்கிரம் சீரணிக்கத் தகுந்த எத்தனையோ அருமையான கற்பனைகளை, பட்டுக்கோட்டையின் பாடல்களில் பரக்கக் காணலாம்.

''பள்ளம் மேடுள்ள பாதையிலே
பார்த்து நடக்கணும் காளைகளே
பழைய போக்கிலே பயனில்லே-நல்ல
விஷயமிருக்கணும் மூளையிலே''

இப்படி எத்தனை எத்தனையோ நெஞ்சில் இன்பப் பெருக்கெடுக்கச் செய்யும் கற்பனைகள்!

**காதலிப்போம்**

''கவிஞர்கள் செயற்கைக் கவிஞர்கள், இயற்கைக் கவிஞர்கள் என இருவகைப் படுகிறார்கள். முன்னவரை வணங்குவோம்; பின்னவரைக் காதலிப்போம்'' என்று கூறுகிறான் அமெரிக்க ஞானியான எமர்சன். மக்கள் கவிஞரான, இயற்கைக் கவிஞரான பட்டுக்கோட்டையை நாம் நெஞ்சார நேசிக்கிறோம்.

**கவிஞர் பட்டுக்கோட்டை [illegible] தமிழகம் [illegible] பண்பாடும் வளரும் தமிழகத்திற்கு முன்மாதிரியாக விளங்கட்டும்.**

நன்றி: (''[illegible]''



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

தொகுப்பு: அ. மருது

**4—4—81**

கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதில் தவறு நடக்காமல் இருக்க-தரமான துணிகளை ஏற்றுமதி செய்ய பரிசோதனைக் குழு என்ற அமைப்பை ஏற்படுத்த உத்தேசித்து இருப்பதாக மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்தார்.

**8—4—81**

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏழை எளிய மக்கள் கறவை மாடுகளை வாங்கி தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள ரூ. 2 இலட்சத்திற்கு மேல் மானியமாகவும், ரூ 8 இலட்சத்திற்கு மேல் குறைந்த வட்டியில் கடனாகவும் அரசும் வழங்கியுள்ளது.

**12—4—81**

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ரூ. 1,75,000 செலவில் கட்டப்பட்ட புதிய அறிவியல் ஆய்வுக் கட்டிடத்தை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

**15—4—81**

தமிழ்நாட்டில் உள்ள வறட்சிப் பகுதிகளில் ரூ. 8 கோடி நிலவரி ரத்து செய்யப்படும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

**16—4—81**

இராமநாதபுரத்தில் நடந்து வந்த மோதல்களை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் நேரிடையாகச் சென்று விசாரணை நடத்தினார்.

**22—4—81**

மறைந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜீவானந்தத்தின் குடும்பத்திற்கு தமிழக அரசு மாதம் ரூ. 500 ஓய்வு ஊதியம் அளிக்க முடிவு செய்துள்ளது.

**25—4—81**

தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தொடங்கப்பட உள்ளது. இப்பல்கலைக் கழகம் தஞ்சை அரண்மனையில் தொடங்கப்படும்.

**26—4—81**

மதுரையில் நடந்த 5வது-உலகத்தமிழ் மாநாடு நிகழ்ச்சிகள் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் எல்லா திரைப்பட அரங்குகளிலும் திரையிடப்படும் என்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்.

**28—4—81**

சிறிய விவசாயிகள் கட்டவேண்டிய கடனுக்கான வட்டியும், அபராத வட்டியும் சேர்த்து ரூ. 37 கோடி வட்டி ரத்துச் செய்ய வேண்டும் என்று விவசாய உயர் மட்டக் குழுவின் தலைவர் திரு [illegible] அவர்கள் தலைமையில் கூடிய குழு முடிவெடுத்துள்ளது.

# மிதக்கும் பல்கலைக்கழகம்

மாமலன்

ஆண்டுதோறும் சென்னைத் துறைமுகத்திற்கு S S Universe என்ற அந்தக் கல்விக் கப்பல் இரண்டு முறை வருகிறது. இந்தியாவில் சென்னைக்கு மட்டும் தான் இந்தக் கல்விக் கப்பல் வருகிறது.

அமெரிக்க நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களும் இக் கல்விக்கப்பலில் பயிலுகிறார்கள். இதில் இளங்கலை பட்டப் படிப்பு மட்டுமே பயில இயலும்.

உலகிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களும் Semester at Sea என்ற வகுப்பில் பயிலலாம். ஆனால், அந்தப் பல்கலைக் கழகங்கள் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தோடு ஓர் உடன்பாடு செய்து கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் கடலில் இருக்கும் நூறு நாட்களையும் ஒரு செமஸ்டர் படிப்புக்காலமாக ஏற்றுக்கொள்ள ஒப்புக் கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் கல்விக் கப்பல் உலகை இரண்டு முறை வலம் வருகிறது. ஒவ்வொரு முறையும் புதிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

இக்கப்பலில் ஒரு செமஸ்டர் பயில ஒரு மாணவர் 8,600 அமெரிக்க டாலர்களைக் கட்டணமாகக் கட்ட வேண்டும். கப்பலில் உதவியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் —மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை உண்டு. வேறு சில கட்டணச் சலுகை முறைகளும் உள்ளன.

பிப்ரவரி மாதம் 5-ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள லாடர்டேட் துறைமுகத்தில் புறப்படும் இந்தக் கல்விக் கப்பல் லாகுனவரா, ரியோடி ஜனீரோ, கேப்டவுன், டர்பன், மொம்பாஸா, கொழும்பு, சென்னை, ஹாங்காங் கீலுங், கோபே வழியாக மே 16ஆம் நாள் சான்பிரான் சிஸ்கோ துறைமுகத்தை அடையும்.

இப்படி ஒரு முறை உலகைச் சுற்றிய அந்தக் கல்விக் கப்பல் சேர்ந்த இடத்திலிருந்து வந்த வழியாகத் திரும்பி உலகை மீண்டும் வலம் வரும்.

அடுத்த செமஸ்டராக, செப்டம்பர் 7ஆம் நாள் புறப்படும் கல்விக் கப்பல் ஜப்பானிலுள்ள கோபே, தைவானிலுள்ள கீலுங் ஹாங்காங், பிலிப்பைன்ஸிலுள்ள மணிலா, இந்தோனேஷியாவிலுள்ள ஜாகார்த்தா, இந்தியாவைச் சேர்ந்த சென்னை, இலங்கையைச் சேர்ந்த கொழும்பு. எகிப்திலுள்ள ஸஃகபா துறைமுகம், அலெக்சான்டிரியா, ஏதென்ஸ், ஸ்பெயினைச் சேர்ந்த மலகா, அமெரிக்காவைச் சேர்ந்த லாடர்டேட் துறைமுகத்தை டிசம்பர் 16ஆம் நாள் அடையும்.

அந்தந்த நாடுகளின் துறைமுகங்களுக்குச் சென்றால் வகுப்புகள் நடைபெறுவதில்லை. கடலில் செல்லும்போழுதுதான் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இக்கல்விக் கப்பலில் மாணவர்கள், கப்பல் சிப்பந்திகள், உதவியாளர்களுடன் ஆசிரியர்களின் குடும்பங்களும் பயணம் செய்கின்றனர். சில பேராசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் பல்கலைக் கழகத்திலிருந்து கல்விக் கப்பல் போகும் நாட்டுக்கு விமானம் மூலம் வருகிறார்கள். அக்கப்பல் நிற்கும் துறைமுகத்திலிருந்து அதுபோகும் சில நாடுகளுக்குச் செல்கிறார்கள். தாங்கள் நடத்த வேண்டிய பாடத்தைக் கற்பித்த பிறகு, அடுத்த துறைமுகத்தில் இறங்கி விமானத்தின் மூலம் ஊர் திரும்பி விடுகிறார்கள்.





S. S. Universe என்ற இக் கல்விக் கப்பலின் உட்புறம் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைவிட மிக நேர்த்தியாக அழகுமிக்கதாக இருக்கிறது. மாணவர்களின் வகுப்புகள் கடலைப் பார்த்துக் கொண்டே கல்வி பயிலும் வகையில் அழகுமிக்கதாக உள்ளன.

பாடங்களைப் பயிலும் மாணவர்கள் அமர பலவிதமான இருக்கை வசதிகள்! சில வகுப்பறைகளில் காலை நீட்டிச் சாய்ந்து கொண்டு பாடங்களைக் கேட்கும் வகையில் கூட இருக்கைகள்! ஏழு அடுக்கு உள்ள இக் கப்பலில் நீச்சல் குளம், கூடைப் பந்து விளையாடும் இடம், பொது அரங்கு, நூலகம் என்று பல வசதிகள் உள்ளன.

இந்த முறை ஏப்ரல் திங்களில் சென்னைக்கு வந்த S S Universe கப்பலில் 520 மாணவர்கள் இருந்தனர். இவர்களில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் இருவர் ஓர் அறையில் தங்கும் அளவுக்குத் தனித்தனியாக அறைகள் உள்ளன.





ஒவ்வொரு நாட்டின் துறைமுகத்தில் தங்கும் மூன்று அல்லது நான்கு நாட்களில் அதில்வரும் மாணவர்கள் அந்நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னைக்கு வருவோரில் பலர் இதற்குமுன்னே டில்லி, தாஜ்மகால் என்று சென்று பார்ப்பதாகவே இருந்தனர். ஆனால், கடந்த ஆண்டிலிருந்து தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்து வருகிறார்கள். இம்முறை மதுரை, இராமேசுவரம் போன்ற ஊர்களுக்கும் சென்று வந்தனர்.

இக்கப்பலில் வரும் மாணவ, மாணவியர் மிகவும் ஆசைப்படுவது, இந்தியக் குடும்பங்களுடன் ஓரிரு நாட்கள் தங்கி அவர்களுடைய வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

முன்பெல்லாம், சென்னைப் பல்கலைக் கழகத்தோடு கல்விக்

## 'கல்விக் கப்பல்' சில செய்திகள்

அமெரிக்க நாட்டிலுள்ள பிட்டிஸ்பர்க் பல்கலைக் கழகமும், (University of Pittsburgh) கப்பல் வாரிய கல்வி நிறுவனமும் இணைந்து செயல்படுத்திவரும் 'Semester at sea' என்ற கல்விக் கப்பல் பாடமுறை கடந்த 14 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

மிதக்கும் பல்கலைக் கழகத்திற்காக மாற்றியமைக்கப்பட்ட 'குயீன் எலிசபெத்' என்ற கப்பல் ஹாங்காங் துறைமுகத்தில் தீப்பற்றி எரிந்துவிட்டதால், இப்பொழுதுள்ள S. S. Universe என்ற கப்பல் திரு சி. ஒய். துங்கினால் வாங்கப்பட்டு இக்கல்விப் பணிக்காக அளிக்கப்பட்டுள்ளது.

திரு சி. ஒய். துங் உலகிலுள்ள மிகப் பெரிய கப்பல் உரிமையாளர்களில் ஒருவர் ஆவார். கடலில் கல்வி கற்பிக்கும் முறையில் ஈடுபாடுடைய இவர் S. S. Universe கல்விக் கப்பலாக அமையும்படி மாற்றி அமைத்து கப்பல் வாரிய கல்வி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார்.

'Semester at Sea' பாடத்திட்டத்தில் இதுவரை 500 கல்லூரிகளைச் சேர்ந்த 12,000க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்துப் பயனடைந்துள்ளனர்.

இக்கல்விக்கப்பலில் 60 வகையான படிப்புகள் உள்ளன என்று சொன்னால் வியப்படைவோம். மானிடவியல், வணிகம் பற்றி பயிலும் மாணவர்களே கல்விக் கப்பலில் அதிகம் பயிலுகிறார்கள்.







கப்பலைச் சேர்ந்தவர்கள் தொடர்பு மிகுதியாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் நாகராஜன் போன்றவர்களின் பெரு முயற்சியால் நெருக்கமான தொடர்புகள் உருவாகி வருகின்றன. S S Universe சென்னைத் துறைமுகத்திற்கு வரும் முதல் நாள், பல்கலைக் கழக மாணவர்கள் அக்கப்பலுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து உரையாடுகின்றனர். அக்கப்பவில் வருவோரில் சிலருக்கு இவ்வாண்டு சென்னைப் பல்கலைக கழக மாணவர்கள் சிலரின் குடும்பத்துடன் தங்கவும் வாய்ப்பு ஏற்பட்டது.

**புதிய பாடம்**

இக்கப்பலில் கற்பிக்கப்பட்டு வரும் பாடங்களில் தென்கிழக்கு ஆசியா என்று உள்ள பாடத்தைத் தவிர, இந்தியா என்ற பாடத்தை தனித்து வைக்கவும் ஒப்பியுள்ளனர், கப்பல் வாரிய கல்வி நிறுவனத்தினர். இதனால் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் இக்கப்பலில் தங்கி கல்வி கற்பிக்கும் வாய்ப்பையும் பெறவிருக்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு இக்கல்விக் கப்பலைச் சேர்ந்தோர் நூல்களை நன்கொடையாகவும் நல்கியுள்ளனர். இப்பொழுது நம் மாணவர்கள் இக்கல்விக் கப்பலுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புகளை நிரம்பப் பெற்று வருகின்றனர்.

நாம் கப்பலைச் சுற்றிப்பார்த்து வரும்பொழுது கல்விக் கப்பலின் ஒவ்வொரு பகுதியும் நம்மை மயங்கவைப்பதால் மிக ஆர்வத்தோடு கேட்டோம். "ஒருநாள் அல்லது ஓரிரவு விருந்தினராய் இங்கே தங்க வழியுண்டா"?

"ஊகூம்...நீங்கள் மட்டுமா! நாங்கள் செல்லும் நாடுகளில் எல்லாம் இதைக் கேட்கிறார்கள். இதற்கு இங்கே இடமில்லையே" என்று வருத்தத்துடன் இயலாமையை வெளியிட்டனர்.

அவர்களைப் பார்த்துப் பழகிய பரவசத்தோடு விடைபெற்றுக் கொள்ளும்பொழுது கேட்கிறோம். "உங்கள் கப்பல் பயணத்தில் ஏதாவது தாமதம் ஏற்பட வழி உண்டா"?

"இல்லை, அதை ஒழுங்காகக் கடைப்பிடிப்போம். இப்பொழுதே சொல்லிவிடுகிறோம். அடுத்த முறை எங்கள் கப்பல் சென்னைத் துறைமுகத்துக்கு அக்டோபர் 28-ஆம் தேதி காலை 8 மணிக்கு வரும்" ஆமாம், அந்த அளவுக்கு நுணுக்கமாகத் திட்டமிட்டுச்செயல்படுகிறார்கள்.

இது மிதக்கும் கல்விக் கப்பல் என்பதைவிட, இங்கு கற்பிக்கும் துறைகளைக் கணக்கிட்டும், பல்வேறு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தோரும் உலகப் பல்கலைக் கழகம் போன்று இங்கு இணைந்திருப்பதாலும் இதனை மிதக்கும் பல்கலைக் கழகம் என்று அழைத்தலே பொருந்தும்.





# அகழ்வாய்வில் கோவலன் பொட்டல்

மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர்.
மதுரை ராமநாதபுரம் மாவட்டங்கள்
தொல்பொருள் ஆய்வுத்துறை
தமிழ்நாடு அரசு

மதுரை அருகில் மாடக்குளம் கிராமத்தைச் சார்ந்த பழங்காநத்தம் என்னும் ஊரில் கோவலன் பொட்டல் அமைந்துள்ளது. இது தற்போது பள்ளர் சமுதாயத்தின் இடுகாடாக இருந்து வருகிறது.

**கோவலன் வெட்டுப்பாறை:**

இப்பகுதியில்தான் சிலப்பதிகாரத் தலைவன் கோவலன் கொலையுண்டதாகச் செவிவழிச் செய்தி நிலவுகிறது. இதற்கு ஆதாரமாக இங்கே கோவலன் வெட்டுப்பாறை என்னும் ஒரு பெரும் கல்லுக்குக் கோவில் எடுத்து வழிபட்டு வருகின்றனர்.

இவ் வெட்டுப் பாறையின் அருகே மற்றுமொரு பாறை பதிக்கப்பட்டுள்ளது. இதை மாதவி என்று குறிப்பிடுகின்றனர். இதனருகே ஒரு பெண்ணின் தலைப்பகுதி மட்டும் காணப்படுகிறது. இதைக் கண்ணகி என்ற பெயரில் வழிபடுகின்றனர். இத் தலைப் பகுதி சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கோவலன் பொட்டலின் வடதிசையில் உள்ள குளத்தை அகலப்படுத்தும்போது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இத்தலையை 'ஜ்வாலா மகுடம்' அணி செய்கிறது. இக்கோவில் உள்ளடங்கிய சுமார் 2 ஏக்கர் 96 செண்ட் பரப்பளவுள்ள இடுகாட்டுப் பகுதியே தற்போது கோவலன் பொட்டல் எனக் கூறப்படுகிறது.

கோவலன் பொட்டல் என்று வழங்கப்படும் இப்பகுதி எவ்வளவு தொன்மை வாய்ந்தது என்று அறிதற்பொருட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இப்பகுதியில் 1980ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் தேதி அகழ்வாய்வினை மேற்கொண்டது. இப்பகுதியில் மூன்று ஆய்வுக்குழிகளை இத்துறை அகழ்வாய்வு செய்துள்ளது. ஒவ்வொன்றும் 4 மீட்டர் பக்க அளவினைக் கொண்டதாகும். இவ்வாய்வு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

**முதலாய்வுக் குழி:**

முதல் ஆய்வுக்குழி சுமார் 2.5 மீட்டர் ஆழம் வரையில் ஆய்வு செய்யப்பட்டது. இது 5 பால நிலைகளைக் (மண் அடுக்குகள்) கொண்டுள்ளது. இக்குழியின் 2.5 மீட்டர் ஆழத்திலேயே இயற்கையான மண்களைப் (Natural Soil) பெற்றுள்ளது. இவ்வாய்வுக்குழியில் ஏராளமான பானை ஓடுகள், எலும்புத்துண்டுகள் குறைந்த அளவில் இரும்புத் துண்டுகள், கண்ணாடியில் செய்த வளையல்கள், சங்கு வளையல்கள், பல்வேறு மணிகள், காதணிகள், செம்பினால் ஆன பொருட்கள், சுடுமண்ணால் செய்த விளையாட்டுப் பொருட்கள் மற்றும் கற்காலக் கருவிகள் பலவும் கிடைத்துள்ளன. இவ்வாய்வுக் குழியில் 3 பெரிய முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு தாழிகள் மூடியுடன் காணப்படுகின்றன. மூன்றாவது தாழியின் மீது மூடி காணப்படவில்லை. ஆயினும் அத்தாழி பெருங்கற்களைக் கொண்டு மூடப்பட்டு விளங்குகிறது.

ஒவ்வொரு தாழியும் சுமார் 1 மீட்டர் உயரம் உடையது. இத்தாழியின் மீதும் பக்கங்களிலும், மட்கலங்களும் மூடிகளும், மட்குடமும் அமைந்து காணப்படுகின்றன.

**2000 ஆண்டுகட்கு முற்பட்ட மனிதனின் எலும்புக்கூடு:**

அண்மையில் இத்தாழிகளுள் ஒன்று திறந்து ஆய்வு செய்யப்பட்டது. அத்தாழியின் உள்ளே மண்டை ஓடு, கைகால்கள் ஆகிய மானிட எலும்புகளும் 8 மட்பாண்டங்களும் கண்டறியப்பட்டன. இந்த எலும்புக்கூடு எந்நிலையில் முன்பு வைக்கப்பட்டதோ அதே நிலையில்இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த எலும்புக்கூட்டை மதுரை மருத்துவக்கல்லூரியைச் சார்ந்த டாக்டர். செம்பொன் டேவிட் மற்றும் டாக்டர். ரெங்கநாதன் ஆகியோர் ஆய்வு செய்தனர். இது 5 அடி 8 அங்குலம் உயரமுடைய ஆண் மகனின் எலும்புக்கூடு என்றும், இறக்கும்போது அம்மனிதனின் வயது சுமார் 35லிருந்து 40க்குள் இருக்கும் எனவும் கண்டறிந்தனர். தொல்பொருள் ஆய்வாளர்கள் இவ்வெலும்புக்கூடு 2000 ஆண்டுகட்கு முற்பட்டது எனக்கருதுகின்றனர். தொன்மைவாய்ந்த இந்த எலும்புக்கூடு தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய தாழிகளில் இட்டுப் புதைக்கும் வழக்கத்தைச் சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் விரித்துக் கூறுகின்றன.

முதுமக்கள் தாழியினுள், எலும்புகளையும், மட்பாண்டங்களையும் வைத்து அதன் மீது மூடி கவிழ்க்கப்பட்டு விளங்குவது, மணிமேகலை சுட்டும்-இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறையினை மெய்ப்பிக்கின்றது.

**இரண்டாம் ஆய்வுக்குழியில் கண்டெடுக்கப்பட்டவை:**

இரண்டாவது ஆய்வுக்குழியில் நான்கு தாழிகள் கண்டுபிடிக்கப் பட்டன. மேலும் 'தமிழி' எழுத்து பொறித்த பானை ஓடு ஒன்றும் கிடைத்துள்ளது, குறிப் பிடத்தக்க ஒன்று. மற்றும் கண்ணாடி வளையல்களும், சுடு மண்ணால் செய்யப்பட்ட வட்டச் சில்லுகளும், மட்கலங்களில் பொருத்தப்படும் சுடுமண்ணாலான வடிகுழாயும், பானை மூடியின் கைப்பிடிப்பகுதியும், எலும்புத் துண்டுகளும், நுண்கற் கருவிகளும் கிடைத்துள்ளன.

இவ் ஆய்வுக்குழியும், முன்னதனைப்போலவே மக்கள் வாழ்ந்ததற்கு முன் உள்ள மண் பகுதி வரை ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வும் 2.5 மீட்டர் ஆழத்தில் முடிவடைந்தது.

இக்குழிகளை ஆய்வு செய்த போது முதுமக்கள் தாழிகள் உள்ள பகுதிகளில் மேல் மட்டத்தில் உறுதியற்ற மண்ணும் ( Loose Soil ) அதன் கீழ் சிறிதும் பெரிதுமான எண்ணிறந்த கற்கள் பரப்பப்பட்டும் அதன் கீழ் முதுமக்கள் தாழி இருப்பதும் கண்டறியப்பட்டது. இதுதாழிகள் உள்ள புதைகுழிகளை ஆராய்ச்சியாளர் எவ்வாறு அணுகலாம் என்பதற்கு வழி திறந்துவிட்டது எனலாம்.

**மூன்றாம் ஆய்வுக்குழியில் கண்டெடுக்கப்பட்டவை:**

இக்குழி கோவலன் பொட்டலிலுள்ள குளத்தின் மேல்திசையில் தொடங்கப்பட்டது. இதில் பானை ஓடுகள் மட்டுமின்றி விலையுயர்ந்த வெண்படிகக்கல்லும், கருப்புநிற மாக்கல்லால் ஆன மணியும், சுடுமண்ணால் செய்யப்பட்ட வட்டச் சில்லுகளும், சங்கு வளையும், இரும்பினாலான ஆணியும், நுண்கற்காலக் கருவியும் கிடைத்துள்ளன.

இவ்வாய்வுக்குழியின் அருகே வடதிசையில் சோதனைக்குழி ஒன்று தோண்டப்பட்டது. அதில் மேல்நிலையிலேயே உடைந்த முதுமக்கள் தாழியின் அடிப்பகுதி கிடைத்தது. இதில் எலும்புத் துண்டுகள், மட்கலங்கள், பானை மூடிகள் முதலியன கிடைத்துள்ளன. இவை கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இங்கு கிடைத்த முக்கியமான பொருட்கள் கீழ்வருமாறு :

**பானை வகைகள் :**

இவ்வாய்வுக் குழியில் பல விதமான விளிம்புகளையுடைய மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. அவையாவன; குடிநீர்ப் பானைகள், நீண்ட கழுத்தும் சற்றே விரிந்த விளிம்புகளையும் உடைய மட்குடமும், உட்குழிவான கலயமும் குவிந்த தட்டுகள், பானை மூடிகள் குறிப்பிடத்தக்கனவாகும். முதலாம் ஆய்வுக் குழியில் திறக்கப்பட்ட தாழிக்குள் இருந்த மட்பாண்டங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகையான அமைப்பைக் கொண்டவையாகும். இவை பெரும்பாலும் கருப்பு, சிவப்பு நிறமுடைய மட்பாண்டங்களாகும். இப் பானை வகைகளின் உட்பக்கம் கருப்பாகவும், வெளிப்பககம் விளிம்பினைத் தவிர ஏனைய பகுதிகள் சிவப்பாகவும் காணப்படுகின்றன. இவை மேலாகக் கீழாகச் சுடும் முறையினைப் பின்பற்றிச் செய்யப்பட்டவை. இவ்விதம் சுடும் போது ஏற்படும் வெப்பத்தின் வீச்சு காரணமாக உள்பக்கம் கரு நிறமாக அமைந்துவிடுகின்றன.

இவ்வகைப் பானைகளில் சில வற்றில் வண்ணங்கள் தீட்டப் பட்டுள்ளன. நீண்ட கழுத்துடைய மட்குடம் ஒன்றின் கழுத்துக்குக் கீழேயுள்ள பகுதியில் சாய்வான கோடுகள்வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**இரும்பு:**

இங்கு ஆய்வு நடத்தியுள்ள மூன்று குழிகளிலும் இரும்புத் துண்டுகள் பரவலாகக் கிடைத்துள்ளன. முதலாவது ஆய்வுக் குழியில் 44 செ. மீ. ஆழத்தில் தட்டையான அம்பு முனை போன்ற அமைப்புடைய இரும்புத்துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. மற்றும் இவ்வாய்வுக்குழியில் சில மெல்லிய இரும்புத் தகடுகளும் கிடைத்துள்ளன. இவை இலை வடிவிலும் முட்டை வடிவிலும் காணப்படுகின்றன. இவை உடைந்த விளக்குகளின் பகுதியாக இருக்க வேண்டும். இத்தகைய விளக்குகள் தமிழ்நாட்டில் சில இடங்களில் கிடைத்துள்ளன. அவை சுடுமண்ணாலும் இரும்பாலும் செய்யப்பட்டவை. இரும்பு விளக்குகள் சங்ககாலத்தில் புழக்கத்தில் இருந்தமை பற்றி இலக்கியங்கள் பேசும். எண்ணெய்யும் திரியும் இட்டு ஏற்றப்படும் இரும்பு விளக்குகள் பாண்டிய நாட்டில் பண்டு தொட்டே இருந்தமை நெடுநல்வாடையால் அறிகிறோம். எனவே அகழ்வாய்வில் கிடைத்த இத்தகைய இரும்புப் பொருட்கள் சங்க இலக்கியச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன.

முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ள ஆழத்திலேயே சிறுசிறு இரும்புத் துண்டுகள் அகழ்வாயில் கிடைத்துள்ளமையால் இரும்பையும் இரும்பின் உபயோகத்தையும் பெருங் கற்கால மக்கள் பயன்படுத்தி வந்தனர் என்பதை அறிகிறோம்.

**சங்ககால செப்புக் காசு:**

இது முதலாவது ஆய்வுக்குழியில் கிடைத்தது. இது சதுர வடிவான அமைப்பினையுடையது. இச்செப்புக்காசின் ஒரு பக்கத்தில் மீன் உருவம் வரைபடமாகக் காட்டப்பட்டுள்ளது. இம் மீன் வடிவம் உருப்பெற நான்கு நேர்க் கோடுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. இது சங்ககாலக் காசாகக் கருதப்படுகின்றது. பாண்டிய நாட்டில் இதுகாறும் நடந்த ஆய்வுகளில் இத்தகைய சங்ககாலக் காசு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

**முதுமக்கள் தாழி ஆய்வு செய்யப்படுகிறது**



**கழுத்தணி:**

மெல்லிய செம்புக் கம்பியைக் கொண்டு முறுக்கிப் பின்னப்பட்ட சங்கிலி ஒன்றும் முதலாவது ஆய்வுக்குழியில் கிடைத்துள்ளது. இது கழுத்தணியாக இருத்தல் வேண்டும். சங்கிலியின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது.

**மணிகள் :**

இங்கு இதய வடிவினையொத்த விலையுயர்ந்த வெண் படிகக்கல் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதன் ஒருபுறம் தட்டையாகவும் மறுபுறம் இரண்டு புடைத்திருப்பது போலவும் வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளது. இது கழுத்தணியில் பதிக்கப்பட்ட வெண்படிகக் கல்லாக இருக்க வேண்டும்.

இவ்விதம் படிகக்கல்லைக் கொண்டு மென்மையாக இழைத்து உருவாக்கப்பட்ட 'ஒளி' பொருந்திய அணியை 'ஒளியிழை' எனக் கூறுதல் பொருத்தமாகும். இத்தகைய அணிகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த அணிகள் சங்ககாலத்தில் பெரு வழக்கில் இருந்தமை சங்க நூற் பாடல்களால் அறிகிறோம். இவை காஞ்சி, கொடுமணல் ஆகிய இடங்களில் கிடைத்த மணிகளுடன் ஒப்பிடத்தக்கன.

இங்கு மற்றுமொரு உயர்ந்த மணி கிடைத்துள்ளது. இது கருப்புநிற மாக்கல்லால் (Steatite) செய்யப்பட்டது. இது மத்தள வடிவில் அமைந்துள்ளது. இம்மணியின் ஒருமுனை குறுகி நீண்ட சதுரமாக அமைந்து விளங்குகிறது. மறு முனை தேய்ந்த நிலையில் உள்ளது. மணியில் நூலைக் கோப்பதற்கு ஏற்ப துளையிடப்பட்டுள்ளது. இது 94 செ.மீ. ஆழத்தில் கிடைத்துள்ளது. இதுவும் கழுத்தணியில் ஒரு மணியாக இருந்திருக்கலாம்.

**விரல் அணி (மோதிரம்):**

இங்கு அறுகோண வடிவில் சற்றே வளைந்த செம்பாலான அணி ஒன்று கிடைத்துள்ளது. இது முன்புறத்தில் மேலும் கீழும் ...றிலும் சிறுகற்கள் அமைந்...க்க நடுவில் மட்டும் சற்று ...ய கல் பதிக்கப்பட்டுள்ளது ...வும், அமைப்பினைப் ...ப் விளங்குகிறது. இதன் ...க்கமும், வலப்பக்கமும் சிறிய அளவிலான கற்கள் அமைக் கப்பட்டுள்ளது போன்ற அமைப்பு காணப்படுகிறது. இதன் தோற்றமும் வடிவுங்கொண்டு பார்க்கும் போது விரல்களில் அணியும் மோதிர வகையாக இருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. சிறப்பான அமைப்புடைய இவ்வணி முதலாம் ஆய்வுக்குழியில் கண்டுபிடிக்கப்பட்டது.



2000 ஆண்டுகட்கு முற்பட்ட மனிதனின் எலும்புக்கூடு

**சங்குவளை:**

கோவலன் பொட்டல் அகழ்வாய்வில் இரு சங்கு வளையல்களின் பகுதிகள் கிடைத்துள்ளன. இவை தூய வெள்ளை நிறமாகவும், வழவழப்பாகவும் உள்ளன. முதலாவது வளையின் மேற்பகுதியில் சிறு சிறு செங்குத்துக் கோடுகள் ( Vertical Lines ) உள்ளன. ஒரு செ. மீ. இடைவெளிக்கு 4 சிறுகோடுகள் வீதம் 15 கோடுகள் இவ்வளையல் துண்டில் காணப்படுகின்றன. இத்துடன் கிடைத்த மற்றொரு வளையல் துண்டில் ஒரு புறத்தில் குறுக்கு நெடுக்குக்கோடுகள் ( Criss-Cross ) போன்று சிறிய கட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை அமைப்பிலும் அழகிலும் கொற்கை, மதுரைகோரிப்பாளையம் ஆகிய இடங்களில் கிடைத்த சங்கு வளையல்களை ஒத்துள்ளன. இதைத் தவிர மூன்றாவது வளையல் துண்டில் இரு நேர்க்கோடுகளுக்கு இடையில் சாய்வுக் கோடுகள் இடப்பட்டு அலங்கரிக் கப்பட்டுள்ளன. சங்ககாலப் பெண்களின் அணிவகைகளை அறிய இவை பெரிதும் உதவுகின்றன. இவ்விதம் சங்கு வளைகளைப் பற்றிக்கூறும் சங்க இலக்கியச் செய்திகளுக்கு மேலும் வலுவூட்டுகின்ற வகையில் இக் கண்டுபிடிப்புகள் அமைகின்றன.

இச்சங்கு வளைகள் நுட்பமாக அறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மிக நுட்பமாக அறுப்பதற்கு எத்தகைய கூரிய அறுப்பான்களை அக்கால மக்கள் பயன்படுத்தினர் என அறிய இயலவில்லை. இதுகாறும் நடந்து முடிந்த தமிழக ஆய்விலும் கிடைக்கவில்லை.

**அறுத்த சங்கு:**

இப்பகுதியில் அறுத்த சங்கின் துண்டு ஒன்று கிடைத்துள்ளது. இதன் மேல்விளிம்பில் அறுக்கப் பட்ட அடையாளத்தைத் தெளிவாகக் காணலாம். இங்கு அறுத்த சங்குகள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. ஒரு வேளை இது இடுகாட்டுப் பகுதியாகவே இருப்பதால் இங்கு குறைவாகக் கிடைக்கின்றன போலும்.

கொற்கை போன்ற குடியிருப்புப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வில் சுமார் 3000க்கும் மேற்பட்ட அறுத்த சங்குகள் நமக்குக் கிடைத்துள்ளன.

**தமிழ் எழுத்துப் பொறித்த பானை:**

இரண்டாவது ஆய்வுக்குழியில் முதுமக்கள் தாழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதன் மேல் பகுதியில் வழவழப்பான உடைந்த மட்குடம் காணப்பட்டது. அப் பானையில் கழுத்தின் கீழ்ப்பகுதியில் மூன்று தமிழி எழுத்துக்கள் உள்ளன. அவை 'அ, த' என்றதொல் எழுத்துக்களாகும். இவற்றைக் கொண்டு ஒரு சொல்லாகப் படிக்க முடியவில்லை. ஒரு வேளை இக்காலப் பாத்திரத்தில் முன்னெழுத்து பொறிப்பது போன்ற வழக்கத்தைப் போல இவற்றைக் கொள்ளலாம்.

கோவலன் பொட்டலில் மேற்கொண்ட அகழ்வாய்வு 2,000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுத் தடயங்களைத் தமிழக வரலாற்றுக்குத் தந்துள்ளது.

# மின்னுவதெல்லாம் பொன்னல்ல



"ஃபாரெய்ன்" என்ற முத்திரையுடன் வரும் பொருள்களில் பெரும்பாலானவை போலியானவை. இவை, வெளிநாட்டு 'ப்ராண்ட்' பெயர்களைக் கொண்ட ஏமாற்றுப் பொருட்களாக இருக்கக் கூடும்; உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்டு, 'இறக்குமதி செய்யப்பட்டது' என்ற வாக்கியம் ஒட்டப்பட்ட பெட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கக்கூடும்.

பணத்தை விரயமாக்காதீர்கள், ஏமாறாதீர்கள்.

**இந்தியராக இருங்கள்,**

**இந்திய நாடு தயாரிப்பதையே வாங்குங்கள்**

davp 80/415

டைரெக்டொரேட் ஆஃப் பப்ளிகேஷன்ஸ் கஸ்டம்ஸ்
& சென்ட்ரல் எக்ஸைஸ் நியு டில்லி-110002


85370


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள் :
பருத்திச் சேலைகள், அச்சிட்ட பருத்திச் சேலைகள்,
அசல் பட்டுச் சேலைகள், அச்சிட்ட பட்டுச் சேலைகள்,
பாலியஸ்டர் சேலைகள், பாலியஸ்டர் சட்டைகள்,
பருத்திச் சட்டைகள், பட்டுச் சட்டைகள்,
வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள்
தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்,
அலங்காரத்துணி வகைகள் மற்றும் ரெடிமேட் உடைகள்

